

தமிழ் இலக்கியங்களின் காலம், பொருள் முதலிய கூறுகளை ஆராயும் முறை ஆங்கிலநாட்டு முறையை அடியொற்றி வருவ தொன்று. காலம் பற்றியும் ஒப்புமை பற்றியும் ஆராய்ச்சி நிகழும். இதனை முதற்கண் தமிழ் இலக்கியத்துறையுட் புகுத்தி, இனிய உரையில் எழுதிக் காட்டிய பெருமை அடிகட்கே உரியதாகும்.

- பேராசிரியர் ஔவை. சு. துரைசாமி

இந்நாளில் தமிழ் நூலாராய்ச்சி முறைக்கும் திருந்திய செந் தமிழுரை நடைக்கும் அடிகள் சிறந்த வழிகாட்டியாய் இலங்கு கின்றார்கள்.

- திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள்

அடிகளார் ஒன்றைத் துணியவும் வல்லர்; துணிக்கவும் வல்லர்.

- க.ப. மகிழ்நன்

2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை – 600 017
தொலைபேசி : 044 24339030

5

மறைமலையம்

# மறைமலையம்

மறைமலையடிகள் பேச்சும் - எழுத்தும்

5

தனித்தமிழியக்க நூற்றாண்டு வெளியீடு
[1916 – 2016]

## தொலைவிலுணர்தல்



தமிழ்மண்

# மறைமலையம் - 5

(தனித்தமிழியக்க நூற்றாண்டு வெளியீடு)

## மறைபொருளியல் - 3

- தொலைவிலுணர்தல்

ஆசிரியர்

மும்மொழிச்செம்மல் **மறைமலையடிகள்**

பதிப்பாளர்

**கோ. இளவழகன்**

**தமிழ்மண்**

முதல்பதிப்பு : 2015
பக்கம் : 32+288 = 320
விலை : 400/-

# மறைமலையம் - 5

ஆசிரியர்
முும்மொழிச் செம்மல் **மறைமலையடிகள்**

பதிப்பாளர்
**கோ. இளவழகன்**

**வெளியீடு**

**தமிழ்மண் பதிப்பகம்**
எண். 2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொ.பே.: 24339030, செல்: 9444410654
மின்னஞ்சல்: elavazhagantm@gmail.com

◆தாள் : 16.0 கி. மேப்லித்தோ, ◆ அளவு : 1/8 தெம்மி ◆
◆ எழுத்து : 11.5 புள்ளி, ◆ பக்கம் : 320 ◆கட்டமைப்பு : இயல்பு
◆ படிகள் : 1000 ◆ நூலாக்கம் : வி. சித்திரா ◆
◆ அட்டை வடிவமைப்பு : கவிபாஸ்கர் ◆
◆ அச்சு : வெங்கடேசுவரா ஆப்செட், ஆயிரம் விளக்கு,
சென்னை - 600 006, மற்றும் பிராசசு இந்தியா,
திருவல்லிக்கேணி - 600 005.

“யான் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஏராளமான நூல்களில் ஆராய்ந்து கண்ட முடிவுகளை நூல்களாக எழுதியிருக்கின்றேன்.

பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தது போல, உண்மை காணும் உணர்ச்சியினால் நடுநிலை நின்று ஆராய்ந்திருக்கின்றேன்.

ஒருவர் தம் வாழ்நாள் முழுவதும் கற்றாலும் அறியமுடியாத உண்மைகளை எல்லாம் எளிதாக எழுதி வைத்திருக்கின்றேன்.

எல்லாரும் தமிழ் இலக்கியங்கள் யாவற்றையும் கற்கும் தொல்லையை மேற்கொள்ள வேண்டிய தில்லை, அது முடியவும் முடியாது, தேவையுமில்லை.

எல்லா நூல்களிலும் உள்ள சிறந்த உண்மைகளை எல்லாம் பிழி சாறாக யான் வடித்துத் தந்துள்ளேன்.

என் நூல்களைப் படித்தாற்போதும், அதனால், தமிழ் முழுதுங் கற்ற பயனை அடையலாம்.”

– மறைமலையடிகள்

மும்மொழிச் செம்மல்

# மறைமலையடிகள்



**தோற்றம்:** 15-7- 1876

**மறைவு:** 15-9- 1950

மறைமலை யடிகளே
நிறைதமிழ் வளர்த்தவர்!
மனங்கொள நினைந்திடுக! – அவரது
மாண்பினைப் புகழ்ந்திடுக!

**– பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

பெரும்புலவர்

# அ. நக்கீரனார்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 22-7- 1927 | 25-2-2010 |

தொண்டு செய்வாய் தமிழுக்கு!
செயல் செய்வாய் தமிழுக்கு!
ஊழியஞ் செய் தமிழுக்கு!
பணி செய்வாய் தமிழுக்கு!

என்று எனக்கு வழிகாட்டிச்சென்ற
பெரும்புலவர் **நக்கீரனார்** நினைவாக...

**- கோ. இளவழகன்**

## சான்றிதழ்

“நாகை - திரு. **வேதாசலம்** பிள்ளையவர்கள் ஒருபோது திருவனந்தபுரத்தில் ஒருவாரந் தங்கியிருந்த ஞான்று, அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்ததற்குச் சாலவும் மகிழ்கின்றேம். வருங்காலத் தமிழ் மக்களுக்கு மட்டற்ற தமிழ்ப்புலமை மிகுந்து வருமென்பதற்குச் சான்றாக இவர் இளமையிலேயே நுண்மாண் நுழைபுலம் உடையராயிருப்பது களிப்பூட்டுகிறது. மற்றும் தாய்மொழிப் பற்றுக் குறைந்த இக்காலத்தில், இவர் தமது நுண்ணறிவைத் தமிழ் நூல்களில் முற்றும் செலுத்தி நன்காராய்ந்துள்ளதும் பாராட்டற்குரியது. பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி முதலிய பழந்தமிழ் நூல்களில் ஆராய்ச்சியுடன் கூடிய இவர்தம் அறிவுடைமையே என்னை இவர்பால் மதிப்புறுமாறு செய்தது. தமிழாசிரியர்களின் தொகை சுருங்கிவரும் இக்காலத்தில் இவருக்குச் சிறந்த ஊக்கமளித்தால் இவர் ஒரு சிறந்த தமிழாசிரியராவாரென்று நாம் உறுதியாக நம்புகின்றேம். முன்னரே இரண்டாந்தரக் கல்லூரிகளில் தமிழ்கற்பிக்கப் போதுமான அளவு இலக்கண இலக்கியத்திற் சிறந்த தேர்ச்சி பெற்றவராயிருக்கின்றாரெனக் கருதுகின்றோம். குறைந்த அளவில் எஃப், ஏ., (F.A.) வகுப்புக்குரிய ஆங்கில அறிவு பெற்றாரானால் மேல்நாட்டு முறைப்படி தமிழ் நூல்களை வரலாற்றுச் சான்றுடன் ஆராயவும் எழுதவும் வல்லுநராவாரென்பது எம்முடைய சிறந்த எண்ணம்”.

வண்ணாரப்பேட்டை — **மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை**
திருநெல்வேலி — தமிழ்த்தாய் வாழ்த்தின் ஆசிரியர்
2-12-1895

(இந்த நற்சான்று திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் சுந்தரம் பிள்ளையவர்கள் பேராசிரியராக இருந்தபோது கொடுக்கப் பெற்றது.)

## தனித்தமிழ் நடையின் தந்தை!

*அடிகள் அவர்கள் ஏறத்தாழ ஐம்பதாண்டுகள் தமிழ் மொழியின் ஆக்கத்திற்காகவும், தமிழ் மக்களின் முன்னேற்றத்திற் காகவும் அரும்பெருந் தொண்டுகள் ஆற்றிய பெரியார்களுள் தலை சிறந்தவர்கள். தமிழ் மொழி தனித்தியங்கவல்லது என்பதைத் தங்கள் எழுத்தாலும் பேச்சாலும் உலகறியச் செய்த பெருமை அவர்களுக்கே உரியது.*

*நாட்டில் "மறைமலையடிகளார் நடை" என ஒன்று உருவெடுத்துத் தோன்றிப் பரவியுள்ளது. எனவே, அவர்கள் "தனித்தமிழ் நடையின் தந்தை" எனற்பாலர்.*

*அடிகளார் தமிழ் மக்கள் அனைவரும் தம் பழம் பெருமையை உணர வேண்டும் என்று விரும்பியவர்; இக்காலத் தாழ்ந்த நிலையையும் உணர வேண்டும் என்று விழைந்தவர்; அவை காரணமாக இனி வருங்காலத்தில் தம்மை உயர்த்தி நிறுத்த வேண்டித் தமிழர் பெருமுயற்சி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தியவர். இந்தி பொது மொழியாகித் தமிழர்க்குக் கட்டாய மொழியாகும் பெற்றி உடையதன்று என்பதைத் தக்க காரணங்களோடு எடுத்துக் காட்டி வெளிப்படைக் கடிதம் எழுதியவர்.*

**- டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், எம்.ஏ.**

(பக். 37-38)

# மறைமலைய மாண்பு

## நுழைவுரை

தனித்தமிழ் என்ற அளவில் முன் நிற்கும் முழுதுரு எழில்வடிவர் தவத்திரு. மறைமலையடிகளாரே ஆவர்!

*முந்தை அடிகள் ஆகிய இளங்கோவடிகள், 'முத்தமிழ் அடிகள்' என முழக்கமிட நின்றார்!*

*இருபதாம் நூற்றாண்டு மறைமலையடிகளோ,* ***தனித்தமிழ்த் தந்தை*** *என்னும் தகவார்ந்த பெருமை பெற்றார்.*

*"தமிழ் தனித்து இயங்காது" என்றும், வடமொழி வழியது என்றும், "வடமொழித் துணையின்றி இயங்காது" என்றும், "உலக மொழிகளுக் கெல்லாம் தாய்மொழி வடமொழியே" என்றும் தமிழ்க் கல்வி வல்ல பெற்றியரும் முற்றும் மயங்கி யுரைக்க,*

*"வடமொழி உலக மொழிகளுக்குத் தாய்மொழி என்றால், அதற்கும் மற்றை மொழிகளுக்கும் தந்தை மொழி தமிழே" என்று கூறிய வடலூர் அடிகளார் புகழ்பரப்பாளராய்ப் பொதுநிலைக் கழகம் கண்ட தவ அடிகளார்,* ***தனித்தமிழ்த் தந்தை*** *என்னும் பெருமை பெற்ற* ***மறைமலையடிகளார்*** *ஆவர்.*

*சிவனியம் சார்ந்த பெருமக்களும், பேரறிவர்களும் கூட, ஒப்பாராய், 'தனித்தமிழ்' (தனித்து அமிழ்) என்று பழிக்கவும் இழிக்கவும், துணிந்து நின்று, அவர் வெள்க; வெள்ளிடை மலையாகத் 'தனித்தமிழ்' என்பதை நிலை நாட்டிய நிறைமலை, மறைமலையடிகளாரே!*

*சிவனிய மடத்தினரும், வடமொழி வல்லாரும், 'தொல் காப்பியக் கடல்' எனப் புகழப்பட்டாருமாம் சாமிநாத தேசிகர், நாணமின்றி,*

"ஐந்தெ**ழுத்த**ால் ஒருபாடை என்று **அறையவே நாணுவர்**
அறிவுடையோரே; **யாமும் அதுவே**"

*என்றும்,*

ஒன்றே ஆயினும் **தனித்தமிழ் உண்டோ?**"

*என்றும் - எழுதிப் பரப்பினாராக,*

*"ஒரு சொல் தானும் வேற்றுச் சொல் விரவா நூல் யாம் செய்வேம்" என்று ஐம்பான் நான்கு நூல்கள்* ***கலைமலி பேழையாய் எழுதிக் காட்சிப் படுத்திய*** *மாட்சியர் மறைமலையடிகளார்!*

**தொல்காப்பியக் காவல்**

*தமிழ் மொழிக்கு வாய்த்த தொல்காப்பிய வளநூல்,*

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (884)

*என்றும்,*

*மொழி பெயர்ப்புச் செய்தலினும் முறைமை பேண வேண்டும் என்பதை,*

"மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்" (1597)

*என்றும்,*

*பேச்சு வழக்கில் ஒரு கால் வேற்றுச்சொல் வந்து விடினும்,*

"மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை" (1590)

*என்றும் - வரம்பாணை செய்தும், அச் செவ்வியல் வழித்தடம் சிதைந்தும் சீரழிந்தும், சேறும் சகதியும் நாறும் சிறுமையும் குறுமையும் வழிவழியே எய்த மூவாயிரம் ஆண்டுகளாய், அயலோர் சூழ்ச்சியாலும் திறவோர் மயக்காலும் ஏற்பட்ட அழிபாடுகளை எல்லாம்* ***தாமே ஓர் இயக்கமாய் இருந்து****, விழிப்பும் எழுச்சியும் ஊட்டியவர் மறைமலை அடிகளே என்பதால்,*

*"ஆரியத்தினின்று தமிழை மீட்டெடுப்ப தற்காக அரும் பாடுபட்டு இலக்கிய இலக்கண மரபோடு யான் கற்ற மொழிகள் முப்பது" என்னும் பாவாணர்,*

"மூவா யிரமாண்டு மோதும் வடமொழியால்
சாவாம் தகைநின்ற தண்டமிழை - மேவாக்
குமரித் தனிநிலைக்குக் கொண்டுவந்த **அப்பர்**
**அமரர் மறைமலை யார்**"

*எனப் பாடிப் பரவினார். 'தனித் தமிழ்த் தந்தையார்' என்ற பாராட்டும் இப் பாட்டின் தலைப்பில் வழங்கினார்.*

"நுண்ணிய நூல்பலவும் கற்பதே நோன்பாக
எண்ணிய வாழ்நாள் எலாமளித்துப் - பண்ணிய
**செந்தமிழ்நூல் ஒவ்வொன்றும் செப்பும் கடலறிவை**
**பைந்தமிழ் காக்கும் படை**"

*என அடிகள் கல்வி மேம்பாட்டையும் கலைத் திறப் படைப்புகளின் மேம்பாட்டையும் பாவேந்தர் பாரதிதாசனார் பாராட்டுகிறார்.*

**பல்துறை ஆற்றல்**

*அடிகளின் பல்துறை ஆற்றலை 1. பேராசிரியர், 2. பெரும் புலவர், 3. பாவலர், 4. ஆராய்ச்சியாளர், 5. மும்மொழிப் புலவர், 6. மொழிபெயர்ப்பாளர், 7. சொற்பொழி வாளர், 8. எழுத்தாளர், 9. பல்கலைச் செல்வர், 10. தனித்தமிழ்த் தந்தையார் என்று பாவாணர் பகுத்துக் காட்டுகிறார்.*

*மேலும் அவர் தம் நுண்மாண் நுழைபுலத்தை*

*"பனிமலை முகட்டின் உயர்வும், நீல ஆற்றின் நீளமும் அமைதி வாரியின் ஆழமும் அமைந்தவர் மறைமலையடிகள்" என்கிறார். (பனிமலை - இமயம்; நீல ஆறு - நைல்; அமைதிவாரி - பசிபிக்கு மாகடல்).*

**அடிகளார் நூல்கள்**

*அடிகள் பன்மாண் மாத்தமிழ் நூல்களை, நூலக இயக்கத் தந்தை அரங்க நாதரும், இந்நாள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியரும் அந்நாள் நூலகருமாகிய திருமிகு இரா. முத்துக்*

குமாரசாமி அவர்களும் 14 வகைமைப்படுத்தி வைத்தமை பெரும் பாராட்டுக்கு உரியதாம் அவை,

1. மருத்துவம் 2. மறைபொருள் 3. இலக்கியம் 4. இதழ்கள் 5. சங்க இலக்கியம் 6. பாடல் 7. நாடகம் 8. புதினம் 9. கடிதம் 10. கட்டுரை 11. சமயம் 12. தத்துவம் 13. வரலாறு 14. சமூக இயல் என்பன.

முதற் குறள் வாத நிராகரணம் என்னும் மறுப்பு நூலே, அடிகளின் முதல் நூலாக வெளிப்படுகின்றது (1898) அந்நூன் மறுப்பு நயமே நாகை அடிகளை - பல்லவபுர அடிகளாக - தனித்தமிழ் அடிகளாக ஆக்க அரும் பெரும் தூண்டல் ஆயிற்றாம்.

அடிகளார் வரலாறு: கீழ்கடல் சார் நாகப்பட்டினத்தைச் சார்ந்த சிற்றூர் காடம்பாடி, ஆங்கு வாழ்ந்த அருந்தவப் பெருந்தகையர் சொக்கநாதர் - சின்னம்மையார்! இவ்விணையர் கொடையாய்த் தமிழன்னை செய்த தவப் பேற்றால் பிறந்தவர் வேதாசலம். பிறந்த பெரு மங்கல நாள் கி.பி. 15.07.1876.

சொக்கநாதர், சித்தமலம் அறுவித்த சித்தமருத்துவர்; அறிவ மருத்துவம் என்பதும் அது. அத்தொழில் அவர்க்கு வளத்தை வழங்கியது. அதனால் வேதாசலம் குறைவற வாழ்ந்தார்.

நாகப்பட்டினத்து **வெசிலியன் மிசன் பள்ளியில்** ஐந்து வகுப்புவரை பயின்றார்; சிறந்த மாணவராக விளங்கினார். ஆறாம் வகுப்பில் சேரும் நிலையில், அருமைத் தந்தையார் இயற்கை எய்தினார். ஆயினும் அன்னையார் உறுதியால் கல்வியைத் தொடர்ந்தார். அப்பள்ளியில் ஆங்கிலக் கல்விக்கு இருந்த முதன்மை தமிழுக்கு இல்லை. கிறித்தவ சமயம் பற்றி அன்றிச் **சிவனியம் பற்றி** அறிய வாய்ப்பில்லை என்னும் இரண்டு குறைகளையும் இளமையிலேயே உணர்ந்தார்.

வீட்டிலேயே தமிழ் நூல்களைப் பயின்று முதற் குறையையும், நாகையில் இருந்த **இந்துமதாபிமான** சங்கம் வழி இரண்டாம் குறையையும் நீக்கினார். பள்ளியிலும் குறையறக் கற்றார். வருவாய்க் குறையால் வாடும் அன்னைக்குச் சுமையாய் இல்லாமல் தனியே பயில்வதே இனியவழி என எண்ணி, நாகையில் **புத்தக வணிகராக விளங்கிய நாராயண சாமியார்**

புலமையாலும் சிறந்து விளங்கியவர். ஆதலால் அவரிடம் தனியே இலக்கிய - இலக்கண - சமய நூல்களைக் கற்றார். நாராயணரின் முன்னை மாணவர் பேரா. **மனோன்மணீயம் பெ. சுந்தரனார்** என்பதையும் அறிந்தார். ஒன்பதாம் வகுப்பொடு பள்ளிக் கல்வியை நிறுத்தித் தனிக்கல்வியே கற்றார். தொல்காப்பியம், தொகை நூல்கள், திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவை, இறையனார் அகப் பொருள் எனக்கற்றார்.

அடிகளார் இயற்றிய **திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை** முகப்பில், "எமது **பதினைந்தாம் ஆண்டில்** முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது **இருபத்தோராம் ஆண்டிற்குள்** தொல்காப்பியம், திருக்குறள், சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தேம் என்றும் வேறுசில நூல்களையும் முழுவதாக ஓதியதையும் கூறி,

இங்ஙனமாக, **விழுமிய தமிழ்ப்பழ நூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எமது இளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்ப தாயிற்று"** என்கிறார். அவ்வாண்டு **கி.பி. 1897**. நாகை இந்து மதாபிமான சங்கத்திற்குச் சைவ சித்தாந்த சண்ட மருதம் என்னும் விருது பெற்ற **சோமசுந்தர நாயகர்** வந்து சொற்பொழிவாற்றினார். அவர் பொழிவில் வந்த கருத்தொன்றனை மறுத்து ஒருவர் எழுத, அதற்கு மறுப்பாக முருகவேள் என்னும் புனைபெயரில் மறுப்புரை எழுதினார். **அதனைக்கற்ற நாயகர்**, மீளப் பொழிவுக்கு வருங்கால் முருக வேளைச் சந்திக்க விரும்பினார். அச்சந்திப்பின் பயனே உன்னை விரைவிலே சென்னைக்கு வருவிப்போம். நீ அந்தப் பக்கங்களில் இருப்பதே நல்லது என்று கூறினார். இதுவே அடிகளார்க்குச் சென்னை வாழ்வு அமைய முதல் தூண்டல் ஆயிற்று. அடிகளுக்குப் பதினேழாம் வயதில் (1893) திருமணம் நிகழ்ந்தது. துணைவி தம் மாமன் மகள் சவுந்தர வல்லி என்பார்.

**திருவனந்தபுரம்**

நாராயணசாமி அவர்களின் முன்னை மாணவராம் பேரா. சுந்தரனார் திருவனந்த புரத்தில் இருந்தார். அவரியற்றிய மனோன்மணீய நாடக நூல் கற்று அதன் அருமை கண்டு, பேராசிரியரைக் காணவிரும்பினார். அதனால் தம் ஆசிரியரோடு திருவனந்தபுரம் சென்று பேராசிரியரோடு உரையாடினார். வேதாசலனார் இளம் பருவத்தையும் மூதறிவையும் அறிந்த சுந்தரனார் வியப்புற்றுத் தகுதிச் சான்று ஒன்று வழங்கினார். சிறிது காலம் திருவனந்த புரத்தில் ஆசிரியப் பணியும் செய்தார். அவ்விடத்தின் பருவநிலை ஒவ்வாமையால் நாகைக்கே திரும்பினார்.

***சென்னை:*** சோமசுந்தரனார் முன்னே கூறியபடி வேதாசலரைச் சென்னைக்கு அழைத்து அறிஞர் நல்லுசாமி என்பார் நடாத்திய **சித்தாந்த தீபிகை** என்னும் இதழாசிரியர் ஆக்கினார். பின்னே சென்னை **கிறித்தவக் கல்லூரி**க்கு ஒரு தமிழ்ப் பேராசிரியர் வேண்டியிருத்தல் அறிந்த சோமசுந்தரனார் வேதாசலனாரை அக்கல்லூரிப் பேராசிரியராக்க முயன்றார். அதுகால் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர் வி.கோ சூரியநாராயண சாத்திரியார் என்னும் பரிதிமால் கலைஞர். கல்லூரி முதல்வர் **வில்லியம் மில்லர்** என்பார்.

9.3.1898 இல் வேதாசலனார் பணியேற்றார். அங்குப் பதின்மூன்று ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

அக்கல்லூரிக் காலத்தே இளங்கலை மாணவர்க்குப் பாடமாக இருந்த **முல்லைப்பாட்டு** (1903) **பட்டினப்பாலை** (1906) என்பவற்றுக்கு ஆராய்ச்சி உரை எழுதினார்.

“அவ்வுரை நூலை வாங்கிக் கற்ற மாணாக்கரும் ஏனைத் தமிழறிஞரும் புதுமுறையாக எழுதப்பட்ட அவ்வுரைப் பாங்கினைப் பின்பற்றிப் பழைய தமிழ் நூல்களை ஆராய்வதில் கிளர்ச்சி பெறலானார். இப்புதுமுறை உரை, தமிழ் நூலாராயும் வகைகளை இனிது விளக்கி அறிஞர் பலர்க்கும் அக மகிழ்ச்சி யினை விளைத்தமை கண்டு இனி, இத்தகைய **உரைகளையே**

**எழுதுதல் வேண்டும் என எமதுள்ளம் பெரிதும் விழைந்தது**" என்கிறார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தார்ஆங்கிலமும் வட மொழியும் கட்டாயமாகப் படித்தல் வேண்டும் என்றும், தாய்மொழிப் பாடத்தை விருப்பப் பாடமாகக் கற்பிக்கலாம் என்றும் ஒரு தீர்மானம் ஆட்சிக்குழுவில் கொண்டு வந்தனர். ஒரு பாடம் விருப்பப்பாடம் எனப்பட்ட பின்னர் அதனைக் கற்க வருவார் எவர்? தமிழ் கற்கும் மாணவர் எண்ணிக்கை குறையவே ஆசிரியப் பணியிடமும் குறைய வேண்டுவதாகி, அடிகளார் 31.1.1911 ஆம் நாளுடன் கல்லூரிப் பணியை முடிக்க வேண்டிய தாயிற்று.

***மாணவர்:*** இக்காலத்தில் அடிகளின் மாணவராக இருந்தாருள், **தணிகைமணி செங்கல்வராயர், இரசிகமணி டி.கே.சி, நாவலர் ச.சோ. பாரதி, பேரறிஞர் ச. வையாபுரியார்** முதலோர் சிலர்.

தணிகைமணியின், தேவார திருவாசகச் சொல்லடைவு ஒரு பிறப்பளவில் செய்யக் கூடியதா?

நாவலர் ச. சோ. பாரதியாரின் ஆய்வுத் துணிவு எத்தனை கசடுகளை நீக்கியது? வையாபுரியார், கால ஆய்விலும், வடமொழிப் பிடிவாதத்திலும் தம்மைச் சால்பு ஆய்வில் இருந்து விலக்கினாலும், சங்க இலக்கியப் பதிப்பு, நிகண்டுப்பதிப்பு, பல்கலைக் கழக அகரமுதலிப் பதிப்பு இவற்றைச் செய்த அருமை என்ன? புறத்திரட்டு, களவியல், காரிகை ஆயவற்றின் பதிப்புச் சிறப்பு என்ன?

இவர்கள் பணியும் அடிகளாரைத் தழுவுதல் உண்மை தானே!

### சமரச சன்மார்க்கம்

கல்லூரிப் பணியில் இருந்து வீடுபெற்ற அடிகளார், **பல்லவபுரத்தை** வாழ்விடமாகக் கொண்டார். சமரச சன்மார்க்க நிலையம் தோற்றுவித்தார்.

எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத்தார்க்கும் அங்கீகாரமான சீவகாருணிய ஒழுக்கத்தையும், சமரச சன்மார்க் கத்தையும் பிற்காலத்தில் மிக வலியுறுத்திப் போதித்த ஆசிரியர் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளே ஆவார். அச்சுவாமி கள் வலியுறுத் திய அவ்விரண்டு கொள்கைகளையும் எங்கும் வலியுறுத்தி விளக்கி அன்பர்களை ஒருங்கு கூட்ட வேண்டி அச்சுவாமிகள் இட்ட பெயராலேயே, 'சமரச சன்மார்க்க நிலையம்' என்னும் இது தாபிக்கலாயிற்று. இந்நிலையத்திற்கு முன் ஆசிரியர் **திருவள்ளுவ நாயனார்**; பின் ஆசிரியர் இராமலிங்க சுவாமிகள் ஆவர் என்று பெயரீடு செய்து கொள்கைகளையும் வகுக்கிறார்.

**குடும்பம்**

1898இல் அடிகளார் சென்னைக்கு வரும்போது அவர்தம் அன்னையார் சின்னம்மையார், துணைவியார் சவுந்திரம் அம்மை யார், செல்வி சிந்தாமணி, அடிகளார் என்னும் நால்வரைக் கொண்ட குடும்பமாக இருந்தது.

1911இல் பல்லவ புரத்தில் குடிபுகும் போது நீலாம்பிகை, திருஞான சம்பந்தம், மாணிக்கவாசகம், திருநாவுக்கரசு, சுந்தர மூர்த்தி என்னும் மக்களும் கொண்ட ஒன்பதின்மர் குடும்பமாக இருந்தது. பல்லவுரம் புகுந்த பின் திரிபுர சுந்தரி பிறக்கப் பதின்மன் குடும்பம் ஆயிற்று. இந்நிலையிலேயே 27.08.1911இல் சைவத் துறவியர்க்குரிய **துறவாடை (காவி) கொண்டு சுவாமி வேதாசலம் ஆனார்**. சுவாமி வேதாசலம் என்பதன் தனித்தமிழாக்கமே மறைமலையடிகள் என்பது வெளிப்படை. முன்னேயே அவரை **அடிகள்** என்றது அவர்தம் மாண்பு கருதியேயாம்.

**மீள்பார்வை**

நாம் மீள்பார்வை ஒன்றுபார்க்க வேண்டும்.

அடிகள் 21ஆம் அகவையிலேயே தனித்தமிழ் ஆய்வுத்திறம் கைவரப் பெற்றார்.

1903, 1907 ஆகிய ஆண்டுகளில் முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய நூல்களுக்கு ஆய்வுரை வழங்குங்கால்

இதிலுள்ள சொற்கள் இத்தனை; இவற்றுள் செந்தமிழ்ச்சொல் இத்தனை; வேற்றுச் சொல் இத்தனை - என அறுதியிடுகிறார்.

ஆதலால், தனித்தமிழ் என்னும் தோற்றம் **1916 ஆம் ஆண்டில் நீலாம்பிகையார் தூண்டலால் ஏற்பட்டமை என்பது, அகத்தே அமைந்து கிடந்த வித்து, முளை விட்டு வெளிப்பட்ட நிலையாம்.** அவ் வெளிப்பட்ட நிலையும் உடனே பற்றிப் படரவில்லை! மேலும் சில ஆண்டுகளின் பின்னரேயே சமசர சன்மார்க்க நிலையம், **பொதுநிலைக் கழகமாகவும்,** ஞானசாகரம் **அறிவுக் கடலாகவும்,** சுவாமி வேதாசலம் **மறைமலையடிகள்** ஆகவும் படிப்படியே கிளர்கின்றனவாம்!

ஓர் அரிய அமைப்பு உருவாகும் நிலையும், ஓர் அரிய கண்டு பிடிப்பு உலகவர் அறிய வெளிப்படலும், அவை இயக்கமாகவும் பயனாகவும் ஆகின்ற நிலையும் பற்றிய விளக்கம், அடிகளார் தனித்தமிழ் இயக்க வரலாற்றில் அடங்கியுள்ளதாம்!

**எதிரிடைத் தூண்டல்:** மேலும் ஒன்று: ஒரு நேரிடைத் தூண்டலினும் எதிரிடைத் தூண்டல் வலிமை மிக்கது என்பதும், உள்ளத்து உறுதியை வெள்ளப் பெருக்காய் வெளிப்படுத்த வல்லது என்பதும் தெளிவாம்.

**“ஒன்றே ஆயினும் தனித்தமிழ் உண்டா?”** என்று கற்றறிந்த தமிழர் ஒருவரே வினாவி நகைத்தல், பெற்ற தாய் மொழிப் பிறவிக்கு உற்ற தகைமை ஆகாது என்பதும், அதனை உணர்ந்த அப்பிறவி **பாம்பன் குருபாத அடிகள் போல்** சேந்தன் செந்தமிழ் என்ன ஒரு நூலியற்றித் தமிழ் தனித்து இயங்கவல்ல தனி உயர் மொழி என்று நிலைநாட்டியிருப்பின் வழிபடத்தக்க பிறவியாய் அமைந்திருக்கும்! அப்பேறு அதற்கு வாய்க்காமை,

“துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்” (குறள் 263)

என்னும் வள்ளுவர் வாய் மொழிப்படி,

தனித்தமிழ்த் தந்தைப் பேறு மறைமலையடிகட்கு வர இருப்பதற்கே நேரிட்ட நேர்ச்சியாம் என்க.

**இயக்கம்**

அடிகள் இயக்கம் ஆலமரமெனக் கால்பல கொண்டு அகல அகல விரியத் தனித்தமிழ் இயக்கமாய், உலகத்தமிழ்க் கழகமாய், பாவலரேறு தமிழ்க் களமாய், சேரர் கொற்றமாய், தமிழ்க்காப்புக் கழகமாய், தமிழ்ப் பாதுகாப்புக் கழகமாய், தனித்தமிழ் இலக்கியக் கழகமாய், தமிழ் வளர்ச்சிக் கழகமாய், மறைமலையடிகள் மன்றமாய், தமிழ்க்காவல் குழுவாய், இயற்றமிழ்ப் பயிற்றகமாய், பாவாணர் தமிழ் இயக்கமாய் ஆங்காங்கு முகிழ்த்து முனைப்பொடு கடனாற்ற ஏவியதாம்.

**நூலகம்**

அடிகள் நூற்றொகை, அருமணிக் குவையன்ன நாலாயிரம் நூல்களைக் கொண்டது. எதிரது உணர்ந்து, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு முற்கொடையாக வழங்கியதால், நாலாயிரம் **நாற்பதாயிரமாய் மேலும் மேலும் விரிந்து மறைமலையடிகள் நூலகப்** பெயரால், பெருமைமிகு வள்ளலார் முதற்கண் பொழிவு செய்த பெரியவர் சோமு அவர்கள் இல்லமே வாய்க்க உலக வளமாக்கியதாம்! அதன் வழியாகவே அடிகள் தாமே வெளியிட்ட நூல்களும், வெளியிடாமல் கழக வழி வெளிவந்த நூல்களும், அடிகள் காலத்திற்குப் பின் வெளிவந்த நூல்களும் ஆகிய முழுமைத் தொகுதிகளும் **கி.பி. 1898 முதல் 1969 வரை முதற்பதிப்பாக வெளிவந்தவை.** அவற்றுள் படிகள் கிட்டுதற்கு அரியவையும் உண்டு. அடிகள் **நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேற்றால்**, இன்று வாய்த்த நூல்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக வழங்கும் பெருவாய்ப்பைத் **தமிழ்மண் பதிப்பகம்** பெற்றதாம்.

**வெள்ளச் சேதம்**

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு பதிப்பகத்துள் புகுந்து அச்சு அடிக்கப்பட்டதும், அடிக்கப்பட இருந்ததும், கணினிப்படுத்தி வைத்த குறுவட்டுகளும், மூலநூல்களும் என வாரி அள்ளிக் கொண்டு போனமை, **களத்துக்கு வந்த கதிர்**

***மணிகள், களஞ்சியத்திற்கு வாராமல் போய, பேரழிவு ஒப்பதாம். ஆதலால்,*** *நூல்களை மீளத் தேடவும், கணினிப்படுத்தவும், குறுவட்டு ஆக்கி அச்சிடவும் என மும்மடங்குப் பணியும் பேரிழப்பும் பெருத்த அவலமும் உண்டாக்கிற்றாம். அந்நிலையில்,*

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

*என்னும் வாய்மொழியை* ***வாய்மை மொழியாக்கிய துணிவுச் செல்வர் இளவழகனாரும் அவர் குடும்பத்தவரும் ஆவர்!***

*முன்னறிவிப்புத் திட்டப்படி நூலுக்கு ஆர்வமாய்ப் பணம் செலுத்தியோர்க்கும் நூல் காலத்தில் கிட்டா உளைச்சல் இல்லாமல் போகாதே! அவர்களும் அமைந்து தாங்கல், இயற்கை இயங்கியல் வழியதாம்.*

**வெளியீடுகள்**

***தமிழ்மண் பதிப்பகம் தமிழ்மொழி இன மண்வளம் - வளர்ச்சி மீட்டெடுப்பு - என்பவற்றை முன்வைத்துத் தமிழ்ப் போராளி இளவழகனாரால் தொடங்கப்பட்டதால்,*** *பேரிழப்புக் காம் எனத் தெளிவாகத் தெரிந்தும், இசைக் கலைக்கு வாய்த்த ஒப்பற்ற களஞ்சியமாய் வாய்த்த - கருணாமிர்த சாகரத்தை வெளியிட்டதாம்! முன்னை வந்த முதற்பகுதி பேரிழப்பாக்கியும் அதன் பின்னைப் பகுதிகளையும் அரிதின் முயன்று வெளியிட்டது! மொழிஞாயிறு பாவாணர்; ஈழத்து அறிஞர் ந.சி. கந்தையா; வரலாற்றறிஞர் சாமிநாத சர்மா, உரைவேந்தர் ஔவை சு.து; நாவலர் ந.மு.வே; பண்டித வித்துவான் தி.வே. கோபாலர்; சாமி சிதம்பரனார்; மயிலை சீனி. வேங்கட சாமியார்; பேரறிஞர் க. வெள்ளை வாரணனார்; பாவலர் குழந்தையார்; பாவலர் முடியரசனார்; பாவேந்தர், தொல் பொருள் கல்வெட்டு ஆய்ஞர் சதாசிவனார், சாத்தன்குளம் இராகவன் நூல்களையும் எளியேன் நூல்களையும் முழுமை முழுமையாக வெளியிட்டது.*

*தொல்காப்பியம்- பாட்டு - தொகை - காப்பியம் - கீழ்க்கணக்கு - தமிழ்நாட்டு வரலாறு - ஆங்கிலம் வல்ல அறிஞர் இராம*

நாதனார் நூல்களையும், யாழ்ப்பாண அகராதி முதலாம் அகராதித் தொகுதிகளையும் வெளியிட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிதொட்டு, இருபத்தோராம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வெளிவந்த - தமிழுக்கு ஆக்கமாம் நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்களை எல்லாம் - ஓரிடத்துப் பெற்று, ஒரு தனித்தமிழ் நூலகம் அமைக்கும் அளவுக்கு அச்சிட்டு வழங்கிய பெருமை இளவழகனார்க்கு உண்டு. அவரே அன்றி அவர் துணையையும் மக்களையும் உறவையும் அன்பையும் நண்பையும் ஒருங்கே இணைத்து, அறிஞர் பெருமக்கள் பலர் அரவணைப்பையும் வாய்ப்பக் கொண்டு வாழும் இயல்பு அவர்க்கு வாய்த்தலால் மட்டுமே, இவ்வாறு செயற்கரிய செய்ய வாய்த்ததாம் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவரும் அவர்.

**மறைமலைய மாண்பு**

மறைமலையம், தனித்தமிழ் இயக்கம்! தமிழ்த் தனிப் பெருவளம்! முத்தமிழ்ச் சுரப்பு! சீர்திருத்தச் செழுமை! வாழ்வியல் வளம்! கலைச் சொல்லாக்கக் களஞ்சியம்! பண்டைத் தமிழர் வரலாற்றுப் புதையல்! ஆய்வியல் வழிகாட்டி! பொழிவுப் பொலிவு! எழுத்தின் எழில்! மொழிக் காவல் முனையம்! முட்டறுக்கும் முழுதுறு கொடை! மீட்டெடுக்கும் மேதகைமை! அள்ள அள்ளக் குறையா அணிமணிக் குவியல்! எனல் மெய்மை விளக்கமாம்!

"புத்தகம் ஏற்றுப் பொலிவதே புத்தகம்"
வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்**

திருவள்ளுவர் நிலையம்,
7, இராமன் தெரு,
திருநகர், மதுரை - 6
625006.

## மலைக்க வைக்கும் மறைமலையம்!

### பதிப்புரை

மொழியே இனமக்கள் முன்னேற நல்ல
வழியாம் அதனை வளர்க்க -பழியாய்த்
தமிழயரத் தாழ்ந்தான் தமிழன் அவனே
தமிழுயரத் தானுயர்வான் தான்

*மொழிப்பேரறிஞர் பாவாணர் அவர்கள் 'மொழியின் வழியாகவே மொழிபேசும் மக்கள் முன்னேற முடியும்' எனக் கூறுகிறார். உலகம் முழுதும் இவ்வுண்மை உணரப்பட்டுள்ளதை வரலாறு காட்டுகிறது.*

*பாவாணரை அறிவுலகம் சரியாக அடையாளம் காண்பதற்குக் காரணமானது மறைமலையடிகளார் தந்த பாராட்டு!*

*மறைமலையடிகள் (15.7.1876 - 15.9.1950) தேவநேயப் பாவாணர் (7.2.1902 - 16.1.1981) இருவரும் தனித்தமிழியக்கத்தைத் தாங்கி நிற்கும் தூண்களாகப் போற்றப்படுபவர்கள்.*

*மறைமலையடிகளார் 1916இல் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம், நூற்றாண்டை எட்டியுள்ள மகிழ்வான நேரம் இது!*

*தனித்தமிழியக்க நூற்றாண்டை நினைவு கூரும் வகையில், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளாரின் எழுத்து, சொற்பொழிவு, நாட்குறிப்பு, கடிதங்கள் அனைத்தையும்* ***'மறைமலையம்'*** *எனும் பெருந்தொகுப்பாகத் தமிழ்மண் பதிப்பகம் வழி வெளிக்கொணரத் திட்டமிட்டோம்.*

*உலகம் முழுதும் பரவி வாழும் உணர்வு குன்றாத தமிழர்கள் தந்த ஊக்குவிப்பு, இந்தப் பெருந்திட்டத்தை நிறைவேற்றித் தீரவேண்டும் எனும் உறுதியை எனக்குத் தந்தது.*

*தனித்தமிழ் இயக்க அறிஞர்களும் ஆர்வலர்களும் அடிகளாரின் அரிய படைப்புகள் பலவற்றையும் தேடித்தேடி வழங்கி வழிகாட்டினர்; வலிமையூட்டினர்.*

*மறைமலையடிகளார் 1898ஆம் ஆண்டிலிருந்து எழுதி வந்துள்ளார். அறிவுக்கடல் (ஞானசாகரம்) இதழை 1902ஆம் ஆண்டிலிருந்து வெளியிட்டு வந்துள்ளார். அவரின் படைப்புகள் பெருவெள்ளமாய் வெளிவந்திருக்கின்றன.*

*அச்சேறாதவை, பெயர் கூடக் கேட்டறியாதவை, பெயர் தெரிந்தும் பார்வைக்குக் கிட்டாதவை - எனப் பலவகையாய்க் கிடைத்தன அடிகளாரின் அரும்படைப்புகள்! அவற்றை* ***'மறைமலையம்'*** *எனும் தலைப்பில் 34 தொகுப்புகளாக ஒருசேரப் பார்க்கும்போது, தமிழுலகம் வியப்படைவது உறுதி.*

மொழிநலம் இனநலம் பேணுதல் அன்றோ
முழுநலம் பெறுவழி! நாம்பெறல் என்றோ?

*இப்படிக் கவலையோடு கேட்பார்* ***பாவலரேறு பெருஞ்சித்திரனார்*** *(10.3.1933 - 11.6.1995). அவரின் 'தென்மொழி' இதழ் 1.8.1959 இலிருந்து வெளிவரத் தொடங்கிய பின்புதான், தனித்தமிழ்த் திசை நோக்கி நூற்றுக்கணக்கானோர் நடைபோடத் தொடங்கினர். அதில் நானும் ஒருவன்.*

*பெருஞ்சித்திரனாரின் எழுத்து காட்டிய அடையாளத்தால், பாவாணர் நூல்கள் எனும் அறிவுப்புதையல் பலர் கைகளிலும் குடியேறியது.*

*பாவாணர் நூல்கள் வலியுறுத்திப் பேசியதால், மறைமலை யடிகளாரைத் தேடிப்பயிலும் ஆர்வம் தமிழுலகில் புத்துயிர் பெற்றது.*

*ஆரியத்தை எதிர்ப்பதிலும் சமற்கிருதத்தை விலக்கு வதிலுமே தமிழின மேம்பாடும் தமிழ்க் காப்பும் அடங்கியிருக்கிறது. அவ்வுணர்ச்சியைத் தமிழர் நெஞ்சங்களில் அரும்ப வைத்தது* ***திராவிடர் இயக்கம்;*** *மலர்ந்து விரியவைத்தது* ***தனித்தமிழ் இயக்கம்!*** *குமுக, அரசியல், பண்பாட்டு மலர்ச்சிக்கு இந்த ஈரியக்கங்களின் பேருழைப்புப் பயன்பட்டது.*

*தமிழகத்தில் தனித்தமிழ் உணர்வு கி.மு.7ஆம் நூற்றாண்டுக்குப் பின் தளரத் தொடங்கியது; 10ஆம் நூற்றாண்டுக்குப் பின் சரியத்*

தொடங்கியது. வடமொழி வெள்ளத்தில் தமிழ் இழுத்துச் செல்லப்பட்டு விடாமல் காப்பாற்றியோர் கம்பரும் பவணந்தியும்! பின்வந்தோருக்கு அந்தக் காப்புணர்ச்சி இல்லாமல், அயன் மொழிப் பற்றுக்கு அடிமையானதால் தமிழும் தமிழினமும் பெற்ற இழப்புகள் ஏராளம்!

அயன்மொழிச் சேற்றிலிருந்து தமிழை மீட்கும் முயற்சி ஆங்கிலேயர் வருகையையொட்டிப் புத்துயிர் பெற்றது. வள்ளலார், பாம்பன் சாமிகள், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், சுப்பிரமணியசிவா, பரிதிமாற் கலைஞர் முதலிய பலரும் தொடக்க விதைகளாயினர்.

கோவை அவிநாசியில் பிறந்து விருதுநகரில் வாழ்ந்த விருதை சிவஞானயோகி 19.11.1908 ஆம் நாள் 'திருவிடர் கழகம்' தொடங்கித் தனித்தமிழ் உணர்ச்சிக்கு வேகங்கூட்டினார். அவ்வமைப்பில் உறுப்பினராயிருந்தவர் சுவாமி வேதாசலம் (மலைமலையடிகள்).

மறைமலையடிகள் எனத் தம் பெயரைக் கொண்டு, ***1916இல்*** அவர் தொடங்கியதே **தனித்தமிழ் இயக்கம்**.

'துறைமிகு ஆங்கிலம் மறைவட மொழியொடு
தூய்தமிழ்ப் பேரறிஞர் - தனித்தமிழ்
தோற்றிய ஓரறிஞர்'

பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடியதற்கேற்ப, மறைமலையடிகளார் தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் முதலிய பன்மொழியிலும் புலமை மிக்கவர்.

பன்மொழிப் பேரறிஞரான மறைமலையடிகளார் தமிழுக்கும் தமிழருக்கும் ஆதரவாக நின்றதால் எதிர்ப்புக்கும் இழப்புக்கும் ஆளாக்கப்பட்டார். ஆனாலும் உறுதி குன்றாமல் தமிழுக்கு ஆதரவாய் உழைக்கும் உள்ளத்தோடிருந்தார். அதனால், தமிழர் உள்ளங்களில் இன்றளவும் மாறாப் பெருமையோடு அவர் வீற்றிருக்கின்றார்.

"வாழ்த்தாத நாளில்லை வையகம்
மறைமலை யடிகள் மறையாத் திருப்பெயர்
வாழ்த்தாத நாளில்லை வையகம்"

பாவேந்தர் பாரதிதாசன் அவர் மாண்பினைப் பாடி மகிழ்ந்ததும், தம் 'குடும்ப விளக்கு' நூலினை மறைமலை யடிகளுக்குக் காணிக்கையாக்கி வழங்கியதும், அவரின் உறுதி தளராத உள்ளமும் உழைப்பும் கண்டு போற்றிய நன்றிக் கடன் என்பதில் அய்யமில்லை.

சென்னையில் கடந்த இருபது ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் **தமிழ்மண் பதிப்பகப்** பணிகளைத் தமிழுலகம் அறியும்.

வாழும் தலைமுறைக்கும் வருங்காலத் தலைமுறைக்கும் வழிகாட்டவல்ல தமிழறிஞர்கள் பலரின் நூல்களை முழுமுழுத் தொகுப்புகளாக வழங்கியிருப்பது தமிழ்மண் பதிப்பகத்தின் முடிப்பினை (சாதனை)யாகப் போற்றப்படுகிறது.

தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட அறிஞர்களைக் கண்டறிந்து, அவர்களின் நூல்களை முழுமையான தொகுப்புகளாகத் தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்டு வருகிறது. அவை காலம் முழுதும் பயன்படவல்ல கருவி நூல்கள் என்பதை அறிஞர் உலகம் அறியும்!

தமது நலத்தை ஒதுக்கி வைத்து, தமிழ் நலத்தைக் காக்க வாழ்ந்த அறிஞர்களின் அனைத்து நூல்களையும் ஒரு சேரத் தொகுத்து முழுத் தொகுப்பாக வழங்குவது பெரும்பணி! அதனைத் தமிழ்மண் பதிப்பகம் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. தொகுப்பு நூல்களின் பட்டியலைப் பின்னிணைப்பில் காண்க.

தமிழுக்காக உழைக்கும் உணர்வை இளமையில் எம்மிடம் ஏற்படுத்தியோருள் பெரும்புலவர் நக்கீரனாரும் அவர்தம் இளவல் புலவர் சித்திரவேலனாரும் குறிப்பிடத்தக்கோர்! எம் நன்றிக்குரியோர்!

தனித்தமிழ் ஆர்வம், திராவிடர் இயக்க ஈடுபாடு எனும் இரு சிறகுகளால் எம்மை எழவைத்தவர் பெரும்புலவர் நக்கீரனார்! அவரை எண்ணிக் கண்பனிக்க நன்றி கூறுகிறது எம் நெஞ்சம்.

காலப்பழமையாலும் பராமரிப்புக் குறைவாலும் அழிய நேர்ந்த தமிழிலக்கியங்கள் அளவற்றவை! அவற்றில் ஒருபகுதியை யாவது மீட்டு நம் கைகளுக்கு வழங்கியோர் ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரனார், உ.வே.சாமிநாதர் முதலிய சான்றோர் பெருமக்கள்!

*தமிழிலக்கியப் பெருஞ்செல்வத்தை மீண்டும் மீண்டும் அச்சாக்கி, அனைவர் கைகளையும் எட்டச் செய்த பெருமை - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், உ.வே.சா. நூலகம், மணிவாசகர் பதிப்பகம் முதலிய பதிப்பாளர்களுக்கு உரியது.*

*அச்சுத்துறை அறிமுகமான பின்பே, அறிவுத்துறை அனைவருக்கும் பொதுச்சொத்தாகும் வாய்ப்பு வந்தது. எட்டாக் கனியாக ஓலைச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த இலக்கியச் செல்வங்கள், எல்லோருக்கும் எளிதாய்க் கிடைக்கும் பணியைச் செய்த பதிப்பாசிரியர்களும், பதிப்பாளர்களும் நம் நன்றிக் குரியோர்!*

*இரவு பகல் பாராது முதுமையைக் கருதாது உழைக்கும் மனவுரத்தை முன்னோடிப் பதிப்பாசிரியர்களின் பணியே எமக்கு வழங்கியது.*

*அரசும், பல்கலைக் கழகங்களும், அறநிறுவனங்களும், சமய பீடங்களும் ,பெரும் இயக்கங்களும், பெரும் செல்வர்களும் செய்ய வேண்டிய பெருந் தமிழ்ப்பணி இது! எளியவர்களால் இயங்கும் தமிழ்மண் பதிப்பகம் பெருந்தமிழ்ப் பணிகளை இன்னல்களுக்கு இடையில் அருமுயற்சியோடு செய்து வருவது, உள்ளவுரம் ஒன்றினால்தான்!*

“வல்லமை சேர்க்கும் வலிமையுண் டாக்கும்!
வண்டமிழ் நைந்திடில் எதுநம்மைக் காக்கும்?”

*காக்கும் தமிழைக் காக்கும் உணர்வைப் பாவேந்தர் பாடல் வரிகள் தந்தன.*

*அச்சுக்கு எட்டாமலும் கைக்குக் கிட்டாமலும் இருந்த பேரறிஞர் பலரின் நூல்களை நாட்டுடைமையாக்கி திராவிடர் இயக்க அரசுகள் வழங்கின. அதனால், அறிவு பரவலாகும் வாய்ப்புகள் உருவாயின.*

*‘சரிவும் இழப்பும் நமக்கு வந்தாலும் தமிழுக்கு வரக்கூடாது’ என எண்ணி உழைக்கும் இயக்கங்களும் அமைப்புகளும் தமிழ் நாட்டில் வற்றாமல் வளர்ந்தபடி இருக்கின்றன.*

*திருவிடர் கழகம் (1908)*
*தனித்தமிழ் இயக்கம் (1916)*
*தென்னிந்திய நலஉரிமைக் கழகம் (1916)*

*சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் (1934)*
*தமிழ்ப்பாதுகாப்புக் கழகம் (1937)*
*தமிழறிஞர் கழகம் (1943)*
*தமிழ்ப் பேராயம் (1959)*
*தமிழ்க்காப்புக் கழகம் (1961)*
*தனித்தமிழ்க் கழகம் (1964)*
*உலகத்தமிழ்க் கழகம் (1968)*
*தமிழியக்கம் (1972)*
*தமிழ்ச் சான்றோர் பேரவை (1998)*

*தமிழ் மலர்ச்சிக்கும் தனித்தமிழ் வளர்ச்சிக்கும் அடித்தளம் அமைத்த இத்தகு அமைப்புகளுக்கு மூல விசையாகத் திகழும் பெருமையைப் பெறுவோர்* ***மறைமலையடிகளாரும் பாவாணருமே!***

*தமிழ் வளத்திற்கும் தமிழர் நலத்திற்கும் சிவனிய மேம்பாட்டிற்கும் மறைமலையடிகளார் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. அவை தொடர்பாக அவர் ஆய்ந்தளித்த அறிவு முத்துகள் எண்ணற்றவை!*

*அடிகளாரின் அனைத்துப் படைப்புகளும் பொருள்வழிப் பிரிக்கப்பட்டு, காலவரிசையில் 34 தொகுப்புகளாகத் தொகுக்கப் பட்டு* ***'மறைமலையம்'*** *என உங்கள் கைகளில் இப்போது தவழ்கின்றது.*

*பல தலைமுறைகளுக்குப் பயன்படும் அறிவுக் கருவூலம் இது!*

*தமிழர் இல்லந்தோறும் இருக்கவேண்டிய அருந்தமிழ்ச் செல்வம் இது!*

*அறிவுலகத்தால்* ***'மறைமலையம்'*** *வரவேற்கப்படும் என்னும் நம்பிக்கை எமக்குண்டு. நூற் சுரங்கத்தில் நுழைய அழைக்கிறோம்.*

"தனக்கென வாழ்வது சாவுக்கொப்பாகும்
தமிழ்க்கென வாழ்வதே வாழ்வதாகும்"

*எனும் பாவேந்தர் வரிகளை நினைவுக் கூறுகிறோம்.*

**- கோ. இளவழகன்**

இதுவரை வெளியிட்டுள்ள

## தமிழ்மண் பதிப்பகத்தின்
## நூல் தொகுப்புகள்

1. **பாவாணர் தமிழ்க் களஞ்சியம்** - 52 நூல்கள்
2. **தொல்காப்பியம்** - உரைகளுடன் 15 தொகுப்புகள்
3. **பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்** - 30 நூல்கள்
4. **கோபாலையரின் தமிழ் இலக்கணப் பேரகராதி** -18 தொகுப்புகள்
5. **சாமிநாத சர்மா** - 31 தொகுப்புகள்
6. **ந.சி.க. நூல் திரட்டு** - 24 தொகுப்புகள்
7. **சாத்தன்குளம் இராகவன் நூற்களஞ்சியம்** - 16 நூல்கள்
8. **சதாசிவப் பண்டாரத்தார்** - 10 நூல்கள்
9. **நா.மு.வே.நாட்டார் தமிழ் உரைகள்** - 24 தொகுப்புகள்
10. **செவ்விலக்கியக் கருவூலம்** - 15 தொகுப்புகள்
11. **தேவநேயம்** - 14 தொகுப்புகள்
12. **திரு.வி.க. தமிழ்க்கொடை** - 26 தொகுப்புகள்
13. **உரைவேந்தர் தமிழ்த்தொகை** - 28 தொகுப்புகள்
14. **கருணாமிருத சாகரம்** - 7 தொகுப்புகள்
15. **பாவேந்தம் - கெட்டிஅட்டை** - 25 தொகுப்புகள்
16. **புலவர் குழந்தை படைப்புகள்** - 16 தொகுப்புகள்
17. **கவியரசர் முடியரசன் படைப்புகள்** - 13 தொகுப்புகள்
18. **நாவலர் சோம சுந்தர பாரதியார் நற்றமிழ் ஆய்வுகள்** - 5 தொகுப்புகள்

19. **முனைவர் இராசமாணிக்கனார் நூல்கள்** - 39 நூல்கள்

20. **தமிழக வரலாற்று வரிசை** - 12 தொகுப்புகள்

21. **உவமைவழி அறநெறி விளக்கம்** - 3 தொகுப்புகள்

22. **முதுமொழிக் களஞ்சியம்** - 5 தொகுப்புகள்

23. **சாமி சிதம்பரனார் நூற்களஞ்சியம்** - 22 தொகுப்புகள்

24. **மயிலை சீனி. வேங்கடசாமி ஆய்வுக் களஞ்சியம்** - 20 தொகுப்புகள்

25. **அறிஞர் க. வெள்ளை வாரணனார் நூல் வரிசை** - 21 தொகுப்புகள்

26. **ஐம்பெருங் காப்பியங்கள்** - 5 தொகுப்புகள்

27. **பதினெண் கீழ்க்கணக்கு** - 3 தொகுப்புகள்

28. **நீதி நூல்கள்** - 2 தொகுப்புகள்

29. **பி. இராமநாதன்** - 10 நூல்கள்

30. **யாழ்ப்பாண அகராதிகள்** - 2 தொகுப்புகள்

31. **வெள்ளி விழாத் தமிழ்ப் பேரகராதிகள்** - 3 தொகுப்புகள்

32. **ந.சி. கந்தையா அகராதிகள்** - 2 தொகுப்புகள்

33. **முதுமுனைவர் இளங்குமரனார் தமிழ்வளம்** - 40 தொகுப்புகள்

34. **இளங்குமரனார் அகராதிகள்** - 2 தொகுப்புகள்

## விரைவில் வெளிவர இருக்கும் அறிஞர்களின் நூல்கள்

1. மனோன்மணீயம் பெ. சுந்தரம் பிள்ளை
2. வ.சுப. மாணிக்கம்
3. பெரியாரியம் (தந்தை பெரியார்)
4. தமிழர் மருத்துவக் களஞ்சியம்
5. தமிழ் - தமிழ் அகராதி



## பதிப்பாளர் விவரம்

### கோ. இளவழகன்

| | |
|---|---|
| பிறந்த நாள் | : 3.7.1948 |
| பிறந்த ஊர் | : உறந்தைராயன்குடிக்காடு அஞ்சல் உரத்தநாடு வட்டம் - 614 625 தஞ்சாவூர் மாவட்டம். |
| கல்வி | : கல்லூரி புகுமுக வகுப்பு |
| இப்போதைய தொழில் | : புழக்கத்தில் இல்லாத பழந்தமிழ் நூல்களைத் தேடியெடுத்து வெளியிடல் |

**ஆற்றியுள்ள பொதுப்பணிகள்**

*1965இல் பள்ளி மாணவனாக இருந்தபோதே மொழிப் போராட்டத்தில் முனைப்பாகப் பங்கேற்றுத் தளைப்படுத்தப் பெற்று 48 நாள்கள் சிறையில் இருந்தவர்.*

*பிறந்த ஊராகிய உறந்தைராயன்குடிக்காட்டில் 'ஊர்நலன் வளர்ச்சிக் கழகம்' எனும் சமூக அமைப்பில் இருந்து ஊர் நலப்பணி ஆற்றியவர்.*

*உரத்தநாட்டில் 'தமிழர் உரிமைக் கழகம்' என்னும் அமைப்பையும், பாவாணர் படிப்பகத்தையும் நண்பர்களுடன் இணைந்து நிறுவித் தமிழ்மொழி, தமிழின, தமிழக மேம்பாட்டிற்கு உழைத்தவர். இளம் தலைமுறைக்குத் தமிழ்த் தொண்டாற்றியவர்.*

*பேரறிஞர் அண்ணாவின் மதுவிலக்குக் கொள்கையை நெஞ்சில் ஏந்தி உரத்தநாடு மதுவிலக்குக் குழுவின் முக்கிய அமைப்பாளர்களில் ஒருவராக இருந்து செயலாற்றியவர். 1975-இல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் **'உரத்தநாடு திட்டம்'** என்று பாராட்டப் பெற்ற மதுவிலக்குத் திட்டம் வெற்றி பெற உழைத்தவர்.*

*தமிழ்மண் பதிப்பகத்தை நிறுவி புழக்கத்தில் இல்லாத பழந்தமிழ் நூல்களையும், புதிய படைப்பு இலக்கியங்களையும், 19*

ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் வாழ்ந்த தமிழ்ச்சான்றோர்கள் எழுதி வைத்துச் சென்ற தமிழின் அறிவுச் செல்வங்களைத் தேடி எடுத்து முழுமையாகச் சேர்த்து பொருள்வழிப் பிரித்து, கால நிரலில் ஒரே வீச்சில் தொடர் தொடராக வெளியிட்டுத் **தமிழ்நூல் பதிப்பில் தனி முத்திரை பதித்து வருபவர்.**

**பொதுநிலை**

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள், தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, மொழிநூல் மூதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோரை வழிகாட்டிகளாகக் கொண்டு அவர்தம் கொள்கைகளை நிறைவேற்ற அயராது உழைத்து வருபவர்.

**மறைமலையம் தொகுப்பில் இடம்பெறாத நூல்கள்**

**முதற்குறள் வாத நிராகரணம் (1898), துகளறு போதம் (1898), சித்தாந்த ஞானபோதம் சதமணிக் கோவை குறிப்புரை (1898), வேத சிவாகமப் பிரமாண்யம் (1900),** இந்த நான்கு நூல்களும் தமிழகத்தின் பல இடங்களில் தேடியும் எங்கள் கைக்குக் கிடைக்கவில்லை. ஆதலான், மறைமலையம் தொகுப்பில் மேற்கண்ட நூல்கள் இடம் பெறவில்லை.

# நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

**நூல் கொடுத்து உதவியோர்**

**ரோசா முத்தையா நூலகம்** - சென்னை.
**புலவர் கா. இளமுருகன்** – புன்செய் புளியம்பட்டி
(மறைமலையடிகள் மன்றம்)
**மறை. தாயுமானவன்** - சென்னை
(மறைமலையடிகளின் பேரன்)

**பிழை திருத்த உதவியோர்:**

திரு. அ. மதிவாணன் (ஆங்கிலம்)
திரு. க. கருப்பையா
திரு. புலவர். த. ஆறுமுகம்
புலவர். மு. இராசவேலு
திரு. இராசுகுமார்
திரு. நாக. சொக்கலிங்கம்
முனைவர். க. சுப்பிரமணியன்
திருமதி. அ. கோகிலா
திருமதி. உசா
செல்வி. அபிராமி

## நூல் உருவாக்கம்

**கணினி செய்தோர்:**

திருமதி **வி. சித்திரா**
திருமதி **மலர்**
திருமதி **செல்வி**
திருமதி **ஹேமலதா**
திரு. **ஆசம்**
திருமதி **கலைவாணி**
**பிராசசு இந்தியா** (Process India),
திருமதி **'புகழ்ச்செல்வி' கயல்விழி**

**நூல் வடிவமைப்பு:** திருமதி **வி. சித்திரா**

**மேலட்டை வடிவமைப்பு: கவி பாஸ்கர்**

**நூலாக்கத்திற்கு உதவியோர்**

இரா. பரமேசுவரன், க. இளந்திராவிடன், வே. தனசேகரன், கு. மருது, இல. தருமராசன்

**தாள் வழங்கியோர்:** சிவா தாள் மண்டி, சென்னை -1

**எதிர்மம்** (Negative)**:** பிராசசு இந்தியா (Process India) சென்னை-5.

**அச்சடிப்பு மற்றும் நூல் கட்டமைப்பு:**

வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு மற்றும் பிராசசு இந்தியா

**'மறைமலையம்'** எல்லா நிலையிலும் செப்பமுற வெளி வருவதற்குப் பல்லாற்றானும் உதவியாக இருந்த இவர்களுக்கும் மற்றும் அறிஞர் பெருமக்களுக்கும் எம் நிறைந்த நன்றியும் பாராட்டும்.

## தனிப்பெருந் தமிழ் மீட்பர் மறைமலையடிகள்

*கல்விக் கடல்; தமிழ் ஆங்கிலம் சமற்கிருதம் ஆகிய மும்மொழி வல்லுநர்; மருத்துவம், கருநூல்* (Embryology), *தொலைவுணர்வு* (Telepathy), *மனவசியம்* (Mesmerism), *அறிதுயில்* (Hypnotism) *முதலிய பல்கலையறிஞர்; நூலாசிரியர், நுவலாசிரியர், உரையாசிரியர், இதழாசிரியர், பதிப்பாசிரியர், ஆய்வாசிரியர் ஆகிய பல்வகையாசிரியர்; அடக்கமும் அஞ்சாமையும் உண்மை யொப்புக்கொள்வும் குலமதவேற்றுமையின்மையும் கொள்கைக் கடைப்பிடிப்பும் கொண்ட பண்பாட் டாளர்; நாட்டிற்கும் மொழிக்குமன்றித் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்; மாபெருந் தமிழ்ப் புலவரும் தமிழ்ப் பேராசிரியரும் தமிழுக்கும் வடமொழிக்கும் வேறுபாடு தெரியாது, நூற்றிற் கெண்பது விழுக்காடு வடசொற் கலந்து தமிழைப் பேசியும் எழுதியும் பாடியும் வந்த காலத்தில், தமிழ்ப்பயிர் அயற்சொற்களால் நெருக்குண்டு அடியோடழிந்துபோகவிருந்த நிலையில், 1916ஆம் ஆண்டிலிருந்து வடசொற்களை அறவே களைந்து, தூய தீந்தமிழில், உரைநடையும் செய்யுளுமாகிய இருவகை வடிவிலும், அறிவியல், சமயம், வரலாறு, ஆராய்ச்சி, திருமுகம், உரை, மொழிபெயர்ப்பு முதலிய பல துறையிலும், ஐம்பான் அருநூல்களை வெளியிட்டு, தமிழில் எந்நூலையும் இயற்றவும் மொழிபெயர்க்கவும் இயலும் என்பதைக் காட்டி, தமிழ் வரலாற்றின் மூன்றாங் காலமாகிய மறுமலர்ச்சித் தனித்தமிழ் ஊழியைத் தொடங்கி வைத்தவர்; முதன் முதல் தனித்தமிழ்த் திருமணஞ் செய்து வைத்தவர்;* Can Hindi be the Lingua Franca of India? *(இந்தி இந்தியப் பொதுமொழியாயிருக்க இயலுமா?) என்னும் ஆங்கிலச் சிறுநூலில், அறிவியன் முறையிலும் ஏரண முறையிலும் கட்டாய இந்திக் கல்வியை வன்மையாகக்*

*கண்டித்தவர்; இறுதிவரை எழுத்தாலும் சொற்பொழிவாலும் அருந்தமிழ்த் தொண்டாற்றியவர்; இன்றும் இனி என்றும் ஈடிணை யற்றவர்; பல்லவபுரம் பொதுநிலைக் கழகத் தலைவர்* ***மறைமலை யடிகள்.***

மறைமலை யென்னும் மறையா மலையின்
நிறைநிலை வாரத்தே நிற்க - இறையும்
தமிழன் வடமொழித்தீத் தாழ்வின்றி வாழ
இமிழுங் கடல்சூழ் இகம்.

***பாவணர் தமிழ்க் களஞ்சியம்***
***பக். 145- 146***

1

# தொலைவிலுணர்தல்

1961 இல் சைவ சித்தாந்த கழகம் பதிப்பித்த நூலினை மூலமாகக் கொண்டு இந்நூல் பதிப்பிக்கப்படுகின்றது.

**இந்நூலைப் பற்றிய குறிப்புரை...**

மக்களுக்கு மெய்யறியும் மேன்மைகளும் தரும் வகையில் அடிகளாரின் நீண்ட கால உழைப்பில் உருவானது இந்நூலாகும். தமிழ் நாட்டில் தொலைவி லுணர்தலாகிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்தாலும், அவற்றை நடுவுநிலையான் நன்காய்ந்து, மெய்ச்சான்று காட்டி உறுதிப்படுத்துவாரும், நூலெழுதுவாரும் இல்லாத தால் அடிகளாரின் முயற்சி அரிய முயற்சியாகிறது.

காற்று வெளி, நினைவு வெளி, நினைவு இயல்பு, உணர்வு நுட்பம், கடவுளியல்பு கனவு நிலைகள், தெளிவுக் காட்சி ஆகிய பல்வேறு செய்திகள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன.

கேட்போர் இயல்புகளையும், கேட்கும் முறை களையும், கேட்ட பொருளின் நலந்தீங்குகளையும் கருத்தில் கொண்டேகடவுள் கருணை காட்டுவான் என்னும் கடவுள் நெறிக் கருத்துகளையும் உண்மை களையும் அடிகளார் இந்நூலில் விளக்கியுள்ளார்.

பன்னாளும் பன்முறையும் ஆய்ந்தாய்ந்து, நினைந்து நினைந்துமெல்லென நூல் ஒவ்வொன்றும் எழுதும் அடிகளார் இயல்பும் அறியப்பெறுகின்றது.

**- நா. செயப்பிரகாசு**

மறைமலை அடிகளாரின்

இலக்கியப் படைப்புகள் - பக்கம் : 19

# முதற்பதிப்பின் முகவுரை

*இற்றைக்கு இருபத்துநான்கு ஆண்டுகளுக்குமுன் அதாவது விரோதி கிருது ஆண்டு (1911) சித்திரைத் திங்களில் யாம் எழுதத்துவங்கிய தொலைவிலுணர்தல் என்னும் இவ்வுரை நூல், எமது 'ஞானசாகரம்' என்னும் அறிவுக்கடலின் ஆறாந்திருமலரிலும் எட்டாந்திருமலரிலும்ஒன்பதாந்திருமலரிலும்96 பக்கங்கள் வரையில் வெளிவந்து, பத்து, பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்தாந் திருமலர்களில் தொடர்ந் தெழுதப்படாமல் நின்றுபோய். மீண்டும் 16-ஆந் திருமலரில் ஆங்கிரச ஆவணி புரட்டாசிக்குரிய ஏழு எட்டு இதழ்களில் தொடர்புகொண்டு வெளிவரத் துவங்கி, இப்போது அதன் பதினேழாந் திருமலரின் எட்டு ஒன்பதாம் இதழ்களில் எல்லாம் வல்ல இறைவன் றிருவருளால் இனிது முடிவு பெறலாயிற்று.*

*இங்ஙனம் இந்நூல் இடையிடையே எழுதப்படாமல் நின்று போயது ஏனெனின்; யோகநித்திரை, மனிதவசியம், மக்கள் நூறாண்டு உயிர்வாழ்தல் எப்படி?, மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் பேராராய்ச்சிப் பெரும்பயன் நூல்களும் வேறுசில சிறு நூல்களும் இடையிடையே எழுதி வெளியிட வேண்டுவது இன்றியமையாததாக நேர்ந்தமையானும், அந்நூற் பொருள்களின் உண்மைகளை உள்ளவாறு ஆராய்ந்து எழுதுதற்குத் தமிழ் ஆங்கிலம் வடமொழி என்னும் இந்நூற் பொருளின் உண்மைகளையும் உண்மை நிகழ்ச்சிகளால் விளக்குதற்கு இன்னும் பல நூல்களைப் பயில வேண்டுவது முதன்மையா யிருந்தமையானும், மேற்கிளந்த நூல்கள் முடியுந்தனையும் இந்நூலை இடையே பல ஆண்டுகள் நிறுத்தி வைக்க இருபத்துநான்கு ஆண்டுகளுக்குப் பிறகாவது இது முற்றுப்பெறும்படி அருள்புரிந்த எம்பிரான் றிருவடிகளுக்கு அடியேங்களின் புல்லிய வணக்கங்கள் உரிய வாகுக!*

'தொலைவிலுணர்தல்' என்பது ஐம்புலன்களுக்கும் எட்டாத் தொலைவிலுள்ள பொருள்கள் உயிர்கள் பொருணிகழ்ச்சிகள் உயிர் நிகழ்ச்சிகளை மக்களாகிய நாம் நமதுள்ளத்தால் உணரப் பெறுதலே யாகும். ஐம்புலன்களின் வாயிலாகவன்றி எதனையும் உணரமாட்டாத எளிய நிலையில் நிற்கும் நாம், அவ்வைம் புலன்களுக்கும் எட்டாத இடத்திலுங் காலத்திலும் உள்ள பொருள்களையும் உயிர்களையும் அவற்றின் நிகழ்ச்சிகளையும் ஒரோ வொருகாற் கனவிலும் நம் அகக்கண்ணெதிரே சடுதியிற் கண்டு, அங்ஙனங் கண்டபடியே பின்னர்ப் புறக்கண்ணெதிரேயும் அவை தோன்றக் கண்டால் அப்போது நாம் எவ்வளவு இறும்பூதெய்துகின்றோம்! கனவிலோ நனவிலோ நாம் நம் அகக்கண்ணாற்கண்டு நினைவுற்ற ஓரிடத்தே அங்ஙனங் கண்டபடியே சிறிதும் பிசகாது நமது புறக்கண்ணேதிரேயுங் காணநேருங்கால் அப்போது நாம் எவ்வளவு வியப்புறுகின்றோம்! இன்னும் நமக்கு இனியராயினார் ஒருவரைப்பற்றி நாம் ஆழ்ந்து நினைந்து கொண்டிருக்கையில், அவர் நமக்கெதிரே வந்தாலும், அல்லாதவரிடமிருந்து எதிர் பாராமலே ஒரு கடிதம் வந்தாலும் அப்போதும் நாம் எவ்வளவு வியப்பினை அடைகின்றோம்! இவ்வாறு ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட நிகழ்ச்சிகள் ஒருகாலன்றிப் பல காலும் ஆங்காங்கு நிகழ்தலை நம்மனோர் தம்மாட்டும் பிறர் மாட்டும் அடுத்தடுத்து அறிந்துவைத்தும், அவற்றைப் பற்றி ஆராயாதும், அவ் வாராய்ச்சியாற் பெறும் பெரும்பயனைப் பெறாதும் வாளா நாட்கழித்து மாய்ந்து போதல் எத்துணை இரங்கத்தக்க தொன்றா இருக்கின்றது!

இவ்வுடம்பும் இவ்வுடம்பிலமைந்த ஐம்புலங்களும் நமக்கு அறிவை வளர்த்தற்கும் இன்பத்தைப் பெருக்குதற்கும் இன்றியமையாதவைகளாய் இருந்தாலும், இவையிற்றின் உதவி யில்லாமலே பொருள்களையும் உயிர்களையும் அவற்றின் நிகழ்ச்சிகளையும் நேரே யறிந்து கொள்ளுதற்குரிய அறிவும் ஆற்றலும் உடையவர்களாய் இருக்கின்றோம் என்பது மேல் நிகழ்ச்சிகளால் விளங்க வில்லையா? இத் துணைச் சிறந்த அறிவாற்றல் நமக்கு இயற்கையாகவே யிருந்தும், ஏதோ ஓர் இருள் நம்மறிவைக் கவிந்து கொண்டிருத்தலினாலன்றோ, இவ்வுடம்பும் இதிலமைந்த ஐம்புலன்களும் அவ்விருளைப் போக்கி நமதறிவை

விளங்கச் செய்தற்கு இன்றியமையாக் கருவிகளாக இறைவனால் நமக்கு வகுத்துக்கொடுக்கப் பட்டிருக்கின்றன? கட்பார்வை மங்கிய கண் கண்ணாடியின் உதவியால் தனது பார்வை விளங்கப் பெறுதல் போலவும், புகையிற் பொதிந்த நெருப்புக் காற்றினுதவியால் அப்புகை நீங்கிச் சுடர்ந்தெரிதல் போலவும், பாசி மூடிய நீர் செம்படவர் வலையால் அரிப்புண்ட பின் தெளிந்து விளங்குதல் போலவும். மழைமுகிலால் மறைவுண்ட மதியம் மழை பொழிந்தபின் நீலவானில் நிலவொளி விரித்துச் சாலத் துலங்குதல்போலவும், நம தறிவை மறைத்த இருளும் விலகவிலக அவ்வறிவுஞ் சொலற்கருந் துலக்கமுடையதாகி, ஐம்புல உதவி வேண்டாமலே அண்மையிலுஞ் சேய்மையிலும் முற்கால இக்காலப் பிற்காலங்களிலும் எவற்றையும் எவற்றின் நிகழ்ச்சிகளையும் நேரே காணவல்லதாகிய அறிவுக் காட்சியை நாம் பெறுங்கால், அதற்கு முன் நாம் அறியாமையால் அடைந்த நோயுங் கவலையும் வறுமையும் அவற்றால் வரும் அளவிலாத் துன்பங்களும் நம்மைவிட் டொருங்கே நீங்கிப்போக, நாம் எல்லையற்ற அறிவும் இன்பமும் நிரம்பப் பெற்று, எல்லாம் வல்ல ஆண்டவனது அருட்பேரொளியில் அழிவின்றி நிலை யுதலுறுவோம்.

ஆகவே, அத்துணைச் சிறந்த அறிவுக் காட்சி நமக்கு இயற்கையே உண்டென்பதனையும், அவ்வறிவுக் காட்சியால் நம் மக்களிற் சிலர் பலர் ஐம்புலன்களுக்கும் எட்டாத அரிய பல நிகழ்ச்சிகளை நேரே காண்டலையும், உண்மையாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு நன்கு விளக்கி, அவ்வாற்றால் மக்கட் பிறவியினை அரிதிற் பெற்றாரெல்லாரும் ஓவாத தமது தவமுயற்சியால், அவ்வறிவுக் காட்சியினை இன்னும் வரம்பின்றிப் பெருகச் செய்து, அதனால் அறியாமையும், அறியாமையினை அடிப்படையாகக் கொண்டு வரும் அல்லல்களும் ஒழிந்து இம்மை மறுமைக்குரிய எல்லா நலன்களையும் எய்தல் வேண்டும் என்னும் நோக்கம் பற்றியே தொலைவிலுணர்தல் என்னும் இந்நூலை இயற்றலாயினேம்.

இந்நூலின்கண் எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் மெய்ந் நிகழ்ச்சிகளிற் பெரும்பாலன மேனாட்டாசிரியர் ஆராய்ந்து உண்மையென உறுதி செய்தவைகளாகும். இத்தமிழ் நாட்டிலும்

ஆங்காங்குத் தொலைவிலுணர்தலாகிய நிகழ்ச்சிகள் நாடோறும் நிகழ்கின்றனவாயினும், அவை தம்மை நடுநின்று ஆராய்ந்து பல மெய்ச் சான்றுகளால் உறுதிப்படுத்துவாரும் உறுதிப்படுத்தி நூல் எழுதுவாரும், யாமறிந்தவரையில், எவருமில்லை. அதனால் இத்தமிழ்நாட்டில் நிகழுந் தொலைவிலுணர் நிகழ்ச்சிகளை மிகுதியாய் எடுத்துக் காட்டுதல் எம்மால் இயலாதாயிற்று. எந்நாட்டிலிருப்பினும், எம் மக்கள் குழுவைச் சேர்ந்த வராயிருப்பினும், உண்மைகாணும் வேட்கையும் முயற்சியும் உடைய சான்றோர் ஆராய்ந்து கண்ட மெய்ம்மைகளை எடுத்துக் காட்டுதலே மக்களுக்கு மெய்யறிவைத் தருமாகலின், யாம் எடுத்துக் காட்டிய மேனாட்டாசிரியர் தம் மெய்யுரைகள் நம்தமிழ் நாட்டவர்க்கு மெய்யறிவைப் பயந்து அவர்க்குப் பெருநலன்களை விளைக்கு மென்னும் நம்பிக்கை யுடையேம்.

இருபத்துநான்கு ஆண்டுகளுக்குமுன் யாம் இந்நூலை எழுதத்துவங்கிய காலத்தில், வடசொற் கலப்பால் நம் செந்தமிழ் மொழிக்குண்டாந் தீதினை உன்னியாதிருந்தேம். அதனால், இந்நூற்படிகள் சிலவற்றில் முதல் ஐம்பத்தொரு பக்கங்கள் வரையிற் சிற்சில வடசொற்கள் கலந்துவிட்டன. இந்நூலின் இரண்டாம் பதிப்பில் அவ்வடசொற்கள் களைந்தொழிக்கப் படும். இதுகாறும் எமது நூற்றொண்டுக்குத் துணைபுரிந்துவரும் இறைவன்றிருவருள் மேலும் அதற்குத் துணைபுரிவதாக!

**பல்லாவரம்** **மறைமலையடிகள்**
**பொதுநிலைக்கழக நிலையம்,**
**திருவள்ளுவர் ஆண்டு,**

# இரண்டாம் பதிப்பின் முகவுரை

*இந்நூலின் முதற்பதிப்பு முகவுரையிற் கண்டபடி தொலைவிலுணர்தல் என்னும் இத்தமிழ்நூல் திருவள்ளுவர் ஆண்டு 1942-இல் (கி.பி1911-இல்) இயற்றத் துவங்கி, இடையிடையே பல ஆண்டுகளாக எழுதி அச்சிடப்பட்டு 1935-ஆம் ஆண்டில் (கி.பி.1966-இல்) நூல் வடிவில் வெளிவந்ததாகும்.*

*அதன்பின் இவ்விரண்டாம் பதிப்பு, கி.பி. 1939 இல் துவங்கிய மேல் கீழ்நாட்டுக் கொடும் பெரும் போருக்குமுன் பல்லாண்டுகள் இடையிடையே அச்சிடப்பட்டு, அப்போர் முடிந்ததற்குப்பின் இப்போதுதான் வெளிவரலாயிற்று.*

*முதற்பதிப்பின்கண் இருந்த வடசொற்கள் முற்றுங்களைந் தெடுக்கப்பட்டு இவ்விரண்டாம் பதிப்பு முழுதுந் தூய தனித் தமிழ் உரைநடையில் ஆக்கப்பட்டிருக்கின்றது. முப்பத்தைந் தாண்டுகளுக்குப்பின் இந்நூலின் 2-ஆம் பதிப்பை வெளியிடுதற்கு அருள்சுரந்த எல்லாம் வல்ல இறைவன் திருவடிப்போதுகளுக்கு அடியனேன் புல்லிய வணக்கம் உரியதாகுக!*

***பல்லாவரம்***
***பொதுநிலைக்கழக, நிலையம்,*** **மறைமலையடிகள்**
***திருவள்ளுவர் ஆண்டு***
***கி.பி. திசம்பர், 1946***

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தொலைவிலுணர்தற் பெயர்ப்புதுமை | 9 |
| 2. | நுண்ணிய வெளிகள் | 13 |
| 3. | மனவெளி | 17 |
| 4. | மனவுணர்வை நுட்பமாக்கல் | 23 |
| 5. | உணவு | 45 |
| 6. | மூச்சுவிடும் முறை | 55 |
| 7. | தொலைவில் உணர்வோர் உணர்த்துவோர் | 58 |
| 8. | முதற் பழக்கம் | 61 |
| 9. | இடம் உணர்தல் | 63 |
| 10. | பொருள்களை உணர்தல் | 65 |
| 11. | அறிதுயில் வருவிக்கும் முறை | 76 |
| 12. | தாமே தோன்றும் உணர்ச்சிகள் | 88 |
| 13. | கனவிற்றோன்றும் உணர்ச்சிகள் | 95 |
| 14. | நனவிற்றோன்றும் முன்னறிவிப்புகள் | 139 |
| 15. | பலர்க்குத் தோன்றிய நினைவுருவங்கள் | 166 |
| 16. | தெளிவுக் காட்சி | 202 |
| | பாவலர்கள் பார்வையில் மறைமலையடிகள் | 217 |

## 1. தொலைவிலுணர்தற் பெயர்ப்புதுமை

இத் தலைப்பெயர் பலருக்குப் புதுமையாகக் காணப் படலாம். அங்ஙனம் புதுமையாகத் தோன்றினாலும் இதனால் உணர்த்தப்படும் பொருளோ பெரும்பாலும் எல்லார்க்குந் தெரிந்ததொன்றேயாம். அன்பிற் சிறந்த மனைவி, நெடுநாளாக ஏதொரு செய்தியுந் தெரிவியாமல் தொலைவிலிருந்த தன் காதலனைப்பற்றி ஆழ நினைந்து கொண்டிருக்கையில் திடுமென அவனிடமிருந்து கடிதம்வரப் பார்த்து வியப்படைகின்றாளன்றோ? ஒவ்வொருகால் நாம் நமக்கு இனிய நண்பரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் திடீரென்று எதிரே வர உடனே நாம் வியப்படைந்து உங்களுக்கு ஆண்டு நூறு, இப்போது தான் உங்களைக் குறித்துப் பேசிகொண்டிருந்தோம்' என்று சொல்கின்றேம் அல்லமோ? இவ்வாறு தொலைவிலுள்ள வரை நினைப்பதும் நினைக்கப்பட்ட அவர் திடீரென வருதலும் அல்ல தவரிடமிருந்து செய்தி வருதலும் நமது உயிர் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நிகழ்தல் வழக்கத்திற் கண்டு கொள்ளலாம். இங்ஙனம் நாங் காணவுங் கேட்கவும் ஏலாத தொலைதேயங்களில் நிகழும் நிகழ்ச்சிகளை நம் மனமானது எளிதில் உணர வல்லதாயிருக்கின்றது. தொலைநாட்டிலுள்ள ஒருவர் தம் நண்பரைப் பற்றி நினைந்த அப்பொழுதே வேற்றுநாட்டிலுள்ள அந் நண்பரும் அவரைப் பற்றி நினைந்ததைப் பின்னால் வந்த கடிதங்கள் செவ்வையாக விளக்கிக் காட்டியிருக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக எமதறிவெல்லையில் உண்மையாக நடந்த ஒரு வரலாற்றினை இங்கெடுத்துக் காட்டுகின்றேம்.

எமக்குப் பதினைந்து பதினாறு ஆண்டிருக்கும். செந்தமிழ் இலக்கண இலக்கியங்களை மிக்க அருளோடும் எமக்கு எடுத்து அறிவுறுத்திய நல் ஆசிரியரான நாராயணசாமிப் பிள்ளை

யவர்கள் நாகபட்டினத்திற் புத்தகக் கடை வைத்திருந்தார்கள். அப்போது யாம் ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கிலமும் பயின்றுகொண்டிருந்தேமாகலின், ஒவ்வொரு நாளும் மாலையிற் கல்லூரியினின்றும் வந்தவுடனே புத்தகக் கடைக்குச் சென்று அருமையிற் சிறந்த எம்மாசிரியரிடஞ் செந்தமிழ் நூல்களைப் பயில்வது எமக்கு வழக்கமாய் நடந்து வந்தது. இங்ஙனம் நடந்து வருகையில், யாங் கல்வி பயிலும் ஆங்கிலக் கல்லூரியில் மேல்வகுப்பிற் கலை பயின்று வந்த மாணவர் ஒருவர் எமக்குச் சிறந்த நண்பராகித் தாம் அப்போது கற்று வந்த மனோன்மணீயம் என்னும் ஒரு நாடகக் காப்பியத்தை எம்மிடங் காட்டினர். அதனை வாங்கி நோக்குதலும் அக் காப்பியத்தின் சொன்னயம் பொருள் நயங்களுள் கதைப்போக்கும் அதன் புதிய நடையும் எமதுள்ளத்தை மிகவுந் கவர்ந்தன; உடனே அதனை எடுத்துப் போய் எம் ஆசிரியரான நாராயணசாமிப் பிள்ளை யவர்களுக்குச் சொல்லிக் காட்டினேம்; அக் காப்பியத்தின் அருமையைக் கேட்டதும் “இதனை இயற்றினவர் யார்?” என்று ஆசிரியர் எம்மைக் கேட்டனர். அதற்குத் ‘திருவனந்தபுர அரசர் கல்லூரியில் அறிவு நூற் புலவராய் அமர்ந்திருக்கும் ஆலப்புழை எம்.ஏ.சுந்தரம் பிள்ளை அவர்களே’ என்று விடை பகர்ந்தேம். அதுகேட்ட ஆசிரியர் சிறிதுநேரம் சும்மாவிருந்து, “யாம் இருபது ஆண்டுகளுக்குமுன் மலையாளஞ் சென்றிருந்தேம்; அப்போது ஒருகால் ஆலப்புழையில் தங்கநேரிட்டது; அப்பொழுது தான் ஆங்கிலமொழியில் கற்றுத் தேறிய சுந்தரம் பிள்ளை என்பவர் ஒருவரைக் கண்டேம்; அவர் பெருமாள் பிள்ளை மகன்; அவரோடு யாம் தங்கியிருந்த சிலநாளும் அவர் எம்மிடம் **யாப்பருங்கலக் காரிகையிற்** பல ஐயப்பாடுகள் கேட்டுந் தெளிந்து எம்மிடம் பெரிதும் அன்பு பாராட்டி, எம்மைத் தம்முடனேயே இருக்கும்படி வற்புறுத்தினார். அதற்கு யாம் இசையாமல் வந்துவிட்டேம். அப்போது அவர்க்கு ஆண்டு இருபது இருக்கலாம். இப்போது நாற்பது இருக்கும். இந்நூல் இயற்றியவர் அவராகத்தாம் இருக்கவேண்டும்” என்று மொழிந்தார்கள். ‘அவ்வாறாயின் அவர்க்கு ஒரு கடிதம் எழுதலாமா?’ என்று ஆசிரியரைக் கேட்டேம். அதற்கு ஆசிரியர் “அவ்வாறே செய்க” என்று சொல்லித் தாம் இருபது ஆண்டுகட்குமுன் ஆலப்புழை வந்திருந்ததும் அவரைத் தாங்

கண்டதும் ஆகிய அடையாளங்களெல்லாம் நன்கு குறிப்பிக்கும் படி கட்டளையிட்டார்கள். அவ்வாறே அவ்வடையாளங்களைக் குறித்து அகவற் பாட்டில் ஒரு கடிதம் எழுதிச் சுந்தரம் பிள்ளையவர்கட்கு விடுத்தேம். அதற்கு மறுமொழிக் கடிதம் பத்துநாட் கழித்து வந்தது; அக் கடிதத்தொடுகூடவே தாம் இயற்றிய மனோன்மணீயம் முழுப் புத்தகம் ஒன்றும் எம் ஆசிரியரவர்கட்குப் பிள்ளையவர்கள் தம் வணக்கவுரைகளுடன் விடுத்தார்கள். அவர் எழுதிய கடிதத்தைப் பிரித்துப் பார்க்கையில் அதிற் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது.

“அன்பார்ந்த ஐயா,”

யான் ஐந்தாறு நாட்களுக்குமுன் சுகத்திற்காகத் திருக்குற்றாலம் போயிருந்தேன். தங்களைப் பிரிந்து இருபது வருடங்களுக்குமேல் ஆனமையால், இதுகாறும் தங்களை நினையாமலிருந்த யான் திருக்குற்றாலத்தில் போயிருந்த போது, தங்களைப்பற்றி அடிக்கடி நினைக்கலானேன்; தங்கள் நினைவு எனக்கு மிகவும் பலமாகத் தோன்றியது. பிறகு நாலைந்து நாட்கள் கழிந்து திருவனந்தபுரம் திரும்பிவர, என் வீட்டில், தங்கள் மாணவர் வேதாசலம் பிள்ளையவர்கள் தங்களைப்பற்றி எழுதிய கடிதம் வந்திருந்தது. அதனைப் பார்த்ததும் எனக்குண்டான வியப்பு இவ்வளவென்று சொல்ல முடியாது-” என்று பின்னுஞ் சிலவற்றைச் சேர்த்து எழுதி யிருந்தார்; ஈண்டெழுதும் பொருளுக்கு அக் கடிதத்திலுள்ள இவ்வளவு மட்டுமே வேண்டுமாகையால், எஞ்சியவற்றை இங்கே பதிப்பியாது விடுகின்றேம். இக்கடிதத்தால் அறியற்பாலது யாது? எம் ஆசிரியரும் யாமுஞ் சுந்தரம் பிள்ளை யவர்களைப்பற்றிக் கருத்தூன்றிப் பேசிக்கொண்டிருக்கையில், நாகப்பட்டினத்திற்கு நெடுந்தொலைவிலுள்ள திருக்குற்றாலத்தில் அப்போது தங்கியிருந்த சுந்தரம் பிள்ளை யவர்கட்கும் எம் ஆசிரியரைப் பற்றிய நினைவு சடுதியில் உண்டானதன்றோ? இருபது ஆண்டு காலமாக ஒருவரை யொருவர் நினைவு கூராமலிருந்த இவ்விருவரும் ஒரே காலத்தில் ஒருவரை ஒருவர் எமது முயற்சியால் நினைவு கூர்ந்தமை பெரிதும் உற்றுநோக்கற் பாலதாகும். எம் ஆசிரியர் பிள்ளையவர்களை மிகவும் ஆழ்ந்து நினைந்த நினைவானது அதே நேரத்தில் தொலைவிலிருந்த பிள்ளையவர்கள்

உள்ளத்திலும் எம் ஆசிரியரைப் பற்றிய நினைவினை உடனே எழுப்பி விட்டது. இக்காலத்திற் கம்பி வழியாக விடுக்கப்படுஞ் செய்தியானது மிக விரைவாகச் சென்று நெடுங்தொலைவி லுள்ளார்க்கும் அறிவிக்கப்படுதலை எல்லாரும் அறிந்திருக் கின்றார்கள். ஆனால், அக் கம்பியினும் விரைவாகச் சென்று நமது நினை வானது ஓர் இமை கொட்டும்முன் பிறர்க்கு நாம் கருதியதை உணர்த்தும் புதுமையினை எவரும் நினைந்து பாராததும், எவ்வகை யுதவியும் வேண்டாமல் நமது நினைவு கடந்து செல்லவிடும் ஆற்றலைத் தம்மிடத்து மிகுதிப்படுத்திக் கொள்ளாததும் ஏனோ? மின்செய்தி விடுப்பதற்குக் கம்பி வேண்டும்; அம் மின்செய்தி விடுக்கத் தெரிந்தவர்கள் உதவி வேண்டும்; அவர்க்குப் பொருள் தரல்வேண்டும். ஆனால், நமது நினைவைச் செலுத்துதற்கோ எதனுதவியும் நமக்கு வேண்டு வதில்லை. நம்முதவியே நமக்கு வேண்டும், தவ முயற்சியில் முதிர்ந்த பெரியார்கள் தாம் இருந்தவிடத்திருந்தே உலகமெங்கும் உள்ள தம் மாணக்கர்க்குத் தம் நினைவுகளைத் தெரியப் படுத்துகின்றார்கள். வடநாட்டிற் பல ஆண்டுகளுக்கு முன் போர்வினைஞர் கலகம் நடந்தபோது, நம் அருந்தவத் தோரிற் சிலர் அதிற் றலையிட்டிருந்தார்கள் என்றும், அவர்கள் மலை முழைஞ்சுகளில் நெடுந்தொலைவில் இருக்கப், படைஞர் களொடு கலந்திருந்த அவர்களின் மாணாக்கர்கள் போர்க் களத்தில் நிகழ்வனவற்றை ஓர் இமைகொட்டுமுன் தங் குருமார்களுக்கு அறிவிப்பரென்றும், அது தெரிந்த குருமார்கள் தம் மாணாக்கர் நடக்க வேண்டு முறை இதுவென ஓர் இமைப் பொழுதில் திரும்ப அறிவிப் பார்களென்றும், இம் மறைவு களைத் தெரியாமல் வெள்ளைக்காரர் மிக வியந்து திகைப் படைவ ரென்றுங் கற்றறிந்தேம். இன்னும் எமது மலையகத்தில் எம் அன்பின்மிக்க மனையாளும் யாமும் ஒருவர் நினைப்ப தனையே மற்றவரும் நினைப்பதும் அடிக்கடி நிகழா நிற்கின்றது. எமதறிவு நிகழ்ச்சியில் நிகழும் இன்னோரன்ன நிகழ்ச்சிகள் பலவாயினும், அவற்றை இங்கெடுத்துக் குறித்தலினும், பிறர்தம் அறிவு நிகழ்ச்சிகளை மொழிதலே பொருத்தமாமென்று எண்ணி அவற்றையிங்கே மிக வெடுத்துக் கூறிற்றிலேம். அது நிற்க.

## 2. நுண்ணிய வெளிகள்

இங்ஙனந் தொலைவிலுள்ள ஒருவர் நினைவானது மற்றொருவர் உள்ளத்தில் எழுவதற்கு ஏது என்னை? வேறு வேறு இடங்களில் உள்ள இருவரையும் ஒன்று படுத்தி இணைக்க நடுவே எவ்வகைப் பொருளும் இல்லாதிருக்கவும், அவ்விருவர்க்கும் ஒரே நினைவு தோன்றுவதெப்படி என்று பலருந் தம்முள் ஐயுற்று மருள்வர். உள் பொருள்களைப் பகுத்தறியும் நுண்ணுணர்வுங் கல்வியும் இல்லாதவர்கள் மட்டுமே இங்ஙனம் மருள்வர்; இத்தன்மையோர்க்குக் கண்ணாற் காண்பதுங் காதாற் கேட்பதும் மட்டுமே மெய்; ஏனையவெல்லாம் பொய். கல்வியும் நுண்ணுணர்வும் உடையாரோ, வெளிப் பார்வைக்கு உடம்பினுள் வாழும் உயிர்கள் தனித்திருப்பதுபோற்றோற்றினுந், தம்மைச் சுற்றிலும் அவை பலவகையான நுண்ணிய பொருள் களாற் சூழப்பட்டிருத்தலைத் தெள்ளிதில் அறிந்துகொள்வர். **நுண்பொருள் நோக்கி** என்னுங் கண்ணாடியின் உதவியால் நாம் உயிர்க்கும் மூச்சிலும் அருந்துந் தண்ணீரிலும் இயங்கும் இடைவெளியிலும் எண்ணிறந்த உயிர்கள் மிக நுண்ணிய சிற்றுடம்புகளில் உலவுதலை அறிவுடையோர் உணர்ந்து வருகின்றார்கள். நம்முடைய கண்களுள் வந்து நுழைந்து கண்ணொளியை விளக்குங் கதிரவன் முதலிய பொருள்களின் ஒளியும், புறப்பொருள்களிற் பிறந்து காதினுள் வந்து நுழையும் ஓசையும் எவ்வாறு வருகின்றன என்பதனைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்த இயற்கைப் பொருணூற் புலவர்கள், அவை அங்ஙனம் பரந்து உலாவி வருவதற்கு எங்கும் நிறைந்த மிக நுண்ணிய இடைவெளி ஒன்று உண்டென்று கண்டறிந்தார்கள். ஒளியானது ஓர் இமைப்பொழுதில் ஓர் இலக்கத்து எண்பத் தாறாயிரம் மைல் இடத்தைக் கடந்து செல்கின்ற தென்பதைச் **சிவஞானபோத ஆராய்ச்சியில்** இனிது விளக்கினாம்.

கண்ணிமைகொட்டும் முன் இவ்வளவு தொலைவிடஞ் செல்கின்ற ஒளியானது, சிலவான்மீன் மண்டிலங்களில் இருந்து இங்கு வருதற்கு ஐம்பது ஆண்டுகளுக்குமேற் செல்கின்றது. இப்படியானால் அவ்வான்மீன் மண்டிலங்கள் இந் நிலவுலகத்திற்கு எவ்வளவு தொலைவில் இருக்கவேண்டு மென்பதைச் சிறிது நினைந்து பாருங்கள்! இத்தனை தொலைவிலுள்ள வான் உலகங்களுக்கும் இந் நிலவுலகத்திற்கும் இடையிலே நிறைந்து நின்று இவற்றையெல்லாம் இணைப்பதற்கு இடைவெளி ஒன்று இல்லாவிட்டால் அவ்வான்மண்டிலங்களில் உள்ள ஒளியானது இங்கே எவ்வாறு வரக்கூடும்? இன்னுங் காதுக்கு எட்டுந் தொலைவிலேயிருந்து ஒருவர் பாடும்போது அப்பாட்டின் ஓசையானது நமது செவியில் வந்து படுவதைப் பாருங்கள்; தொலைவிலிருந்து பாடும் அவருக்கும் இப்பாலிருந்து அதனைக் கேட்கும் நமக்கும் இடையிலே வான்வெளி ஒன்று இல்லா விட்டால் அவ்வோசை நஞ்செவிக்கு எவ்வாறு எட்டும்? ஆகவே, ஓசையும் ஒளியும் உலவுதற்கு இடமாய் எங்கும் நிறைந்துள்ள வான்வெளி ஒன்றுண்டென்பது நன்கு பெறப் படுகின்றதன்றோ?

இனி, இவ்விடைவெளியில் நுண்ணணுக்கள் நிறைந்துள்ளன. இவ்வெளியின்கண் எங்கேனும் ஓரிடத்தில் ஒளியாவது ஓசையாவது தோன்றினால் அது தோன்றியவிடத்திலேயுள்ள நுண் ணணுக்கள் அதனால் அசைவு பெற்றுத் தம் பக்கத்தே யுள்ள நுண்ணணுக்களை அசைக்கும்; அந் நுண்ணணுக்கள் தம்மோ டிணைந்து நிற்கும் அணுக்களை அசைக்கும்; இங்ஙனம் ஒன்று மற்றொன்றை அசைக்கக் கடைசியாக நங் கண்ணிலுஞ் செவியிலும் நிறைந்த நுண்ணணுக்கள் அசைந்து நமக்கு ஒளியினையும் ஓசையினையும் புலப்படச் செய்கின்றன. இவ் வியல்பை ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவாம்; அகன்ற ஓர் ஏரியில் நிறைந்த நீரின் நடுவே ஒரு கல்லை விட்டெறிந்த வழி, அக்கல் விழுந்த இடத்திலுள்ள நீரின் அணுக்கள் அசைந்து தம் பக்கத்தேயுள்ள நீரின் அணுக்களை அசைக்க, அவை தம் பக்கத்தேயுள்ள அணுக்களை அசைக்க, இவ்வாறு அந்நீரின் அணுக்கள் எல்லாம் நாற்புறமும் அலைஅலையாய் அசையக், கரைவரையில் அவ்வியக்கம் வந்து திரும்புவதைப் பாருங்கள்!

இங்ஙனமே வான்வெளியிலும் ஒளியும் ஓசையும் இயங்கு கின்றனவென்பது அறியற்பாற்று.

இனி, நம் ஐம்புலன்களாலும் அறியப்படும் புறப்பொருள் களுள் ஒளியும் ஓசையும் நாற்றமுமே மிக நுட்பமான பொருள்களாகும்; நுட்பமான பொருள்கள் உலவுதற்கு நுண்ணிய வெளியும், பரும்படியான பொருள்கள் உலவுதற்குப் பருப்பொருளான நிலமும் வேண்டப்படுகின்றன. ஒளியும் ஓசையும் மிக நுண்ணிய இடைவெளியில் உலவும்; நாற்றங் காற்றில் உலவும். அற்றேல், மின்னுட்பத்தால் உந்தப்படும் ஓசையானது பருப்பொருளான துத்தநாகக் கம்பி வழியே செல்வது என்னையெனின்; அக்கம்பியிலும் நுண்ணிய வான்வெளியே நிறைந்திருத்தலின், அங்கும் அஃது அவ் வெளியிலேதான் செல்கின்றதென உணர்க. அவ்வாறாயின் வான்வெளியிற் செல்லும் அவ்வோசையைக் கம்பிவழியே செலவிடுத்தல் ஏன் என்றால், வறிதே வான்வெளியில் அவ்வோசையைச் செல்லவிட்டால் அவ்வெளி எங்கும் அது சிதறிப்போகுமாதலால், அஃது அங்ஙனஞ் சிதறாமைப் பொருட்டுக் கம்பி அவ் விடைவெளியில் ஒரு சிறு பகுதியைத் தன்னுள் வைத்து அவ்வோசை ஒரு வழியே செல்ல உதவி புரிகின்றது. அது போக, அமெரிக்காவிலுள்ள நுண்ணறிவாளர் இப்போது கம்பியில்லாமலும் வெறும் வான்வெளியிற் செய்தி விடுக்கக் கற்றிருக்கின்றார்களாகலின், ஓசையானது நுண்ணிய வான்வெளியிலேதான் எங்குஞ் செல்வதென்பது மறுக்கலாகாத உண்மையேயாம் என்க. இனி ஒளியும் இவ்வாறே இடை வெளியில் உலவும் உண்மையும் அறியற்பாற்று.

இனி, நாற்றமோ ஓசை ஒளி இரண்டினுஞ் சிறிது பரும்படியான பொருளாகையால், அது தனக்கேற்ற காற்றிலே உலவுதல் செய்கின்றது. காற்றானது வான் வெளியைவிடப் பரும்படியான பொருளாகையால், அது தன்னிடத்தில் நாற்றமானது நடைபெறுதற்கு இடந்தருவதாயிருக்கின்ற தென்க.

இனி, இவை யொழியக் கல் மண் மரம் நீர் முதலிய பொருள்கள் எல்லாம் நிலத்திலே மட்டும் இயங்கவல்லன. அவ்வாறாயிற், புறவு பருந்து முதலான பறவைகளின்

பருவுடம்புகள் காற்றிலே இயங்குதல் என்னையென்றால், அவ்வுடம்புகள் எக்காலத்தும் இயல்பாகவே காற்றில் இயங்குவன அல்ல; இறக்கைகளின் உதவியாற் காற்றை அலைத்துச் செயற்கையாக அக் காற்றில் இயங்குகின்றன. ஆகையாற், பருப்பொருள்கள் பருப்பொருள்களிலேயே இயங்கும் என்னும் முறை பிறழமாட்டாதென்க. இனி, இந் நிலவுலகமானது உருண்டை வடிவினதாய் இடைவெளியிற் சுழல்கின்ற தென்னுங்கால், இது கதிரவ னுலகத்தானும் அம்புலி யுலகத்தானும் முன்னும் பின்னும் இழுக்கப்பட்டு அங்ஙனஞ் சுழல்கின்றதே யன்றி அது தன்னியற்கை யாகவே அவ்வெளியிற் சுழல்கின்றதில்லையென்க.

இவ்வாறு கல் மண் முதலான பருப்பொருள்கள் நிலம் என்னும் பருப்பொருளிலும், நாற்றம் ஓசை ஒளிமுதலான நுண்பொருள்கள் காற்று வெளி முதலான நுண்பொருள்களிலும் இயங்குதல் போலவே, ஓசை ஒளியினும் மிக நுண்ணியவான நம்முடைய நினைவுகள் இயங்குதற்கு வான்வெளியினும் நுண்ணிதான ஒரு நினைவு வெளி இருக்க வேண்டுமென்பது நன்கு பெறப்படும்.

## 3. மனவெளி

இவ்வாறு நம் நினைவுகள் நடைபெறுதற்கு இடமாய் உள்ள நுண்ணிய இடைவெளியே மனவெளி எனப்படுவதாகும். மக்கள் உடம்புகளில் அமைந்த அமைவுகளும், அவ்வுடம்புகள் இருத்தற்கு இடமான இவ்வுலகத்தின் அமைவுகளும் தம்முள் ஒப்பனவாகும் என்பதும் நமதுடம்பாகிய இச் சிற்றுலகத்தினுள் ஒன்றினொன்று நுண்ணியவாயிருக்குங் கருவிகளுக்கு நேராகப் புறத்தே இப்பேருலகத்திலும் ஒன்றினொன்று நுண்ணியவான பொருள்கள் இயைந்து நிற்கும் என்பதும், இவ்வுடம்பின் அகத்தேயுள்ள மனம் நினைவு அறிவு முனைப்பு என்னும் நுண்கருவிகளோடு ஒத்த நுண்ணிய வெளிகள் புறத்தே உலகத்திலும் உண்டென்பதுஞ் **சிவஞானபோத ஆராய்ச்சியில்** நன்கு விளங்க விரித்துக் காட்டியிருக்கின்றேம். இவ்விடைவெளி களெல்லாம் ஒன்றினொன்று நுண்ணியவாய் ஒன்றை ஒன்று ஊடுருவிக்கொண்டிருக்கும். மண் நீர் நெருப்பு காற்று வெளி முதலிய ஐம்பொருள்களுள் மிகவும் நுட்பமானது வான்வெளி என்று சொல்லப்படும். இவ்வான்வெளியினையும் ஊடுருவிக் கொண்டு இதனினும் நுட்பமானதாய்இருப்பதே **மனவெளி** என்று சொல்லப்படுவது. இவ்விடைவெளி மக்கள் உடம்பினுள் உள்ள மனத்தோடு இயைந்து எங்கும் நிறைந்து நிற்பது. இவ்விடைவெளியினுள் எல்லாருடைய மனமும் அம் மனத்திற் றோன்றும் எண்ணிறந்த நினைவுகளும் ஒருங்கு இயைந்து நிற்கின்றன. ஒவ்வொருவரும் நினைக்கும் நினைவுகளெல்லாம் - அவை பெரியனவேனும் சிறியனவேனும், உயர்ந்தனவேனுந் தாழ்ந்தனவேனும், நல்லனவேனும் தீயனவேனும் எல்லாங் கன்மேற் செதுக்கிய எழுத்துப்போல் அழியாமல் நிலைபெறுகின்றன. யான் எண்ணிய எண்ணம் பிறர் எவர்க்குந் தெரியாதென்று எண்ணி எவனும் மகிழா திருக்கக்கடவன். அவன்

இப் பிறப்பு முழுதும் எண்ணிய எண்ணங்கள் மட்டும் அல்ல. மேற்சென்ற எண்ணிறந்த பிறவிகளில் எண்ணிய எண்ணங்களும், இனி வரும் பிறவிகளில் எண்ணும் எண்ணங்களும் எல்லாம் ஒரு தினையளவு கூடப் பிசகாமலுங் குறைந்து போகாமலும் அப்படியே இம்மனவெளியிற் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அருந்தவமுயற்சியால் தமது உள்ளத்தை ஒருவழி நிறுத்தி நுண்ணிய உள்பொருள்களின் இயல்புகளைக் காணும் ஆற்றல் வரும் போது, ஒவ்வொருவருந் தாந்தாம் எடுத்த பிறவிகளின் வரலாறுகளையும் அப் பிறவிகளிற் றாந்தாம் எண்ணிய எண்ணங்களையும் இம் மனவெளி என்னும் புத்தகத்தில் தெளிவாகக் கற்று அறிந்துகொள்வார்கள். இம் மனவெளியில் தமது நினைவைப் பொருத்திவைத்து உணரும் பழக்கம் வாய்ந்தவர்கள், வேண்டுமானால், தம்மிடத்து வரும் ஒவ்வொருவர் நினைவுகளின் இயற்கைகளையும் அவற்றின் நன்மை தீமைகளையும் எளிதிலே அறிந்துகொள்வார் களாகையால், ஒருவருக்குந் தெரியாமல் நாம் இச் செயல்களைச் செய்தோம், நாம் இந் நினைவுகளை நினைந்தோம் என்று எண்ணுவது மிக்கதோர் அறியாமையாகும். அது நிற்க.

இன்னும் இம் மனவெளியின் இயல்பை அறியாமை யினாலேதான், மக்களிற் பெரும்பாலார் தாம் எண்ணும் எண்ணங்கள் எல்லாந் தமக்கே உரியனவென்று பிழையாகக் கருதி மிகவுந் துன்பப்படுகிறார்கள். உண்மையாக நோக்குங்கால், நம்முள் ஒவ்வொருவரும் நினைக்கும் நினைவுகளிற் பெரும் பாலன பிறருடையனவே யாகும். மனவலிமை மிக்கவர்கள் நினைக்கும் நினைவுகள் இம் மனவெளியில் எங்கும் பரவி இதன்கட் டமது உள்ளத்தை வைத்தவர்கள் எல்லார் உள்ளத்திலும் பிறக்கும். கல்வியறிவாலாயினும், உயர்ந்த உள்பொருள்களை அறியும் அறிவாலாயினும் மிக்கவர்கள் தம் நினைவுகளை உலக முயற்சிகளினின்றும் பிரித்து ஆழ்ந்த நிலையில் உய்த்து இருத்தும்போது, அவர்கள் அறிவானது மனவெளியில் இயைந்திருக்கின்றது. இங்ஙனம் ஒரு தேயத் திலுள்ள அறிவுடையார் ஒருவர் தமது ஆழ்ந்த நினைவால் மனவெளியில் தொடர்பு உடையராயிருத்தல் போலவே, வேறொரு தேயத்திலுள்ள கற்றவரும் அதிற் றமது கருத்தை நாட்டியிருப்பர். அங்ஙனம் அவ்விருதிறத்தார் நினைவுகளும் அம்

மனவெளியிற் பரவுதலால் ஒருவருடைய கருத்துகள் மற்றொருவர் உள்ளத்திலுந் திடீரெனத் தோன்றுகின்றன. இவ்வாறு நினைவுக் கலப்புகள் தோன்றுவது உயிரோடு இருப்பவர் தமக்குள் மட்டும் அன்று. நில வுலகத்தின்மேல் உலவும் இப் பருவுடம்பை விட்டு நுண்ணுடம்புகளில் நுண்ணிய உலகங்களில் உலவும் பேய்கள் தேவர்கள் முனிவர்கள் சித்தர்கள் முதலியோர் நினைக்கும் நினைவுகளும் இங்குள்ள மக்கள் உள்ளத்திற் றோன்றா நிற்கின்றன. இங்குள்ள மக்கள் நினைவுகளும் மேலுலகங்களிலுள்ள தேவர் முனிவர் முதலான உயிர்களின் உள்ளங்களில் எழுகின்றன. ஆகவே, இங்குள்ளவர்களான நாம் நினைக்கும் நினைவுகள் அவ்வளவும் நம்முடையனவே என்று எண்ணி அகம் மகிழ்தற்கு இடம் இல்லை. நம் நினைவுகளிற் பெரும்பாலான பிறருடையனவேயாம்; நமக்கே உரியனவென்று உரிமை பாராட்டுதற்கு இயைந்தன மிகச் சிலவேயாகும். அங்ஙனமாயின், நம் நினைவுகளிற் சில நல்லனவாயும் பல தீயனவாயும் இருத்தலால் இவற்றில் எவை நம்முடையன வென்று சொல்லுதற்கு ஏற்பன? எவை ஏலாதன? அல்லது, நன்மை தீமை எவற்றிற்குமே நாம் உரியவர்கள் அல்லமோ; அவற்றிற்கு நாம் உரிமையுடையர் அல்லராயின் அவற்றால் நாம் இன்புறுவதுந் துன்புறுவதும் என்னை? என்று பலவாறு வினாவுதற்கு ஏதுவான ஐயம் உண்டாகுமாதலால், அம் முறையை இங்கு ஒரு சிறிது விளக்குவாம்.

நல்லனவுந் தீயனவுமாய்க் கலந்து நம்முள்ளத்தில் உண்டாகும் நினைவுகளிற் பெரும்பாலான நமக்கே உரியன ஆகாவிட்டாலும், அந் நினைவுகளை ஏற்றுக்கொள்ளுதற்கு இயைந்த ஒரு தன்மையை நாம் நம்மிடத்திற் செய்து கொள்வதனால், அவற்றால் வரும் இன்ப துன்பங்களை அடைதல் நமக்கே உரியதாயிற்று, நம்முடைய மனம் நன்னினைவுகள் நினைப்பதிலேயே பழகி விடுமானால், தூய நல்லியல்பு உடையதான அம் மனம் மற்ற நல்லுயிர்களின் நன்னினைவு களையே ஏற்று அவற்றால் இன்புற்றிருக்கும்; அவ்வாறன்றித், தீய நினைவுகளை நினைப்பதிலேயே பழகி விடுமானால் தூய்தல்லா வியல்பு உடைய அது மற்றப் பொல்லாவுயிர்களின் பொல்லாத நினைவுகளையே ஏற்று அவற்றால் துன்புற்றுச் சுழலும். தூயது தூயதையே கவரும், அழுக்கோ அழுக்கினையே

நாடும். ஒருவன் திருடுதல் கொல்லுதல் பொய் சொல்லுதல் முதலான தொழில்களைச் செய்தலிலேயே கருத்தூன்று வனாயின், அவன் மனம் அத்தகைய நினைவுகளால் மிகவும் அழுக்குப்பட்டுத் தனக்கு இயைந்த அழுக்கான நினைவுகளையே விரைவில் ஏற்றுக்கொள்ளும்; வேறு நன்னினைவுகளைச் சிறிதும் ஏற்றுக்கொள்ள மாட்டாதாகும். தன்னைப் போலவே நிலவுலகத்தில் உயிரோடிருக்குந் தீயவர் நினைவுகளையும், நிலவுலகத்தை விட்டு இருள் உலகத்திற் சென்ற தீய பேய்களின் பொல்லாத நினைவுகளையும் எளிதிலே ஏற்றுக்கொண்டு அவற்றால் அவன் அளவிறந்த துன்பத்தை அடைகுவன். தீய பேய்களினாற் பிடிக்கப்பட்டு வருந்துவோர்களை ஆராய்ந்து பாருங்கள்! அவர்கள் எவ்வளவு அழுக்கான செய்கையும் நினைவும் உணவு முதலியனவும் உடையவர்களாய் இருக்கின் றனர்! அவர்கள் இருக்கும் வீடுகளிற் சென்று பார்த்தால் அவை எவ்வளவு தீ நாற்றமும் அழுக்கும் மிகுந்து பார்ப்பவர்க்கு அருவருப்பை விளைவிக்கின்றன! அவர்கள் உணவாகக் கொள்ளும் இறைச்சி முதலியவற்றின் அருவருப்பை என்னென்று சொல்வேம்! நாம் ஆராய்ந்து பார்த்த வரையில் ஒரு வரை துறையின்றி ஊன் உணவுகொண்டு அருவருப்பு மிகுந்து திரிவோர்களையே தீய பேய்கள் பற்றிக்கொள்கின்றன. இந் நிலவுலகத்தில் இருந்த காலத்து மிகவும் பொல்லாங்குடையவர் களாய், வேண்டு மட்டும் இறைச்சி தின்பதில் விருப்பம் மிகவைத்து நாளைக் கழித்து இறந்தொழிந்தவர்கள், நுண்ணுடம்பிற் சென்ற பிறகுந் தமது பொல்லா நினைவு தம்மைவிட்டு அகலாமையின் தமது அவாவினால் இழுக்கப் பட்டுப் புலால் நாற்றம் வீசும் இறைச்சிக்கடைகளைச் சுற்றித் திரிந்து கொண்டிருப்பர். அவ்வாறு திரிந்து கொண்டிருக்கும் அப்பேய்கள் தம்மைப்போலவே பொல்லாங்கு உடையவர்களாய் இறைச்சி வாங்க வருவோரைக் கண்டாற் பிடித்துக் கொள்ளும். இவ்வுண்மை, பேயாடுவோரிடத்திலேயே கேட்டுத் தெளியலாம். ஆவி வந்தேறி ஆடும்போது, “நான் கள்ளுக்கடை முடுக்கிலே இவள் மீன் வாங்கி வரும்போது இவளைப் பின்றொடர்ந்து வந்தேன்,” என்றும், “நான் இறைச்சிக் கடையிலே ஒரு மாலை வேளையில் இவளைப் பிடித்துக் கொண்டேன்,” என்றுஞ் சொல்லுஞ் சொற்கள் நாங் கூறுவதன் மெய்ம்மையைப்

புலப்படுத்தும். இத்தகைய பேய்கள் நன்னினைவும் நற் செய்கையுந் தூய்மையும் உள்ள மாதர்களிடத்தும் ஆடவரி டத்தும் அணுகக் கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை. சாக் காட்டு மந்திரஞ் செய்யும் மந்திரகாரர்கள் முன்னமே தெரிந்து கொள்ளாமல் நல்லவர்கள்மேற் கொடிய பேய்களை ஏவிவிட்ட போது. அவைகள் அந் நல்லவர்களிடம் வந்து அவர்கள் நன்னினைவுந் தூய்மையும் உள்ளவர்களாய் இருப்பதைப் பார்த்து அவர்களிடம் அணுகக் கூடாமல் திரும்பிப் போய்த் தம்மை ஏவின மந்திரகாரரையே கொன்ற வரலாறுகள் பலவற்றை நூல்களிற் கற்றறிந்திருக்கின்றேம். உலக வழக்கத்திலுங் கண்டிருக்கின்றேம். ஆகவே, தீயனவும் நல்லனவுந் தம்மை வந்து அணுகுதற்கு மக்கள் தாமே இடந் தருபராக இருக்கின் றனர். முதலிற் றீய எண்ணஞ் சிறிது கொள்வார்களானால் அதனைப் பெரிதாக்குதற்குத் தீயோர் பலர் அவரிடம் வந்து சேர்குவர்; முதன் முதல் நல்லெண்ணஞ் சிறிது கொள்வராயின் அதனையும் வலுப்படுத்து தற்கு நல்லோர் பலர் அவரிடம் வந்து சேர்ந்திடுவர். இவ்வுண்மை உலகம் எங்கும் பிறழாமல் நடைபெறுகின்றது. பாருங்கள், நிலத்தில் ஒரு சிறு எட்டி விதையை ஊன்றினால் அது தன்றன்மைக்கு இயைந்த பொருள்களையே உணவாகக் கொண்டு முளைத்து மரமாகி மிகக் கசக்கும் பல்லாயிரம் எட்டிப் பழங்களைத் தருகின்றது; அவ்வாறன்றி, ஒரு தேமாவின் விதையை ஊன்றினால் அது தன் றன்மைக்கியைந் தவற்றையே உணவாகக் கொண்டு முளை கிளம்பிப் பருமரமாகிப் பல்லாயிரந் தேமாம் பழங்களைப் பலர்க்கும் உதவித், தானும் பயன்பட்டுப் பிறரையும் மகிழ்வுறுத்து கின்றது. உயிர் வகைகளில் மிகத் தாழ்ந்த ஓரறிவுடைய மரம் முதலியவற்றிற் காணப்படும் இவ்வியற்கை ஆறறிவுடைய மக்கள் வரையிற் சிறிதும் பிறழ்ச்சியில்லாமற் காணப்படுகின்றது. இவ்வுண்மையை ஆழ்ந்து ஆராயுங்கால், உயிரோடிருப்பவர் நினைவுகளையும் உயிர் துறந்து நுண்ணுடம்புகளில் இருப்பவர் நினைவுகளையும் ஏற்றுக்கொள்ளும் இருவகைப்பட்ட தன்மை களையும் தம்மிடம் புலப்படக் காட்டும் மக்களே அந்நினைவு களால் தாம் அடையும் இன்ப துன்பங்களுக்கு உரியர் ஆதல் புலனாகாநிற்கும்.

இனி, இம் மனவெளியின் இயல்பையும் அதிற் றமது உள்ளத்தை நிறுத்தும் முறையையும் அறியா திருக்கையிலேயே

பிறவுயிர்களின் எண்ணங்கள் நமது உள்ளத்திலும், நம்முடைய எண்ணங்கள் பிறவுயிர்களின் உள்ளத்திலுஞ் சேர்ந்து தோன்றுமாயின், அவ்விரண்டுந் தெரிந்து பழகுவார்க்கு அவற்றால் வரும் பயன்கள் இவ்வளவென்று நம்மால் எடுத்துச் சொல்லல் ஏலுமோ? இம் மனவெளியானது எங்குமுள்ள வான்வெளியினும் மிக நுட்பமான தாகையால் இதில் ஒருவர் தமது உள்ளத்தை எளிதிலே நிறுத்துவது அரிது. ஏனென்றால், மக்களுடைய மனமானது எந்நேரமும் பருப்பொருளை அறிவதிலே மட்டும் பழகி வந்திருக்கின்றது. பரும்படியான பொருள்களையே அறிந்துவரும் மனம் நுண்பொருள்களை எவ்வாறு அறியும்? பருத்த பொருளைக் காணுங் கண் மிக நுண்ணிய அணுக்களைக் காண்கின்றதா? உரத்த ஓசைகளையே கேட்டுப் பழக்கம் ஏறின நஞ் செவி மிக நுண்ணிய ஒலியைக் கேட்கின்றதா? அருகிலுள்ள நாற்றத்தையே கவரும் மூக்கானது தொலைவிலுள்ள மணத்தை அறிகின்றதா? இல்லையே. இவற்றைப் போலவே இவற்றின் வழியாகப் புறப்பொருள்களை அறிந்துவரும் மனமும் இப் புறப்பொருள் களினும் நுட்பமான மனவெளியினை அறிந்து அதிற்சேர்ந்து நில்லாமற் போகின்றது. அங்ஙனமாயிற் பரும்படியாய் நிற்கும் மனத்தை நுண்ணிதாக்கி, அது நுண்ணிய மனவெளியிற் பொருந்தி நிற்கும்படி செய்யும் வகை யாதெனின்; முதலில் ஐம்பொறிகளை நுட்ப இயல்பு உடையதாம்படி பழக்கினால், அவற்றோடு ஒற்றுமைப்பட்டு நடக்கும் மனமும் நுட்ப இயல்புடையதாகும். அங்ஙனம் அவற்றைப் பழக்குமிடத்தும் மிகவும் பரும்படியான பொறியினின்று துவங்கிச் சிறிது சிறிதாக நுண்ணிய பொறிப் பழக்கம் வரையில் ஏறல் வேண்டும்.

## 4. மனவுணர்வை நுட்பமாக்கல்

நம்முடைய பொறி உணர்வுகளில் நமது உடம்பின் உணர்ச்சியே மிகவும் பரும்படியானது; வாயின் உணர்ச்சியோ உடம்பினுஞ் சிறிது நுட்பமானது; மூக்கின் உணர்ச்சியோ வாயினும் நுட்பமானது; செவியின் உணர்ச்சியோ கண்ணினும் நுட்பமானது. ஆகையால், இவற்றைப் பழக்கத் துவங்கும்போது முதலில் உடம்பிலிருந்து தொடங்கல் வேண்டும். மண், நீர், நெருப்பு, காற்று என்னும் பொருள்கள் தன்மேற் படும்போது, உடம்பினிடத்தே உணர்வு காணப்படுகின்றது. இம் மண் முதலிய நான்கு பொருள்களிலும் மண் மிகவும் பரும்படியானது, நீர் அதனினுஞ் சிறிது நுண்ணியது, நெருப்பு அதனினும் நுண்ணியது, காற்று அதனினும் நுண்ணியது. இப்பொருள்கள் மேலே படும்போது உண்டாகும் உணர்வானது வெவ்வேறு உடம்புகளில் வெவ்வேறு வகையாய் ஏறியுங் குறைந்துந் தோன்றும். எருமை மாட்டின்மேல் ஒரு பெருந் தடிகொண்டு தாக்கினாலும் அஃது அதனை ஒருபொருட்டாய் எண்ணாது. ஆனால், அப்பெருந்தடி ஒரு மெல்லிய மானின் உடம்பின்மேல் பட்டால் அஃது அதனைத் தாங்கமாட்டாமல் இறந்துபோம். ஆகவே, எருமை உடம்பின் உணர்விலும் மானுடம்பின் உணர்வானது மிகவும் நுண்ணிதென்பது பெறப்படா நிற்கும். இங்ஙனமே மக்கள் உடம்புகளிலும் உணர்வு பல்வேறு தன்மைப்பட்டுத் தோன்றுகின்றது. மட்ட அறிவு உடையவன் உடம்பு மிகவும் முரடுபட்டுக் காணப்படுகின்றது; கூரிய அறிவுள்ளவன் உடம்போமுல்லைப்பூப்போல் மிகவும் மென்மை வாய்ந்து விளங்குகின்றது. முரண்ட உடம்புள்ள மட்டி பரற் கற்கள் மேல் நடந்தாலும் அவன் அடிகள் நோகா; அவன் உடம்பு குளிருக்கு நடுங்காது, வெயிலுக்குத் தளராது, அவன் கைகள் இரும்பே; மெல்லிய உடம்பு வாய்ந்த அறிஞனோ பூமேல் நடப்பினும் அவன் அடிகள் நோம். அவன் உடம்பு

குளிரைப் பொறாது, வெயிலைத் தாங்காது; அவன் கைகளும் மற்ற உறுப்புகளும் அனிச்ச மலரினும் மெல்லியனவே. உயிர்களுக்கு அறிவு மிகுதிப் பட மிகுதிப்பட அவைகளிருக்கும் உடம்புகளும் வரவர மென்றன்மை உடையனவாகும்; அறிவு கடைசியில் மிக நுண்ணிதாய் வளர்ந்து முற்றிய பிறகு உடம்பானது காற்றினும் நொய்தாய் இந் நிலவுலகில் இயங்காமல் விசும்பில் இயங்கவல்லதாகும். இதனாலன்றோ அறிவின் மிக்க சித்தர்களும் முனிவர்களும் தேவர்களும் நிலத்தில் இயங்காமல் வான்வெளியில் உலவுகின்றனர்? ஆகவே, உடம்பின் உணர்வானது மிக நுட்பம் உடையதாம்படி செய்துகொள்வது மனத்தை ஒருவழிப்படுத்துதற்கும், அறிவை மிகுதிப்படுத்துதற்கும் உதவியான பழக்கமாகும்.

இனி, உடம்பினுஞ் சிறிது நுண்ணிய இயல்பு வாய்ந்த வாயுணர்வும் ஒருவனது அறிவின் ஏற்றக்குறைச்சலுக்கேற்பப் பல திறப்பட்டுத் தோன்றுகின்றது. மட்ட அறிவுள்ளவன் தான் உண்ணும் பண்டத்தின் சுவையையும் நேர்த்தியையும் பாராமல் தன்பசி அடங்கு மட்டுங் கஞ்சியோ கூழோ கிடைத்ததை நிரம்ப உண்ணுகின்றான். நுண்ணறிவு மிக்கவனோ தான் உண்பது சிறிதாயிருந்தாலும் அது சுவை மிக்கதாய் நறுவிதாகச் சமைக்கப் பட்டதாய் இருந்தால் மட்டுமே மனம் உவந்து உண்கின்றான். சிலர் காரம் மிக்கவற்றைக் கண்ணீர் ஒழுகவொழுக அருந்து கின்றனர்; வேறு சிலர் புளிப்புக் காடியாய் இருப்பதனைப் பார்ப்பவர் வாயுங் கூச விழுங்குகின்றனர். இவையெல்லாம் நுண்ணறிவுடையார்க்குச் சிறிதும் பொருந்தாதனவாம்; அறுசுவைப் பண்டங்களையும் அளவாக ஒவ்வொன்றையும் நன்கு சுவைத்துப் பார்த்து இன்புற்றுச் சிறிதே அருந்தி ஒழுகுவதே அவர் தமக்கு இயற்கையாம்; தித்திப்பு; துவர்ப்பு, கைப்புச் சுவையுள்ள பொருள்களை விரும்புதல்போல, அவர் புளிப்பு, கார்ப்பு, உவர்ப்புச் சுவைகளை விரும்பமாட்டார். அறிவிற் குறைந்தவர்களுக்கே புளிப்பு, கார்ப்பு, உவர்ப்புச் சுவைகள் மிகவும் வேண்டப் படுவனவாகும். ஒருவர் உண்ணும் உணவுப் பொருள்களின் அளவையும் இயற்கையையும் ஆராய்ந்து பார்த்து அவர்கள் அறிவும் இயல்பும் இப்படியிருக்கு மென்று செவ்வையாக அறிந்துகொள்ளலாம்.

பாருங்கள்! சிலர் பிற வுயிர்களின் உடம்பைச் சிதைத்துக் கொண்டுவந்த இறைச்சியை எவ்வளவு விருப்பத்தோடு உண்கின்றார்கள்! கொலைத்தொழிலாற் பிறவுயிர்கள் படுந் துன்பத்தைச் சிறிதாயினும் ஆழ்ந்தறியும் அறிவு இருந்தால் அவர்கள் அப்படிச் செய்வார்களா? ஆகையால், இறைச்சி யுண்பவர்கள் சிறிதும் அறிவில்லாதவர்கள் என்பது பெறப்படு கின்றதன்றோ? பிற வுயிர்களைக் கொன்று அவற்றின் ஊனை உண்டு பிழைக்கும் புலி, அரிமா முதலான வல்விலங்கின் கொடுமையையும் அறிவின்மையையும், புற்பூண்டு தழை வைக்கோலைத் தின்று பிழைக்கும் யானை, குதிரை, மாடு முதலிய மெல்விலங்குகளின் அமைதியையும் அறிவுடைமையையுஞ் சிறிது கருதிப் பாருங்கள்! சுவை தெரிந்து உண்ணப்படும் மெல்லிய இனிய காய்கறி உணவுகளால் உயிர்களுக்கு அறிவு மிகுதிப்படுமாகலின், வாயுணர்வினை இம்முறையால் அறிந்து நுண்ணிதாக்கவே அதனால் மனவுணர்வும் நுண்ணிதாகி மனவெளியிற் பொருந்தி முக்கால நிகழ்ச்சிகளையும் அறியவல்லதாகும்.

இனி, மூக்குணர்வும் பருப்படியாக நடைபெறவிடாமல் அதனை நுட்பப்படுத்தல் வேண்டும். இப்போது நிலஉலகில் உள்ள மக்களிற் பெரும்பாலார்க்கு இவ்வுணர்ச்சி மிகவும் மழுங்கிக் கிடக்கின்றது. மக்களினுந் தாழ்ந்த சிற்றுயிர்கள் மாட்டுக் காணப்படும் இவ்வுணர்வின் சுருசுருப்புக்கூட மக்களிடத்தில்லாமை பெரிதும் வருந்தத் தக்கதொன்றாம்! நாயானது தன் தலைவன் சென்ற வழியை மோப்பத்தால் அறிந்து அவனிடஞ் செல்கின்றது; கள்வர் திருடர் நெடுந் தொலைவில் வரும்போது அவரது வருகையை மோப்பத்தால் அறிந்து குரைக்கிறது. கண் இல்லாத எறும்புகள் மிகவுங் கருத்தாய்த் தொலைவில் வைக்கப்பட்ட நெய்க்குடுவையை மோப்பத்தால் தெரிந்துகொண்டு அதனிடஞ்சென்று அதனை மொய்த்துக் கொள்கின்றன. இங்ஙனந் தொலைவில் நிகழும் நிகழ்ச்சிகளையும் வெறு மோப்பத்தால் அறியும் ஏழையும் உயிர்களின் அறிவுகூட மக்களிடங் காணப்படாதிருக்க, இவ்வேழை மக்கள் தம்மை உயர்வாகக் கருதி இறுமாந்திருத்தல் என்ன தீவினை! தமக்குப் பின்னும் முன்னும் பக்கத்தும் வரும் இடர்களையே அறிய வலியற்றவர்களாய் இருக்கின்றார்கள்! தம்மைச் சுற்றிலும் மிகவுந் தீநாற்றஞ் சூழ்ந்து கொண்டு தம்

உயிரின் வலிவை உரிஞ்சிக் கொண்டிருக்கவும், அதனை உணராமல் மூக்குணர்வு மழுங்கிக்கிடக்கும் இவர்கள் நிலைமை மிகவும் இரங்கற்பாலது! எனவே, மூக்குணர்வினை நுட்பப்படுத்திச் சுற்றிலும் நிகழும் நிகழ்ச்சிகளை நாற்றத்தின் வாயிலாக உணர்ந்துவரின், அதனால் மனவெளி நுட்பமாகி மனவெளியைப் பொருந்தி நெடுந் தொலைவில் உள்ளவற்றையும் எளிதிலே அறியும்.

இனிக், கண்ணுணர்வினையும் பருப்பொருட் காட்சியினின்றும் மேல் எழச்செய்து நுண்பொருட் காட்சியிற் பழக்கிவரல்வேண்டும். பருப்பொருள்களான கல், மண் முதலியவற்றைக் காணுமிடத்தும், அவற்றில் மிகச் சிறிய பொருள்களை உற்றுப்பார்க்கப் பழகுக. முதலில் அழகிய சிறு கூழாங் கல்லைச் சிலநாள் உற்றுப்பார்த்தும், அதன் பிற் சிறிய மண்துகள் பொற்பொடி முதலியவற்றிற் பார்வை வைத்தும், அதன்பின் தாமரையிலைமேல் நீர்த்துளியை விட்டு அதனை நோக்கியும், அதன் பின் விளக்கின் கொழுந்தைக் கருத்தூன்றிப் பார்த்தும் இங்ஙனம் முதன் மூன்று உள்பொருள்களை நோக்கும் முகத்தாய் கண்ணுணர்வினை நுட்பப்படுத்தி வரல்வேண்டும். எல்லார்க்குங் கண்ணானது மிகச் சிறந்த உறுப்பாகையால், அதனைச் சடுதியிலே நுட்பப்படுத்த முயன்றால் பன்னாளும் பருப்பொருளிலேயே பழகிய அதனுணர்வு, திடீரென நுண் பொருட் காட்சியிற்றிரும்புதலால் மழுக்கம் அடைந்து கெட்டுப்போனாலும் போகும். ஆதலால், இதனை நுண்பொருட் காட்சியிற் பழக்குவது படிப்படியாக நிகழும்படி மிகவுங் கருத்தாக மெல்லெனச் செய்துவரல் வேண்டும். ஆனதுபற்றியே, துவக்கதிற் கல், மண் முதலான நிலத்துப் பொருள்களிலும், அதன்பின் நீர்த்துளி நெய்த்துளி முதலான நீரியற் பொருள் களிலும், அதன்பின் விளக்கொளியாகிய தீப்பொருளிலும் பழக்கி வரும்படி கூறினாம். இங்ஙனம் முதன்மூன்று பொருள்களிற் பழகி வந்தபின், கட்புலனுக்குத் தென்படாத இடைவெளியை உற்று நோக்கத் துவங்குக. புறப்பொருள்களில் இடைவெளியை உற்றுநோக்குதல் ஒன்றே கண்ணுணர் வினையும் அதன் வாயிலாக மனவுணர்வினையும் நுட்பப்படுத்துதற் குரிய மிகச் சிறந்த பழக்கமாகும் என்று உணர்மின்கள்! இவ்வாறு கண்ணுணர்வினை நுட்பப்படுத்திய பிறகு நெடுந்தொலை

விலுள்ள பருப்பொருள்களை உற்றுநோக்கவும், அதன்பின் தொலைவிலுள்ள நுண்பொருள்களை உற்றுநோக்கவும் பழகி வருக. இதிற் பழக்கம் முதிர்ந்தபின், நிலாக் காலத்து இரவில் நுண்ணிய பொருள்களை நோக்கப் பழகிவரல் வேண்டும் அதுவுங் கைவந்தபின் நிலவில்லாத இருட்காலத் திரவில் முதலிற் பருப்பொருள்களையும் அதன்பிற் சிறுபொருள் களையும், அதன்பின் மிகச்சிறிய பொருள்களையும், அதன்பின் நுண் பொருள்களையும் உற்றுநோக்கிப் பழகி வருக. இங்ஙன மெல்லாம் பழகிக் கண்ணுணர்வு நுட்பமாய் வலுப்பட்ட பின்னர், அக் கண்ணுணர்வு தொலைவிலும் அருகாமையிலும் உள்ள எவ்வகைப்பட்ட பொருள்களையுங் காண வல்லதாகும். ஏனைமக்களின் கண்ணுணர்வுக்குப் புலனாகாதனவும் இங்ஙனம் பழகினவர் கண்ணுணர்வுக்கு எளிதிற் புலனாம். இது கைவந்தவுடனே பார்வை செல்லாமற் நடுநின்று மறைக்குஞ் சுவர் மலை, காடு நாடு முதலியவற்றிற்கு அப்பாலுள்ள பொருள் களையுந் தாம் காண்பதாகத் தமது கட்பார்வையினை ஒரு முகமாக வைத்து எண்ணிவரப் பழகுக. இப் பழக்கம் முதிர்ந்தபின் அது கைவரப் பெற்றவர் ஒரு தேயத்தில் ஓரிடத்திலிருந்தே எத்தேயத்தும் எவ்விடத்தும் நிகழும் நிகழ்ச்சிகளை யெல்லாங் கண்டுணர வல்லராவர்.

இனிச், செவியுணர்வினை நுட்பப்படுத்தப் பழகுதல் கண்ணைப் பழக்குதலினும் எளிதாவதாம். கண்ணுணர்வு மிக நுண்ணிய பொருள்களைக் காணும்படி பழக்குங்கால் படிப்படியே செல்லாவிட்டால், கண்ணுறுப்புத் தன்நிலை குலைந்து கெடும். மற்றுச் செவியோ நுண் ஒலிகளைக் கேட்கும்படி பழக்கப்படுவதிற் சிறிதுங் கெடாது. ஆகையால், அருகே தோன்றும் நுண்ணொலிகளையுந் தொலைவே தோன்றும் நுட்ப ஓசைகளையுங் கருத்தூன்றிக் கேட்டலில் அச்சமின்றி யாரும் பழகலாம். ஏனையோர் செவிகளுக்குப் புலனாகாத மிக நுண்ணிய ஒலிகளையுந் தாங் கேட்பதாக எண்ணி ஒரு தொடர்பாகப் பழகிவரவே சில காலத்துள் எல்லாம், அருகிற் சில சிற்றுயிர்கள் இடும் ஒலிகளுந் தொலைவிற் றோன்றுஞ் சிற்றொலி பேரோசைகளுந் தெளிவாக வந்து செவிப் புலனிற்றோன்றும். இவ்வரிய பேறு கைவரப் பெற்றமை யினாலன்றோ தவவொழுக்கத்தில் மேம்பட்ட புலவர்

பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள தம் மாணாக்கர்களைக் குறித்துச் சிலவற்றைச் சொல்ல அச் சொற்களை நெடுந்தொலைவிலிருந்த அவர்கள் கேட்டு அவ்வாறே ஒழுகுதலும், ஒரு பெரிய இடரிலே அகப்பட்டுத் தத்தளிக்கும் ஒருவர் கூவியழுத சொற்களை நெடுந் தொலைவிலிருந்த முனிவர்கள் கேட்டு விரைந்து வந்து அவரை அவ்விடரினின்று மீட்டலும் நிகழா நிற்கின்றன. இங்ஙனஞ் செவியுணர்வு நுட்பப்படுத்தப்பட்ட வுடனே புறத்தே செயற்பாலனவாம் நுண்ணிய பழக்கங்கள் முற்றுப்பெற்றன வென்று அறிதல் வேண்டும்.

இதுகாறுங் கூறிய பொறியுணர்வுகளைப் பழக்கும் முறைகள் இவற்றிற் பழகி அறியாதார்க்குப் பழக அரியன போற் காணப்படுமாயினும், மிகவும் பருப்பொறியாகிய மெய்யினை நுண்ணிய ஊற்றுணர்விற் பழக்கத் துவங்குவார்க்கு அதனைத் துவங்கும்போதே அஃது எளிதாயும் மகிழ்ச்சி தருவதாயுங் காணப்படும். இன்னும், ஒரு பொறியுணர்வினை நுண்ணிதாக்கவே ஏனைப் பொறியுணர்வுகளுந் தாமாகவே நுண்ணிய நிலையினை அடையத் துவங்குமாகலின், ஒரு பொறியுணர்வினை நுண்ணிய நிலையிற் பழக்கியபின் ஏனைப் பொறியுணர்வுகளையும் அந்நிலையிற் கொண்டுபோய்விடுவது மிக எளிதிலே கைகூடற் பாலதொன்றாய் முடியுமென்று உணர்க. அஃது எதனாலென்றால், ஐம்பொறிகளும் வேறு வேறியற்கை யுடையனவாயிருப்பினும், அவ்வைம்பொறிகளினுஞ் சேர்ந்து நின்று அறியும் மனவுணர்வு ஒருகாற் பதப்படத் துவங்கியபின், ஏனைப் பொறிகளின் வழியேயும் அது பின்னும் பின்னும் பதமெய்துதல் எளிதிலே கைகூடி வருதனா லென்றுணர்க. இனி, ஐம்பொறி யுணர்வுகளொடு கூடிய மனவுணர்வினை ஒருகாலத்து ஓரிடத்து வைத்தே நுட்பப் படுத்தி அவ்வாற்றால் எல்லாவுணர்வுகளையும் ஒருங்கே நுட்பமாக்கும் அரசியற் றவமுறை, மெய்க் குரவனை எதிர்ப்பட்டு அவனறிவுக்கும் அறிவுமொழி பெறும் நல்வினை வாய்ந்த மிக முறுகிய மனநிலை யுடைய மாணாக்கருக்கன்றி ஏனையோர்க்கு வாயாதாகலின், யாம் ஈண்டு எடுத்துக் கூறிய முறைகளே எத்திறத்தவரும் படிப்படியே பழகித் தம்முணர்வு களை நுட்பப்படுத்திப் பயன் பெறுதற்கு ஏற்பனவாமென்று

கடைப்பிடிக்க, இங்ஙனம் மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும் ஐம்பொறிகளின் வழியே புறத்துச்செல்லும் மனவுணர் வினை நுட்பம் ஆக்கியபின், அகத்தே செல்லுங்காலும் அது மேலு மேலும் நுட்பமாகும் படி அதனைப் பழக்கி வருதல் வேண்டும். அகத்தே மனவுணர்வு நடைபெறுங்காலத்து அஃது அமைதியுற்று நுணுகாமல், வருத்தங், கவலை, அச்சஞ், சினம், பொறாமை, அவா முதலான பல தீய தன்மைகளால் தாக்கப் பட்டு, நிலைகலங்கி வலிவுகுன்றிப் போகின்றது. இவ்விழிந்த தன்மைகளின் இயல்பையும் இவற்றின் சேர்க்கையால் ஆவியின் வலிவு குறைந்து போதலையும் யோகநித்திரையைப் பற்றிப் பேசிய எமது நூலில் மிக விரித்து விளக்கியிருக்கின்றேன்; அவற்றை அணுகவிடாமல் உள்ளத்தை ஒருநிலைப் படுத்தும் வகை யினையும் அங்கே காட்டியிருக்கின்றேம். அம் முறைகளை நன்றாக நினைவில் இருத்தி அவற்றின்படி நடந்துவரின் மிக எளிதிலே உள்ளமானது ஒருநிலைப்படும். இன்னும் **மனிதவசியம்** என்னும் எனது நூலிலும் 'நினைவை ஒரு வழி நிறுத்தல்' என்னுந் தலைப்பின் கீழ்ச் சொல்லிய முறைகளும் பெரிதும் நினைவு கூர்ந்து பழகற் பாலனவாம்.

இனி, இவ்விடத்தும் இதற்குரிய முறைகள் சிலவற்றை எடுத்துக் கூறுவாம்; இழிந்த தன்மைகளுள் எதுவும் வந்து நுழைய வொட்டாமல், எந்நேரமும் நமது உள்ளத்தை நல்நினை விற்கு இடமாம்படி செய்தல் வேண்டும் தெளிந்தோடும் ஒர் யாற்றுநீரானது, சாக்கடை நீரின் சேர்க்கையால் அழுக்குற்று அருவருக்கத் தக்கதாய் விடுதலும், மலைப் பாறைகளிலிருந்து முத்து முறியென ஓடிவரும் இனிய நீரின் கலப்பால் மிகத் தெளிந்து விளங்குதலும் போலத், தீய நினைவுகளின் சேர்க்கையால் தெளிவான உள்ளமும் அழுக்குப்பட்டுக் கலங்கலாதலும், நல்நினைவுகளின் கூட்டுறவால் அது மேலுமேலுந் தூய்மை எய்தி விளங்குதலும் நேர்கின்றன. முடைநாற்றம் வீசுந் தீய பொருளொடு கூடிக் கலங்கல் அடைந்த நீர் தன்னை அடுத்துள்ள பொருள்களையுந் தன்கண்ணே காட்டமாட்டாது; அதுபோலத் தீய நினைவின் வழிப்பட்டுக் கலங்கல் எய்திய உள்ளத்திற்கும் அருகே நிகழும் எண்ணங்களுந் தோன்றாது மறையும். அதுவேயுமன்றி அது நினைவுவலிமையினையும் வரவர இழந்துவிடும். அங்ஙனமின்றி, நன்னினைவொடு பொருந்தி நின்ற உள்ளமோ தெளிவுபெற்று

நிற்றலால், அதன்கண் அடுத்து நிகழும் எண்ணங்கள் மட்டுமேயன்றி மிகவுந் தொலைவிற் றோன்றும் எண்ணங்களும் விரைவிலே வந்து தோன்றாநிற்கும்; முற்காலத்தும் இக் காலத்தும் இனிவருங் காலத்தும் நிகழும் நிகழ்ச்சிகள் அத்தனையுந் தெளிவுள்ளம் உள்ளவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெற்றென விளங்கா நிற்கும். ஆகையால், இத்துணைச் சிறந்த முக்கால வுணர்ச்சியாகிய அரும்பெரும் பேற்றை அடைய விரும்பும் நல்வினையுடையார் ஒவ்வொரு வருந் தமது மனத்தைத் தெளிவுபட வைத்தலாகிய அரும்பெரு முயற்சியை அடுத்தடுத்துச் செய்துவரல் வேண்டும்.

இனி, நன்னினைவின்வழியே உள்ளத்தை வைத்துப் பழக்கும் முறைதான் யாதோவெனின்; அதனையும் ஒரு சிறிது இங்கே விளக்கிக் காட்டுவாம். இன்பந் தராத நினைவுகளைப் பற்றிநிற்கும்படி மனத்தை ஏவினால் அதற்கு அஃது எளிதிலே மடங்கி நில்லாமல் வருத்தத்தை விளைவிப்பதோடு, இத்தன்மையவான பழக்கங்களில் அவனுக்கு வெறுப்பினையும் பின்னர்த் தோற்றுவிக்கும். ஆகவே, அதனை அங்ஙனம் பழக்குவதற்கு முயலல் ஆகாது. இயல்பாகவே அஃது எந்த நன்னினைவை மகிழ்வொடு பற்றி நிற்குமோ அதனை அறிந்து அதன்கண்ணே அதனைப் படிவித்தல் வேண்டும். அங்ஙனம் அஃது இயல்பாகப் பற்றி நிற்கும் நினைவுகள் தாம் யாவையோவெனின், அவை அதற்கு ஆரா மகிழ்ச்சியினையும் பெருங்களிப்பினையுந் தோற்றுவிப்பனவேயாம் என்க. மகிழ்வினையும் உள்ளக் கிளர்ச்சியினையும் ஒவ்வொருவர்க்கு ஒவ்வொரு வகையாற் பிறப்பிக்கும் நன்னினைவுகள் பற்பல இருப்பினும், அவை எல்லாவற்றுள்ளும் அழகு, அறிவு, அன்பு என்னும் மூன்று தன்மைகளைப் பற்றிய நன்னினைவுகளே எல்லார்க்கும் எவ்விடத்தும் எக்காலத்தும் பெருங் களிப்பினைத் தருவனவாமென்பது அனைவரானும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையேயாம். அழகு முதிரச் சலவைக்கல்லில் திருத்திய ஓர் அரிய வடிவத்தையேனும், இயற்கை நிறங்கள் முகிழ்த்துத் தோன்ற ஓவியக்காரன் முனைப்பாகத் தீட்டிய ஓர் இனிய ஓவியத்தின் உருவத்தையேனும், அழகு கனிந்தொழுக உலவுஞ் சிறுவர் சிறுமியரையேனுங் கண்டு களிப்படையாதார் உளரோ? அமைந்து நிரம்பின கல்வியுடையோன் தோண்டுந்தோறுஞ்

சுரக்குஞ் தெண்சுவைத் தண்ணீரைப்போல் நூற்பொருளை எடுத்து உரைக்குந்தோறும் விரிந்து விரிந்து புலப்படாநின்ற அறிவின் அருமை பெருமைகளைக் கண்டு வியந்து மகிழாதாருண்டோ? எல்லா உயிர்களிடத்துங் கரைகடந்த இரக்கம் உடையோனாய் அவற்றின் துயர்கண்டு பொறாமல் தன்னை வருத்தியேனும் அப்பிறவுயிரின் துன்பந் துடைத்து, அருளொழுக்கமே தன் உயிரொழுக்கமாய் மேற்கொண்டு, இங்ஙனம் எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் எழப் பெற்றமையானே இளகிய மென்னெஞ்சொடு எல்லாம்வல்ல இறைவனிடத்தே என்பெலாம் நெக்கு நெக்குருகி ஒன்று பட்டு நிற்கும் பெரியோன் அன்பிற்றிறத்தைக் கண்டு பிறிது பட்டு அன்புடையராகாரும் உண்டோ? சொல்லுமின்! எனவே அழகு, அறிவு, அன்பு என்னும் மூன்றினையும் பற்றி நினைக்குமிடத் தெல்லாம் மக்களெல்லார்க்கும் இயற்கையாகவே மகிழ்ச்சி எழ, அவர் உள்ளமும் எளிதிலே அந்நினைவின் வழிப்பட்டு நிற்றலால் இம்முறையால் உள்ளத்தைத் தெளிவுபெறச் செய்தலே எளிதான முறையாமென்பது இனிது பெறப்படும்.

இனி, அழகு அறிவு அன்பு என்னும் மூன்றும் பண்புகளே யன்றிப் பண்புகளையுடைய பொருள்கள் அல்ல. பண்புகளை எவ்வளவுதான் நினைப்பினும் அவை மக்கள் உள்ளத்திற்குப் புலப்படமாட்டா. பண்புகளை நினைக்கப் புகுந்தால், அப் பண்புகள் தோன்றாமல் அப் பண்புகளையுடைய பொருளே நினைவில் வந்து தோன்றும். முல்லைப் பூவின் மணத்தை நினைக்கப்புகுந்தால் அந்த மணம் மட்டும் நினைவுக்கு வராமல் தன்னையுடைய பூவொடு கூடியே அது நினைவில் எழும். வாழைக்கனியின் சுவையை நினைக்கப்புகுந்தால் அச்சுவை மட்டுந் தனித்து நினைவில் எழாமல் அது தன்னையுடைய அக் கனியொடு கூடியே நினைவிற்றோன்றாநிற்கும். மேலும், முல்லைப்பூவின் மணமும் வாழைக்கனியின் சுவையும் அப்பொருள்களைத் துய்த்துப் பார்ப்பவர்க்கே யல்லாமல் மற்றையர்க்குச் சிறிதும் விளங்க மாட்டா; ஏனென்றால் அந்த மணமும் அந்தச் சுவையும் முல்லை வாழை என்னும் அப்பொருள்களின் வழியாகவன்றி வேறு தனித்து நின்று துய்க்கப்படுதல் எங்கும் இல்லை. இதுபோலவே, அழகு என்னும் பண்பை நினைக்கப்புகுந்தால், அப் பண்பு தனித்து நில்லாத தொன்றாகையால் அதனையுடைய

ஏதேனுமொரு பொருளையே நினைக்க வேண்டிவரும்; அறிவு என்னும் பண்பை நினைக்கப் புகுந்தால் அதுவுந் தனித்து நில்லாத பண்பேயாகலின் அதனையுடைய அறிஞன் ஒருவனையே நினைக்கவேண்டி வரும்; இங்ஙனமே அன்பு என்னும் பண்புந் தனியே நினைக்கப்படுவ தல்லாமையால் அதனை நினைக்குமிடத்தெல்லாம் அன்புள்ள ஒருவனையே நினைக்க வேண்டி வரும் என்க. அதுவேயுமன்றிப், பண்பு பண்பையுடைய பொருளும் எவ்வாற்றானும் பிரிவுபடாமல் ஒன்றுபட்டே நிற்கும் இயல்புவாய்ந்தனவாம்; பண்பு அழிந்தால் அதனோடு ஒன்றாயுள்ள பண்பியும் அழியும், பண்பியழிந்தால் அதனின் வேறல்லாத பண்பும் அழியும். ஆகவே, பண்பிப் பொருளினும் பண்பே நுண்ணியதாகலின் அப் பண்பை மட்டுமே நினைவிற்குக் கொண்டுவர முயல்வே மென்றுங், கடவுளை முகங்கைகால் முதலான உறுப்புகளுடைய ஓர் உருவப் பண்பிப் பொருளாக வைத்து வணங்கக் கடவேம் அல்லமென்றும் உரைப்பார் உரை ஒரு சிறிதும் பொருந்த மாட்டாதென் றுணர்க. பண்புகளை நினைக்கப் புகுவார் எல்லார்க்கும் அப் பண்புகளின் வேறல்லாத பொருள் உடனே நினைவிலெழுப் பெறுதல் மாறா இயற்கையாக இருத்தலின், மிக நுண்ணிய பண்பு நிலையில் வைத்துக் கடவுளை வழிபடுவே மென்பார்க்கும் அப் பண்புகள் திரண்ட பிழம்பான கடவுளின் றிருவுருவம் அவருள்ளத்தில் தோன்றாமற் போதல் இல்லை யென்க. பண்பென்றும் பண்பியென்றும் வேறு பகுத்துணர்தற் கியலாமற் பிரிவின்றி நிற்கும் ஒரு பொருளிற் பண்பை மட்டும் நினைக்கப் புகுவேம் என்றும், பண்பியை மட்டும் நினைக்கப் புகுவேமென்றுந் தமக்குத் தோன்றியவாறெல்லாம் பொருளினி யற்கைக்கு மாறாகப் பேசுவோர் உண்மை தெரியமாட்டாத மடவோரே யாவர். அங்ஙனமன்று, பண்பு பண்பியினின்று பிரியாதாயினும், நினைவின்கண் அதனைப் பிரித்து நினைக்க மாட்டுவே மெனின்; எப்பொருள் எத்தன்மையதாயிருக்கின்றது, அப் பொருளை அத்தன்மைபட நினைதலே மெய்ந் நினைவு அல்லது ‘சத்தியபாவனை’ யென்று சொல்லப்படும்; இவ்வா றன்றி ஒரு பொருளை அப்பொருளின் கண் நிகழாத நிகழ்ச்சி பற்றி நினைப்பது பொய்ந் நினைவு அல்லது ‘அசத்தியபாவனை’ யென்று சொல்லப்படும். இனி, மெய்ந் நினைவு உண்மையான

மெய்ப்பயன்களைத் தருவது போலப், பொய்ந் நினைவு மெய்ப் பயன்களைத் தராது பொய் படுமாகலின், கடவுளை வெறும் பண்பளவாகக் கொண்டு வழிபடுவே மென்பார்க்கு, அவரது வழிபாடு கடவுளியல்பொடு மாறுபட்ட பொய்வழிபாடாய்ப் போதலின், அவர் அப்பொய் வழிபாட்டால் இம்மை மறுமைப் பயன்களில் ஒரு தினைத்தனையும் பெறாரென்பதே முடிபு. ஆகவே, இவ்வியல்பினரான பொய்யறிவினர் இறுமாந்து உரைக்கும் பொய்யுரை ஈண்டுக் கருதற்பால தன்றென விடுக்க, எனவே, அழகு அறிவு அன்பு என்னும் பண்புகளை நினைக்கப் புகுந்தால் அப் பண்புகளையுடைய பொருள்கள் தாமே நினைவிற் றோன்றும் என்று உணர்க.

இனி, அழகு என்பது பெரும்பாலுங் கண்ணறிவைப் பற்றி நிற்கும் ஓர் இனிய தன்மையாகும்; இஃது ஏதேனும் ஒரு பொருளைப் பற்றி நிற்பதன்றித் தனித்து நில்லா தாகையால், இதனை நினைவுக்குக் கொண்டுவருமிடத்தும் இது பற்றி நிற்கும் பொருள்களையே நினைத்துப் பார்க்கப் பழகிவரல் வேண்டும். வான் அளாவித்தோன்றும் மலைகளை யேனும், எல்லையின்றி விரிந்து கிடக்குங் கடலையேனும், மடமான் தொகுதிகள் அச்சமின்றி யுலவுங் காடுகளையேனும், இன்னும் இவைபோன்ற நிலத் தோற்றங்களையேனும் நினைவிற் கொண்டுவந்து பயிலல் வேண்டும். இங்ஙனஞ் சில நாட்கள் பழகிய பிறகு திருத்தமாகச் செய்யப்பட்ட கல்வடிவுகளையும், அருமையாக வரையப்பட்ட ஓவியங்களையும் அகக் கண் எதிரே கொண்டுவந்து நோக்குக. அதன் பின்னர் அழகின் மிக்க ஆடவர் மகளிர் என்னும் இருதிறத்தாரில் எவரையேனும் அடிக்கடி நினைவிற் கொண்டுவருக. உயிரில்லாத ஏனைத் தோற்றங்களை அகக்கண்ணிற் பார்க்கும் பழக்கத்தினும், உயிரொடு கூடிய உருவங்களை நினைக்கும் பழக்கமே சிறந்ததாகும்; இனிஉயிரொடு கூடிய உருவங்களுள்ளும், அறிவில் மிக்கவற்றின் உருவங்களை நினைத்தலே மிகச் சிறந்ததாகும்; இனி அறிவின் மிக்க உயிர் வடிவங்களினும் அவ்வறிவோடு அன்பும் மிக்க உயிர் வடிவங்களை நினைவிற்கொண்டு வருதலே அதனினும் மிகச் சிறந்த பழக்கமாகும். அழகு அறிவு அன்பு என்னும் மூன்றொடு தெய்வத் தன்மையும் வாய்ந்த உயிர் வடிவை உணர்ந்து இன்புறுவது அதனினும் மிகச் சிறந்த பழக்கமாகும்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவுருவம், அழகு அறிவு அன்பு என்னும் மூன்று தன்மைகளொடு குழந்தைப் பொழுதே எல்லா அறிவும் முதன்மையும் நிரம்பின தெய்வத் தன்மையும் பொருந்தப்பெற்ற விழுப்பம் உடையதாகலின், அவ்வருமைத் திருவுருவை இடையறாது நினைவிற் கொண்டு வந்து பழகும் நற்பெரும் பழக்கம் மனவுணர்வை நுட்ப மாக்குதற்கு மிக இயைந்த தொன்றாமென்பது கடைப்பிடிக்க.

இனி, எல்லையற்ற அழகும், எல்லையற்ற அறிவும், எல்லையற்ற இன்பமும் உடைய உயிர்ப்பொருள் கடவுளை யன்றி வேறொன்றும் இல்லையென்பது திண்ணமாகலானுங், குற்றம் என்பது அணுத்துணையும் இல்லாத அறிவுடைய உயிர் கடவுள் ஒன்றே என்னும் உண்மை எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாகலானுந், தமதுணர்வை மிகவும் நுண்ணிதாக்க வேண்டும் என்னுங் கருத்துடையார் எல்லாருங் கடவுளின் திருவருளுருவை எந்நேரமும் ஒழிவின்றி நினைவுகூர்ந்து வரல் வேண்டும். இங்ஙனம் நினைக்குங்காலும் அவ்வருளுருவை எல்லா அழகும் எல்லா அறிவும் எல்லா இன்பமும் நிறைந்து ஒளிதுளும்புந் திருந்திய வடிவினதாக நினைந்து, அந் நினை வின்கட் பெரிதும் இன்புறுதற்குப் பழகுக. இப் பழக்கங் கைவந்து உயிரின் நினைவு அதிற்றோய்ந்து அவ்வண்ணமாயபின் எக்காலத்து நிகழ்ச்சிகளையும் எவ்வுலகத்து நிகழ்ச்சிகளையும் அஃது எளிதிலே ஒருங்குணர வல்லதாகும். இவ்வருளுருவ வழிபாட்டில் தலை நின்றவர் யாவரே யாயினும் அவர் அழகு அறிவு அன்பு என்னும் அவ்வருமைத் தன்மைகள் நிறையப் பெற்றவராய்த் துலங்குவர். பண்பும் பண்பையுடைய பொருளுந் தம்முட் சிறிதும் பிரிதல் இல்லாத தற்கிழமைப் பொருத்த முடையன வென்றும், அவற்றுள் ஒன்றை நினைக்கவே மற்றொன்றுந் தானாகவே நினைவில் எழுமென்றும் முன்னரே நன்கு விளக்கிக் காட்டின மாகலின், அவ் வருளுருவத்தைப் பற்றிய நினைவானது தன்னுட் பொதிந்த அவ்வருமை இயல்புகளைத் தானே தோற்றுவிக்கு மென்பது மறுக்க ஏலாத உண்மை நிகழ்ச்சியேயாகும். இக் காலத்து உளநூற் புலவர்கள் ஆராய்ந் துரைக்கும் முடிபுகளும் பொருளை நினைக்கும் நினைவு அப்பொருட் பண்புகளையும் உடனே தோற்றுவிக்குமென நாட்டுகின்றன. அறிஞரான ஜிபோட்டோ என்னுந் துரைமகனார்

தொலைவிலுணரும் நிகழ்ச்சிகளைப் பற்றித் தாம் ஆராய்ந்த பலவற்றுள் ஒன்றைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:-

"பி. என்னும் பெருமாட்டியார் தமக்குள்ள தலைநோயைப் பற்றி என்னிடம் முறையிட்டார். யான் எனது கையை அவ் வம்மையாரின் நெற்றிமேல் வைத்தேன், சில நேரங் களிலெல்லாம் அவர் ஓர் இழைந்த அறிதுயில் வரப்பெற்றார்; அவ்வுறக்கத்தை மிகுதிப்படுத்தாமலே யான் அவரிடத்தில் அமைதியையும் நலத்தையும் பற்றிய உணர்வை எழுப்ப முயன்றேன்; அதற்கு, முதலில் என்னிடத்தே அவ்வுணர்வை எழுப்புவித்துக் கொள்ள வேண்டிக், காற்றுந் தண்ணீரும் பகல் வெளிச்சமும் நிரம்பி விளக்குங் கடற் காட்சியினை என் நினைவிற் கொண்டுவந்தேன். அங்ஙனம் யான் என்னுள் உணரத் துவங்கிய வுடனே, அம் மாதரார் 'யான் இப்போது சிறிது நலமாயிருப்பதாக உணர்கின்றேன்; காற்று எவ்வளவு குளிர்ச்சியா யிருக்கின்றது!' என்று கூறினார். அதன்பிறகு யான் பூல்வார்டு செயிண்டு மிக்கல் என்னும் இடத்திற் சிறிது துளிக்கும் மழையில் நடப்பதாக என்னுள் எண்ணப் புகுந்தேன்; அவ்வாறு எண்ணவே, விரைந்து செல்லும் மக்களையுங் குடைகளையும் என்னுட் காண்பே னாயினேன். உடனே அந்த அம்மையார் 'ஈது என்ன புதுமையா யிருக்கின்றது! யான் பூல்வார்டு செயிண்டு மிக்கல் என்பதன் கோடியில் இருப்பதாக எனக்கு ஒரு தோற்றமுண்டாகின்றது. மழை பெய்கிறது; மக்கள் மிகுதியாயிருக்கிறார்கள்; கூட்டமாய் விரைந்து செல்லுகிறார்கள். அவர்களெல்லாருந் தெருவின் மேற் செல்லு கிறார்கள்; யானும் அவர்களொடு செல்லுகிறேன். காற்று மிகவுங் குளிர்ச்சியாயிருக்கிறது. அஃது எனக்கு இனிய இளைப்பாறும் உணர்வைத் தருகின்றது;' என்றார். இச் சொற்களைக் கூறிய பிறகு அவர் தங் கண்களைத் திறந்தார்; தம் மனத்திற் பதிந்த அவற்றைப் பற்றிப் பின்னும் உறுதியுரை மொழிந்தார்." இங்ஙனமே இத் துரைமகனார் தம்மால் உறங்கச் செய்விக்கப்பட்ட பலரிடத்துத் தாம்நினைந்த நினைவுகள் நினைந்த அளவில் தோன்றும்படி செய்து ஆராய்ந்து பார்த்த ஆராய்ச்சிகள் பல; இத்துரை மகனாரைப் போலவே இன்னும் பலரும் இவ்வாறே ஆராய்ந்து பார்த்து வருகின்றார்கள். இவ்வாராய்ச்சியில், அமைதியுங் குளிர்ந்த காற்றின் உலவுதலும் வாய்ந்த கடற்காட்சியாகிய ஒரு பொருளின் றோற்றத்தை

நினைந்த அளவானே, அப் பொருட்டன்மைகளான அமைதியுங் குளிர்ச்சியும் அறிதுயிலில் அமர்ந்திருந்த அம் மாதரார்பாற் றோன்றிய உண்மை நிகழ்ச்சி பெரிதும் உற்றறியற் பாலதாம். எனவே, பொருளை நினைக்கும் நினைவு அப்பொருட் டன்மைகளையுந் தானே தோற்றுவிக்குமென்று யாம் முன்னே கூறியவுரை மறுக்கலாகாத மெய்யுரையே யாமென்பது புலப்படுகின்ற தன்றோ? உயர்ந்த பொருட்டன்மைகளைத் தம்மிடத்து வருவித்து அவற்றைத் தம் வழிப்படுத்திக் கொள்ள அவாவும் நன்மக்கள் எல்லாரும், அப் பொருள்களை ஓவாது நினைவுகூர்ந்து வருதல் இன்றியமையாத பழக்கமாகும். இதனை விடுத்து நினைக்க வராத பண்புகளை மட்டுமே நினைக்கக் கடவேமென்று மயக்கவுரை கூறி அம் மயக்கவுரையாற் பிறரை ஏமாற்றி ஒழுகுவார் சொற்களை நம்பிப் பொருள் நினைவை விட்டு இம்மை மறுமைப் பயன்களை இழக்கும் பொய்ந் நெறியிற் செல்லா வண்ணந் தம்மைப் பாதுகாக்க வேண்டுவது ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாத கடமையாம்.

இதுகாறும், விழித்திருக்கும்போது மனவுணர்வை நுட்ப மாக்குதற்கு இசைந்த பழக்கங்களையே விளக்கிக் காட்டினாம் இனித், துயிலும் போதும் அதனை நுட்பமாக்குதற்குரிய வழிவகைகளைப்பற்றிப் பேசப் போகின்றாம். பெரும்பாலும் பாதி நாள் நமக்குத் தூக்கத்திலே கழிந்து போகின்றது. தூக்கத்திற் சென்றவுடனே உயிர்களெல்லாம் அறிவிழந்து உயிரற்ற கற்போற் கிடக்கின்றன. தூக்கத்திலே, இன்னதென்று சொல்லுதற்குக் கூடாத ஒரு பேரிருள் நமதறிவை வந்து சூழ்ந்து கொள்ளுதலை மட்டும் வழக்கத்தில் அறிந்திருக்கின்றோம். இத்தகைய தூக்கமானது ஒவ்வொரு நாளின் இராப்பொழுதிலும் நமதறிவை வந்து விழுங்க, அதனால், விழுங்கப்பட்டு அதன் வயிற்றகத்தே செயலின்றிக் கிடக்கும் நாம். அங்கே உடனிருந்து உதவுங் கடவுளின் திருவருளால் திரும்பத் திரும்ப எழுப்பப் பட்டு விழித்துக்கொள்கின்றோம். இங்ஙனம் நாடோறும் இப் பேரிருளிற் போய்த் தங்கியிருந்து வருதலினாலேதான், பகற் காலத்தில் நாம் மிக முயன்று தேடிய நம் அறிவிற்பெரும்பாகத்தை நாள் ஏற நாள் ஏற இழந்து வருகின்றோம். பகலிற்றேடிய அரிய அறிவுப் பொருட்டிரளை இரவிற் றூக்கமாகிய எல்லையற்ற

இருளிலே கொண்டு போய்ச் சொரிந்து, பின்னர் அப் பொருள் முழுதுஞ் சொரிந்தவிடந் தெரியாமையால் முழுதுமெடுக்க ஏலாமற், சிறிது சிறிதே கைக்கொண்டு வருகின்றோம். விழித்திருக்கையிற் றுலக்கப்படுகின்ற நமதுயிரின் அறிவு மறுபடியும் தூங்குகையில் அப்பேரிருட் சாயலால் மங்கிப் போகின்றது. இதனாலேதான் மக்களுயிர்க்கு மறதித்தன்மை மிகுந்து காணப்படுகின்றது. ஊசி நுனையை உடம்பினுள்ளே அழுந்தச் செருகினாலும் அதனை அறியமாட்டாத அத்துணை அறியாமையொடு மெய்ம்மறந்து தூங்குகின்றவனுக்கு, விழித் திருந்தாலும் அறிவு கூர்மையுற்று விளங்காது, அவ்விடத்தே மறதித் தன்மை மிக வேரூன்றி நிற்கும் இவ்வாறு இயற்கையிலேயே அறிவிழத்தற்கு ஏதுவான அறியாமைத் துயில் எல்லா வுயிர்களிடத்தும் நிறைந்திருப்பினும், அதனை நீக்கிக்கொள்ளும் நன்முயற்சி மக்களுயிர்கள் மாட்டு மட்டுமே காணப்படுகின்றது; அங்ஙனம் மிக அரிதிற் காணப்படும் அந் நன்முயற்சியினையுங், கட்குடித்துஞ் சாராயம் மாந்தியுங் கஞ்சா அவின் தின்றும் எந்நேரமும் ஒழிவின்றிப் போக்கித், தமதறிவை மீளா இருளில் முழுகுவிக்கும் மாந்தரின் தீய புன்செயல் நிரம்பவும் அருவருக்கற் பாலதாகும். அந்தோ! இவர் தமது புல்லறிவு கொண்டு தம்மைக் கடைப்பட்ட விலங்குகளினுங் கடைப்பட்டவராக ஆக்கிக்கொள்வது கண்டு எவர்தாம் அவர் தன்மைக்கு இரங்காமற் போவர்? இயற்கையிலேயே உயிரது அறிவின் வலியை உரிஞ்சும் வல்லிருள் உயிர்களின் உள்ளத்தே அமைந்திருக்கத், திருவருளுதவியாற் சிற்சில பொழுதுகளேனும் விளங்காநின்ற சிறிய அறிவை அது தானும் விளங்கவொட்டாது கள்ளானுங் கஞ்சாவானும் மயங்கச்செய்யும் மாந்தர் ஏதுக்குத்தான் இம் மக்களுடம்பிற் பிறந்தனரோ அறிகிலம். அருட்களஞ்சியமாகிய ஆண்டவன் செயலால் விழித்திருக்கும் போது விரிந்து விளங்கும் இச்சிறிய அறிவின் உதவியைக் கள்சாராயங் கஞ்சா அவின் முதலான மயக்கப் பொருள்களாற் பாழாக்கிவிடாது, அதனைப் பண்படுத்தி அவ்வழியே சென்று தூக்கத்திலுள்ள அறியாமை வல்லிருளைத் தொலைக்க வகை தேடுதல் மக்கட்பிறவி யெடுத்தார் செய்தற்குரிய பயன்படு செய்கையாம்.

அவ்வாறாயின், தூக்கத்திலும் அறிவு நிகழும்படி செய்யவே, உயிர்களுக்கு இளைப்பாறுதல் இல்லையாய் ஒழியும்; அஃதொழியவே, உடம்பு நிலைகுலைந்து நோய்மிகும். ஆகையால், இஃது உயிர்களுக்கு அறிவு மிகுத்தற்குரிய வழியாதல் யாங்ஙனம் எனிற்; கூறுதும். தூக்கம் என்பது உயிர்கள் இளைப்பாறுதற்கு அமைந்த நிலையேயல்லாமல், அவைகள் அறிவிழந்து கிடத்தற்காக வந்ததன்று. அறிவிழந்து கிடப்பதனாலேதான் உயிர்களுக்கு இளைப்பாறுதல் கூடுமென நினைப்பது பெரும் பிழை. அறிவிழந்த நிலையே இளைப்பாறுதல் ஆகுமென்று உரைப்பின் அறிவே இல்லாத கல் மண் முதலியன எப்பொழுதும் இளைப்பாறுகின்றனவென்றும் அவற்றின் நிலை உயிர்களின் நிலையைவிட மிகச் சிறந்த தாகுமென்றும் அன்றோ கூறுதல் வேண்டும்? அங்ஙனங் கூறுதல் பொருந்தாமையின், அறிவிழப்புக்கும் இளைப்பாறு தலுக்குஞ் சிறிதும் இயைபில்லையென்பது தெள்ளிதிற் பெறப்படும்.

அவ்வாறாயின், இளைப்பாறுதல் இன்னதென்பதும், தூக்கம் இன்னதென்பதும், ஒருசிறிது விளக்கிக்காட்டுக வெனிற்; காட்டுகின்றாம். நாள் முழுதுஞ் செலவு செய்யப்பெற்ற அறிவு விழைவு செயல்களின் முயற்சியால் உடம்பிலுள்ள ஆவி வலிமை கழிந்துபோகின்றது; கழிந்துபோன அதனைத்திரும்பவும் உடம்பில் உண்டாக்கிக் கொள்வதற்குச் சும்மாயிருப்பதாகிய நிலையே இளைப்பாறுதல் என்று சொல்லப்படும். நாம் நம்முடைய முயற்சிகளைக் கழிந்து போக விடாமற் சிலநாழிகை நேரமேனும் வறிதே இருப்பமாயின், நம்முயிரிலும் உடம்பிலுங் கலந்து நின்று உதவிவரும் இறைவ னருளாற்றலானது நமக்கு வேண்டும். ஆவி வலிமையினை உடனே அவற்றில் நிரப்பிவிடும். நீர் வருங்காலும் வடிகாலும் உடைய ஓர் ஏரியானது ஓயாமல் வடிகாலின் வழியே தண்ணீரை ஒழுகவிட்டுக் கொண்டிருக்கு மாயின், அதன்கண் நீர் நிறைந்திராதென்னும் உண்மை எவரும் அறிந்ததேயாம்! நிலத்திற்கு வேண்டுமளவு நீரைப் போகவிட்டு வடிகாலை அடைத்துவைத்தால் அது வருங்காலின் வழியே மிகுந்த நீரைப்பெற்று நிறைந்திருந்து, பின்னரும் வேண்டும்போது விளை புலங்களுக்கு நீரைக் கொடுத்துப் பயன்படும். அதுபோலவே, நாம் இடையிடையே இளைப்பாறுவதனால், முன்னே செலவு செய்யப்பட்ட ஆவிவலியானது திரும்பத் திரும்ப நம்முள்

நிறைக்கப்பட்டுப் பின்னும் பின்னும் நாம் வேண்டிய முயற்சிகளைச் செய்தற்கு நம்மை வலிவுடையவராக்கி வரும்.

அங்ஙனம் இளைப்பாறுதல் இன்றி ஓயாமல் முயல்வதிலேயே ஆவியைச் செலவழித்து வந்தால் முதுமைப் பொழுதாகிய வேனிற்காலம் வரும் முன்னமே ஆவிவலிமை முழுதும் வறண்டு உயிரை உடம்பினின்றும் அகலச் செய்யும். ஆனது பற்றியே, இரவில் இளைப்பாற்று தற்பொருட்டு உயிர் களுக்குத் தூக்கம் வருகின்றது. இனித், தூக்கமோ அறியாமையில் நடைபெறுகின்றதல்லாமல், அறிவொடு சிறிதும் நடைபெறக் காணோம். அங்ஙனமாயின், இளைப்பாறுதல் என்பது அறியாமை யிற்றான் நிகழவேண்டுவதுபோலும் எனின், அது பொருந்தாது. தொழில் செய்து அலுத்துப்போனவர்கள் அறிவோடிருந்து இளைப்பாறுதலையும் நாம் பார்த்திருக்கின்றோமே. இன்பமான கதையைப் பிறர் ஒருவர் எடுத்துச்சொல்ல அதனைக் கேட்டு மகிழ்ந்து கொண்டே, வேலை செய்ததனால் உண்டான இளைப்புத் தீர்ந்து தொழிலாளிகள் மனக்கிளர்ச்சியோடுஞ் செல்வதை நாம் எப்போதும் பார்க்கலாமே. இன்பத்திலே நம தறிவு உறைத்து நிற்கையில் நமக்கு எவ்வகையான அலுப்புந் தோன்றாமையை நாமும் நமது பழக்கத்திற் பலகாலுங் கண்டிருக்கலாம். மக்களின் அறிவு உடம்பிலுள்ள உறுப்புகளின் வழியாகப் பலதுறையில் மாறி மாறி ஓடுவதனாலேதான் அயர்ச்சியும் இளைப்பும் வந்து மூடுகின்றன. எந்நேரமும் ஓயாமற் கல்வி பயின்றுவருபவர்களுக்கு அயர்ந்த தூக்கம் வருவதில்லை, உடம்பின் உழைப்பு மிகுதியாயுள்ளவர்களுக்கே தம்மை மறந்த தூக்கம் வருகின்றது. ஆகையால், தம்மை மறந்து தூங்கும்படியான அவ்வளவுக்கு உடம்பை உழைப்பில் விடுவது அத்தன்மையாக விரும்பத் தக்கதன்று. தன்னை மறந்து தூங்குவதுதான் உடம்பின் நலத்தைப் பாதுகாப்பதற்கு வழியென்றும், ஆகவே அதனை வருவித்தற்குக் கடுமையான உழைப்புக் கட்டாயமாக வேண்டற்பாலதேயா மென்றும் பெரும்பாலார் பிழைபடக் கருதுகின்றனர். இந்த மக்கட்பிறவி எடுத்தது கடுமையாக உழைத்தற்கும் பின்னர் அதனால் அறிவின்றித் தூங்குதற்குந்தாமா? தூக்கம் மிகுதியாயில்லாதவர்களுக்கு உடம்பின் நலங் குறையும் என்றால், நன்றாய் உழைக்கும் மாடுகளுங் குதிரைகளுந் தம்மை மறந்து உறங்காமை என்னை? அங்ஙனம் உறங்காமலிருந்தும்

அவை நல்ல நிலைமையோடு இருப்பதென்னை? எல்லாரும் அயர்ந்து உறங்கும் நள்ளிரவில் அவற்றின் கிட்டச் சென்றால், அவை உணர்விழந்து தூங்காமல் உணர்வோடிருத்தலைக் காண்கின்றோமே; தம்மை மறந்து தூங்குவதுபோற் காணப்படும் நாய் பூனை முதலான உயிர்களின் அருகே ஒருவர் அரவமின்றி எவ்வளவு மெதுவாய்ச் சென்றாலும் அவை உடனே எழுந்து ஓடுதலையுங் காண்கின்றோமே. நெடுநாள் உயிரோடிருந்த முதியவர்கள் தாம் உணர்வு கெட்டு உறங்கியதில்லை யென்றும், எவ்வளவு நேரந் தூங்கினாலும் நல்லுணர்வோடு கூடியேதாம் இருந்தனரென்றுந் தம் வரலாற்று நூல்களிற் கூறவுங் கேட்டிருக் கின்றோம். அப்படிப் பட்ட அம் முதியோர்களெல்லாம் நல்ல நிலைமையோடு ஒரு நூற்றாண்டுவரையில் உயிரோடிருந்தார் களென்பதும் மறுக்கப்படாத உண்மையாம். இவ்வாற்றால், நன்கு இளைப்பாறுதற்பொருட்டு அறிவிழந்த தூக்கம் வேண்டப் படுவதில்லையெனவும், உணர்வோடிருந்து தூங்குவதால் உடம்பின் நலம் பழுதுபட மாட்டாதெனவும் இனிது தெளியப் பெறுகின்றோம். மற்று, உணர்வோடிருந்து துயிலுவதால் அறியாமை நீங்கி அறிவொளி பெருகிப் பேரின்பம் மிகுந்து உயிரையும் உடம்பையும் வலுப்படுத்திப் பல்லூழிகாலம் உயிரோடிருக்கச் செய்யுமென்னும் உண்மை செவ்வையாகப் புலப்படுகின்றது.

அங்ஙனமாயின் உணர்வோடிருந்து துயின்று நன்றாக இளைப்பாறுதற்கு வழி யாது என்றால், அவ்வழியின் பாகுபாடு களை முறையாக எடுத்துக் கூறுவாம். பகற் காலத்தில் மிகுதியாக உழைக்கின்றவர்களுக்கே இராக்காலத்தில் தம்மை மறந்த தூக்கம் வருதலால், உடம்பை மிகுந்த உழைப்பின்கண் வருத்துதல் ஆகாது. அவ்வாறாயின் உழைப்பாளிகளாய் இருக்கும் மக்களுக்கு இவ்வுயர்ந்த பழக்கங்கள் கைகூடுமாறு யாங்ஙனமெனின், அவர்களும் இவற்றைச் செய்யவிரும்பி உயர்ந்த அறிவு நிலையை நோக்குவார்களாயின் நாம் இங்கே சொல்லியவாறு உடம்பின் உழைப்பைக் குறைத்துக்கொள்ள வேண்டுவது அவர்களுக்கும் இன்றியமையாததே யாகும்; அவர்களுக்கு அவ்விருப்பமும் உயர்ந்த நோக்கமும் எளிதிலே வரமாட்டா. அவர்கள் மிகவுந் கீழேயுள்ளதாகிய பிறவிப் படியில் நிற்கின்றார்களாதலால், மேல்நிலையில் உள்ள அறிவுக்களஞ்சியத்தைப் பெறுதற்குமுன்

அவர்கள் இன்னும் பல பிறவிப்படிகளைத் தாண்டிவரல் வேண்டும்.

அப்படியாயின், அவர்கள் தாமிருக்கும் நிலையிலேயே பதப்படும்படி செய்தற்கு இசைந்த முறைகள் இல்லையோ வென்றால், உண்டு; அவர்களது நிலைக்கு ஏற்பச் சில நல்லொழுக்க முறைளையும் இரக்கத்தையுங் கற்பித்து வந்தால் அவர்கள் சிறிது சிறிதாக மேலேறுவர் என்பது திண்ணம்; இம் முறைகளையுங் கூடக் கற்பியாமல் அவர்களைப் பராமுகஞ் செய்து விடுவோமாயின், அவர்கள் குடிகொலை முதலான மிகவுந் தீய செயல்களிற் பழகி மக்கட்பிறவியினுந் தாழ்ந்த பிறவிகளிற் கீழ் இறங்கிப் போகுவர்.

இனி, அவர் பின்பற்றத்தக்க முறைகள் அல்லாமையால் அவரைப்பற்றி இங்கே பேசுதலை விடுத்துப், பிறவிப் படிகளில் மேலேறிப் பதமுடையராய் வந்திருப்பார் பெரிதுங் கைக்கொள்ளற்பாலனவாகிய உயர்ந்த பழக்கங்களைப்பற்றிப் பேசப்புகுவாம். உடம்பை மிகுந்த உழைப்பின்கண் விட்டால் ஆவியின் வலிவு வீணே கழிந்து போதலுடன், அறிவைப் பண்படுத்தும் முயற்சியும் இல்லாது போகும். அதனால் அறியாமையும் நீங்காமல் உயிரைப் பற்றிபடியே கிடக்கும்; இந்த நிலையில் உள்ளவர்களுக்கு இராப்பொழுது வந்தவுடனே அறிவு மயங்கிப் பிணம்போற் கிடக்குந் தூக்கம் வந்து கூடிவிடும். ஆகவே, பிறவிப் படிகளில் எத்தனையோ ஊழிக் காலங்களாக ஏறிச் சிறிது மேல்நிலைக்கு வந்தவர்கள் நிரம்பவுங் குறிப்பாகக் கருதற்பாலது இது; பாழும் வயிறு வளர்த்தலையே பெரிதாக எண்ணி, இந்த நிலவுலகத்து வாழ்வையே நிலையாகக் கருதி, அளவுக்கு மேற்பட்ட பொருளைத் தொகுத்து வைத்தலிலேயே அவா மிகுதியாகக் கொண்டு காலைமுதல் நள்ளிரவுவரையில் ஓயாது பலதுறைகளிலும் முயன்று அல்லற் படுவதை ஒழித்து விடுதல் வேண்டும். இத்தகைய அல்லல்வாழ்க்கையால் அளவு கடந்த கவலையுந் துன்பமும் வந்து ஆவியின் வலிவை உரிஞ்சி விடுகின்றன. ஆதலால், வேண்டுமளவுக்குப் பொருள் தேடும் முயற்சியைக் கூடுமானவரையுஞ் சிறுகச் செய்து, மற்றுப் பெரும்பான்மை முயற்சியை அறிவைப் பண்படுத்தித் துலக்குவதிலேயே செலுத்துதல் வேண்டும்; அறிவால் மிக்க

சான்றோர்கள் வரைந்த நூல்களை இடைவிடாது கற்றுவரல் வேண்டும். எதனைச் செய்தாலும் அதனை அறிவோடிருந்து செய்தல் வேண்டும். அச்சங் கவலை பொறாமை முதலான இழிந்த தன்மைகள் வந்து, உள்ளத்தைக் கலங்கச் செய்யாதபடி அதனைத் தெளிவாக வைத்துக் கொள்ளல் வேண்டும். இவ்விழிந்த தன்மைகளாற் பற்றப்பட்டவர்களின் உடம்பு ஆவி வலிவினை மிகுதியும் இழந்து விடுதலால், அதனால் அவர்கட்கு அலுப்பு நிரம்பவும் உண்டாகி அவர்களை அறிவில்லாத கடுந் தூக்கத்தில் அழுத்திவிடும். இத்தன்மையவான இழிந்த தன்மைகளுக்கு இடங்கொடாமல் முன்சொல்லியவாறு பழகிவரவே, இரவில் அறிவில்லாக் கடுந்தூக்கம் வருவது சிறிது சிறிதாகக் குறையும். இனிய உறக்கத்திலுங் கூட உணர்வு மிகுதியாகக் குறையாமற் சுற்றிலும் நடப்பவற்றைத் தெரிந்து கொள்ள வல்லதாகும்; அது நிற்க.

அங்ஙனம் உணர்வோடு உறங்குவது அறிவைத் தெளிவு படுத்துதற்கு இசைந்ததேயாயினும், அதனால் நன்கு இளைப் பாறுதலும் நலமுறுதலும் உண்டாகுமாறு யாங்ஙனமெனின், அதனையுஞ் சிறிது விளக்குவாம் தன்னை மறந்த தூக்கத்தில் இளைப்பாறுதல் மிகுதியாய் உண்டாவதற்கு ஏது என்னென்றால், அப்போது மக்கள் அறிவு உடம்பின் புறத்தேயுள்ள ஐம்பொறிகளிற் கலந்து நின்று புறப்பொருள்களைச் சிறிதும் அறியாமல் வேறாய் நிற்றலால் அந்நிலையில் ஆவியின் வலிவு மிகவுந் கழிவு படாமல் உடம்பில் நிறைந்து நிற்கின்றது; அங்ஙனம் நிறைந்து நிற்பது தான் இனிய இளைப்பாறுதலை உண்டாக்குதற்கு ஏதுவாகின்றது. இதனை ஆராய்ந்து பார்க்க விரும்பினால், அயர்ந்துறங்கும் ஒரு சிறு குழந்தையின் பக்கத்தே சென்று அதன் கைகால்களை மெல்லென நாம் எடுத்துப் பார்த்தல் வேண்டும்; அதன் கையை எடுத்து மேலே தூக்கும்போதும் அக் குழந்தையின் அறிவுமுயற்சி அதிற் சிறிதுந் தோயாமலிருக்கின்றது; அக் கையை மெல்லென நாம் விட்டுவிடும்போதும் அம் முயற்சி அதிற் சிறிதுமில்லாமல் அதுதானே துவண்டு விழுகின்றது. விழித்திருக்கும்போது ஒருவர் மற்றொருவரது கையை உயரத் தூக்கிச் சடுதியில் அதனை விட்டுவிட்டால், குழந்தையின் கையைப்போல் அவரது கை அங்ஙனந் துவண்டு விழாமல் உயரத்திலேயே நிற்பதைக் காணலாம். தூங்குங் குழந்தையின் கையையே அல்லாமல்

நன்றாய் அயர்ந்துறங்கும் எவரது கையை அங்ஙனந் தூக்கிக் கீழே விட்டாலும் அது துவண்டு தானே கீழ் விழுதலைப் பார்க்கலாம். ஆனால், விழித்திருக்குங் குழந்தையின் கையையும் அங்ஙனமே அதற்குத் தெரியாமல் உயரஎடுத்துச் சடுதியில் விட்டுப்பாருங்கள். அது தூங்குங் குழந்தையின் கையைப் போலவே துவண்டு கீழ்விழும்; ஆனால் விழித்திருக்கும் பெரிய ஆட்கள் கையை அங்ஙனமே மேலே தூக்கிக் கீழே விட்டால் அது துவண்டு கீழ்விழாமல் மேலேயே நிற்கும். இங்ஙனங் குழந்தைகளின் கைமட்டும் விழிப்பிலும் உறக்கத்திலுந் துவண்டு கீழ் விழ, ஆண்டிற் பெரியவர்கள் கையோ அயர்ந்த உறக்கத்தி லன்றி விழிப்பு நிலையிற் றுவண்டு விழாமல் இருப்பதன் வகை என்னென்றால்; குழந்தைகளின் நினைவு எப்போதும் ஓரிடத்தி லேயே ஒரு பொருளிலேயே முனைத்து நிற்கின்றது; அதனால் அதன் நினைவு ஏதேனும் ஒன்றைப் பற்றி நிற்கும் படி செய்துவிட்டு, அதன் கைகால்களை நம் விருப்பப்படி எவ்வாறு அசைத்தாலும் அவை அவ்வாறெல்லாந் துவண்டு அசையும். ஆனால், ஆண்டிற் பெரியவர் நினைவோ ஒன்றையும் ஓரிடத்திற் பற்றிநில்லாமற் பலவகையாய் மாறி மாறி ஓடுதலால், அவரது நினைவை ஒருவழியிற் றிருப்பிவைத்து அவர்தங் கைகால்களை நாம் அசைக்குமிடத்து, அஃது அவ்வொரு நிலையில் நில்லாமல் அவ்வுறுப்புகளிலும் வந்து நிறைதலினால் அவை நாம் விரும்பியபடியெல்லாம் அசையாமல் தந் நிலையிலேயே நிற்கின்றன. மேலுங், குழந்தைகளுக்கு ஒரு நொடிப் பொழுதில் உறக்கம் வந்து கூடுதலையும், பெரியவர்களுக்கு அங்ஙனம் எளிதில் துயில்வராமையையும் ஆராய்ந்து பாருங்கள். குழந்தைகள் ஒரேநினைவாயிருத்தலால் அவ்வாறு சடுதியில் உறக்கம் வருகின்றதென்றும், ஆண்டில் பெரியவர்கள் பலகோடி நினைவுகளில் உழலுதலால் நினைத்தபடி துயில்கூடாமல் வருந்துகின்றனரென்றும் அறிதல் வேண்டும். இன்னுங் குழந்தைகள் நிலத்தே தவறிவிழுந்தால் பெரிய காயம்பட்டு வருந்தாதிருத்தலையும். பெரிய ஆட்கள் அங்ஙனம் விழுந்தாற் பெருங்காயப்பட்டு நெடுநாள் வருந்துதலையும் ஒப்பிட்டுப் பார்க்குங் காற், சிறுபிள்ளைகளின் உடம்பு எப்போதுந் துவண்ட நிலையிலும் பெரியவர்களின் உடம்பு பெரும்பாலும் எப்போதும் விறைத்த நிலையிலும் இருக்கும் உண்மை புலப்படா

நிற்கும். உடம்பு துவண்டிருத்தற்கு ஏதுவாவது நினைவின் ஒருமையேயாம் என்றும், அது முறைப்பாயிருத்தற்கு ஏதுவாவது நினைவு சிதறுதலே யாமென்றும் உணர்ந்து கொள்க. ஆகவே, நினைவை ஒருவழிப்படுத்தி அஃது உடம்பின் புறத்துறுப்புகளிற் கலந்து நில்லாமல் வேறுமுகமாய் நிற்கும்படி செய்து உடம்பைத் துவண்ட நிலையில் வைத்துக்கொண்டால் மிகவும் நன்றாய் இளைப்பாறுதல் கைகூடும். மக்களினுந் தாழ்ந்த விலங்கினங்கள் தமதுடம்பை இங்ஙனம் மிகவுந் துவண்ட நிலையில் வைத்துக் கொள்வதனாலேதான், அவைகள் தம்மை மறந்த உறக்கங் கொள்ளாமலிருந்தும், மக்களினும் மிகுந்த இளைப்பாறுதலைப் பெற்று வலிவுடையனவா யிருக்கின்றன. ஆதலால், உணர்வோடு உறங்குவது மிகுந்த இளைப்பாறு தலையும் நலத்தையும் விளைவிக்குமென உணர்ந்துகொள்ளல் வேண்டுமென்க.

## 5. உணவு

இனி, உறக்கத்திலும் உணர்வொடு கூடியிருந்து இளைப்பாறவும், அதனால் மனவுணர்வை நுட்பமாக்கவும், அவ்வுணர்வை வளர்த்தற்கு ஒப்பற்ற கருவியாய் வாய்த்த நமதுடம்பைப் பாதுகாக்கவும் ஒரு பெருங்கருவியாய் உள்ள உணவைத் தூயதாகத் தெரிந்தெடுத்து உட்கொள்ளுதல் பெரிதுங் கருத்திற் பதிக்கற் பாலதாகும். ஏனென்றால் உணவின் றன்மைக்கு இசையவே உடம்பின் முதற்பொருள்களும் உருவாக்கப்படுகின்றன. கொழும்புல்லுந் தெளிந்த மலையருவி நீரும் பருகிவாழும் மான் மரை குதிரை ஆ முதலான விலங்கினங் களின் உடம்பு எவ்வளவு தூயதாகவும் எவ்வளவு அழகியதாகவும் அமைந்திருக்கின்றன! அவ்விலங்குகள் எவ்வளவு அமைதியாகவுங் களங்கமற்றனவாகவும் இருக்கின்றன! அருவருப்பான வுணவைத் தின்னும் பன்றியும் நாயும் பூனையும் புலியும் முடைநாற்றம் வீசும் பொல்லா உடம்புடையனவாயிருத்தலோடு அவை எவ்வளவு கொடுமையும் வெடுவெடுப்பும் மிகப்பெற்றனவாயு மிருக்கின்றன! இவற்றை நோக்குமிடத்து உணவினால்விளையும் நன்மை தீமைகள் தெளிவாகப் புலப்படுகின்றனவல்லவோ?

இனித், தூயவான உணவுப் பொருள்களை உட்கொள்ளப் புகுந்தாலும், மக்கள் ஏனையுயிர்களினுந் தமக்குள்ள அறிவின் மேன்மைக்கு ஏற்பச் சுவை மிகுந்தவைகளையே ஓர் அளவாக அருந்திவரல் வேண்டும். பல்வகைச் சுவைகளும் தெரிந்து உண்ணாதவரையில் நாவினுணர்வும் அதனோடு ஒற்றுமைப் பட்ட மனனுணுர்வும் நுட்பமாய்ப் பெருகி வளரா; ஓர் அளவாய் உண்ணாமல் மிகுத்துண்டாலுங் குறைத் துண்டாலும் உடம்பு நோய்க்கு இரையாய்விடும். மேலும், மிகுதியாய்த் தின்பவர்க்குத் தூக்கமுஞ் சோம்பலும் மேற்பட்டு அவர்களது அறிவினையும்

மழுங்கச் செய்யும்; குறைத் துண்பவர்க்குக் களைப்புந் தளர்வும் மிகுதிப்பட்டு அவர்களது அறிவினையும் நிலைகலங்கச் செய்யும். ஆகையால், அவரவர் உடம்பிற்கு வேண்டும் அளவறிந்து உணவெடுப்பது எல்லார்க்கும் இன்றியமையாத கடமையாம். இந் நுட்பங்கள் உணராதார் பலர், ‘பசியெடுத்த வேளைக்கு எது கிடைத்தாலும் நிறைய உண்ணுதலை விடுத்து, நாச்சுவை பார்ப்பதுங் குறையச் சாப்பிடுவதுங்கூடா, என எளிதாய்ப் பேசிவிடுகின்றனர். அறிவு விளக்கத்தை நாடாதவர்க்கு, அங்ஙனஞ் சுவை தெரிந்து அளவாய் உண்ணாமற் கண்டதைக் கண்டமட்டும் எருமைபோற்றின்பதும் எதனையும் எளிதாய்ப் பேசி ஏளனஞ் செய்வதும் பொருத்தந்தான். அறிவுவளர்ச்சியினை நாடு வார்க்கோ சுவையுணர்வும் அளவாய் உண்டலும் இன்றி யமையாது வேண்டப் படுவனவேயாம். அங்ஙனஞ் சுவை தெரிந்துண்ணல் வேண்டின் திறமான பண்டங்களை வாங்கு தற்கும் அவற்றை நலம் பெறச் சமைத்தற்கும் மிகுந்த பொருள் வேண்டுமேயெனின்; அப்படியன்று, விலைகுறையக் கொண்ட கீரை, கிழங்கு, வரகு, சோளம் முதலிய நயத்த பொருள்களே யாயினும், அவற்றையும் நுண்ணறிவால் எவ்வளவோ சுவைமுதிரச் சமைத்துக் கொள்ளலாம்; விலையுயர்ந்த பருப்பு, நெய், வாழைக்காய், உருளைக்கிழங்கு, தேங்காய்,கோதுமை, சீரகச்சம்பா முதலான சீர்த்த பொருள்களேயாயினும், நுண்ணறிவொடு சமைக்கப்படா விட்டால் அவை சிறிதுஞ் சுவைப்படமாட்டா. ஆகவே, சுவை கனியச் சமைக்கும் நுண்ணறிவு முயற்சி யுண்டானால் எத்தனை நயத்த பொருள் களையுஞ் செவ்வையாக ஆக்கிக் கொள்ளலாம்; ஆகையாற், சுவைமிக்க உணவு கூட்டுதற்கு விலையுயர்ந்த பண்டங்களும் பெரும்பொருளும் வேண்டுமெனக் கூறுதல் சிறிதும் பொருந்தா தென்க. சுவைமிக்க உணவு கூட்டுதற்கு நுட்ப அறிவு வேண்டு தலானுஞ், சுவை முதிர்ந்த உணவை யுண்பார்க்கு நுண்ணறிவும் மகிழ்ச்சியும் உண்டாதலானும் இனிய உணவின் மேன்மை யாங் கூறாமலே எவர்க்கும் விளங்குவதொன்றேயா மென்க.

இன்னும், இன்சுவை யுணவினால் உடம்பு நோயின்றித் தளிர்த்தலால் அதன் மேன்மை பின்னும் பின்னும் ஆராயற் பாலதேயாம். இக் காலத்து உடம்பு நூல்[1] வல்ல ஆங்கிலப் புலவோர், உண்ட உணவு தீனிப்பையிற் சேர்ந்த அளவானே

அங்கது நன்றாய் அரைக்கப்பட்டுக் குழம்புபோல் ஆதற்கு, வாயில்வைத்த கவளத்தொடு சேர்ந்து உள்ளிறங்கும் வாய்நீர் நிரம்பவும் உதவிசெய்கின்றதென்று உரைக்கின்றார்கள். தீனிப்பை மெல்லிய தன்மை யுடையதாகையால், அஃது உணவை ஏற்றுக்கொள்ளும் முன் அவ்வுணவை நன்றாய் அரைத்துப் பதப்படுத்திக் கொடுக்கும்படி வாயும் அதன் கண் அண்ணமும் பல்லும் நாவும் நீரும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாருங்கள்! வாயில் ஓர் உணவுப்பொருளை வைத்தவுடனே நாவின்கீழ் நீர் சுரந்து அதனை நனைத்துக் கொண்டேயிருக்கின்றது; நாவோ அதனை இருபுறத்துமுள்ள பற்களிற் சேர்த்துச் சேர்த்து அரைப்பித்து மேலண்ணத்திற்பொருத்தி இனிமைகாட்டிப் பிறகதனைக் கீழ் இறக்கி விடுகின்றது; இவ்வாறு அரைபட்டுக் கீழ்ச் சென்ற அவ்வுணவு இரைப்பை நீரோடு எளிதிற் கூடிச் செரித்துப் போகின்றது. இங்ஙனம் வாயினுள் அரைக்கப்படாமல் தீனிப்பைக்குட் செல்லும் உணவோ அங்கே வலிதா யிருத்தலால் இரைக் குடலால் அரைக்கப்படாமல் நிற்கின்றது; அதனால் அது செரியாமற் போதலோடு மெல்லியல்பு வாய்ந்த தீனிக் குடலுக்குங் கடுந்தொழிலைக் கொடுத்து அதனையும் புண்ணாக்கித் தானும் பதனழிந்து நஞ்சாய் விடுகின்றது. இதனாலேதான் மாந்தரிற் பலருக்கு வயிற்றுளைச்சலென்னும் நோய் உண்டாகின்றது; வலிய பொருளை அரைக்கமாட்டாமற் புண்படுகின்ற தீனிக் குடலிலிருந்து ஒழுகுஞ் செந்நீர் வெளிப்படுங்கால் மிகுந்த உளைச்சலை உண்டாக்குகின்றது. இவ்வாறெல்லாம் உடம்பி னகத்தே நடைபெறும் நிகழ்ச்சிகளை நன்குணர்ந்த வர்களுக்கு, உணவை மெல்லாமல் அப்படியே விழுங்குவதால் நேரும் பொல்லாங்கின் கொடுமை எவ்வளவு பெரிதாய்க் காணப்படும்! இவற்றுள் ஒன்றும் உணர்ந்து பாராமல் 'உணவை மென்று தின்னல் ஆகாது' என்றும், 'நெடுநேரம் மெல்லுதற்கு ஒழிவு காலம் இல்லை' என்றும் எளிதாய்ப் பேசித் திரிபவர்கள், நுண்ணு ணர்வும் இன்பமும் பெறாமற் பலவகைநோய்களாற் பற்றப் பட்டுக் காலம் முற்றாமுன்னரே இறந்தொழிவர்! வாயிற் பெய்த ஒவ்வொரு கவளத்தையும் வாய்நீரிற் கூட்டி நன்றாய் அரைத்துக் குழைத்து உண்பவர்கள் சுவையால் இன்பமும் உணர்வும் மிகப்பெற்று, அதனை மென்பதப்படுத்தி யிறக்குதலால் தீனிப் பையையும் புண்படுத்தாமல் வைத்து, அவ்வுணவையும் எளிதிற்

செரிப்பித்துத் தூயசெந்நீரை உண்டுபண்ணிக் கொள்வராகலின், அவர் நீண்டநாள் திண்ணியராய் உயிர்வாழ்ந்து அறிஞராய் விளங்குவர் என்க இன்னும், வாயிற் சுரக்கும் நீரின்கண் உடம்பை வளர்க்கும் முதற்பொருள்கள் அமைந்திருக்கின்றன வென்றும், அதனால் வாயிற் பெய்தபண்டம் அந்நீரில் நன்றாகக் கலந்து குழம்பாய் உள்ளிறங்குமாயின், தீனிப்பை அதனை எளிதாகச் செந்நீரிற் சேர்ப்பிப்பதோடு அவ் வாய் நீரிலுள்ள வலிய முதற்பொருள்களையும் அதன் வழியாக எங்கும் பரவச் செய்து உடம்பை வலுப்படுத்து மென்றும் இக்காலத்து உடம்பு நூல் வல்லாருங் கூறுதலின் உணவுப் பண்டத்தை நன்றாக வாய்நீரிற் கலப்பித்தற்கு அதனை அடுத்தடுத்துப் பல முறையும் மென்று தின்பது இன்றியமையாததாகின்றது; இதுவன்றியும், பலமுறை மெல்வதால் தாடையும் நன்றாய் அசைந்தசைந்து வலுப் படுகின்றது. இங்ஙனமெல்லாஞ், சுவையின்பமும், நுண்ணு ணர்வும், எளிதிற் செரித்தலும், உடம்பு வலுப்படுதலும் முதலான நன்மைகள் பலவும் விளைதற்கு வாயிலா யிருத்தலின் உணவை நன்றாய் மென்றுண்ணும் பழக்கம் அறிவுடையார்க்கு முதன்மை யாக வேண்டப்படுவதேயாகும். தமது நினைவைப் பிறர்க்குப் புலப்படுத்தவும் பிறர் நினைவைத் தாம் அறிந்து கொள்ளவும் பழகும் அறிஞர்க்கு உணவைச் சுவைப்பட மெல்லுதல் அவர் கருதிய பயனை விரைவிற் றருவதாகுமென்க.

இனி, இயல்புள்ளவர்கள் நெய் பால் தயிர் வெண்ணெய், உழுந்து துவரை கோதுமை அரிசி, வாழைக்காய் தேங்காய் உருளைக்கிழங்கு, நாரத்தம்பழம் சீமையிலந்தைப்பழம் வாதுமைப்பழம் முதலான தூய வலிவான உணவுப்பொருள் களைக் காலமும் இடமும் அளவும் அறிந்து உட்கொண்டு வருவார்களாயின், அவர்களுடம்பு அழகுமுதிர்ந்து மினுமினு வென்று மிளிர்வதோடு, அறிவும் மிக நுணுகி வளர்ந்து பிறராற் செயற்கரிய செயல்களையெல்லாஞ் செய்ய வல்லதாகும். மற்று, இயல்பில்லாதவர்களோ தமது நிலைமைக்குத் தக்க அறைக்கீரை தூதுளங்கீரை, சிறுகீரை, பொன்னாங் காணிக்கீரை, மணித் தக்காளிக்கீரை, கலவங்கீரை முதலியவற்றைப் பல வகையாகப் பதப்படுத்தி மேற்சொன்னவாறு அருந்தி வருவார்களாயின், அவர்களும் மெல் இயல்புள்ளவர்கள் அடையும் பயன் களெல்லாம் அடைகுவர். விலையுயர்ந்த வலிவுப்பொருள்களை

உண்பவர்களுங் கூட இங்கே கூறிய கீரைவகைகளைச் சமைத்துண்ணல் வேண்டும்; செந்நீர் துப்புரவாதற்கும், உடம்பிற்சேரும் நச்சுநீரை அகற்றுதற்கும், உடம்பினுறுப்புகளை உரப்படுத்துதற்கும் இக்கீரை யுணவு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இயல்புடையவர்க்கே கட்டாயமாய் வேண்டப்பட்ட இவ்வுணவை, விலை சிறிதாயிருத்தல்பற்றித் தாழ்வாக நினையாது உயர்வாகவே நினைந்து ஏராளமாய் வாங்கி உண்ணுதற்கு ஏழை எளியவர்கள் முன்னிற்பாராக.

இனிச், சீமையிற் புகழ்பெற்ற ஆங்கில மருத்துவராய் விளங்கும் ஒருவர்[2] தீராநோய்கொண்டு வருவார் பலர்க்குங் கீரைகளையும் ஆவின்பாலையும் பலவகையாகப் பதப்படுத்திக் கொடுத்து அவர்க்குள்ள நோய்களை உலகம் வியக்கும்படி தீர்த்துவருகின்றார். தங்கண் நச்சுநீர்[3] இன்றி, உடம்பிலுள்ள நச்சுநீரை அப்புறப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தவை கீரை பால் முதலிய சைவ வுணப் பொருள்களேயாம் என்று அவர் மிகவுந் திறம்பட நூல்கள் எழுதி விளக்குவதொடு, தாங் கூறியவற்றைப் பழக்கத்திலுஞ் செய்துகாட்டுகின்றார். அவர் கூறுவதிலுஞ் செய்வதிலும் இறைச்சி யுண்பது பெரிதுந் தீதாம் என்னும் உண்மை நன்கு விளங்கிவருகின்றது. இறைச்சியில் நச்சுநீர் இருததலால், அதனை உண்பவர் உடம்பிலும் நச்சுநீர் பெருகி உரைத்தற்குங் கேட்டதற்குங் கொடுமையான பல நோய்களை வருவிக்கின்றது. ஆதலால், இயல்புள்ளவர். இல்லாதவராகிய இருதிறத்தாரும் ஆடு மாடு பன்றி கோழி மீன் முதலான எவ்வகைப்பட்ட உயிரின் உடம்பையுஞ் சிதைத்து அவற்றின் ஊனை உண்ணாதிருக்கக் கடவராக. ஊனுண்ணல் இரக்கமற்ற கொடுஞ்செயலாய் இருப்பதோடு அதனைச் செய்கின்றவர்க்கும் அது நோய்களை விளைத்து அவர் உயிரைக் கொள்ளை கொண்டும் போதலால், தற்பாதுகாப்பின் பொருட்டாகவாவது ஒருவரும் ஊன்றின்றலாகாது. ஊனுக்குச் செலவழிக்கும் பணத்தில் எட்டிலொரு கூறிருந்தால் இனிய நல்ல சைவவுணவு உட்கொண்டு நன்கு வாழலாம் என்று ஊனுண்பாரே கூறுகின்றனராதலாற், செட்டாய்ச் செலவு செய்து எஞ்சிய பணத்தை நல்ல துறைகள் பலவற்றிற் பயன்படுத்துதற்குச் சைவவுணவே மிகவும் இசைந்த தென்று கடைப்பிடித்தல் வேண்டும். இன்னும், ஏழை எளியவர்கட்குச் சோளம், கேழ்வரகு,

கம்பு, வரகு, தினை, சாமை முதலான உரமான சைவ வுணாப்பொருள்கள் நயமாய்க் கிடைக்குமாதலால், அவர்கள் இறைச்சியுண்டலை அறவே விட்டு இம்மணிகளைக் கைக்கொள்வாராக. நயமாய் விற்கும் இப்புன்செய்ப் பயிர் நன்செய்ப் பயிர் விளைவுகளைப் பெற்று நன்றாகச் சமைத்துப், பரபரப்பின்றி மெதுவாகச் சுவைத்துத் தின்னல்வேண்டும். மக்களினுந் தாழ்ந்த ஆடுமாடு குதிரை முதலான உயிர்கள் இத் தொழிலை எவ்வளவு திருத்தமாய்ச் செய்கின்றன! அவை தீனி எடுக்குங்கால் விரைவதேயில்லை, அதனை மெல்ல மெல்ல வாயுள் வைத்து அரைத்து மன நிறைவோடு உள்ளிறக்குகின்றன. மக்கள் விலங்குகளினும் மேலான அறிவைப் பெற்றும், இவ்வுயிர்களிடத்துக் காணப்படும் இயற்கையைப் பின்பற்றி ஒழுகாமல், அதற்குப் பெரிதும் மாறுபட்டு நடக்கின்றார்கள் இலையில் நிறையக்குவித்த சோற்றையுங் கறியையும் ஐந்து நொடிகளில் எடுத்துப் பரபரப்பொடு விழுங்கி எழுந்தவர் களையும் பார்த்திருக்கின்றோம். இத்தனை பரபரப்போடு உண்பவர்களுக்கு யாது சுவை தெரியப் போகின்றது! உண்ட வுணவை அறச்செய்வதற்கு முதன்மையாக வேண்டப்படும் வாய்நீர் பரப்பரப்போடுண்ணும் உணவிற் கலவாதாகையால், அங்ஙனம் விழுங்கப்படும் உணா தீனிப்பையிற் செரியாமல் அழுகிநின்று பல நோய்களை வருவிக்கும். அல்லும் பகலும் நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழக் கைவருந்த மெய்வருந்தப் பாடுபட்டுப் பணந்தேடுவது எதன்பொருட்டு? சாண் வயிற்றின் பொருட்டன்றோ? இவ்வாறெல்லாம் பாடுபட்டும், அப் பாட்டினால் வந்த அரிய உணவை அமைதியாயிருந்துண்டு மகிழாதவர் பெறும் பயன் என்னை!

இனி, மற்றொரு முதன்மையான செயலிலும் மாந்தர் உலக இயற்கை நன்னிகழ்ச்சிக்கு மாறாய் நடக்கின்றனர். மக்களினும் கீழ்ப்பட்ட மற்றை யெல்லா உயிர்களுங் காய் கனி கிழங்கு கீரை கடலை உழுந்து துவரை முதலிய எல்லா உணாப்பொருள் களையும் இயற்கையில் உள்ளபடியே யெடுத்து நன்றாய் மென்று தின்கின்றன. மாந்தரோ அவற்றை நெருப்பில் வேவுவித்து அவற்றின் இயற்கைத் தன்மையைக் கெடுத்து உண்கின்றனர். இங்ஙனஞ் செய்தலால் அவ்வுணாப் பொருள்களில் உள்ள வலுவான பாகம் அழிந்துபோகின்றது. இத் தின்பண்டங்களைப்

பச்சையாக உண்ணுஞ் சிற்றுயிர்களுக்குள்ள வலிவும் நலமும், இவற்றை அவித்துத் தின்னும் மாந்தர்க்கு வருவதில்லை. இயற்கைக்குப் பொருந்த இவற்றைப் பச்சையாகவே உண்ணுஞ் சிற்றுயிர்கள் இவற்றையுண்ட பின் இவற்றின் பிழிவுகள் அவைதம் உடம்பில் நன்றாய்க் கலந்து போகச், சக்கையான பாகம் அவைகளால் வருத்தமின்றி வெளியே கழித்து விடப்படுகின்றது. மக்கள் உண்ணும் உணவிற் பிழிவான பாகம் சிறிதேயிருத்தலால், அஃது அவர்கள் உடம்பிற் கலக்கக் காலந்தாழ்ப்பதோடு, அதனிற் பிரிந்த சக்கையும் எளிதில் வெளிப்படுவதில்லை; இதனாலே தான் பலர் மலச்சிக்கலாற் பெரிதுந் துன்புறுகிறார்கள்! விலங்கினங்களில் எவையேனும் இங்ஙனம் மலச்சிக்கலாற் றுன்புறுவதுண்டோ? கூறுமின்! கடலை துவரை உழுந்து முதலியவற்றிலுள்ள தோலுந் தவிடும் மலச்சிக்கலைப் போக்குந் தன்மை வாய்ந்தன; அவற்றை மக்கள் கழித்துவிட்டு அவற்றின் உள்ளுள்ள பருப்பை மட்டும் நன்றாய் வேகவைத்துத் தின்கின்றனர். அதனால் அவர் மலச்சக்கையைக் கழிக்க இயலாமல் வருந்துகின்றனர்; ஆனால், இவர்களாற் கழித்து விடப்பட்ட உமியையுந் தவிட்டையும் இரையாகக் கொள்ளும் அச்சிற்றுயிர்களோ அங்ஙனம் வருந்துவதில்லை, அவை நல்ல செம்மை வாய்ந்து திண்ணியவாய் இருக்கின்றன.

அவ்வாறாயின், மக்கள் இனி விலங்குகளைப் போல் எல்லாவற்றையும், பச்சையாகவே உண்ணல் இயலுமோ வெனின்; அமெரிக்கா இங்கிலாந்து முதலான அயல்நாடுகளில் இந் நுட்பங்களை நன்குணர்ந்த அறிவுடையோர் பலர் காய் கனி கிழங்கு முதலான எல்லா உணவுப் பொருள்களையும் பச்சையாகவே உண்ணப் பழகி வருகின்றார்கள்; அவர்களிற் பலர் அப் பழக்கத்திற் றேர்ச்சிபெற்றும் விளங்குகிறார்கள். இவ்வாறு இம் மேலோர்க்கு இப் பழக்கம் எளிதாய் இருப்ப, நம் தமிழ்நாட்டிலுள்ளவர்க்கு மட்டும் இது கடுமையாய்க் காணப்படுவானேன்? நம்மனோர்க்கு மனவுறுதியும் மேலான துறைகளிற் செல்லுதற்கு ஆவலும் இல்லாமையோடு, அறிவில்லாத பிறர்செய்யும் ஏளனத்திற்கும் பெரிதும் அஞ்சுவர்; தாம் பழகியதொன்று எவ்வளவு தீயதாய் இருப்பினும் ‘அது வழக்கமானது, விட முடியாது என்று சொல்லிக்கொண்டே யிருப்பர். இத் தன்மையுடையார்க்கு ‘எல்லா உணாப் பொருள்

களையும் பச்சையாக உண்டலே நல்லது' எனக் கூறுவமாயின், அவ்வுண்மை கூற வரும் நம்மையே ஏளனஞ் செய்து நகையாடு தற்கு முந்துவர். மற்றை நாட்டிலுள்ளவர்கள் கல்வியிலுங் கைத்தொழிலிலும் உழவிலுங் கொண்டுவிற்றலிலும் நூலுணர்ச்சியிலும் புதிய புதிய பொறிகள் ஆக்குவதிலும் நாளுக்குநாள் வளர்பிறைபோற் பெருகிவர நம்மவரோ இவையொன்றிலுங் கருத்தில்லாதவர்களாய் நாளுக்குநாள் தேய்பிறைபோற்குறைந்து கொண்டே போகின்றனர்! ஐயகோ! இவர்கள் தமதறியாமையினையுந் தீயவழக்கங்களையுஞ் சோம்பலையும் நல்லோரைப் பழித்தலையுங் கைவிட்டு முன் ஏறும் நாள் எந்நாள்! அது நிற்க.

இனி, மக்கள் எல்லாருஞ் சமைத்துண்டலை அறவே விடுத்து, எல்லா உணவுப் பொருள்களையும் பச்சையாகத் தின்றல் இப்போது எளிதில் முடியாததாய்க் காணப்படுதலால், உள்ள நிலைமையை இயன்றவரையிற் சீர்திருத்துதற்கு முயறலே பயன்படுவதாமெனின்; எல்லாரும் அங்ஙனஞ் செய்தல் இயலா விடினும் முக்கால நிகழ்ச்சிகளையும் உணர்தற்கு மிக விரும்பு கின்றவர்களாயினும் எல்லா உணவுப் பொருள்களையும் பச்சையாகவே உட்கொள்ளுதற்குப் பழகிவரல் வேண்டும். தீயில் அவற்றை வேவுவித்து உண்ணும் மற்றையோர் தமது உடம்பைச் செவ்வையான நிலைமையில் வைத்தற்கு வேறு சில செயற்கை முறைகளைப் பின்பற்றல் வேண்டும். ஏனென்றால் இயற்கை முறைக்கு மாறான தொன்றைச் செய்து அதனால் உடம்புக்கு ஒரு பொல்லாங்கு வந்தாற் பின்னர் அதனை நீக்குதற்கு மற்றொரு செயற்கை முறையினைப் பின்பற்ற வேண்டுவது கட்டாயமாய் இருக்கின்றதன்றோ? பச்சையாய் உள்ள காய்கனி கிழங்கு கீரை விதைகளில் உடம்புக்கு வேண்டிய வலிவான பொருள்கள் அத்தனையும் அமைந்திருக்கின்றன. ஆனால், அவற்றை நெருப்பிலிட்டு வேவுவித்தாலும், வேவுவித்த நீரை இறுத்து விட்டாலும் அவற்றின்கண் இருந்த பசையும் ஆவியும் அகன்று அவை சாறற்ற வெறுஞ் சக்கையாய் விடுகின்றன. அதனால், அவை தீனிப்பையிற் செரித்துச் செந்நீராய் மாறுதற்குஞ், செந்நீரிற் சேராது கழிந்த சக்கையை வெளிப்படுத்துதற்கும் இன்றியமை யாத நெய்ப்பும் ஆவியுஞ் சாறும் இல்லாமற் போதலால், பெரும்பாலார்க்குச் செரியாமையும் மலச்சிக்கலுந் தோன்றி

அவரை வருத்தி வருகின்றன உணாப் பொருள்களைப் பச்சையாக உண்ணாமல், இயற்கைக்கு மாறாய் அவற்றை வேவுவித்து உட்கொள்ளுதலால் இப் பொல்லாங்குகள் நேர்கின்றன. செயற்கையால் நேர்ந்த இப் பொல்லாங்குகளைத் தீர்க்க வேண்டுமாயின், அவற்றிற்கேற்ற செயற்கை முறைகளைக் கையாண்டே தீரவேண்டும். தீனிப்பைபிற் சென்ற உணவில் வேக்காட்டாற் பிரிந்துபோன நீர் திரும்பவும் அதிற் சேர்க்கப் பட்டாலன்றி அது செரியாது. ஆகையால், நாடோறும் ஒரு நாழிகைக்கு ஒருகால் இரண்டு மூன்று மிடறு தண்ணீர் அருந்திவரப் பழகுதல் வேண்டும். இங்ஙனம் பழகிவரவே, தீனிப்பை உணவைச் செரிப்பித்தற்கு வேண்டிய நீர் பெற்று அதனைப் பதப்படுத்தும். அதனொடு மலக்குடலிற் சென்ற சக்கை வேவுவித்த உணவின் கழிவாதலால் அது வெளிப்படுதற்கு வேண்டிய அளவு நெய்ப்பு அதனில் இல்லாமற் போக அது வறண்டு அக் குடலை இறுகப் பற்றிக் கொள்கின்றது; ஆதலால், அவ்வப்போது சேருஞ் சக்கையை அக்குடலினின்றும் அகற்றுதற்கு **நீரேற்றி**[4] என்னுங் கருவிகொண்டு மாலைக் காலத்தில் கீழ்வாயிலின் வழியே, சிறிது விளக்கெண்ணெயாவது பன்னீர்ச்சுவர்க் காரமாவது கலந்த ஒரு படி வெந்நீரை ஏற்றி அக்குடலைக் கழுவித் துப்புரவு செய்தலும் வேண்டும். இதனைக் கையாளும் முறைகளும் உடம்பின் நலம் பேணுதற்கு இன்றியமையாத ஏனைமுறைகளையும் யாம் எழுதிய '**மக்கள் நூறாண்டு உயிர் வாழ்தல் எப்படி?**' என்னும் நூலுட் கண்டுகொள்க. அடுத்தடுத்துத் தண்ணீர் பருகுவதாலும் மலக்குடலைக் கழுவுவதாலுந் தீயிற் சமைத்த உணவை உட்கொள்ளுதலால் விளையும் பொல்லாங்குகளைக் கடக்கலாம் இவ்வாறெல்லாம் உணவையும் உணவால் வரும் பயன்களையும் ஓர் ஒழுங்காக் கியபின் உடம்பு மிகவும் நல்ல நிலைமையை எய்தித் தன்னிடத் துலவும் உயிரின உணர்வு மிகுதிப்படுதற்கு உதவி செய்யும் என்க. செவ்வையான வீடு கட்டவேண்டும் ஒருவன் அதற்குரிய கல்லுஞ் சுண்ணமும் மரமுந் தேடித் தொகுத்துக், கட்டுதற் றொழிலில் வல்ல கொற்றர்களையும் அமர்த்திக் கொள்வது இன்றியமையாததாய் இருத்தல் போல, இந்த உடம்பை ஒழுங்கான முறையில் வைத்தற்கு விரும்புவோரும் அதற்குரிய பண்டங்களைக் கருத்தாய்த் தேடித் தொகுத்து,

உள்ளுள்ள தீனிப்பை மலக்குடல் நெஞ்சப்பை முதலியன நன்றாகத் தத்தந் தொழில்களைப் புரியும்படி செய்தல் வேண்டும். ஆனது பற்றித், தீனிப்பை மலக்குடலைத் துப்புரவாய் வைத்து அவற்றை நடைபெற விடுமாறு சொல்லி முடித்தமையின், இனி நெஞ்சப்பையை ஒழுங்காக நடைபெறுவித்தற்பொருட்டு மூச்சுவிடுமுறையைச் சிறிது எடுத்துப் பேசுவாம்.

**அடிக்குறிப்புகள்**

1. Physiology
2. Alexander Haig, M.A., M.D.,
3. Uric acid.
4. Enema

## 6. மூச்சுவிடும் முறை

*விரைய மூச்சுவிடும் உயிர்கள் நீண்டநாள் உயிர் வாழாமையும், மெல்ல நேரஞ்சென்று மூச்சுவிடும் உயிர்கள் நீண்டகாலம் உயிர்வாழ்தலும் உயிர்நூல் வல்லாரால் நன்காராய்ந்து சொல்லப்பட் டிருக்கின்றன. ஒரு நிமிடத்திற்குப் பன்னிரண்டுமுறை மூச்சுவிடும் மக்கள் சிறிதேறக் குறைய நூறாண்டு உயிரோடிருப்பார்கள். ஒரு நிமிடத்திற்குப் பதினாறு முறை மூச்சுவிடுங் குதிரையோ இருபத்தைந்து ஆண்டிற்குமேல் உயிரோடிருப்பதில்லை யென்று கணக்கிட்டிருக்கின்றார்கள். இங்ஙனமானால், ஒரு நிமிடத்திற்கு முப்பத்தாறு முறை மூச்சுவிடும் புறாவும் எவ்வளவு விரைவில் இறந்துபடும் என்பது புலனாகின்றதன்றோ? இனி, ஒரு நிமிடத்திற்கு மூன்றே முறை மூச்சுவிடும் யாமை நெடுங்காலம் உயிரோடிருக்கின்றதென உயிர் நூலார் ஆராய்ந் தறிந்திருக்கின்றார்கள்; ஓர் யாமை நூற்றுப்பத்து ஆண்டு உயிரோடிருந்ததை அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதுவேயுமின்றி, இது நெடுங்காலம் மூச்சை அடக்கிக் கொண்டு பட்டினி கிடக்க வல்லதென்றும், மிகவும் அமைதியான இயற்கை யுடைய தென்றும் அறியப்பெறுகின்றோம். இஃது ஐப்பசித்திங்கள் இறுதியில் நிலத்தின்கீழே உறங்கப்போய்த், திரும்பவுஞ் சித்திரைத் திங்கள் முதலில் நிலத்தின்மேல் வரும் வழக்கம் உடையது. ஆகவே, ஓராண்டில் ஐந்து திங்கள் உணவும் உயிர்ப்பும் இன்றி இஃது உறங்கிக் கிடக்கின்றது. மழைக் காலத்தில் வெளியே எங்கும் உலவுவதில்லை. பால் உள்ள செடிகளின் இலைகளையே விருப்பத்தோடுந் தின்பது. இங்ஙனம் இது தவமுயற்சியிற் றலைநிற்குந் துறவோர் ஒழுக்கத்தை ஒத்ததா யிருத்தல் கண்டன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்,*

'ஒருமையுள் யாமையோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து'

என்று அருளிச் செய்தனர்! இவ்வுண்மையை உணர்ந்து பார்க்குங்கால் மூச்சை அடுத்தடுத்து ஓடவிடாமற் றடை செய்வதனால் உணவு குறைந்து உயிர்வாழ்க்கை நீளுவதோடு அறிவாற்றலும் அளவின்றிப் பெருகும் என்பதும் விளங்கா நிற்கும். இஃது எங்ஙனமெனிற் காட்டுதும்; நாம் மூச்சை உள்ளிழுக்கும்போது உயிர்க்காற்று அகத்தே செல்கின்றது; நாம் அதனை வெளிவிடும்போது நச்சுக் காற்றுப் புறத்தே கழிகின்றது. உட்செல்லும் உயிர்வளி நெருப்பினை எரியச்செய்வதாதலால், அஃதுட் செல்லுந்தோறுந் தீனிப்பையிலும் அதன் கீழும் உள்ள நுண்ணிய தீயை மிகுந்து எரியச்செய்யும். புறத்தேயுள்ள தீ மிகுந்தெரியுந்தோறும் அதற்கு விறகும் நெய்யும் இடுவது போல, அகத்தேயுள்ள தீ முறுகி எரியும்போதும் அதற்கு வலிய உணவும் நீரும் இடைவிடாது இடுதலால் அவற்றை உடம்பிற் கலப்பித்தற்கு ஒழிவின்றி இயங்கும் அகக் கருவிகள் விரைவிற் பழுதுப்பட்டுப்போக மூப்பும் இறப்பும் விரைந்து வருகின்றன. எளிதிற் செரியாத ஊனைத் தின்னும் புலி ஓநாய் முதலான உயிர்கள் தாம் உண்ட ஊனைச் செரிப்பித்துக்கொள்ளல் வேண்டி இரையெடுத்த பின் விரைந்து விரைந்து உலவுதலைப் பலர் பார்த்திருக்கலாம். அவ்வாறவை உலவுதலால், உயிர்க்காற்றை அடுத்தடுத்து உள்ளிழுக்க, உட்செல்லும் அவ் உயிர்வளி தீயைமிகுத்து அவ் ஊனை எரித்துச் செரிக்கச் செய்கின்றது. இதனால் அக் கருவிகள் விரைந்து தேய்தலின் புலி கரடி ஓநாய் முதலான ஊன் தின்னிகள் நீண்டநாள் உயிர் வாழாமல் இறக்கின்றன. சைவ உணாப்பொருள்களைக் குறைய உண்கின்றவர்கட்கு அவை எளிதிற் செரிப்பன வாய் இருத்தலால், அவர் உயிர்வளியை மிகுதியாய் உள்ளிழுக்க வேண்டுவதில்லை. அதனால் அவர்தம் உடம்பின் அகக்கருவிகள் விரைந்து இயங்காமல் மெதுவாக நடத்தலால் அவை பழுதுபடாமலிருந்து உடம்பை நெடுங் காலஞ் செவ்வையான நிலைமையில் வைக்கும். ஆனதுபற்றியே சைவவுணாப் பொருள்களுள்ளும் எளிதிற் செரிப்பனவற்றை வேண்டும் அளவறிந்து மெல்லச் சுவைத்து உண்ண வேண்டிய திருக்கின்றது. இவ்வாறு உணவுக்கும் அவ்வுணவைச் செரிப் பித்தற்கு உள்ளிழுக்கும் உயிர்வளிக்கும் நெருங்கிய இயைபு இருத்தலால், நல்ல உணவைக் குறைத்து உண்ணும் முகத்தால் மூச்சின்

ஓட்டத்தை மெல்ல நடைபெறச் செய்தல் வேண்டும். இங்ஙனம் ஓர் ஒழுங்கு செய்துகொண்டபின், மூச்சினோட் டத்தைப் பின்னும் பின்னுங் குறைத்துக் கொண்டே வருதல் வேண்டும். ஒரு நிமிடத்திற்குப் பன்னிரண்டு முறை மூச்சு விடுதலைச் சுருக்கிப் பத்துமுறை எட்டுமுறை ஆறுமுறை நான்கு இரண்டு ஒன்றென்று ஒடுக்கிக் கொண்டுவந்து கடைசியாக மூச்சின்றியே நெடுநேரம் இருக்கப் பழகுதல்வேண்டும். இங்ஙனம் பழகாவிட்டால், இப் பழக்கத்தில் நிரம்பத் தேர்ச்சிபெற்று ஒரு நிமிடத்திற்கு மூன்று முறையே மூச்சுவிடும் யாமையைக் காட்டிலும் மிகவுந் தாழ்ந்த நிலைமையில் உள்ள மக்கள் தம்மை மேலாக நினைந்து இறுமாந்திருத்தல் எவ்வளவு பேதைமையாய் முடியும்! ஆதலால் தொலைவான இடங்களில் நிகழும் நிகழ்ச்சிகளை அறியவிழையும் உயர்ந்த நோக்கம் வாய்ந்த மக்கள் மூச்சை வரவரச் சுருக்கும் பழக்கத்திற் கருத்தொருமித்து நிற்கக் கடவராக.

இனி, ஒரு நிகழ்ச்சியைத் தொலைவிலிருந்து உணர்வோரும், அதனை அவர்க்குத் தொலைவிலிருந்து உணர்த்துவோரும் மூச்சுவிடும் இம் முறையைத் தமக்குள் இசைவு படுத்திக் கொள்ளல் வேண்டும். ஒருவர் ஒரு நிமிடத்திற்குப் பத்துமுறை மூச்சுவிட்டால் மற்றவரும் ஒரு நிமிடத்திற்குப் பத்துமுறையே மூச்சுவிடுதல் வேண்டும்; அதனிற் குறைதலும் மிகுதலும் ஆகா. இருவர்க்கும் மூச்சின் ஓட்டம் ஒத்துநின்றால் ஒருவர் நினைப்பது மற்றவர் உள்ளத்திலும் உடனே தோன்றும்; அஃதொத்து நில்லாவிட்டால் ஒருவரது நினைவு மற்றொருவர்க்குத் தோன்றாது. ஆகையால், தொலைவிலிருந்து ஒருவர் நினைவை ஒருவர் அறியவிரும்பும் இருவரும் இம் மூச்சின் ஓட்டத்தைத் தமக்குள் ஒரேவகையாய் நடைபெறச் செய்து கொள்வதொடு, மேலெடுத்துக் கூறிய பழக்கங்களிலுங் கடைப்பிடியாக நிற்றல்வேண்டும்.

## 7. தொலைவில் உணர்வோர் உணர்த்துவோர்

இனித், தொலைவிலுணர்தல் என்னும் இவ்வரும் புலமைத் திறத்தைப் பெறுதற்கு வேண்டுபவர் தொடக்கத்தில் தாமே இதனைத் தனியாயிருந்து பழகுதல் ஆகாது; பெரும்பான்மையுந் தம்மோடு ஒத்த இயல்பும் ஒத்த விருப்பமும் உடையார் ஒருவரைத் தெரிந்தெடுத்து அவரொடு சேர்ந்திருந்து பழகல் வேண்டும். இவ்வாறு சேர்ந்து பழகும் இருவரில் ஒருவர் தாந் தொலைவிலிருந்து மற்றவர் நினைத்து விடுக்கும் ஒரு நினைவை ஏற்று அறிதல் வேண்டும்; இங்ஙனம் ஒருநினைவை வரவேற்று அறிபவர் உணர்வோர் என்று சொல்லப்படுவர்; மற்றொருவர் தாமுந் தொலைவிலிருந்து ஒருபொருளில் உள்ளத்தைப் பதிய நிறுத்தித் தமது நினைவை உணர்வோர்பாற் செல்லும்படி விடுத்தல் வேண்டும்; இங்ஙனந் தாம் நினைக்கும் நினைவை உணர்வோர்க்கு அனுப்புகின்றவர் உணர்த்துவோர் என்று பெயர் பெறுவர். உணர்வோரா யிருந்து பழகுபவர் அங்ஙனஞ் சிலகாலம் பழகித் தேர்ச்சி பெற்றபின் அந்நிலையை மாற்றிப் பின்னர் உணர்த்துவோராயிருந்து பழகலாம். உணர்வோர் எப்போதும் உணர்த்துவோராயுமே யிருந்து பழகல் வேண்டு மென்னுங் கடப்பாடு இல்லை. உணருநிலையிலும் உணர்த்து நிலையிலும் மாறி மாறிப் பயிலுதலே நலமுடைத்தாம். ஒருவர் மற்றொருவர் நினைவை அறியவுந், தமது நினைவைப் பிறர்க்கு அறிவிக்கவும் வேண்டிய நிலையில் இவ்வுலக வாழ்க்கை நடைபெற்று வருதலால், தாம் உணர்வதொடு பிறர்க்கு உணர்த்தவுங் கற்றலே பலவகையாலும் பயனுடைத்தாம். ஆனதனால், இருவகை நிலையிலும் உறைத்துப் பழகுக.

இவ் வருங்கலைப் புலமையை அடைதற்குப் புகும் போது, இதன்பயிற்சியாற் பொருள் திரட்ட வேண்டுமென்னும் எண்ணம் ஒருசிறிதுங் கொள்ளற்க. அழியாச் செல்வமாகிய இப் பெறற்கரும்

பேற்றை அழியுஞ் செல்வத்தின் பொருட்டுப் பயன்படுத்தத் துணிந்தால் அதனாற் பல அல்லல்கள் விளையும். இவ்விழிந்த வேட்கையோடு அதனைப் பயிலும்போது அஃது எளிதிற் கைவராது. அன்றி அது வரினும், பொருள் தொகுத்தலின் கண்ணே வேட்கை சென்று பலவகைச் சூதுகளையும் ஏமாற்றங்களையுஞ் செய்யத் துணிந்தால், இவ்வரும் பெருங் கலைப்புலமை வெறும் பொய்யே யென்று பலரும் இகழ்தற்கு இடஞ்செய்யும். ஆனது பற்றி, இக்கலைப் புலமையை அதன் அரும்பெரும் பேற்றின் பொருட்டே உளம் விழைந்து பயின்று தேர்ச்சிபெறல் வேண்டும். இதிற்றேர்ச்சி பெற்று உண்மைக்குப் பாடுபட்டு வருபவர்களின்றன்மை நாளேற நாளேற எல்லார்க்குந் தானாகவே தெரிய வருமாதலால், அவ்வருமை தெரிந்தவர்கள் அவர்க்கு வேண்டிய அளவு பொருளுதவி செய்வர். உண்மைக்கு உழைத்துவந்தால் எல்லாம் வல்ல ஐயன் அதற்கு உற்றவர்களைக்கொண்டு கட்டாயம் உதவிபுரிவா னென்பது திண்ணம். ஆதலாற், பொருளை எதிர்பாராமலே இவ்வரிய கலைப் புலமையை விருப்பத்தொடு பயின்றுவருக உணர்வோர் உணர்த்துவோராகிய இருவரும் இங்ஙனம் பொருளை அவாவாது பழகிவருவராயின், அவர் தமது பழக்கத்தின் உறைப்புக்குத் தக்கபடி கண்டாரெல்லாம் வியக்கத்தக்க முக்காலவுணர்ச்சியினை அடைந்து பல நலங்களைப் பெறுவர்.

இனி, உணர்வோர் உணர்த்துவோரான இருவரும் உண்மையன்பிற் பிணிக்கப்பட்டவராய் இருந்து இவ்வருங்கலைப் புலமையிற் பயில்குவராயின் இதிற் றேர்ச்சி பெறுவது அவ் விருவர்க்கும் மிக எளிதில் முடியுமென்பதும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இதற்குச் சான்றாக, உயர்ந்த காதல் அன்பிற் கட்டுண்ட காதலரின் உயிர் வாழ்க்கையை எடுத்துக் காட்டலாம். காதலனுங் காதலியும் உடம்பால் இருவர்போற் றோன்றினும் உயிரால் ஒருவரேயாய் வாழ்க்கை செலுத்துஞ் சிறப்பினை உன்னித்துக் காண்பேமாயின், அவரில் ஒருவர் நினைக்கும் நினைவினையே மற்றவரும் நினைத்தலும், ஒருவர் ஒன்று சொல்ல நாவெடுக்கும் போதே மற்றவரும் அதனையே சொல்லுதலும் ஒவ்வொரு நேரமும் நம் எதிரே நடைபெறுதலை உணர்ந்து களிக்கலாம். எனவே, இருவர் நினைவை

ஒன்றுபடுத்துதற்கு அவர்க்குள் நிகழும் உயர்ந்த அன்பே ஒருபெருங்கருவியா யிருக்கின்றது. அன்பில்லாத இருவர் எத்துணை தான் இக்கலைப் புலமையிற் பழகினாலும் அவர் இதிற் றேர்ச்சிபெறுதல் அரிதேயாகும். அன்புடைய இருவர்க்கு இக் கலைப் புலமை இயற்கையாகவே எளிதில் வாய்ப்பதாய்க் காணப்படுமானால், அவர் பின்னும் இதனைக் கருத்தொரு மித்துப் பழகித் தேர்ச்சிபெற நினைந்து முயல்வராயின் அஃது அவர்க்கு எவ்வளவு விரைவிற் கிட்டுமென்பதனை நாம் சொல்லுதலும் வேண்டுமோ! அவ்வாறாயின், இக்கலைப் புலமையைப் பெறுதற்கு அன்பு ஒன்றுமே போதாதோ, இதனின் வேறாக மேற்சொல்லிய முறைகள் எல்லாங் கைப்பற்றுதல் வேண்டுமோவெனின், அன்பின் முதிர்ச்சியால் இருவர் நினைவு ஒன்றுபட்டுநின்றாலும், இக் கலைப்புலமையை முற்றும் பெறுதல் இயலாது; அன்பொடு கூட அறிவும் உடையராய் மிகமுயன்று மேற்சொல்லிய முறைகளையுந் தவறாமற் பின்பற்றி வந்தால் மட்டுமே இதில் எவரும் வியக்கும்படி தேர்ச்சி யடையலாம். இஃது எது போலவெனிற் காட்டுவாம். ஒரு வயல் நிலம் மிகுந்த நீரொடுகூடி மென்பதப்பட்டு நின்றவளவானே பயிரை விளைத்துத் தராது; அதன்கண் நல்ல விதைகளையிட்டுக் களைபிடுங்கிப் பயிரைப் பாதுகாத்து வந்தால் மட்டுமே பயனடையலாம்; அதுபோல, இருவர் உள்ளமும் அன்பினால் நனைக்கப்பட்டு மென்பதமாய் நின்றாலும், அதுதானே இக்கலைப் புலமையை முற்றும் பயவாது; கூட அறிவென்னும் வித்தை இட்டு இழிக்கத்தக்க பேரவா செற்றம் கலக்கம் முதலியவற்றைக் களைந்து ஓயா முயற்சியால் அப் பழக்கத்தைப் பாதுகாத்து வந்தால் மட்டுமே இப்புலமை பிழைபடாமற் பயன்றரும். இருவர் உள்ளமும் அன்பால் ஒருங்கு இயைந்து நிற்றல் இக் கலைப்புலமையைப் பெறுதற்கு ஒரு சிறந்த கருவியாகு மென்றுமட்டும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். அதுநிற்க.

## 8. முதற் பழக்கம்

உணர்வோரும் உணர்த்துவோருமான இருவருந் தொலைவான இடங்களிலிருந்து ஒருவரது நினைவை மற்றவர் தெரியத் துவங்குமுன், முதற்முதற் கிட்டஇருந்து அதனை அறிதற்குப் பழகல்வேண்டும். இருவரும் ஓர் அறையில் அல்லது ஒரு வீட்டி லிருந்துகொண்டே பழகலாம். உணர்த்துவோர் கண்ணைத் திறந்துகொண்டு நிமிர்ந்த நிலையில் ஒன்றின்மேல் அமர்ந்து ஒரு பொருளை உறுத்து நினைக்கவேண்டும்; அந்நினைவை ஏற்கு நிலைமையிலிருந்து உணர்வோர் ஒரு சாய்மானக் குறிச்சியிற் சாய்ந்த படியாய் அவரெதிரே அருகில் இருந்து கண்ணை மூடிக் கொண்டு தமது உள்ளத்தில் எந்த நினைவு வலிவாய் வந்து தோன்றுகின்ற தென்பதனைப் பார்த்தல் வேண்டும். இவ்வாறிருவரும் பழகுகையில் உணர்த்துவோர் தம் மெதிரே யிருக்கும் உணர்வோரது வலதுகையைத் தமது இடதுகையிலும், அவரது இடதுகையைத் தமது வலது கையிலும் பிடித்துக் கொள்ளுதல் நன்று. அல்லது உணர்த்துவோர் தமது வலது உள்ளங்கையை உணர்வோரின் நெற்றிமேல் வைத்திருக்க லாம். அது கூடாவிட்டால் ஒருமுழ நீளமுள்ள ஒருகோலை அல்லது ஒரு கம்பியை இருவரும் பற்றிக்கொண்டும் இதனைப் பழகலாம். இங்ஙனம் ஒருவரை யொருவர் தொட்டுக் கொண்டாவது, அல்லது இருவரையுந் தொடர்புபடுத்தும் ஒரு நீண்ட பொருளைப் பற்றிக்கொண்டாவது அவர்கள் பழக வேண்டுவது ஏன் என்றால், மூளையின் அசைவால் நரம்பின் வழியே வெளிப்படும் நினைவுகளானவை தொட்டுக் கொண்டிருக்கும் மற்றவர் கைவழியே ஏறி மூளையிற் சென்று தங்கி அவர்க்கும் அந் நினைவுகளை எழுப்புவிக்கும். அவ்வாறு தொட்டுக் கொண்டிராவிட்டால் அந்நினைவுகள் இடைவெளியிற் சிதறிப்போம். ஓரிடத்திலிருந்து செலுத்தப்படும் ஒரு செய்தி இடையேயுள்ள கம்பியின்வழியே விரைந்து சென்று

வேறோர் இடத்திற் புலப்பட்டுத் தோன்றுவதுபோல, ஓரிடத்திற் பிறக்கும் ஒரு நினைவும் அவரொடு பிணைக்கப்பட்டிருக்கும் மற்றவர் கைவழியே சென்று ஏறும். இருவர்க்கும் இடையே இவ்வாறு தொடர்பு செய்து கொண்டு இக் கல்வியைப் பழகப் பழகச் சிலநாட்களில் இடையே தொடர்பு படுத்துங் கருவி இல்லாமலே ஒருவர் நினைவை மற்றொருவர்க்கு ஏற்றுவதும், ஒருவர் நினைவை மற்றொருவர் ஏற்பதும் மிக எளிதிலே நிறைவேறும். துவக்கத்தில் இங்ஙனம் இருவருந் தொடர்புபட்டு நின்று இதனைப் பழகுதலே இயற்கை முறையாமென்பது மக்களினுந் தாழ்ந்த சிற்றுயிர்களிடத்துங் கண்டறியலாம். கண்ணுங் காதும் இல்லாத எறும்புகள் விரைந்து ஓடும் போது எதிரே வரும் எறும்புகளுடன் சிறிதுநேரந் தலையொடு தலை முட்டிநின்று பிறகு ஒதுங்கிப் போவதைப் பாருங்கள்! இவை ஏன் இங்ஙனம் ஒன்றையொன்று முட்டிச் செல்கின்றன என்று சிறிது ஆராய்ந்து பார்த்தால், இவை தாம் நினைத்ததனை மற்றையவற்றிற்குந் தெரிவித்தற் பொருட்டேயா மென்பதைக் கண்டுகொள்ளலாம். இரண்டு எறும்புகள் ஒன்றையொன்று முட்டி நிற்குங்கால் ஒன்றன் நினைவு மற்றொன்றிற்கு எளிதிற் புலனாகின்றது. இங்ஙனமே பண்டை நாட்களிற் பேசத் தெரியாத நிலையிலிருந்த பழைய மக்கள் தமக்குள் ஒருவர் நினைவைப் பிறர்க்கு அறிவிக்கவேண்டினால் இருவரும் எதிர் எதிரே நெற்றியொடு நெற்றி சேர்த்துச் சிறிதுநேரம் நின்று அதனை அறிவித்துக் கொள்வர்களென்று பழைய நாள் மக்கள் வரலாற்றை ஆராய்ந்து நூலெழுதுவோர் கூறுகின்றார்கள். தங் கருத்தைப் புலப்படுத்துதற்குச் சொற்கள் அறியாதிருந்த முன்நாளில் மக்கள் தமது நினைவைப் பிறர்க்கு நினைவின் அளவானே உணர்த்தும் ஆற்றல் உடைய ராயிருந்தனர்; ஆனால், அச் சிறந்த ஆற்றல் அவர்கள்பேசத் தெரிந்துகொண்ட உடனே மழுங்கிப் போயினது; மழுங்கினாலும் அது முற்றும் இல்லாமற் போகவில்லை. நெற்றியோடு நெற்றியை வைத்தாயினும், நெற்றி மேற் கையை வைத்தாயினும், அன்றிக் கையொடு கை பிணைந்தாயினும் ஒருவர் நினைவைப் பிறரொருவர்க்கு அறிவிக்கத் தொடர்ந்து பழகினால் மழுங்கிக் கிடக்கும் இவ்வாற்றல் மக்களிடத்துத் திரும்பவும் விளங்கித் தோன்றுமென்பது திண்ணம்.

## 9. இடம் உணர்தல்

இங்ஙனம் உணர்வோரும் உணர்த்துவோரும் இயைபு பட்டு நின்றபின் இவர்கள் இருக்கும் அறையின் ஏதேனும் ஒரு மூலையை அல்லது ஒரு சாளரத்தை உணர்த்துவோர் கருத்து ஊன்றி நினைக்க வேண்டும். அவ்வாறு நினைக்கும் போது தமது நினைவு உணர்வோர் உள்ளத்திற் சென்று தோன்ற வேண்டுமென்றும் விரும்புக. இங்ஙனம் உறுத்து நினைத்து விரும்பவே, அவர் நினைத்தது உணர்வோர் உள்ளத்தில் வந்து தோன்றும். தோன்றியவுடனே உணர்வோர் அம் மூலையை அல்லது சாளரத்தை மெல்லச் சென்று தொடக்கடவர். அதனைத் தொடுதற்குச் செல்லுகையில் உணர்த்துவோர் தாம் நினைக்கும் மூலையை அல்லது சாளரத்தை நோக்கித் தமது பார்வையையும் நினைவையும் திருப்புக. இப்படிச் செய்தால் உணர்வோர் குறி தவறாமல் அவர் நினைத்தவாறே சென்று அவ்விடத்தைத் தொடுவர். அவரது நினைவு இவருக்குச் செவ்வனே புலப்படாமற் போக, இவர் தவறான இடத்தை நோக்கிச் செல்வராயின் 'இது பிசகு' என்று இவருக்குத் தோன்றும், அப்படித் தோன்றுகையில் அம் முகமாய்ச் செல்லாமற் சிறிதுநின்று குறிப்பிட்ட இடம் உள்ளத்திற் புலப்படுகிற தாவென்று அமைதியோடு பார்க்க வேண்டும். செவ்வனே அது புலப்படுமாயின் 'இது தான் குறிப்பிட்ட இடம்' என்னும் உறுதியுண்டாம். இங்ஙனமே தொடர்பாகச் சில பல நாட்கள் அருகிலுள்ள இடங்களையும், அதன்பிற் சிறிது அகன்றுள்ள இடங்களையும் நினைத்து நினைத்து இருவரும் பழகிவருதல் வேண்டும். உணர்வோர் தாமே கண்ணை மூடிக்கொண்டு உணர்த்துவோர் நினைவுகளை அறிந்து காட்டலா மென்றாலுஞ், சில நேரங்களில் அவர் தம்மை மறந்து தற்செயலாய்க் கண்ணைத் திறந்துவிடுதலுங் கூடும். ஆதலால், இது நிகழாமைபொருட்டுக் கண்களைத் துணியால் நன்றாக

*மறைத்துக் கட்டிக்கொள்ளுதல் நலம் உடைத்து. கண்களை மூடுதலானுந் திறவாமல் மறைத்துக் கட்டுதலானும், மனங் கண்ணின்வழியே புறப்பொருள்களைப் பற்றி ஓடும் ஓட்டந் தவிர்ந்து அகத்தே ஒய்ந்துநிற்கும்; அப்போது அதனை ஒருமுகப்படுத்தித் தானே வந்து தோன்றும் நினைவினை உணருமாறு பயிற்றுதல் எளிது. அது நிற்க.*

## 10. பொருள்களை உணர்தல்

*இனி, மேற்குறித்தவாறு சிலகாலம் பழகியபின், இடங்களை அறியும் ஆற்றல் எளிதிலே உண்டாகும். அதன்பின், இடங்களில் உள்ள பொருள்களை நினைத்து உணர்த்தவும் உணரவும் பழகத் துவங்குக. இப்பழக்கத்தின் முதலில் உருவத்தாற் பெரிய பொருள்களை நினைத்தல்வேண்டும். ஏனென்றால், மனமானது எந்நேரமுங் கண்ணின் வாயிலாகப் புறத்தே யுள்ள நிலம் மலை கடல் மரம் வீடு மாடு குதிரை யாடு மக்கள் முதலான பெரும் பொருள்களின் உருவத்தையே அறிந்து வருதலால், அப்பொருள் களில் ஒன்றனிடத்தே அஃது உறைத்து நிற்றல் வருத்தமில்லாத செயலாம். ஆகையால், தாம் இருந்து பயிலும் வீட்டின்கண் உள்ள தட்டுமுட்டுகளில் மேசை நாற்காலி பெட்டி கடாரம் முதலியவற்றில் ஒன்றை அஃது இருக்கும் இடத்தொடு நினைந்து, அந்நினைவு உணர்வோர் உள்ளத்திற் சென்று பதியுமாறு உணர்த்துவோர் உன்னிப்பாய் ஏவுதல் வேண்டும். உடனே உணர்வோர் உள்ளத்தில் அந்நினைவு புலப்படுமாகலின், அவர் அப்பொருளிருக்கும் பக்கமாய்ப் போகத் துவங்குவர், அவ்வாறு அவர் செய்கையில் உணர்த்துவோர் மிகவும் உறைப்பாய் முதலில் அப் பொருளிருக்கும் இடத்தின் முகமாய்த் தங்கண்ணையுங் கருத்தையுஞ் செலுத்திப் பின்னர் அப்பொருளின் வடிவத்தில் தமது உள்ளத்தை முனைக்க நிறுத்தக் கடவராக. இவ்வாறு செய்தால், உணர்வோர் அந்நினைவைத் தெளிவாக உணர்ந்து அவ்விடத்திற் சென்று அப்பொருளைத் தொட்டுக் காட்டுவர். முதலில் இடத்தையும் பிறகு அதன்கண் உள்ள பொருளையும் நினைக்க வேண்டுமென்றது என்னை? பொருளைமட்டும் நினைந்தாற் போதாதோ? எனின்; உலகத்தில் உள்ள எவ்வகைப்பட்ட பொருளும் ஏதேனும் ஓரிடத்திலிருப்பதன்றி, அதனை விட்டு வேறு தனியே இருக்கமாட்டாது. எந்தப்*

பொருளை எடுத்தாலும் அஃது எங்கேயிருப்பது? என்றும், எந்த ஆளைப் பார்த்தாலும் அவர் எவ்விடத்தில் இருப்பவர்? என்றும் எல்லாரும் வினாவக் காண்கின்றோம். ஆதலால் ஒரு பொருளை அஃதிருக்கும் இடத்தொடு சேர்த்து நினைவதே இப் பழக்கத்தில் தோச்சிபெற வேண்டுவார்க்கு முதன் முதற்செயற்பாலதாகும். ஆகவே, முதலில் இடத்தையும் அதன்பின் அதிலிருக்கும் பொருளையும் நினைவிற் கொண்டு வருக.

இவ்வாறு முதலில் இடங்களையும், பின்னர் அவற்றிலுள்ள பெரும் பொருள்களையும் உணர்த்தவும் உணரவும். பழகித் தேர்ச்சிபெற்றபின், அவ்வவ் விடங்களில் உள்ள சிறு சிறு பொருள்களை உணர்த்தவும் உணரவும் முயல்க. ஒரு செப்புக்காசை யேனும் அல்லதொரு குண்டூசியை யேனும் ஓரிடத்தில் மறைத்து வைத்து அவ்விடத்தையும் அதன்கணுள்ள அப்பொருளையும் உணர்த்துவோர் செவ்வையாக நினைத்தால், உணர்வோர் அதனைக் குறிபிழையாமல் உணர்ந்து அவ்விடத்திற் போய் அதனைக் கண்டெடுப்பர்.

இடத்தின்கண் உள்ள தட்டுமுட்டுகளையும் வேறு பல பண்டங்களையும் நினைக்குங்கால் அவற்றின் வடிவத்தையும் நிறத்தையுந் தெளிவாக உள்ளத்தே காண்க. ஏனெனில், ஒரு பொருள் மற்றொரு பொருளின் வேறென்று அறியப்படுவ தெல்லாம் அப்பொருளின் வடிவத்தினாலும் நிறத்தினாலுமேயாம். தனித்தனி வடிவங்களும் நிறங்களும் இல்லாமல் எல்லாம் ஒரே வடிவாய் ஒரே நிறமாய்க் காணப்படுமாயின், நமக்குப் பகுத்துணர்ச்சியென்பதே இல்லாமற்போக, நாம் அறிவற்ற வெறுங் கட்டைபோற் கிடக்கநேரும். ஆனால், எல்லா இரக்கமும் எல்லா அருளும் உடைய இறைவனோ, நமக்குப் பகுத் துணர்ச்சியினை உண்டாக்கி நமதறியாமையினைத் தொலைப்பான் வேண்டிப் பொருள்களைப் பல வகுப்புகளாகவும், ஒரு வகுப்பினுள்ளும் ஒன்று மற்றொன்றின் வேறாகக் காணப்படு மாறும் பல வேறு வடிவும் பல்வேறு நிறமும் உடையவாம்படி அவற்றைப் படைத்தருளியிருக்கின்றான். இவ்வாறமைந்த பொருள்களின் வடிவையும் நிறத்தையும் நன்கு உற்று நோக்கி அவற்றின் அடையாளங்களை எவர்கள் நன்றாய் நினைவிற் பதித்துக் கொள்ளுகின்றார்களோ அவர்களுடைய அறிவு

சொல்லுதற்கரிய விளக்கம் மிகுந்து துலங்குவதாகும். ஐம்பொறிகளிற் சிறந்த கண்ணுக்குப் புலனாகும் வடிவும் நிறமும் பொருள்கடோறும் வேறு வேறாய் இருத்தல் போலவே, செவி வாய் மூக்கு மெய் என்னும் ஏனைய பொறிகளுக்குப் புலனாம் ஓசை சுவை நாற்றம் ஊறென்னும் ஏனைய பண்புகளும் பொருள்கடோறும் வேறுவேறாய்க் காணப்படுகின்றன; இவற்றையும் உன்னித்துப் பார்த்து நினைவில் அமைத்துக் கொள்கின்றவர்களுக்கு அறியாமை தேய்ந்து அறிவு மேன்மேற் கிளருதல் திண்ணமேயாம். எனவே, கண் முதலான பொறிகளுக்கும் புலனாகும் வடிவம் நிறம் முதலான பண்புகளை ஊன்றி நினைக்கவே, அப்பண்பு களையுடைய பொருள்கள் நன்கு அறியப்பட்டனவாய் என்றும் அறியாமல் நினைவில் ஏறிநிற்கும். இவ்வுண்மை, 'தொலைவில் உணர்தல்' என்னும் இவ்வரிய கல்வியை நன்கு ஆராய்ந்து கைகண்ட ஆங்கிலப் புலவர்களால் இனிது வலியுறுத்தப்பட் டிருக்கின்றது. ஆனதனாலே தான், கட்புலனாகாக் கடவுளைத் தொழுமிடத்தும், அழகியதோர் ஆண்மகன் வடிவாகவேனும் அல்லதொரு பெண்மகள் வடிவாக வேனும் ஓர் உருச் சமைத்து, அவ்வுருவிலே தங் கண்ணையுங் கருத்தையும் பதியவைத்துப், பின்னர்ப் புறத்தே காணும் அவ்வுருவை யொத்ததோர் அறிவுருவை உள்ளத்தின்கண் இடையறாது வருவித்து அதனையே தம் முழுமுதற் றாயுந் தந்தையுமாய்க் கரைந்து கரைந்து எண்ணி அன்பொடு வழிபட்டுவரின், அவர் நினைந்த அவ்வுருவாகவே இறைவன் வெளிப்பட்டு அவரைத் தனது திருவடிப்பேரின்பத்தில் இரும்புண்ட நீரிற் றிரும்பாவகைசெய்து வைத்தருளுவன் என்று உண்மை அறிவு நூல்கள் கூறுவவாயின. இவ்வுண்மை உணராதார் தாம் இவ்வுண்மையினும் மேற்பட்ட தொன்றனை அறிந்தார்போல் மயக்கங் கொண்டு, கடவுளை ஏதொரு பண்புமில்லாத பொருளாக வைத்து வழிபடுதலே சிறந்ததெனச் செருக்கிக் கூறுவர். கடவுள் ஒரு பொருளானால் அதற்கும் பண்புகள் இருத்தல் வேண்டும்; பண்பில்லாத பொருள் எக்காலத்தும் யாண்டும் இல்லை. இவ்வாறாக, அதனைப் பண்பற்ற பொருளாக நினைத்தல் வேண்டுமெனக் கூறுதல் 'மலடி பெற்ற மைந்தன் முயற்கொம்பிலேறி வானிற் பூத்ததொரு தாமரையைப் பறித்தான்' என்று கூறும் படுபொய்யேபோல் வெறும் பொய்யாய் ஒழிவதன்றி வேறில்லை. ஒருபொருள்

ஒருவரால் அறியப்படுதலெல்லாம் அப்பொருளின் வடிவு நிறம் சுவை ஓசை நாற்றம் முதலான பண்புகளின் வாயிலாகவேயாம். இப்பண்புகள் இல்லையானால் இவற்றையுடைய பொருளும் இல்லையாம். அதனால் இப்பண்புகள் இல்லாததொரு பொருள் எஞ்ஞான்றும் எவரானும் அறியப்படுவதில்லை. ஆதலாற், கடவுளும் பண்பற்ற பொருள் எனின் அதுவும் ஒருவாற்றானும் மக்களால் அறியப்படுவதில்லை. மற்று, உலகங்களையும் உடம்புகளையும் ஓவாது படைக்கும் முதற் கடவுள் ஒன்று உண்டென்பது மெய்யறிவுடைய சான்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தமையின், அஃது எல்லையற்ற அழகும் அறிவும் அன்பும் ஆற்றலும் வாய்ந்த அருள் உருவம் உடைய ஒரு மெய்ப்பொருளேயா மென்பதும், அஃது இப்பண்புகளின் வாயிலாகவே உணரப் படுமென்பதுங் கடைப்பிடிக்க. ஆகவே கடவுளை அருளுருவம் அல்லது அறிவுருவம் உடைய எல்லையற்ற அழகு வாய்ந்த ஓர் ஆணாகவாவது அல்லது ஒரு பெண்ணாகவாவது வைத்து வழிபடுதலே பெறற்கரும் பெரும்பயன் றருவதாமன்றி, இதனொடு மாறுபட்டுரைப்பன வெல்லாம் ஒரு சிறிதும் பயன்படாவென்பது ஆழ்ந்தாராய் வார்க்குத் தெற்றென விளங்காநிற்கும். அதுநிற்க.

இத்துணையுங் கூறியதுகொண்டு, தாம் நினைக்கும் ஒரு பொருளின் வடிவத்தையும் அதன் நிறத்தையும் எவ்வளவு தெளிவாக உணர்த்துவோர் தமதுள்ளத்திற் காண்கின்றனரோ அவ்வளவு தெளிவாக உணர்வோரும் தமதுள்ளத்தில் அவற்றைக் காண்குவர் என்று அறிதல் வேண்டும். நன்றாய்ப் பழுத்த குடகுநாரத்தம் பழம் ஒன்றை உணர்த்துவோர் நினைக்கப் புகுவராயின் அதன் உருட்சி வடிவத்தையுந் தோலின்கண் உள்ள பொருட்டுகளையும் மஞ்சள் கலந்த அதன் செந்நிறத்தையும் பிழைபடாமல் நினைவில் இருத்தக்கடவர். இங்ஙனம் நினைத்தால் உணர்வோரும் அதனை உடனே தமதுள்ளத்தின் கட் காணப்பெறுவர். இன்னும் இந்நினைவினை உரப்படுத்தல் வேண்டினால் அப்பழத்தின்கட் கட்புலனாய் நின்ற வடிவத் தையும் நிறத்தையுமேயன்றி, நாவிற்கும் மூக்கிற்கும் புலனாகும் அதன் தீஞ்சுவையையும் நறுமணத்தையுங் கூடச்சேர்த்து நினைவிற்குக் கொண்டுவருக. இவ்வாறு செய்தால் உணர்வோர் உள்ளத்திற் குடகுநாரத்தம் பழத்தைப்பற்றிய நினைவன்றி

வேறெதுவும் அந்நேரத்திற் றோன்றாது. இங்ஙனமே எந்தப் பொருளை நினைந்தாலும், அது கட்புலனாம் வடிவும் நிறமும் உடையதாதலொடு, மற்றைப் பொறிகளுக்கும் புலனாகுஞ் சுவை ஊறு ஓசை நாற்றம் என்பவற்றில் எவ்வெவை வாய்க்கப் பெற்றிருக்கின்றனவோ அவ்வவற்றையுங் கூடச் சேர்த்து நினைந்தால், அப்பொருளின் பண்புகள் உணர்த்து வோருள்ளத்திற் றெளிவுபெறத்தோன்றி அவர்தம் அறிவைத் துலங்குவதோடு, உணர்வோருள்ளத்திலும் அந்நினைவு விளக்கமாய்த் தோன்றி அவர் தம் அறிவாற்றலையும் மிகுதிப்படுத்தும்.

இனி, ஐம்பொறிகளிற் கண் வாய் மூக்கு என்னும் மூன்றுக்கும் புலனாகும் உருவஞ் சுவை மணம் என்னும் பண்புகளையுடைய பொருள்களெல்லாம் பருப்பொருள்களாயிருத்தலின் அவை ஒரு காலத்தில் மூன்று பொறிகளுக்கும் எளிதிற் புலனாதல் கூடும். கூடவே, இம்முப்பொறிகளுக்கும் புலனாகும் பண்புகளை ஒருங்கே நினைத்தலும் எளிதிற் செய்தல் கூடும். ஏனென்றாற் பருப்பொருள்கள் எளிதில் நினைவிற்கு வருதல் இயற்கை யாயிருக்கின்றது. மற்றுச், செவிப்புலனாகும் ஓசையோ கண்வாய் மூக்குகட்குப் புலனாகும் பருப்பொருள் போலாகாமல் மிகவும் நுண்ணியதாய் இருத்தலின் அதனை நினைவுக்குக் கொண்டு வருதல் வருத்தமான செயலாம். இங்ஙனமே மெய்யின்மேற்படுங் காற்றும் ஏனைப் பொறிகளுக்குப் புலனாகாத நுண்மையுடைய தாகலின், அதன் ஊற்றுணர்வினை நினைவிற்குக் கொண்டு வருதலும் அருமையுடைத்தாம். ஆயினுங் காற்றினைத்தவிர உடம்பின் மேற்படும் ஏனைப்பருப் பொருள்களை நினைத்தல் அருமையுடைத்தன்று. இங்ஙனங் கண் வாய் மூக்கு என்னும் பொறிகளுக்குப் புலனாகும் பருப்பொருள்களைத் தெளிவாக நினைத்தல் எளிதிற் கைகூடுவதாயுஞ், செவி மெய் என்னும் மற்றை இருபொறிகளுக்கும் புலனாகும் நுண்பொருள்களை நினைத்தல் எளிதிற் கைகூடுவதல்லாததாயுங் காணப்படுதலால், இதிற் பழகித் தேர்ச்சிபெற விரும்புவோர் துவக்கத்திற் கண் வாய் மூக்கு கட்குப் புலனாகும் பருப்பொருள்களையும், பிறகு செவி மெய்கட்குப் புலனாகும் நுண்பொருள்களையும் முறையாக நினைதற்குத் தொடர்பாக முயன்று வரல் வேண்டும். இங்ஙனம் பழகிவரவே மனமானது நுண்ணிய நிலையினை அடையும். அது

நுண்ணிய நிலையினை அடைந்தபின் நுண்ணிய பொருள் களைத் தெளிவாக நினைவுக்குக்கொண்டு வருதலும் எளிது.

பருப்பொருள்களைத் தெளிவுற நினைத்தல் எளிதாக இருந்தாலும் அவற்றுள் ஒன்றை நினைக்கப் புகுங்கால் உள்ளம் அஃது ஒன்றிலேமட்டும் நிலையாக நில்லாமல் ஒருநொடிப் பொழுதில் அதனை விட்டு மற்றொன்றிலும், அம் மற்றொன்றையும் விட்டு வேறொன்றிலும், அவ்வேறொன்றையும் விடுத்துப் பிறிதொன்றிலுமாக விட்டு விட்டோடும். கறங்கோலைபோல் இங்ஙனம் ஓயாது சுழலும் உள்ளம் ஒரு பருப்பொருளை நினைக்கும்போது அதனைவிட்டு வேறொன்றற்குப் போகாமல் தடைப்பட்டு நிற்பதற்கு ஓர் எளியமுறை இருக்கின்றது. அஃது யாதெனிற், காட்டுவாம். அகத்தே நினைக்கும் ஒரு பொருளின் நினைவைப் புறத்தே அதனோடு ஒப்பதான ஒன்றைச் செய்யும்படி ஏவினால் அஃது அப்பொருளைவிட்டு வேறொன்றனை நினைக்க மாட்டாது. அகத்தே நடைபெறும் ஓர் அறிவு முயற்சியைப் புறத்தே ஒரு செயலிற் கட்டுப்படுத்தும் முறை, புறப் பொருளிலேயே எந்நேரமும் நினைவைச் செல்ல விடுத்துக் கொண்டிருக்கும் நம்மனோர்க்கு மிகவும் பயன்றருவதொன்றாம். ஒருதெங்கின் இளநீரிலே தனது மனத்தைச் சிறிது நேரம் நிறுத்திவைக்க வேண்டுகின்றவன் அதன் வடிவத்தைப் போலக் களிமண்ணிலேனும் நெட்டியிலேனுங் கல்லிலேனுங் கட்டை யிலேனுஞ் செய்யப் புகுவனாயின் அவனது மனம் அப்பொருளி ளினைவிலேயே வருத்தமின்றி நெடுநேரம் நிலைபெற நிற்கும். ஒரு பருப்பொருளின் வடிவத்தை நினைக்கும் நினைவு நிலைபெற வேண்டி அதனை யொப்பதான வடிவை வேறொரு பருப் பொருளிற் செய்து கொண்டிருக்கும் முறை சிறந்ததேயானாலும், இதனை எல்லாருஞ் செய்தல் கூடாமையால், இதனினும் உயர்ந்ததான மற்றொரு முறை எவருஞ் செய்யத் தக்கதாக இருக்கின்றது. அஃது யாதோவெனின், ஒரு கடிதத்தில் எழுதுகோலால் அதன் உருவத்தைக் கூர்ந்து எழுதலேயாகும். கல் மண் முதலியவற்றில் திரட்டிச் செய்யும் உருக்களைக் காட்டினுங், கடிதத்தில் துகிலிகையால் அவற்றை எழுதிப் பார்க்கும் முறை எத்திறத்தவரும் எளிதிற் செய்தற்கு இசைந்ததாய் இருப்பதுடன் அஃது அறிவினையும் மிகக் கூர்மைப் படுத்துதலால் உயர்ச்சி வாய்ந்ததாகவும் இருக்கின்றது.

எங்ஙனமென்றாற், பருப்பொருள்களெல்லாம் அகலம் நிகளம் பருமை என்னும் மூன்றளவு உடையனவாகும். ஆகையால், ஒரு பருப்பொருளின் வடிவத்தைக் கல் மண்போன்ற வேறொரு பருப்பொருளிற் செய்து அமைத்தல் அத்துணை வருத்தமான செயல் அன்று. ஆனால், அகலம் நிகளம் மட்டும் உடைய ஒரு கடிதத்தின் மேற்பரப்பின்மேல், அகலம் நிகளம் பருமை என்னும் மூன்றளவு உடைய ஒரு பருப்பொருளின் வடிவத்தைப் பிழைபடாமல் எழுதிக் காட்டுதல் பெரிதும் அருமையான செயலாம். அகலம் நிகளம் பருமை என்னும் மூன்றளவுடைய ஒரு குதிரையின் வடிவை, அங்ஙனமே மூன்றளவுடைய ஒரு முருக்கமரத்திற் றிரட்டி யமைத்தல்போல, இரண்டளவுடைய கடிதத்தின் மேற்பரப்பிலே அதன்வடிவை வரைந்து காட்டுதல் எளிதன்று. ஒருபருப்பொருளின் திரட்சி வடிவைக் கடிதத்தில் வரைந்து காட்டுதற்கு நுண்ணிய பார்வையுங் கூரிய அறிவும் முதன்மையாய் வேண்டும். அது வல்லாமலுந், தான் எழுதும் பருப்பொருளுக்கு இயற்கை நிறம் எதுவோ அதனை இசைவான சாயத்தால் விளக்கி எழுதவுங் கற்றுக்கொள்வனாயின், அவன் அறிவும் நினைவும் மிக மேம்பட்ட துலக்க முடையனவாய் உரம் பெற்றுத்திகழும். ஆதலால், ஒரு கடிதத்தின் மேல் ஒரு பருப் பொருளின் வடிவத்தை வரைந்து காட்டும் முறை அதனைப் பற்றிய நினைவை மிகவும் நிலைப்படுத்து மென்றும், அதனால் அவ் வழியிற் பழகி ஒரு நினைவைப் பிறர்க்கு உணர்த்துவோர் 'தொலைவில் உணர்தல்' என்னும் இவ் வருங்கலைப் புலமையிற் சிறந்து நிற்பரென்றும் உணர்தல்வேண்டும்.

நினைத்த பொருளைக் கடிதத்தில் வரைந்து காட்டும் இம் முறையின் மேன்மையை உற்று நோக்குங்கால், தமது நினைவைப் பிறர் மனத்தில் எழுப்ப வேண்டும். எவரும் அந்நினைவைக் கடிதத்தில் எழுதலால் அதனை எளிதில் நிறை வேற்றலாமென்று தெரிந்து கொள்ளல் வேண்டும். உணர்த்துவோர் தாம் நினைத்த ஓர் இளநீரை ஒரு கடிதத்தில் வரைந்துகொண்டிருக்க, உணர்வோரும் அதனையே தமது கடிதத்திலும் வரைவர். உணர்த்துவோர் ஒரு குதிரையை எழுத உணர்வோரும் உடனே அதனைத் தமது கடிதத்தில் வரைவர். உணர்த்துவோர் நாரத்தை எலுமிச்சை முதலான பழங்களின் பெயரையேனுந், தென்னை மா பலா வாழை முதலான மரங்களின் பெயரையேனுந், தாம் நினைத்த

ஒரு நண்பரின் பெயரையேனும், ஒன்று இரண்டு முதலான எண்களின் பெயரையேனும், ஞாயிறு திங்கள் முதலான நாட்பெயரையேனும், மேசை நாற்காலி முதலான தட்டு முட்டுகளின் பெயரையேனும், வட்டம் சதுரம் கோணம் முதலான உருவங்களையேனும், வேறு விலங்கினங்களின் உருவங்கள் அல்லது பெயர்களையேனுந் தமது கடிதத்திற் குறிப்பிடுவராயின், உணர்வோரும் அவற்றைப் பெரும்பாலும் பிழைபடாமற் றமது கடிதத்திலுங் குறித்துக் காட்டுவர். இதனை நன்கு ஆராய்ந்து பார்த்த அறிஞர் ஒருவரின்[1] ஆராய்ச்சிகள் பலவற்றுள் ஒன்றனை இங்கு எடுத்துக் காட்டுவாம்; உணர்த்துவோர் இருவரை ஒரு பக்கத்திலும், உணர்வோர் ஒருவரை மற்றொரு பக்கத்திலும் இருக்கவைத்து, உணர்வோர் எந்த வகையானும் உணர்த்துவோரையும் அவர் செய்வன வற்றையும் பாராதபடி அவர் கண்களை நன்றாய் மறைத்துக் கட்டிய பின்னர், உணர்த்துவோர் ஒருவர் கையிற் சதுரவடிவம் வரையப்பட்ட ஒரு கடிதத்தையும், மற்றொருவர் கையிற் சாய்ந்த சிலுவை வடிவம் வரையப் பட்ட மற்றொரு கடிதத்தையுங் கொடுத்து, அவ்விருவரும் அவ்வடிங்களை உன்னிப்பாய்ப் பார்க்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவ்விருவரில் ஒருவர் மற்றவர் கையிலுள்ள உருவத்தினை அறியார். அவ்விருவருந் தத்தங்கடிதத்தில் உள்ளதை வாய்பேசாமல் உறுத்து உன்னிப் பாய்ப் பார்க்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டனர். அந் நேரத்தில் தமது மனத்தில் எது தோன்று கின்றதோ அதைத் தெரிவிக்கும் படியாகவுங் கண் கட்டப் பட்டிருக்கும் உணர்வோர் கற்பிக்கப்பட்டார். சிறிது நேரத்தில் உணர்வோர், யான் இரண்டு உருவங்களைக் காண்கின்றேன் - முதலில் ஒன்றையும் பிறகு அதன்கீழ் மற்றொன்றையுங் காண்கின்றேன். நான் எதனை வரைவதென்று தெரியவில்லை. நான் இரண்டில் ஒன்றைத் தெளிவாய்க் காணக்கூடவில்லை. என்றனர். அதன்மேற், கண்டதைக் கண்டபடியே வரையும்படி கேட்டுக கொள்ளப்படவே, அவ்வுணர்வோர் ஒரு சதுரத்தை எழுதி அதனுட் சாய்ந்த ஒரு சிலுவையை எழுதிக் காட்டினர். இங்ஙனம் எழுதியது ஏன் என்று கேட்டபோது, ஒரு சதுரத்தினுட் சாய்ந்த ஒரு சிலுவையைத் தான் எழுதியதன் வகை தமக்கே தெரியாதென்று உரைத்தார். ஆயினும், அதன் உண்மை

இது; உணர்த்துவோர் இருவரும் ஒரே காலத்திற் றனித்தனியே நினைத்த இருவேறு வடிவங்களும் ஒன்றோ டொன்று கலந்து உணர்வோர் உள்ளத்திற் றோன்றினமையால், அவர் தாங் கண்டவாறே அவை யிரண்டையும் ஒன்றினுள் ஒன்றாய் வரைந்து காட்டினர். இதனால் நாம் அறியற்பாலதும் ஒன்று உளது; உணர்வோர் ஒருவராய் இருக்க உணர்த்துவோர் பலராய் இருந்து பலவற்றை நினைப்பராயின், அவை யெல்லாம் ஒன்றோ டொன்று கலந்து ஒரு கும்பலாய்த் தோன்றிக் குழப்பத்தை வருவிக்கும். ஆகையால் இக் கலைப் புலமையைப் பெறுதற்குப் பழகுகையில், உணர்த்துவோர் ஒருவரும் உணர்வோர் ஒருவருமாய் இருந்து பழகுதலே குழப்பமின்றி இதனைத் தெளிவாய் உணர்ந்து தேர்ச்சி பெறுதற்கு ஏதுவாம் என்க. எதனை நினைந்தாலும் அதனை ஒரு கடிதத்தில் வடிவமாகவோ அல்லது பெயரளவாகவோ உணர்த்துவோர் எழுதுவராயின், அதனைப் பற்றிய அவரது நினைவு அதனினின்றுங் கலையாமல் அதன்கட் சிறிது நேரமேனும் ஒன்றுபட்டு நிற்குமாதலால், அதனை உணர்வோர்க்கு அது செவ்வனே புலப்பட்டுத் தோன்றும். உணர்வோர் உணர்த்துவோராகிய இருதிறத்தினர்க்கும் நினைவு வலுப்பட்டு இக் கலைப்புலமைத் தேர்ச்சியை உண்டுபண்ணும் வரையில், தாம் நினைக்கும் எதனையுங் கடிதத்திலிட்டு எழுதும் முறையைக் கடைப்பிடித்தல் வேண்டும். தமது நினைவு வலுப்பட்டபின் கடிதத்தின் உதவி வேண்டாமலே ஒருவரது நினைவை மற்றவர் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

இனி, உணர்த்துவோர் பலராயிருப்பினும் அப்பலரும் பல நினைவுகளை உடையராகாமல் ஒரு பண்டத்தையே நினைக்கும் ஒருநினைவே உடையரானால், அந்நேரத்தில் அதனை உணர்வோர் பிழைபடாமல் அதனை நன்குணர்ந்து உரைப்பர். ஓர் ஊரிலிருந்த ஒரு சமய குருவின்மக்கள்[2] முற்பிறவியிற் செய்த நல்வினையால் பிறப்பிலேயே இக்கலைப்புலமையில் தேர்ச்சி பெற்று விளங்கினர். அச் சிறு பிள்ளைகட்கு வாய்த்த இவ்வருங் கலைப்புலமைத் திறத்தை ஆராய்ந்து பார்க்கும் பொருட்டுச் சென்ற ஓர் அறிஞர்[3] அச் சிறுவரது திறத்தை ஆராய்ந்து பார்த்த ஆராய்ச்சிகள் பலவற்றுள் இதுவும் ஒன்று; அச் சிறுமகாரில் ஒருவர் ஓர் அறையிற் போய்க் கதவைச் சாத்திக் கொள்ளும்படி கற்பிக்கப்பட்டார். அதற்கு அடுத்த மற்றோர்

அறையின் கண் அவ்வீட்டிலுள்ள குடும்பத்தாரை இருக்க வைத்து, அவ்வறிஞர் அந்நேரத்திற் றமக்குத் தோன்றிய ஒரு பொருளைச் சிறிது நினைத்துப் பின்னர் அதன் பெயரை ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதி, அதனை அங்கிருந்த குடும்பத் தார்க்குக் காட்டி, எவரும் வாய் பேசாமலே அதிலெழுதப் பட்ட பண்டத்தினை ஒருமித்து நினைக்கும்படி கேட்டுக் கொண்டார். அவர்கள் எல்லாரும் அவர் சொல்லியபடியே சிறிதும் வாய்பேசாதிருந்து அக்கடிதத்திற் குறிப்பிட்ட பண்டத்தை நினைந்த சில நேரத்திலெல்லாம், பக்கத்து அறையிலிருந்த சிறுபிள்ளை கதவைத் திறந்து கொண்டு வருவது கேட்டது; உடனே அடுத்த அறையிலிருந்த அனைவரும் இருக்கையினின்று அசையாமலும் வாய் பேசாமலும் அத் துண்டுக் கடிதத்தை மறைத்துக் கொள்ளவும், அக் குழந்தை இவர்களிருந்த அறைக்குள் வந்து அவர்க ளெல்லாரும் ஒன்றாய் நினைத்த அப் பண்டத்தின் பெயரைச் சொல்லிற்று. இதனை அடுத்துச் செய்த ஆராய்ச்சிகளுள், அடுத்த அறையிலிருந்த குடும்பத்தவர் எல்லாம் அவ் வீட்டிலுள்ள பண்டங்களில் ஏதேனும் ஒன்றை ஒரு காலத்தில் ஒருமித்து நினைக்கவும், நினைந்த அப் பண்டத்தை அச் சிறு பிள்ளை தானே அறிந்து எடுத்து வந்து கொடுக்கவும் கற்பிக்கப்பட்டனர். கற்பிக்கப் பட்டபடியே அவர் அடுத்தடுத்து நினைந்த பண்டங்கள் ஒவ்வொன்றையும் அப் பிள்ளை தவறாமல் எடுத்தெடுத்து வந்து கொடுத்தது. இங்ஙனமாக அவ்வறிஞர் ஆறு நாட்கள் வரையில் அவர்களோடிருந்து ஆராய்ந்து முந்நூற்றுப் பன்னிரண்டு ஆராய்ச்சிகளுஞ் சிறிதும் பிழைபடாமல் நிறைவேறின. இவற்றை எண்ணிப் பார்க்குங்கால் உணர்த்துவோர். பலராயிருப்பினும் அவர் ஒரு காலத்து ஒரு பண்டத்தினையே உன்னிப்பாய் ஒருமித்து நினைப்பராயின், அதனை உணர்வோரும் அதனை உள்ளவாறே பிழையாமல் உணர்வரென்னும் உண்மை நன்கு பெறப்படும். உணர்வோர் அறிவும் மேற் பிறவியிற் செய்த நல்வினைப் பயத்தாலும் இப் பிறவியிற் செய்து கொண்ட பழக்கத்தாலும் நன்கு தெளிவடைந்திருத்தல் வேண்டும்.

இனி, உணர்த்துவோர் ‘யோகநித்திரை’ என்னும் அறிதுயில் வாயிலாக உணர்வோரது அறிவைத் தெளிவடையச் செய்து அவரை அருகில் இருத்தியும், அன்றித் தொலை

விலிருக்கச் செய்துந் தாம் நினைப்பனவற்றை அவர் பிறழாமல் நினைக்கும்படி செய்யும் மற்றொரு நன்முறையும் உண்டு. உணர்த்துவோர் முதற்கண் நல்லதொரு முறையால், உணர் வோரை அறிதுயிலிற் போகச் செய்து, அதனால் அவரது நினைவு தமது நினைவின் வழிப்பட்டு நிற்கச் செய்துகொள்ளல் வேண்டும். அங்ஙனம் அவரை அறிதுயிலிற் செலுத்துதற்கு இசைவான நன்முறைதான் எதுவோவெனின்; அதனைக் காட்டுதும்.

### அடிக்குறிப்புகள்

1. Professor Lodge, University College, Liverpool.
2. The Children of Rev. Mr. Creery of Boston
3. Professor Barrett.

## 11. அறிதுயில் வருவிக்கும் முறை

*கொளுத்திய ஒரு மெழுகுத் திரியையேனும், பளபளப்பாக வுள்ள ஒரு வெள்ளிக் காசையேனுந், தெளிவான ஒரு பளிங்கு உருண்டையையேனும் உணர்த்துவோர் தாமே கையிற் பற்றிக் கொண்டாவது, உணர்வோர் சாய்ந்திருக்கும் நாற்காலியினெதிரே உள்ள ஒரு சிறு மேசைமேல் அவரது கட்பார்வை சிறிது மேல் நோக்கும் உயரத்தில் நன்றாய்த் தெரியும்படி வைத்தாவது அவர் அதனைக் கண்ணிமை கொட்டாமற் பார்க்கும்படி செய்தல் வேண்டும். கட்டாயமாக இமைக்க வேண்டி யிருந்தால் அல்லாமல், உணர்வோர் சிறிதுங் கண் இமைத்தல் ஆகாது. இங்ஙனமாக அவர் சிறிது நேரம் அதனை உற்று நோக்கியபின், உணர்த்துவோர் தமது இடதுகையின் விரல்களை ஒன்றோடொன்று சேராமல் விரித்து, உணர்வோரின் பின்றலைப் புறத்தே தொட்டாவது தொடாமலாவது மேலிருந்து கீழ்நோக்கிப் பலமுறை தடவல் வேண்டும். தடவுகையில் உள்ளங்கையைக் கவிழ்த்தபடியாய்த் தடவி, இறக்கி, மறுபடியுங் கையை மேல் உயர்த்துகையில் இறக்கின வழியே நேராக மேல் உயர்த்தாமல் ஒரு பக்கச் சாய்வாய் உயர்த்துதல் வேண்டும். இவ்வாறு அடுத்தடுத்துப் பின்றலைப் புறத்தே தடவிய சிறிதுநேரத்திற்குப் பின், உணர்த்து வோர் உணர்வோரைப் பார்த்துக் கண்களை மூடிக்கொள்ளும் படி கற்பித்து, அதன் பிறகு தம் வலக்கை இடக்கை இரண்டின் விரல்களையும் ஒன்றன்மேல் ஒன்றுபடாமல் விரித்துக் கொண்டு, உள்ளங் கைகளைக் கவிழ்த்த படியாய் உணர்வோரின் நெற்றிக்கு நேரே தொட்டாவது தொடாமலாவது கீழ்நோக்கி அவரது முழங்கால் அளவுந்தடவல் வேண்டும்; அங்ஙனங் கீழ்நோக்கித் தடவிய கைகளை மறுபடியுந் தடவுதற்காக மேலுயர்த்துகையில் நேராக எதிராக உயர்த்தாமல், இரண்டு கைகளையும் பிரித்து அவர் தம் விலாப்பக்கங்களிற் பக்கச்*

சாய்வாய் உயர்த்தித், திரும்பவும் முன்சொன்னவாறே கீழ்நோக்கித் தடவுதல் வேண்டும். இங்ஙனந் தடவுகையில் 'தூக் - கம் - தூக்கம் - தூக்கம் - தூக்கம் - அயர்ந்த தூக்கம் - இனிய தூக்கம்' என்று ஆழ்ந்து நீண்ட குரலில் திருப்பித் திருப்பி மெல்லச் சொல்லுக. இங்ஙனந் திருப்பிச் சொல்லச் சொல்ல, உணர்வோர் நெடுமூச் செறிந்து தூங்கத் தொடங்குவர். இவ்வாறு அவர் தூங்கத் துவங்குவதைப் பார்த்தவுடனே, மறுபடியும் அவரது தலையிலிருந்து முழங்கால் அளவும் முன்சொல்லி யவாறே கீழ்நோக்கி ஏழெட்டுமுறை தடவி 'நல் - ல தூக்கம், ஆழ்ந்த தூக்கம், இன்பமான தூக்கம் நன்றாய் ஆழ்ந்த தூக்கம் - ஆழ்ந்த - தூக்கம்' என்று அடுத்தடுத்து மெல்ல நிறுத்திச் சொல்லுக. இங்ஙனஞ் சொல்லியபின், அவர் நன்றாய்த் தூங்கக் காணலாம். அதனைக் கண்டபின் அவரைநோக்கி; இப்போது நன்றாய்த் தூங்கும். நான் சொல்வதைத் தவிர வேறு எதுவும் உமக்குக் கேளாது; நான் சொல்வது மட்டும் உமக்குக் கேட்கும். நன்மையைக் கோரி நான் உமக்குச் சொல்லுகிறபடி செய்யக் கடவீர். நான் எழுப்புகிறபோது நீர் நன்றாய்த் தூங்கி எழுந்திருப்பீர், என்று சொல்லுக. பல பிறவிகளிற் சீர் திருந்தி வந்து இப் பிறவியிலும் ஒழுங்குபட்டிருக்கும் உயிராயின் அவ் வுணர்வோர் இரண்டொருகால் இங்ஙனம் அறிதுயிலிற் செலுத்தப் பட்ட அளவானே மிகச்சிறந்த நுண்ணிய உணர்வினைப் பெற்று, உணர்த்துவோர் நினைக்கும் நினைவுகளையும், உணர்த்துவோர் கோரியபடி பிறர் நினைக்கும் நினைவுகளையுந் தாம் அறிதுயிலில் இருக்கையிற் செவ்வனே உணர்ந்து கூறுவர். உணர்த்துவோர் இன்னும் அவரை நன்றாய்ப் பழக்குவராயின், அறிதுயிலிலிருந்து விழித்தெழுந்த பின்னும் உணர்த்துவோர் விரும்பியபடி யெல்லாம் பிறரெண்ணங்களை இனிதுணர்ந்து உரைப்பர். அவ்வாறு பல பிறவிகளிலும் இப் பிறவியிலுஞ் சீர்திருத்தம் அடைந்து வராத உயிராயின் அவருக்கு அறிதுயிலை எளிதிலே வருவித்தல் இயலாது. அதனை அவர்பால் வருவித்தற் பொருட்டுப் பலகாலும் பலநாளும் முயன்று வரல் வேண்டும். அடுத்தடுத்து முயன்று பழகினால் எத்தகையோரிடத்தும் அறிதுயிலை வருவிக்கலாம்.

இனி, உணர்வோர் அறிதுயிலிற் கிடக்கும்போது உணர்த்துவோர் பின்வருமாறு சொல்லுதல் வேண்டும். உமது

உடம்பு எப்போதுஞ் செவ்வையான நிலைமையில் இருக்கும். உமது அறிவு தெளிவாகவும் நுட்பமாகவும் விளங்கும். நீர் என் அருகிலிருந்தாலும், என்னை அகன்று தொலைவி லிருந்தாலும், யான் நினைக்கும் நினைவுகளையும் யான் குறிப்பிடுவோர் நினைவுகளையுஞ் செவ்வனே அறிந்து சொல்வீர், நீர் எங்கிருந்தாலும் யான் வேண்டியபோது ஆழ்ந்த இனிய தூக்கத்திற்குச் செல்வீர். மறுபடியும் யான் வேண்டியபோது செவ்வையாக விழித்தெழுந்து உம்முடைய அலுவல்களைப் பார்ப்பீர்" என்று ஏழெட்டுமுறை இவற்றைத் திருப்பித் திருப்பிச்சொல்லுக. உணர்த்துவோர் இவ்வாறு கூறிய சொற்கள் உணர்வோரது நினைவில் ஏறி அவரைப் பதப்படுத்தி யிருந்தால், அதனைத் தெரியும் பொருட்டு உணர்த்துவோர் ஒரு மோதிரத்தை அல்லது ஒரு சாவியை அல்லது ஓர் எழுதுகோலை அல்லது வேறேதேனும் ஒரு பொருளை நினைத்து அதிற் றமது நினைவினைச் சிறிதுநேரம் பதிய நிறுத்துக. உணர்வோர் உள்ளம் நுண்ணிய பதத்தை அடைந்திருக்குமாயின், உடனே அவர் உணர்த்துவோர் எண்ணிய பொருளைத் தவறாமல் எடுத்து உரைப்பர். இவ்வறிதுயிலில் நன்கு பழகியபின் உணர்வோரும் உணர்த்துவோரும் ஒருவரையொருவர் பிரிந்து எவ்வளவு தொலைவான ஊர்களில் இருந்தாலும் உணர்த்துவோர் வேண்டியபடி யெல்லாம் உணர்வோர் பிழைபடாமற் செய்வர். இம் முறையின் மேன்மையினை ஆராய்ந்து பார்த்த நுண்ணறிவின ரெல்லாரும் இதனை மிகப் பாராட்டிப் பேசுதலும் எழுதுதலுஞ் செய்து போதருகின்றார். அறிதுயிலில் நன்கு பழக்கப்படுத்தப்பட்ட ஒருவர் தாம் அயர்ந்த தூக்கத்திற் கிடக்கையில் உணர்த்துவோர் தமக்குக் கட்டளையிட்ட படியே அவர் தொலைவிலிருந்து செய்தவற்றைக் கூட இருந்து பார்த்த ஆங்கில மருத்துவ நூல் அறிஞர் ஒருவர் எழுதிய ஒரு பகுதியை இங்கெடுத்துக் காட்டுகின்றாம்:-

இருபத்திரண்டு ஆண்டுள்ள ஓர் அழகிய மாது இக்கலைப் புலமையில் தேர்ச்சிபெற்று உணர்த்துவோர் ஒருவரால்[1] நாலைந்து முறை அறிதுயிலிற் செல்லும்படி பழக்கப் படுத்தப் பட்டிருந்தார். இம் முறையினை நன்காராய்ந்து பார்க்க விரும்பிய ஆங்கில மருத்துநூற் புலவர் ஒருவரின்[2] வேண்டுகோளுக்கு இசைந்து இவ்வம்மையாரும் இவரை அறிதுயிலிற் பழக்கிய

அறிஞரும் ஒருநாள் அவர் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். இந்த அரிய முறையினைக் கண்டறியும் ஆவலால் வேறு சிலரும் அங்கே வந்திருந்தார்கள். அம்மருத்துவர் வீட்டின்கண் உள்ள அகன்றதோர் அறையின் கண் அவ் விளையமாதர் அங்கு வந்த மற்றையோருடன் பேசிக் கொண்டிருக்கையில், அம் மருத்துவர் தம்மோடிருந்த அவ்வுணர்த்துவோரை அழைத்துக் கொண்டு போய் அம்மாதர் அவரைப் பார்க்கக் கூடாத மற்றோர் அறையில் இருக்கச் செய்து, "யான் அந்த அம்மையிடத்தும் மற்றவரிடத்தும் போய்ப் பேசிக்கொண் டிருக்கின்றேன். இடையே நான் சிறிது கனைப்பேன்; அந்த ஒலியைக் கேட்டதும் நீர் இந்த அறையிலிருக்கும் அம் மடந்தையை அறிதுயிலிற் போகச் செய்தல் வேண்டும்," என்று அவர்க்குக் கற்பித்து விட்டு, அவ்வறையினின்றும் வெளியே வந்து கதவைத் தாழிட்டுக் கொண்டு, அந்த அம்மையாரும் மற்றையோரும் பேசிக்கொண் டிருக்கும் அறைக்குட் புகுந்து அவர்களோடு அளவளாவிப் பேசியிருக்கலானார். எல்லாரும் பேசுஞ் செய்தியில் கருத்து ஊன்றி ஈடுபட்டிருக்கையில், நடுவே அத் துரைமகன் சிறிது கனைத்தார். அக் கனைப்பொலி நிகழ்த்திய சிறிது நேரத்திலெல்லாம், அம் மாதரார் முகம், உணர்த்துவோர் முன்னே அமர்ந்திருந்த இருக்கையின் பக்கமாய்த் திரும்பியது. கூட இருந்த அம்மருத்துவர் அம் மாதரை நோக்கி 'யாது நேர்ந்தது' என்று வினாவ, அவ்வம்மை 'ஒன்றுமில்லை' என்று விடை கூறினார். அவ் வம்மையின் கண்கள் இமையாமல் நின்றன. மற்றை அறைக்குள் இருந்த உணர்த்துவோர் தமது கையை நீட்டிச் சிறிது அசைத்த அளவிலே, அம் மாதரார் தாமிருந்த நாற்காலியை விட்டெழுந்து, பின் தள்ளும் நடையொடு மெல்ல நடந்து உணர்த்துவோர் இருந்த மற்றை அறைக்குட் சென்றார். உணர்த்துவோரோ தாம் இருந்த இருக்கையினின்று அசையாமலும், ஏதோர் ஓசையும் புரியாமலும் இருந்தார். தாம் நினைத்தவாறே அறிதுயிலில் நடந்து தம் அருகில் வந்த அம் மாதரின் கண்களுக்கு நேரே இவர் இரண்டு விரல்களை நீட்ட, மறுபடியும் அப் பெண் முன்னிருந்த அறைக்குப் போகும்படி அவராற் செலுத்தப் பட்டு வந்து நாற்காலியில் அமர்ந்தார். இன்னும், அறிதுயிலி லிருக்கும் அம் மாது விழித் தெழுந்தவுடனே சிறிதுநேரங் கழித்து அடுத்துள்ள அறைக்குட் போய் அங்குள்ள

இசைப்பெட்டியினை[3] இயக்கி ஓர் இசை பாடு மாறும். அதன்பின் அங்குள்ள பல புத்தக வரிசைகளிலிருந்து தாம் எண்ணிய ஒரு புத்தகத்தைத்தெரிந்தெடுக்குமாறும், மண்டியிட்டு அதனை அம் மருத்துவர் கையிற் கொடுத்து அதில் உள்ள சில சொற்களை ஒரு வகையான குரலில் திருத்தமாகச் சொல்லுமாறுங் கட்டளை யிடப் பட்டனர். அதன்பின், விசிறியால் மெல்ல வீசி அவர் எழுப்பப்பட்டார். விழித்தபின், தூக்கத்தில் நடந்த தொன்றும் அவர் அறியாராய், மற்றவர்களோடு முன்போற் பேசிக் கொண்டிருந்தார். ஆனாற், சிறிதுநேரஞ் சென்றதும், அம்மாதரின் கண்கள் உறுத்த பார்வை உடையவாயின; நீக்க முடியாத ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர் போல் அப்பெண்மணியார் தம திருக்கையினின்றும் எழுந்து, தாம் உணர்த்துவோராற் கற்பிக்கப்பட்டபடியே இசைப் பெட்டியில் ஓர் இசை பாடிப், பின் புத்தக வரிசைகளிலிருந்து அவர் கருதியதொரு புத்தகத்தைப் பிழைபடாமல் எடுத்து, அதனை முழந்தாளிட்டபடியாய் அம் மருத்துவர் கையிற் கொடுத்து, ஒருவகையான குரலிற் சில சொற்களையுந் திருத்தமாகச் சொன்னார். அவர் மண்டியிட்ட நிலையிலிருந்தபோது அவ்வறிதுயிலினின்றும் எழுப்பப்படவே, தாம் அந்நிலையிலிருந்ததற்காகச் சிறிது சினமும் வருத்தமும் உடையவர் போற் காணப்பட்டார்.

அதன்பின் அம் மாதர்க்குச் சில சிற்றுண்டிகள் தரப்பட்டன; அவர் அவற்றுள் ஓர் அடையைத் தின்று கொண்டிருக்கையில், அவர்க்குப் பின்பக்கத்திற் சிறிது தொலைவில் இருந்த உணர்த்து வோர்க்கு அம்மருத்துவர் கண்ணால் ஒரு குறி செய்தார். அதனை அறிந்த அவ்வுணர்த்துவோர் தமது கையை ஓசைப்படாமல் அசைக்கவே, அம் மடந்தை உடனே தலையைத் திருப்பிக் கொண்டு தூங்கலாயினார். இங்ஙனந் தூங்குகையிலும், அவ்வுணர்த்துவோர் கோரியபடியெல்லாம் அவர் செய்வா ராயினார். தோட்டத்திற் சென்று மலர்கள் பறித்துச் செண்டு கட்டுவதுபோல் நினைக்க, அங்குத் தோட்டமில்லாதிருந்தும் அவர் அதனுள் நுழைந்து நறுமலர் கொய்து செண்டு கட்டுவதுபோற் செய்வாராயினார். பின்னர் அப்பூஞ் செண்டை முகந்து இன்புறல் வேண்டுமென்று நினைக்க, அவர் கையிற் பூஞ்செண்டு இல்லாதிருக்கவும் அஃது உடையவர் போல் முகந்து மகிழ்ந்தார். அதன் பிறகு அந் நறுமணம் மிக்க காரம்

உடையதென்று கூற, அம் மாதர் பல காற்றும்மினார். உணர்த்துவோர் தமது கையால் அமர்த்திய பிறகு தான் அத் தும்மல் நின்றது. இங்ஙனமே, உணர்த்துவோர் நினைத்தபடியுஞ் சொல்லியபடியுமெல்லாம் அம் மங்கையர் அறிதுயிலிற் சென்று, வியப்பான பல செயல்களைப் புரிவாராயினார். இது நிற்க.

அறிதுயிலிற் சென்ற ஓர் உயர்ந்த உயிர் தன்னொடு தொடர்புடையவர்கள் நினைக்கும் நினைவுகளை நன்கு அறிந்துரைக்கும் உண்மை நிகழ்ச்சிகளைச் செவ்வையாக ஆராய்ந்து முடிவுகட்டிய **உயிர்நிலை ஆராய்ச்சிக் கழகத்தார்**[4] செய்த ஆராய்ச்சிகளிற் சிலவும் ஈண்டு எடுத்துக் காட்டுதல் வேண்டும். ஏனெனில், உயர்ந்த கலை நூற் புலமையில் நிரம்பத் தேர்ச்சிபெற்று இவ்வுலகமெங்கும் பெரும்புகழ் பெற்று விளங்கும் புலவோர் பலர் அக்கழகத்தில் ஒருங்கு சேர்ந்திருந்து, எவரும் ஐயுறுதற்கில்லாதபடி இவ்வரிய பெரிய முறைகளைத் தீர ஆராய்ந்து தெளிவுபடுத்தி யிருக்கின்றனர்; ஆதலால், அவர் செய்து பார்த்த ஆராய்ச்சிகளிற் சில எடுத்துக் காட்டினும் அவை இவ்வுண்மையை நிலைநாட்டி எத்திறத்தவரையும் அறிவூட்டி மகிழ்விக்கும்.

ஒரு நாள் ஓர் அம்மையார் அறிதுயிலிற் செலுத்தப்பட்டு உணர்வோராய் இருக்க, அவருக்கு உணர்த்துவோரான ஒரு துரைமகன் அவரைத் தொடாமலும் அவரொடு பேசாமலும் அவர்க்குப் பின்னே இருத்தப்பட்டார். இம் முறையினை ஆராய்ந்து பார்ப்பதற்கென்று அங்கு வந்திருந்த கற்றறிவிற் சிறந்த மற்றொரு பெருமாட்டியார், ஒரு சிறு பையன் கையில் ஒரு பந்து ஏந்தி நிற்பதாக' நினைக்கும்படி அவ்வுணர்த்துவோர்க்குக் கற்பித்திருந்தார். அங்ஙனமே அத்துரைமகன் அந் நினைவை உறுத்து நினைந்த சில இமைப்பொழுதிற்குள், அறிதுயிலில் அமர்ந்திருந்த அம்மையார்; ஓர் உருவம் வருகின்றது - ஒரு சிறு பையன்," என்று கூறினார். உடனே அங்கிதனை ஆராயும் மற்றொரு பெருமாட்டியார்; "அவன் தன் கையில் யாது வைத்திருக்கின்றான்?" என்று வினவ, அவ்வம்மையார் "ஓர் உருண்ட பொருள் - அஃது ஒரு பந்தென்று நினைக்கிறேன், " என்று மறுமொழி தந்தார்.

இனி, மற்றோர் ஆராய்ச்சியில் உணர்வோராயிருக்கும் பொருட்டு அறிதுயிலிற் செலுத்தப்பட்டவர் ஓர் ஆண்மகன். அவர்க்கு உணர்த்துவோராய் அமர்த்தப்பட்டவர் முன் ஆராய்ச்சியில் உணர்த்துவோராய் இருந்த துரை மகனே யாவர். இந்த முறை 'ஒரு வண்டி நிறைய மீன் வைத்துக்கொண்டு ஓர் ஆள் நிற்பதாக' நினைக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அங்ஙனமே நினைந்த சிறிது நேரத்தில் அவ்வுணர்வோர் கூறுவர். 'அஃது ஓர் ஆண்மகன் உருவம், ஆம் அங்கே ஓர் ஆள் நிற்கின்றார். அவரை இன்னாரென்று நான் அறியேன். அவர் பழங்கள் விற்பவர் போற் காணப்படுகின்றார்.' அப்போது அங்கு வந்திருந்த ஒரு பெண்பாலார்; "அவரிடத்திற் பழங்கள் இருக்கின்றனவா?" என்று கேட்டார். அதற்கு அவர்: "அங்கு இருப்பது அவரது வண்டிபோல் தோன்றுகின்றது. ஓ, அவர் என்ன விற்கிறார்? அவர் விற்று விட்டாரென்று நம்புகின்றேன். அவரது வண்டிமேல் யான் ஏதும் பார்க்கக் கூடவில்லை. ஒரு வேளை விற்றுவிட்டார்போலும்! ஆ! சில உருண்ட வடிவான பொருள்கள் இப்போது தென்படுகின்றன. அவைகள் பழங்கள் என்றே நம்புகின்றேன். அவைகள் சிறிது சிவப்பாய் இருக்கின்றன. ஓ, அவை மீன்கள் அல்லவோ, என்று மாறிமாறிக் கடைசியாக நினைந்த பொருளைத் தவறுதலின்றிச் சொல்லிவிட்டார். ஆனால் நினைந்த பொருளை நினைந்தபடியே உணர்வோர் கூறாமல் இடையிடையே மாறிக் கூறிய தென்னையெனின், உணர்த்துவோர் அப் பொருளை நினைக்கையில் அதன் வடிவையும் நிறத்தையுந் தெளிவாக நினையாமல், அதனோ டொத்த பழத்தின் வடிவையும் நிறத்தையும் இடையே நினைந்திருக்கவேண்டும். அஃது அல்லாவிட்டால் உணர்வோர் அறிதுயிலிற் செவ்வனே சென்று அமைதிபெறாமற் சிறிது கலங்கிய நிலையில் இருந்தாராகல் வேண்டும். இவ்விரண்டு குறையும், அல்லது இரண்டில் ஒரு குறையும் இல்லாதாயின் உணர்த்துவோர் நினைந்த பொருளை உணர்வோர் உடனே தெளிவாக உணர்ந்து கூறியிருப்பர்.

இனி, இவ்வாராய்ச்சியில் வல்ல மற்றொரு துரைமகனார் நுண்ணறிவு வாய்ந்த தம் மனைவியாரிடத்துச் செய்து பார்த்த மற்றோர் ஆராய்ச்சி வருமாறு; 'ஒருவானக் கப்பல் ஒரு நகரத்திற்

குறிப்பிட்ட ஓரிடத்தில் மேலே செல்லுவதாகவும், அதனைப் பெருந்திரளான மக்கள் நின்று பார்ப்பதாகவும்' நினைத்துக் கொள்ளும்படி உணர்த்துவோர் கேட்டுக் கொள்ளப்பட்டார். இதில் உணர்வோராயிருந்த பெருமாட்டியார் ஆழ்ந்த அறிதுயிலிற் செலுத்தப் படவில்லை; சிறுதுயிலிலேதான் இருந்தார். உணர்த்துவோர் மேற் சொல்லியதனை நினைந்த அளவிலே, உணர்வோர் கூறுவார். "யான் தொகுதியாகப் பலர் நிற்பதைப் பார்க்கிறேன். கூட்டமாகச் சண்டைக்குப் போகிறார்கள். அவர்கள் மிகவும் கலவரமாய் இருக்கிறார்கள். அவர்கள் தண்ணீர் சொரிகிறார்களா? அல்லது கப்பலோட்டிகள் பாய்க் கயிறுகளை இழுக்கிறார்களா?" இதற்குள் உணர்த்து வோர், "அவர்கள் என்ன செய்கிறார்கள்?" என்று கேட்க, அவ்வம்மையார் "அவர்கள் எல்லாரும் மேலே பார்க்கிறார்கள். அஃதொரு வானக்கப்பல், யாரோ ஒருவர் அதில் துன்பப் படுகிறார்," என்றனர். அதைக் கேட்ட உணர்த்துவோர் "இனி நடக்கக் கூடிய ஒரு காட்சியை யன்றோ நினைந்தேன்," என்ன, உணர்வோர் "ஓ முதன் முதலாக ஒரு வான ஊர்தியை ஒருவர் பறக்க விடுகிறார். அவர் அங்கே மேலே செய்து கொண்டிருப்பது அதுதான்." என்று உண்மையைக் கடைசியாகச் சொல்லி விட்டார். இந்நிகழ்ச்சியின் கண்ணும் உணர்வோர் நினைந்ததனை உடனே சொல்லமாட்டாமல் நடுவே தடுமாற்றம் அடைந்தது, உணர்த்துவோர் தாம் நினைத்ததன்கண் உள்ளத்தை ஒருக்கி நினையாமையினாலேதான் என்று அறிதல் வேண்டும்.

இனி, அகல இருந்து உணர்த்துவோர், உணர்வோரை அறிதுயிலிற் போகும்படி செய்தலை அக் கழகத்தார் ஆராய்ந்து பார்த்திருக்கின்றனர். அவற்றுள் ஒன்றனை இங்கெடுத்துக் காட்டுவாம்; பிராஞ்சு தேயத்திற் புகழ் பெற்று விளங்கிய மருத்துவர் ஒருவர் தம்மிடம் நோய் தீர்த்துக் கொள்ளவந்த ஒரு நாட்டுப்புறத்துப் பெண் பிள்ளைக்கு நோய் நீக்கி, அவளைத் தொலைவிலிருந்தே அறிதுயிலிற் செலுத்தப் பழக்கலானார். இவர் தாமிருந்த வீட்டுக்கு அரைக்கல் எட்டியிருந்த தம் உடன் பிறந்தாள் வீட்டில் இப் பெண்பிள்ளை இருக்கும்படி ஏற்பாடு

செய்திருந்தார். அம்மருத்துவரோ டிருந்து இம் முறையினை ஆய்ந்தறியும்படி அங்கே சென்ற கற்றறிவிற் சிறந்த புலவர் மூவர், ஒருநாட் காலையில் திட்டமாய்ப் பதினொரு மணிக்கு அம் மருத்துவர் தமது மருத்துக் கழகத்தில் இருந்தபடியே தம் உடன்பிறந்தாள் வீட்டில் தங்கியிருக்கும் அப்பெண் பிள்ளையை அறிதுயிலிற் செலுத்தும்படி கேட்டுக் கொண்டனர். சில நேரங்களில் அப்பெண்மகள் தனக்குத் தூக்கம் வராதபடி தடை செய்வதில் முயற்சி யுடையவளாய் இருத்தலால், இவ்வாராய்ச்சி நிறைவேறுதற்குச் சிறிதுநேரங்கூடக் கொடுக்க வேண்டு மென்று அவர்கள் தமக்குள் ஏற்பாடு செய்துகொண்டனர். திட்டமாய்ப் பதினொன்றரை மணிக்கு அவர்கள் அமைதியாய் அவளிருந்த வீட்டிற்குட் போய், அவர் ஆழ்ந்த தூக்கத்தோடும் மேடை மேல் உள்ள தனது அறையிலிருந்து கீழே கூடத்திற்கு இறங்கிவரக் கண்டார்கள். முதனாள் இரவில் அம் மருத்துவர் அவளைத் தூக்கத்திற்குச் செலுத்தச் செய்த முயற்சியைப்பற்றி அவர்கள் ஏதுஞ் சொல்லவில்லை. ஆனால், அவள் அவ்விரவில் தான் மிகவும் நோயாயிருந்ததாகத் தூக்கத்திலிருந்தபடியே அவர்கட்குக் கூறினாள்.

பிறகு, அதே நாளின் மாலைக் காலத்தில் அம்மூவரும் அம் மருத்துவரோடிருந்து உணவு அருந்துகையில், அம்மருத்துவர் தமது வீட்டிலிருந்தபடியே தொலைவிலிருக்கும் அப் பெண்ணைத் தூக்கத்திற்குச் செலுத்தித், தமது விருப்பப்படி அவள் அங்கிருந்து தமது வீட்டிற்க்கு வருதற்பொருட்டு மீட்டும் ஒரு முயற்சி செய்தார். மாலை ஏறக்குறைய ஒன்பது மணிக்கு அவர் தாம் கற்கும் அறைக்குப் போனார். அவ் அறிஞர் மூவரும் இப்போது இவர்களொடு சேர்ந்த மற்றோர் அறிஞருமாக நால்வரும் அப்பெண்மகள் தங்கிய வீட்டண்டை போய், அவ் வீட்டிலுள்ளார் கண்களுக்குத் தெரியாதபடி வெளியே தெருவிற் காத்திருந்தனர். ஒன்பதரைமணி யாவதற்குமுன் அம்மாது தோட்டவாயிற் கதவிலிருந்து பாதிவழி வந்து மறுபடியும் பின்னுக்குப் போவதை அவர்களில் ஒருவர் கண்டார். மற்றை மூவரும் அவளை உன்னித்துப் பார்க்க, அவள் ஆழ்ந்த

தூக்கத்தில் நடப்பவளாய் ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டு அங்குமிங்குமாய் அலைவதுபோற் காணப்பட்டாள். பின்னுஞ் சிறிது நேரத்தில் அவள் நன்றாய் மூடப் பட்ட கண்களோடும் வெளியே வந்து, அந் நால்வரையும் பாராமல் அவர்களை விரைவாய்த் தாண்டிச் சுற்றுவழியாகச் சென்று அம் மருத்துவர் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள். அவன் தெருவில் நடந்துவந்தபோது விளக்குத் தூண்கள் மேலும் வண்டிகள் மேலும் பிறவற்றின் மேலும் படாமற் குறுக்கு மறுக்குமாய் நடந்துவந்தாள். எவரும் அவள் எதிரிற் போகவும் இல்லை; அவளொடு பேசவும் இல்லை. எட்டு அல்லது பத்து நிமிடங்களுக்குப் பிறகு அவள் நடையில் தள்ளாடினாள்; விழுந்துவிடுவாள் போல எண்ணி நின்று விட்டாள். அப்போது ஒன்பதரை மணியும் ஐந்து நிமிடங்களும் ஆயின என்று அந்நால்வரில் ஒருவர் குறித்துக்கொண்டார். ஏறக்குறைய ஒன்பது மணி நாற்பது நிமிடத்திற்கு அவள் மனத்திட்பம் உடையவளாய் ஒன்பதே முக்காலுக்கும் அம் மருத்துவர் வீட்டின் எதிரே வந்தாள். வந்தவள் அவரை எதிர்ப்பட்டும் அவரை உன்னியாமலே, அவரது வீட்டினுள் நுழைந்து, கீழேயுள்ள அறைகளில் ஒன்றிலிருந்து மற்றொன் றிற்கு விரைந்து சென்றாள். அவள் அவரைத் தெரிந்து கொள்ளுதற்கு முன் அவள் கையை அவர் பிடித்தெடுக்க வேண்டுவதாயிற்று. அதன்பின் அவள் அமைதியுற்றாள்.

எட்டுமணி ஐம்பத்தைந்து நிமிடம் முதல் ஒன்பது இருபதுவரையில் அம்மருத்துவர் அவளைப்பற்றி நன்றாய்க் கருத்தூன்றி நினைத்ததாகக் கூறினார். ஆனால், ஒன்பது இருபதுமுதல் முப்பத்தைந்து வரையிற் சும்மா மேலாக நினைந்தார்; ஒன்பது முப்பத்தைந்திற்கு அவளை நினைப்பதை வீட்டு வேறொரு விளையாட்டிற் கருத்தைச் செலுத்தினார்; ஆனாற் சில நிமிடங்கள் கழிந்ததும் மறுபடியும் அவளைப் பற்றி எண்ணலானார். அவர் இடையே அவளை நினைப்பதை விட்டிருந்த நேரமும், அவள் தெருவிலே நடை தள்ளாடி நின்றுவிட்ட நேரமும் ஒன்றாய் இருந்தன.

பின்னர், மூன்றாம்நாளில் அம் மருத்துவரோடு உடனிருந்து இதனைப் பயிலுந் தோழர் ஒருவர் அம்மாதினை அறிதுயிலினின்றும் எழுப்பி ஏனை நால்வரோடும் இருந்து உணவுகொள்ளும்படி செய்துவிட்டுக் காலை நாலரை மணிக்குத் தமது இல்லத்திற்கு ஏகினார். அவர் தமது வீட்டிலிருந்தே மற்றை நால்வரொடு வேறோர் இடத்திலிருக்கும் அவளைத் தூங்கச் செய்தல் வேண்டுமென்று ஓர் ஏற்பாடு முன்னமே செய்துகொண்டார்கள். ஐந்துமணி ஐந்து நிமிடத்திற்கு அந் நால்வரும் அவ்வம்மையிருந்த இடத்தினுள் நுழைந்து பார்க்க, அவள் கண்கள் மூடப்பட்டு அயர்ந்த தூக்கத்தில் இருப்பது தெரிந்தார்கள். கண்கள் மூடியிருந்தும் அவள் தையல் வேலையை மிகவுஞ் சுறுசுறுப்பாய்ச் செய்து கொண்டிருந்தாள். அம் மருத்துவரினாலேயே தான் தூக்கத்திற்குச் செலுத்தப் பட்டதாக அவள் நம்பும்படி சொல்லிப்பார்த்தார்கள்; ஆனால் அம் மருத்துவரின் தோழராலேயே தான் தூக்கத்திற்குச் செலுத்தப்பட்டதாகத் துணிபுரை கூறினாள்.

பிறகு, நான்காம் நாள் மாலையில் 2 மணிக்கு அம்மருத்துவரின் தோழர் வீட்டில் அந் நால்வரும் ஒருங்கு சேரலானார்கள். அவர்களில் ஒருவர் கோரியபடியே அவர் அந்த மாது தூக்கத்திற் செல்லுமாறு எண்ணுதற்காகத் தாம்கற்கும் அறைக்குட் போயினார். அந் நால்வரும் அவரது தோட்டத்திற் காத்திருந்து பிறகு மூன்று இருபதுக்கு அந்த அம்மையிருந்த வீட்டிற்குப் போனார்கள். போனதும் ஒருவர் அவளிருந்த அறையினுட் புகுந்து நோக்க, அவள் தன் கையிலிருந்த தையல்வேலையையும் விட்டு ஆழ்ந்த துயிலில் இருக்கக் கண்டார். தான் மூன்று மணி ஐந்து நிமிடத்திற்குத் தூங்கச்சென்றதாகவுந் கூறினாள்.

இங்ஙனம் அந்த அம்மையைத் தொலைவிலிருந்தே அறிதுயிலிற் செலுத்தித் தாம் எண்ணிய எண்ணங்களின் படி அவள் எண்ணவுஞ் செய்யவும் புரிந்து, அம் மருத்துவரும் அவர் தோழரும் அவள் பால் ஆராய்ந்து பார்த்த இருபத்தைந்து ஆராய்ச்சிகளிற் பதினெட்டு நிகழ்ச்சிகள் செவ்வையாகவே

முடிந்தன; மற்ற நான்குமட்டுஞ் சிறிது வழுவின. இவைகளைக் கொண்டு தொலைவிலிருந்தே பிறர்க்கு அறிதுயில் வருவித்துத் தாம் எண்ணியபடியே அவரும் எண்ணுமாறும் நடக்குமாறுஞ் செய்தல் சிலர்க்கு இயலுமென்பது நன்கு பெறப்படுதல் காண்க.

**அடிக்குறிப்புகள்**

1. Dr. Carl S Xtus
2. Dr. George Lutken, M. D.
3. Piano
4. The Society for Psychical l Research

## 12. தாமே தோன்றும் உணர்ச்சிகள்

இதுகாறும் இருவர் உணர்வோரும் உணர்த்து வோருமாய் அருகில் இருந்துந் தொலைவில் இருந்தும் ஒருவர் எண்ணங்களை மற்றவர் உணரும் முறைமைகளை விளக்கிப் போந்தாம். இனி, இங்ஙனம் பழகாதவர் சிலர் தமக்குள்ளுந் தொலைவில் நிகழும் நிகழ்ச்சிகள் தாமாகவே உள்ளத்தில் எழும் வகைகளையுஞ் சிறிது இங்கெடுத்துப் பேசுவாம். ஒருவரிடத்து ஒருவர் மிகுந்த அன்பு வைத்திருக்கும் காதலனுங் காதலியும் ஒருவரை ஒருவர் அகன்று தொலைவிலிருக்குங்கால் ஒருவரெண்ணங்களையும் அவர்க்கு நேர்வனவற்றையும் மற்றவர் தெரிந்துகொள்ள முயலா திருக்கையிலும் அவை அவருள்ளத்தில் தாமாகவே வந்து தோன்றுகின்றன. இதற்கு உண்மையாய் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை இங்கெடுத்துக் காட்டுவாம்.

தன் வாயின்மேல் கடுமையான ஓர் அடிபட்டதாக உணர்ந்து ஓர் அம்மை ஒருநாள் திடுக்கெனத் தூக்கத்தினின்றும் எழுந்து, தன் கீழ் உதடு அறுப்புண்டு இரத்தம் ஒழுகுவதாகவே தனக்குத் தெளிவாகப்பட்டதனால், தனது கைக்குட்டையை எடுத்துச் சுருட்டி அவ்விடத்தில் வைத்துக்கொண்டே தன் படுக்கைமேற் சிறிதுநேரம் உட்கார்ந்து கொண்டிருந்தாள். சிறிதுநேரஞ் சென்றபின் அவள் அத்துணியை வாயினின்றும் அகற்றிப் பார்க்க அதில் இரத்தக்கறை சிறிதும் இல்லாதிருக்கக் கண்டு பெரிதும் வியப்புற்றுத் தனக்கு அங்ஙனம் அடிபட்டிருக்க முடியாதென்றும், அடிபட்டதாகக் கண்டது கனவேயன்றிப் பிறிது அன்றென்றும் உணர்ந்தாள். உடனே அவள் தன் கைக்கடிகாரத்தை நோக்க அப்போது விடியற்காலையில் ஏழுமணியா யிருக்கக் கண்டாள். அப்போது தன் கணவன் அங்கு இல்லாமை தெரிந்து, அக் காலைப்பொழுது மிகவும் இனிதாயிருந்தமையால், அவன் அடுத்துள்ள ஏரியில்

விளையாட்டுப் படகு விடப் போயிருக்க வேண்டு மென்று முடிவுகட்டினாள். அதன்பிற் சிறிதுநேரந் தூங்கி யெழுந்து காலை ஒன்பதரை மணிக்குச் சிற்றுண்டி கொள்ளும் பொருட்டு அவள் ஒழுங்குசெய்கையில் அவள் கணவன் சிறிதுநேரங் கழித்து வீட்டுக்கு வந்தான். உணவெடுக்கும் கால் வழக்கம்போல் அவன் அவள் பக்கத்தில் அமராமற்சிறிது எட்ட இருந்துகொண்டு, இடைக்கிடையே தனது கைக்குட்டையை எடுத்துச் சுருட்டி அவளுக்குத் தெரியாமல் மறைவாய் அவன் தன்வாயில் ஒற்றிக்கொள்வதைக் குறிப்பாய்ப் பார்த்தாள். பார்த்ததும் பதறிப் "பெருமானே, ஏன் அப்படிச் செய்கிறீர்கள்?" என்று கவலையொடு கேட்டு, "நீங்கள் காயப்படுத்திக் கொண்டீர்கள் என்பதை நான் அறிவேன், ஆனால் அதைப்பற்றிப் பிறகு சொல்லுகிறேன்," என மொழிந்தாள். அதற்கு அவன், "நல்லது, நான் படகிற் பாய்விரித்துச் செல்கையில் திடீரென ஒரு கடுங்காற்று வந்து சுக்கான் திருப்புஞ் சக்கரத்தைச் சுழற்றிவிடவே அஃது என்வாயின் கீழ் உதட்டில் நன்றாய் அடித்துவிட்டது. அதனால் அடிபட்ட காயத்தினின்றும் இரத்தம் ஓயாமல் ஒழுகுகிறது," என்று கூறினான். அதன்பின் அவள், "அது நேர்ந்தபோது மணி எவ்வளவு இருக்கலாம்? உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்க, அப்போது ஏறக்குறைய ஏழுமணி யிருக்க வேண்டும்" என்று விடை கூறினான். அதன்பின் அவள் தனக்கு உண்டான தோற்றத்தை விரித்துச்சொல்ல அவனுங்கூட இருந்தவர்களும் மிக வியப்புற்றனர்.

ஒரு நாள் ஒரு மருத்துவர் ஒரு வீட்டின் மெத்தைமேல் நோயாளி ஒருவரைப் பார்த்துவிட்டுக் கீழ் இறங்குகையில், நான்கு ஆண்டுள்ள அவர்தஞ் சிறுமகன் தமது வீட்டுக் கற்படிக் கட்டின் கீழ்விழுந்து நன்றாய்க் காயப்பட்டதாக அவர்க்குச் சடுதியில் ஒரு நினைவு உண்டாயிற்று. இங்ஙனம் முதலிற்றோன்றிய அந்நினைவுக்குப் பின், இடையில் இடப்பட்டிருந்த ஒரு திரைமறைப்பு அப்புறம் இழுக்கப் பட்டாற்போற் காணப்பட, அக் குழந்தை படிக்கட்டின் கீழே விழுந்து கிடக்கவும் அதன் மோவாயில் இரத்தம் ஒழுகவும் நேரே காண்பாராயினர். இந்தத் தோற்றமானது திடீரென மறைந்துபோயிற்று; ஆனால், அதனைப் பற்றிய நினைவு மட்டும் அவர்க்கிருந்தது. அத் தோற்றம்

உண்டான நேரங் காலை பத்தரை மணியாதலால் அதனை மட்டும் அவர் குறித்துக் கொண்டார். பிறகு, தாம் பார்க்க வேண்டிய மற்றை நோயாளிகளையும் பார்த்துவிட்டு அவர் தமது வீட்டுக்குப்போக அங்கே அவர்தங் குடும்பத்தார் அவர் குழந்தைக்கு நேர்ந்ததையும் மணி நேரத்தையும் அவர் கண்டபடியே கூறக் கேட்டு மிக வியப்புற்றார்.

ஒரு பெண்பிள்ளையைக் கடுமையாக அடித்தமையாற் சிறைக் கோட்டத்தில் அடைக்கப்பட்டுப் பின்னர் மன்னித்து விடுதலை செய்யப்பட்ட ஒருவர்க்கு ஒரு மனைவியும் ஐந்து ஆண்டுள்ள ஒரு பையனும் இருந்தனர். அவர் சிறைக் கோட்டத்தில் இருந்தபோது ஒருநாள் அவரது மனைவியிட மிருந்து ஒரு செய்தி அக் கோட்டத்தலைவர்க்கு வந்தது. அறிவின்மிக்க அவ்வாண்பிள்ளை இறந்து போயிற் றெனவும் அதனைத் தன் கணவற்குத் தெரிவித்தல் வேண்டுமெனவும் அத் தலைவர் அதிற் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதன்படியே தலைவர், அவரைத் தாம் இருந்த அறைக்கு வருவித்து அவரைப் பற்றிச் சில வினாவியபின் தாம் ஒரு துயரமான செய்தி தெரிவிக்கப் போவதாகச் சொன்னார். அதற்கு அவர், “ஐயா, தாங்கள் சொல்லப்போவது இன்னதென்பதை அறிவேன்: என் பையன் இறந்துபோயினான்” என்றார். உடனே தலைவர், “அதனை நீர் எப்படி அறிந்தீர்?” என்று கேட்டார். “சென்ற ஞாயிற்றுக்கிழமை தாங்களுந் தங்கள் சிறு குழந்தையுங் கோயிலுக்கு வந்திருந்தபோது அந்தக் குழந்தை தூங்கிவிட்டது; அதனைத் தாங்கள் கையில் எடுத்துக்கொண்டு வருவதை யான் பார்த்தவுடனே, என் பையன் நீரில் அமிழ்ந்தி இறந்து போனதாகச் சடுதியில் எனக்கோர் எண்ணம் உண்டாயிற்று, அந் நினைவை என் மனத்தினின்றும் அகற்ற யான் எவ்வளவோ முயன்றும் என்னால் இயலவில்லை! என் கண்களில் நீர் ஒழுகிற்று; நீங்கள் என்னை அழைத்தபோது என்நெஞ்சங் கலங்கியது, நான் எண்ணியபடிதான் இருக்கப் போகிறது என்று உணர்ந்தேன்,” என அவர் மறுமொழி புகன்றார். இவர் தம் குழந்தைமேல் மிகுந்த அன்பு வைத்திருந்தமையால் அப் பிள்ளைக்கு நேர்ந்தது இவர்க்குடனே தோன்றலாயிற்று.

மேல்நாட்டில் நூல் ஆராய்ச்சியிற் றேர்ந்த ஓர் அறிஞர் ஒருநாள் ஓர் இளம்பெண்ணைத் தாமிருக்குங் கலைக் கழகத்தில் வைத்து அறிதுயிலிற் போகச் செய்தார். ஒரு கடித வுறைக்குள் வரைந்து வைக்கப்பட்ட ஒரு வரிவடிவினை இன்னதென்று அறியும்பொருட்டு அவ்வம்மை அவ்வறிதுயில் நிலையிலேயே முயன்று கொண்டிருக்கையில், அவ் வறிஞர் தம் நண்பர் ஒருவர் பெயரைச் சொல்லி "அவர்க்கு இப்போது யாது நேர்ந்தது?" என்று கேட்டார். அந் நண்பரை அந்த அம்மை இக் கலைக்கழகத்தில் இதற்கு முன் இரண்டு மூன்றுமுறை பார்த்திருக்கிறாள். "அவர் தம் உடம்பிற் சுட்டுக்கொண்டார்," என்று அந்தப் பெண் விடை கூறினாள். அதற்கு அவர், "ஓ! அவர் எவ்விடத்தைச் சுட்டுக்கொண்டார்?" என்று திரும்ப வினவினார். "இடது கையின்மேல்; சுட்டது நெருப்பு அன்று; அஃது ஏதோ ஒன்று; அதன் பெயர் எனக்குத் தெரியவில்லை; அவர் அதனை ஊற்றினபோது என் கருத்தாய் இருக்கவில்லை?" என்று அந்த இளமாது கூறினாள். "அவர் ஊற்றின அந்தப் பொருள் எந்த நிறமானது?" "அது சிவப்பு நிறமன்று, பழுப்பு நிறம் உடையது; அவர் மிகுதியாய்ச் சுட்டுக்கொண்டார் - தோல் அவ்விடத்தில் அதைத்திருக்கின்றது" என்றாள். இவள் கண்டு கூறியது அத்தனையும் வழுவாதிருந்தது. அன்றைப் பிற்பகல் நான்கு மணிக்கு அந்நண்பர் ஒரு புட்டிலிற் சிறிது முடைநீரை[1] ஊற்றல் வேண்டினார். அதனை ஊற்றுகிறபோது அவர் நிரம்பக் கருத்தாய்ச் செய்யாமையால், அது பெய்குழலில் நிரம்பி வழிந்து அதனைப் பிடித்திருந்த அவரது இடது கைம்மேல் ஓடி அதுபட்ட இடமெல்லாஞ் சுட்டுவிட்டது. அவர் உடனே அக்கையைத் தண்நீரில் தோய்த்தாராயினும், அம் முடைநீர் பட்ட இடமெல்லாங் கொப்புளித்துப் போயிற்று.

இன்னும், ஓர் அம்மை தனக்குத் தோன்றிய தோற்றத்தைப் பின்வருமாறு குறிக்கின்றாள்; "யான் குளிர் காய்ச்சலிற் கிடந்து நலம் அடைந்து வருகையில், யான் எனது அறையில் தனியே இருந்து சாளரத்தின் வெளியே பார்த்துக்கொண்டிருந்தேன். என் எண்ணமானது ஒன்றிலுங் கருத்தாய் நில்லாமற் பலவற்றிற் சென்று கொண்டிருந்தது; சிறிது நேரத்திற்குப் பின் என் உள்ளமானது ஏதொரு நினைவுமின்றி வெறுமையாகக்

காணப்பட்டது; என் கண்கள் நிலைபெற்று நிற்பவாயின; இடைவெளியானது வெள்ளிய நிறம் அடைவதுபோற் காணப்பட்டது. என்னைச் சுற்றிலும் உள்ள பொருள்களை யான் பார்க்கக் கூடியதா யிருந்தாலும், எதனையும் பார்ப்பது மிக வருத்தமாகவே இருந்தது. எவரோ ஒருவர் - அவர் இன்னா ரென்பதும் இன்ன இடத்தின ரென்பதும் யான் அறியேன், துன்பப்படுவதாக என் மனத்திற் பட்டமையால் யான் அவர் பொருட்டுத் துன்பப்படுவதாக உணர்ந்தேன். சிறிது நேரத்திற்குப் பின் அவர் யார் என்பதைத் தெரிந்தேன்; அவரை எப்படித் தெரிந்தேன் என்பதை அறிந்திலேன். ஆள் இன்னார் என்பதை யான் தெரிந்த பிறகு, ஒரு விடுதியிற் சதுரமான ஓர் அறையினையும், யான் இன்னாரென்று தெரிந்த அவ்வாண்மகன் மிகவுந் துன்புற்ற உடம்போடும் உள்ளத்தோடும் அதில் ஒரு படுக்கைமேல் முகங் குப்புறப்படுத்திருப்பதையும் என்னுள்ளே தெளிவாய்க் கண்டேன். அவர் மிக்க துயரத்தால் தேம்பித் தேம்பி அழுதலையுஞ், செவியாற் கேட்டிலேனாயினும், உள்ளத்தால் உணர்ந்தேன். அத் துயரத்தின் தன்மையும் எனக்குப் புலனாயிற்று. ஆனால், புறத்தேயுள்ள அதன் ஏது எனக்குப் புலப்பட்டிலது. இத்தோற்றத்திற்குப் பின் எனக்கு மிகுந்த களைப்பு உண்டாயிற்று; அது நாற்பது நிமிடங்கள் வரையில் மிகுதியாய் இருந்தது; அதன்பின் அது மெல்ல மெல்லக் குறைந்து போயிற்று.”

இவ்வாறு அந்தப் பெண்பிள்ளை தான்கண்ட தோற்றப் படி துன்புற்ற ஆண்மகனுக்கு அதனை ஒரு கடிதத்திற்குறித்து விடுக்க, அவர் பின்வருமாறு எழுதுகிறார்.

“சில ஆண்டுகளுக்குமுன் யான் ஓர் அலுவலின் பொருட்டு ரோடுத்தீவின்கண் உள்ள ஒரு நகரத்தில் இருக்கையிற், பாஸ்டன் நகரத்தின்கண் உள்ள என் வீட்டிலிருந்து சடுதியில் வந்த செய்தியானது மிகவுந் துன்பத்தைத் தருவதாய் என்னை அறக்கலக்கிவிட்டமையால் யான் இறங்கியிருந்த விடுதியில் எனக்கென விடப்பட்ட நாற்சதுரமான பெரிய அறைக்குட் சென்று எனது படுக்கைமேல் நெடுநேரம் பெருந்துயரத்தொடு முகங்கவிழ்ந்து கிடந்தேன். இங்ஙனம் நெடுநேரஞ் சென்ற பிறகு அத் துன்பத்தின் கடுமை தணிந்தமையால் அவ்வறையைவிட்டு

வந்தேன். அடுத்தநாள் யான் பாஸ்டன் நகரத்திற்குச் சென்றேன். அதற்கு அடுத்தநாள் எனது துயரத்தின் தோற்றத்தைக்கண்ட பெண்மணியாரின் கடிதம் எனக்கு வந்தது. அவ்வம்மை மேலை நியூயார்க்கில் உள்ள ஒரு நகரத்தினின்றும் நாட்குறித்து அக்கடிதத்தை எனக்கு அனுப்பினார். வெள்ளிக்கிழமை இரண்டு மணிக்கு எனக்கு யாது நேர்ந்தது என்பதைக் காலந்தாழாது தமக்குத் தெரிவிக்கும்படி அவ்வம்மையார் கெஞ்சிக் கேட்டார். அதேநாளில் அதே மணி நேரத்திற்றான் நான் முன்னே கூறியபடி துயரப்பட்டுக் கிடந்தேன். இந்த மாதரார் எனக்கு அறிமுகமான நண்பரேயாயினும், இவர் அனுப்பிய இக் குறிப்புக்கு முன் பல திங்களாக இவரிடமிருந்து ஏதொரு செய்தியுமே எனக்கு வரவில்லை; நெடுங்காலமாக இந்த அம்மையைப் பற்றி யான் நினைக்கவுமில்லை. இன்னும், என்னை அவ்வளவு துன்புறுத்திய அச்செய்திக்கும் அந்த அம்மைக்கும் ஏதோர் இசைவுமில்லை. அவ்வம்மைகண்டது உண்மையேயென உடனே யான் அவர்க்கு எழுதி அறிவித்தேன்.'' இந் நிகழ்சசியினால், ஒருவரை யொருவர் நினையாமல் வேறு வேறிடங்களில் இருந்த விடத்தும் ஒருவர்க்கு உண்டான துன்பம் மற்றவர்க்குத் தானே புலனாகத் தோன்றினமை நன்கு அறியப்படும்.

இனிப், பலருக்குத் தீதான ஒரு நிகழ்ச்சி எங்காயினும் நடந்தால் அது தொலைவிலுள்ள சிலர்க்குத் தானாகவே வந்து தோன்றுதலும் உண்டு. பெர்த் என்னும் ஊரின் கண் ஒருநாள் ஓர் அம்மை தன் உடன் பிறந்தாளுக்காக ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருக்கையில் ஒரு கொடும்புயற் காற்று அவளது வீட்டைச் சுற்றி அடித்தது. அப்போது திடீரென்று அவளுள்ளத்தில் ஒரு பெருந்திகில் உண்டாயிற்று. அவள் தான் எழுதுங் கடிதத்தில் தன் நினைவை நிறுத்தக் கூடாதவளானாள். சாவையுந் தீதான நிகழ்ச்சியையும் பற்றிய எண்ணங்கள் அவள் உள்ளத்தில் நிலை பெற்றுத் தோன்றின. மக்கள் பலர் அழிந்து போனதைப் பற்றிய திகிலான ஓர் உணர்ச்சியையன்றி, எங்கே எப்படி எப்பொழுது அழிந்தார்களென்று திட்டமாக அவளுக்குவேறேதுந் தோன்றவில்லை. உடனே அவள் மேல்மாளிகைக்குப் பறந்து சென்று தன் தாயிடம் அடைந்தாள். அவள் அன்னை, 'குழந்தாய், ஈதென்ன மடத்தனம்!' என்று கடிந்தாள். ஆனால், அப்

பெண்மணி "இல்லை, பெருந்திரளான மாந்தர்கள் எங்கோ மடிகின்றமை திண்ணம்." என்றாள். அவளுக்குத் தோன்றியதை மறுநாள் வந்த செய்தி உறுதிப்படுத்தியது; அவளுக்குத் திகிலான உணர்வு தோன்றிய அதேநேரத்தில் தே என்னும் யாற்றின் பாலம் இடிந்துவிழப் பெருந்திரளான மக்கள் கீழ்விழுந்து மாய்ந்தார்கள். இத் தோற்றத்தைக் கண்ட பெண்ணின் அன்னைக்கு உயிர்நிலை ஆராய்ச்சிக்கழகத்தார் இதைப் பற்றி எழுதிக்கேட்டபோது அவள் பின்வருமாறு எழுதி யனுப்பினாள்: "தே என்னும் யாற்றின் பாலம் இடிந்து விழுந்த இராப்பொழுதில் யான் தனியே என் அறையில் உட்கார்ந்திருந்தேன். அப்போது என் மகள் மேன்மெத்தைக்குச் சடுதியில் ஓடிவந்து பலர் கூச்சலிடும் ஒலி யிடைவெளியில் எனக்குக் கேட்கின்றது என்றாள். அக் கூச்சலினால் ஏதோ திகிலான நிகழ்ச்சி நேர்ந்திருக்க வேண்டுமென்றும். மக்கள் பலர் மாண்டிருக்கவேண்டு மென்றுங் கூறினாள். மறுநாட்காலையிற் பால் கொண்டு வந்த பையன் எங்கள் வேலைக்காரியிடம் தே யாற்றின் பாலம் இடிந்து விழுந்ததெனக் கூறினான்." இதனால் அப் பெண்மணி கண்டது மெய்யென உறுதிப்பட்டது.

**அடிக்குறிப்பு**

1. Bromine.

## 13. கனவிற்றோன்றும் உணர்ச்சிகள்

இனி, மேற்சொன்னபடியாகவன்றி, உறங்குங்காற் கனவினிடத்துந் தொலைவு நிகழ்ச்சிகள் வந்து தோன்றுதல் உண்டு. இதற்கு உண்மையாக நிகழ்ந்ததொன்றை இங்கெடுத்துக் காட்டுவாம்; ஒரு கப்பற்றலைவர்[1] தாம் கண்ட கனவு நிகழ்ச்சியைப் பின்வருமாறு எழுதுகிறார்.

"1825 ஆம் ஆண்டு சூன் 7 ஆம் நாள் இரவு யான் ஒரு கனவு கண்டேன். இரண்டு பாய்மரம் உள்ள ஒரு கப்பல் உள்ளே தண்ணீர்கொண்டு மிதக்க அதில் ஆண்மக்கள் பலரும் அவரிடையே கரிய ஓர் ஆண்மகனும் இருக்கக் கண்டேன். மறுநாள் இரவிலும் யான் அதே கனவைக் கண்டு எழுந்து என் துணைவனை எழுப்பி எனது கப்பலின் மேற்றட்டின்மேற் போய்ப் பார்க்கச் செய்தேன். யானும் அன்றைப் பகல்முழுதும் மேற்றட்டிலேயே யிருந்தேன். திரும்பவும் 9 ஆம் நாள் இரவு அதே கனவு தோன்றிற்று. உடனே எழுந்து எனது கப்பலைத் திருப்பி வேறொரு முகமாய்ப் போகச்செய்தேன். அன்று மாலை எட்டு மணிக்குக் கடும்புயற் காற்றும் இடியும் மின்னலுந் தோன்றின; அதனாற் பாய்களைச் சுருக்கினேன். மறுநாட்பகல் வெளிச்சந் தோன்றிற்று. இனிய காற்று வீசியது. 10 ஆம் நாட் காலை 8 மணிக்குக் கப்பலை வேறொரு முகமாய்த் திருப்பினேன். இந்த நேரத்தில், என் கப்பலுக்கு ஏதோ இடர்வரப் போகிறதென்று எண்ணி என்மனங் கலவரம் அடைந்தது. என்னுடைய கனவைப்பற்றி என் கூட இருந்த துணைவனுக்கும், பயணக்காரர்களுக்குந் தெரிவித்தேன். அவர்கள் அதனை இலண்டனிலுள்ள தம் வீட்டார்க்கும் ஒரு கழகத்தார்க்கும் எழுதி அறிவித்தார்கள்.

ஒன்பதரை மணிக்கு யாங்கள் காலையுணவு எடுக்கையில், மேற்றட்டின்மேல் அலுவல் பார்ப்பவர் வானத்தில் வெளிச்சங் குறைந்து ஒரு புயற்காற்று வருகிறதென்று கூவினார். உடனே யான் மேற்றட்டிற்குப் போய்ச் சிறிய பாய்களைச் சுருக்கினேன். பின் அணியத்தின் பக்கமாய்க் காற்று வருவதனை யாங்கள் நோக்குகையில் ஒரு படகினையும் அதன் துடுப்பின்மேல் ஒரு பெருங்கொடியைப் பறக்கவிட்டுக் கொண்டு அதனைப் பிடித்த படியாய் ஒருவன் அப் படகின் கோணத்தில் நிற்பதையுங் கண்டோம். உடனே யான் கப்பலை நிறுத்திப் பாய்களைச் சுருட்டிவிட்டேன். உயரப் பாய்மரத்தின்மேலிருந்து பெரும் பாய்களைச் சுருட்டிய என் ஆட்கள் தாம் பலரைப் பார்ப்ப தாகவும், அவர்கள் கடற்கள்வர் கூட்டமா யிருக்கலாமென்று நினைப்பதாகவுங் கூறினார்கள். தான் அதே கடலிற், சென்ற ஆண்டு கடற்கள்வரிடம் அகப்பட்டுக்கொண்டது அவ்வழியே யென்று என் ஆட்களில் ஒருவன் கூறினான். பயணக்காரரும் என் கீழ் அலுவல் பார்ப்பவருங் கப்பலை வேறொருமுகமாய்த் திருப்பும்படி வற்புறுத்தியதோடு, அவர்கள் கடற்கள்வரா யிருந்தால் அவர்களால் வருங்கேட்டுக்கு ஈடுவாங்குவதும் முடியாமற்போம் என்றும் எடுத்துரைத்தார்கள். ஆகவே, யான் கப்பற் பாய்களை மடித்துக் கட்டிக் கப்பலைத் திருப்பி விட்டுக் காலையுணவுகொள்ளக் கீழ் இறங்கினேன். யான் எனது சிற்றறைக்குச் சென்றதும், என் மனம் மிகவும் அமைதி இலதாயிற்று. அதனால், யான் பேரறைக்குத் திரும்பிவந்தேன். உடனே யான் கண்ட கனவின் நிகழ்ச்சி என் உள்ளத்தில் வலிய வந்து புகுந்தது. என் இரண்டு கைத் துப்பாக்கிகளையுங் கைவாளையும் இரண்டு பக்கத்தும் வைத்துக்கொண்டு, மேற்றட்டின்மேற் போய் என் ஆட்களையெல்லாம் அழைத்துக் கப்பலை நிறுத்திச் சுக்கானைப் பிடித்து அதனை நிறுத்தச் சொன்னேன். என்கீழ் முதற் கண்காணி படகைக் கீழ் இறக்கிக் கொண்டுபோய்த் தொலைவிற் றோன்றும் படகினையும் ஆட்களையும் பார்க்கும்படி கட்டளையிட்டேன். அதன்பின் என் பீரங்கிகளை மருந்திட்டு இடிக்கவுங், கப்பற் பாய்களை விரித்துக்கட்டி அப் படகுகளின் முகமாய்ச் செல்லவுங் கற்பித்தேன். அங்ஙனங் காணப்பட்ட அக் கூட்டத்தாரிடம் யாங்கள் வந்து சேருகையில், யான் அனுப்பிய என் துணைவன்

அங்குள்ள படகினின்று அதன் தலைவனையும் ஆட்களையும் அகற்றித் தன் படகினுள் ஏற்றக் கண்டேன். அப் படகு குறுக்குத் தட்டு வரையில் நீர் நிறைந்து, ஒரு பெரிய சுறாமீனை இழுத்துக் கொண்டிருந்தது.

செல்லார்டு என்னும் பெயர் வாய்ந்த அக் கப்பற்றலைவனையும் அவன் ஆட்களையும் எங்கள் கப்பலின்மேல் ஏற்றிக் கொண்டோம். அவர்களெல்லாரும் மிக மெலிந்திருந்தமையாற் பேசுதற்கும் வலிவில்லாதவர்களாய் இருந்தார்கள். ஆனால், அவர்களிற் கரிய நிறமுடையனாயிருந்த ஓர் ஆள்மட்டுஞ் சிறிது நல்ல நிலையிலிருந்தமையால் அவனிடமிருந்து பின்வருஞ் செய்திகளை யெல்லாங் கேட்டுணர்ந்தோம். அமெரிக்காவி லிருந்து கிரெனெடா என்னும் இடத்திற்குச் செல்லும் இரண்டு பாய்மரக் கப்பல் ஒன்றுக்கு அவர்கள் உரியராய்க் காணப் பட்டனர். அவர்கள் செல்லும் வழியில் தாம் அருந்துவதற்குத் தண்ணீர் தமது கப்பலிற் செலவாய்விட்டமையாலும், நீண்டவழி செல்ல வேண்டியிருந்தமையாலும் இடையேயுள்ள ஒரு தீவில் தண்ணீர் எடுக்கும் பொருட்டுப் போனார்கள். அப்போது காற்றின்றி அமைதியா யிருந்ததனால், அத் தீவண்டை கப்பலை நங்கூரம் பாய்ச்சி நிறுத்திச் சிறு படகு ஒன்றில் இறங்கி அத் தீவின் கரையை நோக்கிப் போகலானார்கள். அப்போது இளங்காற்று ஒன்று வீசத் துவங்கியது; சிறிது நேரத்திலெல்லாம் அப்படகு தன் கப்பலிருந்த முகமாக இல்லாமல் வேறொரு முகமாய் இழுத்துக்கொண்டு போகலாயிற்று; அப்போது நீரோட்டமும் மிகவுந் கடுமையாய் அப்படகினை இழுத்துக்கொண்டு ஓடினமையால் அதனை வலித்துப் பார்த்துப் பார்த்துக் கடைசியாய் அதிலுள்ளவர்கள் முற்றும் இளைப்படைந்து போனார்கள். அவர்களது பார்வை எட்டக்கூடிய அளவு பார்க்கையில், தமது கப்பல் அத் தீவண்டை நங்கூரம் பாய்ச்சிய இடத்திலேயே நிற்கவும், தாம் ஏறியிருக்கும் படகுமட்டும் அக் கப்பலையுங் கரையையும் வர வர அகன்று கடைசியாய் அவை கண்ணுக்குப் புலப்படாத தொலைவிற் போய்விடவும் மனமடிவொடு கண்டார்கள். அடுத்தநாள் அவர்கட்கு மிகவும் பொல்லாத காலமாயிற்று. ஏனென்றால், அன்றைக்குக் கடுங்காற்றொன்று வீசியது; இடியும் மின்னலுங் கிளர்ந்தன; துடுப்பினையும், பாய்மரத்தினையும், பாய்களையும் அப் படகின்

வடக்கயிற்றொடு சேர்த்துக் கட்டிவிட்டு ஓடுங்கடல் நீர் ஓட்டத்தின் அப்படகு ஊடறுத்துச் செல்லும்படி தன் போக்கிலே அதனை விட்டுவிட்டார்கள். இந்நேரமெல்லாம் அவர்கள் பருகுவதற்குத் தண்ணீரும் இல்லை, உண்பதற்கு உணவும் இல்லை. அதற்கு அடுத்த நாள் காற்று ஏறக்குறைய அமைதியுற்றது. சிறு காற்று அடித்தாலும், வெளியில் வெப்பமோ தீய்த்துவிடுங் கடுமையுடையதாயிருந்தது. அன்றைப் பகலெல்லாம் அவர்கள் பட்ட துன்பம் அளவிடப்படாதது. அந்த மீகாமனும், அவன் ஆட்களுந் தாங்கள் உடுத்தியிருந்த துணிகளைக் கிழித்துக் குளிர்ந்திருக்கும் பொருட்டுத் தண்ணீரை மேலே ஊற்றிக் கொண்டார்கள். நான் அவர்களைப் போய்க் கண்ட அன்றைக் காலையில் அந்தக் கரிய ஆள் தன் கடவுளை நோக்கிக் "கரிய மக்கள் முறையீட்டினையும் வெள்ளைமக்கள் முறையீட்டினையுங் கடவுள் கேட்டது உண்டேல், யாங்கள் இறந்து போகாமைப் பொருட்டு எங்கள் உணவுக்காக ஒரு மீனை அல்லது சுறாவை அவர் அருள்கூர்ந்து!" விடுக்க என்று வேண்டினான். எல்லா இரக்கமும் உடைய அப்பன் அவனது வேண்டுகோளைச் செவியேற்று, அவர்களிடம் ஒரு பெரிய சுறா மீனை விடுப்ப அஃது அப் படகின்மேற் கிடந்தது; அவர்கள் அதன் இரத்தத்தைக் குடித்து, அதன் தசையிலும் ஒரு பகுதியைத் தின்றார்கள். உடனே யான் ஒரு தண்ணீர்ப் பத்தலைத் திறப்பித்து அவர்களை அதில் முழுகும்படி செய்தேன். இன்னும் அவர்களைக் குளிரப் பண்ணுதற்கும், வெளியில் வெப்பத்தாலும் உப்புத் தண்ணீ ராலுங் கொப்புளித்துப்போன அவர்களுடம்பின் தோலை ஆற்றுதற்கும் அவர்கள் முதுகின் றோலின்மேல் ஒட்டிக் கொண்டிருந்த சட்டைத் துணிகளைப் பிரித்தெடுத்தற்கும், அவர்களைத் தனித்தனியே தண்ணீர்ப் பத்தலில் தலைமுழுகு வித்தேன். அதன்பின், அவர்கள் வாய்களில் ஈரம் உண்டாகும் பொருட்டுச் சிறிது நேரத்திற் கொருகால் தேத்தண்ணீர் பருகக்கொடுத்தேன். அவர்களிற் சிலர் உணவுஞ் சிலர் கோதுமை யப்பத்துண்டும் வேண்டிக் கேட்டார்கள். யான் அவர்கட்கு அரிசிக் கஞ்சியும் வாற்கோதுமைக் கஞ்சியும் இடைக்கிடையே கொடுத்தேன். நன்றாய்த் தூங்கியெழுந்த பிறகு, அந்தச் செல்லார்டு என்னும் மீகாமன் என்னொடு பேசல் வேண்டி என்னைக் கீழே வரும்படி அழைத்தார். அந்தக் கரிய

ஆண்மகன் சொல்லியவை யெல்லாம் உண்மைதாமா என்று தெரிந்துகொள்ளும் பொருட்டு அவர்தம் சட்டைப்பைகளை ஆராய்ந்து பார்க்கவே, அவரது கப்பற்சரக்குகள் பதிந்த புத்தகமும் அட்டவணையும் அகப்பட்டன. அவையெல்லாம் உண்மையே எனவும், அவர்கள் கடற்கள்வ ரல்லரெனவுந் தெரிந்து மகிழ்ந்தேன். நாங்கள் இருவேமுங் கலந்து பேசியதிலிருந்து 1814 ஆம் ஆண்டு நியூபவுண்டிலாந்தில் யோவான் திருக்கோயிலில் அவரும் யானும் முன்னமே ஒருவரையொருவர் கண்டு பேசினமை நினைவுக்கு வந்தது. அப்போதே அவர் இரண்டு பாய்மரக் கப்பலொன்றிற்குத் தலைவரா யிருந்தார்.

உண்மையாக நிகழ்ந்த இக் கனவுநிகழ்ச்சியில், ஒரு கப்பற் றலைவற்கும் அவன்றன் ஆட்கட்குந் தொலைவில் நேர்ந்த இடரின் வகைகள் அவ்வளவும் மற்றொரு கப்பற்றலைவற்கு அடுத்தடுத்துத் தோன்றி, அவன் அவர் தமக்கு உதவி செய்யுமாறு ஏவிய தன்மை பெரிதும் நினைவு கூரற்பாற்று. நல்ல எண்ணம் வாய்ந்த அக் கப்பற்றலைவன் உள்ளமே தொலைவில் நேர்ந்த அவ்விடரினைக் கனவின்கட் கண்டுணர்ந்ததோ, அல்லது கடவுளே அத் தோற்றத்தினைக் கனவின்கண் அவனுக்கு எழுப்பி அவன் உதவி செய்யுமாறு அவனை ஏவினரோ நாம் அவ்வகையினை அறியேம். தொலைவில் நேர்ந்த இடர், அதனைச் சிறிதுமே யறியாத ஒரு மீகாமனுக்குக் கனவின்கட் டானே வந்து புலப் பட்டமைதான் இங்கே கருதற்பாற்று.

இனிப், பின்னே நிகழப்போகும் நிகழ்ச்சிகள் முன்னே கனவின்கண் வந்து தோன்றுதலும் உண்டு. அதனை மெய்ப் பித்தற்கு உண்மையா நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை இங்கெடுத்துக் காட்டுவாம்;

"சென்ற இரவு தம் நண்பர்கள் தம்மைப் பார்க்க வந்த போது பிராட்டு என்பவர் தாம் முந்தின இரவிற் கண்ட கனா நிகழ்ச்சியை எடுத்துரைக்கலானார். தாம் இறந்துபோன தாகவுந், தாம் நல்ல தூக்கத்திலிருந்தாலுந் தம்மைச் சுற்றி நடப்பதவ்வளவுந் தாங் காணக் கூடியதாயிருந்ததாகவும், ஆனால் அப்போது தாம் பேசவாவது அப்புறம் இப்புறந் திரும்பவாவது மாட்டாமலிருந்ததாகவும் ஒரு கனவு கண்டார்; தம்மை அடக்கம் பண்ணுவதற்கு வேண்டும் ஏற்பாடுகள் செய்யப்பட்டதையுஞ்,

சவப்பெட்டியைத் தாங்கப் போகும் ஆறு நேசர்களின் பெயர் இன்னதென்பதையும் அவர் குறிப்பிட்டுச் சொன்னார். அவற்றொடு தம்மை அடக்கஞ்செய்யப் போகும் இடத்தையுந், தம்மை வைக்குங் கல்லறையினையும், அக் கல்லறைக்குள் தமது சவப்பெட்டியைத் தாழ்த்தி இறக்குமாற்றையும் எல்லாம் பிழைபடாமல் எடுத்துக் கூறினார். பிறகு தமது சவப்பெட்டிமேல் முதலில் வெட்டித் தள்ளிய மண் விழுந்ததுந் தாம் அத் தூக்கத்தினின்றும் விழித்துக்கொண்டதாகவுந் கூறினார். அவர் இங்ஙனங் கண்டு கூறிய கனவின்படியே மறுநாளில் இறந்துபோனார். தாம் இரவு பன்னிரண்டு மணிக்கு இறப்பதாகவும் உறுதி சொன்னார். எல்லாம் அவர் கண்டபடியே நிறைவேறின. அவர் கனவிற் கண்ட ஆறு நேசர்களே அவரது சவச்சடங்கை நிறைவேற்றினர்."

மற்றொருவர் பின்னே நடக்கப் போவதனை முன்னே கண்டதுங், கண்டபடியே நடந்ததும் **உயிர்நிலை ஆராய்ச்சிக் கழகத்தார்க்கு** எழுதித்தெரிவிக்க, அக் கழகத்தார் அவர் கூறியதை ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொண்டாராகலின், அதனையும் இங்கே எடுத்துக் காட்டுவாம்:

"முதலாக என் உடம்பு செவ்வையான நிலைமையிலிருக்கிற தென்பதனைத் தெரிவிக்கின்றேன். மடத்தனமான நம்பிக்கை என்னிடஞ் சிறிதும் இல்லை. பொய்யான தோற்றங்களுக்கு நான் உட்பட்டதுமில்லை. அத்தகையவற்றை ஆராய்வதில் எனக்குக் கருத்துச் செல்வதுமில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன், அப்போது பதினெட்டு ஆண்டுள்ள என் மகன் அடுத்துள்ள மாகாணத்தில் ஒரு மருந்துக் கடையில் அலுவலில் அமர்தற்குச் சென்றான். அவன் போவதற்கு யான் முழுதும் உடன்பட்டு விடைகொடுத்த தல்லாமல், அவனைப் பற்றியான் ஒரு சிறிதும் மனம் வருந்தவில்லை. சென்ற வேனிற் காலத்திற் கிழக்கே நீண்ட பயணம் போய்ச் சில காலம் அங்கிருந்தேன். யான் வீட்டில் இல்லாத பொழுது, என் மகனைப் பற்றியாவது என் குடும்பத்தார் எவரைப் பற்றியாவது யான் சிறிதும் கவலை யடையவில்லை. மனக் கிளர்ச்சியோடிருப்பதே எனது இயற்கை. ஆனாற், சென்ற இலையுதிர் காலத்தில், திட்டமாய் இன்னதென்று சொல்ல முடியா வகையாய் என் மகனைப்பற்றி மனக்குறை கொள்ள வானேன். மனத்துயரம் அடைந்தேனென்று சொல்லல்

முடியாது; ஆனால், எதனால் என்றும் என்னாற் சொல்லல் முடியாது. மனக்குறை மட்டும் உற்றேன். அவன் வீட்டில் இல்லாத மூன்று ஆண்டுகளிலும் யான் எழுதிய கடிதங்களைக் காட்டிலும் பல கடிதங்கள் அவனுக்கு எழுதினேன். நவம்பர் முற்பகுதியில் அவன் எங்களைக் காண வீட்டிற்கு வந்தான். அவன் திரும்ப எங்களை விட்டுச் சென்ற பிறகு, அவனைப்பற்றி எனக்கு முன்னையிலும் மிக்க வருத்தமும் மனக் குறையும் உண்டாயின. ஆனால், அஃது ஏதோ இடர் வரப்போகிற தென்பதைக் குறித்த மனக்கலவரமும் அன்று, அச்சமும் அன்று. அவனைப்பற்றி எவையோ மனக்குறையும் வருத்தமுந்தாம். என் உள்ள நிகழ்ச்சியை யானே எடுத்துரைக்கக் கூடவில்லை. என்னால் நினைவுகூரக் கூடியவரையில், யான் அறச்சிறு பையனாயிருந்தபோது, என் தகப்பனார் இறந்ததன் பிறகு யான் எங்ஙனம் மனம் நெகிழ்ந்தேனோ அங்ஙனமே இப்போதும் மனம் நெகிழப்பெற்றேன். என்வாழ்க்கையின் ஒளி என்னை விட்டுச் சடுதியில் அகன்றுபோயதெனவும், இனி யான் உயிரோடிருப்ப தற்கு ஒன்றுமில்லையெனவும் ஓரெண்ணந் தோன்றியது. திரிகைக்கல்லை யொத்த ஒரு நிறை எனது உயிரை நசுக்குவது போற் காணப்பட்டது. உயிர் வாழ்க்கையில் எனக்குச் சிறிதும் விருப்பமில்லையென்று என் நண்பர்கட்குப் பலகாற் சொல்லிவந்தேன். டிசம்பர்த் திங்கள் செல்லச் செல்ல இவ்வுணர்ச்சி எனக்கு மிகுந்துவரலாயிற்று; எப்படியோ என் மகனே அதற்கு நடுக்குறியாகத் தோன்றினன். இரவிற் பலகால் அவனை நினைத்தபடியாய் எழுந்திருப்பேன். உயிர் வாழ்க்கையின் வெறுமையினையும் போலித் தன்மையினையும் ஆழ நினைத்தலால் யான் தூங்கமுடிவதில்லை. டிசம்பர்த் திங்கள் பத்தொன்பதாம் நாட்காலையிற் சிறிது முன்னே துயில் நீங்கி எழுந்தேன். ஏதோதத்தான நிலைமைக்கு யான் வருவதாகத் தோன்றிற்று. எவரையும் எழுப்பாமல் யானே சென்று நெருப்பு மூட்டினேன். என் வாழ்நாட் காலத்தில் இங்ஙனம் யானே இதற்குமுன் செய்ததில்லை. அந் நெருப்பண்டையில் உட்கார்ந்துகொண்டு நினைத்துப் பார்க்கப் புகுந்தேன். என்னை வருத்தும் அச்சமுள்ள துன்பம் இன்னதென்று என்னால் அறியக் கூடவில்லை. அஃதின்னதென்று தெரிந்திலது. எனக்குத்தான் யாதென்றுந் தெரியவில்லை, இன்னும்

என்மகனுக்குத்தான் ஏதேனுந் துன்பமோ இடரோ வரப்போகிறதென்றும் யான் துணியக் கூடவில்லை. காலை ஏழுமணிக்கு என் மனைவி துயில் நீங்கி யெழுந்து படுக்கைமேல் உட்கார்ந்து, தன் உள்ளத்தை மிக உறுத்தியதொரு கனவு கண்டதாகக் கூறினாள்; அக் கனவுதான் அவளை விழிக்கச் செய்தது.

அவள் கூறியதாவது; ‘யான் இதற்குமுன் பார்த்தறியாத மக்களிடையே ஒரு புதிய இடத்தில் நீங்கள் இருப்பதாக எனக்குப் பட்டது. பள்ளிக்கூடத்திற்குச் செல்லுஞ் சிறு பிள்ளைகள் பலரும் பருவம்வந்து வளர்ந்த ஒரு பெண்பிள்ளையும் உடைய ஒரு பெருங் குடும்பமாய் அது காணப்பட்டது. நான் அந்த இடத்திற்கு ஒரு சரக்கு வண்டியில் வந்தேன்; ஆனால், நீங்களோ எனக்கு முன்னமே அங்கு வந்திருந்தீர்கள். நீங்கள் அந்தக் குடும்பத் தாரொடு மிகவும் நெருக்கமான பழக்கமுடையீராய்க் காணப்பட்டீர்கள். அந்தப் பெரிய பெண்ணானவள் நுங்கள் மடிமேல் உட்கார்ந்து தன் கைகளால் உங்கள் கழுத்தைச் சுற்றிக்கொண்டு அடுத்தடுத்து உங்களை முத்தமிட்டது. அத்துணை நெருக்கமாய் உறவுகொள்ளும்படி நீங்கள் இந்த மக்களை எங்கே கண்டு பிடித்தீர்களென்று யான் வியந்து கொண்டிருக்கையில், நீங்கள் சடுதியிற் கீழ்விழுந்து இறந்து போனீர்கள். நானும் உடனே விழித்துக்கொண்டேன்; என்பதேயாம்.

இந்தக் கனவு உண்மையாகவே நடைபெறுமோவென்று மனக்கலக்கங் கொண்டேன். யான் அவ்வளவு துன்புற்ற நிலைமையிலிருக்கின்றேனென்றும் உவால்டரைப்பற்றி யான் மிகவும் வருந்துதலால் எனது உயிர் வாழக்கை எனக்கே ஒரு சுமையாய் இருக்கிறதென்றும் யான் அவளுக்கு மறுமொழி கூறினேன். காலையுணவு கொண்டபின், என் மகளைக் கூப்பிட்டு உவால்டருக்கு ஒருகடிதம் எழுதி உடனே அவன் வீட்டுக்கு வரும்படி சொல் என்றேன். அக் கடிதங் கட்டாயம் போய்ச் சேரும்படி அதனை முதல் வண்டிக்கே அவள் விடுக்குமாறுஞ் செய்தேன். அதன்பின் மனக்கிளர்ச்சியின் பொருட்டு எனது வயல்நிலத்தைப் பார்க்கக் குதிரைமேற் சென்றேன். ஆனாற், பகல் 12 மணிக்கெல்லாம் வந்த செய்தியானது என் மகன் கடுங்காயம்

அடைந்து உணர்வின்றிக் கிடக்கின்றானென அறிவித்தது.உடனே என் மனைவியையும் மகளையும் பின்வண்டியில் வருகவென்று சொல்லிவிட்டு, யான் சரக்குவண்டியில் ஏறி என் மகன் அந்நிலையிற் கிடக்கும் இடத்திற்குச் சென்றேன். இப்போது அப் புதுமையான நிகழ்ச்சியில் உன்னிக்கத் தக்கதொரு குறிப்புத் தோன்றலாயிற்று. ஏதோ ஒரு பிழைபாட்டால் என் மனைவியும் மகளும் புகைவண்டியைத் தவறவிட்டு, ஒரு நாட்டு வண்டியில் ஏறி நேரேவந்து சேர்ந்தார்கள். வழியில் இடையிடையே ஒவ்வொரு சிற்றூரிலுங் குதிரைகள் மாற்ற வேண்டி யிருந்தமையால், அவர்கள் என் மகனிடம் இரவு 11 மணிக்குத்தான் வந்து சேர்ந்தார்கள். இத் துயரநிகழ்ச்சி நேர்ந்த இடம் மிகச் சிறந்த ஒரு குடியானவரின் இல்லத்தின் அருகாமையிலாகும்; ஏனென்றால், இக் குடியானவரின் மகளை என் மகன் நெடுநாளாகப் போய்ப் பார்ப்பது வழக்கம். இவர் அவனுக்குச் சிறந்த நண்பராகையாலும், இவரது இல்லம் அருகே யிருந்தமையாலும் அவனை அவ்விடத்திற்கே கொண்டு சென்றார்கள். அவரது பெரிய அக் குடும்பத்தின் பிள்ளைகள் எல்லாரும் என் மகனிடத்தே மிக்கதோர் அன்பு வைத்திருந்தார்கள். என் மகன் இறந்ததைப்பற்றி அவர்கள் அடைந்த துயரத்தை விட நாங்கள் மிகுதியாய்த் துயருற்றோமென்று என்னால் உண்மையாகவே சொல்லல் முடியாது. என் மகன் உணர்வின்றிக் கிடந்த அவ்வறையினுள் என் மனையாள் நுழைந்த போது, யான் முன்னே குறிப்பிட்ட அக்குடியானவரின் மகள், என் மகனது படுக்கையின் தலைமாட்டில் அழுதபடியாய் நின்றுகொண்டிருந்தாள். என் மனவை அவ்விடத்தைச் சுற்றிலும் ஒருமுறை நோக்கியதும், "இது தான் யான் கண்ட கனவு! நீங்கள் இருக்கக் கண்ட அறையும் இது தான் ! யான் கனவிற் கண்ட மக்களும் இவர்கள் தாம்!" என்று என் காதிற் குசுகுசு வெனக் கூறினாள். அவள் நாட்டு வண்டியில் வந்த செய்தியும் அவள் கண்ட கனவினை மெய்ப்படுத்தியது. அக் குடும்பத்தினரும் அவள் சொல்லிய அடையாளப்படியே யிருந்தார்கள். அவர்கள் கள்ளம் இல்லாத மிகச் சிறந்த குடிமக்களாவர். மேலும், அவள் நெடுகப் பார்த்து வந்த நாட்டின் இயல்பும், இறுதியாக அவ்வில்லத்தைச் சூழ அவள் கண்ட இயற்கைத்தோற்றமுந் தான் கண்ட கனவில் தோன்றியபடியே முழுதும் ஒத்திருந்தன.

முடிவாக யான் சொல்லற்பாலது, என்னை அதுகாறும் பெரிதுந் துன்புறுத்திவந்த அத் துயரநினைவு என்னை விட்டு அகன்றதேயாகும். என் உயிரையே நசுக்கி விடுவதா யிருந்த சொல்லுதற்காகா அப் பெருந்துயர்ச் சுமையினை டிசம்பர் 17 ஆம் நாட் காலையிலிருந்து யான் உணரவில்லை. என் மகனை இழந்த துயரம் எனக்கு உளதென்றாலும். இஃது யான் முன்னடைந்த துயரத்தின் வேறாவதாகும்"[1]

எனப்போந்த கனவு நிகழ்ச்சியில் இறந்துபட்ட தன்மகனுக்கு வேறாகத் தன் கணவனையே அவ்வாறு அவ்வம்மையார் கண்ட ஒரு பிழையைத் தவிர, மற்றையவெல்லாம் அக் கனவிற் கண்டபடியே ஒருங்கொத்திருத்தல் பெரிதுங் கருத்திற் பதிக்கற் பாலதாகும்.

இன்னும், இழந்துபோன பொருள்களைத் திரும்பப் பெறுதற்கு எவ்வளவோ முயன்றும் அவற்றைக் கண்டு பிடிக்க மாட்டாமல் மிக வருந்திக் களைத்துப் படுத்து உறங்கினவர் சிலர் அவை இருக்குமிடங்களைக் கனவிற்கண்டு விழித்துப், பின்னர் அவ்விடங்களைப் போய்ப் பார்த்து, அவை தம்மைக் கண்டெடுத்த வரலாறுகளும் பல உள்ளன. அவை தம்முள், அறிஞர் சிலரால் ஆராய்ந்து உண்மையெனத் தெளியப்பட்ட சிலவற்றைமட்டும் இங்கு எடுத்துக் காட்டுவாம்:

"ஒருகால் வழக்கறிஞர் ஒருவர் இரவு கடிதங்கள் எழுதத் துவங்கி, முடித்தபின் அவற்றைப் பன்னிரண்டரை மணிக்கு அஞ்சற் பெட்டியில் இட வெளியே சென்றார்; சென்று திரும்பியவுடன் தம் உடைகளைக் கழற்றுகையிற் கருவூலத்தில் (Bank) தாம் ஒரு பெருந்தொகை வாங்கிக் கொள்ளும்படி, முன் நாளிற் குறித்துக் கொடுக்கப்பட்ட ஒரு சீட்டை (Cheque) எவ்வாறோ தாம் இழந்து விட்டமைகண்டார். உடனே அதனை எவ்வளவோ ஒவ்வோரிடத்துந் தேடிப் பார்த்தும், அஃது அகப்பட்டிலது. அதன் மேல் அவர் மனத்துயரத் தோடும் படுக்கைக்குச் சென்று உறங்கினார்; அங்ஙனம் உறங்குகையில் தமது வீட்டு வாயிலுக்கு நெடுந்தொலைவில் அல்லாத வேலியடைப்புள்ளதோர் இடத்தில் அச்சீட்டுச் சுருளாய்க் கிடக்கக் கனவு கண்டார். கண்டு விழித்ததும், எழுந்து ஆடை யணிந்து புறத்தே தெரு வழியே ஏகித், தாம்

கனவிற் கண்ட அவ்விடத்திலேயே அந்தச் சீட்டுச் சுருளாய்க் கிடத்தலைக் கண்டு, அதனை மகிழ்ந்து எடுத்துக்கொண்டார்."

மற்றொருகால் ஒரு பெருமாட்டி தனது வீட்டுக்கு அண்மையிலிருந்த ஒரு காட்டுக்குள் உலவப்போனாள்; போய்த் திரும்பி வந்ததும் அவள் தான் வைத்திருந்த ஒரு முதன்மையான சாவியைக் காணாமற் கலங்கினாள். திரும்பிப் போய்த் தேடலா மென்றால் மாலைப் பொழுதுபோய் இருண்டுவிட்டது. அதன்மேல் அவள் மனக் கவலையுடையளாய் உறங்கச் சென்றாள். அவ்வாறு அவள் உறங்குகையில் தான் உலவிவந்த அக் காட்டின்கண் உள்ள ஒரு மரத்தின் வேர் அண்டையில் அச்சாவி கிடப்பதாகக் கனவு கண்டாள். மறுநாட் காலையில் அவள் அக்காட்டினுட் போய்த், தான் கனவிற் கண்ட அடையாளப்படியிருந்த ஒரு மரத்தின் வேரண்டையிற் சென்று பார்க்க, அச் சாவி அங்கே கிடந்தது; உடனே மகிழ்ந்தெடுத்துக் கொண்டாள்.

இன்னுங், காணாமற்போன ஒரு பெண்ணின் சவத்தை மற்றொரு பெண் தான் கண்ட கனவின் வாயிலாகக் கண்டறிந்த வரலாற்றினையும் இங்கெடுத்துக் காட்டுவாம்:

ஷாங்கலின் என்னும் ஊரிற் படைத்தலைவரான லும்ஸ்டன் (Lumsden) என்பவரின் மகளான மார்ஜொரி என்பவள் 1903 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10 ஆம் நாள் நடைபெற்ற நாடகம் ஒன்றில் தானுஞ் சேர்ந்து ஆடினவள், அன்றைக்கு எப்படியோ மாயமாய்க் காணாமற் போய்விட்டாள். அதுபற்றிப் பெருந்துயர்கொண்ட அவள் தந்தையார், தம் மகளைக் கண்டுபிடித்துத் தருபவர்க்கு 50 பவுன் பரிசு அளிப்பதாக விளம்பரப்படுத்தி யிருந்தார். அப்போது சிலஸ்கெம்பு என்னும் ஒரு செம்படமாது ஓரிரவு தான் உறங்குகையில் தனக்குத் தோன்றிய கனவில் ஓரிளம் பருவத்து மங்கை கடற்கரைத் துறைமுகப் பாலத்தில் உலாவிக் கொண்டிருந்த நேரத்திற் கால்தவறிக் கடலில் வீழ்ந்தமையும், வீழ்ந்த அப்பெண்ணின் சவம் ஓரிடத்தில் ஒதுங்கிக் கிடப்பதையுந் தெளிவாய்க் கண்டாள். கண்டு விழித்தவள் மறுநாட் காலையில் (அதாவது பிப்ரவரி 20 ஆம் நாள் விடியலில்) தான் கனவிற் கண்ட இடத்தைப் போய்ப் பார்க்க, மெய்யாகவே ஒரு பெண்

பிணமாய்க் கிடப்பதை நோக்கித் திடுக்கிட்டு, ஊரவரெல் லார்க்கும் அச்செய்தியை ஓடிவந்து அறிவித்தாள். உடனே அப் பெண்ணின் தந்தையாரும் ஊர்காவற்றலைவரும் அப் பிணத்தண்டை வந்து சேர்ந்து, அவளது சாவின் உண்மையினை ஆராய்கையில், அக் கடற் காவலாளியொருவர் அப்பத்தாம் நாள் இரவிற் பதினொரு மணிக்குச் சிறிது முன்னே ஒரு மங்கை பாலத்தின்மேல் நின்று கொண்டிருந்ததனைத் தாம் பார்த்து விட்டு அப்பாற்போய்ப், பத்துநிமிடங் கழிந்தபின் மீண்டும் அவ்விடத்தை வந்து நோக்க அம் மங்கையார் அங்கு இலராயினார் எனவும், அதன் மேல் அம் மங்கை எங்கே சென்றிருக்கக் கூடுமென்று தெரிதல் வேண்டி அப்பாலத்தே ஒதுங்குதற்கென்று அமைக்கப்பட்ட சிறு கொட்டகைகளைத் தாம் பார்த்தும் அவற்றுள்ளும் அவர் இல்லாமையால் இராச்சாப்பாடு கொண்டபின் அப்பாலத்தே உலாவவந்த அம் மங்கையார் திரும்பிப் போயிருக்கலா மென்றெண்ணித் தாம் ஏதுங் கலவரஞ் செய்யவில்லை எனவுஞ் சான்று மொழிந்தார். அதன்பின், அச் செம்படவமாது அப் பெண்ணின் பிணத்தைக் கண்டுபிடித்தது எவ்வாறு என்று அவர்கள் அவளை வினவ, அவள் அந்நிகழ்ச்சியைத் தான் தனது கனவிற் கண்டதும், அக் கனவிற் கண்ட இடத்தைப் போய்ப் பார்க்க அப் பெண் பிணமாய்க் கிடந்ததும் ஆகிய வரலாறுகளை யெடுத்துரைத் தாள். அவற்றைக் கேட்டு இறும்பூதுற்ற தந்தையார் அவட்கு ஐம்பதுபவுன் பரிசு கொடுத்தார் என்பது.

இனி, இறக்குந் தறுவாயில் உள்ளவர்கள், தமக்கு உறவினா ராயுள்ள எவர்மாட்டு அன்பு மிகுதியாய் வைத்திருக்கின்றார் களோ அவரை அந்நேரத்தில் நினைத்தலும் அவரைக் காண விரும்புதலும் உடையராய் இறந்துபடுவது வழக்கம். உயிர் உடம்பைவிட்டுப் பிரியும் அந்நேரத்தில் நினைத்த நினைவும் விரும்பிய விருப்பமும் வீணாய்ப் போவதில்லை. அந் நினைவின் உறைப்புக்கும் விருப்பத்தின் அழுத்தத்திற்கும் ஏற்றபடி, நினைக்கப் பட்டவர்க்கு இறந்துபடுவாரின் உருவமும் அவர் இறந்து படு நிகழ்ச்சியுங் கனவின்கண் வந்து தோன்றுகின்றன. இதற்கு உண்மையாக நிகழ்ந்த சில வரலாறுகளை ஈண்டெடுத்துக் காட்டுதும்:

ஓர் ஊரில் ஓர் அம்மையாருக்கு இரண்டு புதல்வியர் இருந்தனர். அவர் அவ்விருவரையும் அவ்வூரிலேயே மணஞ் செய்து கொடுத்திருந்தனர். அவ்வம்மையார் இடையிடையே சென்று கணவர் இல்லத்திலிருக்குந் தம் புதல்வியர் இருவரையும் பார்த்து அளவளாவ வருதல் வழக்கம். அங்ஙனமே ஒரு நாள் மாலைக் காலத்தில் அவ்வம்மையார் தம் புதல்வியருடன் அளவளாவியிருந்து விட்டுச், சிறிது தொலைவிலுள்ள தமது இல்லத்திற்குத் திரும்பிப் போயினார். அப் புதல்விமார் இருவரும் தத்தம் இல்லில் இரவுணா அருந்தி உறங்கச் சென்றனர். எல்லாரும் அயர்ந்துறங்கும் நள்ளிரவில் ஓர் இல்லில் இருந்த ஒருத்தி பேரச்சத்தொடு வெருண்டெழுந்து, தன் கணவனைக் கூவியெழுப்பி, "உடனே யான் என் அன்னையிடஞ் செல்லல் வேண்டும்; ஆதலால் வண்டி கொண்டுவரச் சொல்லுங்கள் என் அன்னையார் மிகவும் நோய்ப்பட்டிருக்கின்றாரென்று உறுதியாய் நம்புகின்றேன்" என்றாள். அதுகேட்ட அவள் கணவன் நீ கண்டது வெறுங்கனவே யாகையால் அதற்காக இவ்வளவு கலக்கம் வேண்டாம் என எவ்வளவோ வற்புறுத்திக் கூறியும், அவள் அமைதியடையாமையால், தனது வண்டியை வருவித்தான். அவளும் அதன்கண் அமர்ந்து தம் அன்னையின் வீட்டுக்கு அருகே செல்கையில் இரண்டு பாட்டைகள் ஒன்று சேருமிடத்தில் தன் தமக்கையின் வண்டியும் வரக் கண்டாள். கண்டு அந்நேரத்தில் ஏன் வரல்வேண்டும்? என ஒருவரை யொருவர் வினவியபோது, "யான் உறங்கக் கூடவில்லை, நம் அன்னையார் நோய்ப்பட்டிருக்கின்றார் என்னும் உறுதியினால், யான் அவரைப் பார்க்கவந்தேன்" என்று இருவரும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டனர். பின்னர் அவ்விருவருந் தம் அன்னையின் வீட்டண்டை வந்ததுந், தம் அன்னைக்கு நம்பிக்கையுள்ள வேலைக்காரி அவ் வீட்டு வாயிலிலே நிற்கக் கண்டார்கள். கிட்டச் சென்றதும், அவள் அவ்விருவரையும் நோக்கி "நுங்கள் அன்னையார் திடீரென்று நோய்ப்பட்டு இறந்துபோகும் நிலையில் இருக்கின்றார்; நுங்கள் இருவரையும் பார்க்கவேண்டு மெனத் தமது விருப்பத்தைத்தெரிவித்தார்," என்று சொல்லினள். உடனே உள் நுழைந்து அவர்கள் தம் அன்னையின் அருகே செல்ல, அவ்வம்மை அவர்களைக் கண் திறந்து பார்த்து மன நிறைவோடு உயிர் துறந்தார்.

இன்னும், 1857 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21 ஆம் நாளுக்குமுன் நிகழ்ந்த ஒரு கனவு நிகழ்ச்சியும் இங்கே குறிக்கத்தக்கதா யிருக்கின்றது. இலந்தன்மா நகரத்திலிருந்த மென்னியர் என்னும் அம்மையார் தம் உடன் பிறந்தா னொருவனிடத்து நிரம்பிய அன்புடையராயிருந்தனர். என்றாலும், பல ஆண்டுகளாக அவன் இருக்குமிடமும் அவனைப்பற்றிய வரலாறும் ஏதுமே அவள் அறிந்து கொள்ளக் கூடவில்லை. இவ்வாறிருக்க, மார்ச்சுத் திங்களில் ஒருநாள், அவள், தன்னுடன்பிறந்தான் தன் படுக்கையண்டை தலையற்ற முண்டமாய் நிற்கவும், அவனது தலை அவன் அருகேயிருந்த சவப்பெட்டியினுள்ளே கிடக்கவும் ஒரு பொல்லாத கனவு கண்டு, பேரச்சமும் பெருந்துயரமும் ஒருங்கு கலந்த உள்ளத்தினளாய் விழித்துக்கொண்டாள். உடனே தான் கண்ட அக் கொடிய கனவின் செய்தியைப் பலர்க்குத் தெரிவித்ததொடு புதினத்தாள் களிலுந் தன் உடன் பிறந்தானாகிய உவில்லிங்டனைப்பற்றி எவரேனுந் தெரிந்தெழுதுமாறும் விளம்பரஞ் செய்திருந்தனள். அவ்வாறு செய்ததிலிருந்து, சாரவாக்கு என்னும் ஊரிலே அவன் சீனர்களால் தலை துணிக்கப்பட்டு இறந்தான் என்னுஞ் செய்தி வெளியாயிற்று. அவ்வாறு அவன் தலை வெட்டுண்ட அதேநாளிற்றான் அவன்றன் உடன்பிறந்தாளான அவ்வம்மை அக்கனவுங் கண்டமை பின்னர் அறிஞர் செய்த ஆராய்ச்சியாற் புலனாயிற்று.

இவ்விருவேறு உண்மை நிகழ்ச்சிகளி லிருந்து பெறப் படுவது யாது? அன்பு மிக்கார் இருவரோ பலரோ அண்மையில் அகன்றிருப்பினும் அல்லது சேய்மையில் அகன்றிருப்பினும் அவருள் ஒருவர் இறக்குங்கால், அவர் நினைத்த நினைவானது உடனே தமக்கு அன்பரான ஏனையோர்க்கும் அவரது இறப்பின் வரலாற்றினைப் பிழைபடாமற் கனவின்கண் அறிவிக்கு மென்பதேயன்றோ?

இனி, இறப்பவரே பன்றி நோயாய்க் கிடப்பவருந்தமக்கு உதவி செய்வாரை உறுத்து நினைக்க, அந் நினைவு அவர்க்கு அன்பராயினார் கனவின்கட் டோன்றி அதனை அறிவிக்க, அவ் அன்பரும் விழித்தெழுந்து அவர்பாற்சென்று அவர்க்கு நோய் நீக்கின வரலாறுகளும் மிகப்பல; அவற்றுள் ஒன்று இங்கே

காட்டுவாம்; "கட்புலனாகாதவற்றைக் காண்டல்"[1] என்னும் அரியநூலின் ஆசிரியரான ஜேம்ஸ் கோட்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதுகின்றார்:

"யான் என் குடும்பத்தவருடன் கிளாஸ்கோ என்னும் நகரத்தில் தங்கியிருக்குங்கால், டோனால்ட்மாக்கின்னன் என்னுங் கிறித்துசமய குரு எமது வீட்டுக்கு அயலில் உள்ளதோர் இல்லத்திற் குடியிருந்தார். அவரும் நாங்களும் மிக்க நேயமுடையராய் ஒழுகினோம். அவர் தம் மனைவியார் காலமாகிச் சில ஆண்டுகள் கழிந்தன. அவர் தம்மால் இயன்ற மட்டும் வேலைக்காரரை வைத்துக் கொண்டு தமது குடித்தனத்தை நடத்தியவாறே தமக்குரிய சமயவிளக்கத் தொண்டையுஞ் செவ்வையாக ஆற்றிவந்தார்.

"1891 ஆம் ஆண்டு முடிவின்கண் ஒருநாள் மாலைக் காலத்தில், வழக்கத்திற்கு மாறாகச் சிறிது நேரந்தப்பி வீட்டுக்கு வந்தேன். எம் பிள்ளைகள் படுத்து உறங்கினர். என் மனைவியும் யானும் ஏறக்குறைய பத்தரை மணிக்கு ஒருங்கமர்ந்து இராச்சாப்பாடு அயின்றோம். அங்ஙனம் அயில்கையில், என் மனைவி அன்று விடியற்காலத்தில் எங்கள் அடுத்தவீட்டு நண்பரான அச் சமய குருவைப்பற்றித் தாம் கண்ட கனவின் வரலாற்றை எடுத்துரைப்பாராயினர். தாமும் யானும் அதே அறையில் அமர்ந்திருந்து உரையாடுவதாகவும், அந் நேரத்தில் எவரோ ஒருவர் கூழாங்கற் பதித்த தமது தோட்ட வழியே வந்து மணியடிக்கக் கேட்டுத் தாம் கதவைத் திறந்து பார்க்க இதற்கு முன் தாம் பாராத ஓர் இளைய மாது மிக்க மனத்துயரத்தொடு போந்து அச் சமய குரு மிகவும் நோயாய்க் கிடப்பதை வந்து பார்க்கும்படி தம்மைக் கேட்டுக் கொண்டதாகவும், அதற் கிசைந்து தாம் அம் மாதராருடன் சென்று அக் குருவினைப் பார்த்ததாகவுந் தாங் கண்ட கனவின் பகுதிகளை மொழிந்தார். அவற்றோடு அவர் இருந்த உடம்பின் நிலையினையும், அவர் படுத்திருந்த அறையின் அடையாளங்களையுந் தாங் கனவிற் கண்டவாறே விரித்துரைத்தார்.

அக் கனவில் ஏதேனும் உளதோவென்று யாங்கள் எண்ணிக் கொண்டிருக்கையிற் குறிப்பிட்ட அவ் வழியே எவரோ வரும் அரவந் தோன்றியது; வாயில் மணியும் அடி

பட்டது. எங்கள் வேலைக்காரி உறங்கப்போய் விட்டமையால், என் மனைவியே வாயிலண்டை சென்றார்; மெய்யாகவே ஓர் இளம் பெண் வந்து நின்றாள்; இவள் அக் குருவினாற் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வேலைக்காரி யாகையால் என் மனைவி இவளை இதற்குமுற் பார்த்ததே யில்லை; அங்ஙனம் வந்து நின்ற அவ்விளமாது, மிகவும் நோயாய்க் கிடக்கும் முதியோரான அக் குருவினை வந்து பார்க்கும் படி என் மனைவியைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். என் மனைவியுடனே என்னைக் கூப்பிட்டார்; அவ்விள மங்கையின் றோற்றமும் உடையுங் கனவின் கட் போந்த மங்கையின் றோற்றத்தையும் உடையையும் ஒத்திருந்தன. அப்பொழுதே என் மனைவி அவரைப் பார்க்கபோனார்; யானும் டங்கன் என்னும் புகழ்பெற்ற மருத்துவர் ஒருவரை அழைக்கச் சென்றேன். அம் மருத்துவர் வருதற்குச் சிறிது நேரமாகுமெனக் கண்டமையால், யான் முன்னதாக அக் குருவின் இல்லத்திற்கு ஏகினேன்; மேன்மெத்தைமேல் அவரது அறைக்குள் நுழைந்ததும், என் மனைவியார் தாம் அதனைக் கனவிற் கண்டு பின் எனக்குக் கூறியபடியே அஃதிருந்தது. சிறிது நேரத்தில் அம் மருத்துவரும் வந்தார். அவர் சொன்னபடியே எல்லாஞ் செய்யப்படுகின்றனவா என்று பார்த்தற்காக என் மனைவியுங் கூடவே யிருந்தார். என் மனைவி கண்ட கனவின் செய்தியைக் கேட்ட அம்மருத்துவர் நகைத்து, அத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கக் கூடியவைதாம் என்று மொழிந்தார். அதன்பின் அக்குருவின் மகனுக்கும் மருமகளுக்குங் கம்பிச்செய்தி விடுக்க, அவர்களும் உடனே வந்து சேர்ந்தனர். அவர்கட்கும் என் மனைவி கண்ட கனவு சொல்லப்பட்டது. பின்னர் அக்குருவும் உடம்பு நலம் பெற்றார்," என்பது.

சமயத்தொண்டு ஆற்றுவாரான அக்குரு தாம் நோயாய்க் கிடந்த பொழுது தமக்குதவி செய்வார் எவரும் அருகில் இல்லாது போகவே, தமக்கு அயலிலுள்ள தம்நேயர்களை அவ்வுதவியின் பொருட்டு உறுத்து நினைக்க, அந் நினை வானது, அந் நேயரில் ஒருவரான அவ்வம்மையாரது கனவின் கண் அவர்தம் புதிய வேலைக்காரியின் உருவினையும், அவர் நோயாய்க் கிடக்கும் நிலையினையும் நன்கு விளங்கப்

புலப்படுத்தி, அவ்வாற்றால் அவ்விருவரும் உடனே போந்து அவர்க்கு உதவிபுரியுமாறு செய்தமை காண்க.

இங்ஙனமே, பேரிடரில் அகப்பட்டுக் கொண்டார் பலரின் தோற்றமானது அருள் உள்ளம் உடையார் சிலரின் கனவின்கட் டோன்றி, அவரது உதவியால் அவர்களை அவ்விடரினின்றும் மீள்வித்த உண்மை நிகழ்ச்சிகளும் பலவுண்டு; அவற்றுள் ஒன்று இங்கே காட்டுவாம்.

"காலிபோர்னியா என்னும் ஊரிலிருந்த ஒரு படைத்தலைவர், அயல்நாடு குடியேறப் புகுந்த ஒரு கூட்டத்தார் குளிராலும் பசியாலுந் துன்புறுதலை ஒரு நாட் கனவின் கட் கண்டார். அவர் கண்ட அந்நிகழ்ச்சிக்குரிய இடத்தின் அமைப்பும் அவரால் தெளிவாக அறியப்பட்டது. அவ்விடத்தின் கட் செங்குத்தான பெரிய வெள்ளை மலைப்பாறை யொன்று அடையாளமாக நிற்றலையும், அவர் குறிப்பிட்டார்; அங்கே காணப்பட்ட மக்கள் ஆழமான பனிப்பாறைப் பிளவுகளினூடே வளர்ந்திருந்த மரங்களின் உச்சிகளைத் தறித்தலுங் கண்டார்; அம் மக்களின் உருவ அடையாளங்களையும் அவர்கள் அணிந்திருந்த உடைகளின் குறிகளையுங் கூடச் செவ்வனே தெரிந்து கொண்டார். இவ்வாறு கண்ட கனவினின்றும் அவர் விழித்தவுடனே, அக் கனவின் தெளிவும் உண்மையும் அவரதுள்ளத்தை உறுத்தின. திரும்பவும் அவர் அயர்ந்து உறங்கத், திரும்பவும் அக்கனா நிகழ்ச்சி முற்கண்டபடியே எள்ளளவும் பிசகாமல் அப்படியே தோன்றலாயிற்று.

"விடியற் காலையில் அவர் படுக்கையினின்று எழுந்த பிறகும் அக் கனவின் தோற்றத்தைத் தம் நினைவினின்றும் அகற்றல் முடியவில்லை. பின்னர்ச் சிறிது நேரத்திலெல்லாந் தாம் எதிர்ப்பட்ட தமக்குப் பழைய தோழனான ஒரு வேட்டு வனிடந் தாங்கண்ட அக் கனா நிகழ்ச்சியை எடுத்துரைத்தார். அதுகேட்ட அவன் அவர் கனவிற் கண்ட இடந் தனக்குந் தெரியு மென்று சிறிதும் மலையாது விளம்பினான். விளம்பியபடியே அம்மலைப் பள்ளத்தாக்கின் கண்ணதான அவ்விடத்தையுந் தெரிந்து காட்டினான். உடனே அத் தலைவர் மக்கட் கூட்டம் ஒன்று சேர்த்துக், கோவேறு கழுதைகளுங் கம்பளிகளும் உணவுப் பண்டங்களுந் தொகுத்தார்.

"கனவிற் கண்டதை நம்பி இவர் இவ்வளவு ஏற்பாடு செய்தல் கண்ட அண்டை அயலார் இவரை ஏளனஞ் செய்தனர். அதற்கவர் சிறிதும் வருந்தாது 'யான் இதுசெய்ய வல்லமை யுடையேன்; ஆகையால், இது செய்வேன்; யான் கனவிற் கண்டதை உண்மை யென்றே நம்புகின்றேன்' என மொழிந்து விட்டு, அம் மலைகளின் இடையே நூற்றைம்பது மைல்களுக்கு அப்பால் உள்ள கார்சன் பள்ளத்தாக்குக் கணவாய்க்குத் தாம் சேர்த்த மக்கட் கூட்டத்தாரையும் பிறவற்றையும் போக்கினார். போன அக் கூட்டத்தார். அவர் கனவிற் கண்டபடியே ஒரு மக்கட்குழு அங்கே பெருந்துயர் உழத்தலைக் கண்டு, அவர்களுள் இறந்து போயினார் ஒழிய, எஞ்சியவர்களை உயிருடன் கொணர்ந்தனர்."

இன்னும், மூச்சு ஓட்டம் நின்று உணர்விழந்து கிடந்தார் சிலரை இறந்துபோனவராகக் கருதி அவர் தம் உறவினர் அவரைப் புதைப்பதோ எரிப்பதோ செய்து விடுகின்றனர். இத்தகைய நிகழ்ச்சிகள் எல்லா நாட்டவர்கள் இடையிலும் பிழையாக நேர்ந்து விடுகின்றன. இவ்வாறு ஒருகாற் சவப்பெட்டியில் அடக்கஞ் செய்யப்பட்ட ஒருவர் தமது நினைவின் வன்மையால் தொலைவிலிருந்த தம் நண்பர்க்குத் தமது இடர்ப்பாடான நிலைமையினைக் கனவிலும் நனவிலும் அறிவித்து அவ்விடரினின்றும் மீண்ட மெய்வரலாற்றினை இங்கெடுத்துக் காட்டுதும்:

"மிக நெருங்கிய நட்புவாய்ந்த அறிஞர் இருவரில் ஒருவர் ஒரு கல்லூரியில் ஆசிரியராய் இருந்தனர். மற்றொருவர் அவர்க்குப் பதினெட்டுக் கல் தொலைவானதோரிடத்தில் ஓர்அலுவலில் அமர்ந்திருந்தனர். ஒருநாட் கல்லூரியாசிரியர் இரவில் அயர்ந்து உறங்குகையில், தம் நண்பர் தமது கனவின்கட் டோன்றித் தாம் உயிருடன் புதைக்கப்படப்போவதைப் பெருந்திகிலொடு கூறக் கண்டார். கண்டு, அதனால் நெஞ்சங் கலங்கி விழித்த அவர் தாம் கண்டது கனவாதலை யுணர்ந்து ஆறுதலுற்று மறுபடியுந் தூக்கத்திற் சென்றார். மறுபடியும் அக் கனவு அப்படியே தோன்றலாயிற்று. திரும்பவும் விழித்துப் பார்க்க, விடிந்துபோனமையாற் காலைக் கடன்களை முடித்துச் சிற்றுண்டி கொண்டு, அவர் ஒரு கைந்நாற்காலியில்

அமர்ந்திருந்தார். அப்போது எவரோ ஒருவர் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. உடனே அவர், 'உள்ளே வருக!' வென்று கூவினார். அடுத்துக் கதவு திறக்கும் ஒலியும் எவரோ உள் நுழையும் அரவமுந் தென்பட்டன. வருபவன் வேலைக்காரனா யிருக்கலாமெனக் கருதி அவர் நிமிர்ந்து நோக்கவில்லை, ஆனால், 'நண்பரே, அவர்கள் என்னைப் புதைக்கின்றார்களே! எனத் தம் நண்பரின் குரல் ஒலி அவர் காதண்டைக் குசுகுசு வென்று நுழைந்து அவரைத் திடுக்கிடச் செய்தது. உடனே அவர் எழுந்து பார்க்க அவ்வறையில் எவருந் தென்பட்டிலர்; வேலைக் காரரும் எவரும் வந்திலர். ஆகவே, அவர் காலந் தாழாது புறப்பட்டுத் தம் நண்பர் இருக்கும் ஊருக்குக் கடிதிற் போயினார். அவரது வீட்டண்டைச் செல்கையில், ஒரு சவப்பெட்டி அதன் வாயிலிலே அப்போது தான் கொணரப்படலாயிற்று. தம் நண்பரின் உடம்பை அதனுள் வைத்து ஆணியறைந்து விட்டுப், புதைக்கு மிடத்திற்கு எடுத்துப் போக அங்கிருந்தார் புறப்படுதலைக் கண்டார். கண்டதும், அங்குள்ளாரை நோக்கி அப் பெட்டியைத் திறக்க வேண்டுமென்றுஞ் சவச்சடங்கு செய்ய லாகாதென்றும் வற்புறுத்தினார். அங்ஙனமே பெட்டி திறக்கப்பட்டது; தம் நண்பரின் உடம்பை அதனின்றும் எடுப்பித்துப் படுக்கை மேற் கிடத்திச் சூடான ஒற்றடம் அதற்குக் கொடுப்பித்தார். அவ்வாறு செய்யவே பிணமாய்க் கிடந்த அவர் உயிர்பெற்றுச் சில நாட்களிலெல்லாம் முழுநல மெய்தினார். அதன்பின்னர் அவர் ஒன்பதாண்டுகள் உயிர் வாழ்ந்தார்" என்பது.

இஃதொன்றோ! ஒரு பேரிடரில் அகப்பட்ட ஒருவரது நினைவு ஒரோவொருகால் அவரது கனவு நிலையிற் பேராற்றல் வாய்ந்ததாகித் தொலைவின்கண் உள்ள பிறர்சிலர்க்குத் தன்னை யுடையராது உருவத்தைத் தோற்றுவித்து, அவர் அகப் பட்டிருக்கும் இடர்ப்பாடான நிலையினையும் அறிவித்து, அவரை அந்நிலையினின்று மீட்ட வரலாறுகளும் பலப்பல; அவற்றுள் ஒன்றனை இங்கே வரைகுவம்:

இலிவர்ப்பூல் என்னுந் துறைமுகப் பட்டினத்திற்கும் மற்றொரு துறைமுகப் பட்டினத்திற்கும் இடையிலே ஓடிக் கொண்டிருந்த வாணிகக்கப்பல் ஒன்றின் தலைவனும் அவன்

துணைவனும் ஒருநாட் கப்பலில் மேற்றட்டில் இருந்தவாறே பகலவன் இயக்கத்தை உற்று நோக்கிக் கணக்குச் செய்துகொண்டிருந்தனர்; அது செய்தபின் இருவரும் அற்றை நாள் வேலைக் கணக்குப் பார்த்தற்குக் கீழ்த்தட்டில் இறங்கினர். இறங்கிய படிக்கட்டுக்கு எதிரே யிருந்த சதுக்கமான ஒரு வெளியிடத்தின் ஒரு பக்கத்திற் கப்பற்றலைவன் இருக்கும் ஒரு சிற்றறையும், மற்றொரு பக்கத்தில் அத் தலைவனுக்குத் துணைவனிருக்கும் அறையும் இருந்தன. துணைவனிருக்கும் அறையின் சாய்வுமேசையின் அருகிருந்து ஒருவன் தன் றோள்வழியே சிறிது திரும்பி நோக்கினால், தலைவனிருக்கும் அறையின் உட்பகுதி அவனுக்கு நன்றாய்த் தெரியும்.

இனித், தன் அறையுளிருந்து கணக்குச் செய்தவனான துணைவன் அதனை முடித்தவுடன் திரும்பி, எதிர் அறையினுள் ளிருந்த தலைவனை விளித்து, ‘நுங்கள் கணக்கு எப்படி?’ என்று வினவினான். அதற்கு விடை வராது போகவே, திரும்பத்திரும்ப அதனையே வினவிக் கூவினான். அங்ஙனங் கூவுகின்றுழித் தன் தோட்பக்கமாய்ச் சிறிது திரும்பி நோக்க, அக் கப்பற்றலைவன் தனது கற்பலகையிலே விரைவாய் எழுதிக்கொண்டிருப்பது போல் அவற்குக் காணப்பட்டான். பலகாற் கூவியும் ஏதும் விடைவராமை கண்டு, அத்துணைவன் வெளியே போந்து தலைவனறையின் கதவண்டை நின்று உள்நோக்கத், தலைவன் என்று தான் பிழையாகக் கருதிய அவ்வுருவந் தலைநிமிர்ந்து இவனைப் பார்க்க, அஃதொரு புதிய ஆடவனின் உருவமாகத் தோன்றக் கண்டான். கண்ட அத் துணைவன் கோழை நெஞ்சம் உடையவன் அல்லன். என்றாலும், ஏதும் வாய்பேசாது அவ்வுருவம் இவனை உறுத்துப் பார்க்க, இதற்கு முன் தான் கண்டிராத அவ் வாடவனின் அவ் உருவநிலை அவற்கு அச்சத்தினை விளைவி யாது ஒழியுமோ? ஆகவே, அத் துணைவன் வெருக்கொண்ட நெஞ்சினனாய், அதன் மேல் ஏதும் வினவாது, மேற்றட்டின் மேல் விரைந்தோடிக் கப்பற் றலைவனை அணுகினான்.

அங்ஙனம் வெருண்டு வந்தானை நோக்கி, “நண்பனே, யாது நினக்கு நேர்ந்தது?” என்று தலைவன் வினவ “நுங்கள் சாய்வுமேசையண்டை உட்கார்ந்திருப்பவர் யார்?” என்று அவன் எதிர் வினாவினான். “எவரும் இல்லையே!” என்று அவன்

உரைப்ப, மீண்டும் அத்துணைவன் "யான் இதற்குமுற் பாராத ஓர் ஆள் அங்கே உட்கார்ந்திருக்கின்றார்!" என்று வலியுறுத்திச் சொன்னான். அதன் மேல் இருவரும் இறும்பூதுற்றவராய் ஒருவரை யொருவர் மறுத்துப் பேசிச், சிறிது நேரத்திற்குப் பின், இருவருமே ஒன்றுசேர்ந்து கீழ்உள்ள அவ்வறையண்டை சென்றனர். அதனுள் நோக்க அங்கே எவரையுங் கண்டிலர். அதன்மேற் கப்பற்றலைவன் தன் துணைவனை நோக்கி, "நீ கண்டது கனவேயன்றிப் பிறிதன்றென முன்னமே யான் சொல்ல வில்லையா?" என்றனன். "ஐய, சொல்வது எளிது; யான் கண்ட ஆள் மெய்யாகவே நுங்களது கற்பலகைமேல் எழுதியதை நான் பார்த்திராவிட்டால், மறுபடியும் யான் என் இல்லத்தையும் மனைவி மக்களையுங் காணா தொழிவேனாக!" என்று துணைவன் மீண்டும் உறுத்திக் கூறினன். அது கேட்ட தலைவன் "அங்ஙனமாயின் அக்கற்பலகைமேல் அவ் ஆள் எழுதிய எழுத்து இருக்க வேண்டுமன்றோ?" என மொழிந்து, அதனை யெடுத்துக் காணக், "கப்பலை வடமேற்கில் ஓட்டுக!" என்னுஞ் சொற்றொடர் அதன்கண் எழுதப்பட்டிருந்தது.

அதன்மேல் அத்தலைவன் பெரிதுந் திகைப்புற்றவனாய் அதனை ஆராய்வான் புகுந்து தன் துணைவனையும், அம்மரக் கலத்திலுள்ளார் அனைவரையும் அழைத்து, அக் கற்பலகையில் வரையப்பட்டிருந்த அச்சொற் றொடரின் கீழ், அதனைப் போலவே வரையும்படி ஒவ்வொருவரையும் ஏவினான்; அங்ஙனமே வரைந்தவற்றில் ஒருவரது கை யெழுத்தாவது அதனோடு ஒத்ததாய் இருக்கவில்லை. அதன்மேல் அதில் ஏதாவது ஓர் உண்மையிருக்க வேண்டுமென்று எல்லாருமே ஒரு முடிவுக்கு வர, அக் கப்பற்றலைவன் தனது கற்பலகையில் வரையப்பட்ட அச்சொற்றொடரின் படியே தன் கப்பலை வடமேற்கு முகமாய் ஓட்டு விப்பானாயினன்.

கப்பல் அம்முகமாய் ஓடுகையிற், பிற்பகல் மூன்று மணிக்குப், பெரும் பனிப்பாறை ஒன்றும் அதன் அண்டையில் ஒரு மரக்கலமுந் தென்படலாயின. உடனே, தலைவன் தன் மரக்கலத்தை அவ்விரண்டற்குஞ் சிறிது தொலைவிலேயே நிறுத்தித், தனது தொலைவு நோக்கிக் கண்ணாடியினால் நோக்க, ஒரு கப்பல் பனிப்பாறைகளின் நடுவே அகப்பட்டு உறைந்து

போகவும், அதன்கண் மக்கள் பலர் துன்புற்றநிலை யிலிருக்கவுங் கண்டு, உடனே தனது மரக்கலத்திலுள்ள படகுகள் சிலவற்றைக் கீழ் இறக்குவித்துப் போக்கப், பனிப்பாறையில் தாக்குண்ட மரக்கலத்தை அவையணுகி, அதிலிருந்த மக்கள் அனைவரையுங் கொணர்வித்தன.

மூன்றாவது, படகு கொணர்ந்த மக்கள் இம்மரக்கலத்தின் மேல் ஏறுகையில், அவர்களுள் ஒருவனது முகத்தை மேலிருந்து கண்ட துணைவன் பெருந்திகில் கொண்டான். ஏனெனில், அவன் தன் கப்பற்றலைவனது அறையில் மூன்றல்லது நான்குமணி நேரத்திற்குமுற் கண்டது அன்னவனது முகமேயாகும். முதலில், இவன் தான் கண்டது மனத்தின் பொய்யான தோற்ற மாயிருக்கலாமோ வென எண்ணினான். ஆனால், அவ் ஆளின் முகமே யன்றி உருவ அடையாளமும் அவன் அணிந்திருந்த உடையும் முன்னே தான் கண்ட உருவத்தின் அடையாளத்தையும் உடையையும் முழுதும் ஒத்திருந்தன. மீட்கப்பட்ட வழிப்போக்கர்களுங் கப்பல் வேலை யாட்களும் பட்டினியும் பசியுமாய்க் கிடந்து வந்தவர்களாத லால், அவர்கட்கு வேண்டும் வசதிகளெல்லாம் உடனே செய்யப்பட்டன. பின்னர்க், கப்பற்றலைவனுந் தனது கப்பலை ஓட்டுவானாயினான். அங்ஙனம் அஃது ஓடுகையில், அத் துணைவன் தலைவன்பாற் போந்து அவனை ஒருபுறந் தனியே யழைத்து, “ஐய, யான் இற்றைப் பகலிற் கண்டது பேய் உருவம் அன்று. யான் கண்ட ஆள் அதோ! நம்மால் மீட்கப்பட்ட குழுவினருள் ஒருவராய் இருக்கின்றார்! யான் நுங்களது கற்பலகைமேல் எழுதக்கண்ட ஆள் அவரேயென ஆணை யிட்டுக் கூறுவேன்!” என்றாள். அதுகேட்ட தலைவன், “பனிப் பாறையின் நடுவே அகப்பட்டுக் கொண்ட மரக்கலத்திலிருந்த ஆள், வேறு தொலைவில் ஓடிக் கொண்டிருந்த நமது கப்பலுக்கு எவ்வாறு சடுதியில் வந்து சடுதியில் மறையக் கூடும்? இஃது ஏதோ ஒரு பெரும்மாயமா யிருக்கின்றது! இதனை ஆராய்ந்து பார்ப்போம், வா!” என்று கூறி, அவனோடு அம் மீட்கப்பட்ட குழுவினரிடஞ் சென்றான்.

அப்போது அம் மாய ஆள் தான் ஏறியிருந்த கப்பலின் மீகாமனிடம் பேசிக் கொண்டிருந்தான். இவ்விருவருந் தம்பால்

வரக்கண்ட அவ்விருவரும் உடனே எதிர்போந்து, தம்மை அக்கொடுந் துன்பத்தினின்று மீட்ட அத்தலைவற்குந் துணைவற்கும் நெஞ்சார நன்றிமொழி சொல்லி வாழ்த்தினர். தாம் அத்தகைய பெருந் துன்பத்தில் அகப்பட்டிருக்கக் காணின் அவர்களுந் தம்மை அங்ஙனமே மீட்பது உறுதியாதலால் தாஞ் செய்தது கடமையே யென மொழிந்து, அவ்விருரையும் தன் அறைக்கு அத் தலைவன் அழைத்துச் சென்றான்; சென்றதும் அம் மீகாமனுடன் வந்த வழிப்போக்கனை நோக்கி "ஐய! யான், ஏதோ குறும்பு பண்ணுகின்றேன் என்று நினையாமல், இந்தக் கற்பலகை மேற் கப்பலை வட மேற்கில் ஒட்டுக! என்னுஞ் சொற்றொடரை எழுதுங்கள்" என்று தலைவன் வேண்டினான். "இத்துணைப் பேருதவிசெய்த தாங்கள் எது வேண்டுமாயினுஞ் செய்வேன்" எனப் புகன்று, அக் கற்பலகைமேல் அவ்வாறே அவ் வழிப் போக்கனும் வரைந்தான். வரைந்த பின் தலைவன் அக் கற்பலகையை வாங்கி மறைவாய்ப் புறந்திருப்பி "இது நுங்கள் கை யெழுத்துத்தானா? என்று பாருங்கள்!" எனக் கேட்டான். அதற்கவன் "இப்போது தான் அதனை எழுதினேனே" அதைப்பற்றி ஐயம் ஏன்!" எனக் கூறினான். பிறகு தலைவன் அவன் எதிரிலேயே அக் கற்பலகையைப் புறந்திருப்பிக் காட்ட, அதன்கண் முன்னும் பின்னும் அதே சொற்றொடர் அதே கையெழுத்தில் எழுதப்பட்டிருத்தலைப் பார்த்து, அவன் "ஐய, யான் ஒருமுறை தானே இதன்கண் எழுதினேன். மற்றொரு முறையும் இதனை எழுதினவர் யாவர்?" என வினாயினான். அதற்குத் தலைவன் "யான் அறியேன். இற்றைப்பகல் நீர் தாம் இந்தச் சாய்வு மேசையண்டையிருந்து எழுதினீர் என என்துணைவன் கூறினான்." என்றனன்; அதுகேட்ட அவ்வழிப் போக்கனும் அவன் ஏறிவந்த மரக்கல மீகாமனும் ஒருவரை யொருவர் நோக்கி இறும்பூதுற்றனர் பிறகு, அம்மரக்கலமீகாமன் அக்கப்பற்றலைவனை நோக்கி "இற்றைக் காலையில் இவ் வழிப்போக்கர் களைப்பினால் அயர்ந்து உறங்கினார். விழித்தபின் இவர் என்னை நோக்கி 'நம்மை இப் பேரிடரினின்று மீட்பதற்கு ஒரு கப்பல் வருகின்றது; அக் கப்பலின் மேற்றட்டின்மேல் யான் போயிருந்ததாகவுங் கனவு கண்டேன். என்று கூறி, அக் கப்பலின் அடையாளத்தையும் விரித்துரைத் தார். அவ்வடையாளப்படியே இந்தக் கப்பலிற் போந்து நீங்களும்

எங்களை மீட்டுக் காப்பாற்றினீர்கள்!" என மொழிந்தனன் ஆனால், அக் கனவின்கண் தான் கற்பலகைமேல் ஏதும் எழுதி னதாகத் தனக்கு நினைப்பில்லை யென்றும், என்றாலும் இக்கப்பலின் மேற்றட்டின் மேலுள்ள ஒவ்வொன்றும் யான் அறிந்தவைகளாகவே காணப்படுகின்றன வென்றும், இக் கப்பலில் ஏறி யறியாத எனக்கு இங்குள்ளவைகள் எல்லாம் நன்கு தெரிந்தவைகளாகக் காணப்படுவது பெரியதொரு புதுமையாய் இருக்கின்றதென்றும் அவ் வழிப்போக்கன் வியப்புடன் மொழிந்தனன்.

உண்மையாக நிகழ்ந்த இந்நிகழ்ச்சியில் வழிப்போக்கன் கண்ட கனவின் நிலைதான் பெரிதும் வியக்கத் தக்கதாயிருக் கின்றது. பனிப் பாறைகளினூடே யகப்பட்டுக் கொண்ட மரக்கலத்திற் பட்டினியும் பசியுமாய்க் கிடந்த அவ் வழிப்போக்கனது நினைவு, அவனது கனவின்கண் மிக்க சுருசுருப்பு உடையதாய்த் தற்பாதுகாப்பின் பொருட்டு, வேறொரு மரக்கலத்தின்கண் அவனது நுண்ணுடம்பின் உருவினைத் தோற்றுவித்தல், தானிருக்கும் மரக்கலத்தின் முகமாய் அம்மரக்கலம் வருமாறுங் கற்பல கையில் எழுதுவித்துத் தன்னையுந் தன்னுடன் இருந்தா ரையும் ஒருங்கு உயிர்பிழைக்கச் செய்தது. கனவின் கட் கண்ட வைகளைப் பெரும்பாலும் நனவின்கண் மறந்து போதல் எல்லார் மாட்டுங் காணப்படுதலின், அவ் வழிப் போக்கன் தன் கனவின்கண் நுண்ணுடம்பிலிருந்து கற்பலகையில் எழுதியதை மறந்து போயின னாகலின், அது பற்றி ஈண்டைக் காவதோர் இழுக்கில்லை. இங்ஙனமாகச் சிற்சிலர்க்கு அவர்தம் நினைவு கனவின்கட் சிற்சில நேரங்களில் மிக்க ஆற்றலுடையதாய் இயங்கும் உண்மையும், அஃது அக்காலங்களில் நெடுந் தொலை விலுள்ளார்க்குந் தன்னையுடையானது நுண் உருவினைத் தோற்றுவித்துச் செயற்கரிய செய்யுந் தன்மையுங் கருத்திற் பதிக்கற்பாலன வாகுமென்க.

இங்ஙனமாகக் கனவிடைச் சுருசுருப்பாய் இயங்கும் ஒருவனது நினைவு அவனது நுண்ணுருவினைப் பிற னொருவனுக்கு நனவின்கட் டோற்றுவித்தல் போலவே, நனவின் கண் ஒருவன் உறுத்து நினைந்த நினைவும் அவனது நுண்ணுருவினைக் கனவின்கண் உள்ளார் சிலர்க்குத்

தோற்றுவித்தலும் உண்டு. இவ்வுண்மையினை விளக்குஞ் சில உண்மை நிகழ்ச்சிகளை இங்ஙன் எடுத்துக் காட்டுவாம்:

"சென்ற மழைகாலத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை யிரவு ஒரு மணிக்கு, எனது வீட்டுக்கு மூன்றுகல் தொலைவிலுள்ள தொரு வீட்டிலிருந்த என் நேயர் இருவரது கனவின் கண் எனது உருவினைத் தோற்றுவிக்க விரும்பி உறுத்து நினைந்தேன். பின்னர்ச் சில நாட்சென்று யான் அவர்களைப் பார்த்தபோது யான் செய்த அவ் வாராய்ச்சியினைப் பற்றி வேண்டுமென்றே ஏதுஞ் சொல்லாதிருந்தேன். ஆனால், அவர்கள் என்னோடு உரையாடிக்கொண்டு வருகையில் ஒருவர் என்னை நோக்கிச், சென்ற ஞாயிற்றுக்கிழமை எவ்வளவு புதுமையான ஓர் இரவினைக் கழித்தோம் என்று சொன்னால் நீர் நம்பமாட்டீர்!" என்று முதலிற் சொல்லிப் பின்னர் எனது உருவந் தமது அறையில் நிற்கக் கண்ட காட்சியினை விரித்துரைத்தார். எனது உருவத்தோற்றம் மிகவும் தெளிவாய் இருந்தமையால், அவர்கள் விழித்தெழுந்து தமது நாழிகை வட்டிலை நோக்க அப்போது மணி ஒன்றாயிருக்கக் கண்டார்கள்," என்பது. இந்நிகழ்ச்சிக் கண்நினைந்தவரது நினைவு ஒருமுகமாய் உறைத்து நின்றமையால், அந்நினைவின் உறைப்புக்குத்தக, அவரது நுண்ணுருவு அவர் தம் நேயரது கனவின்கண் மிகவுந் தெளிவுடைய தாய்த் தோன்ற லாயிற்று.

இன்னும், நாட்டுப்புறத்து மாதான பெர்த்தா என்பவள் பாரிசுமாநகரத்து மருத்துவ விடுதியிற் குழந்தை மருத்துவஞ் செய்யும் வேலையில் வந்து அமர்ந்தபோது, அவ்விடுதித் தலைமை மருத்துவர்க்கு அறிமுகம் ஆயினள். அம்மாது எளிதிலே அறிதுயிலிற் செலுத்தப்படும் இயற்கை வாய்ந்தவள் அவளது அவ்வியற்கை அறிந்த அவ் விடுதித் தலைவர் தாம் தொலைவி லிருந்தபடியே அவளைப் பலகால் அறிதுயிலிற் செலுத்தியிருக்கின்றார். இங்ஙனம் அம்மாது எளிதிலே அறிதுயிலிற் செல்வது மட்டும் அன்று, தொலைவிலுள்ளாரையுந் தான் நினைந்த படி நடத்த வல்ல நினைவாற்றலுந் தனக்குண்டெனமொழிவள். இவ்வாற்றால் தனக்குத் தன் அன்னையிட மிருந்து பிறப்புரிமையாக வந்ததென்பதும் அவளது கருத்து. தான் எண்ணினால் நடப்பவர் தடுக்கிவிழவும் வழிபிசகிப்போகவுந்,

குறிப்பிட்ட இடத்திற்குப் போகாமல் தடைப்படவுஞ் செய்தல் கூடும் என்பள். இங்ஙனமெல்லாஞ் செய்யக்கூடிய தன் நினைவாற்றலை அவள் அவ்விடுதியின் மருத்துவத் தலைவர்க்குப் பலகாற் புலப்படுத்திக் காட்ட, அவரும் அதனை ஒப்புக் கொண்டிருக்கின்றார். அவள் அத்தலைவர்க்கே தான் எண்ணிய தொரு தோற்றத்தினை அவர் கட்புலனெதிரே விளைவிக்க அவர் அதனைப்பற்றி வரைந்தது வருமாறு:

"யான் நன்றாக உறங்கும் இயல்பினேன். என் உறக்கத்தின் இடையே எப்போதாயினும் யான் விழித்ததாக எனக்கு நினைவில்லை ஆனால், ஒருநாளிரவு இரண்டு அல்லது மூன்று மணிக்குச் சடுதியில் யான் விழித்தெழுந்தேன். என் கண்களைத் திறவாமலே 'இது பெர்த்தாவின் சூழலாயிருக்கலாம்' என நினைந்தேன் அதன்பிற் கண்களைத் திறந்து எனக்கெதிரே யிருந்த சுவரை நோக்க, அதன்கண் வட்டமான ஓர் ஒளிவடி வினைக் கண்டேன்; அஃது ஒரு கொம்மட்டிப்பழ அளவினதாய்க் காணப்பட்டது; சிறிது நேரம் யான் அதனை உற்றுநோக்கிய படியாய் இருந்தேன்; பின்னர் அது மறைந்துபோயிற்று. திரும்பவும் நான் நன்றாய்ப் படுத்துத் தூங்கிவிட்டேன். மறுநாட்கலையில் பெர்த்தா என்னைப் பார்த்தபோது, அவள் முதலில் என் படுக்கையைச் சூழச் சில சில நாய்கள் தோன்றுமாறும், இரண்டாவது சிலர் சண்டையிடுமாறும், மூன்றாவது ஒரு விளக்கு வெளிச்சங் காணப்படுமாறுந் தான் உறுத்து நினைந்ததாகப் புகன்றனள். முதல் இரண்டும் எனக்குத் தோன்றிலவாயினும், மூன்றாவது அவள் எண்ணியபடியே ஒரு விளக்கினொளி எனக்குத் தோன்றியது." என்பது.

பின்னர் ஒருகால் அம்மருத்துவத்தலைவரும் அவர் தம் நண்பர் ஒருவருமாக ஒரு வண்டியில் ஓரிடத்திருந்து பிறி தோரிடத்திற்குப் போய்க்கொண்டிருக்கையில், அவர்கள் சென்ற நேரம் நள்ளிரவாதலால் தெரு வெங்கும் விளக்கேற்றப்பட்டு வெளிச்சமுடையதாயிருந்தும், அஞ்சத்தக்க காரணம் ஏதொன்றுமே இல்லாதிருந்தும், அம்மருத்துவருக்குத் திடீரென உள்ளத்தில் ஓர் அச்சந்தோன்றியது. "ஓ! இது பெர்த்தாவின் சூழலாயிருக்கலா" மென்று அவர் சொல்கையில், அவர்தம் நண்பரும் நகைத்துக் கொண்டு, "ஆ! என்னை யறியாமலே

எனக்கும் உள்ளத்தே ஒரு திகில் தோன்றுகின்ற" தென்றார். இத் திகிலானது குறிப்பிட்ட இடத்திற்குப்போய்ச் சேரும் வரையில் அவ்விருவருக்கும் இருந்தது. பின்னர் அவர்கள் வண்டியை விட்டுக் கீழ் இறங்குகையில், அவர்தம் நண்பர் வானத்தில் எவையோ வெண்மையானவை தம் கண்ணெதிரே பறந்து செல்லக் கண்டார். ஆனால், அதனை அம்மருத்துவத் தலைவர் காணவில்லை.

அடுத்தநாள் அத்தலைவர் தமது மருத்துவ விடுதியிற் பெர்த்தாவைப் பார்த்தபோது நேற்று இரவு தாமுந் தம் நண்பரும் அடைந்த நிலைமைகளைச் சொல்லும்படி அவளை வேண்ட, அவளுஞ் சொல்வாளாயினள்; "முதலில் நுங்கள் வண்டிக்காரன் வண்டியை வழிதப்பிப் பல முகமாய் ஓட்டிக்கொண்டு சென்றான்; ஆனால், வண்டிக்குள்ளிருந்த நீங்கள் அதனை உணரவில்லை" என்றனள். இவள் இது சொல்லியபிறகுதான் தமது வண்டி வழிதப்பிப் பலமுகமாய் ஓட்டப்பட்டமை அவரது நினைவுக்கு வந்தது. அதன் பின் அவள், "துவக்கத்தில் நீங்களும் அதன்பின் நுங்கள் நண்பரும் ஏதொரு காரணமும் இன்றியே பெருந்திகில் கொண்டீர்கள்! அதன் பின்னர் வெள்ளிய புறாக்கள் சில நுங்களைச் சுற்றி அருகிலே பறந்து செல்லக் கண்டீர்கள்!" என மொழிந்தனள்.

பாருங்கள்! விழிப்பில் நினைவுடன் இயங்கும்போதே பெர்த்தா என்பவள் தான் உறுத்து நினைந்த நினைவுகள், விழிப்பில் இயங்கிய அம்மருத்துவத் தலைவர்க்கும் அவர்தம் நண்பர்க்கும் அவர் தம் வண்டிக்காரற்கும் அகத்தேயும் புறத்தேயும் தோன்றி அவர்தம் உள்ளங்களைத் தம்வழிப் படுத்திவிட்டன. யாம் மிக இளையமாயிருந்தபோதே எம்மைக் காணவந்த ஒருவர், எம் எதிரிலேயே ஒரு கற்பலகையை யெடுத்து அதில் ஏதோ ஒன்று வரைந்தபின் அதனை அப்பால் மறைத்துவைத்து, ஏதேனும் ஒரு பூவை நினைத்துச் சொல்லும் படி எம்மைக் கேட்டார்; அங்ஙனமே ஒரு பூவின் பெயரை யாம் சொல்ல (சொன்ன அப்பூவின் பெயர் இப்போது நினைவில் இல்லை), உடனே அவர் தாம்எழுதிய அக்கற்பலகையை யெடுத்துக்காட்ட, அதன்கண் முன்னமே அப்பூவின் பெயர்

அவரால் வரைந்து வைக்கப்பட்டிருத்தல் கண்டு வியப்புற்றேம். இங்ஙனமே அவர் தொடர்பாகப் பல பொருட் பெயர்களை முன்னெழுதிப் பின் ஒவ்வொன்றாக எம்மை நினைத்துச் சொல்லும்படி கேட்க, யாம் சொன்னவையெல்லாம் பிசகாமல் முன்னமே அவரால் வரைந்து வைக்கப்பட்டிருந்தன.

இங்ஙனமாக நனவிலேயே ஒருவர் உறுத்து நினைத்த நினைவின்படியே நினைக்கப்பட்டவரும் நனவின்கண் நினைத்தலும், உறுத்து நினைந்த பொருள்களின் உருவங்கள் நினைக்கப்பட்டவரின் கட்புலனெதிரே நனவின்கண் விளங்கித் தோன்றுதலும் ஆங்காங்கு உண்மையாக நிகழ்ந்து வருதலை எண்ணிப்பார்க்குங்கால், மந்திரகாரரிற் சிலர் தமக்குப் பகைவராயினார் வேறு சிலர்க்கு ஏவல் பில்லி வைத்து அவரைத் துன்புறுத்துவதெல்லாம் பெரும்பாலும் அவர் தம் நினை வாற்றலினாலேயே விளைவிக்கப்படுகின்ற தென்னும் உண்மை நன்கு விளங்காநிற்கும். அம்மந்திரகாரர் பேய்களை ஏவி விட்டு அவ்வாறு செய்விக்கின்றனரென்பது முற்றுமே உண்மையன்று. அவர் கனவினும் நனவினும் உறுத்து நினைந்த தீய நினைவு களின் தீய வடிவங்களே, அவர்க்குப் பகையாயினார்க்குப் பேய் வடிவங்களாகக் காணப்படுகின்றன. மந்திரகாரர் தாம் துன்புறுத்துதற்கு முனைந்த பிறர் அம்மந்திரகாரரினும் ஆற்றல் மிக்க மனவொருமையுடையராய், அவர் ஏவிய அவ்வடிவங் களைத் திரும்பிச்செல்லுமாறு தாமும் உறுத்து நினைப்பராயின், அத் தீய வடிவங்கள் அவரை வருத்தாவாய்த் திரும்பிச்செல்லும். இங்ஙனந் தமக்குப் பகையான மந்திரகாரர் சிலர் தமக்குத் தீங்கிழைத்தலை எம்மிடஞ்சொல்லி முறையிட்ட அன்பர் சிலர்க்கு, யாம் "இவ்விவ்வாறு செய்க!" என்று கற்பித்தே மாக, அவர் அவ்வாறே செய்ய, உடனே அத்தீயவடிவங்களின் தீய செயல் ஒழிந்து போயதென்று சொல்லக் கேட்டேம். இவ்வியல்புகளை மனிதவசியம் என்னும் எமது நூலின்கண் விரித்து விளக்கியிருக்கின்றேமாகலின், மீண்டும் அவைகளை இங்ஙனமாகப் பேரிடரில் அகப்பட்டாரது நினைவு அவரது கனவின்கண் மிக்க சுருசுருப்புடையதாய் இயங்கிக் கனவிலும் நனவிலும் உள்ளார்க்குத் தன்னை யுடையாரது நிலைமையினை அறிவித்தல் போலவே நனவிலே உறுத்து நினைப்பாரது

நினைவுங்கனவிலும் நனவிலும் உள்ளார் பிறர்க்குந் தன்னைப் புலனாக்குதல் காண்க.

இன்னும், அன்புடையார் இருவரில் ஒருவர்க்கு நேரும் இடம் உடனே மற்றவர்க்குங் கனவின்கட் டோன்றுதலைக் காட்டும் இரண்டு உண்மை வரலாறுகளை ஈண்டெடுத்துக் காட்டுதும்:

"என் தந்தையார்க்கும் எனக்கும் மிகுதியான அன்பு உண்டு. ஒரு நாட் பகல் கடுமையான வேலைகளைச் செய்து விட்டு இரவு எட்டு மணிக்கு வீட்டுக்குப் போய், உடனே உணவுகொண்டு, களைப்பினால் உடனே உறங்கச் சென்றேன். என்தலை தலையணைமேற்பட்டதும் மிக அயர்ந்த துயிலிற் சென்றேன்: என் மனைவி படுக்கை யண்டை வந்ததுகூட எனக்குத் தெரியாது. அவ்வாழ்ந்த துயிலின் கண் என் தந்தையார் ஒரு படிக்கட்டின் உயரத்திலிருந்து வழுக்கிக் கீழே விழக் கண்டேன். கண்டதும், அவரை விழாமற் பிடித்துக் கொள்வதற்காக என்படுக்கைக் காலண்டை பதைத்துக் குதித்தேன். அங்ஙனங் குதித்ததாற் பெரியதோர் ஓசை உண்டாயிற்று. என் மனைவி உடனே விழித்துக்கொண்டு 'யாது 'குறும்பு செய்கிறீர்' என்று வினாவினாள். யான் விளக்கேற்றி எனது கைக் கடிகாரத்தை நோக்கினேன். மணி இரண்டேகால் ஆயிற்று. யான் கனவிற் கண்டதை அவட்கு எடுத்து மொழிந்தேன். அவள் அதனை நகையாடி விடும்படி என்னைத் தூண்டினாள்; ஆனால், அது கூடவில்லை. அதன்பின் அவ்விரவில் யான் தூங்கவே யில்லை. என் தந்தையார் கீழ்விழுந்து காயம் அடைந்திருக்க வேண்டுமென்னும் எண்ணம் அழுத்தமாக என்னுள்ளத்திற் பதிந்துவிட்டமையால், யான் திரும்பப் படுக்கை யண்டை செல்லாமல், எப்போது விடியும், விடியும் என்று பதைப்புடன் காத்திருந்தேன். பகலவன் கிழக்கே எழக் கண்டதும், யான் பட்டினத்திற்குப் போய்க் கம்பிச் செய்தி விடுத்து, அவரது நலத்தைப்பற்றிக் கேட்டேன். அதற்கு யான் பெற்ற விடையில், என் தந்தையார் படிக்கட்டின் மேலிருந்து விழுந்து கடுங்காயம் அடைந்த நிகழ்ச்சி, யான் கனவிற் கண்டவாறே அதேநேரத்தில் நேர்ந்தமை குறிக்கப்பட்டிருத்தல் கண்டு உளந் துடித்தேன். எனக்கு நெடுந்தொலைவிலிருந்த என் தந்தையார் கீழ் விழுந்தமை

எனக்குத் தோன்றலாயது எங்ஙனமென்று எண்ணிப்பார்த்தும் யான் அதனை யறியக்கூட வில்லை" யென்று அக்கனவுகண்ட துரைமகன் வான நூலாசிரியர் ஒருவர்க்கு எழுதியிருக்கின்றார்.

இன்னும், ஒருகால் வேறொரு துரைமகன் தான் பார்த்து வந்த அலுவலை ஒருநொடி நேரத்தில் விட்டு விலகவேண்டு மென்று அறிக்கை வந்தது. அப்போது அவர் தம்மனைவியார் அவர் இருந்த இடத்திற்கு அறுபது கல்தொலைவிலுள்ளதொரு நாட்டுப் புறத்தில் தங்கியிருந்தார். அத்துரைமகனார் தாம் இங்கிலாந்திற்குப் போம் வழியிற்பேரூது என்னும் ஊர்க்கும் போக வேண்டியவரானார். ஆதலால் அவர் தாம் போகும் அவ்விடத்திற்கு உடனே தம் பின்னே வந்துசேரும்படி தம் மனைவியார்க்கு ஒரு கடிதம் வரைந்து போக்கிவிட்டுத், தாம் அவ்வூர்க்குச் சென்றார்.

ஈதிங்ஙனமிருக்க, நாட்டுப் புறத்திலிருந்த அவர்தம் மனைவியார் தம்கணவர் தமக்குக் கடிதம் எழுதிய அதே நாள் இரவில் வழக்கம் போற் படுக்கைக்குச் சென்றார். சென்று ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கையில், எவரோ தம்மைப் பிடித்திழுக்கக் கனவுகண்டு விழித்தெழுந்து படுக்கைமேல் உட்கார்ந்தனர். அப்போது அவ்வம்மையாரது செவியினுள் "நீ ஏன் அங்கே படுத்திருக்கின்றாய்? நின் கணவன் நின்னை வரவேண்டு கின்றான்; எழுந்து அவன்பாற் செல்!" என்னும் ஒலி குசுகுசு வென்று நுழைந்தது. ஆயினும், அந்த அம்மையார் மறுபடியும் படுத்து உறங்க முயன்றார்; ஆனால், திரும்பத்திரும்ப அதே ஒலி மூன்று முறை தமது காதினுள் வந்தொலிக்கக் கேட்டு, அவர் பெரிதும் அச்சங்கொள்ள, அதனால் அவரது நெற்றியில் வியர்வை பெருந்துளிகளாகத் தோன்றலாயின, அப்போது அவரது அண்டையிற் படுத்திருந்த ஏவற்காரி துயில் கலைந்து "அம்மா! நீங்கள் நடந்து கொண்டும் பேசிக் கொண்டுமா இருக்கின்றீர்கள்?" எனவினவினாள். அதற்கு இல்லை, வேறு யாரோ அப்படிச் செய்கிறார், நீயா?" என்று அவ்வம்மையார் எதிர் வினவினார். "இல்லையம்மா, யான் படுக்கையை விட்டு அசையவில்லை; ஆனால், நீங்கள் எவருடனோ பேசுகின்றீர் களே" என்று ஏவற்காரி மொழிந்தாள். அச்சொற்கேட்டபின், இதில் ஏதோ உண்மையிருக்கவேண்டு மென்னும் நம்பிக்கை

வரப்பெற்றவராகி அந்த அம்மை படுக்கையை விட்டுக் கீழே குதித்துத், தமது குதிரைக்குச் சேணம் இட்டுக் கொணரச் சொன்னார். அவ்வீட்டிலிருந்தவர் ஒவ்வொருவரும் அவ் வம்மைக்கு மூளை பிசகிப் போனதென்று கரைந்து, அவரை மறுபடியும் தூங்கவைக்க முயன்றனர். ஆனால், அவ்வம்மை அதற்கு அடங்காராய்க் குதிரை மீது இவர்ந்து, பாறைகளின் மீதுஞ் சதுப்பு நிலங்களின் ஊடும் அதனை விரைவாய் ஊர்ந்து வந்து வண்டிப்பேட்டையைச் சேர்ந்தார். அப்போதுதான் ஒரு நல்ல குதிரைவண்டி புறப்படத் தொடங்கியது. கடவுளும் அவர் பக்கமிருந்தார். வியர்க்க விறுவிறுக்கச் சேறும் புழுதியும் படிந்த உடையுடன் அவ்வம்மை வருதலைக் கண்ட அவ்வண்டிக் காரன், அவர் கைக்குறி காட்டியதைக் கண்டு வண்டியை நிறுத்தி அவ்வம்மையை அதனுள்ளே ஏற்றிக்கொண்டு அதனைக் கடுக ஓட்டிச்சென்றான். அதனால் அவ்வம்மையார் தம் கணவன் ஏறிச்செல்ல வேண்டிய கப்பல் பேருது நகரை விட்டுப் புறப்படுதற்கு ஒரு நாள் முன்னாடியே அவர்பாற் போய்ச் சேர்ந்தனர். அங்ஙனஞ் சேர்ந்தமையினாலேதான், தங் கணவனுடைய ஏற்பாடுகளை, இங்கிலாந்துக்குப் புறப்படும் முன்னரே, கலந்துபேசி ஒழுங்குசெய்யக் கூடியவரானார்.

பார்மின்கள்! இந்நிகழ்ச்சியிற் போந்த துரைமகனார் தமக்குத் திடீரென வந்த கட்டளையால் தாம் இருக்குமிடத்தைச் சடுதியில் விட்டு நீங்குமாறு நேர்ந்த கட்டாயத்தையுந், தம்மனைவியார் தம்முடன் இன்றி நெடுந்தொலைவில் அப்போது இருந்தமையால் அவர் எப்படி உடனழைத்துச் செல்வதென்ப தையும் நினைந்து மனம் வருந்தித் தம் மனைவிக்குக் கடிதம் எழுதியக்கால், அந்நேரத்தில் ஒருமுகப்பட்டு நின்ற அவரது உணர்வானது தொலைவிலிருந்த அவர் தம் மனைவியார்க்குக் கனவிலும் நனவிலுந் தோன்றி அவ்வம்மையாரைத் தங் கணவன்பால் உடனே புறப்பட்டு வரும்படி செய்தது.

இனி, முன்னொருகால் அன்பினால் உருகி ஒன்றுபட்ட நேய உள்ளம் உடையரான நண்பர் இருவர், பின்னொரு கால் நேர்ந்த பிழையால் ஒருவரை யொருவர் வெறுத்துப் பிரிந்து போதலை ஆங்காங்குக் காண்கின்றோம். அங்ஙனம் அவர் பிரிந்து போயினும், அவரிருவருள்ளமுந் தூயவாயிருப்பின்,

அவரது பழைய நேய உணர்ச்சி அவ்விருவர்க்குங் கனவின்கட் டோன்றி, அவரை மீண்டும் ஒருங்குகூட்டி அளவளாவச் செய்தலும் ஒரோவழி நிகழா நிற்கின்றது. இதனை மெய்ப்படுத்தும் ஓர் உண்மை வரலாற்றினை ஈண்டு எடுத்துக் காட்டுதும். “கிறித்துவருலகு” என்னும் வெளியீட்டுக்கு ஒருவர் எழுதியது வருமாறு:

“நாற்பது ஆண்டுகளாக எனக்கு நண்பராயிருக்கும் ஒருவர் அமெரிக்க தேயத்தில் இருக்கின்றார். பதினான்கு ஆண்டு களுக்குமுன் நேர்ந்த ஒரு பிசகால் எமக்குள் மனவேற்றுமை யுண்டாகக் கடிதப்போக்கு வரவு அடியொடு நின்று போயின. அங்ஙனமிருக்க 1898 ஆம் ஆண்டு நவம்பர்த்திங்களில் ஒரு நாளிரவு மிகவும் தெளிவான ஒரு கனாக் கண்டேன். எனக்கு ஐயாயிரமைல் தொலைவானதோர் இடத்திலிருந்த என் பழைய நேயரைப்பற்றி அப்போது யான் நினைவுகூர்தற்கு ஏதொரு காரணமும் இல்லாதிருந்தும், அவர் பழமைபோல் எனக் கெதிரே வந்துநின்று, ஏதோ முன்னுண்டான ஒரு பிசகால் தமக்குள் நேர்ந்த பிரிவினைக்காகத் தாம் பெருந்துயர் கூர்வதாற், ‘போனது போக’ இனிமேல் நாம் முன்போல் அன்பாயிருத்தலே செயற்பாலதென ஆற்றாமையோடு மொழியக் கேட்டு, அவரும் யானும் மீண்டும் ஒருமித்து அளவளாவுவதாக எனது கனவிற் கண்டேன். கண்டு விழித்துப்பார்க்க அஃதொரு வெறுங்கனவாதல் தெரிந்து ஏமாந்தேன்.

“ஆனால், இரண்டு கிழமைகள் கழித்து, அதே நண்பரிட மிருந்து எனக்கு வந்த கடிதம் பெரியதோர் இறும்பூதினை விளைவித்தது. அக்கடிதத்தில் அவர், ‘யான் நும்மைப்பற்றி ஒரு வியப்பான கனவுகண்டேன். பதினான்கு ஆண்டுகளுக்குமுன் நீர் என்னிடம் எவ்வளவு அன்புடன் அளவளாவினீரோ அவ்வளவு அன்புடன் அளவளாவிப், ‘போனதுபோக’ வென்று அதிற் கூறக்கண்டேன். அதன் கருத்து இன்னதென அறிந்திலேனாயினும், நும்மைக் காணும்பொருட்டே இங்கிலாந்திற்குப் புறப்படு கின்றேன். யான் கனவிற் கண்டபடியே நிறைவேறுமென நம்புகின்றேன்’ எனவரைந்திருந்தனர். அதன்படியே அவர் என்பால் வர, அவரும் யானும் எமது கனவைப் பற்றி ஒருவர்க் கொருவர் சொல்லிக் கொண்டோம். யாங்கள் குறித்துவைத்

திருந்த குறிப்புகளை ஒத்திட்டுப் பார்க்கையில், அக்கனாக்கள் இரண்டும் ஒரே தன்மையவாய்மட்டும் இன்றி ஒரே நேரத்தில் இருவருக்குந் தோன்றினவைகளாகவும் இருத்தல் அறிந்தேம்" என்பது.

இனித், தீராக் கொடுநோய் கொண்டு வருந்துவார் சிலர்க்கு அது தீர்க்கும் மருந்து கனவின்கண் அறிவிக்கப் படுதலும், ஆங்காங்கு நிகழாநிற்கின்றது. இங்ஙனம் நிகழும் அறிவிப்பு, நோய் கொண்டாரின் அறிவு கனவுடம்பின்கண் ஒரோவழி மாசு நீங்கி விளங்குதலால் அது தன்னினின்றே புலனாகின்றதோ, அன்றி ஆவி வடிவின் கண் உலவும் நல்லோரே இரக்கம் மிகுதியால் அந்நோய் கொண்டாரது கனவிற்றோன்றி அது தீர்க்கும் மருந்தை அறிவித்துச் செல்கின்றனரோ, அன்றி நோயாளிக்கு உறவினராய் உள்ளார் அவர் படுந்துயரை நினைந்து அதனைத் தீர்த்தற்குரிய மருந்தினை ஆராயும் நல்லறிவே அந் நோயாளியின் கனவின்கட் டோன்றி அதனை யொழிக்கும் வழி காட்டுகின்றதோ, அம் மூன்றில் இது தான் உறுதியென்று தீர்மானித்தல் இயலாததா யிருக்கின்றது. என்றாலும் இத்தகையதோர் அறிவிப்பு நோயாளியின் கனவின்கட் டோன்றுதலும், அவ்வறிவிப்பின் படியே செய்ய அவர்க்கு அந்நோய் நீங்குதலும் மறுக்க ஏலாத உண்மை நிகழ்ச்சிகளாய் ஆங்காங்குக் காணப்படுகின்றன. "உடல்நலத் தூதுவன்" என்னும் வெளியீட்டின் ஆசிரியரும் புகழ்பெற்ற அமெரிக்க மருத்துவருமான ஹால்புரூக் என்பவர் தமக்கு வந்த கொடியதோர் இருமல் நோய் தீர்ந்த வரலாற்றினைப் பின்வருமாறு எழுதி அறிவித்திருக்கின்றார்:

'1870 ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் யான் மிகக் கொடியதோர் இருமல்நோயாற் பற்றப்பட்டேன். ஒவ்வொரு கார்காலத்தும் இளவேனிற்காலத்தும் அந்நோய் என்னைத் தொடர்ந்து பற்றிப் பல்லாண்டுகள் துன்புறுத்திவந்தமையால் அது நாட்பட்ட நோயாய் வேரூன்றி விடுமோ வெனவும் அதுவே எனதுயிர்க்கு இறுதியாய் முடியுமோ வெனவும் பெரிதும் உளங் கலங்கினேன். அப்போது யான் இளைஞனாய் இருந்தமையாலும், நீண்ட காலங் கைக்கொண்டு ஒழுகத்தக்கதொரு தொழிலை அப்பொழுதுதான் யான் மேற்கொண்டமையாலும், எனது வருங்கால நிலையினைத் தெரிந்து மிகவுஞ் சோர்வடைந்தேன்.

இவ்வாறு சோர்வுகொண்ட நிலையில் ஒருகால் உறக்கங் கொண்டேன்; ஆனாலும், அஃது ஆழ்ந்த துயில் அன்று; அப்போது, பிற் சொல்லப்படும் மகிழ்ச்சியானது இன்னும் என் மனத்தைவிட்டுஅகலாத படியாய்த் தோன்றலாயிற்று. இருபஃது ஆண்டுகளுக்கு முன்னாக இறந்துபட்டமையால், ஏறக்குறைய எனது நினைவைவிட்டு நீங்கிப்போன என் உடன்பிறந்தாள், எனது படுக்கையண்டை வந்து நின்று, "நின் உடல் நலத்தைப்பற்றி நீ கவலைப்படாதே; யாம் அந்நோயை நினக்குத் தீர்க்க வந்திருக்கின்றோம்; இன்னும் நீ உலகத்திற் செய்யவேண்டுவது மிகுதியாய் உள்ளது," எனக் கூறினள். அவ்வாறு கூறிய பின் அவள் மறைந்துபோயினள். ஒரு மின்னற் பொறி (Electric Battery) யிலிருந்து தோன்றிய மின்னாற்றல் எனது மூளையினூடுருவி நிறைந்தாலென எனக்கு ஓர் உணர்ச்சி தோன்றியது; ஆனாலும், அஃது எனக்குத் துன்பமாயில்லாமல் இன்பமாகவே காணப் பட்டது. அவ்வாறு திடுமெனத் தோன்றிய அம்மின்னாற்றல், மூளையிலிருந்து கீழ் இறங்கிப் பரவலாயிற்று; என்னுடைய நெஞ்சிலும் மூச்சுப்பையிலும் அது மிக்க வலிவுடன் நிரம்பி நிற்றலுணர்ந்தேன். பின்னர் அங்கிருந்து அது கைகால் முனைகள் வரையிற் பரவவும். அம்முனைகளில் அஃது இனிதாய்ச் சுடர்ந்து எரியவுங் கண்டேன். உடனே யான் அத்துயில் நீங்கி விழித்தேன்; விழித்ததும் யான் முழுநலம் பெற்றிருத்தல் அறிந்தேன். அதுமுதல் அந்நோய் எனக்குத் திரும்ப வந்ததேயில்லை. என் உடன் பிறந்தாளின் உருவம் அத்துணைத் தெளிவாக எனக்குத் தோன்றாவிட்டாலும், அவளது குரலொலி மட்டும் மிகவுந் தெளிவாய்க் கேட்டது. இதற்கு முன்னும் பின்னும் இத்தகைய தொரு நிகழ்ச்சி எனக்குத் தோன்றியதே யில்லை,' என்பது.

இனி, இத்தகைய நிகழ்ச்சிகள் எமது வாழ்நாளிற் சில முறை எம்பால் நேர்ந்தனவேனும், அவற்றுள் இரண்டு இன்னும் எமது உளத்தை விட்டகலாமல் மிகவுந் தெளிவாகப் பதிந் திருத்தலால், அவையிற்றில் ஒன்றை இங்கே எடுத்துக் காட்டுகின்றனம்:

யாம் எழுதும் நூல் ஒவ்வொன்றும் பன்னாளும் பல முறையும் ஆய்ந்தாய்ந்து எழுதப்படுவது. யாம் எழுதுவன

எமதுளத்திற்கு இனிமைதரும் வரையில், எமதறிவிற்குப் பொருத்தமாகக் காணப்படும்வரையில் அவற்றைப் பன்முறையும் நினைந்து நினைந்து வரையாமல் மெல்லென எழுதலே எமக்கு வேரூன்றிய இயற்கையாய் விட்டது. அதனால், யாம் எழுதும் நூல்களை யாமே எமது செலவிற் பதிப்பிட்டு வெளியிடுவ தன்றிப், பிறர் அவ்வாறு செய்தற்கு அவற்றைக் கொடுப்ப தில்லை. என்றாலும், எம்மை இருகாற் கொழும்புமா நகர்க்கு வருவித்து எமது தமிழ்த் தொண்டிற்கு உதவிபல ஆற்றிய அன்பர் சிலருள் ஒருவரின் அக்கால மனநிலையினை வியந்து, அவர்க்குக் கைம்மாறொன்று செய்ய விழைந்து, யாம் எழுதிய **திருவாசக விரிவுரை**யினை அவர் வெளியிடக் கொடுத்தேம். அவர் அதற்காக எமக்குப் பொருளுதவியுஞ் செய்து வந்தாரெனினும், யாம் திருவாசகச் செய்யுட்களை ஆழ்ந்தாராய்ந் தெழுதிக் கொடுத்து வருகையில், உரையினை விரைந்தெழுதித் தருமாறு இடை யிடையே எம்மை அவர் வன்சொற்களால் நெருக்கி வந்தனர். இரவில் ஒன்பது மணிக்குமேற் கண்விழித்திருந்து ஏதும் எழுதுதல் செய்யாத யாம், அவர்தம் வன்சொற்களைப் பொறுக்க ஏலாமல், தொடர்பாகச் சிலநாட் பதினொருமணி வரையிற் கண்விழித்திருந்து அதனை எழுதி வரலாயினேம். அவ்வாறு செய்துவரவே, எமது மூளையிற் சூடேறி மயக்கம் மிகுந்தது; உண்ட சிறிதுணவுஞ் செரியாமற் கக்கலாயிற்று; உடம்பெங்குங் காய்ச்சலும் உண்டாயிற்று; இருப்பில் இருந்தால் தாங்க முடியாத மண்டைக் கிறுகிறுப்பு வந்தது; அதனாற் படுக்கையிலேயே கிடக்கலாயினேம்; இங்ஙனம் துன்புற்றுக் கொண்டு வந்த சில நாட்களிலெல்லாம் எமது கீழ்வயிற்றின் வலப்பக்கத்தினுள்ளே ஒரு குடகு நாரத்தம் பழ அளவினதான ஒரு கழலைக்கட்டி யுண்டாயிற்று. அக் கட்டியுண்டானபின், எமதுடம்பில் விடாக்காய்ச்சல் வீசியது; படுக்கையிற் பிறருதவியின்றி அப்புறம் இப்புறம் புரள்வதும் எழுந்திருப்பதும் இயலாவாயின. வரவர உடம்பும் மெலிந்தது. வந்தநோய் மிகுந்து வருதலன்றிச் சிறிதும் தணிந்திலாமையின், எமக்கு அந் நோய் தீர்க்க அன்பினால் வந்துதவிய வல்ல மருத்துவர்கள் உளங்கலங்கினர். எமக்கும் உயிர்வாழ்க்கையில் நம்பிக்கை யற்றது என்றாலும், எமதுளத்திற் கலக்கம்மட்டும் உண்டாக வில்லை. அஃது ஏதுகாரணத்தாலோ இப்போது அதனை அறிதல்

இயலவில்லை. இத்துணையற்ற நிலைமையில், எமக்கு இந்த நில உலக வாழ்வு இன்று ஒழியுமோ! நாளை யொழியுமோ! என்று எதிர்பார்த்திருக்குங் காலத்தில், ஒரு நாள் இரவு விடிவதற்கு இரண்டு மணிநேரத்திற்கு முன்னே எமக்கு ஒரு தோற்றம் உண்டாயிற்று. அது கனவு நிலையோ, நனவு நிலையோ இன்னதென்று துணிந்து சொல்லல் கூடவில்லை. எம்மைச்சூழ ஒரு பேரிருள் தோன்றியது. அவ்விருளில் எவரோ சிலர் உலவும் அரவந்தென்பட்டது. அவ்விருளையும் அதன்கண் உலவுவாரது அரவத்தையுங் கண்டு கேட்ட எமதுள்ளம் பெரிது நடுங்கியது. அந்நடுக்கம் உண்டான சிறிது நேரத்திலெல்லாம், அப் பேர் இருளின்கண் எம்மைச் சூழப் பளபளப்பான ஓர் ஒளி தோன்றியது. உடனே, பார்ப்பதற்கு இனிய முனிவரையொத்த மிக வெண்மையான ஓர் ஆங்கிலத் துரைமகனாரது திருவுருவம் எமதருகே கையில் ஒரு கண்ணாடி விளக்கைப் பிடித்துக் கொண்டு வந்துது, அத் துரை மகனாரது திருவுருவத்தைக் காண்டலும் எமதுளத்தே யிருந்த நடுக்கம் முற்றும் ஒழிந்துபோக, யாம் முன்னறியாத ஒரு மகிழ்ச்சியும் இன்ப உணர்வும் வரப்பெற்றேம். அவரது உருவத்தினுயரஞ் சிறிது குள்ளமா யிருந்தது; அவரது யாக்கை திண்ணியது; தலைமேற் குறுகிய மயிரும் மோவாயில் நீண்ட தாடி மயிரும் நரைத்து வெண்மையாகத் தோன்றின; சிறிதேறக்குறைய எழுபத்தைந்து அல்லது எண்பது ஆண்டிற்கு மேற்பட்டவராகக் காணப்பட்டனர்; மிக வெண்மையான நிறமுடையராய் ஆங்கில மக்களைப் போலவே மேலுங் கீழும் வெள்ளிய சட்டை யணிந்திருந்தனர்; இருந்தவாற்றால், திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப்புத்துரை யவர்களின் வடிவத்தையே அவர் ஒத்திருந்தனர். இங்ஙனந் தோன்றிய அத் துரைமகனார் தமது கையிற் பிடித்திருந்த கண்ணாடி விளக்குடன் எம்மைச் சுற்றிச்சுற்றி நடந்து, எமக்குச் சிறிது தொலைவிற் சூழத்தோன்றிய அப் பேர் இருளில் இயங்கின சிலரைக் கடிந்து பேசினார்; ‘இவரால் இவ்வுலகிற்கு எவ்வளவோ நன்மை விளையவேண்டி யிருக்கின்றது. ஆதலால், நீங்கள் இவரை அணுகாமல் ஓடிப் போங்கள்!’ என்றுதமிழிற்பேசி அவர்களைத் துரத்தினார். அவ்வளவில் யாம் திடுமென விழித்துக் கொண்டேம். விழித்த சிறிது நேரத்திலெல்லாம் பொழுது விடிந்தது.

எமதுடம்பிற் காய்ச்சலும் இல்லை; அடிவயிற்றின் வலதுபுறத் திருந்தகழலைக் கட்டியையுங் காணாம். அன்று எம்மை வந்து கண்ட மருத்துவரும் பிறருமெல்லாம் அத்துணை விரைவில் அக்கொடு நோய் நீங்கியது கண்டு மிக்கதோர் இறும்பூ தெய்தினர்.

அவ்விரவில் எம்பால் அங்ஙனம் வந்து நோய் தீர்த்த அப்புனித உருவம் நமது அருமைத் திருவாசகத் தமிழ் மாமறையில் அளவிறந்த அன்புவைத்திருந்த போப்புத் துரையவர்களின் ஆவி வடிவாயிருக்கலாமோ, அல்லது மேலுலகத்தில் வைகும் அத்துரைமகனாரின் நல்லெண்ணமே அவரதுருவத்தினைத் தோற்றுவித்து எமக்கு வந்த அப் பேரிடரை நீக்கியதோ இன்னது தான் என்றுரைத்தல் இயலாது. யாம் அப்போது திருவாசக விரிவுரையெழுதி வந்தமையால், அதற்கு இடையூறு நேரலாகாதென்று நினைந்தே, திருவாசகத்தை யெண்ணி யெண்ணி யுருகிய போப்புத் துரையவர்களே அங்ஙனம் வந்து எமக்கு நோய் தீர்த்தாராகல் வேண்டுமென்பதே எமது முடிபு. வந்த அவ்வாங்கிலத் துரைமகனார் தமக்குரிய ஆங்கில மொழியிற் பேசாது, செந்தமிழிற் பேசி, எம்மைச் சூழ்ந்த இருளில் உலாய தீய ஆவிகளைத் துரத்தியதும் யாங்கொண்ட முடிபினையே வலுப்படுத்துகின்றது. இங்ஙனமே பின்னரொருகாலும் யாங் கடுங்காய்ச்சல் நோயால் துன்புற்ற வழிப் பருத்துயர்ந்த கருமேனியும் மழித்த தலையும் அருட்பார்வையும் உடைய ஒரு துறவியின் உருவம் எமது கனவின்கட் டோன்றி எமக்கு அந்நோய் தீர்த்தருளியது.

இத்தகைய கனா நிகழ்ச்சிகள் எமது வாழ்நாளில் மிக அரியவாய்ச் சில முறைகளே தோன்றின. ஏனைக்கனா நிகழ்ச்சிகள் பெரும்பாலும் எமது நினைவுக்கு வருவதில்லை. மேலெடுத்துக் காட்டியவைபோன்ற சிற்சிலவே இப்போது எம் மனக்கண்ணெதிரே தோன்றா நிற்கின்றன.

இன்னும், பிராலின் ஆகஸ்டு மூலர் எனப் பெயரிய ஒரு மாதரார் தமது நினைவின் ஒருமையால் வேறொருமாதர்க்குக் கனவின்கட் சென்று நோய்தீர்த்த வரலாற்றினையும் இங்கே எடுத்துக் காட்டுவாம்: இம்மாதரார் இருந்தாற் போலிருந்து

திடுமென அறிதுயிலிற் செல்லும் இயற்கை வாய்ந்தவர். இவர் அங்ஙனம் அறிதுயிலிற் சென்றிருக்குங்கால் தம்முடம்பிலுள்ள நோய்களையும் பிறருடம்பிலுள்ள நோய்களையுந் தெளிவாய் எடுத்துக் கூறியதோடு அந்நோய் தீர்க்கும் எளிய இயற்கை முறைகளையும் நன்கு விளக்கிச் சொல்வர். அவை மட்டுமே யன்றிப், பிறருள்ளத்தில் உள்ள எண்ணங்களையும் அவர் தம் நடக்கைகளையுங்கூட வெளிப்படச் சொல்வர். தொலைவில் வியன்னா நகரத்திலுள்ள தம் உடன் பிறந்தானுக்குத் தம துருவத்தைத் தாம் தோற்றுவித்தல் கூடு மென்றும் உரைப்பர். தம்முடைய கண்களை இறுகக் கட்டிவிட்டாலும் அவர் நாடகசாலைச் சீட்டுகளையும் இசைநூலிலுள்ள பாட்டு களையுந் கண்ணாற் பார்த்துப் படிப்பதுபோற் படித்துச் சொல்வர். இவர்க்கு நேயரான ஒரு மருத்துவ ஆசிரியர் ஒருகால் இம்மாதரை நோக்கித், தமது குடும்பத்திற் சில நாட்களுக்கு முன் நிகழ்ந்தது யாதென்று வினவ, உடனே அவ்வம்மையார், "பதினைந்து கல்தொலைவிலுள்ள ஒரு பட்டினத்தில் உங்கள் மாமனார் இறந்துபட்டார்" என நுவன்றார்; அஃதுண்மை யாகவே இருந்தது.

இத்தகைய ஆகஸ்டு மாதரார்க்கு நண்பரான மற்றொரு மங்கையார் தாம் அப்போது பல்வலியாற் பெரிதும் வருந்திக் கொண்டிருந்ததால், அடுத்த நாள் வழக்கம் போல் அவரை வந்து பார்த்தல் இயலாதெனக் கூறினார்; "அப்படியாயின் யான் இன்றிரவு நுங்களைவந்து காண்பேன்" எனப் புகன்றார். புகன்றபடியே, தம் நண்பரான மங்கையார் பல்வலியால் துன்புற்றுப் படுத்திருக்கும் அவ்வறைக்குள் அம்மாதரின் உருவம் இராப்பொழுதிற்குரிய உடையணிந்த வண்ணமாய்த் தோன்றி, அம்மங்கை யாருடன் பக்கத்திற் படுத்துக்கிடந்தது. காலையிற் கண்விழித்த அம்மங்கையார் தமக்கிருந்த பல்வலி முற்றுமே நீங்கிப்போகக்கண்டு பெரிதும் வியப்படைந்தார். ஆகஸ்டு அம்மையார் தமது இல்லத்தின்கண் தமது படுக்கையை விட்டு அகலாதிருந்தும், அவர் எங்ஙனந் தமது இல்லத்திற்புகுந்து தம்முடன் படுத்திருந்தார்? என்பதை நினைந்து அம்மங்கை யார் அடைந்த வியப்பினுக்கு ஓர் அளவே யில்லை.

இனி, நனவுணர்வினால் எவ்வாற்றானும் அறிந்து கொள்ளல் இயலாத கல்விப் பொருள்கள் சில கனவின் கண்

இனிதுவிளங்கித் தோன்றிய வரலாறுகளும் பல; அவற்றுட் சிலவற்றை இங்கெடுத்துக் காட்டுதும்:

பாபிலோனிய தேயத்தில் நிப்பூர் என்னும் நகரத்தின் கட் பல்லாயிர ஆண்டுகட்கு முன் அழிந்துபட்ட அரண்மனை களிலே பண்டைநாள் அரசர்களாற் செதுக்கி வைக்கப்பட்ட கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து, அவற்றிற் சொல்லப்பட்ட குறிப்புகளைக் கொண்டு, அஞ்ஞான்றை அரசர்கள் அவர் கீழ் உயிர் வாழ்ந்த மக்களுடைய நாகரிக வரலாறுகளை யெல்லாம் ஆராய்ந்தெழுதுதற் பொருட்டு, அந்நகர்க்குச் சென்ற ஜெர்மன் ஆசிரியரான ஹில்பிரச் (Professor Hilpecht) என்பார் ஆண்டெடுத்த இரண்டு சிறு மோதிரத் துண்டுகளிற் செதுக்கப்பட்டிருந்த சொற்றொடர்களைக் கண்டறிதற்கு எவ்வளவோ முயன்றும், அம்முயற்சி அவர்க்குச் சிறிதும் பயன் தந்திலது. ஏனென்றாற், கண்டெடுத்த அச் சிறுதுண்டுகள் இரண்டும் ஒரே மோதிரத்தின் துண்டுகளாகக் காணப்பட வில்லை. ஆகையால், இவற்றை எவ்வளவுதான் இணைத்துப் பார்த்தாலும், அவற்றின்கட் செதுக்கப்பட்ட சொற்கள் இணைந்து ஒருபொருள் தந்தில. நிப்பூரிலிருந்த பகலவன் கோயில் அழிந்து கிடக்கும் இடத்தை அகழ்ந்து தேடியதில், அவ்விரண்டு சிறுமோதிரத்துண்டுகளை யொத்தவை பின்னும் பன்னிரண்டு கிடைத்தன. அவற்றின் மேலெல்லாஞ் செதுக்கப் பட்ட எழுத்துகள் ஆப்புவடிவம் வாய்ந்திருந்தன. அவை செதுக்கப்பட்ட காலம், இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னே துவங்கி 3600 ஆண்டுகள் வரையிலாகும். இத்துண்டு களையெல்லாம் பன்னாளும் பன் முறையும் அவர் இணைத் திணைத்துப் பார்த்தும், அவற்றின் பொருளைக் கண்டறிதற்கு எவ்வளவோ பாடுபட்டும், அது சிறிதுங் கைகூடவில்லை. பின்னர் ஒருநாள் நள்ளிரவு மட்டும் அவர் இவ்வுழைப்பிற் கருத்தை ஓயாமற் செலுத்திப் பார்த்தும் பயன் ஏதும் உண்டாகாமையால் மிகவும் அயர்வடைந்தவராய்ப் படுக்கையிற் சென்று ஆழ்ந்து துயில்கொள்ளலானார். அங்ஙனம் அவர் ஆழ்ந்து துயில்கையில், அந்த நிப்பூர்ப் பகலவன் கோட்டத்திற் பண்டைக்காலத்திற் குருக்களாயிருந்த ஒருவரின் உருவம் அவரது அகக்கண்ணெதிரே தோன்றியது. அவ்வுருவம் நீண்டு ஒல்லியாய், நாற்பதாண்டு அகவையினதாய்ப், பொதுவான உடையணிந்திருந்தது. இவ்வாறு

தோன்றிய அவ்வுருவம், அக்கோயிலின் தென்கிழக்கில் உள்ளதாகிய களஞ்சிய அறைக்கு அவ்வாசிரியரை அழைத்துச் செல்வதாகக் காணப்பட்டது. அங்கே சென்றதுந், தாழ்ந்த மச்சுடையதாய்ச் சாளரம் ஏதும் இல்லாததாய்ச் சிறியதாய் அதனுள்ளிருந்த மற்றோரறைக்குள் அவ்வாசிரியரை அது கூட்டிச்சென்றது; அச் சிற்றறைக்குள் ஒரு பெரிய மரப்பெட்டியிருந்தது; நிலத்திலே ஒருவகை மணிக்கல் (agate) லின் துண்டுகளும் வைடூரியங்களும் இறைந்து கிடந்தன. அவ்வறைக் குட் சென்றதும் அவ்வுருவம் அவ்வாசிரியரை நோக்கி, "22, 26 ஆம் பக்கங்களில் நீர் தனித்தனியே வெளிப்படுத்தி யிருக்கின்ற இரண்டு துண்டுகளும் விரலில் அணியும் மோதிரங்கள் அல்ல, அவற்றின் வரலாறு இது: - கி.மு. 1300 இல் இருந்த அரசன் குறிகழுவென்பான், ஒருகாற் பகலவன் கோயிலுக்குத் தான் சேர்ப்பித்த ஏனை மணிக்கற்கள் வைடூரியங்களுடன், எழுத்து வெட்டிய ஒரு மணிக் கற்குழாயினையும் நேர்த்திக்கடனாகச் செலுத்தியிருந்தான். அதன்பிற் சடுதியிலே, நினிப்பு என்னுங் கடவுளின் திருவுருவத்திற்காக மணிக்கல்லிற் சமைத்த ஒருசோடு காதணிகள் செய்யும்படி அரசனிடமிருந்து குருக்களாகிய எங்களுக்கு ஒரு கட்டளை வந்தது. அந்த நேரத்தில் எங்கள் கையில் மணிக்கல் ஏதும் இல்லாமையால் யாங்கள் பெருந்திகில் கொண்டோம். அரசனிட்ட கட்டளைப் படி செய்தற்கு அவன் செலுத்திவைத்த அம்மணிக்கற்குழாயை மூன்று கூறாக அறுத்து, மூன்று வளையங்கள் செய்வதைத் தவிர எங்களுக்குவேறு வழியில்லை. அக்குழாயின்மேற் செதுக்கப்பட்டிருந்த எழுத்துத்தொடர் அதனால் மூன்று கூறாக அறுந்து ஒவ்வொரு கூறும் ஒவ்வொரு வளையத்தின் கண் இருப்பதாயிற்று. முதலிரண்டு வளையங்களும் அக்கடவுளின் திருவுருவத்திற்குக் காதணி களாயின; நுமக்கு அத்தனை வருத்தத்தை விளைவித்த அத்துண்டுகளிரண்டும் அக்காதணிகளின் பகுதிகளாகும், அவ்விரண்டையும் ஒன்று சேர்த்துப் பார்ப்பீரானால் என் சொல்லினுறுதி புலனாகும். ஆனால், மூன்றாம் வளையத்தை நீர் இதுகாறும் அகழ்ந்து பார்த்துங் கண்டெடுக்கவில்லை. அஃது ஒருகாலும் நுமக்கு அகப்படாது." என்று கூறிய அளவில் மறைந்துபோயது. உடனே அவ்வாசிரியர் விழித்தெழுந்து தாங் கண்ட அக்கனாவினைத் தம் மனைவியார்க்கு எடுத்துரைத்தார்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் அவ்விரண்டு துண்டுகளையும், தமக்குக் கனவிற் றோன்றிய குருக்கள் உருவம் மொழிந்த வண்ணமே ஒன்று சேர்த்துப் பார்க்க, அவை பெரிதும் வியக்கத் தக்கவகையாய் ஒருங்கு பொருந்திப், "பகலவன் புதல்வரான நினிப்புக் கடவுளாகிய தன் பெருமானுக்கும் பகலவனின் பெருங்குருக்களான குறிகழுவென்பான் காணிக்கையாக அளித்தது இது" வெனப் பொருள் பயந்தது.

பார்மின்கள்! இற்றைக்கு 3200 ஆண்டுகளுக்கு முன் அழிந்துபட்ட நிப்பூர்ப் பகலவன் கோட்டத்திலிருந்து அகழ்ந் தெடுத்த வளையத் துண்டுகளிற் செதுக்கப்பட்ட சொற்றொடர், நனவின்கண் எவ்வளவோ ஆராய்ந்து பார்த்தும் ஒரு சிறிதும் புலப்படாதுபோக, மற்று அது கனவின்கட் டோன்றி அறிவித்து குருக்களின் வாய்மொழியால் நன்கு புலனாயிற்று. மிக அரிய இவ்வுண்மை நிகழ்ச்சியினை நுணுகி ஆராய்ந்த ஐரோப்பிய ஆசிரியர்கள், அத்துண்டுகளை அகழ்ந்தெடுத்த ஹில்பிரச் சென்பார் நாணாளும் நனவின்கண் ஆராய்ந்து கொண்டு இடர்ப்பட்ட வராதலாலும், அக்கோயிற் சிற்றறையின் வரலாற்றினை மற்றோராசிரியர்பாற் கேட்டிருந்து அதனை மறந்துபோயினும் அவரது அவ்வாராய்ச்சி யறிவு கனவுடன்பின் கட்டெளிவு மிக வுடையதாய் அதனை நினைவுகூர்ந்து இயங்கினமையாலும், அவரது நுண்ணறிவே கனவின்கண் அச்சொற்றொடரை இணைக்கும் வழிகாட்டி, அதற்கு அக் கோயிற் குருவினுருவத்தையுந் தோற்றுவித்ததெனக் கூறா நிற்கின்றனர். அவர் கூறும் அவ்விளக்கம் எவ்வளவில் ஏற்றுக் கொள்ளற் பாலதென்பது அறிஞர்களே முடிவுகட்டற் பாலார். மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் அப்பகலவன் கோட்டத்திலிருந்த ஒரு குருக்களின் உருவத்தையும், அவ்வுருவம் எடுத்துரைத்த உண்மைகளையும் எல்லாம், நனவின்கண் இடர்ப்பட்ட ஹில்பிரச் ஆசிரியரது நுண்ணுணர்வே கனவின்கட் கற்பித்துவிட்டன என்னும் உரை எமதுள்ளத்திற்குப் பொருத்தமுடையதாகக் காணப்படவில்லை. எமதறிவுக்குட் பட்ட மட்டிற், பண்டிருந்த அக்குருக்களின் உருவமும் அது மொழிந்த உண்மைகளும் அவ்வாசிரியரது நினைவே கற்பித்தன ஆகா. உயர்ந்தோர். செய்யும் அரிய அறிவுமுயற்சிகள் பயன்படாவாய்ப்போக, அவர் படும் பாட்டினைத் தொலைவில்

நுண்ணுடம்பிலிருந்து அறியும் ஆன்றோரின் ஆவியோ, அல்லது அவரது நினைவோ, அங்ஙனம் இடர்ப்பட்டு வருந்தும் அறிஞர்க்குக் கனவின்கட் டோன்றி உண்மையை அறிவித்து அவர்தம் இடர்ப்பாட்டினை நீக்கிச் சொல்லநிற்கின்ற தென்பதே எமக்குப் பொருத்தமுடையதாகத் தோன்றுகின்றது. அது நிற்க.

இன்னுஞ், சமயப்பொருள் விரிவுரைசெய்வதில் மிகச் சிறந்தவரான சமயகுரு ஒருவர் (spurgeoj) ஒருகால், ஒரு சிறப்பு நாளிற் செய்யவேண்டிய விரிவுரையொன்றனை எழுதுவதற் காகத் தமது கருத்தினை ஒருமுகப்படுத்தி அமர்ந்து அதனைச் செய்யப் புகுந்தார். ஆனால், அன்றைக்கு அவரால் அஃது அழகிதாக எழுதி முடிக்கப்படுதற்கு இடந்தராமற் பேரிடர் பயப்பதாயிற்று, எவ்வளவோ முயன்றும், அஃது ஓர் உருப்படாமையால் மனத்தளர்ச்சியுடையராய் அது செய்வதை விட்டெழுந்தார்; என்றாலும் அவ்விரிவுரை யடுத்த நாளிற் செய்யப்பட வேண்டுவதாதலால், அதுபற்றி அவர் பெரிதும் மனங்கவன்று அயர்ச்சியாற் படுக்கையிற்கிடந்து உறங்கினார். அங்ஙனம் உறங்குகையில் அவர் நள்ளிரவிற் றிடுமென எழுந்து நின்று அவ்விரிவுரையினை மிக்க கிளர்ச்சியுடனும் உருக்கத் துடனும் ஒரு தொடர்பாக ஒழுங்காகப் பேசுவாரானார். அவர் அங்ஙனம் விரிவுரை நிகழ்த்தும் அரவங் கேட்டுத் துயிலொழிந்த அவர்தம் மனைவியார் அதனை அருகிருந்து கேட்டுப் பெரு வியப்படைந்தார். அவ்வாறு அவர் விரிவுரை நிகழ்த்தியபின் திரும்பவும் படுக்கையில் அமர்ந்து உறங்கிவிட்டார். மறுநாட் காலையில், அவர்தம் மனைவியார் அவர்க்கு அந்நள்ளிரவு நிகழ்ச்சியினைத் தெரிவித்த பிறகுதான், அவர் அவ்விரிவுரை தமது கனவின்கண் ஓர் உருவாகி ஒழுங்குபட்டதை நினைவு கூர்ந்தார்.

மேற்போந்த உண்மை நிகழ்ச்சிகளாகிய மெய்ச்சான்றுகள் கொண்டு, கல்வியாராய்ச்சியிற் கருத்தூன்றி நிற்பார்க்கு அவர்தம் ஆராய்ச்சித் துறையில் நேரும் இடர்ப்பாடுகளை, நுண்ணுடம்பிற் சென்ற அவரது நுண்ணுணவர்வோ, அன்றி மேலுலகங்களில் உறைவாரான கலைவல்லாரின் ஆவிகளோ, அன்றி அக்கலைவல்லாரின் நினைவுகளோ அவர்தங் கனவிற் றோன்றி நீக்கி, அவர் தமக்கு மெய்யறிவுச்சுடர் கொளுவும் உண்மை யினைத் தெற்றெனத் தெரிந்துகொள்க.

இனிப், பின் நிகழப்போகும் இடர்கள் கனவின் கண் முன் அறிவிக்கப்படுதலும் ஆங்காங்கு நடைபெறாநிற்கின்றது. இதற்கு மெய்யாக நிகழ்ந்த சிலவற்றை இங்கெடுத்துக் காட்டுதும்.

1890 ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 12 ஆம் நாள், ஒரு துரைமகனார் (William Tudor) தமக்கு வேண்டிய நிலங்களை வாங்குதற்கென்று, தாம் இருந்த ஊரைவிட்டு வெளியூர் ஒன்றிற் சென்றிருந்தவர், அன்றிரவு படுக்கைக்குச் சென்றார். சென்று நன்றாக அயர்ந்துறங்கினவர், நள்ளிரவில் தம் மனைவியார் தமது பெயரைச்சொல்லி அழைக்கக்கேட்டு விழித்தெழுந்து படுக்கைமேல் உட்கார்ந்தார். உட்கார்ந்து தாம் ஓர் ஊரிலுந் தம் மனைவியார் மற்றோர் ஊரிலும் இருத்தலை நினைவுகூர்ந்து, திரும்பவும் விழுந்து படுத்துக் கொண்டார். என்றாலும், மறுநாட் காலையில் எழுந்தது முதல், அவர் முன்னாள் இரவில் தம் மனைவியார் தம்மைப் பெயர்சொல்லி அழைத்த ஒலியினை நினைந்து பெரிதும் மனங்கலங்குவாரானார். நாடோறுந் தம் மனைவியாரிடமிருந்து கடிதம் வரும் வழக்கம் போற் சிலநாட்களாகக் கடிதம் வராமையினையும் நினைக்கவே அவர்க்கு அக் கலக்கம் பின்னும் மிகுவதாயிற்று. ஆகவே, அவர் தம் மனைவியார்க்கு உடனே ஒரு கம்பிச்செய்திவிடுத்தார். அதற்கு ஏதொரு விடையும் வராமையால், மறுபடியும் ஒரு கம்பிச் செய்தி விடுத்தார். அதற்கும் விடை வந்திலாமையால், தம் மனைவிக்குத்தான் உடம்பு நலமில்லையோ, அல்லது தம்பிள்ளைகளுள் எவரேனுந்தாம் நோய்வாய்ப்பட்டனரோ, அல்லது தம் நெருங்கிய உறவினரெவர்க்கேனுந் தாந் தீங்கு நேர்ந்ததோ, அல்லது அவரில் எவரேனுந்தாம் இறந்து பட்டனரோ என்று பலவாற்றா னெல்லாம் எண்ணியெண்ணி அவர் துன்புறலானார். பிறகு இரண்டொரு நாளில் அவர் தம் மனைவியாரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. வந்த அக் கடிதம், அத்துரைமகனாரின் மருமகன் சூலை 11 ஆம் நாள் நள்ளிரவில் ஒரு மின்வண்டியின் எதிரே விழுந்து படுகாயம் அடைந்தன னென்றும், ஒற்றைக்கால் போய்விட்டதேனும் அவன் உயிர்பிழைத்துக்கொண்டா னென்றும் அறிவிப்ப தாயிற்று. அவர் தம் மனைவியார் அத்துயரநிகழ்ச்சியைப் பின்னாட் பிற்பகல் அறிந்து, அன்றிரவெல்லாம் பெருந்துயர் கூர்ந்து தங்கணவரையும் நினைந்திருந்தாராதலால் அவரது அந்நினைவே

தொலைவில் வேறோர் ஊரிலிருந்த அவர்தங் கணவரை அதே நாள் இரவில் அழைப்பதாயிற்று என்க.

இன்னுங், கொலம்பா என்னும் முனிவர் ஒருநாளிரவுதந் திருக்கூட்டத்துடன் துயில்கொண்டிருப்புழிச் சடுதியில் துயில் ஒழிந்து தந் திருக்கூட்டத்தவரை யெழுப்பித், தறியிற் கட்டியிருக்கும் படகை யவிழ்த்துத் தாம் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் அதனைக் கொணர்ந்து நிறுத்துகவென அவர்க்கு மொழிந்தார். ஏனென்றால், அவர்கள் அப் படகை முன்னே நிறுத்தியிருந்த கரைப்பக்கத்திலுள்ள சிற்றூர் நெருப்புக்கு இரையாகப்போதலை அவர் எங்ஙனமாகவோ முன்னரே தெரிந்து கொண்டார். அவர் கட்டளையிட்ட வண்ணமே அப் படகு அவர்கட்கு அண்மையிற் கொணர்ந்து நிறுத்தப்பட்ட சிறிது நேரத்திலெல்லாம், அவர் கூறிய அச் சிற்றூர் நெருப்புப்பற்றி யெரிதலை அவர்கள் எல்லாருங் கண்டு வியப்புற்றனர்.

**அடிக்குறிப்புகள்**

1. Captain Scott.
2. T.V. Ivey to Prof. William James
3. “Seeing the Invisible” 1917, pp.243, 244

## 14. நனவிற்றோன்றும் முன்னறிவிப்புகள்

இன்னும்,இவ்விந்திய நாட்டின் அரசியற்படைக்குத் தலைவராயிருந்த ராபர்ட்ஸ் என்பார் ஒருகாற் காயூல் நகரை விட்டுக் கைபர் கணவாய்வரையில் மிகுவிரைவாய்க் குதிரையூர்ந்து வருகையில், திடுமென அவருள்ளத்தில் ஓர் உணர்வு தோன்றிப் பின்வரும் பேரிடரை அறிவித்து, அவர் அதற்குமேல் செல்லாமல் அவரைத் தடைசெய்தது, அவர் அதனால் அங்ஙனந் தடைப்பட்டு நின்ற சிறிது நேரத்திலெல்லாந், தமக்குக்கீழ்த் தலைவராயுள்ளார் இருவர் அவர்பாற் கடுகிப் போந்து, காந்தாரத்திலுள்ள தம்மவர் படையானது பகைவர் தலைவனால் முறியடிக்கப்பட்டு முற்றுமை செய்யப் பட்டிருக்கும் மிக வியப்பான செய்தியைத் தெரிவித்தார். அதுகேட்டதும், அவர் காந்தாரத்திற்குத் திரும்பிச்சென்று, தமது படைக்கு வந்த அப் பேரிடரை நீக்கிப் பெருஞ்சிறப்புப் பெற்றார்.

இங்ஙனமே, போர் துவங்கும்போதும் போர்மேற் செல்லும்போதுமெல்லாம் ராபர்ட்ஸ் படைத்தலைவர்க்கு இத்தகைய முன்னறிவிப்புகள் அடுத்தடுத்து வருதலுண்டு. அவ்வறிவிப்புகளின்படி தாம் மேற்கொண்ட போர் வினைகள் நடாத்தியே அவர் வெற்றி பெற்று வந்தார். 1914 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் ஜெர்மன் அரசுக்கும் ஆங்கில அரசுக்கும் போர் மூண்டபோது, இப் படைத்தலைவர் கூறிய அறிவுரை களைக் கேளாமையினாலேயே, ஆங்கிலர் பெருந்துன்பம் உழந்தனர். இவர்தம் அறிவு மொழிகளை மட்டும் அவர்கள் கேட்டு நடந்திருந்தால் அத்தகைய பெருந்துன்பத்திற்கு ஆளாகி இரார்கள்; இன்னோரன்ன முன்னறிவிப்புகள் விக்டோரியா பேர்அரசியார்க்கும் அடுத்தடுத்து வருதலுண்டு. அங்ஙனம் அவை வருங்காலங்களிலெல்லாம், அவர், தம் அமைச்சர் பின்வருவன அறியாமையாற் புகல்பவைகளையெல்லாம் ஒரு

சிறிதும் ஏலாமல் ஒழித்துத், தாம் பெற்ற அவ்வறிவிப்புகளின் படி நடந்து தங்கீழ் வாழ்வார்க்கு வரற்பாலனவாயிருந்த பேரிடர்களை யெல்லாம் வராமற் றடைசெய்து, அவர்களைக் காத்து வந்தனர்.

இன்னும், உடல்வலிமையில் தமக்கு நிகரில்லாதவரென்று உலகம் எங்கணும் பெரும்புகழ் ஓங்கப்பெற்ற சாண்டோ (Sandoow) என்பவர் தாம் இயற்றிய "வலிவு பெறுதல் யாங்ஙனம்?" என்னும் அரிய நூலின்கட் பின்வருமாறு வரைந்திருக்கும் பெரிய உண்மை மனத்தின் கட் பதிக்கற்பாலதாகும்.

"யாங்கள் ஏறிச்சென்ற கப்பல் (Elbe) விரைவில் அமிழ்ந்தி யழியப்போகிறது என்னும் உணர்ச்சி எப்படியோ என்னுளத்தில் அடுத்தடுத்துத் தோன்றலாயிற்று. பொதுவாக யான் இத்தகைய அறிவில் நம்பிக்கை கொள்வதில்லை; ஆனாலும், இவ்வுணர்ச்சி ஏன் தோன்றுகின்ற தென்பதும் அறியக்கூடவில்லை. இவ்வெண்ணத்தைத் தொலைக்க யான் எவ்வளவோ முயன்றும் அஃது என்னைவிட்டுச் சிறிதும் நீங்கியபாடில்லை. என்றோ ஒரு நாள் இம் மரக்கலம் அமிழ்ந்திவிடப் போகிறதென்னும் உணர்ச்சி வரவர உரம்பெற்றது. அம் மரக்கலத்துப் பொறியை இயக்கும் துரைமகனாரோடு யான் நேயங்கொண்டமையால், அவர் அமர்ந்திருக்கும் அவ்வேலையை விடுத்து இனிக் கடல்மேற் செல்லாதிருக்கும்படி அவர்க்கு அறிவுரை மொழிந்தேன், அவரும் என்சொற் கேட்டு அவ்வேலையை உடனே விட்டு நீங்கினமையால் உயிர் பிழைத்தார். ஏனென்றால், எனக்கு அம் முன் உணர்வு தோன்றிய சிறிதுகாலத்தி லெல்லாம் அக் கப்பல் கடலுள் அமிழ்ந்திப் போயிற்று.

இங்ஙனமே, ஒருமாது இருப்புச் சுரங்கத்தில் வேலை செய்துவந்த தன் கணவனை ஒருநாள் வேலைக்குச் செல்லாதபடி தடை செய்தாள். எதனாலெனின் அன்றைக்கு அவ்விருப்புச் சுரங்கத்தின் மேற்கூரையின் ஒரு கூறு இடிந்து விழுமென்பது அம்மாதின் உள்ளத்திற் பட்டது. மற்று, அவள் கணவனோ அவள் சொற் கேளாமல் வழக்கம்போல் அன்றைக்குத் தன் அலுவல்மேற் சென்றான். ஐயகோ! அன்றைக்கு அவன் மனைவி சொல்லிய படியே, அச்சுரங்கத்தின் ஒரு மேற்பகுதி இடிந்துவிழ, அதன்கீழ் வேலை செய்து கொண்டிருந்த அவன் அதன்கீழ் அகப்பட்டு உடல்நசுங்கி இறந்து போனான்!

இன்னும், மேல்நாட்டிற் பெரும்போர் நடந்த காலத்திற் காயம்பட்ட மறவர்க்குப் பேருதவி செய்தவரும், விரிவுரை நிகழ்த்துவதிற் பெரும்புகழ் படைத்தவருமான ஓர் ஐரோப்பிய மாதரார் ஒருகாற் புகைவண்டியிற் போய்க்கொண்டிருக்கையிற் சடுதியில் ஓர் ஒலி தோன்றி, அவர்தாம் அவ்வண்டியில் அமர்ந் திருந்த அப்பக்கத்தைவிட்டுக் குதித்து வேறுபக்கத்தில் விரைந்து சென்று அமருமாறு கற்பித்தது. அவ்வொலி எங்கிருந்து வந்த தென்பதை அவர் அறியக் கூடவில்லை. எனினும், அம்மாதரார் அவ்வொலி கட்டளையிட்டபடியே விரைந்துகுதித்து அவ் வண்டியின் மற்றொரு பக்கத்திற்போய் ஏறியமர்ந்தார். அவர் அங்ஙனம் அமர்ந்த இரண்டொரு நொடியில் எல்லாம், அவர் முன் ஏறியிருந்த அவ்வண்டியின் பக்கம் நொறுங்கி அழிந்தது. மற்று, அம்மாதரோ அத் தெய்வவொலி கற்பித்தவண்ணம் உடனே நடந்தமையால், உயிர் தப்பி நெடுநாள் நன்கு உயிர் வாழ்ந்தாரென்பது.

இன்னும், ஒன்பதாண்டுள்ள ஒரு சிறுமி தன் சிறிய தங்கையுடன் மாலை வேளையிற் பழைய ஓர் அரண்மனை யினுள்ளே உலாவித் திரிந்துகொண்டிருந்தனள். மாலை வெளிச்சம் வரவர மங்கிக்கொண்டு வருகையில் நீருஞ் சேறும் நிறைந்த ஒரு படுகுழி யோரமாய் அவ்விருவரும் வந்து விட்டனர். இருண்ட நேரமாய் இருந்தமையால், அப்படுகுழி அங்கிருப்பதை அவர்கள் அறியவில்லை; இன்னும் ஒரு நொடிப்பொழுது அவர்கள் நடந்திருந்தால் அப்பள்ளத்தின்கண் வீழ்ந்து மிழ்ந்திப் போயிருப்பர். ஆனால், நான்கு திங்கட்குமுன் காலஞ் சென்ற அவர்கள் அன்னையின் குரலொலியானது தோன்றி, அவ் விருவரையும் பெயர் சொல்லி யழைத்து அவர்கள் அப்பள்ளத் தண்டை செல்லாமல் தடைசெய்தது. அவ்வாறு தோன்றிய தந் தாயின் குரலொலியைக் கேட்டு, அவ்விருவரும் அப்பள்ளத்தின் அருகே செல்லாமல் விலகிச் சென்றமையால் உயிர்பிழைத்தன ரென்பது.

இன்னும், படைத்தலைவராயுள்ள ஒரு துரைமகனும், அவரோடு உடனிருந்து வேலைபார்க்கும் மற்றொருவருந், தாம் இருந்து எழுதும் ஒரு மேசையின் இருபக்கத்துமிருந்து பொருட் குறிப்புச் செய்து கொண்டிருக்கையில், வெளியே தாழ்வாரத்தின்

கண் எவரோ நடக்கும் அரவந் தென்பட்டது. அப்போது அவ்விருவரும், இறந்துபோன தம் மற்றொரு நண்பரை நினைந்து, "அவர் காலமாகியிராவிட்டால், அவரே இப்போது உள் வந்தாரென்று நாஞ் சொல்லல் வேண்டியிருக்கும்" என்று தமக்குட் பேசுகையில், இறந்துபோன அவர்தம் நண்பர் உண்மையாகவே உள்ளே வந்தார்; வந்து, "நான் சொல்ல வேண்டுவதுஞ் செய்ய வேண்டுவதும் ஒன்றிருத்தலால், நான் சொல்வதை நீங்கள் எழுதிக்கொள்வீர்களா? யான் இங்கிலாந்து தேயத்தைவிட்டுப் புறப்படும் முன், ஒரு கோயிலிற்சென்று என் மனைவியை மறைவாகவே மணந்துகொண்டேன்." என்று சொல்லித், தான் மணந்துகொண்ட அம்மாதின் பெயரையும் மணந்த நாளையுஞ் சுட்டிக்கூறிப், பின்னும் "என் மனைவி இப்போது அங்கேதான் இருக்கின்றனள்; எனக்கொரு மகனும் உண்டு. இவைகளை நீங்கள் தெரிந்து கொள்ளல் வேண்டும்; எனக்கு இங்கேயுள்ள சொத்தை விற்று அதற்கு வரும் பணத்தை என் மனைவிக்குச் சேர்ப்பித்தல் வேண்டும், யான் மணஞ்செய்து கொண்டதை எவரும் அறியாராதலால், இவ் வேற்பாடு செய்யப்படும் வரையில் யான் அமைதியுறுதல் இயலாது." என மொழிந்து மறைந்து போயினார். ஆவி வடிவில் வந்து அங்ஙனம் உரைத்த தம் நண்பர் உரைகளை அவ்விருவருந் தனித் தனியே குறித்துக் கொண்டார்கள். குறித்த அக் குறிப்புகளை ஒத்து நோக்க அவையிரண்டும் முழுமையும் ஒத்திருந்தன. அதன்பின் அவ் விருவரும் இங்கிலாந்து சென்று அங்கே ஆராய்ந்தவழி, ஆவிவடிவிற் போந்து மொழிந்த தம் நண்பருரைகள் அத்தனையும் உண்மையாகவே யிருந்தன. அவர் நுவன்ற வண்ணமே குறிப்பிட்ட நாளிற் குறிப்பிட்ட இடத்தில் அவர்க்கு மணம் நடந்தது மெய்தான். அவர் விரும்பியவாறே அவர்க்கிருந்த உரிமைகளை விற்றுப் பெற்ற பணத்தை அவர்தம் மனைவியார்க்குச் சேர்ப்பித்துவிட்டனர். இறந்து ஆவிவடிவில் நின்ற அவர் அங்ஙனம் வந்து தம் நண்பர் இருவர்க்கும் அச் செய்திகளை அறிவியாது போனால், அவையிற்றை எவருமே அறிதற்கு வழியில்லை யாய்ப் போம் என்பது.

இனி, இறந்துபோகும் நிலைமையிலிருந்த ஒருவர், தாம் இறந்து போகும் நாள் அண்மையில் வரத், தமக்கு அறிமுகமான மாதர் ஒருவரின் கண்ணுக்குப் புலனாக நனவிலேயே தாம் தோன்றிய வரலாற்றினை இங்கெடுத்துக் காட்டுதும்:

செல்வத்திற் சிறந்த ஒரு பெருமாட்டியும் அவர் தந்தங்கையுந் தாலதா என்னும் ஊரில் இருந்த ஞான்று, (1889 - ஆம் ஆண்டு), அவர்கட்கும் ஒரு துரைமகனார்க்கும் பழக்கம் உண்டாயிற்று. அப்போது அத் துரைமகன் எலும்புருக்கி நோய் உடையராய் அது முதிர்ந்து போன நிலைமையில் இருந்தனர். அம் மாதர்களும் அவரும் ஒரு நாட் பேசிக்கொண்டிருக்கையில், அவ் விருவரில் தமக்கையார்க்குமுன் தாங் காலமாவதா யிருந்தால், தாம் அங்ஙனங் காலமாவதை அவர்க்கு முன்னறிவிக்க முயல்வதாக அத்துரைமகன் மொழிந்தனர். இவ்வுரையாட்டு நடந்த பின் இடையிடையே அப்பெருமாட்டியாரும் அத்துரைமகனாரும் எதிர்ப்பாட்டுப் பலகாற் பேசியதுண்டு. அத்துரைமகன் கடுக்காயைப்போற் பழுப்பு நிறமான சட்டை யணிந்தவராகவே பலகாலும் உலாவிச் செல்வதை அம் மாதரார் கண்டு நகையாடுவது முண்டு. இங்ஙனம் அவர்கட்குட் பழக்கம் உண்டாகி மூன்று திங்கள் கழிந்த பின், அப்பெருமாட்டியார் இருவருந் தாலதா என்னும் அவ் வூரை விட்டுப் புறப்பட்டு, அதற்குத் தொலைவில் உளதாகிய தமதூர்க்கு வந்து சேர்ந்தனர். அங்ஙனம் வந்து சேர்ந்த சில திங்களுக்குப் பிறகு அவர்கள் அத்துரைமகனையும் அவர் தம் மனைவியையும் அறவே மறந்து போயினர். ஏனென்றால், அவர்கள் அவரை ஓர் அறிமுகமாகக் கருதினரே யல்லாமல், நெருங்கிய நண்பராகக் கருதிற்றிலர். அவ்வாறிருக்க 1890 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 12 ஆம் நாள் அம்மாதரார் இருவரும் ஒரு நாடக சாலைக்குப் போய்த் திரும்பி இரவு பன்னிரண்டரை மணிக்குத் தம் இல்லத்திற்கு வரும் வழியில், தம் நண்பர் ஒருவரைப் புகைவண்டி நிலையத்தில் விடும்பொருட்டுத், தமது குதிரை வண்டியை அவ்விடத்திற்குச் செலுத்தினர். செலுத்தி அந் நண்பரை வழிப்போக்கி விட்டுத், திரும்பத் தமது வண்டியிலேற வந்த மூத்த பெருமாட்டி பின்வருமாறு வரைகின்றார்:

"புகைவண்டி நிலையத்திலிருந்து யாங்கள் திரும்பி வருகையில், எங்கள் வேலைக்காரன் எங்கள் வண்டியைப் பார்த்துக் கொணர, முன்னதாகச் சென்றான். ஆகவே யாங்கள் படியண்டை வந்ததும், வண்டி எங்களுக்காக வந்து காத்துக் கொண்டிருத்தலைக் கண்டோம். என் தங்கை முற்பட்டு ஏறிவண்டியினுள்ளே அமர்ந்தனள். யான் மெதுவாகப் படி வழியே இறங்கி வந்தமையால் அவள் எனக்காகக் காக்க

வேண்டியவளானாள்; வேலைக்காரனும் வண்டிக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டிருந்தனன். யான் அவ்வண்டிப் படிமேல் ஒரு காலைத் தூக்கிவைத்ததுந் திடுமெனத் திகைப்புற்று, வண்டியினுள்ளே நுழையாமல் தடைப்பட்டு நின்றேன். வண்டியினுள்ளே இருளாயிருந்தது. என்றாலும், அப்போது யான் நோக்கிய அவ்விடத்திற் காணப்பட்ட ஒரு புதுமையான வெள்ளிய ஒளி மங்கலாயிருப்பினுங் குறிப்பிட்ட இடத்தில் அது மிகவுந் தெளிவாய் ஒளிர, அதனிடையே ஒரு முகத்தின் வடிவம் என் தங்கையின் முகமாய் அவளை நோக்கிய படியாய் மெல்லிதாய்த் துலங்கித் தோன்றுதலைக் கண்டேன். இத் தோற்றம் நின்ற நேரம் ஒரு நொடிப்பொழுது தான் இருக்கும்; ஆயினும், எனக்கு அறிமுகமாகக் காணப்பட்ட அதன் ஒவ்வோர் அமைப்பும் யான் செவ்வையாகவே கண்டறியத் தக்கதாயிருந்தது. அம் முகத்தின் கூர்த்த சாயலும், ஒரு பக்கத்திற் சிறிது வகிர்ந்த குஞ்சியும், எடுப்பான மூக்குந், திருத்தமான மோவாயும், அதன்கட் கலகலப்பாய் முளைத்துள்ள சிறு பழுப்பு நிறமான தாடியும் நன்கு விளங்கித் தோன்றின. மற்றைக் காலங்களில் அத்துணைத் தெளிவாய் விளங்கக் காட்டுதற்குப் போதாத அம் மங்கல் ஒளியிற்றோன்றிய அப் புது வடிவத்தின் நிறங்களை அந்நேரத்தில் யான் நன்றாய்ப் பகுத்தறிய வல்லளானது தான், இப்போது யான் அதனைப்பற்றி நினைக்கையில் ஒரு புதுமையாக என்னுளத்திற் படுகின்றது. அவ் வடிவின் தலைமேல் தொப்பியில்லை; ஆனாலுந், தெற்கே யுள்ளார் அணியும் உச்சிச் சட்டையினை யொப்பதொன்றே அதன்மேல் இருந்தது; அதன் நிறங்கடுக்காய் நிறத்தைச் சிறிது ஒத்திருந்தது அவ்வடிவம் முழுதும் மிக்கதோர் இளைப்பு வாய்ந்து மெலிந்திருந்தது. எங்கள் வேலைக்காரன், யான் வண்டிக்குள் நுழையாமற் கற்சிலைபோற் படிமேல் நிற்றலைக் கண்டு, இறும்பூதுற்றவனாய் எனது பாவாடையின் கீழ் விளிம்பு என் அடிக்கீழ் அகப்பட்டதுபோலு மெனக்கருதி, என்னைக் கைகொடுத்தெடுத்து அவ் வண்டியினுள்ளே அமரவைத்தான். யான் என் தங்கையின் பக்கத்தே அமர்ந்ததும், 'இஃது உண்மையிலே நமது வண்டிதானா?' என அவளைக் கேட்டேன்; ஏனென்றால், ஒரு புதிய ஆடவன் என் தங்கையின் எதிரே உட்கார்ந்திருத்தல் கண்டு என் உள்ளம் அவ்வளவு கலங்கியுணர்வழிந்தது. மெய்யாகவே ஓர் ஆண்மகன் அங்கே

உட்கார்ந்திருந்தனனாயின், என் தங்கையாவது வேலை யாளாவது அங்ஙனம் அவர்க்கெதிரே வாய்பேசா திருத்தல் இயலாதே யென்பது அந் நேரத்தில் என் மனத்திற்குத் தென்படவில்லை. யான் உட்கார்ந்த பிறகு அங்கே ஏதொன்றுங் கண்டிலேன். ஆகவே, என் தங்கையை நோக்கி 'உனக்கெதிரில் நீ ஏதொன்றுங் காணவில்லையா?' என்று வினவினேன். அதற்கவள், 'ஏதொன்று மில்லை; நல்லது, நீ வண்டியில் ஏறுகையில், இது நமது வண்டிதானா? எனக் கேட்கும்படி செய்தது எது?' வெனக்கேட்டு நகையாடினாள். அதன்மேல் யான் கண்ட அத்தோற்றத்தை மேலே மொழிந்தபடி அவட்கு விரிவாய் எடுத்துரைத்தேன். 'ஓ, அவ் அறிமுகமான முகமும், ஒரு பக்கத்தில் வகிர்ந்த குஞ்சியுங், கடுக்காய் நிறச் சட்டையும் நாம் எங்ஙனே பார்த்தோம்? நீ குறிப்பித்தபடி யுள்ளது இங்கொன்றும் இல்லையே' என அவள் கூறினள். யாங்கள் எவ்வளவோ அதைப்பற்றி நினைவு கூர்தற்கு முயன்று பார்த்தோம், ஏதொன்றுங் கிடைக்கவில்லை. பின்னர் நாங்கள் வீடு போய்ச் சேர்ந்தவுடன் எங்கள் அன்னையார்பால் அத் தோற்றத்தைப் பற்றிச் சொன்னோம். யான் சொன்ன குறிப்புகளிலிருந்து எங்கள் அன்னையார் அத்தகையதொரு முகத்தை ஏதோ ஒரு வகையாய்ச் சிறிது நினைவு கூர்ந்தார். மறுநாள் மாலையில், எங்களுக்குப் பழக்கமான ஓரிளைஞர் எங்களைக் காணவந்தார். அவருக்கும் அந் நிகழ்ச்சியை அறிவித்தோம். அதைப்பற்றி யாங்கள் எல்லேமும் நெடுகப் பேசியும் ஏதும் உண்மை தெரிந்துகொள்ளல் கூடவில்லை. யான் கண்ட அம்முகத்தைப் போல்வதொரு முகம் எனக்குப் பழக்கமான முகங்கள் பலவற்றுள் ஒன்றுதான் என்பதை யான் நன்கு நினைவுகூர்ந்தேனாயினும், எப்போது எங்கே எனவும், யான் கண்ட அத்தோற்றத்திற்குரிய ஆண்மகனின் உண்மையான பெயர் எது வெனவும் யான் நினைந்தறியக் கூடவில்லை. இங்ஙனமே அடுத்தடுத்து மறந்துவிடும் எனது நினைவைக் கொண்டு அதனைத் தெரிந்து கொள்ளக்கூடாதவ ளானேன். பின்னர்ச் சில நாட் சென்று, நாங்கள், எம்மை முன்னே காணவந்த இளைஞரின் பாட்டியாரைப் பார்க்கப் போனோம். எம்மைக் கண்டதும் அந்த அம்மையார், 'தாலதா ஊரிலிருந்து எவ்வளவு துயரமான செய்தி எனக்கு வந்த தென்பதை நீங்கள் அறிவீர்களா? என்னும் பெயர் பூண்ட அத்துரைமகனார்

இறந்துபோனார் ஆனால், அதன் வரலாறு முழுமையும் எனக்கு எட்டவில்லை.' என்றனர். அச்செய்தி கேட்டதும் யானும் என் தங்கையும் ஒருவரை யொருவர் பார்த்தோம் அத்துரைமகன் பெயர் கேட்ட பின்னர்; அக் கூர்த்தமுகச் சாயலுங் கடுக்காய் நிறச் சட்டையும் உடையவர் இன்னா ரென்பது புலனாயிற்று. யான் அத் தோற்றத்தின் கூறுபாடுகளை விரித்துச் சொன்னது நல்லதாயிற்று; ஏனென்றால், என்னைப் போலவே என் தங்கையும் அப்பெயர் சொல்லக் கேட்டவளவில், யான் கூறியது இன்னா ரென்பதைத் தெரிந்துகொண்டாள். அவ் வம்மையாரின் பேரர் அப்போது வீட்டினுள்ளே வரக்கண்டு, அத்துரைமகன் இறந்துபட்ட நாளைப் புதினத்தாள்களிலிருந்து திட்டமாய்த் தெரிந்துரைக்கும்படி அவரை வேண்டிக் கேட்டேன். மார்ச்சுத் திங்கள் 14 ஆம் நாளே, அதாவது யான் கண்ட தோற்றத்திற்கு இரண்டு நாட் பிற்பட்டதே, அவர் செய்தியைச் செவ்வையாய்த் தெரிதல் வேண்டித் தாலதாவிலுள்ள நண்பர்கட்கு யான் எழுத, அத் துரைமகன் நவம்பர் 24 ஆம் நாளிலிருந்து படுக்கையிலேயே கிடந்தனரென்றும், அப்போதிலிருந்து அவர் மிகவும் வலி குறைந்த நிலைமையி லிருந்தனரென்றும், ஆனாலும் அவர் ஆழ்ந்த துயிலில் நீளக் கிடந்து வந்தமையால் அவர் காலமான கடைசி இரவு வரையில் அவர் பிழைத்துக் கொள்வரென்னும் நம்பிக்கையே யிருந்த தென்றும் விளக்கமான செய்தி எனக்குக் கிடைத்தது. அத் துரைமகன் என் தங்கைக்கு முன்னே தோன்றுவதாக உறுதிமொழி புகன்றிருந்தும் பிறகு அவர் என்னுடைய கண்களுக்கே தோன்றலானது எங்கட்கு மிக்கதோர் இறும்பூதினை விளைவித்தது. ஆனாலும், இப்போது மொழிந்த இத்தோற்றத்திற்கு முன்னரே பலகால்யான் பல வியத்தகு நிகழ்ச்சிகளைக் கண்டுள்ளேன் எனக்கூற வேண்டியவளா யிருக்கின்றேன். என்றாலும், இப்போது கண்ட உருவத்திலே தான் யான் ஒவ்வோர் உறுப்பினையும், முகத்தின் சாயலையும், உடையின் நிறத்தையுந் தெளிவுறக் கண்டேன்." என்பது.

இவ்வாறு அம் மாதரார் கண்ட உருவெளித் தோற்ற மானது, அதற்குக் காரணரான துரைமகனார் இறந்துபடுதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே தோன்றி, அவரது சாக்காட்டினை அவர்க்கு முன்னறி வித்தமை நினைவிற்

பதிக்கற்பாற்று. தாம் இறந்து போதற்கு முற்பட்டே அவர் அவர்க்குத் தோன்றுவதாகக் கூறிய உறுதிமொழி அவரது நினைவின்கண் உருத்து நின்றமையால், அது பிழைபடாமல் அவரது உருவினை அவரது கண்முன்னே தோற்றுவிப்ப தாயிற்று. அத் துரைமகனார் தாங் கூறிய சொற்படியே அவ்வம்மையாரின் தங்கைக் கெதிரே தோன்றியுந், தங்கையார் தெளிவுக் காட்சி (Clairvoyant vision) உடையவரல்லாமையால் அவர்க் கது புலனாகாது நின்று தெளிவுக் காட்சியுடையரான அவர் தந் தமக்கையார்க்கே புலனாவதாயிற்றென்க.

இன்னுங், கல்லூரியிற் கலைபயின்றுகொண்டிருந்த மாணவர் ஒருவர்க்குத் தொலைவிலிருந்த அவர்தந் தந்தையார் தாஞ் சாகும் முன் தமது நிலைமையினை முன்னறிவித்த வரலாறு மிகவும் வியக்கற்பால தொன்றாயிருத்தலின், அதனையும் இங்கேயெடுத்துக் காட்டுதும்:

ஒரு கல்லூரி மாணவர் ஓர் இரவு சிறிது முன்னதாகப் படுக்கைக்குச் சென்றார்; சென்றவர் தாம் இருந்து கல்விப் பயிற்சி செய்யும் அறையின் வெளிக் கதவைப் பூட்டிக் கொண்டு, அதற்குந் தமது படுக்கை யறைக்கும் நடுவிலுள்ள கதவைமட்டுந் திறப்பாக விட்டு வைத்தார். அவர் கலைபயிலும் அறையின் நடுவேயிருந்த பெரிய கணப்புச் சட்டியின் தீ கொழுந்துவிட்டு எரிந்தமையால், அவ் வறையினுள்ளிருந்த எல்லாப் பொருள் களும் பட்டப்பகல் வெளிச்சத்திற்றோன்றுதல் போல் நன்கு விளங்கித் தோன்றின. அப்போது இரவு பத்தரை மணி; அம் மாணவரும் ஏதுந் தடையின்றி நெடுந்துயில் கொள்ளும் விருப்பத்துடன் படுக்கைமேற் சென்று படுத்தார்; அந்நேரத்தில் இரண்டறைகளின் நடுவேயுள்ள நிலையண்டை நிறைந்த அத் தீ வெளிச்சத்து மினுமினுப்பின்கண் தந் தந்தையாரின் உருவம் நிற்றலை அவர் கண்டார்;. கண்டதும் உண்டான இறும்பூதினால் அவர் சிறிது நேரம் வரையில் அசைவின்றிக் கிடந்தார்; துயரமும் ஆவலுங் கொண்ட அவ்வுருவத்து முகத்தின் மேல் அக் கணப்புத் தீ வெளிச்சம் படுதலை அவர் சிறிது நேரம் உற்றுப் பார்க்கையில், அவ்வுருவந் தன் கையை உயர எடுத்து, அவரைத் தன்பால் வருமாறு குறிசெய்து அழைத்தது. அதனைக் காண்டலும், அவரைத் தம்வயப்படுத்தி யிருந்த திகைப்புந் திகிலும் அகன்றன;

உடனே அம் மாணவர் படுக்கையினின்றுங் கீழே குதித்து அந்நிலைக் கதவண்டை பாய்ந்தார்; ஆயினும், அவர் அங்கு நெருங்கும் முன்னரே அவ்வுருவம் மறைந்து போயிற்று.

அதனால் அவர் திடுக்கிட்டவராய்த், தாம் இருக்கும் அறையினையும் படுக்கும் அறையினையும் அக்கக்காய்த் தேடிப் பார்த்தார்; தம்மைத் தவிர வேறெவரும் அங்கில்லை யென்பது அவருள்ளத்திற்குத் தேற்றமாயிற்று; ஏனென்றாற், புறத்தியான் ஒருவன் அங்கே புகுந்து ஒளிந்திருப்பதற்கு இடமேயில்லை. வெளிக்கதவோ அவர் தாம் முன் விட்டபடியே செவ்வையாகப் பூட்டப்பட்டிருந்தது! அது வல்லாமலும், அங்குத் தோன்றிய உருவமோ தப்பாமல் தெளிவாக அவர் தந் தந்தையாரதேயாகும்; அவ்வுருவின் முகத்திற் புலனான ஓர் ஆவற் குறிப்பைத் தவிரச், சில கிழமைகளுக்கு முன் அம் மாணவர் தாம் கடைசியாகப் பார்த்து வந்தபடியே தான் அது தோன்றிற்று. தன்னுடன் பயிலும் மாணவர் எவரேனும் அங்ஙனங் கேலியாக வந்து ஏமாற்றினாரென்று கொள்வதற்கும் இடமில்லை. முடிவாக ஏதோ ஒரு பொய்யான தோற்றத்தில் தமது மனம் அகப்பட்டிருக்க வேண்டுமென அவர் எண்ணினார்; ஆனாலும், இயற்கையாய்த் தோன்றிய அவ்வுருவமும், அதன் முகத்தின் மேற்றுளங்கிய தீயின் ஒளியும் அவரது நினைவின்கட் பதிந்து தோன்றா நிற்கையில், அதனை அங்ஙனம் பொய்த்தோற்ற மென முடிவு செய்வதும் அவர்க்கு இடர்ப்பாடாய் இருந்தது; ஆகவே, அம் மாணவர் தமது மனத்தை மறுபடியும் அமைதிப் படுத்திக்கொண்டு துயில்கொள்ளச் சென்றார்.

ஆனால், அவர் கொண்ட மன அதிர்ச்சியானது அவர்க்குந் தூக்கம் பிடியாவாறு செய்தது; ஒரு மணி நேரத்திற்கு மேலாக அவர் சுவரின்மேல் ஆடிக்கொண்டிருந்த நிழல் களையே உற்று நோக்கிக் கொண்டிருக்க, அதன் பின் அவர் தமக்குத் தூக்கம் வருதலை யுணர்ந்தார். ஆனால், உள்ளபடியே அவர் தூக்கத்திற் சென்றனரோ, அல்லது தூங்கும் நிலைக்கு நெருங்கினரோ என்பது அவராற் சொல்லக் கூடவில்லை. எனினும், மறுபடியும் அவ்வுருவம் அந்நிலைக் கதவண்டை தோன்றவே, அவர் திடுக்கிட்டு முற்றிலும் விழித்துக் கொண்டார்; அவ் வுருவின் முகம் முன்போலவே ஆவல் நிரம்பிய

குறிப்புடையதாகவும், அது முன்னையைவிட அவர் தம்மை மிக்க விருப்பத்துடன் கைகாட்டி யழைப்பதாகவுங் காணப்பட்டது. இம்முறை அது தம்மைத் தப்பிப் போய்விட விடுதல் ஆகாது என்னுந் தீர்மானம் உடையராய், அம் மாணவர் தமது படுக்கையிலிருந்து ஒரே குதியாய்க் குதித்து, அக் கதவண்டை சென்று அவ் ஆவி யுருவினை வலுவாய்ப் பிடித்தார். ஆனால், மறுபடியும் அவர் ஏமாற்றமே யடைந்தார். அதற்கு இரண்டு முழத்தொலைவில் அவர் சென்றபோதும், முதற்றோன்றிய உருவினையே யொத்திருந்த அஃது அவரது கையிற் பிடிபடாமற் போகவே, அவர் வெறு வெளியையே பிடித்து ஏமாந்தவரானார். திரும்பவும் அவ்வறைகளினிட மெல்லாம் அவரால் ஆராய்ந்து பார்க்கப்பட்டன. அது மெய்யாகவே மக்கள் யாக்கையிற் றோன்றிய தொன்றாயிற் பூட்டப்பட்டிருக்கும் அவ்வறைகளை விட்டு அது வெளியே செல்லுதலாவது அல்ல தவற்றுள்ளே ஒளிந்திருத்தலாவது இயலாது.

இளைஞர் பலரைப் போலவே, இம்மாணவரும் ஆவிவடிவங்களில் ஏறக்குறைய நம்பிக்கை யற்றவரா யிருந்தனர்; ஆகவே, தாங் கண்ட தோற்றத்தால் மிகவுந் துணுக்குற்றனரேனுந், தமதுடம்பின்கட் புலப்படா துள்ள ஒரு நோய் காரணமாய் உண்டான ஒரு மனக் கற்பனையே அத்தோற்றத்திற்கு ஏதுவாகுமென்று தமக்குள் ஒரு முடிவு செய்து கொண்டார். அதன் பின் அவர் தமது நெற்றியைக் குளிர்ந்த தண்ணீர் கொண்டு கழுவிக் குளிரவைத்து, ஏதோ மூளையின் பிசகாற் காணப்பட்ட அப்பொய்த் தோற்றத்தைப் பற்றித் தாம் நினைத்தலாகா தென உறுதிசெய்து கொண்டு திரும்பவுந் துயில்கொளச் சென்றார், அவர் அங்ஙனந் துயிலச் சென்ற போது அவரது கல்லூரிக் கடிகாரங்கள் நள்ளிராப் பொழுதை மணியடித்து அறிவித்தன. தாம் பெறுதற்கு மிக விழைந்த துயிலையடைதற்கு அவர் எவ்வளவோ முயன்றனர்.

கடைசியாக அவர் தாம் வேண்டியபடியே துயிலிற் சென்றார்; ஆனால், தாம் உணர்விழந்து கிடந்த நேரம் மிகச் சிறிதாகத்தான் இருக்கவேண்டுமென்பது அவர்க்குப்பட்டது; ஏனென்றால், அவர் மறுப்படியுந் திகில் கொண்ட நெஞ்சினராய்ச் சடுதியில் விழித் தெழுந்தார். அவர் கலை பயிலும்

அறையிற் கணப்புச்சட்டியில் எரிந்து கொண்டிருந்த நெருப்பு இப்போது குறைவாய் எரிந்தது; தாந் தூங்கச் சென்ற பொழுது கிளர்ந்து விளங்கிய ஒளி இப்பொழுதுமங்கலாகிச் சிவந்த வெளிச்சத்தைச் சுவர்களிலும் மச்சிலும் படுவித்தது. அதே நிலைக்கதவண்டை அவ்வெளிச்சத்தின் நடுவே அவர்தந் தந்தையின் உருவம் மறித்தும் வந்துநின்றது. இம்முறை அதன் முகக்குறிப்பிலுஞ் செயலிலும் ஒரு வேறுபாடு விளக்க மாய்த்தோன்றியது. முன்னே அத்துணைத் தெளிவாய்க் காணப்பட்ட ஆவற்குறிப்பு மாறிக், கைவிட்ட துயரக் குறிப்பே இப்போது மிகுந்து காணப்பட்டது. முன்னே உயர எடுத்து அம்மாணவரைத் தம்பால்வருமாறு அழைத்த கைகள் இப்போது அவரைப் பின்னே செல்லும்படி மெதுவாக அசைத்துக் குறிசெய்தன. முன் போல் அது சடுதியிலே மறைந்து போகாமல், அதன் உருவம் வரவர மங்கலாகிச் சுவரின் மேற்பட்ட செவ்வொளியிற் சிறிதுசிறிதாக மறைவதுபோற் றோன்றியது.

அவ்வாறது மறைந்துபோய பிறகுதான் அவ்விளைஞர் தம்முடைய கைகளை அசைக்க இடம்பெற்றார்; உடனே அவர்தமது கைக்கடிகாரத்தை இழுத்து, அப்போது நேரம் என்னென்று நோக்கினார். இரண்டு மணி அடிக்கப் பத்து நிமிடங்கள் இருந்தன. அவர் உடனே தமது வீட்டுக்குச் செல்லத் தீர்மானஞ்செய்தும், அந்நேரத்தில் அங்குள்ளாரெவரையுந் துயிலினின்று எழுப்புவதும், வீட்டுக்குப்போக வண்டி பிடிப்பதும் இயலாதிருந்தன. தொலைவிலுள்ள ஒரு நாட்டுப்புற ஊருக்கு இவ்விளைஞரின் தந்தையார் சமயகுருவா யிருந்தனர். இவர் சில கிழமைகளுக்கு முன் தம் தந்தையாரைப் பிரிந்து வருகையில் அவர் மிக்கதோர் உடம்பின் நலம் உடையராவே யிருந்தனர்; அதனாலும், அவரைப் பிரிந்து வந்த பிறரு கலவரங் கொள்ளத்தக்க செய்தியொன்றும் வந்திலாமையினாலும் இவர் தம் தந்தையைப்பற்றிப் பிறிதாக நினைக்க இடமேயில்லை. என்றாலும், அடுத்தடுத்துத் தோன்றிய அவ்வுருவத்திலும், இயற்கை நிகழ்ச்சிக்கு வேறாகத் தென்பட்ட அத்தோற்றத்திலும் ஏதேனும் ஓர் உண்மை யிருக்கவேண்டுமென்பது அவருளத்திற் பதிந்ததாயினுந், தம் கண்களால் தாமே நேரிற் சென்றுகண்டால் அல்லாமல், தம் தந்தையார் செம்மையாய் உயிரோடிருக்கின்றா ரென்பதைப் பற்றித் தமக்கு அமைதி உண்டாகாதென

உணர்ந்தார். ஆகவே, அவ்விளைஞர் திரும்பவுந் தூங்க முயன்றிலர்; விடியற் காலத்தைக்கண்டதுந், தமது கல்லூரித் தலைமையாசிரியரிடஞ் சென்று, தாம் இரவிற்கண்ட நிகழ்ச்சி களைச் சொல்லி, அவற்றால் தம்முள்ளத்தெழுந்த அச்சம் அகலுமாறு தாம் தமது வீட்டுக்குக் காலந்தாழாது உடனேசெல்ல விடை தருகவெனவேண்டி விடைபெற்றனர்.

மிகவிரைந்து சென்ற பயணத்தால் அம்மாணவர் நேற்றிரவிற்கண்ட நிகழ்ச்சிகளைப்பற்றிய நினைவின்வலிவு சிறிது குறையலாயிற்று, மாலைக்காலத்து நிழல் தோன்றுகையில் தந் தந்தையார் இருக்குந் தெருவின்முனைக்கு அவர் வந்து சேர்ந்தார்; தம் இல்லத்தவர் திடீரெனப் போந்த தமது வருகையைக் கண்டு எவ்வளவு திகைப்புக் கொள்வரோவென எண்ணினார்; ஆனால் அவர் வீட்டண்டைசென்றதும், அதன் சாளரத்திரைகள் தொங்க விடப்பட்டிருத்தல் கண்டு உளந்திடுக்கிட்டார். மசங்கல் வேளையாயிருந்தாலும், அந்நேரத்து வெளிச்சத்தையுந் தந் தந்தையார் விரும்புவதுண்டாகையால், முற்றும் இருள் சூழ்ந்தாலல்லாமல் அவர் மெழுகுதிரி விளக்கேற்ற விடுவ தில்லையே என்று அவ்விளைஞர் நினைக்கவே அவருள்ளத் தெழுந்த நடுக்கமானது, அவர் சிறிது நேரம் வரையில் வாயிற் கதவைத் தட்டவொட்டாமல் தடை செய்தது. கடைசியாக அவர் மனத்தைத் தேற்றிக் கொண்டு கதவைத் தட்ட, வேலைக்காரன் ஒருவன் போந்து கதவைத் திறந்தனன். அவன் அவ்விளைஞர்க்குச் சிறுபருவந் தொட்டுத் தெரிந்தவன்; உடனே அவன் முகத்திற்றோன்றிய குறிப்பைக் கண்டதும் அம்மாணவர் கொண்ட அச்சம் மெய்யெனத்தோன்றியது.

அவ்வேவலன், “ஐயோ! தம்பி, நீங்கள் மிகவும் பிந்திப் போனீர்கள்! நேற்றிரவே நீங்கள் வந்திருக்க லாகாதா! ஐயா போய்விட்டாரே! அவர் நோயாய்ப் படுத்ததுஞ் சொல்லிய சொல்லெல்லாம் உங்களைப் பார்க்க அவர் எவ்வளவு ஆவல் கொண்டாரென்பதே! நேற்றிரவு பத்துமணிக்குத்தான் அவர்க்கு இசிப்பு உண்டாயிற்று; அஃதுண்டாகி அரைமணிநேரங் கழித்து, அவர் சிறிது பேசக்கூடியவர் ஆனதும், அவர் முதலிற்சொன்னது; ‘என் மகனை வருவியுங்கள்; இன்னும் ஒருகால் என் மகனை நான் பார்க்கவேண்டும்’ என்பதே. பொழுது விடிந்தும் ஓர் ஆளை

விடுப்பதாக நாங்கள் சொல்லினோம்; ஆனால், நாங்கள் சொல்லியதை அவர் கேட்டதாகத் தெரியவில்லை; ஏனென்றால், அவர் உணர்விழந்து பின்னே சாய்ந்து விட்டார். மறுபடியும் பதினொன்றே முக்கால்மணிக்கு அவர் சிறிதுநேரம் உணர்வுற்றெழுந்தார்; எழுந்ததும் அவர் சொல்லியதெல்லாம், 'என் மகன் இப்போது இங்கே இருக்க வேண்டுமென்று யான் எவ்வளவு ஆவல் கொள்கின்றேன்!' என்பதேயாம். அதன்பிறகு அவர் இறந்து போகுந் தறுவாயில் - அப்போது இரண்டு மணியடிக்கப் பத்து நிமிடங்கள் இருந்தன. அவர் தம்முடைய கண்களைத் திறந்து மிகுதியாய்ப் பேசுதற்குக் கூடாதிருந்தாலும், எங்களை யெல்லாம் இன்னாரென்று தெரிந்து கொண்டவராய் மெல்லப் பேசியதாவது; 'நான் போகின்றேன்; இன்னும் ஒருகால் என் அருமை மகனைக் கண்டு பேச விழைந்தேன்; ஆனால் அவனைக் காணும் வரையில் நான் உயிர்த்திரேன். ' என்பதே யாகும். உடனே, அவர் தூக்கத்திற் செல்வார்போல் மிகவும் அமைதியாகவே உயிர்விட்டனர்." என்று கண்ணீர் சிந்திய படியாய்ச் சொன்னான்.

பாருங்கள்! உண்மையாக நேர்ந்த இத்துயர நிகழ்ச்சியில், அக்கல்லூரி மாணவரின் தந்தையார் தாம் பிணிப்பட்டுத் படுத்த இரவிற் பத்துமணிக்குப்பிற் குறிப்பாய்ப் பத்தரை மணிக்கும், அதன்பிற் பன்னிரண்டு மணிக்கும், அதன்பின் இறக்குந் தறுவாயில் இரண்டுமணி யடிக்கப் பத்து நிமிடங்களுக்கு முன்னுந் தம் மகனைப் பார்த்தற்கு விழைவுற்று உணர்வு கூடிய மூன்று முறையிலுந், தொலைவிற் கல்லூரி விடுதியிலிருந்த அவர் தம் மகனார்க்கு அந்நேரங்கள் தவறாமல் அவர்தம் ஆவி வடிவங்கட் புலனாகி அவரை இருமுறை தம்மாட்டு வருமாறு அழைத்து, மூன்றாம் முறை அம் மகனார் அதனைத் தெரிந்து வராமை கண்டு, உளந் தளர்ந்து, அவரைப் பின்னே போகுமாறு கைக்குறி காட்டினமை வியக்கற்பாலதொன்றா யிருக்கின்றதன்றோ? அவர் அங்ஙனம் மூன்று முறை தம்மகனார்க்கு முன்னே தோன்றியது ஆவிவடிவா? அல்லது நினைவுவடிவா? என்று ஆராயற்பாற்று. அஃது அவரது ஆவிவடிவேயாயின், அவர் தமது பருவுடம்பை நீத்த பின்னன்றி அது தோன்றுதல் இயலாது. மற்றஃது அவரது நினைவுவடிவேயாயின், அஃதுஅவ்வாறு தோன்றுதல் இயலும். அவர் மூன்று முறையுந் தம்மகனைப் பார்க்க விழைந்து

நினைத்தது உயிரோடிருக்கையிலே யாகையால், அவரது நினைவின் உறைப்பே அவரது உருவினை அவர்தம் மகனார் கட்புலனெதிரே காட்டுவதாயிற்று. உடம்பு நல்ல நிலைமையி லிருக்கும்போது மக்கள் நினைவு ஐம்புலன்களின் வழிச்சென்று சிதர்ந்து போகுதலாலும், அன்றி யங்ஙனம் புறத்தே சிதர்ந்து போகாவழியும் அது புலன் வழிப்புகுந்த உருவங்களிலும் அவற்றைப்பற்றிய எண்ணங்களிலும் ஈடுபட்டுச் சிதறி விரைந்து இயங்குதலாலும் அந்நிலையில் ஒருவரது நினைவு முனைத்து நின்று அவரது வடிவினைப் பிறரது கண்ணுக்குப் புலப்படுத்த மாட்டாது. உடம்பு நன்னிலையிலிருக்கும்போதுந் தம துருவினைப் பிறர்க்குப் புலப்படுத்துவார் சிலர் ஆங்காங்கு உளராலெனின்; அவர் ஆற்றாமையினாலாவது நிறைந்த அன்பினாலாவது ஒரோவொருகால் மன வொருமை கை கூடப் பெறுதலால், அச்சில நேரங்களில் மட்டுமே தம்மையறியாமலே தமதுருவினைப் பிறர்க்குப் புலப்படுத்தா நிற்பர். இன்னுந், தவத்தான் மனந்தூயராய் நினைவை யொருவழிப்படுத்தி அப்பழக்கத்திற் பெரிது முதிர்ந்தார்க்கு, அவர் வேண்டிய காலங்களிலெல்லாந் தமதுருவினைப் பிறர்க்குப் புலப்படுத்துந் திறந்தானே எளிதில் உளதாகா நிற்கும். இவரல்லாத ஏனைப் பிறரெல்லாம் இறக்குந்தறுவாயில் மட்டுமே தம்முடைய பொறி புலன் அடங்கப் பெற்று, அதனால் அவற்றினூடு செல்லுந் தமது மனத்தின் ஆட்டமும் அடங்கப்பெற்று ஒரு முகப்பட்ட நினைவுடையராவர். ஆதலால், மேற்காட்டியவாறு தமக்குரியார் பால் தமதுருவினைத் தோற்றுவிக்கும் நிலை பெரும்பாலும் இறந்து போகுந்தறுவாயில் உள்ளார்க்கே வாய்ப்பதாகின்றதென் றுணர்ந்து கொள்க. மேற்காட்டிய உண்மை நிகழ்ச்சியில், தந்தையாயினார். தம் மகன் மேற்கொண்ட பெருங்காதலே, அவர்க்கு நினைவொருமையினை மிகுவித்து, அவர்தாஞ்சாகும் தறுவாயிலிருத்தலை அவர்தம் மகனார்க்கு முன்னறிவித்தற் பொருட்டு அவரதுருவினை மகனாரெதிரே கனவிலன்றி நனவிலேயே தோற்றுவிப்பதாயிற்றென்க.

இனிச், சில நேரங்களில் ஒருவர் தாம் அறியாமையாற் செய்யப்போகும் ஒரு செயல் அவர்க்குப் பெரியதொரு கெடுதியினை விளைவிப்பதாயிருந்தால், அதனைத் தடை செய்தற்குரிய சில தோற்றங்கள் அவர்க்கு நனவிலேயே தோன்றி

அவரதனைச் செய்யாவாறு தடை செய்து விடுகின்றன. கடவுள் உதவியிலேயே மிக்க நம்பிக்கை வைத்திருப்பவர்கள் அத்தகைய தடைகள் கடவுளினாலேயே விளைவிக்கப்படுகின்றன என்பார்கள். நுண்ணுடம்பில் நிற்கும் நல்லெண்ணம் மிக்க நல்லோருடைய ஆவிகளே பருவுடம்பில் நிற்கும் நல்லார் சிலர்க்கு வரும் தீங்குகளை அகற்றுதற்கு அங்ஙனந் தடை செய்த லுண்டென்பர் வேறு சிலர். பின்னுஞ் சிலர், மக்களின் மறைந்த நினைவுகளினாலேயே நடக்கக்கூடிய இன்னோரன்ன உதவிகட் கெல்லாம், இறைவனையும் நுண்ணுடம்பில் நிற்கும் ஆவி களையுந் கொணர்ந்து தொடர்புபடுத்தல் வேண்டா செய்தலே யாமென்பர். நுண்ணுடம்பில் நிற்கும் நமதுள்ளம் எந்த நிகழ்ச்சியினையும் மறவாத தொன்றாகலின், அது முன் நடந்தவைகளையும் இப்போது நடக்கின்றவைகளையும் இனி நடப்பவைகளையும் நன்கறிந்து, பருவுடம்பில் நினைவு முனைத்துநின்று நாம் அறியாமற் செய்பவைகளையும் மறந்து செய்பவைகளையும் எல்லாந் தடைசெய்ய வல்லதாமெனக் கூறுவாரே, இஞ்ஞான்று இத்துறையில் நிரம்பக் கருத்தாக ஆராய்ச்சி செய்வார் குழுவில் மிகுந்து காணப்படுகின்றனர். ஆனாலும், இத் தடைகள் நமக்குப் புறத்தோ அகத்தோ தொலைவிலோ அண்மையிலோ எங்கிருந்து வருகின்றனவென்று வரையறுத்துச் சொல்லுதல் மட்டும் இன்று வரையில் எவராலும் இயலவில்லை. அங்ஙனம் வருந்தடைகள் நம்மறிவுக்கு எட்டா ஒரு முதலிலிருந்தே வருகின்ற வென்பது மட்டும் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாய் இருத்தலின், அந் நிகழ்ச்சிகளுள் ஒன்றிரண்டு ஈண்டு எடுத்துக் காட்டுதல் இன்றியமையாதாய் இருக்கின்றது.

ஓர் ஆங்கில அம்மையார் தமக்கு நேர்ந்த இத்தகைய தொரு நிகழ்ச்சியைப்பற்றி யெழுதிய கடிதத்தின் உண்மைபலரால் ஆராய்ந்து தழுவப்பட்ட தொன்றாகலின், அக்கடிதத்தினை இங்கே மொழி பெயர்த்து வரைகின்றோம்.

“இருபஃது ஆண்டுகளுக்குமுன் தாங்கலில் (தபாலில்) இருந்து ஒருநாள் எனக்குச் சில கடிதங்கள் வந்தன; வந்த அக் கடிதங்கள் ஒன்றிற் பதினைந்து பொன்னுக்கு நாணய முறிகள் (Bank notes) வைத்து அடக்கஞ் செய்யப்பட்டிருந்தன. அக் கடிதங்களைப் படித்துப் பார்த்தபிறகு யான் அவைகளைக் கையிலெடுத்துக்கொண்டு சமையலறைக்குட் சென்றேன்.

அப்போது யான்மட்டும் அங்கே தனியே யிருந்தேன். அக்கடிதங்களைத் திரும்பவும் படித்தபின், அவற்றை நெருப்பில் எறிதற்கு முனைந்தேன். அங்ஙனம் முனைகையில் எவரோ என் கையைப் பிடித்து அவ்வாறு செய்யவொட்டாமல் தடுத்தலைத் தெற்றென வுணர்ந்தேன். ஏதோ வேறொரு கை மெதுவாக என் கையைப் பிடித்துப் பின்னேயிழுப்பதுபோற் றோன்றியது. அதனாற் பெரிதும் வியப்புற்று என் கையை உறுத்து நோக்கினேன்; அப்போது என் கையிலிருந்தவைகள் யான் அழிக்கக் கருதிய கடிதங்கள் அல்ல; மற்று அவை நாணய முறிகளேயாகும்; கடிதங்களோ எனது மற்றைக்கையில் இருந்தன. அங்ஙன மிருத்தல் கண்டு திகைப்புற்ற யான், 'யார் இங்கே?' என உரத்துக் கூவினேன்," என்பது.

இம்மெய்ந்நிகழ்ச்சியில் நேர்ந்த தடையானது, அவ்வாங்கில மாதரார் நெருப்பில் எறியமுனைந்த கடிதங்களுடன், அவற்றுள் ஒன்றில் அடக்கஞ் செய்யப்பட்டிருந்த நூற்றைம்பது ரூபா நாணயமுறிகளும் எறியப்பட்டு வீணே அழிந்துபடாமற்காத்து. அவர்க்குப் பேருதவி செய்தமை காண்க.

இன்னும், ஒருசெல்வரது இல்லத்திற் குளியலறையில் ஒரு தண்ணீர்த்தொட்டி அமைக்கப்பட்டிருந்தது. அதில் நிரம்பி யிருக்கும் நீர் ஒரு பெரிய ஆளுக்குக் கழுத்தளவேயுள்ள தாயினும், ஒரு சிறு பெண்ணுக்கு நிலையாத ஆழமுடைய தாயிருந்தது. ஆதலால், அவ்வீட்டிலுள்ள பெரியவர்கள் தம் சிறுவர் சிறுமிகள் அவ்வறைக்குள் நுழையாதபடி அதனைப் பூட்டிட்டு வைப்பதுவழக்கம். மேலும், அவ்வறை வீட்டின் புறக்கடையில் தனியேயிருந்தமையால், அதனுள்ளிருப்பவர் வீட்டின் முன்பக்கத்தே யிருப்பவரைக் கூவியழைத்தாலும், அவ்வழைப்பொலி அவர்க்குக் கேளாது. ஆனது பற்றி, அக்குளியலறையில் அழைப்புமணியொன்று கட்டப்பட்டிருந்தது. ஈதிங்ஙனமிருக்க, அங்குள்ள ஒரு சிறுபெண் ஒருநாட்புறக் கடையில் விளையாடச்சென்றவள், அங்கே அக்குளியலறை அன்றைக்குப் பூட்டப்படாமல் திறந்திருக்கக் கண்டு, அதனுட் சென்று தான் தனியாகவே அத்தண்ணீர்த் தொட்டியிற் படிவழியே இறங்கி நீராடவிரும்பித், தன்னை வீட்டிலுள்ள பெரியவர் எவரேனும் பார்த்தால் நீராடவிடார்களென

நினைந்து, அவ்வறைக் கதவைச்சாத்தி உள்ளே தாழ்இடப் புகுந்தாள். அப்போது அவ்வறையினுள்ளே தன்னைத் தவிர வேறெவரும் இல்லாதிருந்தும், அதன் ஒரு மூலையிலிருந்து "கதவைச் சாத்தாதே, திற!" என்று ஓர்ஒலி நான்குமுறை தோன்றிற்று. அதனைக்கேட்ட அச்சிறுபெண் பெருந்திகில் கொண்டவளாய், அங்கே கட்டுண்டிருந்த மணியை உரமாக இழுத்தடித்துவிட்டுக், கீழே உணர்விழந்து விழுந்து விட்டனள். முன்பக்கத்தேயிருந்தவர்கள்அம்மணியோசைகேட்டுக் குளிய லறைக்கு ஓடிவந்துபார்க்க, அச்சிறுபெண் உணர்வின்றிக் கிடத்தல் கண்டு. அவளை வாரியெடுத்துக் கொண்டுபோய், மயக்கந்தெளிவித்து, நடந்த வரலாற்றை அவள் வாயாற் கேட்டுக், கடவுளுக்கு நன்றி செலுத்தினார்கள். பாருங்கள்! அக்குளியலறையில் அத்தெய்வவொலி தோன்றி அச்சிறு பெண்ணைத் தடைசெய்யாதிருந்தால், அவள் அங்கிருந்த தண்ணீர்த் தொட்டியில் இறங்கி நீரிலமிழ்ந்தி இறந்து போயிருப்பளன்றோ?

இன்னும், அமெரிக்காவிற் பாஸ்டன் (Boston) என்னும் பெருநகரில் 1890 ஆம் ஆண்டு ஆவணித் திங்களில் ஒருநாள் ஒரு பெரிய உணவு விடுதியில் நேர்ந்த ஒரு நிகழ்ச்சி பெரிதும் வியக்கத்தக்கதொரு தெய்வத் தடையாய் இருத்தலின் அதனையும் இங்கே வரைகுதும்:

அமெரிக்கப் பெருநகரங்களிலுள்ள உணவுவிடுதிகள் பத்துப் பதினைந்து அடுக்குகள் உடையனவாய், அகல நிகள உயரங்களில் மலைகளையே ஒப்பனவாய், உள்ளேசென்று நோக்குவார்க்குத் தம்மகத்துள்ள அரிய பெரிய அழகிய பண்டங்களில் அமைப்பாலும் மின் விளக்குகளின் ஒளியாலும் வானுலகே கீழ் இழிந்து விளங்குதலை நிகர்த்துத் திகழ் வனவாகும். அம்மாளிகைகளிற் கீழேயிருந்து மேற்செல்லு தற்கும், மேலிருந்து கீழிறங்குதற்கும் படிகள் அமைக்கப் பட்டிருந்தாலும், அவற்றின் வழியே ஏறுதலும் இறங்குதலும் நேரம் பிடிப்பதுடன் மெய் வருத்தத்தையுந் தரும். ஆதலால், மேலடுக்குகளின் மேற்செல்வார் இறங்குவார்க்கு எளிதாக உதவி செய்யத்தக்க தூக்குக் கூடுகள் (lifts) ஒவ்வோர் உயர்ந்த அடுக்கு மாளிகைகளிலும் அமைக்கப்பட்டிருக்கும். கீழே ஓரடுக்கிலுள்ள

ஓரறையில் ஒரு தூக்குக் கூட்டிற்சென்று ஒருவர் நின்று அதனை எந்த மேலடுக்குச் செலுத்த இயக்கினாரோ அந்த மேலடுக்குக்கு அஃது அவரை ஒரு நொடிப் பொழுதில் தூக்கிக்கொண்டு போய்விடும். அது நேரே கீழிருந்து மேற்செல்வதும், மேலிருந்து கீழ்ச்செல்வது மாதலால், அஃது ஏறியிறங்கும் நெடுக்கு ஓர் ஆழமான கிணறுபோல் மேலிருந்து நோக்குவார்க்குத் தோன்றாநிற்கும். மேற்குறிப்பிட்ட ஆண்டின் ஆவணித் திங்களில் ஒருநாள் அப்பாஸ்டன் நகரிலுள்ள ஒருசிறந்த உணவு விடுதியின் மேன்மாளிகையிற் றங்கியிருந்த ஒரு மாதரார், தாங் கீழ் இறங்க வேண்டியிருந்தமையால் உடனே அங்குள்ள தூக்குக்கூடு மேல்எழுமாறு மணியடித்துவிட்டு, அது வருமிடத்தின் ஓரத்திற்கு விரைந்தோடினார். ஆனால், அப்போது அங்குவந்து நின்றது போல் அம்மாதரார் கண்களுக்குத் தோன்றிய தூக்குக்கூட்டின் வாயிலின் எதிரே ஓர் ஆடவன் நிற்கக் கண்டு, அவர் அதன்கட் சென்று ஏறாமற் பின்தங்கினார். பின் தாங்கிய சிறிது நேரத்திலெல்லாம் ஒரு தூக்குக்கூடு விளக்கொளியுடன் மேலேறித் தான்நிற்கும் இடத்தின் ஓரத்தில் வந்து நிற்கவும், இப்போது அதன்கண் எவரும் இன்றி அது வெறுமையாய் இருக்கவுங் கண்டு அதன்கண் அவர் ஏறிக் கீழ் இறங்கினார் என்பது.

இந்நிகழ்ச்சியிற் போந்த மாதரார் கண்களுக்கு முதலில் ஓர் ஆடவனுடன் தோன்றிய தூக்குக்கூடு உண்மையான தன்று; அது, தான் விரைந்து கீழிறங்க வேண்டும் என்னுங் கலவரத்தால் ஓடிவந்த அவருடைய கண்களுக்குப் பொய்யாகத் தோன்றிய பொய்த்தோற்றமேயாகும். அதனை உண்மையென நம்பி அதனிற் கால் வைத்திருந்தால் அவ்வம்மையார் கீழ்விழுந்து மடிந்து போயிருப்பர். அவர் அப்பொய்த்தோற்றத்தை நம்பி உயிர் இழவாமைப் பொருட்டே அப்பொய்க் கூட்டின் வாயிலிற் பொய்யான ஓர் ஆண்மகனுருவமும் உடன்றோன்றி அவர் அதன்கண் ஏறாமற் றடைசெய்தது. இதுகொண்டு, நாம் விரைந்து கலவரப்படுங்கால் உண்மையல்லாத பொய்த்தோற்றங்கள் காணப்படுமென்றும், அவற்றை நம்பினாற் பேரிடர் உண்டாமென்றும், எவரோ உயர்ந்த இயற்கை யுடையார் சிலர்மட்டும் அத்தகைய பொய்த்தோற்றங்கட்குத் தப்பி உய்யுமாறு சில தெய்வத்தடைகள் புகுந்து உதவி

செய்யுமென்றும், அவரல்லாத பிறர்க்கு அத்தகைய தடை யுதவிகள் வருதல் அரிதாகையால் அவரெல்லாம் மிகவும் விழிப்பாகவே யிருக்கவேண்டுமென்றும், நல்லார் சிலர்க்குத் தோன்றுந் தடையுதவிகள் ஆங்காங்கு உண்மையாகவே நிகழ்கின்றன வென்றும் நாங்கருத்திற் பதித்தல்வேண்டும்.

இனிக், கொடும் பிணியாற் பற்றப்பட்டு மிகவும் துன்புறுவோர், தமக்கு நெருங்கிய நேயராய் இருப்பவரை நினைந்து, அவர் தம்பால் வந்திருக்க வேண்டுமென்று விழைகுவராயின், அவர்கொண்ட நினைவு அவர் தம் நேயர்க்கு அதனை முன்னறிவித்து, அவரை அவர்பால் வரச்செய்தலும் ஆங்காங்கு நிகழா நிற்கின்றது. இதற்கு மெய்யாக நிகழ்ந்த தொன்றனை இங்கெடுத்துக் காட்டுவாம்.

சிறந்த தொழிலாளி ஒருவர் தாம் நடத்துந் தொழிலைச் சிறிது காலம் விட்டுவைத்து, இளைப்பாறி இன்புறுதற்காக, இளமரக்கா மிடைந்த ஒரு நாட்டுப் புறத்தூரிற்போய்ச் சிறிது காலந் தங்கினார்.ஒருநாள் அவர் காலையுணவு கொள்ளுகையில் தம் மனைவியாரை நோக்கி, "நமக்குச் சிறந்த நேயரான க... என்னும் அம்மையாரைப்பற்றி எனக்கு அடுத்தடுத்து நினைப்பும் ஒருவகையான மனக்கலக்கமும் உண்டாகின்றன. அவ்விரண் டையும் என் உள்ளத்தினின்றும் அகற்றமுடியவில்லை; நீ இன்று பிற்பகல் அந்த அம்மையாரைப் போய்க்கண்டு, அவரும் அவர் தங் குடும்பத்தாரும் எப்படியிருக்கின்றார்கள் என்று தெரிந்து கொள்வது நலம்" என்று கூறினார். அதுகேட்ட அவர் தம் மனைவியார் வியப்புடன் "இது புதுமையாய் இருக்கின்றது! நமக்கு நண்பரான அந்த அம்மையாரைப் பற்றியே யானும் மிகுதியாய் நினைத்துக்கொண்டிருந்தேன்; அதைப் பற்றி உங்களுக்குச் சொல்லயான் வாயெடுக்கையில் நீங்களும் அதனையே எனக்குச் சொன்னீர்கள்,' என்று மறுமொழி கூறினார். இவ்விருவரும் இங்ஙனம் பேசத் தொடங்குதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னேதான் இருவருள்ளத்திலும் அந்நினைவு அங்ஙனம் வலுப்பெற்றுத் தோன்றலாயிற்று. இருவரும் அங்ஙனங் கலவரப்பட்டு நினைத்த க.. என்னும் அம்மையார் அவர் இருந்த அவ்வூருக்கு அந்தப்பக்கத்துக் கடைசியில் இருந்தனர்; அவரை இவர்கள் மூன்று திங்கட்கு முன்னேதான் சென்று பார்த்தனர். அப்போது அவர் உடம்பின் நலத்தொடுதான் இருந்தார்.

ஆனால், இப்போதோ அவரைப்பற்றிக்கொண்ட கலவரத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு, இவ்விருவரும் அன்றைப் பிற்பகலே வீட்டினின்றும் புறப்பட்டு அந்த அம்மையாரைப் பார்க்கச் சென்றார்கள். சென்று அவரது வீட்டண்டை சேர்ந்ததும், அவ்வம்மையின் தங்கையார் வீட்டுள்ளிருந்து வெளியே வாயிலில் வரக்கண்டார். வந்த தங்கையார் இவ்விருவரையுங் கண்டதும் இறும்பூதுற்று, "யான் உங்களைத்தாம் பார்க்கப் புறப்பட்டேன்; நீங்கள் இன்றைக்கு இங்கேவந்து என் தமக்கையாருடன் தங்கியிருக்கக் கூடுமா என்று தெரிந்து கொள்ளுதற்கே புறப்படலானேன்; என் தமக்கையார் மிகவும் நோயாய் இருக்கின்றார்;அவருக்கு உண்டான ஒருகட்டியை இன்றைக்கு அறுக்க வேண்டி யிருக்கின்றது. ஆதலால், தமக்கையார் உங்களைப் பக்கத்தில் வைத்துக் கொள்ளப் பெரிதும் விழைகின்றார்" என்று வந்த அம்மையாரை நோக்கி நுவன்றனர் என்பது.

இம்மெய்ந்நிகழ்ச்சியிற் கொடியதொரு கட்டியினால் துன்புற்றிருந்த அம்மையார் தமக்கு அன்பிற்சிறந்த நேயரான மற்றோரம்மையாரைத் தம்பால் வந்திருக்கவேண்டி உறுத்து நினைந்த நினைவானது, நினைக்கப்பட்ட அம்மையார்க்கும் அந்நினைவினைத் தோற்றுவிக்க, அவ்வம்மையார்க்குத் தோற்றுவிக்கப்பட்ட அந்நினைவே அவர்க்குச் சிறந்த அன்புடையரான அவர் தங் கணவருள்ளத்துந் தோன்றலாயிற்று.

இன்னும், வறுமையால் துன்புறும் அடியார் சிலர்க்கு, அவர் வேண்டும் உதவியினைச் செய்யும் எண்ணம் மற்றைப் பிறர்க்கு வலிவாகத் தோற்றுதலால், அவர் உடனே அவர்பாற் சென்று அவ்வுதவியினைச் செய்து அவரது மிடி தீர்த்த வரலாறுகளும் பல; அவற்றுள் ஒன்றனை இங்கெடுத்துக் காட்டுதும்:-

"மறைபொருட்காட்சி" என்னும் நூலின் ஆசிரியர் (Jaïes Coates) பின்வருமாறு எழுதுகின்றார். "இத்தகைய நிகழ்ச்சி களை ஆராய்ந்து பார்ப்பதில் யான் சிறிதுங் கருத்தின்றியிருந்த சில ஆண்டுகளுக்கு முன், யான் இலிவர்ப்பூல் என்னும் நகரிற் குடியிருந்தபோது, உவாக்கர் என்னுங் கோயிற்காவலாளர் ஒருவர் எனக்கு நண்பரானார். இவர் படைஞராய் இருந்தவர்; இப்போது

ஆண்டில் முதிர்ந்தவர்; கடவுளிடத்தில் அன்பும் நம்பிக்கையும் மிக்கவர். இவ்வுலகத்துப் பொருளில் ஏழையா யிருப்பினும், இறைவன் நேயத்திலும் பெருந்தன்மையிலும் இயற்கை வாழ்விலுஞ்சிறந்த செல்வரென்றே இவரைச் சொல்லல் வேண்டும். யான் சில திங்களாக இவரைக் காணாதிருந்தும், இவரைப்பற்றி யான் ஏதுமே நினையாதிருந்தும், ஒருநாட் காலையில் யான் தெருவழியே விழைந்து போய்க் கொண்டிருக்கையில் இவரைப்பற்றி மிகுதியாக நினைக்க லானேன். அந்நினைவை மாற்ற எவ்வளவோ முயன்றும், அஃதென்னாற் கூடவில்லை. அவரைப்பற்றியே என்மனந் தொல்லைப்படுவதாயிற்று. அவர்க்கு உடம்புதான் நலமில்லை யோ? அல்லது அவர்க்கு ஏதேனுந்தான் வேண்டியிருக்குமோ? என உள்ளுக்குள் வினவி, நல்லது அவரை விரைந்து போய்க்காண்பேன்' என்று சொல்லிக்கொண்டே விரைந்தேகி அவரது வீட்டுக்கதவைத் தட்டினேன். ஏன் என்று எவரும் வரவில்லை அதன்மேற், கதவை உற்றுநோக்க அது தாழிடப் படாமற் சந்து விட்டிருத்தல் கண்டேன். பிறகு யானே அதனைத் திறந்து, மெல்ல உள்ளேசென்று பார்க்க, ஆண்டில் முதிர்ந்த உவாக்கரும் அவர் தம் மனைவியாரும் அடுக்களையிலே முழந்தாளிட்டபடியாய்க் கடவுளைத் தொழுது கொண்டிருத்தல் கண்டேன். அவர் மிகவும் உருக்கமாய் இறைவனை வேண்டிக் கொண்டிருந்தார். சிறிது பின்றாங்கிப், பிறகு யான் அவரை வணங்கி, அந்நேரத்தில் யான்புகுந்து குறுக்கிட்டமைக்காக அவரை மன்னிப்புக்கேட்டேன். 'யான் பட்டினத்திற்குட் சென்று கொண்டிருக்கையில் தங்களைப்பற்றி இடைவிடாது நினைந்து என்மனந் துன்புற்றது. தங்களைப் பார்த்து உண்மை தெரிந்தா லல்லாமல் என்மனம் அமைதியுறாது எனத் தேர்ந்து தங்கள்பால் வந்தேன்' எனக் கூறினேன். அதுகேட்ட அம் முதியவர், தம்மிடம் ஒரு காசும் இல்லாத நிலையில், உணவுப் பொருளும் விறகும் இன்றி மிடிப்பட்டமையால், அதனைத் தாம் இறைவனுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்ததாக மொழிந்தனர். அப்போது என்னிடத்தில் ஓர் அரைப் பொன்நாணயம் இருந்தது. அதனை யெடுத்து அவரது கையில் வைத்தேன். அம் முதியவர் தம் கண்களினின்று புறப்பட்ட கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தம்மனைவியாரை நோக்கி, 'மேரி, கடவுளின் அருளைப்பற்றி இனி நீ எக்காலும் ஐயங்கொள்ளாதே! நமக்கு அவர்

உதவிசெய்வாரென்று நான் சொன்னேனே. நான் கேட்டதை அவர் கொடுத்துள்ளாரன்றோ?' என்று விளம்பினார். பின்னும், அவர்தாம் விறகு வாங்கக் கூடக் காசு இல்லாமல் வறுமைப் பட்டதையுங், தமக்கு ஐந்துரூபா தரும்படி இறைவனைத் தாம் வேண்டியதையுந், தாம் வேண்டியபடியே அவ்வைந்து ரூபாய்க்கு ஒரு பொன்நாணயம் பெற்றதையும் எடுத்துரைத்தார்'' என்பது.

"வேண்டியார் வேண்டியதே ஈவான் கண்டாய்'' என்னும் அருட்சான்றோர் திருமொழிப்படி, இறைவன் தன்னையார் எது வேண்டினாலும் அது வழங்கும் பெருந்திருவாளன் என்பது, மேற்காட்டிய மெய்ந்நிகழ்ச்சியினால் நன்கு புலனா கின்றதன்றோ? அப்பருந் திருஞானசம்பந்தப் பெருமானுந் திருவீழிமிழலையில் இருந்தஞான்று, மாரிபெய்யாது மறுப்ப எங்கும் வறங்கூர்ந்தது. அதனால் மன்னுயிர்களெல்லாம் நீரும் உணவும் பெறாது கொடுந்துயர் உழக்க, அப்பரையுந் திருஞான சம்பந்தரையுஞ் சார்ந்துவந்த அடியார்களும் உணவின்றிப் பசித்து வருந்தினார். அதுகண்டு உளம் வெதும்பிய அப் பெரியார் இருவரும், இறைவனை நோக்கி வழுத்திப்பாட, இறைவன் எங்ஙனமாகவோ அவ்விருவர்க்கும் பொற்காசுகள் வழங்கினனென்றும், வழங்கிய அப்பொற்காசுகள் கொண்டு அவர்கள் உணவுப் பொருள் தொகுத்து அடியார் தம் அழிபசி தீர்த்தனரென்றும் அவ்விருவரும் அந்நேரத்திற் பாடியருளிய திருப்பாட்டுகளாலும், அவ்விருவரையும் அடுத்துத் தோன்றிய சுந்தரமூர்த்தி நாயனார் தாம் அருளிச்செய்த திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில்,

"இருந்து நீர் தமிழோடிசை கேட்கும்
இச்சையாற் காசு நீத்தல் நல்கினீர்''

என அதனைக் குறிப்பிட்டமையாலும் நன்கறிகின்றனம் அல்லமோ?

இன்னும், 'இக்குமானி' என்னும் மருத்துவமாதரார் ஒருவர் இருந்தாற்போலிருந்து திடீரெனக் காணாமற்போயினர். அவராற் பலர்க்குப் பேருதவி கிடைத்துப் பெரு நன்மை விளைந்து வந்தமையாற் சடுதியில் அவர் காணாமற் போனது குறித்துக் குடிமக்களும் பிறரும் பெருந்துயர் கூர்ந்து, அவரைக்

கண்டுபிடிக்க எவ்வளவோ முயன்று பார்த்தனர். எவராலும் அதுமுடியவில்லை. கடைசியாக, ‘உவில்வர்வேரர்’ என்னும் புகழோங்கிய சமயகுரு ஒரு நாள் தாம் புரிந்த அறிவுரை கேட்கவந்த குழுவினரை நோக்கி “இன்றைக்கு நீவிர் எல்லீரும் ஒருமுகமாய் நின்று, மாயமாய் மறைந்துபோன இக்குமானி யம்மையைத் தரும்படி இறைவனை வேண்டித் தொழுமின்கள்!” எனக் கட்டளையிட்டார். அவர் இட்ட கட்டளைப்படி அக்குழுவினர் அனைவரும் ஒருவழிப்பட்ட உள்ளம் உடையா ராகி, மறைந்து போன அம்மாதரைத் திரும்பத் தரும்படி வேண்டிக் கேட்டனர். அவர்கள் அங்ஙனம் வேண்டிய அதேநாளின் பிற்பகலில், அம்மாதரின் உடலம் ஒரு நீர்நிலையினின்றும் கண்டெடுக்கப்பட்டது.

இம்மெய்ந்நிகழ்ச்சியினாலுங் கடவுளை வேண்டிக் கேட்பது வீண்போகா தென்பது தெளியப்படுகின்றதன்றோ? நாம் வேண்டுவன வெல்லாங் கடவுளிடமிருந்து நேரே வருமென்று எதிர்நோக்குதல் ஆகாது. நேர்முகமாகவோ, அல்லது அவ்வுதவிகளைச் செய்யத்தக்கார் வாயிலாகவோ அவைகிடைத்தல் திண்ணம். ஆனால், கேட்டது கேட்டபடி பெறுதல் கேட்பாரின் மனத்திட்பத்தையுங், கேட்கப்பட்டதன் நன்மை தீமையையும் பொறுத்திருக்கின்றது. எது தக்கதோ அது கிடைப்பதுமட்டும் உறுதி.

“எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்” (குறள் 666)

என்னுந் திருக்குறளும் இதனையே வற்புறுத்துதல் காண்க.

இன்னும், உயர்ந்த நூலாசிரியரும் ஆங்கில நல்லிசைப் புலவருமான அந்துரு லாங்கு (Andrew Lang) என்பவர் தம் நண்பர் ஒருவரின் தோற்றத்தைக் கண்ட நிகழ்ச்சி வியக்கற்பால தொன்றாயிருத்தலின், அதனையும் மற்றொன்றனையும் இங்கெடுத்துக் காட்டி அவ்வளவில் இப்பகுதியை முடித்து மேற்செல்வாம்;

இக்குறிப்பிட்ட ஆசிரியர் தமது இல்லத்தின் முன்புறத்தே ஒருபலகணி யண்டையிலிருந்து ஒருநாள் எழுதிக் கொண்டிருக் கையில், எவரோ தமது தோட்டக்கதவைத் திறந்து கொண்டு

உள்வருதலைக் கண்டார். கண்டு, வந்தவர் யார் என உற்று நோக்க, அவர்.... எனப்பெயரிய தம் நண்பராயிருத்தலைத் தெரிந்தார். தெரிந்ததும், அந்நண்பர் தாம் இருக்கும் பலகணிக்கு நேராக வரும்வழியேவருதலும்பார்த்தார்.அப்போது பட்டப்பகல்வேளை. உடனே தம் நண்பரை வரவேற்றற் பொருட்டாக அவ்வாசிரியர் தமது இருக்கையினின்றும் எழுந்து, தாம் இருந்த அவ்வறையின் கதவைத் திறந்து அவரை யுள்ளே அழைத்தற்காகக் கதவண்டை சென்றார். சென்று கதவைத் திறந்ததுந் தம் நண்பரை அங்கே காணாராகிப் பெரிதுந் திகைப்புற்றனர். பின்னர், அதேநாளின் நண்பகற் பொழுதில் தமது பகலுணா எடுப்பதற்காக அவ்வாசிரியர் அதே நண்பரது இல்லத்திற்கு ஏகி, அவர்தம் மனைவியாரை நோக்கித் தாம் அன்றைக்காலையில் அவரைக் கண்ட வரலாற்றினை எடுத்துரைத்தார். அதுகேட்ட அவ்வம்மையார் பெரிதும் இறும் பூதுற்றுத், தம் கணவனார் அன்றைப் பகல் முழுதும் வீட்டை விட்டு வெளியே செல்லவில்லை யென்றும், ஆனால் அவரை அவ்வாசிரியர் தமது தோட்டத்தினுள்ளே வரக்கண்ட அதே நேரத்தில் அவர்தமது படுக்கையில் நோயாய்க்கிடந்தன ரென்றும் நுவன்றனர்.

இம்மெய்ந்நிகழ்ச்சியில் தம் நண்பரின் நினைவுருவினைக் கண்ட ஆசிரியர் அந்துரு லாங்கு இதற்கு முன்னெல்லாம் இத்தகைய வியத்தகு தோற்றங்களைச் சிறிதும் நம்பாதவராய், இன்னோ ரன்ன மறைபொருள் நிகழ்ச்சிகளைப் பேருழைப்பும் பேரறிவுங் கொண்டு துரிதாராய்ந்து அவற்றின் உண்மைகளைக் கற்றாரெல்லாம் ஏற்று மகிழ்ந்து கொண்டாடும்படி நிலைநாட்டிய நல்லிசைப்புலவரான மையர்சு (Mysers) என்னும் பேராசிரியரையும் பகடி செய்தவராவர்; பின்னர்த் தாமே தங்கட்புலனால் இத்தன்மையான மறைபொருட்டோற்றங் களைக் கண்டு, அவற்றின் உண்மைகளைத் தேர்ந்து தெளிந்த காலந் தொட்டே இவரும் அவைகளை நம்பி அரிய நூல் சில இத்துறையில் இயற்றினவர் ஆவர். அதுநிற்க.

இனிப், பிற்கூறப்படும் வியத்தகு நிகழ்ச்சியானது சிறந்த ஓர் ஆங்கிலக்கிழமைத் தாளில் வெளிவந்த தொன்றாகும். அத்தாளின் ஆசிரியர் அந்நிகழ்ச்சியின் மெய்ம்மையினைச்

சான்றுகளான் ஆராய்ந்து உறுதிப்படுத்தியிருக்கின்றாராகலின், அதனையும் ஈண்டெடுத்து வரைகின்றாம்.

"ஓர் இளையமங்கை தனக்கு மணமகனாக உறுதிப் படுத்தப்பட்ட இளையானிடஞ் சென்று சேர்தற்காகப் புகைவண்டியிற் 'கேம்பிரிச்சு' மாநகரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள். இடையே வண்டியானது தங்கும் ஒவ்வொரு நிலையிலும் அவள் தன்னிருக்கையினின்றும் எழுந்து சாளரத்தின் வெளியே நோக்கித் திகில்கொண்ட முகக்குறி புடையளாய்த் துன்புற்றுக்கொண்டிருந்தாள். அவளுக்கு அண்மையில் அமர்ந்திருந்த ஒரு முதியவர் அப்பெண் அங்ஙனம் ஒவ்வொரு நிலையிலும் எழுந்து சாளரத்தின் வெளியே நோக்கி வெருக்கொண்டு வெம்புதலைத் தொடர்பாக நோக்கி 'அம்மே நீ ஏன் இங்ஙனம் எழுந்தெழுந்து வெளியே நோக்கி, வருந்துகின்றனை?' என வினவினர். அதற்கு அப் பெண் 'யான் கேம்பிரிச்சிற் காணப்போகும் என் காதலர், இடையே இவ்வண்டி தங்கும் ஒவ்வொருநிலையின் மேடைமேலும் போந்து என்னை வண்டியைவிட்டுக் கீழே இறங்கும்படி பெருந்திகிலொடு கைக்குறி காட்டுகின்றார்; என்செய்வேன்!' என மொழிந்து தன் கைகளை நெரித்தனள். அதன்மேல் அம்முதியவர், 'அப்படியானால், யான் சொல்வதை எடுத்துக் கொள்! அடுத்த நிலையில் அவ் விளைஞர் மறுபடியும் போந்து உனக்குக் கைக்குறி காட்டினால், உடனே நீ வண்டியை விட்டுக் கீழே இறங்கிவிடு!' என வலியுறுத்திச் சொன்னார். அடுத்த நிலையில் அவ் வண்டி வந்து நின்றதும், அவ்விளைஞர் அம் மேடைமேல் மறுபடியும் போந்து, முன்னையைவிட இப்போது கழிபெருந் திகில் கொண்டு கைக்குறிகாட்டக்கண்டாள். கண்டதும் அப் பெண் அம் முதியவர் கற்பித்த படியே வண்டியைவிட்டுக் கீழே இறங்கிவிட்டனள். அம்முதியவரும் அவளுடன் கூடவே வண்டியைவிட்டு இறங்கினர். இருவரும் பின்னர்ப் போந்த வண்டியிலேறிக் கேம்பிரிச்சு மாநகர் சேர்ந்தனர். அங்கே சேர்ந்ததும், அதற்கு முன் தாம் ஏறியிருந்த புகைவண்டியின் பெட்டி ஓரிடரில் அகப்பட்டு அழிந்தமையால் அதிலிருந்தவர்களிற் பெரும்பாலார் மாண்டுபோன செய்தி தெரிந்து வியப்புற்றுத், தாம் உயிர் தப்பினமைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினர். இங்கே

நினைவிற் பதிக்கற்பால தொன்றுளது; அவ்விளம் பெண்ணின் காதலனது ஆவியுருவம் அவட்கு முன்னே ஒவ்வொரு வண்டிநிலையிலுந் தோன்றி, அவள் அவ் வண்டியை விட்டுக் கீழே இறங்குமாறு கைக்குறி செய்த நேரத்தில், அவ்விளைஞன் கேம்பிரிச்சு வண்டி நிலையின் ஓரறையில் இவளது வரவு காத்து அயர்ந்து நன்றாய் உறங்கிக் கொண்டிருந்தனன்; விழித்தபின் அவன் இச் செய்தியை அறியாதவனாகவே காணப்பட்டனன் என்பது.

# 15. பலர்க்குத் தோன்றிய நினைவுருவங்கள்

*கனவிலோ நனவிலோ ஒருவர்க்குத் தோன்றிய நினைவுருவங்களின் வியத்தகு தோற்றங்களைப் பற்றியே பெரும்பாலும் மேலே விளக்கிப் போந்தாம். இனி, ஒருவர்க்கு மேல் இருவர் மூவர்க்குக் கனவிலும் நனவிலும் ஒரேகாலத்திற் றோன்றிய வடிவங்களைப் பற்றி இங்கே சிறிது விளக்கிக் காட்டுவாம். உறுத்து நினைந்த ஒருவரது நினைவு அவரது வடிவத்தினை அவரொடு தொடர்புடையார் பலர்தங் கட்புலனெதிரே விளங்கக் காட்டுதல் பெரிதும் இறும்பூது பயப்பதாகலின், அவ்வியல்பினை நம்மனோர் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாத தாகும். மேலும், ஒரே காலத்தில் ஒரு நினைவுருவினைப் பலர் காண வல்லராயின், அப் பலரும் ஏறக்குறைய ஒத்து மனவியற்கை வாய்ந்தவராயிருத்தலும் அதனாற் போதராநிற்கும். முதலிற் கனவின் கட் பலர்க்குத் தோன்றிய நினைவுருவங்களை எடுத்துரைப்பாம்.*

*1887 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14,15 ஆம் நாள் இரவிற் பாரிசுமாநகரி லிருந்த ஆசிரியர் இரிச் செத்து* (Prof - Richet) *என்பவர்க்குரிய 'உடலாராய்ச்சி நிலையம்' நெருப்புப் பற்றி எரியலாயிற்று. அவ்வாசிரியர்க்கு மிக நெருங்கிய நண்பர் இருவர் அப்போது நன்றாய் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் தம் கனவினிடத்தே அது தீப்பற்றி யெரிதலைக் கண்டு அரண் டெழுந்து கூவினர். 15 ஆம் நாள் மாலைநேரத்தில் ஒரு மருத்துவ ஆசிரியர் அறிதுயிலிற் செல்லப் பழகிய ஓர் அம்மையாரை அறிதுயிலிற் செலுத்தினார். அவ்வம்மையார் அறிதுயிலிற் சென்றதும் அந்நிலையந் தீப்பற்றியெரிதலைத் தாமும் அந்நிலையிற் கண்டு அங்ஙனமே அரண்டெழுந்து கூவினார்.*

உடனிருந்தவர்கள் அவரை அமைதிப்படுத்துவது சிறிது வருத்தமாயிருந்தது.

1808 ஆம் ஆண்டிலிருந்து 1814 ஆம் ஆண்டுவரையிற் பிரித்தானியர்க்கும் பிரஞ்சுக்காரர்க்கும் பெரும்போர் நடந்த காலையிற் சுவிதின்பாங்கர் என்பவர் 1883, மேத் திங்கள் 20 ஆம் நாள் வெளியிட்ட அறிக்கையிற் பின்வருஞ் செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

சுவிதின் பாங்கரின் தந்தையாரும் அவர் தம் உடன் பிறந்தார் இருவருந் தோவர் என்னும் ஊரிற் பாடி வீட்டிற்றங்கியிருந்தனர். அவர்தங் குடும்பத்தவர் தொலைவி லுள்ள வேறோர் ஊரில் அப்போது தங்கியிருந்தனர். உடன் பிறந்தார் இருவரும் அப் பாசறை வீட்டின் இரு வேறு அறைகளில் துயில்கொள்வது வழக்கம். ஒருநாட் காலையிற் படைஞரின் கண்காணிப்பு நடந்தபின், அம்மூவரும் ஒரு வரையொருவர் எதிர்ப்பட்டனர். எதிர்ப்பட்டதும், அவர் தந் தந்தையார், "பிள்ளைகாள், யான் சென்ற இரவு புதுமை யானதொரு கனவு கண்டேன்" என்றனர். அவர் அது சொல்லிய வுடனே அவர்தம் புதல்வர் ஒருவர், "அங்ஙனமே யானுங் கண்டேன்" என்றனர்; அது கேட்டதும் மற்றைப் புதல்வர், அவ்விருவரும் இறும்பூது எய்த, "யானும் அங்ஙனமே புதுமையான ஒரு கனவு கண்டேன். நம் அன்னையார் இறந்து கிடக்கக் கனவு கண்டேன்" என்றனர். அம் மூவரும் அதே கனவினைக் கண்ட அவ்விரவே அவ்வம்மையார் இறந்து பட்டனர். அப் புதல்வரில் ஒருவரின் மகளார் அம் மூவர் வாயிலிருந்தும் அக் கனா நிகழ்ச்சியினை ஒரே நேரத்திற் கேட்டார் என்பது.

இன்னும், மேல்நாட்டு மாதரார் ஒருவர் ஒருநாள் மாலையில், தமக்கு அறிமுகமான ஓர் அயல்வீட்டு அம்மையாரைப் பற்றி, இதற்குமுன் தாம் அடைந்திராத ஒரு பெருங்கலக்கமுங் கவலையுங் கொள்ளலானார். அவ்வம்மையாரின் உடம்பு நல்ல நிலையில் இருந்தமையால் தாம் அவ்வாறு கலங்கிக் கவல்வது நன்றாகாது எனக்கருதி, அதனை நீக்கி விட மிக முயன்றார்; ஆனால், அஃது அவரால் இயலவில்லை. அன்றிரவு அவர்க்குத் தூக்கமும் பிடிக்கவில்லை. அந்த அம்மையார் இறந்து

போவதாகவே நினைந்து நினைந்து துன்புற்றார். அதனால், மறுநாட் காலையில் அவர் அந்த அயல் வீட்டு அம்மையாரின் செய்தி இன்னதென அறிந்து வருமாறு தம் ஏவற்காரியை அவர்பாற் போக்கினர். போய்வந்த ஏவற்காரி, அந்த அம்மையார் நேற்றிரவே இறந்து போயினர் எனத் தெரிவித்தனள்.

மற்று, இறந்துபோன அவ்வம்மையாரோ தாம் இறக்குந் தறுவாயில் தம் மகனை அருகழைத்துத், தாம் இறந்து போவதைத் தமக்கு அறிமுகமாயுள்ள அம்மாதரார் அறிவர் எனப் புகன்று உயிர் துறந்தார்.

அதுவேயுமன்றி, அம் மாதரார் மறுநாட்காலையில தம் சமையற்காரியைப் பார்த்தபோது, அவளுந் தமக்கு அறிமுகமான அவ்வயல்வீட்டு அம்மையார் இறந்து படுதலைப் பற்றித் தான் ஒரு கொடிய கனவு கண்டதை எடுத்துரைத்தனள். அங்ஙனம் எடுத்துரைக்குங்கால், அவள் தனது கனவின்கண் எவரோ ஒருவர் போந்து அவ்வம்மையார் இறந்ததைத் தனக்கு அறிவித்ததாகவுங் கூறினாள் என்பது.

இம்மெய்ந் நிகழ்ச்சியில், இறந்துபடும் நிலையினரான அவ் வயல்வீட்டு அம்மையார் தமக்கு அறிமுகமான அம் மாதராரைப்பற்றி நினைந்த நினைவே, அவர்க்கு நீக்கலாகா மனக்கலக்கத்தினையுங் கவலையினையும் விளைவிப்பதாயிற்று. இனி, அம்மாதரார்க்கு உண்டான அக் கலக்கமே, அவர் தஞ் சமையற்காரிக்கு அவ்வம்மையாரின் சாவைப் பற்றிய கனவினை உண்டுபண்ணுவதாயிற்று. அற்றேல், அவ்வறிவிப்பு ஒருவர்க்கு நனவிலும், மற்றொருவர்க்குக் கனவிலும் உண்டாயது என்னையெனின்; இறந்துபோன அம்மையார்க்கும் அதனை முன்னறிந்து கலங்கிய மாதரார்க்கும் ஏதோ ஒருவகையான அன்பினால் மனநிலை ஒன்றாயினாற்போலப், பின்னவரின் சமையற்காரிக்கும் அந்த அம்மையார்க்கும் மனம் ஒருங்கொத்தல் இல்லையாகலின், மனமொத்த ஒருவர்க்கு நனவிலேயும், அஃது அத்துணையொவ்வாத மற்றவட்குக் கனவிலேயும் அந் நிகழ்ச்சி தோன்றாநின்ற தென்க. நினைவின் உறைப்பும் அந் நினைவினை ஏற்கும் மனநிலையும் ஒன்றுபடுதற்கேற்ற வாய்ப்பு உள்வழி யெல்லாம், உறுத்து நினைந்த நினைவு நினைக்கப்பட்டார்க்கு

நனவிலேயே தோன்றுமென்றும், அல்லாதார் சிலர்க்கு அது கனவின்கண் மட்டுமே தோன்றுமென்றும் பகுத்துணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இனி, அயர்ந்து துயிலுங்கால் அரண்டெழுந்து கனவோ நனவோவென்று உறுதி செய்யக்கூடாத நிலையில் இருப்பார் சிலர்க்கு, இறந்துபோயினாரது உருவந் தோன்றி மறைதலும் ஆங்காங்கு நிகழாநிற்கின்றது. இந் நிகழ்ச்சி, இறந்து மறுமை யுலகிற் சென்றவர் தம்மவரை உறுத்து நினைப்பதனால் நிகழ்கின்றதோ, அன்றி உயிரோடிருக்கும் அவர் தம் உறவினர் சிலர் அவரை நினைந்து உருகுதலால் உண்டாகின்றதோ இன்னது தான் மெய்யென்று முடிவு கட்டுதல் இயலாதாயிருக் கின்றது. பின்வரும் மெய்நிகழ்ச்சி அத்தகையதேயாகும். ஒரு மங்கை பின்வருமாறு எழுது கின்றாள்:

“சில ஆண்டுகளுக்குமுன் என் கணவரும் யானுங் கண்டறிந்த நிகழ்ச்சி யிது: ஒருநாள் நள்ளிரவில் எவரோ ஒருவர் என் படுக்கையின் அருகே நிற்பதாக உணர்ந்து வெருண்டு விழித்தெழுந்தேன். எழ, ஓர் உருவம் என் படுக்கையின் பக்கத்தைவிட்டுப் பெயர்ந்து, யான் என்னுடைய நகைகளை வைத்திருக்கும் பேழையண்டை செல்லக் கண்டேன். யான் கண்ட அவ்வடிவம் ஒரு திருடனது வடிவமாய் இருக்கவேண்டு மெனவே எண்ணினேன். அவன் தன்கையிற் படைக்கலம் வைத்திருக்க வேண்டு மென யான் நினைந்தமையால் என் படுக்கைக்கு இரண்டடி விலகிய கட்டிலின் மேல் துயின்ற என் கணவனை யான் எழுப்பாது வாளா இருந்தேன். ஏனென்றால், என் கணவன் எழுப்பப்பட்டால் அவர் அத் திருடனைத் தாக்க நேரு மென்றும் அப்போது அவன் அவரைத் தன் கையிலுள்ள படைக்கலத்தால் ஊறு செய்யக் கூடுமென்றும் அஞ்சினேன்.

“ஆனால், அவ்வுருவமோ என் கட்டிலின் கால்மாட்டை விட்டகன்று, என் கணவனின் கட்டிலுக்கெதிரே செல்லவும் உடனே என் கணவன் தனது படுக்கையில் எழுந்து உட்கார்ந்து அவ்வுருவத்தை உற்று நோக்கவுங் கண்டு திகைப்புற்றேன். ஆனால், இரண்டொரு நொடியிலெல்லாம் என் கணவன் மீண்டும் படுக்கையில் விழுந்து துயில்கொள்ளலானார். அந்த உருவமோ வாயிற் கதவண்டை போயது.

"அன்றிரவு நாங்கள் ஒரு சொற்கூடப் பேசவில்லை"

"மறுநாள் விடியற்காலையில், எங்கள் அறையிலிருந்த மூன்று வாயிற் கதவுகளும் பூட்டப்பட்டிருந்தனவாவென்று என் கணவனை வினவினேன். அவை மூன்றுஞ் செவ்வையாகத் தாழிடப்பட்டிருந்தனவென்றே அவர் விடை பகர்ந்தார். எங்கள் இரண்டு படுக்கைகளும் எவ்வகையாலேனும் ஒன்றை யொன்று நெருங்கி யிருக்கக் கூடுமோ வென்றும், அதனால் என்னையறியாமலே யான் என் கணவனை எழுப்பியிருக்கக் கூடுமோவென்றும் நினைந்து அவைகளின் இருப்பை ஆராய்ந்து பார்த்தேன்; ஆனால் அவையிரண்டுந் தனித்தனியாகவே அகன்றிருந்தன." அதன் பிறகு, யான் அவரை நோக்கிச், "சென்ற இரவில் நிகழ்ந்தது ஏதேனும் நுங்கட்கு நினைவில் இருக்கின்றதா?" என்று கேட்டேன்; அதற்கவர், "ஆம், ஒரு புதுமை; என் தந்தையார் அந்த வாயிற்கதவின் வழியே செல்லக் கண்டேன் என்று நினைக்கின்றேன்" என மொழிந்தார்.அவர் அது சொன்ன பின்னர்த்தான், யான் கண்ட அவ்வுருவம் ஒரு திருடனாக இருக்க வேண்டுமெனவும், அவர் படைக்கலம் வைத்திருந்தால் அவனைப் பிடிப்பது பொல்லாங்காய் முடியுமெனவும் நினைந்தே யான் அவரை எழுப்பாமற் சும்மா இருந்து விட்டேனென்று நுவன்றேன்," என்பது.

இம் மங்கை கண்ட உருவத்தைத் தானுங் கண்ட வகையினை அவடன் கணவனார் பின்வருமாறு வரைகின்றார்:

"என் மனைவி கண்ட காட்சியின் வரலாற்றினை யான் படித்துப்பார்த்தேன்; அஃது உண்மையென்றே யானும் நுவல்கின்றேன். யான் எனது படுக்கைமேல் எழுந்து உடகாருவதற்கு முன், யான் கனவு காணவில்லையென்று எனது நினைவுக்கு எட்டியவரையிற் சொல்கின்றேன்; ஆனால், அதன்மேல் யான் எழுந்துட்கார்ந்தபோதோ என் தந்தையார் எமது அறைவாயிற் கதவண்டை செல்லக் கண்டேன். அப்போது யான் அவருடையகாரியங்களைப் பற்றி நினைக்கவேயில்லை. என்றாலும் வேறு சில அலுவல்களைப்பற்றி மட்டும் யான் அப்போது சிறிது கவலைப்பட்டதுண்டு.

"யான் கண்ட அவ்வடிவம் என் தந்தையாரது வடிவ மென்றே எண்ணினேன். அதுவேறொருவரது வடிவமென்று

யான் எண்ணவேயில்லை. அஃது அரவமின்றி அவ்வறையின் குறுக்கே போய் அதன் வாயிற் கதவுவழியே மறைந்தேகியது. என் மனையாள் மறுநாட் காலையில் என்னைநோக்கி ‘நேற்றிரவு நீங்கள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்ததைப்பற்றி நினைவுண்டோ?’ என வினவி எனது கருத்தை அந் நிகழ்ச்சியின் முகமாய்த் திருப்பியிராவிட்டால், அதனை யொரு வெறுங் கனவாகவே நினைந்துவிட்டிருப்பேன்.

“அவ்வுருவந் தோன்றியபோது என்னுடைய கண்கள் திறந்திருந்தனவென்றே யான் உறுதி சொல்வேனாயினும், யான் அதன் முகத்தைமட்டுங் காணவில்லை. யான் நினைவு கூரக் கூடியவரையில் என் தந்தையாரின் பொதுவான உடம்பின் றோற்றதை அறிந்திருந்ததிலிருந்தே அஃது அவரது வடிவமாகத் தான் இருக்க வேண்டுமெனக் கருதினேன். யான் விழித்திருக் கையில் அத்தகையதொரு நிகழ்ச்சி வேறு கண்டிலேன். ஆயினும், என் தந்தையார் இறந்துபோனவுடனே ஒரு கால் அவரது வடிவத்தினை யான் ஒரு கனவின்கட் டெளிவாய்க் கண்டதுண்டு” என்பது.

இம்மெய்ந்நிகழ்ச்சியிற் போந்த உருவத்தைக் கண்டவர் அதனைக் கண்டபோதிருந்தநிலை வெறுங் கனவாகவாதல் அல்லது வெறுநனவாகவாதல் இருத்தல் வேண்டுமென்று உறுதிசொல்லக் கூடாமையால், அஃது அவ்விரண்டுக்கும் இடைப்பட்ட தொன்றாகவே யிருத்தல்வேண்டு மென்பது பெறப்படும் அற்றேல், நனவுங் கனவும் அல்லாத ஒரு நடுநிலையினை எமது பழக்க வழக்கத்திற் கண்டிலமாலெனின்; அறிதுயிலிற் செல்வாரையுந் தூக்கத்தில் நடப்பாரையுங் கண்டு அவரது நிலையினை ஆராய்ந்து பார்ப்பவர்க்கு, நனவுங் கனவும் அல்லாமல் அவையிரண்டற்கும் நடுப்பட்டதோர் உணர்வு நிலையும் மக்களிற் சிலர்க்கு உண்டென்னும் உண்மை நன்கு விளங்காநிற்கும். அறிதுயிலில் இருப்பவர்க்கு நனவு இருக்கின்றது; ஆனால், அது நம்மனோர்க்குள்ளதை ஒப்பதன்று; அவர் அத்துயிலினின்று விழித்தபின் அந் நனவினை மறந்து போகின்றார்; மற்று, அதனைக் கனவென்று நுவலுதற்கு மிடமில்லை; ஏனென்றால், திரும்பவும் அவ்வறிதுயிலிற் சென்றவுடனே தாம் அதில் முன்னிருந்த நனவினை நன்குணர்

கின்றார். ஓர் இரவில் உறங்குகையிற் கண்ட கனவினை அடுத்து வரும் இரவிற் காணுங் கனவுடன் நாம் தொடர்புபடுத்தி உணர்தல் இல்லாமையால், அறிதுயிலிற் சென்றவர்க்கு உண்டாம் நனவினைக் கனவென்று கூறுதலுஞ் சிறிதும் பொருந்தாது. ஆகவே, மக்கள் சிலர் பலர்க்கு நனவு கனவு இரண்டினும் வேறாய் அவை யிரண்டற்கும் நடுப்பட்டதோ ருணர்வுநிலையும் உண்டென்பது தெளியப்படும். தூக்கத்தில் நடப்பார் நிலையுஞ் சிறிதேறக்குறைய அறிதுயிலில் இருப்பார் நிலையினையே ஒத்திருக்கின்றது. இத்தன்மையதாம் ஓர் உணர்வுநிலை மக்களிற் சிலர்பால் அரிதாய்க் காணப்படுதலை இதனைப் பயில்வார் நன்கு தெளிதல் வேண்டி, அதற்கு உண்மையாக நடந்த ஒரு நிகழ்ச்சியினை இங்கெடுத்துக் காட்டுதும்:

'அன்செல்பூரன்' என்னும் பெயர்வாய்ந்த கிறித்து சமய குரு அமெரிக்காவிலுள்ள நியூயார்க்கு என்னும் நகரில் 1826 ஆம் ஆண்டிற் பிறந்தவர் ஆவர். பிற்கூறும் நிகழ்ச்சி நடந்தஞான்று அவர்க்கு ஆண்டு அறுபத்தொன்று. அவர் தாம் வாங்கியதொரு நிலத்தின் விலையைச் செலுத்தும்பொருட்டுப் பொருள் திரட்டுதற்காக 1887 ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 17 ஆம் நாள் தமதில்லத்தை விட்டுப்புறப்பட்டு அயலிலுள்ள தோர் ஊர்க்குச் சென்றார். சென்று கருவூலத்தில் (Bank) தாம் வேண்டியவளவு தொகை பெற்றுவந்து, சில சில்லறைக் கடன்களைத் தீர்த்துவிட்டுத், தம் உடன்பிறந்தாளின் வீடுள்ள வேறொரு தெருவுக்குப் போயினார். அப்போது அவரைப்பற்றிக் கடைசியாகத் தெரிந்தது அதுதான். ஆனால், அவர் தம் உடன்பிறந்தாளின் இல்லுக்குப் போகவும் இல்லை. அவர் இருந்தாற் போல் இருந்து திடீரென மாயமாய் மறைந்து போயதைப்பற்றி நகர் காவலர்க்குத் தெரிவித்ததோடு புதினத்தாள்களிலும் விளம்பரஞ் செய்வித்தார்கள்.

இவ்வாறாகவெல்லாம் அவரது மாயமறைவினை அறிவித்தும், எட்டுக்கிழமைகள் வரையில் அவரைப்பற்றிய செய்தி ஒன்றுமே தெரியவில்லை. ஆனால், அவ்வெட்டுக் கிழமைகளுங் கழிந்தபின், திடீரென மார்ச்சு 14 ஆம் நாள் அவர் தமது இல்லத்தில் மீண்டுங் காணப்பட்டார். அவர் அங்ஙனந் திடீரென மறைந்துபோயதுந், திரும்பவுந் திடீரெனத் தமது

இல்லம் வந்து சேர்ந்ததும் என்னை? யென்று உற்றாரும் மற்றாரும் அவரைப் பலவாறு வினாவியும், அவர் அவ்வினாக்களுக்கு ஏதொரு விடையுமே சொல்லத்தெரியாமல் திகைத்து விழித்தார். என்றாலும், ஆராய்ச்சி வல்ல ஆசிரியர்கள் அவரைப்பற்றிப் பலமுகமாய் ஆராய்ந்து பார்த்ததிற் பின்வருங் குறிப்புக்கள் புலனாயின:

அன்செல்பூரன் தமது இல்லத்தைவிட்டு மறைந்து இரண்டு கிழமைகள் ஆனபின் பிப்ரவரி முதல்நாளில் நாரிஸ்டன் என்னும் ஊரிற் போந்து தங்கினர். அங்கே அவர் பிரௌன் என்னும் பெயர் தாங்கி, அவ்வூரிலுள்ள தொரு தெருவில் ஓர் அறையைக் குடிக்கூலிக்குப் பிடித்து, அதன் நடுவே ஒரு திரையைவிட்டு அதனை இரண்டாய்த் தடுத்து, முற்பகுதியிற் சிறுவரின் விளையாட்டுக் கருவிகளுந் தித்திப்புப்பண்டங்களும் புதிது சமைத்தபொருள்களும் வைத்து விற்பனைசெய்துவந்தார்; பிற்பகுதியை உணவுசமைக்கவும் உறங்கவும் வைத்துக் கொண்டு அதில் தமக்கு வேண்டிய தட்டு முட்டுகளை இட்டு வைத்திருந்தார். விற்றுப்போன பண்டங்களைத் திரும்பக் கொணர்ந்து நிறைத்தற்பொருட்டுக் கிழமைக் கொருகால் ‘பிலடல்பியா’ என்னும் ஊர்க்கு அவர் போய்வருவர். அவர் தாம் வைத்திருந்த அக் கடையின் முகப்பில் ‘ஏ.ஜே.பிரௌன்’ என்னும் பெயரையும் பொறித்திருந்தார். அவர் வாடகைக்குப் பிடித்திருந்த அறை, ‘ஏரல்’ குடும்பத்தார்க்குரிய வீட்டின் ஒரு பகுதியாகும். அக் குடும்பத்தவர் நாடோறும் பிரௌன் என்னும் அத் துரைமகனாரிடம் வந்து பேசுவதுண்டேனும், அவர்கள் அவருடைய குணத்திலாயினும் செய்கையிலாயினும் ஏதொரு மாறுபாடுங் கண்டிலர். அவரது நடத்தை நேர்மையும் ஒழுங்கும் அமைதியும் வாய்ந்ததாய் இருந்தது. தம்முடைய பற்றுச் சீட்டுகளுக்குச் செல்ல வேண்டியவைகளை விரைந்து செலுத்தி வந்தார். தமது கடையைச் சனிக்கிழமையில் மாலைப் பத்து மணிக்கும் மற்றை நாட்களில் ஒன்பது மணிக்கும் ஒழுங்காகச் சாத்திவந்தார். ஞாயிற்றுக்கிழமைகளில் திருக்கோயிலுக்குத் தவறாமற் போய்வந்தார். அவருடன் பழகியவர்களில் எவரும், அவர் அப்போதிருந்த உணர்வுநிலை எவ்வகையான மாற்றமும் உடையதாயிருந்ததென ஐயுறுதற்குச் சிறிதும் இடமில்லா திருந்தது.

ஆனால், மார்ச்சு, 14 ஆம் நாள் விடியற்காலையில் 5 மணிக்கு அவர் தாம் ஒரு பீரங்கியின் அதிர்வெடி ஓசைகேட்டு விழித்துக்கொண்டதாகக் கூறினார். விழித்ததும், அவர் தாம் வழக்கமாய்த் துயில்கொளும் படுக்கையில் இல்லாமல், நடுவே ஆணையிட்டதொரு படுக்கையிலிருத்தலை உன்னிப்பாய்ப் பார்த்தார்; தம்முடைய அறையின் சாளரங்களுக்கு எதிரே மின்விளக்குகளையுங் கண்டார். உடனே அவர் எழுந்து திரைகளை விலக்கிக் கொண்டு சாளரத்தின் வழியே தெருவை எட்டிப் பார்த்தார். தாம் மெலிந்திருப்பதாகவுந் தமக்கு யாரோ மருந்திட்டதாகவும் எண்ணினார். பிறகு, தாம் இருத்தற்கு உரிமையில்லாத தோரிடத்தில் தாம் வந்திருப்பதாக நினைந்து அச்சமுற்றார். தம்மை ஒரு திருடனாகக் கருதிக் காவலாளர் பிடித்துக் கொள்ளக்கூடுமே அல்லதெவரேனுந் துன்புறுத்தக் கூடுமேயென நினைந்து அஞ்சினார். தமது வாழ்நாளில் இங்ஙனந் தாங் காவலாளர்க்கு அஞ்சியது ஒரேமுறைதான்.

அவ்வீட்டில் யாரேனும் நடமாடுகிறார்களாவென்று உற்றுக்கேட்டார். அவ்வாறு இரண்டு மணி நேரம் வரையில் அவர் பெரிதும் மனம் வருந்தினார். கடைசியாக அவர் கதவண்டை போய் அதனைத் தடவிப் பார்த்தார்; அஃதுள்ளே தாழ் இடப்பட்டிருத்தல் கண்டு அதனைத் திறந்தார். எதிர்ப்பக்கத்து அறையினுள்ளே எவரோ நடமாடும் அரவங் கேட்டு, அதன் கதவைத் தட்டினார். உடனே கதவைத் திறந்துகொண்டு வந்த ஏரல் என்பவர், "ஐய பிரௌன், தங்கட்குக் காலை வணக்கம்" என்றார். அதற்கவர் : "இப்போது யான் எங்கே இருக்கின்றேன்?" என வினவ, ஏரல், "நீங்கள் செம்மையாகவேயிருக்கின்றீர்கள்" என்றார். அதற்குப் பிரௌன், "எனக்கு எல்லாம் பிசகாய்த் தோன்றுகின்றது. என் பெயர் பிரௌன் அன்று. யான் எங்கேயிருக்கின்றேன்?" என மீண்டும் வினவ, ஏரல் "நீங்கள் இருப்பது நாரிஸ்டன்" என்றார். பிரௌன், "அவ்வூர் எங்கேயுள்ளது?" என, ஏரல், "இது பென்சில் வானியாவில் உள்ளது" என்றார். பிரௌன், "அஃது எந்த நாட்டைச் சேர்ந்தது?" என மீட்டும் வினவ, ஏரல் "அது பிலடல்பியாவுக்கு மேற்கே பதினேழு கல் தொலைவில் உள்ளது" என்றார். பிரௌன், "இஃது இந்தத் திங்களில் எத்தனையாவது நாள்?" எனக் கேட்ப, ஏரல், "இது 14 ஆம் நாள் " என்று மொழிந்தார். பிரௌன், "அப்படியா? இந்த ஊரிற் காலவட்டம்

பின் நோக்கிச் செல்கின்றதோ? யான் வீட்டைவிட்டுப் புறப்பட்டது 17 ஆம் நாள் ஆகும்" என்றனர். அதற்கு ஏரல், "எந்தத்திங்களில் 17 ஆம் நாள்?" என வினவப் பிரௌன் "சனவரித் திங்களில் 17 ஆம் நாள்" என்றனர். அதற்கு ஏரல், "இது மார்ச்சுத் திங்களின் 14 ஆம் நாள் அன்றோ" எனக் கூறினர்.

பின்னர்ப், பிரௌன் என்னும் அத்துரைமகனார்க்கு ஏதோ மூளை பிசகியிருக்கின்றதென எண்ணி, ஏரல் ஒரு மருத்துவரை அவர்பால் உடனே வருவித்தனர். அன்செல்பூரன் அம் மருத்துவரைக் கண்டதுந் தமது வரலாற்றினை எடுத்துச் சொல்லி, சனவரி 17 ஆம் நாளிலிருந்து இன்றுவரையில் நிகழ்ந்ததொன்றுந் தமக்குத் தெரியாதென உறுதிமொழி புகன்றார். மேலும், இங்குள்ள இக் குடும்பத்தார், யான் பென்சில் வானியாவிலுள்ள நாரிஸ்டன் ஊரில் இருக்கின்றேனென்றும், இவ் வீட்டில் ஆறு கிழமைகளாகக் குடியிருக்கின்றேனென்றும்,இவ்வாறு கிழமை களும் இவர்களொடு கூடவே யான் இருக்கின்றேனென்றும் நுவல்கின்றனர். ஆனால் இன்றைக் காலைக்கு முன் இவர்களில் எவரையேனும் யான் பார்த்ததாக நினைவுகூரக் கூடவில்லை" என்று வற்புறுத்திக் கூறித், தமது ஊரிலுள்ள ஆரிசு என்னுந் தம் மருமகனார்க்கு ஒரு கம்பிச் செய்தி விடுக்கும்படி அம் மருத்து வரை வேண்டிக் கொண்டார். அங்ஙனமே அம்மருத்துவரும் அவர்தம் மருமகனார்க்கு ஒரு கம்பிச்செய்தி விடுப்ப, அவரிடமிருந்து போந்த விடையானது "ஆம், அன்செல்பூரன் என் மாமனாரேயாவர். அவர் எங்கே யிருக்கிறாரென்பதும், நலமாக இருக்கிறாரா என்பதுந் தெரிவியுங்கள். மற்றைச் செய்திகளும் விளக்கமாக எழுதுங்கள்" என அறிவித்தது.

அதன்பின் அன்செல்பூரன் மருகரான ஆரிசு என்பவர் நாரிஸ்டன் என்னும் ஊருக்குப்போய், அங்கே தன்மாமனார் பிரௌன் என்னும் பெயர்பூண்டு வைத்திருந்த கடையிலுள்ள சரக்குகளையெல்லாம் ஏலவிற்பனைசெய்து, அவருடைய அலுவல்களையெல்லாம் ஒழுங்குபடுத்திக் கொண்டு, அவரைத் தமதூர்க்கும் அழைத்துவந்தார்.

பிறகு, அன்செல்பூரனின் இருவேறுவகை வாழ்க்கை நிலை களையுங் கேள்வியுற்ற மனநூல் ஆசிரியர்கள் மிகவும் வியப் புற்றவர்களாகி அவர்பாற் போந்து அவரது மனவியற்கையை

நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்கலாயினர். அன்செல்பூரன் கள்ளங்கவடறியாத வாய்மையாளரென்பதும், அவர் பிறரை ஏமாற்றுதற்காக அங்ஙனம் வேற்றூர்க்குப் போய்த் தமது பெயரை மாற்றிக்கொண்டு கடை வைத்தில ரென்பதும் ஆராய்ச்சி வல்ல அவ்வாசிரியர்கள் திட்டமாய்த் தெரிந்துகொண்டனர். அற்றேல், ஒருவரையொருவர் அறியா இருவேறு ஆட்கள்போல் அன்செல்பூரன் ஒருவரே நடந்துகொண்டதென்னை? என்று ஆராய்வான்புகுந்து, புகழ்பெற்ற உளநூற் பேராசிரியராகிய **உவில்லியம் ஜேம்ஸ்** என்பார், அவரை அறிதுயிலிற் செலுத்தி, அவரது வாய்ப்பிறப்பைக் கேட்டனர். அன்செல்பூரன் என்னுந் தமது பெயரையும் அப்பெயர் பூண்டு தாம் நடாத்திய வாழ்க்கையின் வகைகளையும் முற்றுமே மறந்து தாம் பிரௌன் என்னும் பெயருடையவரென்றும் அப்பெயரொடு தாம் நடாத்திய வாழ்க்கையின் வகைகள் இவ்விலையென்றுந் தாம் நாரிஸ்டன் என்னும் ஊரிற்றங்கி வாணிகஞ் செய்து வாழ்ந்த வரலாறுகளையெல்லாம் ஒழுங்காக எடுத்துக் கூறினார். அதன்பின் அவ்வறிதுயிலினின்றும் அவர் எழுப்பப்பட்ட பின்னர்த், தாம் அன்செல்பூரன் என்னும் பேரொடு வாழ்ந்த தமது பழையவரலாற்றைத் தவிரத், தாம் இடையே பிரௌன் என வேறுபெயர் பூண்டு வேறோர் ஊரிற் றங்கி வாழ்ந்த வரலாற்றைச் சிறிதுமே யறிந்திலர். இதனைக் கண்டு இறும்பூதுற்ற அவ்வுளநூற் பேராசிரியர், ஒருவரது உணர்வே இருவேறுவகையாய்ப் பிளவுபட்டு ஒன்றையொன் றறியாதாய் இயங்கி இயக்கத்தை மாற்றி, இரண்டனையும் இணைத்து ஒன்றையொன்றுணருமாறு செய்தற்கு, அறிதுயின் முறைகளினாலேயே எவ்வளவோ முயன்றுபார்த்தும், அது கைகூடாமலே போயிற்று.

இம்மெய்ந்நிகழ்ச்சியின் ஆராய்ச்சியிலிருந்து, நனவுங்கனவும் அல்லாமல் அவையிரண்டற்கும் வேறான ஓர் உணர்வு நிலையும் மக்கள் சிலர்க்கு உண்டென்னும் வாய்மை தெற்றென விளங்கா நிற்கும். எனவே, அத்தகையதொரு புதுநிலையிலிருந்து தொடர்பாக நிகழும் உண்மை நிகழ்ச்சிகள் உண்மையே யாகுமல்லாற் பொய்யாகா வெனவுங் கடைப்பிடித்தல் வேண்டும். இங்ஙனங் கனவும் நனவும் அல்லா ஓர் உணர்வு நிலையிலிருக்கும் ஒரு சிலர்க்கு ஒரோவொருகால் நினைவுருவங்கள் தோன்றும் நிகழ்ச்சிக்கு இன்னும் இரண்டு மெய்ந்நிகழ்ச்சிகள்

*ஈண்டெடுத்துக் காட்டுவாம். சமய குருவாகிய ஜப்* (C.H. Jupp) *என்பவர் பின்வருமாறு எழுதுகின்றார்:*

*“1875 ஆம் ஆண்டு ஓர் ஆடவன் தன் மனையாளையும் ஆறு பிள்ளைகளையும் விட்டு இறந்து போயினான். மூத்த பிள்ளைகள் மூவரும் எமது அகதிப்பிள்ளை நிலையத்திற் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதற்கு மூன்றாண்டுகள் கழித்து அப் பிள்ளைகளின் தாயும் இறந்து போயினாள்; அவர்கட்கு நேயராயுள்ளவர்கள் கையொப்பஞ் சேர்த்து மற்றைப் பிள்ளைகளையும் இந்நிலையத்திற்கே விடுத்தனர். அங்ஙனம் வந்த பிள்ளைகளுட் கடைசிப் பிள்ளைக்கு நான்காண்டுகள் இருக்கும். இப் பிள்ளைகள்வந்து சேர்ந்த ஆறு திங்களுக்குப் பின்னர், அவர்களைக் காணச்சிலர் திடுமென ஒரு மாலைநேரத்தில் வந்து சேர்ந்தனர். பிள்ளைகள் படுக்கும் அறையில் ஒன்பது படுக்கைகளிற் சிறார் படுத்திருந்தனர்; ஒன்று தான் வெறுமையாய் இருந்தது. வெறுமையாய் உள்ள அதில் இந்நிலையத்தின் காவலர் துயில்கொள்ள இசைந்தனர்.*

*“மறுநாட்காலையிற் சிற்றுண்டி அருந்தா நிற்கையில், அக் காவலர் பின்வருஞ் செய்தியை எடுத்து மொழிந்தார்: ‘யான் நினைவுகூர்ந்து சொல்லக்கூடியவரையில், யான் பதினொரு மணியளவில் துயில் கொண்டேன்; சிறிது நேரம் மிக அயர்ந்துறங்கினேன்; அதன்பின் ஏதொரு காரணமும் இன்றித் திடீரென விழித்தேன்; பிள்ளைகள் படுத்திருந்த முகமாயின்றிச் சுவரை நோக்கியபடியாய்ப் படுத்திருந்த யான் எனது முகத்தை அவர்களை நோக்கித் திருப்புதற்கு ஒரு நினைவு கொண்டேன். அங்ஙனந் திருப்புதற்கு முன்யான் நிமிர்ந்துபார்க்க, மென்மை யான ஓர் ஒளியை அவ்வறையினுட் கண்டேன். வெளியேயுள்ள நீள அறையில் ஆவி விளக்கு மங்கலாய் எரிந்தது; படுக்கையறையின் கதவுகள் திறந்திருந்தமையால், அவ்வொளி அவ்வெளியறையிலிருந்து வந்ததெனவே எண்ணினேன். ஆனால், உடனே விளங்கியபடி அஃது அங்கிருந்து வந்ததன்று. யான் அதனை நோக்கித் திரும்புதலுங், திகைப்புறத் தக்கதொரு தோற்றம் என் கண்ணெதிரே தோன்றிற்று. எனது படுக்கைக்கு இரண்டாவதாயுள்ள ஒரு கட்டிலின் மேல், அவ்வறையின் அதேபக்கத்தில், ஒரு சிறு மங்கலொளி மிதந்து நின்றது; அது*

நிலாக்காலத்திரவில் முழுமதியைச் சூழ்ந்து காணப்படும் ஒளிவட்டத்தின் துலக்கம் வாய்ந்ததாய் இருந்தது. புதுமையான அத்தோற்றத்தைப் பார்த்துக்கொண்டே யான் எழுந்து என் படுக்கையின்மேல் நேராக அமர்ந்தேன்: அதன்பின் என்கைக் கடிகாரத்தை எடுத்துநோக்க அப்போது ஒரு மணியாக ஐந்துநிமிடங்கள் இருந்தன. எல்லாம் அமைதியாய் இருந்தது; பிள்ளைகள் எல்லாரும் அயர்ந்து உறங்கினர். அவ்வொளி வட்டமானது மேன் மிதந்துகொண்டிருந்த கட்டிலின்மேல், முன்னே கூறிய ஆறு பிள்ளைகளிற் கடைசிப்பிள்ளை உறங்கிக் கொண்டிருந்தது. யான்கனவு தான்காண்கின்றேனோவென்று என்னுள்ளே வினாவினேன். இல்லை! நான் நன்றாக விழித்துத்தான் இருந்தேன். ஐந்தடி யுயரந் தோன்றிய அவ்வொளிப்பிழம்பை, அஃது எதுவாயிருந்தாலும், எழுந்து தொட்டுப் பார்ப்பதற்கு எனக்குள் ஓரெண்ணம் உண்டாயிற்று. அதன்படியே யான் எழ, ஏதோ ஒன்று என்னைப் பின்னுக்குப் பிடித்திழுப்பதுபோற் காணப்பட்டது. யான் என் காதினால் ஏதுங் கேட்கவில்லையென்பது திண்ணமே; என்றாலும், எழாதே படுத்துக்கொள், அஃது உனக்கு ஏதும் ஊறு செய்யாது" என்னுஞ் சொற்கள் மட்டும் என்னுள்ளத்திற் புலனாவதை உணர்ந்தேன். உணர்ந்து அதன்படியே உடனே செய்தேன். அதன்பிற் சிறிது நேரத்திலெல்லாம் யான் துயின்றுவிட்டேன். பிறகு யான் எப்போதும் விழித்துக்கொள்ளும் நேரப்படி காலை ஐந்துமணிக்கெல்லாம் உறக்கம் நீங்கி எழுந்தேன். அதன்பின் ஆறு மணிக்கு எனது கட்டிலுக்கு எதிர்கோடியிலிருந்த படுக்கை யிலிருந்து துவங்கி, ஒவ்வொரு பிள்ளைக்கும் யான் உடை உடுப்பித்துக் கொண்டு வருகையிற், சென்ற இரவு ஒளிவட்ட மொன்று மேன் மிதந்து கொண்டிருந்த படுக்கை யண்டை வந்து, அதிற் படுத்திருந்த சிறுவனையெடுத்து என்னுடைய முழந்தாள்களின்மேல் வைத்து, அவனுடைய உடைகளை அவன் மேல் அணிவித்தேன். அப்போது மற்றைச் சிறுவர்களுடன் பேசிக் கொண்டிருந்த அப்பொடியன், சடுதியிற்றன்பேச்சை நிறுத்தி, எனது முகத்தை ஒருபுதுமையான குறிப்புத் தோன்ற உறுத்துப் பார்த்து, 'ஓ! ஐயா, என் அம்மை நேற்றிரவு என்னிடம் வந்தாள்; நீங்கள் அவளைக் கண்டீர்களா?' என்று என்னை வினவினான். ஒரு நொடிப் பொழுது யான் அப் பொடியனுக்கு விடை

சொல்லாதிருந்தேன். அதன்பின் யான் அதற்கு விடை சொல்லாது விடுதலே நன்றெனநினைந்து, "நாம் கடியப் போக வேண்டும்; இல்லாவிட்டாற் காலையுணவு தப்பிவிடும்" எனப் பகர்ந்தேன் என்பது.

"அச்சிறான் மறுபடியும் அந்நிகழ்ச்சியைக் குறித்துப் பேசியதேயில்லை. அதைப்பற்றி ஏனையோரும் அவனுக்கு அதைச் சொல்லவும் இல்லை. அவ்வகதிநிலையக் காவலர் அது தம் அறிவுக்கு எட்டாத மறைபொருளாயிருக்கின்றது எனப் புகன்றார். நிகழ்ந்த உண்மையை நிகழ்ந்த படி சொல்லி, அவ்வளவில் அதனை நிறுத்திவிட்டார்; ஆனாற், றாம் கூறியவற்றுள் ஒன்றிலுந் தாம் பிழைபட வில்லை யென்பதை முற்றுந் தம்மனமார நுவன்றனர்."

இம் மெய்ந் நிகழ்ச்சியிற் போந்த ஒளியுரு, அதனைக் கண்ட அப் பொடியன்றன் அன்னையின் உருவமேயாகும். தன் பிள்ளைகளை அகதியாய் விட்டிறந்த தாயானவள் தனது நுண்ணுடம்பில் நின்று நினைத்த நினைவானது, அவளை யொத்ததொரு வடிவினை அவடன் கடைசிப் பிள்ளையின் கண்ணெதிரே தோற்றுவிப்பதாயிற்று. அவள் ஈன்ற ஏனைப் பிள்ளைகள் எல்லாம் அவள் இறந்தஞான்று சிறிது வினாத் தெரிந்தவர்களாதலால், அவர்களைப்பற்றி அவள் கவலை கொள்ளாது, வினாத்தெரியாப் பொடியனாகிய தன் கடைசிப் பிள்ளையைப்பற்றியே கவலைகொண்டிருந்தமையால், நுண்ணுடம்பிற் சென்ற பின்னரும் அவள் அப்பிள்ளையையே மிகுதியும் நினைத்தாள் ஆகல் வேண்டும். அதனாலேயே அவளுருவு அப் பிள்ளையின் படுக்கைக்கு மேன் மிதந்து காணப்படுவதாயிற்று. அவ் வகதிநிலையக் காவலருஞ் சமயகுருவுமாகிய ஐப் என்பவர் தெளிவுக்காட்சி (Clairvoint vision) உடையராயிருந்தமையால், அவருந் தமது படுக்கையில் இருந்தபடியே அவ்வுருவினை ஒளிவடிவாய்க் கண்டார். தன் அன்னையின் அவ்வுருவினைக் கண்ட பொடியனுக்குள்ள அளவினும், அக் குருவுக்குள்ள தெளிவுக் காட்சியின் வலிவு சிறிது குறைந்த நிலையில் இருந்தமையால், அவர் அவ்வுருவின் வடிவினைக் காணமாட்டாமல், அதனை ஓர் ஒளிப் பிழம்பாகவே கண்டார். இவ்வாறு அந்நினைவுருவினைக் கண்ட

அவ் விருவரில் அச்சிறுவன் மட்டுங் கனவு நிலையிலிருந்தே தன் அன்னையின் அவ்வுருவினைக் கண்டவன் ஆவன். மற்று, அந்நிலையக் காவலராகிய சமயகுருவோ கனவுக்கும் நனவுக்கும் இடைப்பட்ட தொரு நிலையில் இருந்தார் என்பதே புலனாகா நிற்கின்றது; எதனாலெனின், அவ் வொளிவட்டத்தைக் கண்டு தமது படுக்கையின்மேல் எழுந்து உட்கார்ந்தவர், பின்னர் அதனைத் தொட்டுப் பார்ப்பதற்கு விரும்பி எழுந்தபோது எழமாட்டாமற் பின்னே இழுக்கப்பட்டனர் எண்பதனால்; அவர் தாம் வேண்டியபடி இயங்கவல்ல நனவு நிலையில் இருந்தனராயின் அவ்வாறு அவரது முயற்சி தடைபடுதற்கு இடம் இராதன்றோ? மற்று, அவர் கனவுநிலையிலும் இருந்திலர்; ஏனெனில் அவ்வுருவினைக் கண்டெழுந்தவர், "யான் கனவுதான் காண்கின்றேனோ?" என்று தம்முள்ளே தாம் வினவினராகலின்; கனவுநிலையிலிருப்பவர் அதனை நனவாகவே கருதி யிருப்பரல்லது கனவாக நினைத்தல் இல்லையன்றே. இங்ஙனம் இரண்டும் அல்லாதாகவே, அவர் அப்போதிருந்த நிலை, அறிதுயிலில் இருப்பார் நிலையினையுந் தூக்கத்தில் நடப்பார் நிலையினையும் ஒத்ததொன்றாகல் வேண்டுமென்பதே துணிபு என்க.

இன்னும், மேலதனோடொத்த வேறொரு மெய்ந்நிகழ்ச்சி யினையும் ஈண்டு மொழிபெயர்த்து வரைகுதும். மார்த்தா என்னுந் துறவுமாதரார் ஓர் ஆசிரியருக்குப் பின் வருமாறு எழுதுகின்றார்:

"1891 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 6 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பாஸ்டியன் என்னும் நோயாளியைப் பேணும்படி யான் அழைக்கப்பட்டேன். அன்றிரவு யான் ஐந்து நிமிஷம் அரைத்தூக்கத்தில் இருந்தபிறகு, ஒரு கனவு கண்டேன் - யான் கண்டது கனவெனக் கூறுதல் பொருந்துமாயின், யான் தூக்கத்திலிருப்பதாகவே நினைந்தேன். ஓர் ஒளியும் ஓர் ஒலியும் அங்குள்ள அடுப்பண்டையிலிருந்து வந்தன. ஒரு மாது வெளியே போந்தனள்; ஆனால் அவளது உருவம் யான் இதற்குமுன் அறிந்ததாய் இல்லை; என்றாலும், அவளது குரலொலி மட்டும் பாஸ்டியன் அம்மையாரின் குரலொலியை யொத்திருந்தது. யான் உங்களைப் பார்ப்பதுபோலவே அவளை அத்துணைத் தெளிவாகக் கண்டேன். சிசிலி என்பவள் உறங்கிக் கொண்டிருந்த

கட்டிலண்டையில் அவள் சென்று அப் பெண்ணின் கையை யெடுத்துச், 'சிசிலி எவ்வளவு அழகாய் இருக்கின்றாள்!' என நுவன்றனள். யானும், எனது கனவில், அவளைப் பின்பற்றிச் சென்றேன். பின்னர் அவள் கதவைத்திறந்து மறைந்து போயினாள்.

"அது நேர்ந்தது இன்னநேரத்திற்றான் என்று என்னால் திட்டமாய்ச் சொல்லல் ஏலாது! ஆனாலும், அஃது அவ்விரவின் முற்பொழுதிற் பதினொருமணிக்கும் ஒரு மணிக்கும் இடையே தான் தோன்றியதாகல் வேண்டும்; என்னிடத்திற் கைக்கடிகாரம் இல்லாமையால் அந்நேரத்தைக் குறித்துச் சொல்லல் என்னால் முடியவில்லை. இக்கனவு கண்டவுடனே யான் விழித்துக் கொண்டேன். சிசிலியை யான் எழுப்பவில்லை; ஏனென்றால், அதைப்பற்றி ஏதும் அவளுக்குச்சொல்ல நான் விரும்பவில்லை; ஆயினும் அக் கனவு என்னுள்ளத்தில் மிகவும் உறுத்தினமையால், மறுநாட் காலையில் யான் விழித்தபிறகு அதனை அவட்குக் கூறினேன். அங்ஙனந் தோன்றிய அம்மங்கை தன்கையில் ஒரு மெழுகுதிரி ஏந்திச் சென்றமையும், அவளுடைய ஆடைகளின் மேற் பலநிறப் புள்ளிகள் இருந்தமையும் ஆகிய குறிப்புக்களைத் தவிர வேறேதும் யான் சொல்ல மாட்டாதவளா யிருக்கின்றேன்.

"இதற்கு முன் ஒருகால் இறந்துபோன என் அன்னை என் கண்ணெதிரே, தோன்றி, 'நீ கடவுளைத் தொழுங்காலங்களில் என்னை நினைப்பதில்லையே' என்று சொல்லக் கேட்டதை யன்றி, இத்தகையதொரு கனவு வேறு கண்டிலேன்" என்பது.

மார்த்தா என்னுந் துறவுமாதரார் பாஸ்டியன் என்பவரைப் பேணியிருந்த அவ்விரவிற் கண்ட ஒரு பெண் மகள் உருவத்தை, அதேயிரவில் அவர்தம் மகளாருங் கண்டு தெரிவித்தெழுதிய கடிதம் வருமாறு:

"என் தந்தையார் நோயாய்க் கிடந்தபோது துறவுமாது எங்கள் இல்லத்தின் மேன்மாளிகையில் அவரைப் பேணிக் கொண்டிருந்தனள். அப்போது யானும் என் தமையனுங் கீழேயிருந்தோம். இரவு பத்துமணிக்கு யான் என் தமையனைக் கீழேயே விட்டு, மேன்மாளிகையில் என் படுக்கைக்குச் சென்றேன், பின்னர் பதினொருமணிக்கும் நள்ளிரவுக்கும் இடையே - யான் விழித்திருந்தேனோ அல்லது உறங்கிக் கொண்டு தான்

இருந்தேனோ அறிந்திலேன், பெரும்பாலும் அவ்விரண்டிற்கும் நடுவான நிலையில் யான் இருந்திருக்கலாம் - எனது கட்டிலின் அருகே ஓர் ஆவியுருவத்தையொத்த வெள்ளை நிழலொன்று நிற்றலைக் கண்டேன்; அதனை இன்னாரது வடிவமென்று தெரிந்துகொள்ள எனக்கு நேரமில்லை; உடனே யான் பெருந்திகில்கொண்டு இட்ட கூக்குரலானது என்தமையனைத் திடுக்கிடச் செய்யவே, அவனும் மேலே படுக்க வந்தவன், எனது அறைக்கு விரைந்து போந்து, யான் வெருக்கொண்டு சுற்றிலும் விழித்தலைப் பார்த்தான். அவ்விரவின் பிற்பகுதி அமைதியாய்க் கழிந்தது.

"மறுநாட்காலையிற் சிசிலி யென்பவள் துறவுமாது கண்ட கனவினை எனக்கு எடுத்துரைத்தனள். ஆனாற், சிசிலி தான் ஏதொன்றுங் காணவாவது கேட்கவாவது இல்லை. நான் அவள் சொன்ன அக் கட்டுக் கதையைக் கேட்டு அவள் மேற் சிறிது சினங்கொண்டு, அதனை ஒரு புல்லிய கனவெனவே சொல்லிவிட்டேன்; அதே யிரவில் அதே நேரத்திற் றோன்றிய அவ்விரண்டு தோற்றங்களையும் பற்றி யான் பேரச்சம் அடைந்தமையால், அவைகளைக் குறித்து ஏதுங் கேட்பதும் எனக்குப் பெருந்திகிலாயிருந்தது. சிசிலியும் அத்துறவுமாதும் யான் கண்ட கனவைப்பற்றி ஏதுமே அறியார். இரண்டு நாட் கழியும் வரையில் நான் அதனை அம் மாதுக்குச் சொல்லவில்லை," என்பது

இம் மெய்ந்நிகழ்ச்சியிற் போந்த உருவத்தை மாதரார் இருவர் ஒரேயிரவில் ஒரே நேரத்திற் கனவுக்கும் நனவுக்கும் இடைப்பட்டதொரு நிலையிலிருந்து கண்டமையும், அங்ஙனங் கண்ட அவ்வுருவினை ஒருவர் ஒரு பெண்மகள் வடிவமாகவும், மற்றவர் ஒரு வெள்ளிய நிழலாகவுங் கண்ட பான்மையும், இருவரும் அவ்வுருவினைத் தமக்குத் தெரிந்த ஒருவரது வடிவமாகத் தெரிந்துகொள்ள முடியாமையுங்கருத்திற் பதிக்கற்பாலனவாகும். தாம் கண்டறியாத ஒருவரது உருவம் அம் மாதரார் இருவருமே நினையாதிருக்கையில் அவர்தங் கட்புலனெதிரே தோன்றியதனை உற்றாராயுங்கால், அவ்வுருவத் தோற்றம் உண்மையானதே யன்றி அம் மாதரார் எவரையேனும் நினைந்த நினைவின் தோற்றமாதல் செல்லாது. இனி, அத்

தோற்றம் இறந்து போன ஒரு பெண்மகளின் நினைவின் தோற்றமோ அல்லதவளின் நுண்ணுடம்பின் தோற்றமோ, இன்னது தானென்று உறுதிப்படுத்துதற்குச் சான்றில்லை. அதுநிற்க.

இனி, நனவின்கட் பலர்க்குத் தோன்றிய சில நினைவுருவ மெய்ந்நிகழ்ச்சிகளை ஈண்டு எடுத்துக் காட்டுவாம்.

1850 ஆம் ஆண்டு, பிப்பிரவரி 16 நாள், பால்சன் எனப் பெயரிய ஓர் ஆங்கிலமாதரார் தமது இல்லத்தின் அடுக்களையிற் சாய்ங்கால் வேளையிற் றங்குடும்பத்தினருடன் தேநீர் பருகியபின், தன்னேவற்காரி, மேன்மாளிகையிற் படிக்கும் அறையை ஒழுங்கு செய்து வைத்தனளாவென்று பார்க்கும்பொருட்டுப் படிமீது ஏறிச்சென்றார். படிகளின்மேல் உச்சியிற்சென்ற, சிறிது காலத்திற்குமுன் தம் மிடமிருந்துபோன ஒரு மங்கை தம்மைக் கடந்து செல்லக் கண்டார். கண்ட அம் மங்கை கரியதொரு பட்டாடை உடுத்து, முகத்தின்மேல் வெள்ளிய மெல்லாடை கவித்திருந்தனள். அவள் அம்மாதரைக் கடந்து சென்றபோது அவள் பூண்டிருந்த அவ்வாடை சரசரவென அரவஞ்செய்தது. அவள் முகத்தை அம் மாதரார் ஒரு சிறிதுதான் பார்க்கக்கூடியவரானார். ஏனென்றால், அவள் அரவமின்றி மிக விரைவாகச் சென்று, அம் மாதரார் படுக்கும் அறையினுள்ளே நுழைந்துவிட்டனள். அவ்வுருவத்தைக் கண்டதும் அவர் 'ஐயோ காரலின்!' எனக் கூவிக்கொண்டே கீழிறங்கித் தம் கணவன் பக்கத்தே போய் உணர்விழந்து கீழ் விழுந்துவிட்டனர், பிறகு பெரும்பாடுபட்டு அவர் அக் களைப்புத் தீர்க்கப் பெற்று உணர்வுகூடி எழுந்தனர். அடுக்களையில் வேலைசெய்யும் பணிப்பெண், மறுநாட்காலையில் அடுப்பைத் துடைத்துத் துப்புரவு செய்கையில், அதே பெண்மகளுருவங் கறுப்புத்துணி யுடுத்து முகத்தின்மேல் வெள்ளாடை மூடி யணிந்தபடியாய் மார்பின் கட் குறுக்கிட்ட கையினதாய்த் தன் பக்கத்தே அமர்ந்திருக்கக் கண்டு அச்சிறுமி பெரிதும் வெருக்கொண்டாள். அதனால், அப் பணிப்பெண் அவ்வடுக்களை யறையினுட் போகச் செய்வது பெருவருத்தமாயிற்று. இங்ஙனம் அப் பணிப்பெண்ணும் அதே யுருவத்தைக் கண்ட அவ் வரலாற்றினைச் சொன்னால், அஃதம் மாதர்க்குப் பெரியதொரு நடுக்கத்தை உண்டுபண்ணுமென

நினைந்து, அவ் வீட்டிலுள்ளார் எவரும் அதனை அவர்க்கு மறுநாளிரவிலுஞ் சொல்லிற்றிலர்; என்றாலும், அவ்வம்மையாரைக் காணவந்த அண்டை வீட்டவர்கள் அவர் கண்ட அவ்வுருவத் தோற்றத்தைப் பற்றிக் கேட்டு இறும்பூதுற்று, அவர்தம் மருகியாரான காரலின் நங்கை தன் உடன்நலத்தைக் குறித்து உடனே ஒரு கடிதம் எழுதிக் கேட்கும்படி வற்புறுத்தினர். அவ்வாறே அவ்வம்மையார், தொலைவாயதோர் ஊரிலிருந்த தம் மாமன் மாமியர்க்கு ஒரு கடிதம் அடுத்தநாள் இரவே எழுதிவிடுக்க, அதற்கு விடையாக வந்த கடிதத்தில், மருகிகாரலின் உருவத்தை அம் மாதரார் கண்ட அதே நாள் மாலைக்காலத்தில் அவள் இறந்துபட்டாளென்பது குறிக்கப் பட்டிருந்தது.

இம் மெய்வரலாற்றிலிருந்து, பால்சன் மாதரும் அவர்தம் இல்லப் பணிப்பெண்ணும் விழித்திருக்கையிலேயே கண்ட காரலின் மாதின் உருவம், அம் மாது இறக்குந் தறுவாயில் தான் மாமியாகிய பால்சன் அம்மையாரை அன்பினால் நினைந்தமையால் உண்டாயதாகும். இப்பெண் மகள் தான் இறந்துபோதற்குச் சிறிது காலத்தின் முன் பால்சன் அம்மையார் இல்லத்திற் போந்து சிலநாள் தங்கியிருந்து அவருடன் அன்பினால் அளவளாவி யிருந்தவள். அங்ஙனம் அளவளாவி யிருந்து பிரிந்த சின்னாட்களில் அவள் இறக்க நேர்ந்தமையின், அவள் அந் நேரத்தில் அன்பிற்சிறந்த தன் மாமியை உறுத்து நினைக்கலானது இயற்கையே யாம். உறுத்து நினைக்கும் நினைவு நினைந்தாரது வடிவினை நினைக்கப்பட்ட அன்புடையார் கண்முன்னே தோன்றச்செய்தலும் ஆங்காங்கு நிகழா நிற்றலின், பால்சன் அம்மையாரும் அவர்தம் பணிப் பெண்ணுங் கண்ட அவ்வுருவம் நினைவுருவமேயல்லாது ஆவியுருவம் அன்றென் பது தெளியப்படும். அற்றேல், அவ்வுருவம் அன்பின் றொடர்பு இல்லாத அப்பணிப் பெண்ணின் கண்கட்கும் புலனாய தென்னையெனின்; ஒருவர் தம்முறவினர் ஒருவரது இல்லத்திற் போந்து அளவளாவியிருக்குங்கால், அவ் வில்லத்து ஏவலாளரில் அறிவுவாய்ந்த ஒருவர் தமக்கு அன்பினாற் பணி செய்தன ராயின், அத்தகைய ஏவலரையும் அந்நேரத்தில் நினைப்பதூஉம் இயற்கையே யுண்டாமாகலின், அவ்வுருவம் அப்பணிப் பெண்ணுக்குந்தோன்றலானதுபொருத்தமேயாமென்க.

இனித் 'தேகிரீன்' என்னும் படைஞர் கண்ட நினைவின் தோற்றமும் விம்மிதம் பயப்பதொன்றாய் இருத்தலின் அதனையும் இங்கெடுத்துக் காட்டுதும்; அவர் பின் வருமாறு வரைகின்றார்:

"யான் ஷாங்கையில் இருந்தபோது இம் முதல் நிகழ்ச்சி தோன்றுவதாயிற்று. அது 1854 ஆம் ஆண்டு மேத்திங்கள். இராப்பொழுதோ மிகவும் அழற்சி வாய்ந்ததாயிருந்தது. சீனர்கள் திடீரெனப் போந்து தாக்குவரென்னும் அச்சத்தால், யான் அப்போது எம்மைச் சூழவிருந்த இடர்களை நினைந்த வண்ணமாய் என் படுக்கை மேல் மல்லாந்து படுத்து விழித்துக் கொண்டிருந்தேன், வரவரஏதோ ஒன்று என் படுக்கை யறையினுட்டோன்றுவதாக உணர்ந்தேன். என் கட்டிலுக்கு ஓரடிதொலைவில் மூடுபனிபோன்ற மெல்லிய ஒரு வெள்ளிய பொருள் இடைவெளியில் தொங்குவதுபோல் எனக்குத் தென் பட்டது. முதலில் அஃது ஒருநிலாக்கதிரின் றோற்றமா யிருக்கலாமென எண்ணி அதனை உன்னியாமலிருந்தேன்; பின்னர்ச் சிறிது நேரத்தில் அஃது என் தங்கை பானி என்பவளின் வடிவமென அறியலானேன். துவக்கத்தில் அவளது முகந்துயரக் குறிப்புடையதாகக் காணப்பட்டது; பிறகு அதன் கண் இனியதொரு புன்னகை தோன்றலாயிற்று; என்னை அவள் இன்னாரெனத் தெரிந்துகொண்டாற் போல் என் முகமாய்த் தன் தலையை வளைத்துநோக்கினாள். அத்தோற்றத்தைப் பார்த்து யான் மிகவும் மருண்டுபோனமையால், அதனொடு பேசுதற்கும் எனக்கு நா எழவில்லை; என்றாலும், அதைப்பற்றி எனக்குச் சிறியதோரச்சமும் உண்டாக வில்லை. அவ்வுருவம் முதலில் எவ்வாறு சிறிது சிறிதாய்க் கட்புலனாகியதோ அவ்வாறே அது சிறிது சிறிதாய் மறைந்தேகியது. பின்னர் யாம் அறிந்த செய்தியால், யான் என் தங்கையின் உருவத்தைக் கண்ட அதே நாளிலே தான் அவள் திடுமென இறந்துபட்டாளென்பது விளங்கலாயிற்று.

"இந்நிகழ்ச்சிக் குறிப்புகளை யான் தங்கட்கு எழுதி விடுப்பதாக உறுதிசொன்ன அதேநாளில் என் மற்றொரு தங்கை **எலிமிசிலிக்கும்** அவற்றை எழுதியிருந்தேன். அவள் அதற்கு விடையாக வரைந்த கடிதத்திற், "பானி எனக்குமுன்னே தோன்றிய

நேரத்தில் யான் விழித்திருக்க வில்லை; ஆனாலும், யான் உடனே கண்விழித்து, நீங்கள் விளக்கியெழுதியவாறே அவளது உருவத்தோற்றம் இருக்கக்கண்டேன். யான் அப்பொழுதே என் கைகளை நீட்டிப் “பானி! பானி! எனக் கூவினேன். அவள் என்னைப் பார்த்துப் புன்சிரிப்புக் கொண்டு, என்னைவிட்டுப் பிரிவதிற்றுயரமுற்றாள்போற் காணப்பட்டுப், பின்னர்த் திடீரென மறைந்துபோயினாள். என்பது குறிக்கப்பட்டிருந்தது.

இது நேர்ந்தகாலத்தில் தேகிரீன் என்பவரும், அவர் தம் மற்றொருதங்கை எலிமிசிலி என்பவளும் ஒருவரை விட்டொருவர் ஆயிரமைலுக்கப்பால் விலகியிருந்தோராவர். அதனால், அவ்விருவருந், தம் தங்கை மிக நோயாய்க் கிடந்தனளென்றாவது இறந்துபோவளென்றாவது நினைத்தற்கு இடமேயில்லை. ஆனால், இறந்துபோன தங்கையோ தான் உயிர்விடுதற்குமுன், தனது கட்டிலைச் சூழ இருந்தாரிடத்தில் தன் தமையனையுந் தமக்கையையும்பற்றிப் பேசியதுண்டு. அவள் உயிர்நீத்தது 1854 ஆம் ஆண்டு மே, 30 - இல் இரவு 10 மணிக்குமேல் 11 மணிக்குள்ளாகும்.

இன்னுங், ‘கூட்’ எனப் பெயரிய ஓரம்மையார் 1872 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் ஈற்றிலோ அல்லது டிசம்பர்த்திங்கள் முதலிலோ ஒருநாள் விடியற் காலையில் ஐந்து மணிக்குமேல் ஆறுமணிக் குள்ளாகப் பகலவன் வெளிச்சந்தோன்றுதற்குச் சிறிது முன்னே தோன்றிய ஓர் உருவத் தோற்றத்தால் துயிலொழிந்து விழித்துக் கொண்டார். அவ்வுருவமானது நீண்டவடிவினதாய் இரவிற் பூணும் ஆடையணிந்து அவ்வம்மையாரின் கட்டிலைக் குனிந்து நோக்கக்கண்டார். அதனை அவ்வம்மையார் உற்றுநோக்க, அது தம் நாத்துணாரின் வடிவமாய் இருக்கக்கண்டதுடன், அது தம்மைத் தன் கையாற் றொட்டதெனவுந் தெளிவாய் உணர்ந்தார்.

அவ்வுருவம் அங்ஙனம் அவ்வம்மையார்க்குத் தோன்றியது போலவே, நெடுந்தொலைவில் வேறோர் ஊரில் உயிர் வாழ்ந்த முதியோளான தன் அத்தையின் முன்னுந் தோன்றியது. அம் முதிய மாதை அணுகி அத் தோற்றத்தைப் பற்றிக் கூட் அம்மையாரின் கணவர் கேட்க, அவள், ஒரு நாள் விடியற் காலையில் தன் படுக்கையறையின் ஓர் இருண்ட மூலையி

லிருந்து ஒருசுடரொளிவடிவாய் அத்தோற்றம் வந்த தென்றும், அஃது அத்துணையொளியொடு துலங்கினமையால்அதனைத் தன் மருமகளெனவேதான் கண்டுணர்ந்தனளென்றும், அவ் வுருவத்தின்மேற் காணப்பட்ட ஆடையில் அதன் பூத்தையலைக் கூடத் தான் காணக்கூடியதாயிருந்ததென்றும் எடுத்துரைத்தாள்.

இனித், தன் அத்தையார்க்கேயன்றிக், கூட அம்மையாரின் கணவர்தம் தமக்கையார் முன்னிலையிலும் அத்தோற்றம் அதேநாளின் அதேபொழுதில் அவ்வொளி வடிவிலேயே தோன்றிற்றென்பதும் பின்னர்த் தெரியலாயிற்று.

இவ்வாறு வெவ்வேறாக வெவ்வேறூரிலிருந்த மூவர் முன்னிலையிலும் விடியற்காலையில் அவர் விழித்துக் கொண்ட நேரத்திற், கூட அம்மையின் நாத்துணார் வடிவந் தோன்றிய வியத்தகு நிகழ்ச்சியை, அம் மூவரும் பின்னர் ஒருங்காராய்ந்து பார்க்க, நெடுந்தொலைவில் அமெரிக்கா தேயத்திற்குத் தன் கணவருடனுந்தன் மூன்று பிள்ளை களுடனுஞ் சென்று பாஸ்டன்நகரிற் குடியேறிய அவ்விளமாது அம்மைநோயினால் இறந்துபோயினார் என்னுஞ்செய்தி அந்நகரில் வெளியான புதினத்தாளிற் குறிக்கப்பட்டிருந்த தறிந்து இறும்பூதுற்றனர். அங்ஙனம் அவள் இறந்த நேரத்திலோ அல்லததற்குச் சிறிது கழிந்தோ அவளுருவத்தோற்றம் அம் மூவர்க்குந் தோன்றிய தாதல் வேண்டுமென்பது, பிறகு அம் மூவரில் இருவர் அதனைக் கண்ட நாளையும் பொழுதையும் ஒத்து நோக்கினமையாற் புலனாயிற்று. மூன்றாம் மாதர்க்கு அத் தோற்றங் காணப்பட்ட நாள் அவராற் குறித்துவைக்கப் படாமையால் அதைப் பற்றிமட்டும் உறுதிசொல்லல் இயலவில்லையென்று அதனை ஆராய்ந்த ஆசிரியர் நுவன்றனர். அதுநிற்க.

மேற்காட்டியவாறெல்லாம் உறவும் அன்பும் உடையாரில் ஒருவர் இறந்துபடுங்கால், அவர் அந் நேரத்திற்றமக்குரியாரை அன்பினால் நினைக்க, நினைத்த அந் நினைவு அந் நேரத்தில் அவரிருந்த உருவநிலையினை, நினைக்கப்பட்டார் ஒருவர் அல்லது இருவர் அல்லது மூவர் முன்னிலையிற் றோன்றச் செய்தல் மறுக்கப்படாத மெய்ந்நிகழ்ச்சிகளாய் ஆங்காங்கு உலகமெங்கணும் நிகழ்தலை விளக்கி வரைந்திட்டாம். இனி, அவ்வாறின்றித், தாம் இதற்குமுன் கண்டு கேட்டுப் பழகியறியாத

பொருள்களின் றோற்றங்களையும் மக்களின் றோற்றங்களையுஞ் சிலர் பலர் விழித்திருக்கையிலேயே தம் கண்ணெதிரே காணப் பெறுதலாகிய நிகழ்ச்சிகளும் ஒரோவொருகால் ஆங்காங்கு மெய்யாகவே நிகழ்கின்றன. இத்தன்மையவாகிய தோற்றங்களை, நினைவின் றோற்றத்தின்கீழ் கொணர்ந்து வைத்து விளக்கிக் காட்டுதல் இயலாததாயிருக்கின்றது. தாம் முன் கண்டு கேட்டுப் பழகிய பொருள்களையே ஒவ்வொருகால் மக்கள் உறுத்து நினைக்கமாட்டுவாரன்றித், தாங் காணாத கேளாத பழகாத பொருள்களை அங்ஙனம் நினைக்கமாட்டுவா ரல்லர். ஆகையால் முன்னறியாத பொருள்களின் றோற்றங்கள்சிலகாற் சிலராற் காணப்படுமாயின், அவை தம்மை உயிரோடுலவும் மக்கள் நினைந்தநினைவின் றோற்றங்களாகக் கொள்ளுதல் இயலாததேயாம். அத்தகைய தோற்றங்கள் உயிரோடுலவுவார் நினைக்கும் நினைவின்றோற்றங்களை ஆகாவிடின், மற்று அவை இறந்துபோனவர்தம் நினைவின் றோற்றங்களாகவாதல், அல்லதவர்தம் ஆவி யுருவங்களின் றோற்றங்களாகவாதல் கொள்ளுதலே முறையாம். தாம் முன் கண்டு கேட்டுப் பழகி யறியாத சில பொருள்களின் றோற்றங்களைச் சிலர் காண்டலுக்குச் சில உண்மை நிகழ்ச்சிகளை இங்கெடுத்துக் காட்டுவாம்:

1851 ஆம் ஆண்டு மேத்திங்களில் ‘உவார்டு’ எனப் பெயரிய ஓரம்மையார் தாமுந் தங்கணவருங் கண்ட ஒரு வியத்தகு காட்சியினைப்பற்றிப் பின்வருமா றெழுதுகின்றார்; “மேத் திங்களில் யானும் என்கணவரும் அண்டையிலுள்ள எங்கள் நேசர்களின் விருந்தாட்டு ஒன்றிற்கு ஒருநாளிரவிற் போய் வந்தோம். நாங்கள் திரும்பிவந்த பொழுது மணி 12. எங்கள் வேலைக்காரர்க ளெல்லாரும் அந்நேரம் உறக்கத்திலிருந்த மையால், யாங்களே வீட்டினுள் நுழைந்து, நேரே எங்களது படுக்கையறைக்குச் சென்றோம். அன்று மாலையில் அமைதியான அவ்விருந்தாட்டிலிருந்து வந்தபின், யாங்கள் பேசவேண்டுவ தொன்றும் இல்லாமையால், என்கணவனார் உடனே கட்டிலிற் படுத்து உறங்கிவிட்டார். யானும் அவரைப் போலவே படுக்கச் செல்லும்பொருட்டு மெழுகுதிரிவிளக்கை அணைத்துவிட்டு, எங்களது அறையின் வாயிற் கதவை நோக்கிய படியாய்க் கட்டிலின்மேல் ஏறினேன். அப்போது அவ் வாயிற்கதவின்

உச்சிக்கு அருகாமையில் ஒரு புதுமையான சுடரொளி அசைவொடு தொங்கிக் கொண்டிருக்கக் கண்டு மிகவும் இறும்பூதுற்றேன்; அஃது ஆறு விரற்கடை நீளமும் நாலு விரற்கடை அகலமும் உடையதாய் நீலநிறத்துடன் ஒளிர்ந்தது. அது கண்டு யான் மிகவுந் திடுக்கிட்டேன்; மேலும் மிகுதியாய்க் கலங்கியிருப்பேன்; ஆனால், எனது நெஞ்சத் துடிப்பின் அரவத்தால் என் கணவர் விழித்துக் கொண்டார். விழித்தவர் யாது நேர்ந்ததென என்னை வினவ, இன்னும் அவ் வாயிற்படியண்டை தொங்கிக் கொண்டிருந்த அச் சுடரொளியை நோக்கும்படி அவரைத் தூண்டினேன். அங்ஙனமே அவரும் அதனை நோக்க அஃது யாதாயிருக்க லாமென்று யாங்கள் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில், மற்றொருசிறிய சுடர் அதனைப் போலவே அதன்பக்கத்தே வந்து சேர்தல் கண்டோம். வியப்பினைத் தரும் இவ்விரண்டு சிறு சுடரும் பின்னர் எங்களை நோக்கி மெல்லவருதல் கண்டு, எங்கட்குண்டான இறும்பூது இவ்வளவென அளவிடற்பால தாயில்லை. அவைகள் அங்ஙனம் எங்கள் கட்டிலண்டை வரவே, யாங்கள் அவற்றின் தன்மையை ஆராய்ந்து பார்க்கத் தீர்மானித்துப், படுக்கைமேல் எழுந்துட்கார்ந்தோம். என் கணவர் அவற்றைத் தம் கைகளாற் பிடித்தார்; பிடித்து அவற்றை எம்மிடமிருந்து தொலைப்பான் வேண்டி அவற்றைத் தம் மிரண்டு கைகளின் நடுவே வைத்துத் தேய்த்தார். ஆனால் யாங்கள் பெரிதும் வியக்க, அவை சிறு சிறு ஒளிமணிகளாய் உடைந்து எங்கள் மெத்தைத் துப்பட்டி மேலெல்லாம் பாதரசம்போல் ஓடின. அதுகண்டு, அவைகளை அவித்தற்கு யாங்கள் முயல்கையில் அவை கட்புலனாதலின்றி மறைந்துபோயின," என்பது.

மேற்சொல்லிய மெய்ந்நிகழ்ச்சியில் ஒரு மாதர்க்கும் அவர்தங் கணவர்க்கும் ஒரே காலத்திற் கட்புலனான நீலச் சுடரொளி, அதற்குமுன் அவர் கண்டறியாத தொன்றாகும். அவ்விருவரும் அதனைக் கண்டதூஉங், கனவிலன்றி நனவின் கண்ணதே யாகும். அத் தோற்றத்தை அவ்வொருநாளிலன்றி அதற்கு முன்னும் பின்னுந் தாங்கண்டதில்லையென்றும் அவர்கள் உறுதிமொழி புகன்றிருக்கின்றனர். ஆதலால், அப் புதிய சுடரொளித் தோற்றம் யாது? அஃது எங்கிருந்து வந்தது? அஃதேன் அவர்கள் முன்னிலையிற் றோன்றியது? அஃது

அவ்வாறு தோன்றியதன் குறிப்பு என்னை? என்று அவ்விருவரும், ஆராய்ச்சி வல்ல ஆசிரியருமே எவ்வளவோ ஆராய்ந்து பார்த்தும், அதைப்பற்றி அவர்கள் ஏதொரு முடிவுந் தெரிந்து கொள்ளல் இயலவில்லை. இங்ஙனமே தாம் முன்பின் காணாத ஒரு குதிரை வண்டியின் தோற்றத்தை ஒரு துரைமகனாரும் அவர்தங் குடும்பத்தாருங் கண்ட வரலாற்றினை அத் துரைமகனார் கூறியபடியே இங்கு மொழிபெயர்த்து வரைவாம்:

"அஃது ஆகஸ்ட்டுத் திங்கள்; இராப்பொழுது நிலவின்றி இருண்டு ஓவென்றிருந்தது. ஒரு நாள் நள்ளிரவில் யான் படுக்கைக்குச் செல்லும்முன், எனது வழக்கப்படி வானத்தின் நிலைமையைப் பார்க்கத் தலைவாயிலிற் சென்றேன். சென்று, அதன் படிமேல் ஒரு நொடிப்பொழுது தான் யான் நின்றிருப்பேன்; அப்போது சடுதியில் இரட்டைக்குதிரைகளால் இழுக்கப்பட்ட ஒரு சாரட்டு வண்டி பெட்டிமேலிருந்த இருவராற் செலுத்தப் பட்டு எங்கள் வீட்டுப்பக்கமாய்த் திரும்பிவரக் கண்டேன். அஃது எங்கள் வீட்டினெதிரே மிகுவிரைவாய்ச் சென்று, இரண்டு செங்குத்தான கரைகளுக்கு நடுவே ஓடும் ஒரு நீரோட்டத்திற்குப் போகும் ஒரு வழியிற் புகுவதாயிற்று. எங்கள் வீட்டின் அப்பக்கத்தில் ஏதொரு வண்டிப்பாட்டையும் இல்லாமையால், அவ்வழியே விரைந்து செல்லும் அவ்வண்டி வெள்ளத்திற்போய் விழுமேயென அஞ்சி, வண்டியை நிறுத்துமாறு வண்டி யோட்டிகளை அழைத்துக் கூவினேன். ஆனாலும், அஃது அந்நீரோட்டத்தின் வரையிற் சென்று பின்னர்த் திடீரென நின்றுவிட்டது. அதன்பின் அஃது அங்கிருந்து திரும்பி அடுத்திருந்த மைதானத்திற் சென்றது. யான் உடனே வீட்டைவிட்டு அவ் வண்டியண்டை போயினேன்; அந்நேரத்தில் என் மகனுங் கையிற் பிடித்த ஒரு கண்ணாடி விளக்குடன் என்பால் வந்து சேர்ந்தனன். பெட்டிமேலிருந்த ஆட்களிருவரும் ஏதும் பேசிற்றிலர். அவ் வண்டியினுள்ளிருந்தும் ஏதொரு பேச்சுக் குரலுங் கேட்கவில்லை. என் மகன் வண்டியினுள்ளே நோக்கினான். அப்போது அவன் பார்வைக்குத் தென்பட்டதெல்லாம், அவ் வண்டியினுள்ளே ஒரு மூலையில் முறைப்பாக உட்கார்ந்திருந்த ஒரு பெண்பாலின் வடிவமேயாகும். அவ்வடிவம் முடியிலிருந்து அடிவரையில் வெளேலென்ற வெள்ளுடை மேற்கொண்டிருந்தது. வெளியே உட்கார்ந்திருந்த ஆண்பாலார் இருவரும், உயிர்ப்

பொருளென்னுங் குறிகாட்டாமல் அரவமின்றி உள்ளேயிருந்த பெண்பாலெனத் தோன்றிய ஒரு வெள்ளிய உருவும் வாய்ப்பேச்சு ஏதுமில்லாதிருந்தமை ஒருபெரும் புதுமையாகக் காணப்பட்டது. யான் அவ்வூரின் வளப்பமெல்லாம் நன்கறிவேனாயினும், இப்போது தோன்றிய வண்டியையும் அதனை யோட்டும் ஆட்களையும் அதனையிழுக்குங் குதிரைகளையும் இதற்குமுற் சிறிதும் அறியேன். பின்னர் அவ்வண்டி அம் மைதான வெளி யினூடே சென்று, அங்குள்ள குதிரைவாடி (இலாயத்து)க்குப் போகும் பாட்டையிற் புகுந்து அதனையுங் கடந்துபோய் விட்டது. மறுநாட்காலையில் அவ் வண்டியுருளின் சுவடுங் குதிரைக் குளம்படிகளின் சுவடும் அதுசென்ற வெளி நிலத்திலாவது பாட்டையிலாவது பதிந்துளவா என்று நோக்க அஃதொன்றுமே அங்குக் காணப்படவில்லை. அவ்வூரிலுள் ளாரிடம் அவ் வண்டியைப் பற்றியும் அதிலுள்ளவர்களைப் பற்றியும் எவ்வளவோ கருத்தாய் உசாவியும், ஏதொரு வரலாறும் புலனாயிற்றில்லை. ஆனாலும், யான் உரத்துக் கூவியது கேட்டு என் மனைவியும் புதல்வியுங்கூடச் சாளரத்தண்டை ஓடிவந்து அவ் வண்டியைக் கண்டார்கள். இது நிகழ்ந்தது 1878, ஆகஸ்ட், 23 ஆம் நாளிலாகும்," என்பது.

இந் நிகழ்ச்சியின் உண்மையை ஆராய்ந்தறியச் சென்ற "உயிர்நிலை ஆராய்ச்சிக் கழக" ஆசிரியர் ஒருவர் (Podmore), அவர்கள் கண்டது பருப்பொருள் வண்டியன்று என்பதனை ஆராய்ந்து உறுதியாகத் தெரிந்து கொண்டார். பருப்பொருள் வண்டியாயிருந்தால்அது திரும்புதற்குப் போதுமான இடம் அப் பக்கத்தில் இல்லை. மேலும், அவ் வண்டிசென்ற மைதானவெளி பாசிபடர்ந்து புல் அடர்ந்த ஈரநிலமாயிருந்தது. அதன்கண் அவ்வண்டியுருள்களின் சுவடுஞ் சிறிதுதானுங் காணப்பட வில்லை. அவர்களது வீட்டின்முன்னே அவ்வண்டி சில இமைப்பொழுதுதான் நின்றிருக்கலாம். அதனைக்கண்ட துரைமகனார் அதன்மேலிருந்த இருவரொடு பேசியும் அவர் களிடமிருந்து விடையேதும் வரவில்லை. மேலும், அத் துரை மகனாரைப் போலவே, அவர்தம் மனைவியும் புதல்வன் புதல்வியரும் அதனைக் கண்டுள்ளார். அதனால், அதனை வெறும் பொய்த் தோற்றமென்றுங் கூறுதல் பொருந்தாது. ஆகவே, அவ்வண்டியின் றோற்றம் முன்பின் அறியப்படாத ஒரு

புதுமையாகவே கொள்ளற்பாலதாயிருக்கின்றது. இங்ஙனமே இன்னும் வண்டியின் றோற்றங்கள் பல பலர்க்குப் பலகாற் பலவிடங்களிற் றோன்றியிருக்கின்றன.

இனி, வண்டியின் தோற்றங்களேயன்றி, மெய்யான பருப்பொருள் வண்டிகள் செல்லுங்கால், அவற்றையடுத்து மக்களைப் போன்ற சில உருவங்கள் தொடர்ந்து செல்லு தலையும் அவ் வண்டிகளின் உள்ளேயும் வெளியேயும் இருந்தவர்கள் கண்டிருக்கின்றார்கள். அதற்கோருண்மை நிகழ்ச்சியினை ஈண்டெடுத்துக் காட்டுதும்; 'ஸ்டோன்' எனப் பெயரிய ஓர் அம்மையார் பின்வருமாறு வரைகின்றார்.

"வேனிற்காலத் தொருநாள் இனிய மசங்கல் மாலையில் யானும் என் மருகியும், என் தோழியும் வேலைக்காரனும் ஒரு வண்டியிற் போய்க்கொண்டிருந்தோம். அப்போது எமது வண்டியின் வலதுகைப் பக்கத்தே ஓர் ஆடவன் எங்கள் குதிரையின் தலைமாட்டில் மிதந்து செல்வது போல் நடக்கக் கண்டேன். என் தோழி, 'மேரி' என் அண்டையில் அமர்ந்திருந் தாள். எனது மெல்லிய குரலில் அவளுக்கு அவ்வாடவன் உருவினைச் சுட்டிக் காட்டினேன்; ஆனால், அவள் கண்களுக்கு அது தென்படவில்லை. என் மருகியும் வேலைக்காரனும் எனக்கெதிரேயுள்ள இருக்கைமேல் இருந்தார்கள். யான் சொல்லியதைக் கேட்டு என் மருகி தன்முகத்தைத் திருப்பிப் பார்த்து,'நீங்கள் சுட்டிய ஆடவன் உருவினை யானுந் தெளிவாய்க் காண்கின்றேன்' என்றனள். எங்கள் வேலைக் காரனோ திகில் கொண்ட குரலினனாய், 'அம்மா ஒன்றும் பேசாதீர்கள்! சும்மாயிருங்கள்! என்று மெல்லச் சொல்லினான். குதிரைகளும் மற்றை விலங்கினங்களும் ஆவியுருவங்களைக் கண்டு வெருள்கின்றன வென்று பலர் சொல்லக் கேட்டிருக் கின்றேன். ஆனால், எங்கள் வண்டியிற் சென்ற குதிரையோ சிறிதும் வெருண்டோடவில்லை; ஒரே வகையான ஓட்டத்தி லேயே ஏகியது; அஃது அங்ஙனஞ் சென்ற தன்மையினை எண்ணிப் பார்க்க அஃது அவ்வாடவனுருவினால் அடக்கப்பட்டே அவ்வாறு சென்ற தென அறியலானேன். அவன் முகம் எங்கள் பக்கமாயின்றி எதிரே திரும்பி யிருந்தமையால் அவனது முகம் என் கண்களுக்குத் தெரியாவிட்டாலுங், கரிய உடை பூண்ட

அவ்வாண்மக னுருவம் எனக்கு நன்கு புலனாகிய படியே தொடர்ந்து முற்சென்றது. என் மருகியும் ஏவலனும் அதனைத் தெளிவாய்க் கண்டனர். அவ்வுரு அம் மாலைக்கால வெளிச்சத்தில் தெற்றெனத் தோன்றியும், என் தோழி மட்டும் அதனைக் காணக்கூடவில்லை; அவள் என்பக்கத்தேயிருந்த மையால் எமக்கு எதிரே முன்னேறிச் சென்ற அவ்வாடவ னுருவினை, மற்றையிருவரையும்விட அவடான் எளிதிற் காணக் கூடியவளாய் இருந்தாளாகல் வேண்டும். இனி, நாங்கள் 'சார்மின்ஸ்டர்' என்னும் ஊருக்கு அணித்தாக வந்தவுடனே, அவ்வுருவம் மறைந்து போயது; அதனை மீண்டும் யாங்கள் பார்க்கவேயில்லை. அப்பாட்டையிற் பேய்கள் நடமாடுவ துண்டென்று இதற்கு முன் நாங்கள் கேட்டதுமில்லை," என்பது.

இம் மெய்ந்நிகழ்ச்சியிற் காணப்பட்ட ஓராண் மகனுருவின்றோற்றம், அதனைக் கண்ட மாதர் இருவராலும் ஏவலன் ஒருவனாலும் இதற்குமுன் சிறிதும் அறியப்படாத தாகும். அப் பாட்டையிற் பேய்கள் இயங்குவதுண்டென்று அவர்கள் யாருங் கேட்டதில்லாமையால், அவர்களது அச்சவுள்ளத்திலிருந்து அத் தோற்றம் உண்டாகியதென்று கூறுதலும் ஆகாது. ஆதலால், ஆவியுலகில் நிற்கும் ஒரு குதிரைக்காரனது ஆவி யுருவமோ, அல்லதவன்றன் நினை வுருவமோ அந்நேரத்தில் அம் மூவர் கண்களுக்கும் புலனாகி அவர்தம் வண்டிக் குதிரையினை ஏவிக்கொண்டு சென்றதாகல் வேண்டுமெனக் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாம். அற்றேல், அவ்வண்டியுட் சென்ற நால்வரில் மூவர் கண்கட்குப் புலனாகிய அவ்வுருவம் ஏனையொரு மாதுக்குப் புலனாகாமை யென்னையெனிற்; பருப்பொருள் வடிவுகளை யன்றி நுண் பொரு ளுருவுகளைக் காண்டற் கியைந்த பதம் அம் மாதுக்கு உண்டாகவில்லை யென்று தெரிந்துகொள்க. இனி, மூவர் கண்ட ஒருபெண்மகளுருவின் தோற்றத்தை இங்கெடுத்துக் காட்டுதும். 'மந்து கோமாரி' என்னும் மாதரார் ஒருவர் பின்வருமாறு வரை கின்றார்:

"1875 ஆம் ஆண்டு வேனிற்காலத்து ஒருநாட்பிற்பகலில் 4 மணிக்கு யானும் என் தங்கையும் ஒரு வேலைக்காரப் பையனுடன் ஒரு குதிரைவண்டியிலேறி எங்கள் வீட்டைநோக்கிப் போய்க்

கொண்டிருந்தோம். அப்போது திடீரென ஒருபெண்மகளுருவம் பாட்டையின் ஓரமாயுள்ள வேலிமேலிருநது அரவமின்றி மிதந்து கொண்டு வந்து அப் பாட்டையின் குறுக்கே சென்றது. அவ்வுருவம் முழுதும் வெள்ளாடை யுடுத்தியிருந்தது; அஃது ஒருபக்கஞ் சாய்ந்த உடம்பினதாய் நிலத்துக்கு மேற் பத்தடியுயரத்தில் ஏகியது. அதனைக் கண்டதும் எங்கள் குதிரை திடுமென நின்றுவிட்டது; அச்சத்தினாற் குதிரையின் உடலம் நடு நடுங்கியது; அதனால் அதனை ஏவிச் செலுத்துதலும் இயலவில்லை. உடனே யான் என் தங்கையை விளித்து, 'நீ அதனைக் கண்டனையா?' என வினவ, அவளும் 'ஆம், அதனைப் பார்த்தேன்' எனத் திகிலுடன் கூறினாள்; கூட இருந்த ஏவற்காரச் சிறுவனுந் தான் அதனைப் பார்த்ததை நடுக்கத்துடன் சொல்லினான். இதற்குள் அப் பெண்மகளுருவமானது அப் பாட்டையின் அப்பக்கத்துள்ள வேலியை மேற்கடந்து ஒரு வயல்வெளிமேற் சென்றது: அதனை நாங்கள் உற்றுப்பார்த்துக் கொண்டிருக்க, அது தொலைவிற் காணப்பட்ட ஒரு தோட்டத்தினூடே புகுந்து மறைந்துபோயது.ஆக,நாங்கள் அதனைக் கண்டது இரண்டு நிமிஷநேரந்தான் இருக்கலாம். அவ்வுருவம் அங்ஙனம் ஏகியபேது அதன் காலடிகள் நிலத்தைத் தொடவேயில்லை; அஃது அமைதியாய் மிதந்து நீளச்சென்றது. பிறகு நாங்கள் இல்லம் போய்ச் சேர்ந்தவுடனே எங்கள் அன்னையார்க்கு யாங்கள் கண்டஅத் தோற்றத்தைப்பற்றிச் சொன்னோம். அஃது எங்கள் நினைவின்றோற்றமும் அன்று, வேறு எத்தகைய பொய்த் தோற்றமும் அன்று என்பதை நான் உறுதியாய்ச் சொல்வேன். இதற்கு முன்னாவது பின்னாவது யான் இத்தன்மைத்தாகிய உருவத்தோற்றத்தைக் கண்டதேயில்லை. அப்போது நாங்கள் உடல் நல மனநலத்தோடிருந்தோம். அதற்கு முன் வேறெவரும் அவ்வியல்பினதாகிய ஆவியின் றோற்றத்தைப்பற்றி எங்கட்குச் சொல்லி எங்கள் நினைவை அதிற் படிய வைத்ததுமில்லை. ஆனால், அப் பாட்டையிற் பேய்கள் உலவுவதுண்டென்றும், அப்பக்கத்துக் குடியானவர்கள் சிலர் ஓர் ஆவியின் உருவினை ஒரோவொருகாற் காண்பதுண்டென்றுஞ் சிறிது காலத்திற்குப் பின் சிலர் சொல்லக்கேட்டேன்," என்பது.

இனி, ஆசிரியர் 'செஸ்டர் பீல்டு' என்பாரும் அவர் மனைவியாருங் கண்டதோ ருருவின் றோற்றத்தைப்பற்றி

அவ்வாசிரியர் எழுதிவைத்த கடிதத்தினை இங்கே மொழி பெயர்த்து வரைவாம்:

"மிகப் புதுமையானதொரு நிகழ்ச்சி என் கண்முன்னே இவ்வாண்டில் (1625) நிகழ்ந்தது. யான் ஒரு வழக்கின் பொருட்டு இலந்தன்மாநகரில் வந்திருந்தேன். ஒருநாட் காலையில் 8 மணிக்கு யான் துயிலொழிந்து கண் விழித்ததும், என் கட்டிலுக்கு இரண்டு முழம் எட்டித், தலைமேல் ஒரு முடிச்சுடைய ஒரு வெள்ளிய ஆடையைத் தொங்கவிட்டா லென்ன, நான்கு அல்லது ஐந்தடியுயரம் வாய்ந்த ஏதோ ஒரு வெண்மையான உருவம் நிற்றலைத் தெளிவாய்க் கண்டேன். அதனைச் சிறிது நேரம் நோக்கியதும், இன்னும் நன்றாய் அதனைக் கண்டுதெளிதற்பொருட்டு என் படுக்கைமேல் எழுந்து உட்கார்ந்தேன். பின்னர் என்னிரண்டு கைகளையும் நீட்டி அதனைப் பிடிக்க முயன்றேன்; உடனே ஒரு நொடிப்பொழுதில் அஃதென்கைகளை விட்டுநிழல்போல் வழுவி என் கட்டிற் கால்மாட்டண்டை சென்றது. யானுங் கட்டிலைவிட்டுக் குதித்து அதனைப் பின்றொடர்ந்தேன்; ஆனால், அது மறைந்து போயது. இத் தோற்றத்தைக் கண்டபின், என் மனைவிக்குத் தான் யாது நேர்ந்ததோ வென ஐயங்கொண்டேன். என் மனைவியைச் 'சசெக்ஸில்' உள்ள 'பெட்வர்த்' நகரில் அவடன் தந்தையார் இல்லத்தில் விட்டுவந்தேனாதலால், அவளைக் காண்டற்கு உடனே குதிரை யூர்ந்து சென்றேன். சென்று, அவ்வில்லத்தின் மேன் மாளிகைக்கு மேற்போகையில் என் ஏவலன் ஒருவன் எனக்கு வந்த கடிதங்களைக் கட்டியெடுத்துக்கொண்டு என்னிடம் வருதற்குப் படிமேல் இறங்கி வரக்கண்டேன். அவன் என்னிடந் தான் வருவதாகப் புகன்றமையால், அவன் கையிலிருந்த கடிதக் கட்டை யான் வாங்கிக் கொண்டு, மேலே என் மனைவிபால் ஏகினேன். என் மனைவி தன் தங்கையுடனும் மற்றொரு துரைமகளுடனும் உடல்நலத்தோ டிருந்தனள். என்னைப் பார்த்ததும், அவர்களெல்லாரும் 'முன் எண்ணியதற்கு வேறாக இப்போது இவ்வளவு விரைந்து திரும்பியது ஏன்?' என என்னைக் கேட்டனர். அதன்மேல், அன்றைக் காலையில் யான் கண்ட தோற்றத்தினைப்பற்றி அவர்கட்கு எடுத்துரைத்தேன். அது கேட்டு வியப்புற்ற அவர்கள், என் ஏவலனிடமிருந்து யான்பெற்ற கடிதக்கட்டைப் பிரித்து அதிலுள்ள கடிதங்களைப் படிக்கும்படி

என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அங்ஙனமே யானும் அதனைப் பிரித்து முதலில் என் மனைவி எனக்கெழுதியிருந்த கடிதத்தை எடுத்து உரக்கப் படித்தேன். அக்கடிதத்தில் அவள், தான் அன்றைக் காலையில் முழுதும் வெண்மையானதோர் உருவங்கரியமுகத்தினதாய்த் தன் படுக்கையின் பக்கத்தே நிற்றலைக் கண்டமையால், எனக்கேதேனுந் தீது நேருமோ என அஞ்சி உடனே யான் திரும்பிவரும்படி வேண்டி வரைந் திருந்தனள். யாங்கள் கண்ட அவ்விருதோற்றங்களின் நிகழ்ச்சிக்குறிப்புகள் அத்தனையும் யாங்கள் ஒப்பிட்டு நோக்க, அதேநாளின் அதே பொழுதில் அதே மணிநேரத்தில் யான் கண்டபடியே நாற்பது கல் தொலைவிலிருந்த என் மனைவியும் அத் தோற்றத்தைக் கண்டமை புலனாயிற்று,'' என்பது.

இனிக், 'குவினி' என்னும் ஒரு மருத்துவ ஆசிரியரும் அவர்தம் மனைவியாருந் தாங் குடியிருந்த ஒரு மாளிகையில் 1853 ஆம் ஆண்டு கண்டதோர் உருவின் தோற்றத்தை அவர் வரைந்த கடிதத்தினின்றே ஈண்டு மொழி பெயர்த்து எழுதுவாம்:

"ஒரு நாளிரவில் (துயில்கொள்ளச்செல்லும்முன்) முழுதும் உடை பூண்டிருந்ததோர் உருவம் எனது கட்டிலின் கால்மாட்டி லிருந்து குறுக்கே போய் அடுப்பண்டை அணுகக் கண்டேன். அது தனது கையை உயரத் தூக்கி, அவ்வடுப்பின்மேலுள்ள பலகைமேல் எரிந்து கொண்டிருந்த விளக்கினைச் சுட்டியது. அந்நேரத்தில் என் மனைவி என் கையைப் பிடித்துக் கொண்டாள். அப்போது அடுப்பின் பலகைமேலிருந்த விளக்கு அணைக்கப் பட்டது. விளக்கு அவிந்துபோனாலும், அவ்வுருவங் கத வண்டை சென்றதைத் தெளிவாய்க் கண்டேன். எங்கள் வேலைக் காரிகளில் ஒருத்தி தான் அங்ஙனம் எங்கள் அறையினுள்ளே நுழைந்திருக்க வேண்டுமென யான் எண்ணி, என் படுக்கை யினின்றுங் குதித்து அவளை மறிக்க முயன்றேன்; ஆனால், அங்கொண்றும் இல்லை. அதன்மேல் அவ்வறையின் வாயிற் கதவண்டை பாய்ந்து, எங்கள் உடம்பாடின்றி இராவேளையிற் புகுந்த அவளைப் பின்றொடரவும் முயன்றேன். ஆனால், வழக்கப்படி அவ்வாயிற்கதவு பூட்டப்பட்டிருந்தது. என் மனைவியோ பெரிதுந் திகில்கொண்ட நிலையிலிருந்தாள். நான் கண்டது யாது? என்று அவள்வினவ, யான் அவ்வுருவின்

றோற்றத்தை எடுத்துரைத்தேன். அதுகேட்டு, அவள் தானும் அதேயுருவினைக் கண்டதாகக் கூறியதோடு, அவ்வுரு தன் கையை அவ்விராவிளக்கின்மேல் வைத்து அதனை நிறுத்திவிட்ட தெனவும் மொழிந்தாள்.

அவிந்துபோன விளக்கைத் திரும்பவும் ஏற்றி முகங் கழுவும் ஏனத்தில் வைத்திட்டோம்; பின்னர் அஃது எப்போதும் போல் எரிந்தது. யான் அவ் விளக்கு நின்று போனதைப் புகைப்போக்கியின்வழியே கீழ் வீசிய காற்றின் செயலாக நினைந்து என் மனத்தைத் தேற்றிக் கொண்டேன்; என்றாலும், அவ்வுருவந் தோன்றிய காரணம் புலப்படவில்லை," என்பது.

உயிர்நிலை ஆராய்ச்சிக் கழகத்தார் 'குவினி' என்னும் அம்மருத்துவ ஆசிரியர் கண்ட இத்தோற்றத்தைப்பற்றி அவர்தம் மனைவியாரை எழுதிக்கேட்க அவர் பின்வருமாறு விடையெழுதினார்:

"என் கணவனார் கூறிய உறுதிமொழியைப் படித்துப் பார்த்தேன். தாம் கண்ட ஆவியுருவத்தைப்பற்றி அவர் மொழிந்தவைகள், யான் அதனைக் கண்டநினைவுடன் இணங்கியனவாகவே யிருக்கின்றன. அவ்வுருவந் தன் கையை இரா விளக்கின் மேல்வைத்து அதனை அணைத்ததை யான் தெளிவாய்க் கண்டேன். யான் அச்சத்தால் என் கணவர் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ள முயன்றேன்; ஆனால், அவர், பின்னர்த் தெரிவித்தபடி, யாரோ உள் நுழைந்தவரை மறிப்பதற்காக எமது படுக்கையினின்று கீழே குதித்து விட்டார். அவ்வறை வாயிற் கதவு என்றும்போற் பூட்டப்பட்டிருந்தது; அவர்போய் அதனைத் திறக்க முயன்றபோதும் அஃது அங்ஙனமேதான் இருந்தது. உடனே அவர் ஒரு மெழுகு திரியை ஏற்றினார். ஏற்றிக் கட்டிலின்கீழும் உள்ளறையும் நோக்கினார்; ஆனால், ஒன்றுங் காணவில்லை. இரா விளக்குந் திரும்பக் கொளுத்தப்பட்டு, முகங் கழுவும் பண்டந்தாங்கியின்மேல் வைக்கப்பட்டு, மெழுகுதிரி விளக்குடன் இரவு முழுதும் எரிந்தது. அவ் வீட்டிற்கு யாங்கள் குடிவந்து தங்கும் முன் நான் இரவில் விளக்கு வைப்பதேயில்லை; ஆனால் அதிற் குடிபுகுந்தபின் எவரோ

பெருமூச்சுவிடும் ஓசையுங் குறட்டையும் அடிக்கடி என் படுக்கையின் அண்டையில் உண்டாகி என்னை மிரளச் செய்தமையால், யான் இரவில் விளக்கெரியவிட லானேன். என் கணவனார் அவ்வுருவத் தோற்றத்தைத் தாமும் யானுங் கண்டபின், திகில் கொண்ட என்னை அமைதிப் படுத்தும் பொருட்டு, நிலா வெளிச்சமும் மாசியின் நிழலுஞ் சாளரத்தூடே தோன்றினமையால் அத்தோற்றம் உண்டாயிருக்க வேண்டு மென்றும், விளக்கு அவிந்து போனது புகைப் போக்கியின் வழியே கீழிறங்கி வீசிய காற்றினால் நிகழ்ந்திருக்க வேண்டுமென்றும் வற்புறுத்திச் சொல்லி எனது அச்சத்தை மாற்ற முயன்றார். ஆனாலும், நாங்கள் இருவரும் ஒரே நேரத்திற் கண்விழித்து, நீண்ட ஒரு துறவு மாதைப்போல் உடையணிந் திருந்த அவ்வுருவத்தைக் கண்டு, அஃது அவ்வறையின் கண்ணுள்ள அடுப்பண்டையிற் சென்று அதன் மேற்பல கையில் எரிந்து கொண்டிருந்த விளக்கையுந் தனது வலக்கையால் அணைக்கப் பார்த்தபிறகு, அதைப்பற்றி வேறுவகையாக நினைப்பதற்கு இடமேயில்லை, என் கணவனர் தம்முடைய கைகளை நீட்டி அவ்வுருவினைப் பிடித்து நிறுத்த முயன்ற போது, அவ்வுருவந் திரும்பி அவ் வாயிற்கதவினூடே போகாநிற்கையில் அதனாடை சரசரவென ஒலித்ததையும் நான் தெளிவாய்க் கேட்டேன். நிலவொளி மிகவுந் தெளிவான துலக்கமுடையதாய்த் திகழ்ந்தது; சாளரத்தின் வெள்ளிய திரை அதனை ஒரு பக்கமேதான் மறைத்திருந்தது, என்பது.

'குவினி' என்னும் மருத்துவ ஆசிரியரும் அவர் தம் மனைவியாரும் அவ் வீட்டிற் குடிபுகும் முன்னரே அத்தகைய தோற்றங்கள் அங்கு நிகழ்ந்ததனை மற்றும் பலர் பலகாற் சொல்லி யிருக்கின்றனர். ஆனால், அம் மருத்துவ ஆசிரியர்க்கும் அவர் தம் மனைவியார்க்கும் அந் நிகழ்ச்சிகளைப் பற்றியது ஏதொன்றுமே முன்னரே தெரியாது. ஆதலால், அவர்கள் அந் நிகழ்ச்சிகளைப் பிறர் சொல்லக்கேட்டதிலிருந்து, அவர்களது உள்ளத்தின்கட் டோன்றிய உருவெளித் தோற்றமே அவர்களுடைய கண்களுக்கு அவ்வாறு காணப்படலாயிற்று என்று கூறுதற்குஞ் சிறிதும் இடமே இல்லை. இனி, மேற்சொல்லிய தோற்றத்தைக் கண்ட

பிறகு அவ்விருவரும் அவ் வீட்டைவிட்டு வேறு ஒரு வீட்டுக்குக் குடிபோயினர்.

இனி, மூவர்க்குக் கட்புலனான ஓர் உருவத்தோற்றத்தைக் குறித்துப் 'பொத்தானி' என்பார் 1884 ஆம்ஆண்டு நவம்பர்த் திங்களிற் பின்வருமா றெழுதினார்:

"இவ்வாண்டின் துவக்கத்திலேயே ஒருநாளிரவில் என் படுக்கையறையின்கண் ஓர் உருவம் இயங்குதலை உணர்ந்தேன். அது கூன்முதுகுடைய ஒரு பெண்பாலின் உருவாய்க், கரியதொரு போர்வையினால் முடிமுதல் அடிவரையிற் போர்த்துக் கொண்டிருந்தது. அது முதுமை மிக்க ஒரு பெண்பாலின் உருவமாகத்தான் இருக்கவேண்டுமென என் உள்ளத்திற் பட்டதாயினும் அதன் முகத்தை யான் காணக்கூடவில்லை. அது மெதுவாயுங் கள்ளத்தனமாயும் என் படுக்கையறையின் வாயில்வழியே சென்று, அவ்வறையின் அதே பக்கத்திலுள்ள ஆடைவைக்கும் அறையை அணுகக் கண்டேன். அதன்பின் அது சடுதியில் முற்றுமே மறைந்து போயிற்று. திடீரென உண்டான அதிர்ச்சியினால் யான் உரக்கக் கூவினேன். அத்தன்மையதான ஒரு தோற்றத்தை இதற்கு முன்னாயினும் பின்னாயினுங் கண்டிலேன். எனது இயற்கையும் ஆவியுருவங்களைக் காண்பதற்கு ஏற்றதன்று. அவ்வுருவமும் அது தோன்றிய நிகழ்ச்சியுங் கனவல்ல; எனக்கது மெய்ம்மையான தெளிவு நிகழ்ச்சியேயாகும், இனி, அது தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடைப்பட்டதொரு நிகழ்ச்சியும் அன்று. நான் கண்டது நனவு நிகழ்ச்சியேயெனத் தெளிவாய் உணர்ந்தேன். யான் கண்ட அவ்வுரு எவருடையதென்பதை யான் அறிந்திலேன். மூன்றாண்டுகளாக யான் இவ் வீட்டிற் குடியிருந்து வருகிறேன்; எனக்கு முன் இதிற் குடியிருந்தவர்களைப் பற்றி யான் ஏதும் அறியேன். அந்த அறையில் விளக்குக் கொண்டுபோகவும் இல்லை: வேறொரு விளக்கு அதன்கண் எரியவுமில்லை. என்றாலும், அவ்வுருவம் நன்றாகவே கட்புலனாகியது; ஆடை யறையும் அங்ஙனமே கட்புலனாயது; ஆனால், அது மறைந்து போயதும் எல்லாம் இருளாகவே யிருந்தது; கதவும் பூட்டப்பட்டிருந்தது."

மேலதனை எழுதிய துரைமகனாரைப் போலவே அவர் தம் மனைவியாருந் தாம் அவ்வுருவத்தைக் கண்டதனையுந் தம் சிறுமியுஞ் சமையற்காரனும் அதனைக் கண்டதனையும் பின்வருமாறு தெரிவித் தெழுதுகின்றார்:

"முன்னே குறிப்பிடப்பட்ட இரவில் யான் திடுமென விழித்தெழுந்தேன்; ஏது காரணத்தாலென்பதை அறிந்திலேன். என் கணவனார் தமது முழங்கைமேற் சாய்ந்து கொண்டு புதியளான ஒரு கிழவியை உற்றுநோக்கிக்கொண்டிருந்தனர்; அக் கிழவி ஆடையறையண்டை குனிந்து சென்றதை யானுங் கண்டேன். அதனை உண்மையான வடிவமென்றே நம்பினேன். ஆனால் அது திடீரென மறைந்துவிட்டது. அப்போது என்கணவனார் தாம் கூறிய படியே ஒருபெருங் கூச்சலிட்டனர்; அதன்பின் தாங் கண்டதிதுவென எனக்குச் சொல்லினர். யான் கதவைத் திறக்க முயன்றேன்; ஆனால், அது பூட்டப் பட்டிருந்தது. என் கணவனார்க் குண்டான நினைவே எமதுள்ளத்தின் ஒற்றுமை யால் எனக்கும் அங்ஙனந் தோன்றியது போலுமென முதலில் எண்ணினேன்; ஆனால், அவரைவிட யானே அத்தகையதொரு தோற்றத்தைக் காண்டற்கு ஏற்றவளென எண்ணினேன். அவ்வுருவத் தோற்றத்தைப்பற்றி யான் என் ஏவலாளர்க்கு உரையாதிருந்தும், மறுநாளில், மூன்றாண்டுள்ள 'மூரியல்' என்னுஞ் சிறுமி அன்றிரவு தன்செவிலித்தாயை யெழுப்பி, அச்சம் இல்லாமலே 'கிளாரா, கிளாரா, அறையிலே ஒரு கிழவி வந்திருக்கிறாள்' எனச் சொல்லியதென்று அச் செவிலித்தாயே என்னிடம் பகர்ந்தாள். எனினும், அச் செவிலித்தாய் அத்தகையதேதுங் கண்டிலள். இன்னும், என் சமையற்காரி 'இராக்காலங்களில் நீங்கள் என் அறையில் வந்த துண்டா?' என என்னைப் பல்கால் வினவியதுண்டு; ஆனால், யான் அங்ஙனம் அவளறையில் சென்றதேயில்லை, இதனை யான் அவட்குச்சொல்லியபோது அவள் இறும்பூதுற்றுத் தியங்கினாள்," என்பது.

இந்நிகழ்ச்சியிற் போந்த துரைமகனாரும் அவர் தம் மனைவியாரும் அவர்தஞ் சிறுமியுஞ் சமையற்காரியு மெல்லாங் கண்ட அக் கூனற் கிழவியின் உருவம் அதற்கு முன் அவர்களால்

அறியப்படாத தொன்றாயிருத்தலால், அஃது அவ் வீட்டிலிருந்து முன்னொருகால் இறந்துபோன கூனற் கிழவியின் உருவமோ அல்லது மறுமையுலகத்தில் ஆவியுருவில் நிற்கும் அவளது பற்றுள்ளத்தில் எழுந்த நினைவின்றோற்றமோ இன்னது தானென்று உறுதிப்படுத்தல் இயலாததா யிருக்கின்றது. அதுவேயுமின்றி, நால்வர் கண்ணுக்குத் தோன்றிய அவ்வுருவம். அந் நால்வரில் எவர்க்கு உண்மையாய்த் தோன்றியது? மற்றெவர்க்கு அவரது நினைவின் எதிருருவாய்த் தோன்றியது? என்றாய்ந்து இது தான் முடிவெனக் காண்டலும் இயலாத தாயிருக்கின்றது. ஆனாலும், அத் துரைமகனாரின் மனைவியார் தாங்கண்ட அவ்வுருத் தங் கணவனார் நினைவின் றோற்றமாயிருக்கலாமோவென முதலில் ஐயுற்றுப், பின்னர் அத்துணை நினைவுவன்மை தமக்கன்றித் தங் கணவனார்க் கில்லாமையை யுணர்ந்து பார்த்துத், தாங் கண்ட காட்சியே உண்மையாக இருக்கவேண்டுமென்று முடிவுசெய்து கொண்டதி லிருந்து, ஒருகால், அவரது கண்முற் றோன்றிய தோற்றமே உண்மைத் தோற்றமாய், ஏனை அவர்தங் கணவர் சிறுமி சமையற்காரி முதலாயினார் கண்டது அத்துரைமகளாரின் நினைவின் றோற்றமா யிருக்கலாமோ என்று கருதுதற்கும் இடம் உண்டாகின்றது. அதுவல்லாமலும், அவர் தஞ் சமையற்காரி அவ்வுருவி னியக்கத்தைத் தன் அறையிற் பலகாற் கண்டு தன் தலைவியை வினவியதுபோல், அவடன் றலைவி அங்ஙனம் அதனைப் பலகாற் கண்டு பிறரிடங் கூறினாரென்பது மேற் போந்த பகுதியிற் புலனாகாமையின், அச் சமையற்காரிக்குத் தோன்றியதே உண்மையான தோற்றம், மற்றையோர் கண்டன வெல்லாம் அச் சமையற்காரி தன் நினைவின் றோற்றமா யிருக்கலாமெனக் கூறுதற்கும் இடனிருக்கின்றது. அஃதெங்ஙன மாயினும், முதலில் ஒருவர்க்குத் தோன்றிய அக்கிழவியுருவின் றோற்றம் மட்டும் உண்மையான தொன்றாகத்தான் இருக்க வேண்டு மென்பதிலோ ஐயங்கொள்ளுதற்கு இடனில்லை. என்றாலும், அக் கிழவியின் நினைவுருவமோ அல்லாதவளின் நுண்ணுடம் புருவோ அங்கே தோன்றியது என்பது மட்டுந் துணியப்படாத தொன்றாயிருக்கின்றது அது கிடக்க.

## 16. தெளிவுக் காட்சி

*ஒருவர் உறுத்து நிளைந்தநினைவும் உறுத்துக் கண்ட காட்சியும், அண்மையிலோ சேய்மையிலோ உள்ள பிறருடைய உள்ளத்தில் விலக்க முடியாமற் றோன்றுதலும், அல்லதவரது கட்புலனெதிரே உருவுகொண்டு தோன்றுதலுமாகிய நிகழ்ச்சி களைப்பற்றியே இந்நூலில் இதுகாறும் நன்குவிளக்கிப் போந்தாம்.*

*இனி, அவ்வாறின்றி, எவரும் நினையாத நினைவு களையுங், காணாத காட்சிகளையும், எவர்க்கும் புலனாகா திருந்த மறைபொருள்களையும் அண்மையிலுஞ் சேய்மையிலுந் தெளிவாகக் காணுந் 'தெளிவுக் காட்சி' மக்களிற் சிலர்க்கு உள்ளத்தே அமைந்திருக்கின்றது என்பதனையுஞ் சிறிது விளக்குவாம். இதற்கு அமெரிக்கா தேயத்தில் நிகழ்ந்த உண்மை வரலாறு ஒன்றனை இங்கே மொழி பெயர்த்து வரைகுதும்:*

*"சிக்காகோ" நகரமென்பது இந் நிலவுலகத்துள்ள எல்லா நகரங்களைப் பார்க்கிலும் முயற்சியிற் றலைசிறந்த தொன் றென்பது எவரும் அறிந்ததே யாம். யோனா முனிவரது சுரைக் காயைப்போல் அஃது ஓரிரவிலேயே முளைத்து விட்டதெனத் தோன்றியது. அதன் குடிமக்களது தொகை விரைந்து பெருகியது; அதனாற் புழக்கத்திற்கும் இன்ப நுகர்ச்சிக்குந் தண்ணீர் இன்றியமையாது வேண்டப் படுவதாயிற்று. நிலநூல்வல்லார் அத்தகையநிலப்படையின் கீழ்த் தண்ணீர் இருத்தல் இயலாது என்றனர்; அதனாற் கலை நூலறிவு பிழைபட்டது. நிலத்தின் மேலுள்ள தண்ணீரையே எதிர்பார்க்க வேண்டினமையின், உடனே ஒரு கூட்டுறவுக் கழகத்தார் ஏற்பட்டு மேலுள்ள அழுக்குத் தண்ணீரையே எல்லார்க்குங் கொடுத்து வரலானார்.*

“அப்போது அச் சிக்காகோ நகரத்தில் ஆபிரகாம் ஜேம்ஸ் எனப் பெயரிய ஒருவன் இருந்தனன்; அவன் கல்வியறிவில்லாத ஒரு பேதை; கள்ளமில்லாத வெள்ளையுள்ளத்தினன். ஆனாலும், இயற்கையாகவே தெளிவுக் காட்சி வாய்ந்தவன்; உண்மையான ஒரு குறிகாரனென்றும், அவன் வெளியுணர்வு சிறிதுமில்லா அறிதுயிலில் செலுத்தப்பட்ட போது அந் நகரத்துக்கு அருகாமையில் உள்ள ஒருநிலப்பகுதியின் கீழ்த் தண்ணீரும் மண்ணெண்ணெயும் ஏராளமாய்க் கிடைக்குமெனக் கூறினானென்றுங் காரலின் ஜார்டன் என்னும் அம்மையார் அறிந்து உரைத்தார். ஆனாலும் நீண்ட காலம் வரையில் அவன் கூறிய அவ்வுரைகளை எவருமே உன்னித்திலர். கடைசியாக ‘மெயின்’ என்னும் ஊரிலிருந்து சிக்காகோ நகரத்திற்கு அலுவல் மேல்வந்த ‘உவைஹெட்’ ‘ஸ்காட்’ என்னும் இருவர், ஆபிரகாம் ஜேம்ஸ் என்னும் அக்குறிகாரன் கூறிய உரைகளைக் கேள்வி யுற்றுத், துளைத்துச் சென்றால் தண்ணீர் ஏராளமாய்க் கிடைக்குமென்று அவன் குறிப்பிட்டுச் சொல்லிய இடத்திற்கு அவனை அழைத்துச் சென்றனர். அவன் உடனே அறிதுயிலிற் சென்றவனாகித் தண்ணீர் கிடைக்கக் கூடிய அவ்விடத்தைச் சுட்டிக் காட்டினான். பின்னும், அவன் தான் தண்ணீர் மட்டுமேயன்றி, இரண்டாயிரமைலுக்கப்பாலுள்ள பாறை மலைகளிலிருந்து அந்நீரோட்டந் தாம் நிற்கும்அவ்விடத்திற்கு வருதலையுங் கண்டதாகப் பகர்ந்தனன்; அந்நீரோட்டம் ஊடுருவிவரும் நிலப்படைகளையும் நிலவறைகளையுங் கூடத் தான் ஒரு கிழி (map) யில் எழுதிக் காட்டுதல் கூடுமெனவும் மொழிந்தனன். உடனே அந்நிலத்தை வாங்கிக் கொள்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டது; நிலத்தைத் தோண்டும் வினையுந் துவங்கியது. இங்ஙனந் துவங்கியது 1864 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலாகும். அவ்வினை நாடோறும் நடைபெற்று நவம்பர்த்திங்களுக்கு வந்ததுங் கீழே 711 அடி ஆழம் அகழப் பட்டது; அவ்வளவு ஆழந் தோண்டியதும் நீர்நிலைதட்டுப்பட, அப்பொழுதே நாளொன்றுக்கு அறுநூறாயிர நாநாழி தீஞ்சுவைத் தண்ணீர் மேற்பொங்கி வழிந்தோடலாயிற்று. அக்குறிகாரன் பேச்சை முதலில் நம்பாதிருந்த மக்கட்கு நம்பிக்கை வருவித்தற் பொருட்டு அவன் அகக்கண்ணாற் கண்டு

*வரையறுத்துச் சொல்லியவாறே துளைக்கருவி துருவிச் சென்ற நிலப்படைகள் அமைந்திருந்தன. துவக்கத்தில் துருவுகருவி 100 அடிவரையிற் றுளைத்துச் சென்றநிலம் அடைமண் படையாயிருந்தது; அதன்பின் 35 அடிவரையில் எண்ணெய் கலந்த சுக்கான் கற்படையாதலால் அது நிலக்கரியைப்போல் நன்றாய் எரியத்தக்கதா யிருந்தது; அதன்பின் 100 அடிகாறும் ஒருவகையான சலவைக் கற்படை* (Joliet marble) *அதன்பின் 125 அடிவரையும் மணலுஞ் சக்கிமுக்கிக் கல்லும் ஒருங்குதிரண்டு இருப்புத் தீக்கல்லுஞ் சிறிது செம்புங் கலந்த படை; அதன்பின் 156 அடிகாறும் மண்ணெண்ணெய் ஊறியபாறைக் களிப்பு, இது தகரமும் ஈயப் பொடியுங் கலந்த பசைபோல் தடுப்பாய்க் கொழுவியவண்டலாய் மேற்கிளம்பியது; அதன் பின் 530 அடி ஆழத்திற் கந்தகக்கலப்புள்ள சுக்கான் கற்படை; அதன்பின் 639 அடி ஆழத்திற் கந்தகங் கலந்த இரும்புஞ் சக்கிமுக்கிக் கல்லும் உடைய ஒரு சுக்கான் கற்படை துளைக்கப்பட்டது; இச் சுக்கான் கற்படை மிகவுங் கெட்டியாய் இருந்தமையால் வேலை மெதுவாகவே நடந்தது; உள்ளடங்கியிருந்த ஆவி இப்போது வெளிக்கிளம்புதற்கு இடங் கிடைத்தமையால் இந்நிலப் படையின் கண் ஒருவகையான கொந்தளிப்பு அடிக்கடி உண்டாயிற்று; அதனால் அங்கிருந்த தண்ணீர் 30 அடியிலிருந்து 60 அடிவரையிற் சடுதியிற் கீழிறங்கி மறுபடியும் மேன் மட்டத்திற்குச் சடுதியில் எழுவதாயிற்று; அப்போது, துருவு கருவியாற் பெயர்ந்த துண்டுகளும் மற்றைப் பொருள்களும் அத்தண்ணீரொடு கலந்து உடன்வரலாயின; மேலும் மேலும் அத்துருவு தொழில் நடந்து கொண்டே போயிற்று; பின்னர் 711 அடி ஆழத்திற்கு வந்தவுடன் கீழுள்ள பாறையின் வளைவு துளையிடப்பட்டது; நாலரை விரற்கடை அடியிற் றுருவப்பட்ட துளைவழியே 58 வரை வெதுவெதுப்புள்ளதொரு செழும்புனல் பளிங்குபோற் றெளிவாய், வைரம்போற் றூய்தாய், நிலையியற் பொருள் இயங்கியற் பொருள் ஏதுங் கலவாததாய்ப் பருகுதற்கும் உடம்புநலம் பேணுதற்கும் இதுவரையிற் கிடைத்த எல்லா வகையான நீரையும்விட மிகச் சிறந்த தொன்றாய், எக்காலத்தும் ஏழை மக்கட் குதவும் நட்புப் பொருளாய்ச் சடுதியில் வெடித்து மேல் வந்தது.*"

"நம்பிக்கை யில்லாதவர்கட்கு இஃதோர் அரிய பெரிய நிகழ்ச்சியா யிருக்கின்றது; கட்புலனாகாத ஓர் அறிவுக் காட்சியால் வெளிப்படுத்தப்பட்ட இவ்வுண்மை நிகழ்ச்சியை மறுத்து உரைக்கத் தக்கது ஏதுமே இல்லை. இயற்பொருள் நூல் தண்ணீர் அகப்படாதென்று கட்டுரைத்துச் சொல்லியது; மன நூலோ அதனுரையைப் பொய்யென மொழிந்து, இந் நிலவுலகமானது தன்னுருவாணிமேற் சுழன்று செல்லுங்காறும் ஏராளமாய்ப் பெருகியோடும் நீரோட்டம் உள்ளதாகிய ஓரிடத்தை யான் சுட்டிக் காட்டுவேன் என்றது. 1864 ஆம் ஆண்டிலிருந்து சிக்காகோ நகரத்து இந்நீர் ஊற்றானது நாளொன்றுக்குப் பதினைந்து நூறாயிர நானாழி தண்ணீர் அளித்து வருகின்றது" என்று கலைநூற் புலமையில்மிக்க சாமுவேல் ஏடன் என்னும் பேராசிரியர் வரைந்திருக்கின்றார்.[1]

இம்மெய்ந்நிகழ்ச்சியினாற் போதரும் உண்மை யாது? பல கலை நூற் புலமையின் மிக்காராலும் அறியப்படாத மறைபொருள்கள், கல்வியறிவே சிறிதுமில்லாத பேதையர் சிலரின் அகக் கண் காட்சியால் நேரே கண்டு தினையத் தனையும் பிழைபடாமல் வெளிப்படுத்தப்படுகின்றன வென்பதன்றோ? 'ஆபிரகாம் ஜேம்ஸ்' என்னும் அக் கல்லா ஆண்மகன், இந்நிலத்தின் மேற்பரப்புக்கு 711 அடி ஆழத்தின் கீழ் உள்ளதான அத் தீஞ்சுவைத் தண்ணீர் நிலையை எங்ஙனங் கண்டறிந்தான்? கல்வித்துறையில் ஆழ்ந்து போன துரை மக்களின் காட்சிக்கும் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாத இந்நிலத்தின் ஆழத்தையும், அவ்வாழத்திலுள்ள பெரியதொரு நீர் நிலையையுங் கண்டது அவனது புறக்கண்ணா அல்லது அகக் கண்ணா? புறக்கண்ணோ மேலுங் கீழும் முன்னும் பின்னும் மறைபட்டிருக்கும் பொருள் களையும் நிகழ்ச்சிகளையும் ஒரு சிறிதுங் காணவல்லதாயில்லை; அங்ஙனமிருக்க, அந்நாலிடங்களிலும் அண்மையிலுஞ் சேய்மையிலும் முற்றும் மறைபட்டிருக்கும் பொருள் நிகழ்ச்சிகளைப் பிழையாமற் காணவல்லது ஒன்று உளதாயின், அது நம்மக்களிற் சிலர்க்கு வாய்ந்துள்ள அகக்கண்ணே யாகவேண்டுமென்பது தெற்றெனப் புலனாகின்ற தன்றோ?

அற்றேலஃதாக, கல்வித் துறையிற் சிறந்தாராய்த் திகழும் அறிஞர்க்கும் புலனாகாத மறைபொருள் நிகழ்ச்சிகள்,

கல்வியறிவில்லாப் பேதையர் சிலர்க்கு நன்குவிளங்குதல் என்னை யெனின், இப்பிறவியிற் கல்லாதவராய்க் காணப்படும் அகக் கண்ணுடையார் சிலர் மேற்சென்ற பிறவிகளிற் பலதுறைகளிலும் நன்கு கற்றுத் தம் அகக் கண்ணை மறைத்த அறியாமையிருள் விலகி அகவறிவு நன்கு விளங்கப் பெறுகின்றாராகலின், அவர் இப் பிறவியிற் கல்வியறிவின் றுணையில்லாமலே எல்லாவற்றையும் நன்கு நேரே கண்டறிய வல்ல அகக்காட்சி யுடைய ராகின்றாரென்க.

மேலே காட்டிய மெய்ந்நிகழ்ச்சியில் 'ஆபிரகாம் ஜேம்ஸ்' என்னுந் தெளிவுக் காட்சியினன் கண்ட நிலத்தின் கீழ் நீர் நிலையினை, அவன் காலத்திருந்தார் எவருமே அறியாராகலின், பிறரொருவர் அதனைக் கண்டறிந்து நினைந்த நினைவே அவனுளத்திற் றோன்றிய தென்று கூறுதலும் ஆகாமை உணர்ந்து கொள்க.

இனிக், கல்வித்துறையிற் றேர்ச்சி பெற்றார் சிலர்க்கும் மறைபொருள் நிகழ்ச்சிகளைக் காணும் அகக்கண் காட்சி யுளதென்பதனை விளக்குவாம். மறைபொருள்களைக் காணும் அக்காட்சிக்கு, அவர்கள் இப்பிறவியிற் பயின்ற நூல்களால் உளதாய அறிவு நேரே துணைசெய்யாவிடினும், இப்பிறவியின் நூலறிவும் மேற்பிறவிகளின் நூலறிவும் ஒருங்கு சேர்ந்து, அவரது அகக்கண்ணை மறைத்த வல்லிருளை அகற்றி அதனை நன்கு விளங்கச் செய்தலின், அவை அக்காட்சிக்கு நேரல் காரணமாதல் கருத்திற் பதிக்கற்பாற்று. இற்றைக்கு 163 ஆண்டுகளுக்குமுன் மேனாட்டிற் சுவீடன் தேயத்தில் ஸ்டாக்கோம் என்னும் நகரில் 84 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தவரான 'சுவீடன்பர்க்கு' (Swedenborg) என்னும் ஆசிரியர் கலைநூற்புலமையிற் றலைசிறந்து விளங்கினவர் ஆவர். இவர் தமக்கு அகவை 55 நடக்கையில், இவரது அகக்கண் திறக்கப்பெற்று, மேலுலகக் காட்சி களையுங், கடவுளின் இயல்புகளையும், பலதிறப்பட்ட உயிர்கள் உலகங்களின் காட்சிகளையுங் கண்டு நூல்கள் பல எழுதினார். அவர் எழுதிய அந்நூல்கள் ஒன்றில், தாம் மேலுலகக் காட்சிகளையுங் கடவுளியல்புகளையுங் கண்டு, அவை தம்மை நேரே காணமாட்டாத இந்நிலவுலகினர்க்கு அறிவிக்கும்படி யாகவே கடவுள் தமக்கு அகக்கண் திறப்பித்தருளினார் என்று

நுவன்றிருக்கின்றார். அவரது காலத்திருந்த ‘காண்டு’ (Kant) முதலான மெய்ந்நூலாசிரியரும் பிறரும், அவரது அகக்காட்சியின் மெய்ம்மையை வியந்து பேசிப் பாராட்டியிருக்கின்றனர். அத்தகைய அப்பெரியார் பலரறியக்கண்டு சொல்லிய இரண்டு மறைபொருள் நிகழ்ச்சிகளை ஈண்டெடுத்துக் காட்டுதும்:

“ஸ்டாக்கோம் நகரத்தில் உலாந்தா அரசன் தூதுவராய் அமர்ந்திருந்த துரைமகனாரின் மனைவியான ‘ஆர்த்திவில்லி’ இறந்துபோன தம் கணவர் உணவு படைக்கும் வெள்ளிக் கலன்களைத் தன்னிடங் கடனாக வாங்கினமையின், அவற்றிற் குரிய பணத்தைச் செலுத்தும்படி ஒரு பொற் கொல்லனால் அடிக்கடி வேண்டப்பட்டார். ஆனால் அப்பணம் அவனுக்குத் தங் கணவராற் செலுத்தப்பட்ட தெனவே அவ்வம்மையார் நம்பினார்; என்றாலும் அதற்குப் பெற்ற பற்றுச்சீட்டை அவர் கண்டெடுக்கல் முடியவில்லை; ஆகவே, அச்சீட்டு எங்கே யுளதென்று தங் கணவரைக் கேட்டு அறிவிக்கும்படி அவ்வம்மையார் சுவீடன்பார்க்கு ஆசிரியரைக் கெஞ்சி வேண்டிக் கொண்டார். மூன்றுநாட்கழித்து அவ்வாசிரியர் அவ்வம்மை யாரது இல்லத்திற்குப் போந்து, அங்கே காணவந்திருந்தார் பலர் முன்னிலையில், தாம் அவர்தங் கணவனாரைக் கண்டு பேசியதையும், அவர் அக் கடனைச் செலுத்திப்பெற்ற பற்றுச்சீட்டு அவரது அவ்வில்லத்தின் மேன்மாளிகையின் கண்ணதான ஓர் அறையிலுள்ள நிலைப்பேழையில் வைக்கப்பட்டிருத்தலைத் தாம் அவர்வாய்க் கேட்டறிந்ததையும் எடுத்துரைத்தார். ஆனால், ஆர்த்திவில்லி என்னும் அவ்வம்மையார் தாம் அந்நிலைப்பேழையை முன்னமே தேடிப் பார்த்தும், அஃதங் கில்லாமையை அறிவித்தார். அதற்குச் சுவீடன் பர்க்கு சொல்லியதாவது; அவ்வம்மையாரின் கணவரது ஆவியுருவந் தமக்கு அறிவித்ததில் அந்நிலைப்பேழையின் இடது பக்கமாயுள்ள ஓர் இழுகையை இழுத்தால் அதில் ஒரு கள்ள அறை காணப்படும்; அக்கள்ளவறைக்குள் மறைபொருளாகத் தாம் உலாந்த அரசற் கெழுதிய கடிதங்களும் அப்பற்றுச் சீட்டும் இருக்கும் எனப் போந்த செய்தி குறிப்பிடத் தக்கதாகுமென்பதே. அச்செய்தி கேட்டு அங்கிருந்தாரெல்லாரும் உடனே மேன் மாளிகைக்குச் சென்று. அவர் விளக்கிச் சொல்லியபடியே இதற்குமுன் எவரும்

அறியாத அக் கள்ள வறையில் அப்பற்றுச் சீட்டும் அரசியற் கடிதங்களும் இருக்கக் கண்டார்கள்."[1]

இந்நிகழ்ச்சியிற் சொல்லப்பட்ட பற்றுச்சீட்டை மறைத்து வைத்து இறந்துபோன துரைமகனாரன்றி வேறெவரும் அதனை அறியாதிருந்தும், அத்துரைமகனாரின் ஆவியுருவினைத் தமது அகக் கண்ணினாற் றெளிவாய்க் கண்டும், மறைபட்ட அச்சீட்டு இருந்த இடத்தை அவ்வாவியினாற் றெரிந்துரைத்தும், ஒருவரன்றிப் பலர் முன்னிலையில் அதனை மெய்ப்பித்த ஆசிரியர் சுவீடன் பர்க்கின் தெளிவுக்காட்சி எவரானும் ஐயுறுதற்கு இடந்தராத வியப்பினதாதல் கருத்திற் பதிக்கற்பாற்று.

இன்னும், இவ்வாசிரியர் 1759 ஆம் ஆண்டு செப்டம் பர்த்திங்களில் ஒரு சனிக்கிழமை பிற்பகல் நாலுமணிக்கு இங்கிலாந்திலிருந்து 'காட்டன்பர்க்கு' என்னும் நகர்க்கு வந்து, அங்கே ஒரு நண்பரால் அவர்தம் வீட்டிற்கு அழைக்கப்பட்டார். இரண்டு மணி நேரத்திற்குப் பின் அவர் அவ் வீட்டை விட்டு வெளியேபோய்ப், பிறகு உள்ளே திரும்பிவந்து, அப்போதங் கிருந்த விருந்தினர் குழுவை நோக்கி "இப்போது தான் 'ஸ்டோக்கோம்' நகரத்தில் ஒரு பொல்லாத தீப்பற்றி எரிகின்றது! அத் தீயானது விரைந்து பரவுகின்றது!" என்று சொல்லிக் கொண்டே அடிக்கடி வீட்டைவிட்டு வெளியே போன வண்ணமாய்த் துடிதுடித்தார். அந்த ஸ்டோக்காம் நகரமானது காட்டன் பர்க்கு நகரத்திற்கு ஐம்பது செர்மன் மைல் தொலைவிலுள்ளது. மேலும், அங்கே தம் நண்பர் ஒருவரின் வீடு இப்போதே சாம்பலாய்ப் போய்விட்ட தெனவுந், தமது இல்லமுங்கூட இடர்ப்பாடான நிலைமையி லிருக்கின்ற தெனவும் மொழிந்தார். ஆனால், மாலை எட்டு மணிக்கு மறுபடியும் அவர் வீட்டைவிட்டு வெளியே போய்த் திரும்பி வந்து, தமது வீட்டிற்கு மூன்றாவதான இல்லத்திலேயே அத்தீ அவிக்கப்பட்டுவிட்டது என்று பெருமகிழ்ச்சியுடன் கூறினார். அவர் கூறிய அச்செய்தியானது அந்நகர மெங்கும் பெரியதொரு குழப்பத்தினை உண்டாக்கியது; அன்று அம்மாலைக் காலத்திலேயே அச்செய்தி அரசியற் றலைவர்க்கு அறிவிக்கப் பட்டது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே அத்தலைவர் சுவீடன்பர்க் காசிரியரைத் தம்பால் வருவித்து அத்தீ

நிகழ்ச்சியைப்பற்றி வினவினார். அதற்கு அவர் அந் நெருப்புண்டான வகையையும், அஃதெவ்வளவு நேரம் பற்றி எரிந்தது, பின் அஃதெவ்வாறு அணைக்கப்பட்டது என்பவை களையு மெல்லாஞ்சீராய் எடுத்துரைத்தார். அங்ஙனம் அந்நெருப்புப் பற்றி எரிந்த நேரத்தில், வாணிகக் கழகத்தினரால் விதிக்கப்பட்ட ஓர் ஒற்றன் திங்கட்கிழமை மாலையிற் காட்டன் பர்க்கு நகரத்திற்கு வந்து சேர்ந்தான். அவன் கொணர்ந்த கடிதங்களிற், சுவீடன் பர்க்கு மொழிந்த வண்ணமே அந் நெருப்புப்பற்றிய வரலாறு குறிக்கப்பட்டிருந்தது. அதற்கடுத்த நாட் காலையில் வந்த அரசியற் றூதுவனும் முன்வந்த செய்தியின் உண்மையை அரசியற்றலைவர்க்கு உறுதிப்படுத்தி விளம்பினன். சுவீடன்பர்க் காசிரியர் மொழிந்தவாறே அந் நெருப்பு அன்று மாலை எட்டு மணிக்குத்தான் அவிக்கப்பட்டது என்க.

இங்ஙனத், தாமிருந்த இடத்திற்கு நெடுந்தொலைவிலுள்ள தமதூரில் நெருப்புப் பற்றி எரிந்ததனையும், பின்னரது அணைக்கப்பட்டதனையும் புறக்கண்ணெதிரே கண்டாற் போல், அத்துணை விளக்கமாகத் தமது அகக் கண்ணாற் கண்டு அரசியற்றலைவர் உட்பட எல்லார்க்கும் எடுத்துக் கூறிய சுவீடன்பர்க் காசிரியரின் அகக்கண் காட்சியினுண்மையினை எவரேனும் மறுத்துச் சொல்லுதல் இயலுமோ? இயலாதன்றோ.

இனித், தெளிவுக்காட்சி யுடையார் சிலரால் நோயாளி கட்கு உண்டாகும் நன்மை சிறிதன்று. ஏனென்றாற், சில கொடிய நோய்களின்றன்மை அந்நோய்களாற் பற்றப்பட்டு வருந்து வார்க்குந் தெரிவதில்லை; அவர்க்கு நோய் தீர்க்க வரும் வல்ல மருத்துவர்க்குந் தெரிவதில்லை. சிறந்த மருத்துவர்களும் நோயின் றன்மையும் அதன் மூலமும் நன்குணரப் பெறாமற் பிழைபடுத லால், அவர் கொடுக்கும் மருந்து நோயாளிக்கு நோயினால் விளையுந் துன்பத்தைவிட மிகக் கொடிய துன்பத்தையும் உடலழிவையும் விளைத்துவிடுகின்றன. ஏனென்றால், உடம்பின்மேலே காணப்படும் நோய்களை மருத்துவர்கள் நேரே காண்பதனாற் பெரும்பாலும் பிழைபடாமல் அவை தீர்க்கு முறைகளைச் செய்து அவை தம்மைத் தீர்த்து விடுகின்றார்கள். ஆனால், உடம்பினுள்ளே நிகழும் நோய்க் காரணங்களையோ அங்ஙனம் அவர்கள் நேரே காண்டல் இயலாமையால், வெறும்

உய்த்துணர்ச்சி ஒன்றே கொண்டு ஆராய்ந்து தாங்கருதிய மருந்துகளை ஊட்டுகின்றார்கள்; அல்லது உடலுறுப்புகளை அறுத்துப் பார்த்து அவையிற்றை நீக்க முயல்கின்றார்கள்; இம் முயற்சியிலே பலகாலும் பிழைபட்டு விடுதலால், நோயாளிகள் அவர்தரும் மருந்தாலும் அவர்செய்யும் முறையாலும் பெருந் துன்புழந்து இறந்துபோகின்றார்கள்! இவ்வாறு நேரும் இடர்கள் சிலவற்றை யாமே பார்த்திருக்கின்றேம். ஒருகால் ஒரு செல்வர் வீட்டு இளமாதரார் ஒருவர்க்கு மிகக்கொடியதொரு வயிற்றுவலியுண்டாயிற்று. அதற்காக ஆங்கில மருத்துவர் சிலர்பாற் பெரும் பொருள் கொடுத்து மருந்துகள் வாங்கித் தொடர்பாக உட்கொண்டும், ஏதும் பயன் விளைந்திலது. அதனாற் சிறிது காலத்திற்குப் பின் அம்மாதரார் சென்னைக்கு வந்து, அங்கு அறுத்துத் தீர்க்கும் வல்லமருத்துவர் ஒருவர்க்குத் தாம் படும்பாட்டை எடுத்துரைப்ப, அவர் வயிற்றினுள்ளே ஏதோ ஒரு பிசகு நேர்ந்திருக்கின்றது; வயிற்றை அறுத்துப் பார்த்துத்தான் அந்தப் பிசகை நீக்க வேண்டுமென்றனர். அதற்கு அம்மாதரும் அவர் தஞ் சுற்றத்தாரும் இசையவே, அம் மருத்துவர் அவ்வம்மையார்க்கு மயக்க மருந்து கொடுத்து அவரது வயிற்றை அறுத்துப் பார்க்க அதனுள்ளே ஏதொரு பிசகும் இல்லாமை கண்டு ஏமாற்றம் அடைந்தனர். உடனே அவரது வயிற்றை மறுபடியும் மூடித் தைத்து, அவ்வம்மை யார்க்கு மயக்கந் தெளிவித்தார். அவ்வம்மையார் பின்னும் வயிற்று வலியால் துன்புற்றே வந்தனர். இங்ஙனமே மருத்துவர் செய்யும் பிழைபாடுகள் இன்னும் பலவற்றைப் பார்த்துங் கேட்டு மிருக்கின்றேம். ஆகையால், வெறும் உய்த்துணர்ச்சி ஒன்று கொண்டே உடம்பின் அகத்தே நேரும் பழுதுகளைத் திருத்தமாய் உணர்தல் செல்லாதென்பது உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இங்ஙனமாக எத்துணைச் சிறந்த மருத்துவர்களும் உடம்பின் அகத்துள்ள நோயின் கூறுபாடுகளைச் செவ்வனே யறியப்பெறாமற் பிழைபடுதலாலும், அதனால் எத்தனையோ சிறந்த மக்கள் பெரிதுந் துன்புற்று உயிரிழத்தலாலும் அயல்நாடுகளிலுள்ள மருத்துவ அறிஞர் சிலர், தெளிவுக் காட்சியுடையார் சிலரைத் துணைகொண்டு நோயாளிகளின் உடம்பினுட் பகுதிகளின் நிலையினைத் தெளிவாகத் தெரிந்து,

அவர்க்குள்ள நோய்களை எளிதிற் றீர்த்து வருகின்றார்கள். இதற்கு உண்மையாக நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியினை ஈண்டு எடுத்துக் காட்டுதும்:

"உவில்டு எனப் பெயரிய ஒரு சிறந்த மருத்துவ ஆசிரியர் நல்ல காலமாய்த் தெளிவுக்காட்சி இயற்கையே வாய்ந்த ஒரு மாதராரது பழக்கத்தைப் பெற்றனர்; இம்மாதரார் நல்லதொரு குடும்பத்தில் அமைதியாய் வாழ்ந்து வரும் நல்லொழுக்கம் வாய்ந்தவர். ஒருநாள் இம்மருத்துவர் அவ்வம்மையாரை நோக்கித், தமக்கு நண்பராயுள்ளார் ஒருவர் பல ஆண்டுகளாக ஒவ்வொரு நாளின் இரவிலுந் தம்முடைய முதுகிலும் நெஞ்சிலுஞ் சொல்லற்கரிய நோய் கொண்டு நெடுநேரம் வருந்துகின் றாரென்றும், இப்போது சிலநாட்களாக ஒரு நாற்காலியில் அவர் இரவு முழுதும் உட்கார்ந்திருக்க வேண்டியவராய் விட்டமையால் அவருடைய கால்கள் வீங்கத்துவங்கியிருக்கின்றன வென்றும் புகன்றார். இந்த நண்பர் மூன்றாண்டுகளாக இலண்டன் மாநகரிற் புகழ்பெற்ற மருத்துவர் பலரால் முறையாகப் பார்க்கப்பட்டுவந்தவர். அவரிற் சிலர் அந்நோயாளியின் நெஞ்சப்பையில் ஏதோ கருகலான ஒரு நோய் இருக்க வேண்டுமெனக் கூறினர்; மற்றுஞ் சிலர் அஃதொரு நரம்பைப்பற்றிய வலியாய் இருக்கவேண்டும் என்றனர்; ஒருவர் அதனைப் பொருத்துப் பிடிப்பு என்றனர்; கடைசியாக உசாவப்பட்ட ஒருவர் அது முதுகெலும்பு அழுகிப் போனமையால் உண்டாயதெனப் பகர்ந்தனர்.

"பிறகு அம்மருத்துவ ஆசிரியர் குறிப்பிட்ட ஒருநாளில் அவர்தம் நோயாளி நண்பர் அவ்வம்மையாரை வந்து கண்டனர். அவ்வம்மையார் சிறிதுநேரம் அவரைச் சும்மா உற்று நோக்கினர். அதன்பின் அந்நோயாளி அவ்வறையை விட்டுச் சென்றபின், அந்நங்கையார் அவர்க்குள்ள நோயின் நிலைமையைப்பற்றிப் பின்வருமாறு மொழிந்தனர்: 'அந்நோய் எத்தன்மைய தென்பதைக் கண்டேன்; அவரது உடம்பு ஊடுருவிக் காணத்தக்க துலக்கமுடையதாய்த் தோன்றினமையால் யான் அந்நோயின் றன்மையைத் தெளிவாய்க் கண்டேன். அவரது நெஞ்சப்பைக்குப் பின்னே ஒரு கட்டி கிளம்பியிருக்கின்றது; அஃதொரு கடுக்கொட்டையின் அளவுள்ளதாய்க் காணப்படு

கின்றது; அஃது அழுக்கு நிறம் உடையதாயிருக்கின்றது; அஃது அசைவதைப் பார்த்தால் அது வெடித்துவிடும்போற் றோன்றுகின்றது; முற்றும் ஓய்ந்திருப்பதைத் தவிர, வேறேதும் அவர்க்கு நன்மை செய்யாது' என்பது.

உவில்ட் என்னும் அம்மருத்துவ ஆசிரியர், அம்மாதரார் சொல்லியதன் கருத்து இன்னதென அறிந்து, தம் நோயாளி நண்பர்க்கு மருத்துவஞ்செய்யும் அறிஞர்க்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்: 'நம் நண்பர்க்குள்ள நோயின் இயல்பு இன்னதெனக் கண்டுகொண்டேன். அவரது நெஞ்சப் பையினின்று கீழிறங்குஞ் செந்நீர்க் குழாயின்மேற் கடுக்கொட்டையினளவுள்ள ஒருகட்டி கிளம்பியிருக்கக் காண்கின்றோம்; விலாவெலும்பு களினிடையேயுள்ள நரம்புகளை இக்கட்டி நெருக்குவ தனாலேயே அவர்தம் முதுகிலும், மார்பின் புறத்தும் அத்துணைக் கொடியநோயும் வலியும் உண்டாயிருக்கின்றன. நாளை நீங்கள் காணும் மருத்துவ ஆசிரியர்க்கும் இந்நோயின் நிலையை எடுத்துரைத்து, அவர் யாது சொல்கின்றாரென்பதை எனக்குத் தெரிவியுங்கள்' என்பது.

"பிறகு, அந்நோயாளியானவர் மற்றைய மருத்துவர் களோடுஞ் சூழ்ந்து பார்த்ததில், தெளிவுக்காட்சியுடைய அம்மாதரார் தமது அகக்கண்ணாற் கண்டு சொல்லிய அந்நோயின்றன்மையே உண்மையென்று உறுதிப்படலாயிற்று. இன்னும், அந்நோய் தீர்க்கத்தக்க முறை அந்நோயாளி முற்றும் ஓய்ந்திருத்தலே யாகுமென்பதூஉம் அம்மையார் சொல்லியவாறே அம்மருத்துவ ரெல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அம்மாதரார் அந்நோயினியல்பைக் கண்டுரைத்தமையினாலேயே அந்நோயாளி அந்நோய் தீர்ந்து உயிர்பிழைத்தார். அவ்வம்மை யாரைக் காண்பதற்குமுன் அவர் வேட்டமாடவுங், குதிரை ஊரவும், வண்டியோட்டவும், மேசைப்பந்தாடவும் மருத்துவர் களாற் கற்பிக்கப்பட்டிருந்தனர்![1] ஆனால், அங்ஙனஞ் செய்திருந்தால் அவர் உயிரிழந்திருப்பர்! தெளிவுக்காட்சி வாய்ந்த அம்மாதரார் கூறிய அறிவுரை கேட்டு அவர் முழுதும் ஓய்ந்திருந்தமையினாலேயே மறைந்த இடத்திலுண்டான அக்கொடிய நோய் நீங்கி நலம் பெற்றார்.

பார்மின்கள்! ஆராய்ச்சி வல்ல மருத்துவர் பலரறிவுக்கும் எட்டாத அப்பொல்லாத உள்நோயின்றன்மை, மருத்துவப் பயிற்சியே யில்லாத அம்மாதராரது அகக் கண்ணுக்கு எவ்வளவு நன்றாய்ப் புலனாகியது! அது மட்டுமோ! அவர் கூறிய எளிய முறையைப் பின்பற்றி யொழுகியதனால் அது முற்றுமே தீர்ந்தும் ஒழிந்ததன்றோ? ஆகவே, இத் தமிழ்நாட்டவர்களும் இயற்கையிலேயே தெளிவுக்காட்சி வாய்ந்தவர்களா யிருப்பவர்களை ஆங்காங்குத் தெரிந்தெடுத்துவைத்து, அவரது உதவியினால் தமக்குள்ள நோயின் றன்மைகளை உள்ளவாறுணர்ந்து, அவர் கூறும் முறைப்படியே வழுவாது நடந்து, தமக்குள்ள நோய்கள் நீங்கி நலம் பெறுவார்களாக! இந்நாட்டில் தெளிவுக் காட்சியில்லாதார் பலர் அஃதுடை யார்போற் கள்ளமாய் நடந்து மக்களைப் பலவகையால் ஏமாற்றி, அவரது பொருளையுங் கொள்ளை கொண்டு அவரையும் உயிர் மாளச் செய்கின்றனர். ஆதலால், ஆராய்ச்சி வல்ல அறிஞரின் உதவியால், தெளிவுக் காட்சி யுண்மையாக வாய்ந்தார் இன்னாரெனத் தீர்மானமாய்த் தெரிந்து, அதன் பின் அவருதவியை நாடுதலே செயற்பால தென்பதனை ஒவ்வொருவருங் கருத்திற் பதித்தல் வேண்டும்.

இனித், தெளிவுக்காட்சியின் ஆற்றல் மிகுதியாயுள்ளவர் களுக்கு இப்பிறவியின் நிகழ்ச்சிகள் மட்டுமே யன்றிக் கடந்துபோன பிறவிகளின் நிகழ்ச்சிகளும், இனி வரும் பிறவிகளின் நிகழ்ச்சிகளுந் தெளிவாக விளங்கி விடுகின்றன. செர்மன்தேயத்து ஆசிரியரான ‘சோக்கி’ (Zschokke) என்பவர் தாமே எழுதிவைத்த தமது வாழ்க்கை வரலாற்றில் தமக்குள்ள தெளிவுக்காட்சியின் ஆற்றலை வியந்து கூறுவது வருமாறு:

“எனக்கு முழுதுமே அறிமுகமில்லாத ஒருவரை யான் எதிர்ப்பட்டு அவர் உரையாடுவனவற்றை யான் உற்றுக் கேட்குங்கால், அக்காட்சி எனக்கு இடையிடையே தோன்றினமையால், அவரது முன்னைப் பிறவியிலிருந்து அவர் இப்போதிருக்கும் நேரம் வரையில் நிகழ்ந்த அவருடைய வாழ்க்கை வரலாறுகள் பல நுட்பமாகவும் குறிப்பிடத்தக்க

ஒன்றிரண்டு முதன்மையான செய்திகள் சிறப்பாகவும் என்முன்னே கனவெனக் குறுக்கிட்டுக் காணப்படலாயின; ஆயினும், அவை யான் வேண்டாமலே என் வயமின்றித் தெளிவாய்த் தோன்றிச் சிறிதுநேரத்தில் மறைந்துபோயின.

“ஒருகால் ஒரு தையற்காரரின் இளம்பருவத்து வரலாற்றினை, அவள் எங்கள் அறையை விட்டுப் போன அப்பொழுதே என் குடும்பத்தார்க்கு எடுத்துச்சொன்னேன். யான் அதற்குமுன் அவளைப் பார்த்ததேயில்லை. அவ்வாறிருந்தும், யான் சொல்லியவை முழுதும் உண்மையாயிருந்தமையால், யான் அம்மாதின் இளம்பருவ வரலாற்றை முன்னமே தெரிந்திருக்கத்தான் வேண்டுமெனக் கூறி, அதனைக் கேட்ட என் குடும்பத்தினர் நகையாடினர்.

“இன்னும் ஒருகால் யான் கானகப்பணியாள (forester) ராம் இளைஞர் இருவருடன் உவால்டுஷட்டு (Waldshut) என்னும் நகர்க்கு ஏகினேன். மாலைக்கால மாயினமையால் வழிநடந்த வருத்தந்தீர ஒரு விடுதிக்குச் சென்று, அங்குக் குழுமிய பலருடன் உண வருந்தாநிற்கையில், அவர்கள் அறிதுயிலைப் பற்றியும், உறுப்புக் குறியைப் பற்றியும் பகடிபண்ணினர். அவர்க்கு அறிவு தெருட்டும் பொருட்டு, அக்குழுவில் ஓர் இளைஞரை நோக்கிச் ‘சிறிது காலத்திற்கு முன் நடந்த உமது வாழ்க்கை வரலாற்றை யான் எடுத்துரைத்தால் நீர் அதனை ஒப்புக் கொண்டு சொல்வீரா?’ என யான் வினவ, அவர் ‘உண்மையாயின் ஒப்புக் கொண்டுரைப்பேன்’ என்றனர். அதன் மேல் அவ்விளைய வணிகருடைய பள்ளிக்கூட நடக்கைகளையும், புல்லிய குற்றங்களையும், அவர் தந் தலைவனது இருப்புப் பெட்டியிற் செய்த திருட்டையும், அவ்விருப்புப்பெட்டி வைக்கப்பட்டிருந்த அறையின் அடையாளங்களையுமெல்லாம் நன்கெடுத்துக் கூறினேன். அவையெல்லாம் முழுதும் உண்மையாயிருக்கக் கண்ட அவ்விளைஞர் மிகவும் வியப்புற்றவராகி, யான் எதிர் பார்த்ததற்குமேல் உண்மையை ஒப்புக்கொண்டு சொல்லினர்.[1] என்பது.

*இப்பெற்றித்தான தெளிவுக் காட்சியின் ஆற்றல் இன்னும் மிகுதியாய் வளரப்பெற்றார்க்கு முற்பிறவி, இப்பிறவிகளின் நிகழ்ச்சிகளேயன்றி இனிவரும் பிறவிகளின் நிகழ்ச்சியும் இனிது விளங்காநிற்கும். ஆகவே, இத்தெளிவுக் காட்சியினைத் தவப்பயிற்சியினால் விளங்கச் செய்து கொண்டு, நம்மனோர் தொலைவிலுணர்தலாகிய நிகரற்ற விழுமிய அறிவைப் பெறுவார்களாக! ஓம்.*

**அடிக்குறிப்புகள்**

1. "Phrenological Annual" 1892 Extract from articic by Dr. Samuel Eadon, M.D M.A., L.L.D., & Ph. D
2. Prof. W.F. Barrett's Psychical Research, pp.154 - 155
3. How to Thought - Read, by Prof. James Coates, Ph.D. pp. 39, 40
4. Clairvoyance, by C.W. Lead beater, pp. 127 - 130.

**தொலைவிலுணர்தல்**

– முற்றும் –

# பாவலர்கள் பார்வையில் அடிகளார்

## பொழுதெல்லாம் தமிழுக்குழைத்த தலைவன்!

வாழ்த்தாத நாளில்லை வையகம்
மறைமலையடிகள் மறையாத் திருப்பெயர்
வாழ்த்தாத நாளில்லை வையகம்

ஆழ்ந்து கடலில் முத்தெடுப் பார்போல்
அகன்ற உலக இலக்கியம் அனைத்திலும்
வீழ்ந்து பொருளுண்மை விளக்கும் ஆற்றலால்
வெல்ல முடியாத நல்லா சிரியனை
வாழ்த்தாத நாளில்லை வையகம்

தென்னாடு சார்ந்த குமரிப் பெருநிலம்
திரைகடல் மறைத்த உண்மைச் செய்திக்குப்
பொன்னேடு காட்டும் புலவர்க்குப் புலவனைப்
பொழுதெல்லாம் தமிழுக்குழைத்த தலைவனை
வாழ்த்தாத நாளில்லை வையகம்.

மறையெனப் படுவது தமிழ்நான் மறைநூல்
மற்றை மறைநூல் பின்வந்த குறைநூல்
முறையாய் இவைகட்குச் சான்று காட்டி
முழுக்கஞ் செய்த முத்தமிழ் அறிஞனை
வாழ்த்தாத நாளில்லை வையகம்!

**- பாவேந்தர் பாரதிதாசனார்**

## வாழ்த்துச் செய்திகள்

திருக்கழுக் குன்றன் திருவரு ளாலே
நாகையில் தோன்றிய நல்லோய் போற்றி!
அருந்தமிழ் ஆங்கிலம் ஆரியம் தேர்ந்து
திருந்துநூற் பற்பல தீட்டினோய் போற்றி!
சைவசித் தாந்த மாசமா சம்மெனும்
மெய்ப்பே ரவைசெய் மேலோய் போற்றி!
தனித்தமிழ் கண்ட தலைவா போற்றி!
பொதுநிலைக் கழகம் நிறுவினோய் போற்றி!
அறிவுக் கடல்தந்த அண்ணால் போற்றி!
இந்திவல் லாண்மையை எதிர்த்து முழங்கிச்
செந்தமிழ் பேணிய செம்மலே போற்றி!
அறிவுரைக் கொத்தினை அருளினோய் போற்றி!
நடஞ்செய் பெருமான் கோவில் அமைத்துக்
குடநீ ராட்டுசெய் கோவே போற்றி!
சீர்திருத்தக் குறிப்புகள் அருளினோய் போற்றி!
தமிழர் மதத்தைத் தெளிவுற விரித்தே
அமிழ்தத் தமிழ்நூல் ஆக்கினோய் போற்றி!
வள்ளுவர் யாண்டுகாண் வயவனே போற்றி!
நாகையில் சிலைகொள் நம்பியே போற்றி!
நூலகந் தந்த மேலோய் போற்றி!
துறவறம் பூண்ட தோன்றால் போற்றி!
அடியேற்கு மெய்ப்பொருள் அருளிய
முடிவிலாப் புகழ்கொள் முதல்வனே போற்றி!

**- குஞ்சிதபாதம் பிள்ளை,**

# மறைமலையடிகள் நூற்றாண்டு விழாப் பாமாலை மறைமலையடிகள் பல்துறை யாற்றற் பதிகம்

### 1. பேராசிரியர்

நூலும் நுவல்வும் நுணங்குரையும் நன்பதிப்பும்
சாலும் இதழும் சமமாக - மேலுயர்வுப்
பேரா சிரியர் பெரும்பேர் மறைமலையார்
நேரா ருளரிந் நிலத்து.

### 2. பெரும்புலவர்

தொல்காப் பியமுதலாந் தொன்னூலும் பின்னூலும்
பல்காற் றனிப்பாடல் பட்டயமும் - ஒல்காப்
பெரும்புலவ ருள்ளும் பெரியார் தனியே
அரும்பொன் மறைமலை யார்.

### 3. பாவலர்

உரைநடையும் பாவும் ஒருங்கே சிறந்த
விரைவுடையார் சில்லோர் வியன்பார் - மறைமலையார்
செம்மைப் பொருளணிசேர் செய்யுள் திருவொற்றி
மும்மணிக் கோவை முறை.

### 4. ஆராய்ச்சியாளர்

நுண்மதி கல்வி நுடங்காத் தறுகண்மை
நண்ணிலை மன்னலம் நல்வாய்மை - திண்முயற்சி
சாலுமா ராய்ச்சிச் சதுரர் மறைமலையார்
பாலையும் முல்லையும் பார்.

### 5. மும்மொழிப் புலவர்

மொழியும் இலக்கியமும் முத்தமி ழும்பேச்
சழியும் வடமாங் கிலமும் - கழிபுலமை
கொண்ட மறைமலையார் கோன்மை தமிழ்நிலமுன்
கண்டதுங் கேட்டதுமில்.

### 6. மொழி பெயர்ப்பாளர்

வேற்று மொழியின் விரகன் விழுப்பனுவல்
ஆற்று மரபும் அரும்பொருளும் - தேற்றி
அடிகள் மொழிபெயர்க்கும் ஆற்றற்குச் சான்று
முடிகொள்ளுஞ் சாகுந் தலம்.

### 7. சொற்பொழிவாளர்

இன்குரலும் இன்சொல்லும் இன்னிசையும் இன்கதையும்
நன்பொருளும் ஏதுவுடன் நற்காட்டும் - தென்பாய்ப்
பகைவரு முண்ணாது பன்னாளும் வேட்கும்
வகையடிகள் சொற்பொழிவு வாய்ப்பு.

### 8. எழுத்தாளர்

கடிதமுங் கட்டுரையுங் கண்டனமுங் கற்கும்
படியெழுதும் பாடமும் பன்னூல் -நடிகதையும்
மற்றோ ருரைமறுப்பும் மன்னும் புதினவரை
வுற்றார் மறைமலை யார்.

### 9. பல்கலைச் செல்வர்

தோற்றுந் தொலையுணர்வு தூய மனவசியம்
ஆற்றும் அறிதுயில் ஆர்வாழ்வு - மாற்றும்
மறுமை மறைமலையார் மாணுங் கலைகள்
பொறுமை யுடன்கற்ற போக்கு.

**10. தனித் தமிழ்த் தந்தையார்**

மூவா யிரமாண்டு மோதும் வடமொழியாற்
சாவாந் தசைநின்ற தண்டமிழை - மேவிக்
குமரித் தனிநிலைக்குக் கொண்டுவந்த அப்பர்
அமரர் மறைமலை யார்.

**- மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர்**
மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர்

## மறைமலையடிகளார் மாப்புகழ் வாழ்க!

தெய்வமாய் எண்ணும் தேவர்கட் கெல்லாம்
தேவனாம் சிவபெரு மானை
மெய்ம்மயிர் முகிழ்ப்ப உளத்திடை நிறுவி
மேன்மையாம் சைவசித் தாந்தம்
கைவரப் பெற்றுக் கற்றவர் வியப்பக்
களிப்புற விரித்துரை யாற்றிப்
பொய்வழக் கான புறமதங் கடிந்த
புண்ணியர் மறைமலை யடிகள். (1)

ஊனினை உருக்கும் வாசகம் தனக்கோர்
ஒப்பிலா உரைதரு நூலும்
தேனினும் இனிய வாசகர் காலம்
தெரிந்திடும் ஆய்வுரை நூலும்
வானினும் உயர்ந்த வளநிறை கருத்து
வாய்த்தபன் னூல்களும் எழுதி
ஆனின்நற் பாலின் சுவையும் கைப்பெய்து
அளித்தவர் மறைமலை யடிகள். (2)

கடல்வளை புவியில் காலங்காண் பொணாத
கனிதமிழ் மொழியினில் எழுந்த

சுடரொளிச் சங்க நூல்முதல் பலவும்
 தூய்மையாய் அச்சினில் ஏற்றிக்
கெடலரு மரபில் தமிழினை வளர்த்த
 கீர்த்தியர் பலருளர்; எனினும்
வடமொழி கலவாத தனித்தமிழ்ப் பற்றை
 வளர்த்தவர் மறைமலை யடிகள். (3)

நலமலி தமிழின் நடையிடைச் செய்யுள்
 நடைதரு நூல்களே பலவாம்;
புலமலி வில்லா எளியரும் உணரப்
 புத்துரை நடைசெய்தும் என்றே
நயமிலா நடையில் நூல்பல எழுதி
 நற்றமிழ் குலைத்தனர்; ஆனால்
உயர்தனிச் செம்மை உரைநடை எழுதி
 உதவினர் மறைமலை யடிகள். (4)

ஆங்கிலம் நல்ல அருந்தமிழ் மற்றும்
 ஆரியம் ஆயபன் மொழியில்
ஓங்கிய புலமை வாய்ந் ததோ டன்றி
 ஓதிய அம்மொழி நூல்கள்
பாங்குறத் திரட்டிப் பாதுகாத் தவற்றைப்
 பயன்பட வைத்தனர் எங்கள்
தேங்கிய புகழால் திசைஎலாம் பரவும்
 செம்மலாம் மறைமலை யடிகள் (5)

தென்றமிழ் மொழியுட் செறிந்திடு நயமாம்
 தெள்ளிய அருவிபாய் மலையாய்
நன்னராம் சைவ சித்தாந்த முடிபாம்
 நலங்கிளர் முடிகொளும் மலையாய்
பன்மொழி யறிவும் நன்மணியாகப்
 பாரினுக் களிக்குமோர் மலையாய்

மன்னிய குரிசில் மறைமலை யடிகள்
மாப்புகழ் வாழிவா ழியவே. (6)

மறைமலை யடிகள் வரைந்தநூல் தம்மை
மாண்புற அச்சினிற் பதித்தும்
துறைபல வாகத் தொகுத்துஅவர் அளித்த
தூயநூ லுடன்பிற நூலும்
குறைவறக் கூட்டி நூலகம் எடுத்தும்
குன்றனார் நூற்றாண்டு விழவும்
நிறைவுற நடாத்தும் தாமரைச் செல்வர்
சுப்பையாப் பிள்ளைவா ழியவே. (7)

**–பேரா. கு. சுந்தரமூர்த்தி**
திருப்பனந்தாள்

## அடிகளாரின் மொழிப் புலமை

தமிழறிவைத் தமிழர்களே இகழ்ந்த போதில்
தன்மான உணர்வின்றிக் கிடந்த போதில்
தமிழுணர்வு புயற்காற்றில் சிக்கிக் கொண்டு
தவித்துமிக அலைமோதித் துடித்த போதில்
தமிழுடனே பிறமொழிகள் கற்றுத் தேர்ந்த
சால்பாளர் தலைநிமிர்ந்து முன்னே வந்து
தமிழுயர்வை உலகறிய விளக்கிச் சொன்னார்
தமிழுயர வாழ்வெல்லாம் வழிகள் கண்டார்.

முறையாகத் தமிழ்பயின்று தமிழி னோடு
முழுதாகத் தம்வாழ்வை இணைத்துக் கொண்டு
மறைமலையார் தமிழ்க்காக வாழ்ந்தார் தூய
வண்டமிழ்க்கோர் புதுநெறியை வகுத்துச் சென்றார்
அரைகுறைகள் அடிகளைஇங் கிகழ்ந்து பேசி
அகமகிழ்ந்த பொழுதெல்லாம் மலைபோல் நின்று
பொறையோடு விரைந்து தமிழ்ப் பணிபு ரிந்த
புலவரது புலமையினைத் தமிழே சொல்லும்.

**- முனைவர். பொற்கோ.**

## ஞாயிறு போற்றுதும்

தென்பால் உளது, தேன்வளர் சாரல்,
மென்கால் குலவும் திண்கால் ஆரம்,
குதிதரும் அருவி மருவிய மாமலை,
மதியம் தவழும் பொதியம் ஒன்று;
வடபால் உளது; வானுயர் கொடுமுடி,
தொடரும் கருமுகில் படரும் சாரல்
உறை தரும் தண்பனி நிறைதரும் மாமலை
பரிதியை மறைக்கும் பனிமலை ஒன்று;

பெருமலை இரண்டும் ஒருமலை யாக்கக்
கருதிய ஒருசிலர் உறைபனி கொணர்ந்து
தென்றல் தவழும் குன்றின் தலையில்
அன்றவர் வைத்தனர்; அடடா! என்றனர்;
பனியால் நடுக்குறும் பயன்யாம் கண்டனம்;
இனிய தென்றலும் எழில்நலம் குறைந்தது;
விடுத்தஅப் பனிதான் விரைந்திவண் விலக,
நடுக்கிய பனியின் நலிவும் அகல,

ஒருநூ றாண்டின் முன்னர் ஒருநாள்
மறைமலை என்னும் மறுபெயர் பூண்டு
கடலலை மோதும் கரைபெறும் மூதூர்
இடமகல் நாகை எனும்பெயர்ப் பட்டினத்
தெழுந்ததோர் ஞாயிறு; கரைந்தது வெண்பனி;
தொழுதனர் மாந்தர் தோன்றுசெங் கதிரை;

இரியா இருளை இரியச் செய்வான்
பெரியார் அண்ணா பெரும்பணி புரிநாள்

இடை யறா அப்பணி இடையூ றின்றி
நடைபெறப் பேரொளி நல்கிய தக்கதிர்;
இருளால் மறைபடும் இனமொழி உணர்வுகள்
தெரிதர லாயின தெளிந்தனம் யாமே;
தெளிந்தனம் ஆதலின் குழைந்துள பனியில்
விழுந்தினி அழியோம் விழிப்புடன் நடப்போம்,
விழியொளி பெற்றும் வீழ்ந்ததில் மூழ்கின்
பழிபெறும் எம்மினும் இழிந்தவர் இலையால்;

விழியுளார் படுகுழி வீழ்வதும் உண்டோ?
ஒருகால் உடையோர் ஊன்றுகோல் பெறலாம்
இருகால் உடையார் எவரதை விழைவார்?
ஆதலின்,
சந்தனப் பொதியச் செந்தமிழ மாமலை
தந்தருள் தென்றலில் தனிநடை பயில்வோம்;
தளர்நடை தவிர்த்துத் தனிநடை கொடுத்த
வளரிளங் கதிரை வாயுற வாழ்த்துவம்;

இசைத்தமிழ் சுவைத்திட ஈகுவர் பெரும்பொருள்
நாடகத் தமிழ்க்கும் நல்குவர் அவ்வணம்
இயற்றமிழ் எனினோ ஈயார் ஒருபொருள்
மயற்படும் மாந்தர் மதிதான் என்னே!
இந்நிலை நிலவிய இம்மா நிலத்தில்
அந்நாள் வெண்பொன் முந்நூ றளித்திட
இயற்றமிழ் மதிப்பை ஏற்றிய புலவன்
செயற்றிறம் புரிந்து செந்தமிழ் வளர்த்தவன்

கொள்கையிற் பிறழாக் குணக்குன் றவனைக்
கள்ளவிழ் மலர்கொடு கைகுவித் தேத்துவம்;

பலமொழி பயின்றும் பைந்தமிழ்ச் சோலையுள்
உலவிய தென்றலை உள்ளுறப் போற்றுவம்;
மறைமலை என்னும் மறையா மலையை
நிறைதர நெஞ்சினில் நிறுத்துவம் யாமே;
செறிபுகழ்ச் செந்தமிழ் செழித்திட அவன்றன்
நெறியறிந் தொழுகுவம் நிலைபெறும் பொருட்டே.

**– கவியரசு முடியரசன்**

# எழில்மலை

ஈண்டிருந்தே தோன்றுகிற எழில்மலையைப் பாரீர்;
        இலக்கியத்தில் இலக்கணத்தில் இலங்குமலை பாரீர்;
நீண்டபுகழ்ச் செம்பொருளில் நிலைத்தமலை பாரீர்;
        நேயமிகு துறவுநெறி நேர்ந்தமலை பாரீர்;
ஆண்டதிரு வருள்நிலையில் அமைந்தமலை பாரீர்;
        அறிவுநிலைத் திருவுருவாய் அருளுமலை பாரீர்;
மூண்டெழுந்த தவப்பேற்றால் முகிழ்த்தமலை பாரீர்;
        முத்தமிழ் மறைமலையாம் முதுமலையைப் பாரீர். (1)

செம்பொருளாம் சிவநெறியில் செம்மையிலார் சேர்த்துச்
        செறித்தபல சிதைவுகளைச் செகுத்தழிக்கும் போரும்,
அம்மைவடு வெனத்தோன்றி அலைக்கழிக்கும் சாதி
        அறக்கொடுமை அழித்தொழிக்க ஆர்த்தெழுந்த போரும்
தம்மையுணர் பகுத்தறிவு தழைத்தோங்கி நாளும்
        தமிழர்நிலை உயர்தற்குத் தாங்கியவோர் போரும்,
இம்மைவழி இனிதியல எடுத்துரைக்கும் போரும்
        இன்றமிழ் மறைமலையார் ஏற்றசில போர்கள்! (2)

தேன்கலந்த பாலென்னத் தெவிட்டுசுவைத் தமிழின்
        தீஞ்சுவையை முழுதுணர்ந்து திறமிகுந்த போதில்
மீன் கலந்த கடலென்ன மிகப்பலவாய்த் தமிழில்
        மிடைந்துள்ள பிறமொழியை மின்னலெனக் கண்டார்;
ஏன் கலந்தார் பிறமொழியை? இயற்கைநிலை சாய்த்தார்;
        இழிவுபல வருவித்தார்; இப்படியே போனால்

வான்கலந்த திருமொழியாய் வயங்குகின்ற தமிழை
வடமொழியே விழுங்கிவிடல் வாய்க்குமென நொந்தார். (3)

"தனித்தமிழே எம்மூச்சாம்; தனித்தமிழே பேச்சாம்;
தனித்தமிழில் எழுதுவதே தகவுடைய கொள்கை;
இனித்தமொழி எம்மொழியின் இயல்நிலையை வீழ்த்த
இடைப்புகுந்து கெடுக்கின்றார் எவரவரெம் பகைவர்;
தனித்தமிழின் கொள்கையினைத் தயக்கமின்றிக் கொள்வோர்
தமிழ்த்தாயின் புதல்வரெனத் தடையின்றிக் கொள்வேம்;
இனிக்கலந்து கெடுப்பாரின் இழிசெயலைச் சாய்ப்போம்;"
எனவெழுந்த மலைபோல இலங்குமலை உண்டோ? (4)

புனலோடு புனலாகப் போயொழிதல் இன்றிப்
புனல்சாயப் புல்சாய்தல் போலேயும் இன்றிக்
கனலோடு கலந்தாலும் கவினொளியே செய்யும்
கலப்பறியாப் பசும்பொன்னாய்க் காட்சிதரு செம்மல்,
இனலோடு தடைகளெல்லாம் எதிர்த்தெழுந்த போதும்
இறையேனும் அசையாத இறைமைமிகும் அண்ணல்,
எனலோடும் அமையாமல் இவர்கொள்கை பேணி
இன்றமிழை வளர்ப்பதிலே இசைந்திடுவம் வாரீர்! (5)

**– புலவர் இரா. இளங்குமரன்**

## முத்தமிழ்நெறி விளங்கிடுமால்!

எதுநெறி என்றே அறிகிலாப்போதில்
	எதிர்வரும் ஒளிமலை யானாய்;
மதுநெறிக் குள்ளே அயலவர் எம்மை
	மாட்டிட எரிமலை யானாய்;
இதுநெறி என்றே நறுந்தமிழ் மொழியில்
	இசைக்கையில் பனிமலை யானாய்;
புதுநெறி தந்தாய்! உளந்தொறும் நின்றாய்!
	புகழ்மலை யாயினை ஐயா! (1)

எப்புரி யாரும் எளிதினிற் புரிவான்
	இருந்தமிழ் வழக்கினைத் தொகுத்தும்
முப்புரி யாரால் இத்தமிழ் நாட்டில்
	முளைத்துள கேட்டினை அழித்தும்
செப்பரி தான செழுந்தமிழ் வாழச்
	செய்தனை; செஞ்சடை மீதில்
அப்புரி யானின் திகழ்ந்தனை இம்பர்
	ஆக்கலும் அழித்தலும் புரிந்தே. (2)

எதிர்ப்புகள் எல்லாம் கொடுவெயிலாகி
	எரித்துனைத் தாக்கிய போதும்,
அதிர்ப்புறும் வண்ணம் பெருமழை யாகி
	அரித்திட மோதிய போதும்,
விதிர்ப்புறப் புயலாய் வீறுடன் எழுந்து
	வீசியே சாடிய போதும்

மதர்ப்புடன் நின்றாய்; எதிர்ப்பவர் அண்ணா
மலையென நின்றனை ஐயா! (3)

நாடெலாம் சுழன்றாய்; நலமெலா முணர்ந்தாய்;
நம்மவர் வாழ்முறை கூறும்
ஏடெலாம் பயின்றாய்; எங்கணும் மொழிந்தாய்;
இயங்கிடு நூலக மானாய்;
வாடலாம் காலம் வந்ததால் எமர்க்கு
வையக வாழ்வுநீ துறந்தாய்;
ஆடவ னிலிங்கிச் செட்டியின் தெருவில்
அமர்ந்திடு நூலக மானாய். (4)

செந்தமிழ் கமழும் சந்தன மலைநீ
சிறந்திடுந் தனித்தமிழ் நடையில்
வந்திடும் அருவி வயங்கிடும ஒருபால்;
வளர்ந்திடும் சிந்தனை மரங்கள்
முந்திவிண் தடவி மூண்டெழும் ஒருபால்;
முடிவிலா ஏரணக் கொடிகள்
வந்திடை மிடையும் வளர்தரு சாரல்
மன்னிய பொதியில்நீ ஆனாய்! (5)

மறைந்தன எல்லாம் வெளிக்கொணர் மலையை,
மறையுறை உட்பொருள் அனைத்தும்
முறைமுறை யுணரத் தருமொரு மலையை,
முறையிலார் செய்மறை எல்லாம்
திரைதனை விலக்கி வெளிக்கொணர் மலையை,
சிறிதுமொவ் வாதவோர் முறையில்
மறைமலை என்றே உரைத்திடல் ஏனோ?
மயங்குமால் என்கிறு நெஞ்சம். (6)

ஆண்டுநூ றிங்கே வாழ்ந்திடு முறையை
அறைந்தநீ தோற்பினும் ஐய!

ஈண்டுபன் னூறு மாண்டுகள் வாழும்
இரும்புகழ் நிறுத்தலில் வென்றாய்;
தூண்டுதல் வேண்டா விளக்கெனும் நின்னூல்
துலக்கிடும் பேரொளி வீச்சில்
மூண்டஎவ் விருளும் எதிர்வரத் தயங்கும்
முத்தமிழ் நெறிவிளங் கிடுமால்! (7)

**- புலவர் ஆ. பழநி**

மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர்
(பக். 1-7)

# புலவர் முருகவேள் பாடிய அடிகளாரின் மறைவு குறித்த இரங்கற் பாக்கள்

பேரறிஞர் என்போர்க்கும் பேரறிஞன் கல்விநலம்
நேராரும் இன்றி நிரம்பிநின்றோன் - சீராரும்
செந்தமிழ்நன் மாணவர்க்குத் தெய்வம் எனத்திகழும்
எந்தமடி கள் போல்வார் யார்?
நற்றமிழ்நக் கீரனொடு நன்றுமிகச் சைவநலம்
முற்றுசிவ ஞானமுனிவரரும் - உற்றொருரு
ஏன்றுவந்தார் என்றிலங்கும எம்மடிகள் போல்ஒருவர்
தோன்றுவர்கொல் என்றே துயர்
சைவந் தமிழிரண்டும் தக்க வரம்பாக
மெய்வந்து நின்னையே மேவிநிற்பக் - கைவந்தோய்!
யாவரினிக் காப்பரவை என்றெண்ணி நீர்மறைந்தீர்
ஆவ! ஈ தோநிற் கறம்?
தெள்ளுதமிழ்ச் சான்றோய்! சிறந்தநின்பால் யாமெளியோம்
மெள்ள மிகப்பழகும் மேன்மையினால் - வள்ளுவர்தொல்
காப்பியனார் வாழ்ந்திருந்த காலத்தும் வாழ்ந்தேம்போல்
மாப்பயன்கள் பெற்றிருந்தேம் மன்!
இளமையினிற் செந்தமிழில் எம்மனோர்க்குப் பற்று
வளமிகுநும் நூலாற்றான் வந்த - துளமமைய
அந்நாள் முதலா அடிகளினை யாம்வியந்
தெண்ணாநாள் போற்றாநாள் இல்.
'இறந்ததன் பின்னர் இருக்குநிலை' பற்றித்
திறந்தெரிந்து கூறியநற் செம்மால்! - மறைந்ததற்பின்

யாண்டுசென்றீர்? எவ்வா றிருக்கின்றீர் என்றறிய
வேண்டுகின்றோம். சொல்க! விழைந்து
காலமெலாம் பஃறொண்டும் கன்னித் தமிழ்மொழிக்கு
ஞாலமெலாம் போற்ற நயந்துசெய்தாய் - சீலமெலாம்
சான்றோய்! மறைமலையே! தண்டமிழ்க்குக் கேடுமிக
ஏன்றானோ செய்தீர் இறந்து?
குமரிமலை யோடு குமரிநன் நாடும்
இமிழ்கடலுள் புக்கொழிந்த தேனும் - தமிழ்மலையாய்
ஓங்கும் மறைமலையே! உம்பிரிவிற் போற்றமிழர்
ஈங்குற் றிலர்பே ரிழப்பு.
தன்னலம் நின்னொப்பத் தாமுடையார் யாருமிலர்
நின்னலமே பேணி நிறைதொண்டு - பன்னலஞ்சேர்
செந்தமிழ்க்குச் செய்வவெலாம் செவ்விதின்நீ செய்தமைத்தாய்
எந்தமக்கொன் றில்லா வகை
இமையமலையின் மேலோய்! அணுத்துணையாம் எம்மாட்
டமைவதொன்றோ நீர்செய்த அன்பு - தமிழ்மலையே!
'பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே'
எற்றென்றிஃ தன்றிச்சொல் கேம்?

**- புலவர் முருகவேள்**
தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகள் வரலாறு
(பக். 757-758)

# மறைமலை ஒரு மொழிமலை

**நேரிசை ஆசிரியம்**

தமிழகத் தீரே! தமிழகத் தீரே!
தமிழரென் றிருந்தும் தமிழியல் பறியாத்
தவநனி பேதைத் தமிழகத் தீரே!
'ஆரியர் தேவர், அவர்மொழி தேவிகம்'
என்றே மாறி இன்றமிழ் கெடுத்தீர்.

பாரின் முகடாம் பனிமலை கடலுள்
மூழ்கி யிருந்த முன்னாள் குமரி
முதுமலை வாரம் முளைத்துத் தவழ்ந்து
நானிலத் தைந்திணை நடந்து வளர்ந்த
தென்னவன் தீந்தமிழ் திரும்பவும் திகழ
அன்னை மொழியதில் ஆழ்ந்து திளைத்துக்
குடகுணக் கோடிக் கொடுந்தமிழ்த் திரிபின்
வழிவரும் ஆங்கிலம் வடமொழி தேர்ந்தே
அறிவரும் பரப்பும், அலகில் பொருளும்,
அசையா நிலையும், அணிநெடுந் தோற்றமுங்
குன்றா வளமுங் குறுகா வண்மையுங்
குலவித் தமிழாங் கிலமிரு மொழியினும்
மூவகை நூலும் நால்வகை யாப்பின்
உரைநடை செய்யுள் அரைநூற் றின்மேல்
நிறைமொழி புனைந்த நிகரறு மறைமலை,
எல்லாப் பொருளும், இடுகுநுண் கருத்தும்

இன்றமிழ்ச் சொல்லால் இயலும் உண்மை
எழுத்தினும் உரையினும் இலக்கிக் காட்டி
வடவர், குடவர், வையா புரிகள்
தாண்டிக் கடவாத் தனித்தமிழ்த் தண்மலை;

அயற்சொல் கலவா அடியிரு கழகக்
குலத்தமிழ் ஓங்கிய குமரிக் காலமும்,
வடசொற் கலந்த கலவைக் காலமும்,
தனித்தமிழ் புதுக்கிய மறைமலைக் காலமும்,
எனத்தமிழ் வரலா றியக்கிய சொன்மலை;

ஆரிய வரசாம் பேரா யத்தால்
வடபால் நின்றே வரும்புன் புதுமொழி
"இந்தி பொதுமொழி யா" எனும் நூலால்
வேங்கடத் திம்பர் விரவா வண்ணம்
விலங்கித் தடுத்த வியன்றமிழ் மொழிமலை;

புறக்கண் காணாப் புகழுடம் பெய்தினும்
நாகப் பட்டின நற்றமிழ்க் கழகம்
ஆகமுங் காட்டும் அஞ்சிலை வெண்கலம்
மறைமலை யடிகள் மாண்பெயர்
நிறைதமிழ் வாழி நீணிலம் பெரிதே!

**- ஞா தேவநேயப் பாவாணர்**
மறைமலையடிகள் நினைவு மலர்
(பக். 58-59)

# ஓர் இல்லற மலை

**எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

நாகை நகரம் பெருமை நவில,
வாகை சூட்டி வல்லமை தெரிக்கத்
தமிழகம் புகழ்ந்து தனிச்சிறப் பெய்தத்
தமிழ்மொழி ஓம்பித் தலைநிமிர் வளித்தோன்;
நடையிலும் மொழியிலுந் தூய்மை நாடினோன்;
புராணக் கதைகளைப் பொருளின்றிப் படித்துப்
பொழுதைப் போக்கிய பொருந்தா முறையை
மாற்றி உயர்த்தி மாண்புறச் செய்தே
நற்றமிழ்ப் பாக்களின் நல்லுணர் வினையும்,
பொருந்து கற்பனைப் பொலிவு தன்னையும்,
சொல்நயப் பொருள்நயச் சீர்மை யாவையும்
நுகர்ந்து மகிழ்ந்து நுழைபுலம் எய்த
ஆய்வுநூல் பலவும், அருஞ்சொற் பொழிவும்
நாட்டவர்க் களித்த நாவலன், நூல்வலன்;

தனித்தமிழாங் கற்புடைய மனைவியுடன் கூடித்
   தமிழ்ப்பிள்ளை எனப்பலநூல் பெற்றெடுத்த மேலார்;
தனித்தமிழர் சமயமதைக் காதலித்துக் கூடிச்
   சமயமறு மலர்ச்சியெனும் புதுப்பிள்ளை பெற்றார்;
தனித்தமிழர் நாகரிக மெனும்பருவப் பெண்ணைத்
   தமிழேட்டில் முத்தமிட்டு முதற்பெருமை கொண்டார்;
தனித்தமிழை இந்திமொழி அழிக்கவரு போதில்
   தளராத போராட்ட மெனுங்குழந்தை தந்தார்.

வடமொழியு மாங்கிலமும் வனப்புடனே கற்று
வடித்தபல நூற்கருத்தாம் நறுங்குழந்தை பெற்றார்;
புடமிட்ட பொன்னெனவே புலவர்களுக் குள்ளே
புதுநெறியைப் புகுத்தியதும் நல்லமகப் பேறாம்;
உடலெடுத்தல் தொண்டுசெயும் ஒருவழிக்கா மென்றே
ஒப்பற்ற புகழெனுமோர் குழந்தையையும் பெற்றார்;
விடலறியா இல்லறத்தும் பொதுத்துறைக ளுள்ளும்
விந்தைமிகு துறவியிவர் ஏழுபிள்ளை பெற்றார்.

வள்ளுவர்சொல் ஐம்புலமாம் இல்லறத்து மாண்பில்
வாழ்வதற்கே துறவெனுமோர் தொண்டுநெறி கொண்டார்;
உள்ளமுடன் நம்மருந்தொல் காப்பியத்திற் கண்ட
உறவார்ந்த துறவுகொண்ட இல்லறத்தார் காணீர்.
எள்ளுறுசொல் லில்லாமல் இல்லறங்கொள் வார்க்கே
எழுச்சிதரு நூல்பலவும் செய்தனர்தாம் என்றால்
கொள்ளுவதோ இவர்பிறர்போல் துறவியெனுங் கொள்கை?
இல்லறத்து ப் பெருமலையே மறைமலையார் என்போம்.

**- டாக்டர் மு. வரதாசனார்**
(பக். 60-65)

## மறைமலை ஒரு துறவு மலை

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

மறைமலை யடிகள் என்னில்
மாணிக்கப் பொலிவு காணும்;
மறைமலை யென்னில் இன்ப
மங்கல யாழி சைக்கும்;
மறைமலை யென்னிற் சாதி
மறைந்தொரு குலமே காணும்;
மறைமலை யருவி யாடின்
மலிவளத் தமிழ ராவோம்.

கல்வியின் வரம்பு கண்டோன்;
கற்றதை நிறுத்த சைவன்;
பல்லவ புரத்தை அன்புப்
பைந்தமிழ்ச் சோலை செய்தோன்;
மெல்லிசைக் குயிலைப் போலே
மிழற்றிடும் தமிழைக் கேட்டால்
நல்லிசை யுலக மெல்லாம்
தமிழையே நயந்து கற்கும்.

முப்பொருள் உணர்ந்த செம்மல்;
முழுத்தனித் தமிழ்க்க லைக்கே
ஒப்பறு தொண்டு செய்தான்;
உலகெலாம் புகழத் தக்க

துப்புர வுடையான்; உண்மைத்
துறவறங் கொண்ட வீட்டு
நுட்பத்தை யறிந்து ணர்ந்து
நூல்பல தந்த நூலோன்.

அச்சத்தைத் துறந்தான்; உள்ளே
அம்பல வாணன் ஊற்றும்
சொற்சுவை அமுதை நல்ல
தூயசெந் தமிழில் வார்த்தான்;
பற்பல சமயத் தோங்கும்
படிகளைக் கடந்து மேலே
நச்சுதற் குரிய சைவம்
நலம்பெறத் துலக்கி னானே.

அறமெனும் அருவி தந்தான்;
அன்பெனுஞ் சுனையே தந்தான்;
புறமெலாம் பசுமைப் பண்பே
பொலிந்திடப் பரிந்து தந்தான்;
நறவதும், மணியும், பொன்னும்
நலம்பெற நயந்து தந்தான்;
துறவினில் மலையாய் நின்றான்
தூய்மறை மலையாய் நின்றான்.

**- சுத்தானந்த பாரதியார்**
மறைமலையடிகள் நினைவு மலர்
(பக். 66-67)

# மலைமலை ஓர் ஆண்மை மலை

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

தனித்தமிழின் நறுஞ்சுவையே!
        தமிழ்ப்பொருளின் கனிச்சுவையே! த்மிழ்நூல் வெள்ள
இனித்தமழைக் கருமுகிலே!
        'பிறமொழிச்சொற் கலப்பதனை இடித்துக் கேட்க
இனித்தமிழில் ஆளில்லை'
        எனநினைந்தே இறுமாந்தோர் இரும்புள் ளத்தைத்
துணித்தெழுந்த மறைமலையே!
        துகளற்ற நும்மாண்மைத் துணிவென் னென்பேன்!

மலருக்கு மலர்ச்சியதன்
        மதர்ப்பாண்மை; மண்ணுக்கு விளைவே ஆண்மை;
வலருக்குத் தாளாண்மை;
        வனப்பினர்க்கு நாணமதே வயங்கும் ஆண்மை;
சிலருக்குச் சினந்திடுதல்
        சிற்றாண்மை; சீரியர்க்கோ பணிவே ஆண்மை;
பலருக்கு நடிப்பாண்மை;
        பயனார்ந்த மலையுமக்கோ படிப்பே ஆண்மை.

பாரிதனிற் பைந்தமிழ்ச்சீர்
        பறிக்கவந்த இந்தியெனும் பகையைத் தள்ளி
மூரிநிமிர்ந் தரிமாவாய்
        முழங்கியதன் முதுகெலும்பை முறிக்கும் பாங்கில்

வாரிவிட்ட ''இந்திபொது
மொழியா''வென் றோருரையால் வதைத்த செம்மை
வீரியத்தால் மறைமலையே.
'ஆண்மையதன் மறையாத மலை' நீர் என்பேன்.

சைவத்தில் உளந்தோய்ந்தீர்;
'சைவமொடு புராணஞ்சேர் கதைகள் தம்மில்
பொய்வைத்தார்' எனக்கழறிப்
பொசுக்கியநும் பேராண்மைப் பொலிவென் னென்பேன்!
'தெய்வத்தார் நாங்க' ளெனத்
தீந்தமிழர் மரபெல்லாந் திரித்தார் தீமை
கைவைத்தே களைந்தெறிந்த
கவின்மலையே! நும்மாண்மைக் கருத்தென் னென்பேன்!

இல்லறத்தில் துறவறமோர்
நல்லாண்மை; இல்லத்தில் கலப்பு மன்றல்
புல்லியதோர் சீராண்மை;
புதுமைநெறிச் சொற்பொழிவோர் புகழின் ஆண்மை;
புல்லொத்தார் புரட்டொடுக்கும்
புலமையொரு புர்த்தாண்மை; துளக்க லாகாப்
பல்லாண்மை மலையுருவே!
பணிந்தும்மைப் பேராண்மை மலையென் பேனே.

**- கோவை. இளஞ்சேரனார்**
மறைமலையடிகள் நினைவு மலர்
(பக். 68-69)

# மலைமலை ஒரு தாய்மை மலை

**அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

மற்றவர் மொழியென் றாலும்
மனத்திலே வெறுப்பில் லாமல்
கற்றவர்; தமதெ முத்தால்
காலத்தை வெல்லும் சீரைப்
பெற்றவர்; தாய்ப்பற் றின்றிப்
பிறரடி வருடி மானம்
விற்றவர் நடுங்கத் தாய்மை
விளக்கிய மலையார் வாழி!

புலப்படு தனிமை கெட்டுப்
போகுமா றயலார் சொல்லைக்
கலப்பது பெருமை யென்று
கருதிடு கின்ற பொய்ம்மை
வலைப்பட லின்றி என்றும்
மகிழ்ந்துள மெழுந்து துள்ளத்
தலைப்பணி யென்று தாய்மைத்
தமிழனை வளர்த்தார் வாழி.

'முடியுமா பேச' வேற்று
மொழிக்கலப் பின்றி; வாழ்வு
'விடியுமா தமிழால்' என்று
வினவிய ஆண வந்தான்

ஓடியுமா றுதைத்து நாவில்
        ஒருதனித் தமிழே கற்பில்
அடையுமா றுழைத்த எங்கள்
        அடிகளார் புகழே வாழ்க!

தனிச்சுவைத் தமிழால் தூய
        தகவமு தாக்கிப் பேச்சாம்
கனிச்சுவைச் சாறு பெய்து
        கறிகளாய் நூல்கள் இட்டே
இனிச்சுவை யுண்டோ வென்ன
        இன்றமிழ் ஊட்டித் தாய்மை
குணச்சுடர் போலே ஈந்தார்;
        குறையிலா நெறிகள் கொள்வாம்.

**- திருமதி சௌந்தரா கைலாசம்**
மறைமலையடிகள் நினைவு மலர்
(பக். 70-71)

# மலைமலை ஓர் எழுத்துமலை

**எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

தொழத்தகுநற் றமிழ்மொழியும், அதனோ டொத்த
தொன்மைமிகும் ஆரியமும் கற்றுத் தேர்ந்து
பழுத்தமலை; பண்புவளர் ஆங்கி லம்போற்
பலமொழிகள் பயின்றமலை; சான்றோர் நெஞ்சம்
வழுத்துமலை; வளர்ந்தபல எழுத்து வல்லார்
வற்றாத அருவியெனத் தோன்றச் செய்த
எழுத்துமலைப் பெருமையெலாம் விண்டு ரைத்தல்
எளியதொரு செயலாமோ? அரிய தன்றோ!

அளக்கவொரு கருவியிலா அளவு கொண்டான்,
அலகில்பல பொருள்கொண்டான், பகைவர் யாரும்
துளக்கரிய நிலைகொண்டான், புகழால் ஓங்கித்
தொலைவிலுளார் அறியவளர் தோற்றங் கொண்டான்,
உளத்துறுநந் தமிழ்நினைவு வறந்த போதும்
உலகினர்க்கு வளந்தருநல் வண்மை கொண்டான்;
வளத்திலுயர் அம்மலையை மறைப்பான் வேண்டி
வஞ்சனையார் முயல்வரெனின் மதிதான் என்னே;

நாடகநூல் பாவகைநூல் ஆய்ந்து ரைத்த
நலமிகுநூல் அறிவியல்நூல் நுழைபு லத்தார்
நாடறிவு நூல்பலவோ டுரைநூல் நெஞ்சம்
நயக்கின்ற நெடுங்கதைநூல் இன்னோ ரன்ன

பீடணையும் பெருநூல்கள் எழுதித் தந்த
பெருமலையாம் மறைமலையின் எழுத்து வன்மை
நாடறியும், வீடறியும், நல்லோர் நெஞ்சம்
நன்கறியும்; அறியாதார் அறியா தாரே.

சமயமெனக் கடவுளெனப் பேர்கள் சொல்லித்
தழைத்துவரும் போலிகளைக் கடியும் கூர்வாள்;
தமிழரிடைப் படர்ந்துவரும் சாதித் தீமைச்
சழக்குகளை வேரொடுசுட் டெரிக்குஞ் செந்தீ;
இமயமலை தந்தபொது மொழியீ தென்றே
இந்திவரின் தடுத்தொழிக்குங் கேட யங்காண்;
நமதினத்தை விழிப்புறுத்தும் வெற்றிச் சங்கம்
நாளெல்லாம் அவனெழுதித் தந்த நூல்கள்.

கல்லாதார் தமிழ்மொழியைக் கரைகண் டார்போல்
கருதினராய் அயன்மொழிச்சொல் பலவுங் கூட்டி
இல்லாத வழுமொழியுஞ் சிதைந்த சொல்லும்
எண்ணிலவாய்க் குழப்பியதை எழுதிக் காட்டிப்
பொல்லாத செயல்புரிந்து தமிழின் தன்மை
புரியாத படிசெய்த இருட்டர் கூட்டம்
நில்லாது வெருண்டோட எழுந்து வந்த
நீள்கதிராம் மலைமலையை நினைவோம் வாரீர்!

**- முடியரசனார்**
மறைமலையடிகள் நினைவு மலர்
(பக். 72-73)

# மறைமலை ஒரு சொற்பொழிவு மலை

**எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

வான்பிறந்த செங்கதிரும் மழையுங் காற்றும்
மண்பிறக்கச் செய்தவுடன் உலகில் எங்கும்
ஊன்பிறக்க உடல்பிறக்க உடலின் ஊடே
உயிர்பிறக்கப் பிறந்துவந்த தமிழர் நாவில்
தேன்பிறக்கப் பிறந்ததுவாந் தமிழும்; அந்தச்
செந்தமிழே மறைமலையாம்; நீல வானில்
கூன்பிறக்கும் நிலவினிமை மறைம லைத்தீஞ்
சொற்பொழிவு மலையென்றே கூறு வோமே.

சொற்கேட்டால் காதினிக்கும்; சொல்லில் தோய்ந்த
தூயபொருள் மாசகற்றும்; நாவில் என்றும்
கற்கண்டைக் கண்டதுபோல் இனிக்கும்; நெஞ்சில்
களிப்பேற்றி நெறிமுறையை விளக்கிக் காட்டும்;
நற்றொண்டைச் செய்யநமைத் தூண்டும்; தூய
நலப்பாவின் வளஞ்சேர்க்கும்; அறிவைச் சேர்க்கும்;
மற்றொருவர் இனிப்பிறப்ப துண்டோ பேச?
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே.

'இனித்தமிழுந் தழைத்திடுமோ, தனித்து நின்றே
இயங்கிடுமோ' எனப்பல்லோர் இளித்த போது,
தனித்தமிழில் பலநூலும் பேச்சும் தேக்கித்
தந்தவர்யார்? மறைமலைபோல் எவரிங் குண்டாம்?

குனித்திருந்த தமிழ்மொழியும், இடைபு குந்த
குறைமொழியும் வாழ்நாளில் விலக்கித் தள்ளி
மத்தவினம் தலைநிமிரச் செய்த மாண்பு
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே.

வடமொழியுந் தென்மொழியும் வந்து சேர்ந்த
ஆங்கிலமும் மாசறவே கற்றுத் தேர்ந்து,
தொடர்மொழியின் நிலைவிளக்கித் தமிழர் வாழ்வின்
தொன்மையினைச் சொல்வளத்தைச் சமயப் பண்பைச்
சுடர்மொழியால் இருள்போக்கிச் செய்யுட் பேச்சால்
துறைதோறுந் துறைதோறும் விளக்கிக் காட்டி
மடமொழியார்க் கறிவூட்டி வந்த எங்கள்
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே.

உள்ளத்தால் துறப்பதுவே துறவின் மாட்சி;
உடையில்லாத் துறவியெலாம் போலி யாவார்.
பள்ளத்துக் காரெருமை பூவை மாந்திப்
பகலெல்லாம் பால்சொரியும் வயல்கள் சூழ்ந்த
தெள்ளுதமிழ் நாட்டகத்தே இல்லி ருந்து
சீர்பெற்ற துறவியர்கள் பல்லோர் போல
வள்ளுவரைப் பின்பற்றி இல்லி ருந்த
மறைமலையார் சொற்பொழிவு மலையென் போமே.

– **வாணிதாசனார்**
மறைமலையடிகள் நினைவு மலர்
(பக். 74-75)

## வாழ்த்து

வருக தமிழன்னை மாண்பார் அருளே
உருவாகி வந்த ஒருவ! பெருவாழ்க்கை
உற்ற தொரு குடியில் ஓங்குமில் வாழ்வெல்லாம்
பெற்றும் அவை துறந்த பெம்மானே! மற்றுலகில்
இல்லை கலைகளிவன் ஏய்ந்த கல்லாத வென
வல்லாரும் போற்று கலை மாமணியே! எல்லையறு
செந்தமிழிற் பல்வகையாச்சேர் துறைகள் எவ்வெ வற்றும்
முந்து பெரும் புலமை முற்றியோய் வந்த
உரையார் வடநூலில் ஓங்காங்கிலத்தில்
வரையாப் பெரும் புலமை வாய்ந்தோய்! வரைநின்
எழுத்தின் தனிச்சிரை எவ்வழியுந் தேர்ந்து
வழுத்தாதார் யாரிந்த மண்ணில்! பழுத்துமிகு
மெல்லினிமை சான்று மணம் வீசுங் கனியினையும்
வெல்லும் உரை நடையை வேண்டாரார்! மல்கு
பெருநூலெதற்கும் பிறழா துரைக்கும்
பொருளின் வளமெவரே போற்றார்! தெருளார்ந்த
மேலைப் புலத்தோரும் மெச்சவியற்றும் நின்
நூலின் பெருஞ்சீர் நுவலாரார்? சாலப்
பெருகு மவைக்கண்ணின் பேருரைகள் கேட்டே
உருகி நிறை மகிழ்தம்முள்ளம் - மருவினராய்
வானின் அமிழ்தே மலயத்தென்காலே நற்
றேனருவியே யென்னச் செப்பாரார்! மேனிலைசேர்
கல்லூரி போற்றுங் கணக்காயராகிய நாள்

சொல்லின் திறனோர்ந்து சொல்லாரார்! பல்வளஞ்சேர்
‘முல்லை’ யொடு ‘பாலை’யினில் முற்றியநின் ஆய்வுரையை
நல்லிசையோர் தம்முள்நயவாரார்! தொல்லடிகள்
மாணிக்கவாசகனார் வாழ்க்கை விரிநூற்கண்டு
நாணிக்கண் கூசாத நண்ணாரார்! ஆணிப்பொன்
அன்னசிறப் பினவாய், ஆக்குநூல் ஆக்கமெலாம்
எண்ணித் துணிதற்கியலாகித் துன்னும்
நினதுரை நூலாகும் நீள்கடலை நீந்திப்
புனைவதற் கார்வல்லார் புவியில்! இணையில்லாச்
சைவத் துறையின் தகுசீ ரவையெல்லாம்
எவ்வெவருக்கும் ஊட்டும் இணையிலாய்! இவ்வுலகிற்
செல்வர்யா மென்னச் செருக்குஞ் சிலவரைப்
புல்லுதகளாக்கொள் பொற்போனே! பல்வழியில்
தம்மை மதியாரைத் தாமதியா நன்மானம்
இம்மை எவர்க்கும்முன் ஏய்ந்தோனே! செம்மையெலாம்
தங்குங் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தெந்நாளும்
பொங்குந் தனியன்பு பூண்டோனே! திங்கள்
நிறை நிலையே யென்ன நிலவிப் பல்லூழி
மறை மலையே! வாழி மகிழ்ந்து.

# வாழ்த்து

**பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா**

**தரவு**

தமிழ்மணக்குந் தமிழ்க்குடியில் தலைமைசால் மகவாகி
அமிழ்துறழுந் தமிழ்க்கலையும் ஆங்கிலமும் வடகலையும்
தெள்ளிதறித் துயர்சைவச் செந்நூல்முற் பலவாய்ந்து
பள்ளியுயர் புலம்நடத்திப் பயில்வோர்தம் முளங்கொண்டே
யுற்றமுதலறத் தொழுகி உலகுறும் பேறெல்லா
முற்றவமைந் தவை துறந்த முதல்வ! மறைமலையடிகேள்!
தமிழ்மொழியுந் தமிழ்ப்புலமுந் தமிழ்பயிலு மாணவருந்
தமிழ்களுந் தமிழகமுந் தமிழ்த்தொண்டு மிவைமுறையே
அன்னையென மனைவியென அருமைபெறு மகவென்னத்
தன்னரெனத் தன்னிலனாத்தன் பொருளாக் கொண்டநினை
உண்மைபெருந் துறவியென உலகுரைக்குந் திறமறியேம்
மன்னிய செந்தமிழ்ப்பேறே! மறைமலைப்பேர் அடிகளே!
தமிழிசை
தேனொழுக்கே யெனவொழுகுஞ் செவ்விய நின்றுரை நடைமன்
ஆனஉரை நடைக்கெல்லாம் ஆயவொரு படியன்றே?
தொல்லிசையோர் இயற்கைவளந் துறவாத தூய்மையினார்
நல்லிசையோர் செய்யுனெறி நாட்டவலாய் நீயன்றே?
விரவுமுயற் பொருண்மேற்செல் விரிவுரையின் றிறம் அன்பர்
பரவுளமோ வேனோர்தம் பகையுளமும் போற்றுவதே!
நூற்புலவன் உரைப்புலவன் நுவல்புலவன் என்னும்முப்
பாற்புலவன் நீயேல்முப் பாற்புலவன் நேரன்றே?

வடகலையு மேனாட்டார் மலிகலையுந் தமிழ்க்கலையோடு
இடமுறவாய்த் ததுகாட்டும் எழில்சேர்நின் னூலுரையே!
தமிழ்மொழியிலாங்கிலத்தில் தனியெழுதி வருந்தாட்கு
இமிழ்கடல்சூழ் உலகதனு ளிணைகூறச் சிலவுண்டே!
ஒற்றியூர் மும்மணியு முயர்காஞ்சி யாக்கமுமே
பற்றுநின் தியலறிவும் பாட்டறிவுங் காட்டாவோ?
தக்கதிருக்குறள், பண்டைத் தமிழர் ஆரியர் ஆராய்ச்சி
மிக்க பெருமாராய்ச்சி மேனாட்டும் போற்றுவவே!
பாலையொடு முல்லைப்பேர் பாட்டிலியற் றாராய்ச்சி
ஏலுமா ராய்ச்சியினர்க் கிருவிழிக டாமென்றே!
குளிர்குமுத வல்லியொடு கோகிலத்தின் திருமுகங்கள்
மிளிர்மக்க ளிணக்கமிவை விலையறியா விருந்தன்றே!
நூறாண்டு வாழ்நெறியும் நூற்றின்பின் றாம்நெறியும்
வேறாம்பல் லுயிர்நூலும் விரிப்பவனும் நீயன்றே!
பெயர்ப்பாலு மச்சுறுத்திப் பெரிதறியா திருந்தது; நின்
பெயர்ப்பாலே பெரும்பேறு பெற்றதுசா குந்தலமே!
சிவஞான முனியிவனோ தெளியேமென் றுலகுரைப்பச்
சிவஞான போதவுரை தெளிப்பவனு நீயன்றே?
உருகிஉரு கித்தெளிவுற் றுரைத்ததிரு மொழிப்பொருளை
நுணுகி நுணு கித்தெளிக்கும் நுண்புலவன் நீயன்றே!

**- மறை திருநாவுக்கரசு**

தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகள் வரலாறு
(பக் 459-462)

# மறைமலையடிகள்!

மறைமலை யடிகளே
நிறைதமிழ் வளர்த்தவர்!
மனங்கொள நினைத்திடுக! - அவரது
மாண்பினைப் புகழ்ந்திடுக!
குறைவுறு நூல்பல
நிறைவுறத் தந்தவர்!
குனிதலை நிமிர்த்தியவர்! - செந்தமிழ்க்
குடியினை உயர்த்தியவர்!

துறைமிகு ஆங்கிலம்,
மறைவட மொழியொடு
தூய் தமிழ்ப் பேரறிஞர்! - தனித்தமிழ்
தோற்றிய ஓரறிஞர்!
கறைசெயும் பிறமொழி
முறையறப் புகுத்திய
கயமையை விலக்கியவர் - தமிழினைக்
கசடறத் துலக்கியவர்!

கலக்கமில் அறிவினால்
இலக்கண இலக்கியக்
கடல்கடந் தேறியவர்! - இந்தியைக்
கடிந்துரை வீறியவர்!
நலக்குறை வுறுந்தமிழ்க்
குலந்தழைத் தெழுந்திட

நாள்தொறும் எண்ணியவர்! =- உரைதர
நாடெல்லாம் நண்ணியவர்!

அறிவியல் எழுதினார்;
நெறிமுறை கூறினார்;
ஆய்வுசெய் திறமுரைத்தார்- ஆரியர்
அடங்கிட மறமுரைத்தார்!
செறிவுறுங் கருத்தினால்
முறிவுற மடமையைச்
சினத்தொடு தாக்கியவர் - குலவெறிச்
சிறுமையைப் போக்கியவர்.

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்**
கனிச்சாறு-ஏழாம் தொகுதி
(பக். 190)

## இணை உண்டோ?

தமிழ்வளர்க்கும் குறுமுனிவன் வாழு கின்ற
தனிப் பொதியத் திருமலையே! எமது வாழ்வாந்
தமிழ்வளர்த்த திருக்கூட்டத் தொண்ட ருள்ளே
தனித்தமிழின் இயக்கத்தை நனிவ ளர்த்தோன்
தமிழ்நூல்கள் பலதந்தோன், புதினம் என்னும்
தமிழ்ப்புதுமை பலகண்டோன், பேச்சி னாலே
தமிழ்நலமே மிகப்பொழிந்தோன் மறைம லைக்குத்
தக்கதோர் இணையுண்டோ? கூறாய், குன்றே! (1)

திருவிளக்குக் குன்றாகத் திகழு கின்ற
தெமய்வீக அருணையெனும் பெருமை வெற்பே!
கருவிலக்கும் திருவருள்சேர் நெறியாம் சைவக்
கற்புடையோன்; அம்மையொடும் அப்பன் பாதம்
உருவிளக்கும் ஒளியுடையோன், வழிபா டாற்றி
உள்ளமே கோயிலாய் அமைத்துக் கொண்டோன்
பெருவிளக்கப் பேருரையான் மறைம லைக்குப்
பேசிடவோர் இணையுண்டோ? பேசாய், வெற்பே! (2)

ஓடிவரும் காவிரியே! ஒருசொற் கேளாய்!
உன்னருமை மக்களிலே வரலா றாக
நாடிவரும் வாழ்வதனை வளர்த்த செம்மல்
நற்றமிழின் உயர்விற்கே வாழ்ந்த அண்ணல்
பாடிவரும் தும்பியென நூல்கள் யாத்துப்
படிந்துவரும் தனித்தமிழில் கனிந்த தென்றல்
கோடிவரும் புகழுடையான் மறைம லைக்குக்
கூறிடவும் இணையுண்டோ? நவில்வாய் நீயே! (3)

முச்சங்கம் மடிவளர்த்த தெய்வத் தாயே!
முதுநீரின் வையையெனும் பொய்யாச் செல்வி!
பச்சென்ற நறுந்தமிழை நாட கத்தால்
பளிச்சிடவே வைத்தபிரான், எழுதும் போது
நச்செனவே பிறமொழிச்சொல் வாரா வண்ணம்
நலஞ்சிறக்கத் தனிவண்ணம் இழைத்த கோமான்,
எச்சங்கள் பலவுடையான் மறைம லைக்கே
இணையுரைக்க எவருளார்இவ் வைய கத்தே! (4)

சிந்துபூந் துறைமருவும் பொருநைத் தாயே!
செப்பாயோ ஒருமொழிதான், வண்மை வாய்த்த
சிந்தையினான், எத்திசையும் சிறந்து போற்றச்
செந்தமிழே புவிவழங்க வேண்டு மென்றே
முந்துகின்ற திருப்பணியான். ஆய்வு மேவி
மூச்செல்லாம் தமிழ்க்கென்றே அளித்த வள்ளல்
நந்தலிலாச் சீருடையான் மறைமலைக்கு
நவின்றிடவோர் இணையுண்டோ, நானி லத்தே! (5)

நலமுயரும் சென்னையிலே விண்ண ளாவும்
நலமுடைய கோபுரத்துக் கந்த கோட்டத்
தலமுறையும் மண்டபமே! நீய றிந்த
தமிழறிஞன், அறநெறியைக் கற்ற றிந்தார்
நிலையுயரப் பேச்சாக்கிக் கேட்டார் கேளார்
நெஞ்சமெலாம் நிறைவித்த சீர்மை யாளன்
மலரனையான் மனத்தாலே, மறைம லைசொல்
மாண்பினுக்கும் இணைகண்ட துண்டோ, நீதான்? (6)

அம்பலத்தான் ஆடுகின்ற தில்லை என்னும்
அருங்கோயில் ஆயிரக்கால் மண்ட பத்தே
வம்பாருந் தேன்மலராம் அன்னான் தீஞ்சொல்
வளமாரக் கேட்டிருந்த தூன்காண்! உள்ளத்

தெம்புடனே தமிழதனைச் சித்தாந் தத்தைத்
தேன்போலப் பிலிற்றுகின்ற நேர்மை யாளன்
செம்பொன்னாய் மன்னிடுவோன் மறை லைக்கே
செப்பிடவோர் இணையுண்டோ? பார கத்தே! (7)

காஞ்சிநகர்க் குமரகோட் டத்தே மேவும்
கருணைவளக் குமரனெனும் தெய்வச் சேயே!
நாஞ்சிலிர்ப்பத் தமிழ்நயங்கள் பேச்சி னூடே
நவிலுதற்கும், ஆராய்ச்சி வண்ணம் காட்டிப்
பூஞ்சோலைத் தமிழ்காக்கப் புறப் படற்கும்
பொருபடைபோல் தமிழ்மாந்தர் உணர்ச்சி எல்லை
வாஞ்சையினைத் தூண்டு தற்கும் மறைம லைபோல்
வன்மையுடை யாருளரோ? வழங்கி டாயே! (8)

பாலான தமிழ்பரப்பும் தமிழ கத்துப்
பழம்பெருமை கொண்டிருக்கும் கழகம் எல்லாம்
மேலான உரைவிரிக்கச் சித்தாந் தத்து
மெய்யான நிலைஉணர்த்த மறைம லைபோல்
நூலாளர் பிறரெவரைக் கண்டீர் நீரே!
நுவன்றிடுவீர்! உணர்ச்சியலை எழுந்து பொங்கத்
தோலாத நாவுடையான் அன்னோ கூறும்
தூயவுரைக் கிணையுண்டோ? கேட்ட துண்டோ? (9)

முப்புறத்துந் தமிழகத்தைச் சூழ நின்றே
முழங்குகின்ற அலைகடலே! மறைம லைபோல்
எப்புறத்தும் கண்டதுண்டோ? தமிழைக் காக்க
எழுச்சியுடன் ஒளிவழங்கும் ஞாயிறுண்டோ?
அப்புறத்து மொழிபலவும் அறிந்த சீரான்
ஆங்கிலத்தோ டாரியமும் விழைந்து கற்றே
ஒப்புறுத்த வியலாத பனுவல் கண்டான்;
ஒளிநெறியை உலகெங்கும் உணர்த்தி டாயோ? (10)

**– டாக்டர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பி.எச்.டி.,)**

# அருமலையே! தொழுவேமே

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க இதழ்களிலே
வருவதாம் வடவர்மணிப் பவழம் நடைவெறுத்தீர்;
மருவதாம் மறைமலையீர்! துருவனீர்; தூயதமிழ்
தருவதாம் தனிநடையைத் தந்தீர்; தந்தையானீர்! (1)

வடமொழி தமிழாங் கிலம் வல்லீர் வான்பொதிய
திடமலை வளங்கண்ட திளைப்புப் பெற்றோமே!
இடமுள 'தமிழாக்க நூல்கள்' எழிற்கோவை
நடமிகு 'சாகுந்தல நாடகம்' நயந்தோமே! (2)

ஆண்டுதொறும் பூக்கின்ற அழகுமலர்ச் சோலைகளில்
மீண்டுவருந் தென்றல்வர மறுமலர்ச்சி பெற்றதுபோல்,
ஈண்டுவந்த மறைமலையே! தீந்தமிழின் தனிச்சுடரே!
தூண்டுகின்ற தொண்டுணர்வே! தொழுகின்றோம் நெறிநினைந்தே (3)

நூற்றாண்டுத் திருநாளில் 'நூற்றாண்டு' நூல்களையே
நோற்றீண்டு படிக்கின்றோம்; நுண்ணறிவு தெரிகின்றோம்!
ஏற்றீண்டு துய்க்கின்றோம்; ஏரறிவு விருந்தினையே!
போற்றீண்டும் மறைமலையே! புத்தியக்கம் புரிந்தோமே. (4)

நாகைபுரி நற்றவமோ? 'நாம்தமிழர்' தவப்பேறோ?
வாகைபெறத் தமிழ்வளர்த்தீர்; வான்புகழ்மா மறைமலையீர்!
மூகைநிலை போக்குதற்கே முதுதமிழ்ப்பேர் ஆசிரியர்
ஈகைமிகும் 'அறிவுக்கடல்' எழுச்சிப்பணி ஏற்றீரே! (5)

மறைவழியே மறையவர்கள் மாத்தமிழைப் புறக்கணித்தார்,
துறைவழியே தமிழாய்ந்து தூயபுகழ் தூண்டிவிட்டீர்!
கறைவழியும் இதழ்களிலே கவின்தமிழை கைக்கவைத்தார்;
முறைவழியே தனித்தமிழின் முதுபுகழை மீட்டிவிட்டீர்! (6)

'உழந்துழந்தே உழைத்தார்கள், உழையாதார் வாழ்வதற்கே!'
துழந்தாய்த்தே, 'வேதாசலம்' தூய'மறை மலை'யானீர்!
பழந்தமிழர் நெறிகாத்தீர்; பைந்தமிழைப் பேணவைத்தீர்;
இழந்ததமிழ் உணர்வினையே ஏறவைத்தீர்; போற்றுகின்றோம்! (7)

காட்டுவெள்ளம் கரைகடந்தே கண்டபடி அணையுடைத்தே
மேட்டுநிலம் விட்டுக்கீழ் மேவிவந்த ஆறேபோல்,
நாட்டுமொழி நந்தமிழை நலிவுறவே கொச்சையாக்கிக்
கூட்டுமொழி ஆக்கிவிட்டோர் கொடுஞ்செயலைப் பழியாரோ? (8)

கதையுண்ட பழையநலன் காணகிலாப் பாழிடத்தே
புதையுண்ட பொற்குவையைக் கண்டெடுத்த புதுமைபோல,
சிதைவுண்ட 'பிரவாள மணி' நடையாம் மண்ணகழ்ந்தே
வதையுண்ட தூயதமிழ் வாழ்ந்திடவே வழிசெய்தீர்! (9)

தமிழ்நெறியைத் தந்தசெம்மல்! தனித்தமிழின் தந்தைதெய்வம்!
அமிழ்தமெனும் இயக்கத்திலே ஆழ்ந்துநின்ற அருமலையே!
இமிழ்கின்ற கடலெனவே எழுமுணர்ச்சி கண்டோமே;
சிமிழ்போன்றே கைகூப்பிச் சிந்தைமிகத் தொழுவேமே! (10)

– **பேரா. கோ.வே. பெருமாள், எம்.ஏ., பிடி.,**

## தவத்திரு. மறைமலையடிகள் மாண்பு

நாகைப் பதியதனில், நாடுணர்சை வக்குடியில்,
பாகைப் பொருவுதமிழ்ப் பற்றுடனே - ஓகைபெறத்
தோற்று மறைமலைப்பேர்த் தூயர் வழிதமிழைப்
போற்றுவதெல் லோர்க்கும் புகழ். (1)

வேதா சலமா விளம்புபெய ரைத்தமிழின்
ஆதார மாக்கொண் டழகுபெற - மீதாம்
மறைமலைப்பே ரிற்குலவு மாதவர்நூற் றாண்டு
நிறைவுவிழாப் போற்றல் நெறி. (2)

ஆங்கிலமும் செந்தமிழும் ஆய்ந்தவற்றி னூடுயர்வாய்
ஓங்கியகு றிப்புவரைந் துற்றதவர் - தாங்கும்
தறைமலைக்கு மாறு தமிழ்ச்சீர் வளர்த்தார்
மறைமலைப்பேர் கொள்மா தவர். (3)

பல்லவபு ரத்தம் பலவாண ருக்கியற்றும்
நல்லகுட நீராட்டு நல்விழவை - எல்லவரும்
காணத் தமிழினிற்செய் கர்த்தர், மறைமலைப்பேர்
பூணத் திகழ்ந்தார் பொலிந்து. (4)

தனித்தமிழி யக்கம் தழைத்திடச்செய் திட்ட
மனித்தர் மறைமலைப்பேர் வாய்ந்த - முனிப்பெருமான்
பன்னூ லுணர்ந்துலகிற் பல்லோர் தமக்குரைத்தார்
நன்னூல் பலசெய் தவர். (5)

நூறாண்டு வாழ்சீர் நுவல்மறைம லைப்பெருமான்
நூறாண்டுக் கானமலர் நூல்தமிழின் - பேறாண்டு

மன்ன வெளியிட்ட மாண்கழகத் தன்ரெலாம்
இன்பமுடன் வாழ்க இயைந்து. (6)

வாதவூர்ப் பெம்மான் வரலாறு, வாசகநூற்
தீதிலா ஆய்வும், திருவொற்றி - மீதவிரும்
வேலன்மும்ம ணிக்கோவை விண்டு,சைவ சித்தாந்த
நூலதனாய் வுந்தன் நுகர்வு. (7)

சைவம் வளரத் தமிழ்வளர நூல்பலவாக்
கைவந்த நெல்லிக் கனிபோல - மெய்வயங்கத்
தந்த மறைமலைப்பேர் சாரடிகள் தம்மேன்மை
எந்நாளும் வாழ்க இனிது. (8)

**- தவத்திரு. தி.செ. முருகதாச அடிகள்**

## மறுமலர்ச்சித் தமிழ்மலை

தமிழர்தம் மதம்ஈ தென்று
        சாற்றிய ஆய்வு மேதை;
உமிழ்சுடர் அறிவு ரைகள்
        உதிர்த்திடும் இவரின் பாதை!
சமயமும் தமிழும் ஓங்கத்
        தகுநெறி கண்டு வாழ்ந்தார்
உமிபொதி நெல்லாய் நந்தம்
        உயர்தமிழ் காத்தார் வாழி! (1)

வடமொழி ஆங்கி லத்தில்
        வாடாத புலமை பெற்றுத்
திடமிகு தமிழுக் காகத்
        தேர்ந்தநூல் பலவும் ஈந்து
கடமைகள் பலபு ரிந்து
        காத்தனர் அடிக ளாரே
நடமிடும் தில்லைக் கூத்தன்
        நல்லருள் விழைந்தார் அன்னார்! (2)

உற்ற "தேகத்தை" இந்த
        உயிர்மறந் தாலும் என்று
கற்றபா சிறந்த தேனும்
        கனித்தமிழ் "யாக்கை" என்று
நிற்றிடல் நன்றாம் என்ற
        நீலாம்பி கையார் சொல்லை

முற்றிய அறிஞர் ஏற்று
முனைபவர் ஆனார் அன்றே! (3)

தத்துவம் வரலா றோடு
சமயம்என் றிருப்ப தான
அத்தனைத் துறையும் தேர்ந்த
அடிகளார் பணிகள் யாவும்
மொய்த்தொளி மகுட மாக
மூண்டெழில் தமிழாம் தேவி
நத்திட வாய்ந்த தென்றால்
நாமிதை மறப்ப துண்டோ? (4)

**– திரு. மின்னூர் சீனிவாசன்**

## மறைமலையும் நறை தமிழும்

பொற்கால மாகமிளிர் சங்க காலம்
    பொலிவுடனே தமிழன்னை ஆட்சி யேற்று
கற்பதற்கு மிகவினிய நூல்கள் எல்லாம்
    காவலரும் பாவலரும் கனியாய்த் தந்தார்
முற்போக்காய் முத்தமிழைக் காத்து வந்தார்
    முகக்கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல்
நற்றமிழின் கலைமொழியாம் நாகரிகம்
    நயந்துமே போற்றி வந்தார் மறைமலையார். (1)

தனித்தியங்க வல்லதாம் தமிழே யென்று
    தரமான எழுத்தாலும் பேச்சாலுந் தாம்
இனிதாக உலகறியச் செய்தார் ஏந்தல்
    எழிற்றமிழும் ஆக்கமுற தமிழா வாழ
நனியுழைப்பால் அருந்தொண்டே யாற்றி வந்த
    நன்மகனார் மறைமலையார் நல்லாராய்ச்சி
மனிதருக்கு மணிவிளக்காய்த் திகழுதம்மா!
    மாசற்ற அவர் பணியை மனத்துள் வைப்போம். (2)

தேன்சுவையும் பாற்சுவையும் கலந்தாற் போல
    தீஞ்சுவையில் இனியவுயர் நடையைப் பெய்து
வான் புகழக் கேட்டாரும் பிணிக்கும் வண்ணம்
    வண்டமிழை வழங்கியநல் வள்ளல் கோமான்!
ஆன்ற பெயர் வேதாசலம் என்பதைத் தாம்
    அழகாக மறை மலையென் றமிழில் ஆக்கம்

பான்மையுடன் தந்த தமிழ்ச் சான்றோ ரென்றால்
பற்றுவைத்த தமிழ் மேன்மை பகரப் போமோ! (3)

மலையென்றால் இயற்கைமணம் கமழுமாங்கே
மறைமலையில் வண்டமிழே மணம் பரப்பும்
நிலையான தமிழமலையில் நேர்மை தோன்றும்
நிகரில்லா சைவத்தில் உறுதி பூணும்
அலையலையாய் நூல்கள்பல அழகாய் யாத்து
அம்பலவன் திருக்கூத்தின் உண்மை சொல்லி
தலைமுறைக்கும் மறவாது சைவம் நாட்டித்
தந்தமறை மலையாரின் பணியை ஏற்போம். (4)

– **வித்துவான் S.P. சுப்பையா பாரதி**

# வல்லவர் வேறிலையால்

மறைமலை யடிகள் மறுமுறை பிறக்க
வழுத்துவோம் இறைவன் தனை
மதிவளர் தமிழை புதுமுறை தனிலே
வளர்த்தவ ரவர்போ லிலை
குறைநிலை தனிலே தமிழ் கிடந்தழிந்த
கோதுறு வேளை யிலே
குணமுட னினிய தனித்தமிழ் இயக்கம்
கொணர்ந்தவர் மறைமலை யார்
நிறைதமிழ் அழிக்க நினைத்தவர் மடிக்க
நின்றவர் போர்க் களத்தில்
நிலைபெறப் பழைய நிலையிலே தமிழை
நின்றிட வைத்தவ ரவர்
மறுமுறை யுரைப்போம் மறைமலை யடிகள்
வந்திட நம்மிடத் தில்
மகிழ்ந் தவரெடுத்த அலுவல்கள் முடிக்க
வல்லவர் வேறிலை யால்.

**- கவி கா. மு. ஷெரிப்**

# அரசற்கு அரசர் அறிஞர்க்கு அறிஞர்!

மறைமலை யடிகள் அறிஞர்க் கறிஞர்
துறைபல துலக்கிய தோன்றல் மேலும்
தனித்தமிழ் தந்தவர்
இனித்தமிழ் இப்படி
எனத்தமிழ் மக்கள் எண்ணிடத்
தனித்தமிழ் அறிஞர் கண்ணிடக்
கொள்கை வரையறை கொண்ட கோமகன்
சொல்கை வல்ல செந்தமிழ் நாமகன்
கடைக்கழ கத்து நூல்கள் எல்லாம்
நடைமுறை யாகும் நடையைத் தந்தவர்
வடமொழிக் கலப்பால் வண்டமிழ் மொழியே
கெடமலை யாளம் கன்னடம் தெலுங்கு
மொழிபிரிந் ததன்பின்
நிலம்பிரிந் தினத்தின்
வழிபிரிந் தின்று
தமிழகம் சிறுத்ததே
எல்லைகொள்
அரசர்க் கரசர் என்பத னோடும்
அறிஞர்க் கறிஞர் மறைமலை யடிகளே!

–புலவர் த.ச. தமிழன்

## அடிகளார் புகழ் ஓங்குக!

நாகைதந்த நன்மணியை நற்றமிழர் தவப்பேற்றை
ஓகையுடன் பாராட்ட உளத்தமவர்மான் திருமுருகன்.

தமிழ்மொழியாம் பெருங்கடலுள் தக்கவகை திளைத்தாடி
அமிழ்தமெனப் பலநூல்கள் ஆக்கிவுய்ய அளித்திட்டார்.

வடமொழியும் ஆங்கிலமும் வரையாது தாம்கற்றுத்
திடமான அறிவொளியைத் திசையெங்கும் வீசினர்காண்.

தமித்தமிழர் இயக்கத்துத் தந்தையென முதன்முதலில்
கனித்தமிழைக் காத்தவரைக் காலமெல்லாம் பணிந்திருப்போம்.

நிறைவாழ்வு வாழ்ந்திட்ட மறைமலையார் புகழ்பாடி
இறையருளை வேண்டுகம்யாம் இனிது.

**- திரு. சிவ. சிவராமலிங்கம்**

## மலைவழியில் நடையிடுவோம்

இனித்தமிழ் வாழு மென்றே
    இயம்பியே நாளுமிங்கே
தனித்தமிழ் வளர்த்த சான்றோன்
    தன்னேரில் லாத கோவாய்
பனிப்பெரு மலையை மானப்
    பார்புகழ் மறைம லையார்
தனித்திறல் வாய்ந்த மேலோர்
    தம்வழி நடைமேற் கொள்வோம்!

**- தமிழ்க் குமரன்**

## மறைமலைத் தமிழ் வெல்க!

பொன்னெடுத்த ஒளியாகிப் பூவெடுத்த மணமாகி
இன்னருளின் உருவாகி இனியதமிழ் மலையாகி
வந்தமறை மலையடிகள் வளர்த்ததனித் தமிழ்வெல்க!

பூத்தமலர்ப் பொழிலாகிப் பொலிகின்ற நிலவாகி
வார்த்தசுவைக் கடலாகி வண்டமிழ்மா மலையாகி
வந்தமறை மலையடிகள் வகுத்ததமிழ் நெறிவெல்க!

புதுவெள்ள அலையாகிப் பொழிகின்ற இசையாகி
மதுகையுறு யாறாகி மணித்தமிழே மலையாகி
வந்தமறை மலையடிகள் வார்த்ததமிழ்க் கலைவெல்க!

வயல்கொடுத்த கதிராகி வாழ்வளித்த உயிராகிப்
பெயல்வளர்த்த குளிராகிப் பெரியதமிழ் மலையாகி
வந்தமறை மலையடிகள் வரைந்ததமிழ் எழில்வெல்க!

நிலமகளின் மடியாகி நிலைத்தபுகழ் வடிவாகிக்
குலமகளின் மனமாகிக் குலவுதமிழ் மலையாகி
வந்தமறை மலையடிகள் வடித்ததமிழ்ச் சிலைவெல்க!

தமிழ்தந்த தமிழாகி தாய்தந்த மொழியாகி
அமிழ்தென்ற சொல்லாகி அழகுதமிழ் மலையாகி
வந்தமறை மலையடிகள் வாழ்ந்ததமிழ் வழிவெல்க!

**- வல்லம் வேங்கடபதி**

# அருட்டிரு மறைமலையடிகள்

வாழ்கபல் லாண்டு வாழ்கபல் லாண்டு
மறைமலையடிகளார் மாண்புகழ் உலகில்
வாழ்கபல் லாண்டு வாழ்கபல் லாண்டு
தேனினும் இனியநற் செந்தமிழ் நாட்டில்
திகழ்ந்திடும் மக்கள் அகந்தெளிந் துயர
வழிகாட் டியபெரு மாண்புறு செம்மல்
உயர்ந்தநன் னோக்கும் ஒளிரறப் பண்பும்
உள்ளத் தமைத்தே உயர்குணக் குன்றாய்
சான்றாண் மைக்கியை சான்றாய்த் திகழ்வோன்
தன்னுளக் கருத்தைத் தடையற எழுதி
எந்நாட் டவரும் ஏத்திடும் வண்ணம்
பொருந்திய வாறு புகலறி வாளன்
தருக்கம் முதலா தக்கபல் துறைநூல்
பயிற்சியால் யாவர் பகர்ந்திடு போதும்
குற்றங் காணின் குலவுபல் சான்றுடன்
எடுத்து வழங்கியும் எழுதியும் திகழ்ந்தோன்
திரைகடல் கடந்தும் செந்தமிழ் உணர்வை
ஆண்டுளார் பெற்றிட ஆர்வம் தந்தோன்
எனவே அவன்புகழ் இருநில மீதில்
வாழ்கபல் லாண்டென வாழ்த்துவன் வாழியே!

**– புலவர் தி.மு. சங்கரலிங்கம்**

## மறைமலையடிகள் மரபும் மாண்பும் வாழ்க

பொன்மலை பொதியம் தென்றல் புகழ்மணச் சாந்தம் முத்து
மன்பொரு ளாகத்தோன்றி வளம்பல வாற்றால் ஓங்கப்
பன்னியிவ் வுலகம் பேசப் பழகுமுன் பாவாற் பேசி
முன்னிமெய்ப் பொருள் 'மூன்றென்று' முறைவழிக் கண்டு கொண்ட

தென்னகம் வையத் திற்குத் தேர்ந்தநா கரிகந் தந்த
பொன்னகத் தறிவோ டோங்கிப் பொலிந்திடும் மொழியாம் கோதில்
கன்னலும் அமிழ்துந் தோய்ந்து கமழ்தமிழ் மொழித்தாயீன்ற
மன்னவன் அறிஞர்க் காசான் **மறைமலை யடிகள் மாண்பை.**

வரைவதற் கெண்ணின் அன்னோன் வரைவிலா ஆற்றல் முந்நீர்த்
திரையென அமையா தோங்கும் செழுங்கலை அறிவைச் செப்பின்
கரையிலாக் கடலாம், பன்னூற் கல்வியை எழுத்தைப் பற்றி
உரையிடக் கருதின் வெள்ளி ஓங்கலாம் உரைதேர்ந் தாய்ந்து

வா தவூ ரண்ணல் காலம் வள்ளுவர் வாணாள் யாவும்
பேதுறா வண்மை காட்டிப் பெருமணி வாச கத்துள்
ஓதுதற் கரிய தெய்வ ஓத்தெனும் அகவல் நான்கிற்
போதுறு பொருளீ தென்று புகன்றநற் புலவ ரேறு.

தண்டமிழ் மலர்வா விக்குள் தணப்பரும் பாசி போல
மண்டிய ஆரியத்தின் வல்வழக் ககற்றிக் கன்னற்
கண்டெனப் பன்னூல் தந்த கழகநூற் புலவர் செம்மல்
கொண்டல்போல் மேடை தோறும் குளிர்தமிழ் பெய்த சொற்கோ.

நிறைநலம் தமிழர் எய்த நிலைத்தபல் பொருள்நூல் நல்கித்
துறைதொறும் தமிழின் தூய்மை துலங்கிடப் பெருந்தொண்டாற்றி
இறைநலங் கமழ நெஞ்சில் இனிதுறத் திகழுந் தெய்வ
மறைமலை யடிகள் சீர்சால் மரபொடு மாண்பு வாழ்க!

**- பாவலரேறு ச. பாலசுந்தரம்**

மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர். பக்-23

# தொண்டு புரிவோம்

தமிழ்மலை மறைமலை சைவப் பழமலை
மக்கட் கூட்டத் திருமலை யம்மலை
முத்தமி ழறிஞர் மும்மொழிப் புலவர்
இத்தமிழ் மண்ணின் இணையிலா உழவர்
உழவர் பிறந்து ஒருநூ றாண்டு
கழுவிக் கழியும் நாளிது தன்னில்
சிலவே யாயினும் தென்னிதி றுணர்ந்து
ஒன்றே னுங்கைக் கொண்டே யுழைத்து
நன்றே தமிழும் நாடு முலகமும்
பொன்றா துயரப் புரிவோம் தொண்டே!

**- பேராசிரியர் ம. நன்னன்**

(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-24)

## மறைமலையடிகளார் அறம்!

சிவந்தநிறம் பரந்தமுகம் செறிந்தஅறி வோங்கும்
　　சிறந்தவெழில் நிறைந்த திறம் செழுந்தமிழிற் றேங்கும்
உவந்தஅகம் உயர்ந்தநெறி உணர்ந்தமதி யாண்டும்
　　உலர்ந்தமடம் ஒடுங்கிமிக வருந்திவிரைந் தோடும்

தவழ்ந்ததிரு நிமிர்ந்தநடை விரிந்தறுநுதல் நீறும்
　　தழைந்தஒளி தயங்குமிசை தருங்குரலின் பேறும்
துவர்ந்தஉடை ஒழுங்குநடை துதைந்தஅறி வாளர்
　　தொடர்ந்ததமிழ் மறைமலையார் சுடர்ந்த அடிபோற்றி! (1)

தமிழர்க்கே முதுகெலும்பைத் தந்தமிழ் சோர்ந்த
　　தமிழர்க்கே சுறுசுறுப்பைத் தந்ததமிழ் வீழ்ந்த
தமிழினத்தார் நிமிர்ந்தோங்கச் செய்ததமிழ் தாழ்ந்த
　　தமிழகத்தைத் தலைநிமிரச் செய்ததமிழ் வாழ்ந்த
தமிழறத்தை வளர்த்துமிகத் தழைந்துதமிழ் சான்ற
　　தமிழுரிமை உணர்வேற்றி வென்றதமிழ் ஆன்ற
தமிழ்க்குயிரைத் தனிவாழ்வை ஈந்ததமிழ் நேர்மை
　　தழையடிகள் மறைமலையார் சாற்யநற் றமிழே! (2)

கண்காட்டும் திருவருளைக் கலைகாட்டும் கைகள்
　　கல்வியொளிக் கதிர்காட்டும் கவின் உரைகள், வாழ்வில்
பண்காட்டும் உணர்வுவளம்! பயில்சால்பு காட்டும்;
　　பழந் தமிழின் பயன் காட்டும் பனிநெஞ்சம்! ஓங்கும்
வண்காட்டும் திருமுகமோ வயங்குமொளி காட்டும்
　　வளரழகின் மழைவிழிகள் வனப்பினொளி காட்டும்
பண்பாட்டு மறைமலையார் படைத்ததமிழ் காட்டும்
　　பலநலமும் தமிழ்நாட்டுப் பலவளமும் நன்றே! (3)

**(வேறு)**

குற்றமிலாச் சொல்லரும்பைக் குவித்துக் கட்டிக்
குலைத்தமிழைப் பொருள்மாலை யாக்கி வைத்த
குற்றமிலாத் தமிழ்வேந்தர் குடியைக் காத்தார்
குருதிக்கொடை தமிழுக்கே கொடுத்த மேலோர்
கற்றறிந்த மறைமலையார் கலையின் கோயில்!
கவின்மணந்த தனித்தமிழால் காத்த நூலோர்
வற்றாத தமிழாற்றை வகுத்த சான்றோர்
வளர்மதியர் வளப்பாளும் வாழ்க்கை மேதை! (4)

**(வேறு)**

தமிழ்நரம்பில் உயிர்த்துடிப்பைத் தழைக்கச் செய்தார்
தனித்தமிழின் திருத்தந்தை அடிகள்! நாட்டில்
உமிழெச்சில் நிலைக்கிழிந்த தமிழர் கூட்டம்
உயர்ந்தோங்க ஒளிகொடுத்த விளக்கம்! மேன்மை
கமழ்பணிசெய் கலைச்சோலை! கனிவின் கோட்டம்!
கருத்தொளியால் ஆற்றலருள் ‘கால ஊக்கம்’
அமிழ்கலத்தை நெறி நிறுத்தி அறிவால் காத்த?
அருந்தலைவர் மறைமலையார் அறத்தைக் கொள்வோம். (5)

**- புலவர் தி. நா. அறிவுஒளி., எம். ஏ.,**

(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-24-25)

# புரட்டினான் பொன்னோ டொன்று

தமிழ்கற்றல் இழிவென்று நினைந்தும்! கற்றால்
தகுதிபெறல் ஒருசிறிதும் இயலா தென்றும்?
தனித்தமிழா? முயற்கொம்பே! வடநூல் இன்றி
தளிர்த்திடுமா இயலாதே! தமிழர், நாட்டின்
பழங்குடியா யார்சொன்னார்? அவர்கட் கென்றோர்
பண்பாடா இல்லைஇல்லை சமயம் கூட
கடன்பெற்ற பொருளன்றோ! என்றென் றெல்லாம்
கல்லெறிந்தார் சொல்லாலே மலிந்த நாட்டில்
கதிரவனாய் வந்தானை மலைஎன் போர்கள்
கண்ணில்லார்! பின்னென்ன? யாரால் இந்தக்
கவின்மிக்க பெருமிதங்கள் தமிழர் நாட்டில்
காட்டாற்று வெள்ளமெனப் பெருக்கெ டுத்து?
மலைமலையாய் வந்திட்ட பகையை எல்லாம்
நிலைகுலைய வைத்தானின் பெயர் தான் என்ன?
அலைபாயும் தமிழ்நெஞ்சில் ஒளியாய் நிற்பான்
அவன்பெயரே மறைமலையாம்! ஒருநூ றாண்டு
புகழ்பூத்த வரலாற்றில் பொன்னே டொன்று
புரட்டிட்டான்! தமிழானான்! மறத்தல் உண்டோ?

**- திரு. இரா. செல்வக் கணபதி, எம். ஏ.,**

(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-26)

## தனித்தமிழ் இயக்கத் தந்தை

மூண்டெழுந்த நல்லுணர்ச்சி பற்றாய் மாறி
முறையாகத் தமிழ்வளர்க்கும் நெறியாய் ஆகி
ஆண்டிருந்த முன்னோர்கள் புறக்க ணிப்பால்
அன்னைக்கு நேர்ந்திருந்த வடுக்கள் மாற்றிப்
பூண்டதொரு புதுக்கோலம் தமிழைத், தூய
புதுவடிவில் காண்கின்ற வேட்கை யாகி
தூண்டுகின்ற உணர்வாலே தனித் தமிழ்க்குத்
துறைதோறும் சிறப்பீந்த அடிகள் போற்றி (1)

**(வேறு)**

முதுமை வடமொழி முன்னைப் பிறமொழி
மூட்டிய கலப்பினை நீக்கப்
புதுமை நெறியினைக் காட்டிய காப்பியர்
போக்கினை மறந்ததைச் சுட்ட,
புதுவதாம் உருது போர்த்துக் கீசியம்
புகழ்மிகும் ஆங்கிலச் சொற்கள்
'மொது மொது' வென்றே மொய்த்ததைக் கண்டு
முறைப்படி பிரித்திடும் எகினம். (2)

அப்படியோர் எண்ணந்தான் இல்லை யென்றால்
அருந்தமிழில் பிறமொழிகள் நோயாய்ச் சேர்ந்து
எப்படியோ மொழியாகித் தசைகள் தொங்கி
என்பாகி நின்றிருக்கும் தமிழ்தான்! அந்தச்
செப்பரிய கொடுமைதனைத் தடுத்து நின்று
சிதறிவிட்ட மலையாளம் துளுதெ லுங்குக் (கு)

ஒப்பான புதுமொழிகள் பிறவா வண்ணம்
உறுதியொடு காத்தவர்தாம் அடிகள் ஆவார்! (3)

பாவேந்தர் 'தமிழியக்கம்' பாடு கின்றார்;
பாழான கீழ்நிலையைச் சாடு கின்றார்;
பூவேந்தும் தமிழுக்குப் 'புஷ்பம்' தந்து
புதுவேட்டி தனைக்கிழித்து 'வேஷ்டி' யாக்கி
நாவேந்தும் சுவையுணவு 'கிளப்'பில் வெந்து
நாறுகின்ற நிலைமைகளை உணர்ச்சி சொட்டப்
பாவேந்தர் தருகின்றார் என்றால் அந்தப்
பைந்தமிழர் மறைமலையார் இயக்கம் அன்றோ! (4)

இன்றைக்கும் மறைமலையார் இயக்கம் நின்றே
எழிலார்ந்த பெயர்களையே தெருக்கள் தோறும்
சென்றெடுத்துச் சொல்வதனைச் செயலில் பார்ப்போம்;
சிறக்கின்ற செந்தமிழின் பணிகள் யாவும்
நன்றாய்ந்த மறைமலையார் இட்ட வித்து!
நானிலத்தில் மரமாகிக் கனிகள் கொஞ்ச
என்றேனும் எழிற்காட்சி வந்தே தீரும்!
எந்தமிழுக்குத் தந்தைமறை மலையார் வாழ்க!

**- திரு. மு. தமிழ்க் குடிமகன் எம்.ஏ.,**
(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-27-28)

## பல்லாவரத்தார்க்கு ஈடுண்டோ?

நிலத்திற்குச் சுமையாக வாழு கின்ற
நெடுமரங்கள் மக்களுள்ளும் உண்டு காணீர்!
கலக்கத்தைத் தமிழுக்கு நாளும் செய்தே
கலக்கமுறச் செய்திடுவார் சுமையாய் வாழ்வோர்!
உலக்கையினில் இடிபட்டே உரலுக் குள்ளே
ஓர்நொடிக்குள் பொடியாகும் பொருளைப் போல
நிலைகுலைய வைத்திட்ட ஏறு போல்வார்?
நெஞ்சுரத்தார் பல்லாவரத் தார்க்கீ டுண்டோ?

முருகவேள் கட்டுரைகள் என்னும் பேரில்
முத்தமிழின் வளம்பெருக்க முயன்று ழைத்து
மெருகூட்டும் தமிழினிலே மொழிபெ யர்த்த
மறைமலையார் மலையெனவே நிற்கு மாறு

அருந்தமிழ்க்குத் தொண்டிழைத்தார்; மறைகள் கற்றார்;
அறிவாற்றல் மிகப்பெற்றார்; ஆய்வு செய்த
பெருமையெலாம் பேசுதலும் இயலு மாமோ?
பேரறிவுக் கடலென்றால் உண்மை யன்றோ?

பழந்தமிழின் நூல்களுக்குப் புத்துரை கண்டு
பாக்கள்பல இயற்றிட்ட பாவலர் அன்றோ!
இழந்தபழம் புகழ்மீட்க ஏறு போல
இடிமுழக்கம் செய்தவராம்; மொழிக்க லப்பை
அழிப்பதற்கோர் இயக்கத்தைக் கண்டார்! அன்னார்
ஆக்கிவைத்த அரும்பணியால் தமிழர் நாட்டில்
அழிவில்லை தமிழுக்கே என்று ரைத்தால்,
அட்டியில்லை; அவர்விட்ட பணி முடிப்போம்!

**– நெல்லை ந. சொக்கலிங்கம், எம். ஏ.,**
(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-28-29)

# எண்ணற்கு அரிய பேரறிஞர்

தண்ணார் தமிழின் மறுமலர்ச்சித்
　　தந்தையாக இருந்தவரும்
தமிழில் புகுந்த கலப்பொழித்துத்,
　　தகைசால் தூய தனித்தமிழைக்
கண்போல் காத்து வளர்த்தவரும்
　　கல்விக் கடலாய்த் திகழ்ந்தவரும்
கற்றார் போற்றும் நூல்பலவும்
　　கருதி யளித்த பெருந் தகையும்
மண்ணில் சைவம் தழைத்திடவே
　　மாண்பாய்த் தொண்டு செய்தவரும்
மாந்தர் இந்த நூற்றாண்டில்
　　மதிக்க வாழ்ந்து மறைந்தவரும்
எண்ணற் கரிய பேரறிஞர்
　　இணையில் புகழ்சால் மறைமலையார்
இணைத்தாள் போற்றி வாழ்த்திடுவன்
　　இவர்தம் திருப்பேர் வாழியவே!

**- பேராசிரியர் அ.கி. பரந்தாமனார் எம். ஏ.,**
(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-29)

# வையமுள்ளளவும் வாழி

தெளிந்தநீ ரோட்டம் போலச் செந்தமிழ்
நெறியில் நின்று
பளிங்கெனத் தூய செஞ்சொல் பயிலுநா
வன்மை யாளர்
உளந்தனில் உறுதி வீரம் ஓங்கிய
தமிழர், செம்மல்
வளமிகு அறிஞர் எந்தம் மறைமலை
யடிகள் தாமே. (1)

வாழ்வினில் நிகழ்ச்சி எல்லாம் வளத்தமிழ்
நெறியில்; கோயில்
சூழ்தரு வழிபா டெல்லாம் தூயசெந்
தமிழில், தோன்ற

ஆழ்ந்தசிந் தனையோ டன்று அருளிய
மறைம லைப்பேர்
வாழ்ந்திடும் நூற்றாண் டொன்றோ வையமுள்
ளளவும் வாழி. (2)

**- வித்துவான் சாந்தலிங்க இராமசாமியடிகள்**
(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-30)

## வணங்கி வாழ்வாம்

இற்றைநாள் வள்ள லாரென் றிருங்கட லுலக மேத்தப்
பெற்றநா வலர்க ளேற்றின் பெருமருட் பாவா மாற்றில்
அற்றைநா ளாடிப்பாடி யதற்கொரு குறையைச் சாற்ற
லுற்றவ ரஞ்ச வஞ்சா துதவிய வள்ளல் வள்ளல் (1)

பகுதுறு மரத்தைத் தாங்கப் பலமுற விறங்கும் ஆல
விழுதுபோல் தமிழின் பாங்கர் விரவுறு சிதல்க ளோட்ட
எழுதுகோல் எடுத்த ஏந்தல் உண் மைசால் புலல ரெல்லாம்
தொழுதடி போற்ற நின்ற மறைமலை யடிகள் தோற்றம் (2)

நூற்றையெட் டியதென் றின்று நுவல்தரக் கேட்ட தீஞ்சொல்
ஆற்றையெட்டிய துள்ளத்தி லார்த்தெழு மின்ப வெள்ளம்
பேற்றையெட் டிடநமக்குப் பெருந்தகை வடித்துத்தந்த
சாற்றையெட் டிடுதல் வேண்டும் தகையுற வளர்த்தல் வேண்டும் (3)

குரவனைச் சைவச் சண்ட மாருத மென்னுங் கொற்றப்
பரவனை வணங்கி வாழ்ந்த பாவலர் பெருமான்றன்னைக்
கரவணையாத நெஞ்சாற் கண்டதைக் கண்டவாறே
தரவல வாற்றல் சான்ற தலைவனை வணங்கி வாழ்வாம். (4)

**- புரிசை சு. முருகேசனார்**

(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-30-31)

# தமிழன்னையின் அருந்தவச் செல்வர்

நந்தமிழ்த்தாய் பலகாலந் தவ மிருந்து
நனிபயந்த நல்லோர்கள், நாவில் வல்லார்
இன் தமிழில் இலக்கியங்கள் இயற்றித் தந்தார்;
எழிலாக என்றும் அவை ஏட்டில் நிற்கும்;
கன்னல்குரல் தனில்பேசிக் கேட்போரெல்லாம்
காதினிக்கக் கருத்தினிக்க வைத்த செம்மல்
தன்னோல் லாஅறிஞர் அஞ்சா நெஞ்சர்
தகைமையிலே மறைமலைக்கு நிகரு முண்டோ? (1)

தாமாக வழங்குகின்ற மொழிகள் தம்மில்
தனித்தியங்கத் தக்கமொழி தமிழ்ஒன் றேதான்;
அரண்இதற்குச் செய்திலமேல் அழகி ழக்கும்;
அயலவர்தம் மொழிபுகுந்து ஆட்சி செய்யும்;
உரமான உண்மைசொலி **'இயக்கங்' கண்டு**
உயர்வுடைய பற்பலவாம் நூல்கள் தம்மைத்
திறன்மிகவே படைத்துபுகழ் பெற்றிட் டாரால்
திறவோர் தம் போற்றலுக்கும் உரியரானார். (2)

மும்மொழியில் புலமைபெற்ற இவரைப்போன்று
முழுதுலகில் புகழ்பெற்றோர் மிகச்சிலர் தாம்;
செம்மையாய் முத்தமிழை வளர்த்தா ரென்று
சேய்மையிலே இருப்போருஞ் செப்பு கின்றார்;
எம்மவரின் நெஞ்சினிலே என்றைக் கும்மே
ஏற்றமிகு அவர்பணிகள் நிறைந்து நிற்கும்;
நம்தமிழில் செகப்பிரியர் போல்வார் என்ன
**நாடகத்தை** யாத்தளித்த நயந்தான் என்னே! (3)

**- கலைமாமணி. நாரண-துரைக்கண்ணன்**

(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-31)

## களங்கம் துடைத்தான்

திருவருட் பேரொளியர் வள்ளலார் பாக்களைத்
தீண்டிய மருக்க ளைந்தான்
தென்றமிழர் "சூத்திரர்" என்றவிழி பெயரையும்
தீர்த்தனன் இவைமட்டுமோ

பெருமைமிகு செந்தமிழ் கொடியவர்கள் விரகினால்
பெறுகளங் கந்துடைத்துப்
பிறங்குவித் தானிவன் பெருமைகள் யாவையும்
பேசப் புகின்வளருமால்

இருளென்ன நின்பால் இலங்குறு களங்கமும்
எளிதினின் இரித்துமுற்றும்
எழிலுற விளங்குமா றொளிர்விப்பன் காணுதி
எவ்வுயிர்க் கும்இரங்கும்

அருள்நெஞ்சம் உடையனனெம் பெருமகன் அழைத்தனன்
அம்புலீ யாடவரவே!
அரியகற் றவர்கள்பயில் நாகை கிழானொடும்
அம்புலீ யாடவாவே!

***செந்தமிழ்ப் பெருமறவன்**

திறப்பா(டு) இலா தவட வாரியத் தலைவரார்
செந்தமிழர் வீரமிகழா
செருக்கினால் எள்ளிநகை யாடினார்கள் என்றலும்
சீறிச் சினந்துபொங்கி

மறப்போர்க் களத்து வென்(று) ஆங்கவர்கள் புன்றலை
மாமலைக் கல்சுமத்தி

மணித்தேர் இவர்ந்துவரு செங்குட்டு வப்பெரிய
மன்னவன் தன்னைமானப்

புறப்பாடு கொண்டுநற் றமிழைக் கெடுப்பவர்
பொருந்துசிவ நெறிகெடுப்பார்
பூட்கைகள் யாவையும் வீழ்த்துநின் வெற்றியைப்
புலவர்புனை வாகைபொலியச்

சிறப்போ(டு) உலாவரும் செந்தமிழ்ப் பெருமறவ
சிறுதேர் உருட்டியருளே!
செந்தமிழர் வாழ்வுபெற வந்தொளிர் செழும்பரிதி
சிறுதேர் உருட்டியருளே!

**- புலவர் இறைக்குருவனார்**
(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-32)

* இவை மறைமலையடிகள்பிள்ளைத்தமிழில் உள்ளவை.

## மணித்தமிழ் வளர்த்த மறைமலை

பறம்பு மலையில் பனித்தமிழ் இனித்தது!
மலைகளில் வளர்ந்த மணித்தமிழ் அதனைத்
தோள்களில் ஏந்தித் துணிந்து நடந்து
தானும் வளர்ந்ததோர் தங்க மாமலை!
எம்மலை அம்மலை என்றுநீர் வினவின்
அந்த மாமலை அழகு மறைமலை!
'தாய்ப்பால் போலத் தமிழைக் கருதுக!
வாய்ப்போடு தமிழின் வளத்தைப் பெருக்குக,
செப்புக தமிழைச் செழுந்தமிழ் வழக்கென'
இப்படி முழங்கி எழுந்த(து) ஆங்கப்
பல்லா வரத்துப் பைந்தமிழ் வேங்கை,
அன்னைத் தமிழின் ஆக்கம் கருதித்
தன்னையே வழங்கிய தகைமை சான்றவர்,
வெண்ணீ றணிந்து விரும்புஞ் சிவநெறிக்
கண்ணாய் இருந்து கலைபல வளர்த்தவர்,
அமிழ்தினை ஒத்த அன்னவர் நினைவு
இமிழ்கடல் உலகில் இலங்குக இனிதே.

**- டாக்டர் ஔவை நடராசன்**

(மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக்-33)

குறிப்புகள்

குறிப்புகள்